winmeen

# 11th Std வரலாறு கேள்விகள்

www.winmeen.com

# 11th History Lesson 1 Questions in Tamil

## 1] பண்டைய இந்தியா : தொடக்கம் முதல் சிந்து நாகரிகம் வரை

1) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - பழங்கற்காலம் முதலாக இந்தியாவில் பல குழுக்களை சேர்ந்த மக்கள் பலமுறை குடிபெயர்ந்து பல்வகைப்பட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தங்கள் பண்பாடுகளை தகவமைத்துக் கொண்டனர்.

கூற்று 2 - சிந்துவெளியில் குடியேறிய மக்கள் சமகாலத்தில் பெரும் பக்குவமடைந்து ஒரு முதிர்ச்சி அடைந்த வாழ்க்கை நிலையை அடைந்தனர்.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - தொல்லியல் ஆய்வு இடங்கள், நிலவியல் அடுக்குகள், விலங்குகளின் எலும்புகளும் படிமங்களும் கற்கருவிகள், எலும்பு கருவிகள் ஆகியவை இவற்றின் சான்றுகளாகும்.)**

2) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - ஹரப்பா மக்கள் ஒரு எழுத்து முறையைப் பயன்படுத்தியுள்ளனர்.

கூற்று 2 - இந்திய வரலாற்றில் கற்கால வாழ்க்கை முதல் சிந்து நாகரிகம் வரையான நெடுங் காலத்தை புரிந்து கொள்ள தொல்லியல் சான்றுகளை பெரிதும் உதவுகின்றன. எழுத்து வடிவ சான்றுகள் இக்காலத்துக்கு இல்லை.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - ஹரப்பா மக்கள் ஒரு எழுத்து முறையைப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அதன் பொருளைக் இன்றளவும் அறிய முடியவில்லை)**

3) கற்கால மக்கள் மேற்கொண்ட வேளாண்மை சார்ந்த அறிவை புரிந்து கொள்ள உதவுவது எது?

I. எரிக்கப்பட்ட விதைகள்.

II. மகரந்தங்கள்

III. கல்லாகிப் போன தாவரங்கள்(பைட்டோலித்)

A) I, II மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

**D) இவை அனைத்தும்**

**(குறிப்பு - கற்கால மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான உறவைப் புரிந்துகொள்ள விலங்கு, தாவரங்கள் வடிவிலான சான்றுகள் இன்றியமையாதவை ஆகும்.)**

4) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - வரலாற்று காலத்துக்கு முன்பு நடைபெற்ற மனித உடற் பயிற்சிகள் குறித்து அறிந்து கொள்ள அவருடைய மரபணுக்களும் முக்கியமான சான்றுகளாக விளங்குகின்றன.

கூற்று 2 - மைட்டோகாண்ட்ரியா டி.என்.ஏ ஆய்வுகள் கற்கால மனிதர்களின் இடப்பெயர்ச்சி குறித்த தகவல்களை வழங்குகின்றன.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - வரலாற்றுக்கு முந்தைய கால எலும்பிலிருந்து டிஎன்ஏவை பிரித்து மனிதக் கூட்டம் பல்வேறு பகுதிகளுக்கு பரவியது குறித்து புரிந்து கொள்ள அறிவியலாளர்கள் முயற்சி செய்து வருகிறார்கள்.)**

5) இந்தியாவில் செழித்து வளர்ந்த மொழிக் குடும்பங்களுள் சரியானவை எது?

I. இந்தோ-ஆரியம்

II. திராவிடம்

III. ஆஸ்ட்ரோ - ஆசியாட்டிக்

IV. திபெத்தோ - பர்மன்

A) I, II, III மட்டும் சரி

B) I, III, IV மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - மேற்கண்ட அழைப்பு மொழிக் குடும்பங்களும் இந்தியாவில் செழித்து வளர்ந்தன. இந்திய வரலாற்றில் நடைபெற்ற மனித இடப்பெயர்ச்சிகளின் பல்வேறு கட்டங்களில் இம்மொழிகள் தோன்றி வளர்ந்தன)**

6) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - எழுத்து முறை தோன்றுவதற்கு முந்தைய காலகட்டம் வரலாற்றுக்கு முந்தைய காலம் எனப்படுகிறது.

கூற்று 2 - வரலாற்றுக்கு முந்தைய காலம் கற்காலம் என அழைக்கப்படுகிறது.

கூற்று 3 - கற்காலம் என அழைக்கும் போது இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், வங்கதேசம் ஆகியவை அடங்கிய தென்கிழக்கு ஆசியா முழுவதையும் ஒரே பகுதியாக குறிப்பதே பொருந்தும்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - மனித இனத்தின் மூதாதையர் முதலில் ஆப்பிரிக்காவில் தோன்றி பின்னர் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர் என வரலாற்று ஆய்வுகள் அறிவிக்கின்றன.)**

7) ஆப்பிரிக்காவை விட்டு முதன்முதலாக இடம்பெயர்ந்த மனித இனம் எது?

A) ஹோமோசெபியன்ஸ்

**B) ஹோமோ எரக்டஸ்**

C) ஹோமோபைலியன்ஸ்

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - மனித இனத்தின் மூதாதையர் முதலில் ஆப்பிரிக்காவில் தோன்றி பின்னர் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். இவ்வாறு ஆப்பிரிக்காவை விட்டு வெளியே முதன்முதலாக இடம்பெயர்ந்த மனித இனம் ஹோமோ எரக்டஸ் ஆகும்.)**

8) பொதுவாக எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?

A) கற்காலம் மற்றும் வெண்கலக்காலம்.

**B) கற்காலம், வெண்கல காலம், இரும்புக்காலம்.**

C) கற்காலம், இரும்புக்காலம்

D) கற்காலம், இரும்புக்காலம், வெண்கலக்காலம், பொற்காலம்

**(குறிப்பு - வரலாற்று ஆய்வுகளின் படி, வரலாற்று காலத்துக்கு முந்தைய மனிதர்கள் இந்தியாவில் 10 லட்சம் முதல் 20 லட்சம் வரையான ஆண்டுகளுக்கு முன்பே இருந்தார்கள் என தெரிகிறது.)**

9) ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற பண்டங்கள் எந்த காலத்தைச் சார்ந்தவை?

A) கற்காலம்

**B) இரும்புக்காலம்**

C) வெண்கலக்காலம்

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்கள் இரும்புக் காலத்தைச் சார்ந்தவை ஆகும். இரும்புக் காலத்தைச் சார்ந்த அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதி சிந்து, அச்சூலியன் அல்லது ஹரப்பா ஆகியவை ஆகும்.)**

10) மனிதர்கள் எந்த காலத்தின்போது விலங்குகளையும் தாவரங்களையும் வளர்க்கக் கற்றுக் கொண்டார்கள்?

A) பழங்கற்காலம்

B) இடைக்கற்காலம்

**C) புதியகற்காலம்**

D) நவீனகற்காலம்

**(குறிப்பு - வரலாற்றில் மிகவும் தொன்மையான காலம் பழங்கற்காலம் எனப்படுகிறது. பழங்கற்காலம் மூன்றாக பிரிக்கப்படுகிறது. அது கீழ் பழங்கற்காலம், இடை பழங்கற்காலம், மேல் பழங்கற்காலம் என்பதாகும்.)**

11) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - கற்காலத்தின் தொடக்கத்தில் சேர்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் இந்திய துணை கண்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிடைத்துள்ளன.

கூற்று 2 - கீழ் பழங்கால கற்கால கட்டத்தின் போது, மனித மூதாதையர்களான ஹோமோ எரக்டஸ் இந்தியாவில் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - பாறை வடிவியல் ஆய்வுகள்(stratigraphy), காலவரிசை, கற்கருவிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கீழ்பழங்கற்காலம், இடை பழங்கற்காலம், மேல் பழங்கற்காலம் என பண்பாடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன)**

12) பழங்கற்காலத்தைச் சேர்ந்த கருவிகள் முதன்முதலில் 1863 எங்கு கண்டெடுக்கப்பட்டன?

**A) பல்லாவரம்**

B) சிவகங்கை

C) ராமநாதபுரம்

D) மதுரை

**(குறிப்பு - பழங்கற்காலத்தை சேர்ந்த கருவிகள் முதன் முதலில், சென்னை அருகே உள்ள பல்லாவரத்தில் ராபர்ட் புரூஸ் ஃபூட் என்பவரால் 1863இல் கண்டெடுக்கப்பட்டன)**

13) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - வரலாற்றுக்கு முந்தைய காலம் குறித்த ஆய்வுத்துறை பெரும்பாலும் கற்கருவிகளையே சார்ந்துள்ளது.

கூற்று 2 - கற்கால மனிதனின் வாழிடங்கள் கல்லாலான கருவிகள் கிடைப்பதை அடிப்படையாகக் கொண்டு அடையாளம் காணப்படுகின்றன.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

(குறிப்பு - மனித மூதாதையர் கருவிகள் செய்ய பெரிய கற் பாலங்களையும் கூழாங்கற்களையும் தேர்ந்தெடுத்தனர். அவற்றை மற்றொரு உறுதி வாய்ந்த கல்லால் செய்தி கருவிகளை உருவாக்கினர்)

14) கீழ்க்காணும் கூற்றுகளில் எது தவறானது?

A) கைக்கோடரி வகை கருவிகளைக் கொண்ட மரபு அச்சூலியன் என்று அழைக்கப்படுகிறது.

B) கூழாங்கல் டீசருக்கு உருவாக்கப்படும் கருவிகளைக் கொண்ட மரபு சோகனியன் மரபு என்று அழைக்கப்படுகிறது.

**C) அச்சூலியன் ஆப்கானிஸ்தானில் உள்ள சோகன் ஆற்றின் அருகே தோன்றியது.**

D) சோகனிய மரபு துண்டாக்கும் கருவிகளையும் அதை சார்ந்த வேலைகளுக்கான கருவிகளையும் மட்டுமே கொண்டது.

**(குறிப்பு - இன்றைய பாகிஸ்தானிலுள்ள சோகன் ஆற்றின் வடிநீர் பகுதியில் நிலவிய மரபு என்பதால், சோகன் மரபு என அழைக்கப்பட்டது. அண்மையில் நடைபெற்ற ஆய்வுகளின் போது இதே பகுதியில் அச்சூலியன் மரபு சார்ந்த கருவிகளும் கிடைத்தன.)**

15) கோடரி, வெட்டு கத்திகள், செதுக்கும் கருவிகள் ஆகியவை எந்த காலத்தைச் சேர்ந்தவையாகும்?

**A) தொடக்ககால அச்சூலியன்**

B) இடைக்கால அச்சூலியன்

C) பிற்கால அச்சூலியன்

D) இவை எதுவும் அல்ல

**(குறிப்பு - பழங்கால கற்கருவிகளின் ஆக்கம், அதற்கான உழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அக்காலபண்பாடு தொடக்ககால அச்சூலியன், இடைக்கால அச்சூலியன் மற்றும் பிற்கால அச்சூலியன் என்ன வகைப்படுத்தப்படுகிறது.**

16) அச்சூலிய மரப்பிற்கான அடையாளங்கள் கீழ்காணும் எந்த இடத்தில் காணப்படவில்லை?

I. மேற்கு தொடர்ச்சி மலை

II. கடற்கரைப் பகுதிகள்.

III. வடகிழக்கு இந்தியா

A) I, II இல் மட்டும்

B) I, III இல் மட்டும்

C) II, III இல் மட்டும்

**D) இதில் எதுவுமே இல்லை**

**(குறிப்பு - மேற்கு தொடர்ச்சி மலை, கடற்கரைப் பகுதிகள், வடகிழக்கு இந்தியா ஆகிய இடங்களில் அச்சூலிய மரபுக்கான அடையாளங்கள் காணப்படவில்லை. பெருமலை இதற்கு காரணமாக இருக்கலாம்.)**

17) அச்சூலிய மரபினர் வாழ்ந்த இடங்களாக அறியப்படுவதில் சரியானது எது?

I. மத்திய இந்தியா

II. தென் கிழக்கு இந்தியா

III. மேற்கு இந்தியா

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - மத்திய இந்தியாவிலும், இந்தியாவின் தென் கிழக்குப் பகுதிகளிலும் அச்சூலிய மரபினர் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகள் அதிக அளவில் மழை பெறுவதால், பசுமை மாறா மேலும் அதிக வளத்துடனும் உள்ளன)**

18) அச்சூலிய கருவிகள் கண்டெடுக்கப்பட்ட இடங்கள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. பல்லாவரம் - தமிழ்நாடு

II. குடியம் - தமிழ்நாடு

III. அதிரம்பாக்கம் - தமிழ்நாடு

IV. ஹன்ஸ்கி சமவெளி - கர்நாடகா

V. பிம்பேட்கா - மத்திய பிரதேசம்

A) I, II, III, IV மட்டும் சரி

B) I, II, III, V மட்டும் சரி

C) I, III, IV, V மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - சென்னைக்கு அருகில் உள்ள அதிரம்பாக்கம், பல்லாவரம், குடியம், கர்நாடகாவின் ஹன்ஸ்கி சமவெளியில் உள்ள இசம்பூர், மத்திய பிரதேசத்தில் உள்ள பிம்பேட்கா ஆகியவை அச்சூலிய கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ள இடங்களாகும்)**

19) ஹோமினின்(Hominin) என்று அழைக்கப்படும் மனித மூதாதையர் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் எங்கு அதிகளவில் காணப்படுகின்றன?

A) ஆசியா

**B) ஆப்பிரிக்கா**

C) அமெரிக்கா

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - கற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றத்தை கொண்டிருந்த மனித மூதாதையர் ஹோமினின் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் ஆப்பிரிக்காவில் அதிகமாக காணப்படுகின்றன.)**

20) இந்தியாவில் நன்கு அறியப்பட்ட ஹோமினின் மண்டையோட்டின் மேல்பகுதி புதைபடிவம் எங்கு கண்டுபிடிக்கப்பட்டது?

A) தமிழ்நாடு

B) கர்நாடகா

**C) மத்திய பிரதேசம்**

D) குஜராத்

**(குறிப்பு - இந்தியாவில் நன்கு அறியப்பட்ட ஹோமினின் புதை படிவம் மத்திய பிரதேசத்தில் உள்ள ஹோசங்கபாத் அருகேயுள்ள ஹத்நோராவில் கண்டுபிடிக்கப்பட்டதாகும். அது ஒரு மண்டை ஒட்டின் மேல் பகுதி ஆகும்.)**

21) நர்மதை சமவெளியில் கண்டெடுக்கப்பட்ட விலங்குகளின் புதைபடிவங்கள் எது?

I. எலிபஸ் நமடிக்கஸ்

II.ஸ்டெகோடோன்கணேசா

III. போஸ் நமடிக்கஸ்

IV. எக்கஸ் நமடிக்கஸ்

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - கற்காலத்தில் மக்கள் வாழ்ந்த பழமை சூழலை நாம் புரிந்துகொள்ள விலங்குகளின் புதைபடிவங்கள் பயன்படுகின்றன. நர்மதை சமவெளியில் மிகப்பெரிய தந்தங்களை உடைய வரலாற்றுக்கு முந்தைய காலகட்ட யானை எலிபஸ் நமடிக்கஸ் போன்ற பல விலங்குகளின் புதைபடிவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன)**

22) எக்கஸ் என்ற பேரினம் எதை கொண்டது அல்ல?

A) குதிரை

B) கழுதை

C) வரிக்குதிரை

**D) ஆடு**

**(குறிப்பு - எக்கஸ் என்பது குதிரை, கழுதை, வரிக்குதிரை ஆகிய விலங்குகளை உள்ளடக்கிய பேரினம் ஆகும்)**

23) ஹோமோஎரக்டஸ் இனத்தை சார்ந்த மனிதர் பற்றிய கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - ஹோமோ எரக்டஸ் இனத்தை சேர்ந்த மனிதர்கள் தற்கால மனிதர்களான ஹோமோசேபியன்சை போல மேம்பட்ட மொழியை கொண்டிருக்கவில்லை.

கூற்று 2 - ஹோமோ எரக்டஸ் இனத்தவர்கள் சில ஒலிகள் அல்லது சொற்கள் மூலம் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தி இருக்கலாம்.

கூற்று 3 - கருவிகளை செய்வதற்கு சரியான கல்லை தேர்வு செய்வதற்கான அறிவு அவர்களுக்கு இருந்தது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - பாறைகளை செதுக்கவும் அவற்றை கருவிகளாக வடிவமைக்கவும் சுத்தியல் போன்ற கற்களை பயன்படுத்தவும் ஹோமோ எரக்டஸ் இனத்தவர் அறிந்திருந்தனர்)**

24) இந்தியாவில் இடை பழங்கற்கால கட்டத்தை எந்த இடத்தில் கண்டறிந்தனர்?

A) ஷிமோகா

**B) நெவாசா**

C) பெல்காம்

D) குடியம்

**(குறிப்பு - ஹெச்.டி.சங்கலியா என்ற தொல்லியலாளர் பிராவாரா ஆற்றங்கரையில் இடை பழங்கற்கால கட்டத்தை கண்டறிந்தார். இதன் பின்னர் இடை பழங்கற்காலம் நிலவிய பல இடங்கள் அடையாளம் காணப்பட்டன)**

25) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - கோடரிகள், பிளக்கும் கருவிகள், துண்டாகும் கருவிகள், சுரண்டும் கருவிகள் போன்றவை இடை பழங்கற்லத்தில் பயன்படுத்தப்பட்ட கருவிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

கூற்று 2 - இடை பழங்கற்கால நாகரீகம் செதுக்கும் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது எனலாம்.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - மரக்கட்டை, விலங்கு தோல் ஆகியவற்றை கையாளுவதற்கு சுரண்டும் கருவிகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டதாக அறியப்படுகிறது.)**

26) உத்தரபிரதேசத்தில் உள்ள பாகோர் என்னும் இடத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள ஒரு மேல் பழங்கற்கால இடம் ___________ எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**A) வழிபாட்டுத்தலம்**

B) வசிப்பிடம்

C) சந்தை கூடும் இடம்

D) கல்விசாலை

**(குறிப்பு - மேல் பழங்கற்காலத்தை சார்ந்த ஒரு வழிபாட்டு தலமாக இருந்திருக்கலாம் எனக் கருத தகுந்த ஒரு சிறு கட்டுமானம் உத்தரப்பிரதேசத்தில் உள்ள பாகோர் என்னுமிடத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தியாவில் வழிபாட்டு தலங்களுக்கு தேடலில் கிடைத்த மிகப் பழமையான சான்று இது என அறியப்படுகிறது.)**

27) இடை பழங்கற்கால நாகரிகம் பரவியிருந்த இடங்களாக அறியப்படும் இடங்களில் கீழ்கண்டவற்றுள் தவறானது எது?

A) நர்மதை சமவெளிகள்

B) கோதாவரி சமவெளிகள்

C) கிருஷ்ணா நதி சமவெளிகள்

**D) காவிரி நதி சமவெளிகள்**

**(குறிப்பு - இதை பழங்கற்கால நாகரிகம் பரவியிருந்த இடங்கள் நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, யமுனை உள்ளிட்ட ஆறுகளில் சமவெளிகளில் காணப்படுகின்றன)**

28) இடை பழங்கற்கால மனிதர்கள் பற்றிய கூற்றுகளில் சரியானது எது?

கூற்று 1 - ஏனைய கருவிகளோடு ஒப்பிடுகையில் கோடரியை பயன்படுத்தும் பழக்கம் குறைந்தது.

கூற்று 2 - கற்கருவிகள் உற்பத்தியில் மூலக்கல்லை தயார் செய்யும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது.

கூற்று 3 - செர்ட், ஜாஸ்பர், கால்சிடெனி, குவார்ட்ஸ் இயக்கர்கள் மூலப் பொருட்களாக பயன்படுத்துதல் அதிகரித்தது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - இடை பழங்கற்கால மனிதர்கள் திறந்த வெளியிலும் குகைகளிலும் பாறைபடுக்கைகளிலும் வசித்தார்கள். இவர்கள் வேட்டையாடுபவர்களாகவும் உணவை சேகரிப்பவர்களாகவும் இருந்தார்கள்.)**

29) மேல் பழங்கற்கால பண்பாடு பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - இக்காலகட்டத்தை சேர்ந்த கற்கருவிகள் கத்தி, வாள் போல வெட்டுவாய் கொண்டவையாகவும் எலும்பால் ஆனவையாகவும் அமைந்திருந்தன.

கூற்று 2 - மேல் பலன் கற்காலத்தில் சிறு கற்களில் செய்யப்பட்ட கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டன

கூற்று 3 - இவற்றை உருவாக்க சிலிக்கான் செறிந்த மூலப் பொருட்கள் வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டன.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - எலும்பிலான கருவிகளும் விலங்குகளின் எஞ்சிய பகுதிகளும் ஆந்திர பிரதேசத்தில் உள்ள கர்னூல் குகைகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன)**

30) இந்தியாவில் மேல் பழங்கற்காலம் நிலவிய இடங்களாக அறியப்படுவதில் தவறானது எது?

A) கர்நாடகாவில் உள்ள மெரல்பாவி

B) தெலுங்கானாவில் உள்ள கர்னூல் குகைகள்

C) மத்திய பிரதேசத்தில் உள்ள சோன் பள்ளத்தாக்கு.

**D) தமிழ்நாட்டின் கீழடி**

**(குறிப்பு - கர்நாடகாவில் உள்ள மெரல்பாவி, தெலுங்கானாவில் உள்ள கர்னூல் குகைகள், கோதாவரிகாணி, மத்திய பிரதேசத்தில் உள்ள சோன் பள்ளத்தாக்கில் உள்ள பாகோர் -1, 3, மகாராஷ்டிராவில் உள்ள பாட்னே ஆகியவை இந்தியாவில் மேல் பழங்கற்காலம் நிலவிய இடங்களாக அறியப்படுகிறது.)**

31) தீக்கோழி முட்டை ஓடுகளால் செய்யப்பட்ட முட்டை ஓடு மணிகள் கீழ்காணும் எந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டன?

I. பிம்பேட்கா

II. பாட்னே

III. ஜீவலாபுரம்

IV. மதுரா

**A) I, II, III மட்டும் சரி**

B) II, III, IV மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

D) I, III, IV மட்டும் சரி

**(குறிப்பு - ஆந்திரப் பிரதேசத்திலுள்ள ஜீவலாபுரம், மகாராஷ்டிராவில் உள்ள பாட்னே, இலங்கையிலுள்ள பாடடொம்பா -லெனா, ஃபாஹியான் குகைகள், பிம்பேட்கா, ஆகிய இடங்களில் தீக்கோழி முட்டை ஓடுகள் கிடைத்துள்ளன)**

32) பீம்பெட்காவை சார்ந்த பச்சை நிற ஓவியங்கள் எந்தக் காலத்தைச் சேர்ந்தவையாக கணிக்கப்படுகிறது?

**A) மேல் பழங்கற்காலம்**

B) இடை பழங்கற்காலம்

C) கடை பழங்கற்காலம்

D) இவை எதுவுமல்ல

**(குறிப்பு - கல்லில் வெட்டுக்கருவிகள் செய்யும் தொழிற்கூடங்கள் மேல் பழங்கற்கால காலகட்டத்தில் வளர்ச்சி பெற்றன. மேல் பழங்கற்கால மனிதர்கள் கலை சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபட்டதற்கான சான்றுகளாக பல ஓவியங்கள் கிடைத்திருக்கின்றன.)**

33) இந்தியாவில் நுண் கற்கால சான்றுகள் கிடைத்த இடங்களாக அறியப்படும் இடங்கள் எது?

I. மும்பையின் கடற்கரைப் பகுதிகள்

II. தூத்துக்குடி மாவட்டத்தின் தேரிக்குன்றுகள்

III. விசாகப்பட்டினம்

IV. ஆந்திரபிரதேசத்தில் உள்ள ஜீவலாபுரம்.

**A) I, II, III மட்டும் சரி**

B) II, III, IV மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

D) I, III, IV மட்டும் சரி

**(குறிப்பு - மும்பையின் கடற்கரை பகுதிகள், தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தின் கிழக்கு பகுதியில் உள்ள தேரிக்குன்றுகள் (செம்மணற்குன்றுகள்), விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் நுண்க்கற்கால சான்றுகள் கிடைக்கின்றன)**

34) இடைக்கற்கால மனிதர்கள் பற்றிய கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - இவர்கள் ஈட்டி, வில், அம்பு, கண்ணிகள் ஆகியவற்றை வேட்டையாட பயன்படுத்தியுள்ளனர்.

கூற்று 2 - இவர்கள் நெருப்பை பயன்படுத்தினர்.

கூற்று 3 - வெள்ளாடு, செம்மறிஆடு, நாய், பன்றி ஆகியவற்றின் எறும்புகள் மத்திய பிரதேசத்தில் உள்ள கானிவால், லோத்கேஸ்வர் போன்ற என்னுமிடத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - பிம்பேட்கா என்னுமிடத்திலுள்ள ஓவியம் ஆண்களும் பெண்களும் இணைந்து இது போன்ற விலங்குகளை வேட்டையாடுவதை காட்சிப்படுத்துகிறது)**

35) இடை கற்கால மனிதர்கள் பற்றிய கூற்றுகளில் எது தவறானது?

கூற்று 1 - இடைப் கற்கால மனிதர்களின் முக்கிய பண்பாக இடம்பெயர்தல் இருந்தது.

கூற்று 2 - இவர்கள் தற்காலிகமான குடிசைகளை உருவாக்கியதுடன் குகைகளிலும் பாறைகுடைவுகளிலும் தங்கினார்கள்.

கூற்று 3 - பெரும்பாலான குகைகளிலும் பாறை மறைவிடங்களிலும் ஓவியங்கள் காணப்பட்டது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - பாறை ஓவியங்களில் வட்ட வடிவ குடிசை வரையப்பட்டுள்ளது. தற்காலிகமான குடிசைகள் விரைவில் அழியக்கூடிய கூறுகளால் கட்டப்பட்டன)**

36) இடை கற்கால மனிதர்களின் சுவர்கள் பிரம்பால் செய்யப்பட்டு அவற்றின் மீது மண் பூசிய வீடுகள் கீழ்காணும் எந்த இடங்களில் கண்டறியப்பட்டன?

I. சோப்பணி மண்டோ - உத்தரப் பிரதேசம்

II. தம்தமா - உத்திரப் பிரதேசம்

III. பாகோர் - ராஜஸ்தான்

IV. பாட்னா - பீஹார்

**A) I, II, III மட்டும் சரி**

B) II, III, IV மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

D) I, III, IV மட்டும் சரி

**(குறிப்பு - தாங்குதூணுக்கான குழியுடன் கூடிய வட்டவடிவ குடிசைகள், நாணல் பதிக்கப்பட்ட தடங்களுடன் கூடிய சுட்ட மண் திண்டுகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டுள்ளன)**

37) இடைகற்கால மக்களின் இறந்தவரை புதைக்கும் அடையாளமாக ஒரு ஆணும் பெண்ணும் ஒன்றாக புதைக்கப்பட்டு இருந்ததற்கான அடையாளம் எங்கு கிடைத்தது?

**A) மகாதகா**

B) தம்தமா

C) சாராய் நகர் ராய்

D) சோம்பூர்

**(குறிப்பு - இடைக் கற்கால மக்கள் இறந்தோரை புதைத்தனர். இது அவர்களின் நம்பிக்கையும் சக மனிதர்கள் குறித்த சிந்தனையையும் நமக்கு உணர்த்துகிறது. இறந்தவர்களுடன் அவர்கள் பயன்படுத்திய சில பொருட்களையும் சேர்த்து புதைக்கும் முறை இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது)**

38) தென்னிந்தியாவின் ஜாதிகளும் பழங்குடிகளும் என்ற நூலை எழுதியவர் யார்?

A) எட்வார்ட் லூயிஸ்

**B) எட்கர் தர்ஸ்டன்**

C) எல்வின் கினோ

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டிலும் மக்கள் பல குழுக்களாக வாழ்ந்ததை எட்கர் தர்ஸ்டன் என்ற தொல்லியல் ஆய்வாளர் எழுதிய தென்னிந்தியாவின் ஜாதிகளும் பழங்குடிகளும் என்ற நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களை நாகரிக முதிர்ச்சி அற்றவர்களாக கருதுவது தவறு. மாறாக வேட்டையாடுதல் உணவு சேகரித்தல் என்னும் வாழ்க்கை முறையை தேர்வு செய்ததாக கருத வேண்டும்)**

39) இடைக் கற்கால பண்பாட்டின் சிறப்பியல்புகளாக காணப்படுவது கீழ்க்கண்டவற்றுள் எது?

I. இறந்தவர்களை புதைத்தல்.

II. விரிவான புவியியல் பகுதிகளில் இவர்கள் பரவி இருந்தனர்.

III. இடைகற்கால மக்கள் ஓரளவு நிரந்தர மற்றும் தற்காலிக குடியிருப்புகளில் வசித்தனர்.

A) I, II மட்டும் சரி

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - இடைக்கற்கால மக்களின் நுண்கற்கருவிகள் சிறிய விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாட உதவின. இக்கால கட்டத்தில் இருந்து இந்தியாவின் பல பகுதிகளில் பண்பாட்டுத் தொடர்ச்சியை காணமுடிகிறது)**

40) புதிய கற்காலப் பண்பாடு நிலவிய இடங்களாக அறியப்பட்டுள்ள இடங்கள் எது?

I. மெஹர்கர்

II. ரானா குண்டாய்

III. சாராய் காலா

IV. ஜாலில்புர்

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - மனிதர்கள் தாவரங்களையும் விலங்குகளையும் பழக்கப்படுத்தியதற்கான சான்றுகளை கொண்டிருப்பதில் வடமேற்கு இந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு மிகப் பழமையானதாகும்.மேற்கண்ட இடங்களில் அதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் தற்போது பாகிஸ்தானில் உள்ளன)**

41) புதிய கற்கால பண்பாட்டை சார்ந்த மனிதர்கள் பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. இவர்கள் ஓரளவு இடம் விட்டு இடம் குடிபெயரக்கூடிய நாடோடி கால்நடை மேய்க்கும் குழுவினர் ஆவர்.

II. இவர்கள் ஈரமண்ணால் வீடு கட்டினார்கள்.

III. இவர்கள் இறந்தவர்களை புதைக்கும் மரபுகளை கொண்டிருக்கவில்லை.

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - பார்லி, எம்மர் கோதுமை, எய்கான் கோதுமை, இலந்தை, பேரிச்சை ஆகியவற்றை பயிரிட்டார்கள். ஆடு மாடுகளை பழக்கபடுத்தினார்கள்)**

42) புதிய கற்கால மக்கள் பயன்படுத்தியவைகளில் தவறானது எது?

A) நீலவண்ணக்கல்

B) இரத்தினக்கல்

**C) வைரக்கல்**

D) சுண்ணாம்புக்கல்

**(குறிப்பு - புதிய கற்கால மக்கள் சுண்ணாம்புக்கல், நீலவண்ணக்கல், இரத்தினக்கல், வைடூரியம், மணற்கல் ஆகியவற்றில் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தார்கள்)**

43) உயிருள்ள ஒரு மனிதனின் பல்லில் துளை இட்டதற்கான மிகப் பழமையான சான்று எங்கு கிடைத்துள்ளது?

A) குடியம்

B) பல்லாவரம்

**C) மெஹர்கர்**

D) குச்சா

**(குறிப்பு - புதிய கற்கால களிமண் வீடு, உயிருள்ள ஒரு மனிதரின் பல்லில் துளையிட்டதற்கான மிகப் பழமையான சான்று மெஹர்கரில் கிடைத்துள்ளது.பொ.ஆ.மு.5000-7000 உட்பட்ட காலத்துக்கு உரிய மண்டையோடுகள் இதற்கான சான்றுகளாக உள்ளன)**

44) புதிய கற்கால காலகட்டத்தில் வைடூரியம் அதிகமாகக் கிடைக்கக்கூடிய இடமாக இருந்த இடம் எது?

**A) பதக்ஷான்**

B) ரானா குண்டாய்

C) சாராய் காலா

D) மெஹர்கர்

**(குறிப்பு - சிந்து நாகரிகத்தின் முதிர்ந்த கட்டத்தின் தோற்றத்திற்கு பிறகு, மெஹெர்கர் கைவிடப்பட்ட நகரமானது. சுடுமண் உருவங்களும் பளபளப்பான ஒப்பனை மட்பாண்டங்களில் மணிகள் ஆகியவை இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன)**

45) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - காஷ்மீர் பகுதியில் நிலவிய புதிய கற்காலப் பண்பாடும் ஹரப்பா நாகரீகமும் ஒரே சமகாலதவையாகும்.

கூற்று 2 - புதிய கற்காலப் பண்பாடு காலகட்டத்தை சேர்ந்த முக்கியமான ஆய்வு இடமான பர்சாஹோம் பெருங்கற்காலத்துக்கும் தொடக்க வரலாற்றுக் காலத்திற்கும் சான்றாக உள்ளது.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - பர்சாஹோம் என்னும் இடத்தில் மக்கள் குளிரில் இருந்து காத்துக்கொள்ள ஏறத்தாழ 4 அடி ஆழம் கொண்ட குழி வீடுகளில் வசித்தார்கள். முட்டை வடிவம் கொண்ட இவ் வீடுகள் அடிப்பகுதியில் அகலமாகவும் மேல் பகுதியில் குறுகியதாகவும் இருந்தற்கான சான்றுகள் கிடைத்துள்ளது.)**

46) புதிய கற்காலத்தில் காஷ்மீரில் வளர்ப்பு விலங்குகளாக இருந்தவை எது?

I. செம்மறிஆடு

II. வெள்ளாடு

III. குதிரை

**A) I, II மட்டும்**

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவை அனைத்தும்

**(குறிப்பு - புதிய கற்காலத்தில் காஷ்மீரில் வளர்ப்பு விலங்குகளாக செம்மறி ஆடும் வெள்ளாடும் இருந்தன. இவர்கள் தாவரங்களை பயிரிட்டார்கள். பர்சாஹோமை சேர்ந்த புதிய கற்கால மக்கள் ஹரப்பா மக்களோடு வணிகத்தில் ஈடுபட்டார்கள்)**

47) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - புதிய கற்காலப் பண்பாடு காலத்தில் செராமிக் அல்லது செராமிக் அல்லாத கட்டிடங்கள் கட்டப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

கூற்று 2 - இக்காலகட்டத்தில் மக்கள் சேற்று மண்ணால் ஆன வீடு கட்டினார்கள்.

கூற்று 3 - செம்பால் ஆன அம்புகளை செய்தார்கள். கருப்புநிற பாண்டங்களையும் அகேட், கார்னிலியன் கல் மணிகளையும் வண்ணம் பூசப்பட்ட பானைகளையும் பயன்படுத்தினார்கள்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - மெஹர்கரில் ஒரு புதைகுழியில் காட்டு நாயின் எலும்பும் மான் கொம்பு காணப்பட்டன. சூரியன், நாய் ஆகியவை இடம்பெறும் ஒரு வேட்டை காட்சி செதுக்கப்பட்டுள்ள ஒரு கல்லும் இங்கு கிடைத்துள்ளது)**

48) புதிய கற்காலப் பண்பாடு கிழக்கு இந்தியாவில் எந்த இடங்களில் பரவி இருந்ததற்கான ஆதாரம் கிடைத்துள்ளது?

I. பீகார்

II. மேற்கு வங்காளம்

III. அருணாச்சல பிரதேசம்

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - பீகார், மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளின் பல இடங்களில் புதிய கற்காலப் பண்பாடு நிலவியதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. பிர்பன்புர், சிரந் போன்றவை அத்தகைய இடங்களாகும்.)**

49) தென்னிந்தியாவில் புதிய கற்கால பண்பாடு இருந்ததற்கான சான்றுகள் எங்கு கிடைத்துள்ளன?

I. ஆந்திர பிரதேசம்

II. கர்நாடகா

III. தமிழ்நாட்டின் வடமேற்கு பகுதி

IV. கேரளா

A) I, II, IV மட்டும் சரி

**B) I, II, III மட்டும் சரி**

C) I, III, IV மட்டும் சரி

D) II, III, IV மட்டும் சரி

**(குறிப்பு - ஒரு சாம்பல் மேட்டில் சுற்றிலும் குடியிருப்புகள் சூழ்ந்திருக்கும் கட்டமைப்பு இந்த இடங்களில் காணப்படுகிறது. புதிய கற்கால வளாகத்தின் ஒரு பகுதியாக 200க்கும் மேற்பட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன)**

50) புதிய கற்காலப் பண்பாடு நிலவியுள்ள இடங்களாக அறியப்பட்டுள்ள இடங்கள் எது?

I. பையம்பள்ளி

II. நாகார்ஜுனகொண்டா

III. பிரம்மகிரி

IV. துங்கபத்திரை

A) I, II, III மட்டும் சரி

B) I, III, IV மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

**D) இவை அனைத்தும்**

**(குறிப்பு - கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, துங்கபத்திரை, காவிரி சமவெளிகளிலும், கர்நாடகாவில் உள்ள பிரம்மகிரி, மஸ்கி, பிக்லிகல், தெக்கலக்கோடா, ஆந்திரப் பிரதேசத்தில் நாகார்ஜுன கொண்டா, ராமாபுரம், வீராபுரம் தமிழ்நாட்டில் பையம்பள்ளி ஆகிய இடங்களிலும் புதிய கற்காலப் பண்பாடு நிலவியுள்ளது.)**

51) இடம்பெயர் வேளாண்மை செய்ததற்கான சான்றுகள் எங்கு கிடைத்துள்ளன?

**A) அசாம்**

B) பீஹார்

C) அருணாச்சல பிரதேசம்

D) மேற்கு வங்காளம்

**(குறிப்பு - தாஜலி ஹேடிங், சருத்தரு ஆகியவை அசாமில் புதிய கற்காலப் பண்பாடு நிலவிய இடங்களாகும். இடம்பெயர் வேளாண்மை செய்ததற்கான சான்றுகள் அசாமில் கிடைத்துள்ளன.)**

52) புதிய கற்கால பண்பாட்டிற்கும் தென்கிழக்கு ஆசியாவிற்கும் இடையேயான பண்பாட்டு ஒற்றுமைகளை உணர்த்துவது எது?

I. ஆஸ்ட்ரோ ஆசிய மொழிகள் பேசப்படுதல்.

II. சேனைக்கிழங்கும், சேப்பக்கிழங்கும் பயிரிடல்.

III. இறந்தவர்களுக்கு கல்லாலும் மரத்தாலும் செய்யப்பட்ட நினைவு சின்னங்களை கட்டுதல்.

A) I, II மட்டும்

B) II, III மட்டும்

C) I, III மட்டும்

**D) இவை அனைத்தும்**

**(குறிப்பு - தோளில் வைத்துக் கொள்ளத்தக்க மழுங்கல் முனைக்கோடாரிகளும், முனை நீட்டி சாய்வாக்கப்பட்ட மழுங்கல் முனை கோடரிகளும் அசாம் மேகாலயா நாகாலாந்து அருணாச்சலப் பிரதேசம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.)**

53) ஹரப்பாவிற்கு முதன்முதலில் வருகை தந்தவர் யார்?

**A) சார்லஸ் மேசன்**

B) வில்லியம் ஹென்றி

C) ஜார்ஜ் ஹென்றி

D) வில்லியம் கோபர்நிக்கஸ்

**(குறிப்பு - ஹரப்பாவிற்கு 1826ல் முதல் முதலில் வருகை தந்தவர் சார்லஸ் மேசன் என்னும் இங்கிலாந்து நாட்டவர் ஆவார்)**

54) 1831ஆம் ஆண்டு ஹரப்பா நகரத்திற்கு வருகை தந்தவர் யார்?

A) சார்லஸ் மேசன்

B) அலெக்ஸாண்டர் கான்னிங்

**C) அலெக்ஸ்சாண்டர் பர்னஸ்**

D) சர் ஜான் மார்ஷல்

**(குறிப்பு - 1831 ஆம் ஆண்டு அம்ரி என்னும் ஹரப்பா பண்பாடு தொடர்புடைய இடத்திற்கு அலெக்சாண்டர் பர்னஸ் என்பவர் வருகை தந்தார்.)**

55) ஹரப்பா பகுதியில் இருந்து ஒரு முத்திரையை கண்டெடுத்த இந்திய தொல்லியல் அளவீட்டு துறையின் முதல் அளவையாளர் யார்?

**A) அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம்**

B) அலெக்சாண்டர் பர்ன்ஸ்

C) சர் ஜான் மார்ஷல்

D) சார்லஸ் மேசன்

**(குறிப்பு - இந்திய தொல்லியல் அளவீட்டு துறையின் முதல் அளவையாளர் அலெக்சாண்டர் கன்னிங்காம் ஆவார். 1853, 1856, 1875 இல் இவர் ஹரப்பா நகரை பார்வையிட்டார். ஹரப்பா நகரத்தின் முக்கியத்துவத்தையும் அதன் நாகரீகத்தையும் உணர்ந்து அங்கு ஆய்வு நடத்த முயற்சிகள் மேற்கொண்டார்)**

56) இந்திய தொல்லியல் துறையின் இயக்குனராக முதன்முதலாக பொறுப்பேற்றவர் யார்?

A) அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம்

B) அலெக்சாண்டர் பர்ன்ஸ்

**C) சர் ஜான் மார்ஷல்**

D) சார்லஸ் மேசன்

**(குறிப்பு - ஹரப்பா நகரத்தின் முக்கியத்துவத்தையும் அதன் நாகரீகத்தையும் உணர்ந்து அங்கு ஆய்வு நடத்த காரணமாக இருந்தவர் சர் ஜான் மார்ஷல் ஆவார். இவர் இந்திய தொல்லியல் துறையின் இயக்குனராக பொறுப்பேற்ற நிகழ்வு இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனை என அழைக்கப்படுகிறது)**

57) 1940களில் ஹரப்பா நகரில் ஆய்வுகள் நடத்தியவர் யார்?

A) அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம்

B) அலெக்சாண்டர் பர்ன்ஸ்

**C) ஆர்.இ.எம்.வீலர்**

D) சார்லஸ் மேசன்

**(குறிப்பு - பிற்காலத்தில் 1940களில் ஆர்.இ.எம்.வீலர் ஹரப்பாவில் அகழாய்வுகள் நடத்தினார். இந்தியப் பிரிவினைக்குப் பிறகு ஹரப்பா நாகரிக பகுதியில் பெரும்பாலான இடங்கள் பாகிஸ்தானுக்கு உரியதாகிவிட்டன)**

58) ஹரப்பா நாகரீகத்துடன் தொடர்புடைய இடங்கள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. காலிபங்கன்

II. லோத்தல்

III. ராக்கிகார்ஹி

IV.டோலாவீரா

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) இவை அனைத்தும் சரி**

**(குறிப்பு - ஹரப்பா நாகரீகத்துடன் தொடர்புடைய இடங்களாவன லோத்தல், காலிபங்கன், ராக்கிகார்ஹி, டோலாவீரா, போன்றவை ஆகும்.1950களுக்கு பிறகு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு பயணங்களும் அகழாய்வுகளும் அரப்பா நாகரீகத்தையும் அதன் இயல்பையும் புரிந்து கொள்ள உதவின.)**

59) சிந்து நாகரீகமும் அதன் சமகால பண்பாடுகளும் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் சேர்த்து மொத்தம் எத்தனை சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளன?

**A) 1.5 மில்லியன் சதுர கிலோமீட்டர்**

B) 2.5 மில்லியன் சதுர கிலோமீட்டர்

C) 3.5 மில்லியன் சதுர கிலோமீட்டர்

D) 4.5 மில்லியன் சதுர கிலோமீட்டர்

**(குறிப்பு - சிந்து நாகரீகமும் அதன் சமகால பண்பாடுகளும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இரண்டிலும் சேர்த்து மொத்தம் 1.5 மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளன. இதன் மையப்பகுதிகள் குஜராத், ராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களில் உள்ளன)**

60) சிந்து நாகரிகத்தின் எல்லையை பொருத்துக.

I. கிழக்கு - a) தைமாபாத்

II. மேற்கு - b) ஆலம்கிர்புர்

III. வடக்கு - c) சட்காஜென் டோர் குடியிருப்பு

IV. தெற்கு - d) ஷார்ட்டுகை

**A) I-b, II-c, III-d, IV-a**

B) I-d, II-a, III-b, IV-c

C) I-b, II-c, III-a, IV-d

D) I-a, II-d, III-b, IV-c

**(குறிப்பு - சட்காஜென் பகுதி பாகிஸ்தான் ஈரான் எல்லையிலும், ஷார்ட்டுகை பகுதி ஆப்கானிஸ்தானிலும், ஆலம்கிர்புர் பகுதி உத்தரப் பிரதேசத்திலும், தைமாபாத் பகுதி மகாராஷ்டிரம் பகுதியிலும் அமைந்துள்ளன.)**

61) திட்டமிட்ட நகரங்களின் அமைவிடங்களை பொருத்துக.

I. ஹரப்பா - a) சிந்து, பாகிஸ்தான்

II. மொஹஞ்சதாரோ - b) ராஜஸ்தான், இந்தியா

III. டோலாவீரா - c) பஞ்சாப், பாகிஸ்தான்

IV. காலிபங்கன் - d) குஜராத், இந்தியா

**A) I-c, II-a, III-d, IV-b**

B) I-d, II-a, III-b, IV-c

C) I-b, II-c, III-a, IV-d

D) I-a, II-d, III-b, IV-c

**(குறிப்பு - மேற்கண்ட இடங்கள் அனைத்தும் திட்டமிடப்பட்ட நகரங்கள் ஆகும். இவை அனைத்தும் ஹரப்பா காலத்து முக்கிய நகரங்களாகும்)**

62) திட்டமிட்ட நகரங்களின் அமைவிடங்களை பொருத்துக.

I. லோத்தல் - a) குஜராத், இந்தியா

II. பனாவலி - b) ஹரியானா, இந்தியா

III. ராக்கிகார்ஹி - c) ராஜஸ்தான், இந்தியா

IV. மொஹஞ்சதாரோ - d) சிந்து, பாகிஸ்தான்

**A) I-a, II-c, III-b, IV-d**

B) I-d, II-a, III-b, IV-c

C) I-b, II-c, III-a, IV-d

D) I-a, II-d, III-b, IV-c

**(குறிப்பு - அரண்களால் பாதுகாக்கப்படும் தன்மை, நன்கு திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர் வசதி ஆகியவை ஹரப்பா நகரங்களின் குறிப்பிடத்தக்க கூறுகள் ஆகும்.)**

63) கீழ்க்கண்டவற்றுள் ஒரு உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டு கட்டப்பட்ட நகரமாக அமைந்தது எது?

A) லோத்தல்

**B) மொகஞ்சதாரோ**

C) காலிபங்கன்

D) டோலாவிரா

**(குறிப்பு - மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டு கட்டப்பட்ட நகரமாக இருந்தது.மொகஞ்சதாரோ கோட்டை பகுதியாகவும் தாழ்வான நகரமாகவும் இரு வேறுபட்ட பகுதிகளை கொண்டிருந்தது.)**

64) கீழ்க்காணும் இடங்களில் எங்கு சேமிப்பு கிடங்கு அடையாளம் காணப்பட்டது?

A) லோத்தல்

**B) மொகஞ்சதாரோ**

C) காலிபங்கன்

D) டோலாவிரா

**(குறிப்பு - மொகஞ்சதாரோ நகரத்தில் நகரத்தின் கோட்டை பகுதி முக்கியத்துவம் வாய்ந்த இருப்பிடத்தை கான அமைப்புகளுடன் காணப்படுகிறது. இதை பொதுமக்களும், மக்களில் குறிப்பிட்ட சிலரோ பயன்படுத்தி இருக்கலாம்)**

65) மொகஞ்சதாரோ நகரத்தில் கண்டெடுக்கப்பட்ட பெருங்குளம் கீழ்க்காணும் எந்த அமைப்புகளை கொண்டிருந்தது?

I. பெரிய முற்றம்.

II. குளத்தின் நான்கு பக்கங்களிலும் நடைபாதை

III. கிழக்கு மற்றும் மேற்கு பக்கத்தில் படிக்கட்டுகள்

IV. நடை பாதையின் அருகே பல அறைகள்

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) I, II, IV மட்டும் சரி**

**(குறிப்பு - முகஞ்சதாரோ நகரத்தில் காணப்பட்ட பெருங்குளம், பெரிய முற்றத்துடன் கூடிய பெரிய குளமாகும். குளத்தின் வடக்குப் பக்கத்திலும், தெற்கு பக்கத்திலும் படிக்கட்டுகள் அமைந்துள்ளது. நடை பாதையின் அருகே பல அறைகளும் அமைந்துள்ளது)**

66) ஹரப்பா நகரத்து மக்கள் பயிரிட்டு தானியங்களான கீழ்கண்டவற்றுள் எது?

I. கோதுமை, பார்லி

II. அவரை வகைகள்

III. கொண்டைக்கடலை, எள்

IV. வெவ்வேறு திணை வகைகள்

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) I, II, III, IV நான்கும் சரி**

**(குறிப்பு - ஹரப்பா நகர மக்கள், மேற்கண்ட அனைத்து தானியங்களையும் பயிரிட்டார்கள். வேளாண்மை மூலம் கிடைத்த வருவாய் முக்கியமான பல செயல்பாடுகளுக்கு ஆதாரமாக விளங்கியது.)**

67) இரட்டை பயிரிடல் முறையை பின்பற்றியவர்கள் யார்?

**A) ஹரப்பா மக்கள்**

B) மொகஞ்சதாரோ மக்கள்

C) லோத்தல் மக்கள்

D) சிந்து மக்கள்

**(குறிப்பு - ஹரப்பா மக்கள் உலகுக்கு கலப்பையை பயன்படுத்தினார்கள். நிலத்தை உழுது, விதைக்கும் வழக்கத்தை அவர்கள் கொண்டிருந்திருக்கலாம்.)**

68) உழுத நிலத்துக்கான அடையாளங்கள் எங்கு காணப்பட்டது?

A) ஹரப்பா

**B) காலிபங்கன்**

C) லோத்தல்

D) பனாவலி

**(குறிப்பு - உழுத நிலங்களை காலிபங்கனில் காணமுடிகிறது. அவர்கள் பாசனத்துக்கு கால்வாய்களையும் கிணறுகளையும் பயன்படுத்தினார்கள்)**

69) ஹரப்பா மக்கள் அறிந்திராத விலங்கு எது?

**A) குதிரை**

B) பன்றி

C) யானை

D) எருமை

**(குறிப்பு - ஹரப்பா நகரத்தில் மேலும் ஒரு முக்கியமான தொழிலாக இருந்தது. செம்மறிஆடு, வெள்ளாடு, கோழி உள்ளிட்ட பறவைகளை வளர்த்தார்கள். எருமை, பன்றி, யானை போன்ற விலங்குகள் குறித்த அறிவும் அவர்களுக்கு இருந்தது. எனினும் குதிரையை அவர்கள் அறிந்திருக்கவில்லை)**

70) ஹரப்பாவில் மாடுகள் எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) சிபு

**B) செபு**

C) பசு

D) சிசு

**(குறிப்பு - ஹரப்பா பண்பாட்டில் மாடுகள் பெரிய உடலமைப்பை கொண்டவையாக இருந்தன. அவை செபு எனப்பட்டன. ஹரப்பா நகர முத்திரைகளில் மாடுகள் சித்தரிக்கப்பட்டுள்ளன)**

71) ஹரப்பா மக்கள் அறிந்திராத உலோகம் எது?

A) வெண்கலம்

**B) இரும்பு**

C) தங்கம்

D) செம்பு

**(குறிப்பு - ஹரப்பா இனமக்கள் செம்பு, வெண்கலம், தங்கம் ஆகிய உலோகங்களிலும், சங்கு, பீங்கான், சுடுமண் ஆகியவற்றிலும் அணிகலன்களை செய்தார்கள். இந்த அணிகலன்கள் எண்ணற்ற வடிவமைப்பிலும் வேலைப்பாடுகளுடனும் செய்யப்பட்டன.)**

72) ஹரப்பா நகரத்தில் செய்யப்பட்ட அணிகலன்கள் எந்த நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன?

**A) மெசபடோமியா**

B) கிரீஸ்

C) பாலஸ்தீனம்

D) சீனா

**(குறிப்பு - ஹரப்பா நகரத்தில் அணிகலன்கள் எண்ணற்ற வடிவமைப்பிலும் வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டன. இவை மெசபடோமியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இங்கிருந்து கலைப்பொருள்கள் ஏற்றுமதியான செய்தி மெசபடோமியாவில் நடத்தப்பட்ட அகழாய்வு மூலம் தெரிகிறது)**

73) ஹரப்பா நகரத்தின் பொருளும், அதன் உற்பத்தி மையங்களையும் பொருத்துக

I. சங்கு - a) ஷார்ட்டுகை

II. வைடூரியம் - b) லோத்தல்

III. கார்னிலியன் - c) நாகேஸ்வர்

IV. செம்பு - d) ராஜஸ்தான்

**A) I-c, II-a, III-b, IV-d**

B) I-d, II-a, III-b, IV-c

C) I-b, II-c, III-a, IV-d

D) I-a, II-d, III-b, IV-c

**(குறிப்பு - ஹரப்பா நாகரிக பகுதிகள் சில குறிப்பிட்ட கைவினைப் பொருள் தயாரிப்பில் தேர்ச்சி பெற்றதாக உள்ளன. அத்தகைய பொருள்களும் அவற்றின் உற்பத்தி மையங்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளன)**

74) ஹரப்பா நகர மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள் என்ன வண்ணத்தில் இருந்தன?

I. அடர் கருப்பு

II. அடர் சிவப்பு

III. அடர் பச்சை

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - ஹரப்பா மக்கள் அன்றாட தேவைகளுக்கு பலவகைப்பட்ட மண்பாண்டங்களை பயன்படுத்தினர். அவை நன்கு சுடபட்டவையாக இருந்தன. மேலும் அவை அடர் சிவப்பும் கருப்பும் கலந்த வண்ணங்களில் இருந்தன)**

75) கீழ்க்கண்ட வகைகளில் எது ஹரப்பா நாகரிகத்தை சேர்ந்தவையாகும்?

I. குறுகிய கைப்பிடி உள்ள கோப்பைகள்.

II. நுனி சிறுத்து, தாங்கும் பகுதி அகன்றும் உள்ள கோப்பைகள்.

III.இலைகள், மீன் செதில்கள், கோணல்மாணலாக கோடுகள் உள்ள பாத்திரங்கள்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - பக்கவாட்டில் உள்ள பட்டைகள், வடிவியல் கூறுகள், தாவரங்கள், விலங்குகள் ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன. ஹரப்பா நாகரிகத்தை சார்ந்த மண்பாண்டங்கள் நன்கு சுடபட்டதாகவும், நுண்ணிய வேலைப்பாடு கொண்டதாகவும் இருக்கின்றன.)**

76) ஹரப்பா மக்கள் கத்தி செய்ய பயன்படுத்திய கல் எது?

A) குவார்ட்ஸ்

B) சுண்ணாம்புக்கல்

C) கிரானைட் கல்

**D) ரோரிசெர்ட் கல்**

**(குறிப்பு - கூர்முனை கருவிகள், உளிகள், ஊசிகள், மீன் பிடிப்பதற்கான தூண்டில், சவரகத்திகள், தராசு தட்டுகள், கண்ணாடிகள் போன்றவை ஹரப்பா மக்களால் பயன்படுத்தப்பட்டன.)**

77) ரோரிசெர்ட் கல் எந்த இடங்களில் அதிகமாக காணப்படுகிறது?

A) ரோரி, இந்தியா

B) லோத்தல், இந்தியா

C) இஸ்லாமாபாத், பாகிஸ்தான்

**D) ரோரி, பாகிஸ்தான்**

**(குறிப்பு - ரோரிசெர்ட் என்னும் படிக்கல் பாகிஸ்தானில் உள்ள ரோரி பகுதியில் காணப்படுகிறது. ஹரப்பா மக்கள் கத்திகளும் பிற கருவிகளும் செய்வதற்கு இது பயன்பட்டது.)**

78) நடனமாடும் பெண் சிலை எங்கு கண்டெடுக்கப்பட்டது?

A) ஹரப்பா

**B) மொகஞ்சதாரோ**

C) லோத்தல்

D) காலிபங்கன்

**(குறிப்பு - ஒரு சுடு மண் பொம்மையில் மதகுரு போல் தோற்றமளிக்கும் துணியால் ஆன, பூ வேலைப்பாடுகள் கொண்ட மேலாடையை அணிந்துள்ள பொம்மை ஹரப்பா நகரத்தில் கண்டெடுக்கப்பட்டது. நடனமாடும் பெண் சிலை மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்டது.)**

79) ஹரப்பாவை சார்ந்த முத்திரைகள் கீழ்க்கண்ட இடங்களில் எங்க கிடைத்துள்ளன?

I. ஈரான்

II. ஈராக்

III. ஓமன்

IV. பஹ்ரைன்

A) I, II இல் மட்டும்

B) II, III, IV இல் மட்டும்

C) I, II, III இல் மட்டும்

**D) இவை அனைத்திலும்**

**(குறிப்பு - சுமேரிய நாகரிகம் நிலவிய ஓமன், பஹ்ரைன், ஈரான், ஈராக் ஆகிய இடங்களில் ஹரப்பாவை சேர்ந்த முத்திரைகளும் பொருள்களும் கிடைத்துள்ளன. ஹரப்பா மக்களுக்கு மெசபடோமியாவுடன் நெருக்கமான வணிகத் தொடர்பு இருந்தது)**

80) மெலுகா என்னும் சொல் எந்த இடத்தை குறிக்கிறது?

**A) சிந்து**

B) ஹரப்பா

C) மொஹஞ்சதாரோ

D) காலிபங்கன்

**(குறிப்பு - மெசபடோமியாவிற்கும் ஹரப்பாவிற்கும் இடையேயான வணிக தொடர்புகளை கியூனிபார்ம் கல்வெட்டு குறிப்புகள் குறிப்பிடுகின்றன. அவற்றில் காணப்படும் மெலுகா என்பது சிந்து பகுதியை குறிக்கிறது.)**

81) மெசபடோமியா புராணத்தில் ' உங்களது பறவை ஹஜா பறவை ஆகுக.அதன் ஒலி அரண்மனையில் கேட்கட்டும் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஹஜா பறவை என்பது எதை குறிக்கும்?

A) புறா

B) வான்கோழி

**C) மயில்**

D) நாரை

**(குறிப்பு - ஹஜா பறவை மயிலை குறிக்கும் என சில தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.)**

82) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - ஹரப்பாவில் சரியான எடை கற்களும் அளவீடுகளும் பயன்படுத்தப்பட்டன.

கூற்று 2 - ஹரப்பா நாகரிக பகுதிகளிலிருந்து படிகக்கல்லாலான, கனசதுர வடிவ எடைக்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கூற்று 3 - edaiyin விகிதம் மூன்று மடங்காக இருக்கும்படி உருவாக்கப்பட்டுள்ளது.

**A) கூற்று 1, 2 மட்டும் சரி**

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

**(குறிப்பு - ஹரப்பா நாகரிக பகுதிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள எடைக்கற்கள் இரும முறையை பின்பற்றுவதாக அமைந்துள்ளன. இரும முறை என்பது 1, 2, 4, 8, 16, 32.........போன்றவையாகும்.)**

83) ஹரப்பா மக்களின் அளவீட்டில் ஒரு இன்ச் என்பது தற்போதைய அளவீட்டில் __________ஆக இருந்துள்ளது.

A) 1.50 செ.மீ

B) 1.25 செ.மீ

**C) 1.75 செ.மீ**

D) 2.00 செ.மீ

**(குறிப்பு - ஹரப்பா காலத்து அளவீடுகளில் மிகச்சிறிய அளவீடு 13.63கிராமாக உள்ளது. ஹரப்பா மக்கள் இன்றைய அளவீட்டில் ஒரு இன்ச் = 1.75செமீ ஆககொள்ளும் விதத்தில் அளவுகளையும் பயன்படுத்தியிருக்கிறார்கள்)**

84) ஹரப்பா நாகரிகப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகள் எவற்றால் ஆனவை அல்ல?

A) ஸ்டீட்டைட்

B) செம்பு

**C) இரும்பு**

D) தந்தம்

**(குறிப்பு - ஸ்டீட்டைட், சுடுமண், தந்தம், செம்பு போன்றவற்றால் ஆன முத்திரைகள் ஹரப்பா நாகரிக பகுதிகளில் அதிக அளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஹரப்பா எழுத்து முறையை இன்று வரைக்கும் நம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை)**

85) ஹரப்பாவில் கிடைத்தவற்றில் மிக நீளமானதாக கருதப்படும் எழுத்துத்தொடர் ________ கொண்டுள்ளது.

**A) 26 குறியீடுகளை**

B) 28 குறியீடுகளை

C) 30 குறியீடுகளை

D) 32 குறியீடுகளை

**(குறிப்பு - ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட எழுத்துத்தொடர்கள் ஹரப்பா நகர பகுதிகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் மிக நீளமானதாக கருதப்படும் எழுத்து தொடர் 26 குறியீடுகளைக் கொண்டுள்ளது.)**

86) சிந்து மக்கள் எந்த மரத்தை வழிபாட்டுக்குரியதாக வைத்திருந்ததாக அறியப்பட்டுள்ளது?

**A) அரசமரம்**

B) ஆலமரம்

C) வேப்பமரம்

D) புளியமரம்

**(குறிப்பு - சிந்து மக்கள் இயற்கையை வழிபட்டனர். அரச மரங்கள் வழிபாட்டுக்குரியதாக இருந்திருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. சில சுடுமண் உருவங்கள் தாய் தெய்வத்தை போல் உள்ளன.)**

87) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - காலிபங்கனில் வேள்விப் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கூற்று 2 - ஹரப்பா மக்கள் இறந்தோரை புதைத்தனர்.

கூற்று 3 - புதைப்பதற்கான நடைமுறைகள் விரிவாக இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - ஹரப்பா மக்களின் புதைகுழியில் மண்பாண்டங்கள், அணிகலன்கள், தாமிர கண்ணாடி, மணிகள் ஆகியவை கிடைத்துள்ளன. இறப்பிற்கு பின்னரான வாழ்க்கை பற்றிய அவர்களின் நம்பிக்கையை இவை குறிக்கிறது.)**

88) சிந்து சமவெளி நாகரிகம் எப்போது வீழ்ச்சியடைந்தது?

A) பொ.ஆ.மு 1600இல்

B) பொ.ஆ.மு 1700இல்

C) பொ.ஆ.மு 1800இல்

**D) பொ.ஆ.மு 1900இல்**

**(குறிப்பு - ஏறத்தாழ பொ.ஆ.மு 1900இல் சிந்து சமவெளி நாகரிகம் வீழ்ச்சி அடைந்தது. காலநிலை மாற்றம், மெசபடோமியாவுடன் வணிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, நீர்நிலைகளின் மறைவு, தொடர் வறட்சி ஆகியவை சிந்து சமவெளி நாகரிகம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்களாக வரலாற்றாசிரியர்களால் கணிக்கப்படுகின்றன.)**

89) இந்தியாவில் நடந்த இரண்டாம் நகரமயமாக்கத்தின் பகுதிகளாக அறியப்படும் இடங்கள் எது?

I. அரிக்கமேடு

II. கீழடி

III. உறையூர்

IV. கொற்கை

A) I, II, IV மட்டும் சரி

**B) I, II, III மட்டும் சரி**

C) I, III, IV மட்டும் சரி

D) II, III, IV மட்டும் சரி

**(குறிப்பு - பழம் தமிழகத்தை சேர்ந்த ஊர்களான அரிக்கமேடு, கீழடி, உரையூர் போன்றவை இந்தியாவில் நடந்த இரண்டாம் நகரமயமாக்கத்தின் பகுதிகள் ஆகும். இந்த ஊர்கள் சிந்து நகரங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாக உள்ளன)**

90) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - சிந்து சமவெளி நாகரீக காலத்தில் காணப்படும் மண்பாண்டங்கள், முத்திரைகள், எடைக் கற்கள் ஆகியவற்றில் காணப்படும் சீரான தன்மை அரசியல் முறை செயல்பட்டதை உணர்த்துகிறது.

கூற்று 2 - ஹரப்பாவும், மொகஞ்சதரோவும் நகர அரசுகளுக்கான ஆட்சி அமைப்பின் கீழ் இயங்கி இருக்கிறது.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - பண்பாட்டு பொருள்களிலும் அளவீடுகளிலும் காணப்படும் சீரான தன்மை ஹரப்பா சமூகம் உறுதியான மைய நிர்வாகத்தின் கீழ் இயங்கி இருக்க வேண்டும் என்ற கருத்தை வலுப்படுத்துகிறது)**

# 11th History Lesson 2 Questions in Tamil

## 2] தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம்

1) சாதவாகனர் கீழ்க்காணும் எந்த பகுதியை உள்ளடக்கிய நிலப்பரப்பில் ஒரு வலுவான அரசை நிறுவினார்?

I. ஆந்திர பிரதேசம்

II. தெலுங்கானா

III. மகாராஷ்டிரம்

IV. கர்நாடகா

A) I, II, III மட்டும் சரி

B) I, III, IV மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - தக்காணப் பகுதியில் பொ.ஆ.மு முதல் நூற்றாண்டில் இன்றைய தெலுங்கானா, ஆந்திர பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பெரும் பகுதியை உள்ளடக்கிய நிலப்பரப்பில் சாதவாகனர் ஒரு வலுவான அரசை நிறுவினார்)**

2) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - அரச மரபினரான சேர, சோழ, பாண்டியர் சாதவாகனரின் சமகாலத்தவர் ஆவர்.

கூற்று 2 - பொ.ஆ.மு இரண்டாம் நூற்றாண்டை சார்ந்த அசோகரின் கல்வெட்டுகளில் மூவேந்தர்களைப் பற்றிய குறிப்பு அடங்கியிருக்கிறது.

கூற்று 3 - இந்த இரு பகுதிகளை சேர்ந்த அரசியல் முறை மற்றும் சமூகங்களிடையே பல பொதுவான அம்சங்கள் இருந்தன.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - தக்காணப் பகுதியில் பொ.ஆ.மு. முதல் நூற்றாண்டில் இன்றைய தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் பெரும் பகுதியை உள்ளடக்கிய நிலப்பரப்பில் சாதவாகனர் ஒரு வலுவான அரசை நிறுவினார். இவர்களும் தெற்கே தமிழகத்தின் வளமான பகுதிகளை ஆண்டு வந்த தமிழ் அரசு மரபினர் ஆண்ட சேர சோழ பாண்டியர்களும் சமகாலத்தை சேர்ந்தவர்கள் ஆவர்)**

3) ஸ்தூபி என்பதற்கான தவறான பொருள் என்ன?

A) புதை மேடுகளின் மேல் களிமண்ணால் கட்டப்பட்டது.

B) இறந்தவர்களின் எரித்த சாம்பல் இங்கு வைக்கப்படும்.

**C) புத்தரின் அஸ்தி 7 ஸ்தூபிகளில் வைக்கப்பட்டன.**

D) அரைக் கோள வடிவம் உள்ள ஸ்தூபி பேரண்டத்தை குறிக்கிறது.

**(குறிப்பு - புத்தரின் அஸ்தி 8 ஸ்தூபிகளில் வைக்கப்பட்டுள்ளது. அரைக்கோள வடிவமுள்ள ஸ்தூபி பேரண்டத்தை குறிக்கிறது.புத்தர் ஆன்மீக உலகின் பேரரசர் என்பதை குறிக்கிறது. ஸ்தூபிகளை சுற்றி அமைக்கப்பட்டுள்ள சுற்றுவட்டப்பாதையில் பக்தர்கள் வலம் வருவர்.)**

4) சாதவாகனர் குறித்த சான்றுகள் இந்தியாவிற்கு வெளியே கீழ்க்காணும் எந்த இடங்களில் கிடைத்துள்ளன?

I. பெரெனிக்கே

II. குவாஸிர் அல் காதம் (எகிப்து)

III. குவாங்லுக் (தாய்லாந்து)

IV. கோர் ரோரி (ஓமன்)

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - தமிழக பகுதியில் கிடைத்துள்ள மண்பாண்டங்கள், மோதிரம், கற்கள் ஆகியவற்றில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள், இந்தியாவிற்கு வெளியே பெரெனிக்கே, எகிப்து, ஓமன், தாய்லாந்து போன்ற இடங்களில் காணப்படும் ஆவணங்கள் சாதவாகனர் காலத்தைப் பற்றிய குறிப்புகளை கூறுகின்றன)**

5) சாதவாகனர் காலத்து இலக்கியச் சான்றுகளாக விளங்குவன எவை?

I. சங்க நூல்களும் சங்கமருவிய இலக்கியங்களும்.

II. பொருளாதாரம், அரசாட்சி கலை ஆகிய குறித்து கவுடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரம்.

III. மகாவம்சம் முதலான பௌத்த வரலாற்று நூல்கள்.

A) I, II மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

**D) இவை அனைத்தும்**

**(குறிப்பு - சங்க நூல்களும் சங்கமருவிய இலக்கியங்களும், பொருளாதாரம் அரசாட்சி கலை ஆகியன குறித்து கவுடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரம், சாதவாகனர் வம்சாவழி வரலாற்றினை குறிப்பிடும்**

**புராணங்கள், மகாவம்சம் முதலான பௌத்த வரலாற்று நூல்கள் சாதவாகனர் காலத்து இலக்கிய சான்றுகளாக விளங்குகின்றன)**

6) சாதவாகன அரசர் காதாசப்தசதி என்ற நூலை எந்த மொழியில் எழுதினார்?

A) தெலுங்கு

**B) பிராகிருதம்**

C) சமஸ்கிருதம்

D) பாலி

**(குறிப்பு - சாதவாகன அரசர் பிராகிருத மொழியில் எழுதிய நூல் காதாசப்தசதி என்பதாகும்.)**

7) தமிழின் மிகப்பழமையான இலக்கண நூலாகக் கருதப்படுவது எது?

**A) தொல்காப்பியம்**

B) எட்டுத்தொகை நூல்கள்

C) பத்துப்பாட்டு நூல்கள்

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - தமிழ் செவ்வியல் இலக்கிய தொகுப்பானது தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றை கொண்டுள்ளது. தமிழின் மிகப்பழமையான இலக்கண நூலான தொல்காப்பியம் கவிதையியலை பற்றி மட்டும் பேசாமல் அக்காலத்து சமூக பண்பாட்டையும் பேசுகிறது.)**

8) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் ஐம்பெரும்காப்பியங்களும் எந்த காலத்தைச் சார்ந்தவை ஆகும்?

**A) பொ. ஆ. நான்காம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை**

B) பொ. ஆ. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரை

C) பொ. ஆ. நான்காம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டு வரை

D) பொ. ஆ. மூன்றாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை

**(குறிப்பு - சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் ஐம்பெரும்காப்பியங்களும் பொ. ஆ. நான்காம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரையிலான கால சமூக பண்பாட்டுச் சூழலை சார்ந்தவையாகும்)**

9) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு கொண்டுள்ள பாடல்களின் எண்ணிக்கை என்ன?

A) 3000

**B) 2400**

C) 1800

D) 1200

**(குறிப்பு - எட்டுத்தொகை மற்றும் பத்துபாட்டு ஏறத்தாழ 2400 பாடல்கள் கொண்ட இலக்கிய கருவூலம் ஆகும். 3 முதல் 800 அடி அளவு கொண்ட இப்பாடல்கள் பாணர்களாலும், புலவர்களாலும் இயற்றப்பட்டதாகும்)**

10) கீழ்க்காணும் எட்டுத்தொகை நூல்களுள் தவறானது எது?

A) நற்றிணை

B) குறுந்தொகை

**C) முல்லைப்பாட்டு**

D) பதிற்றுப்பத்து

**(குறிப்பு - நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு மற்றும் புறநானூறு ஆகியவை எட்டுத்தொகை நூல்கள் ஆகும்)**

11) கீழ்காணும் பத்துப்பாட்டு நூல்களின் தவறானது எது?

A) திருமுருகாற்றுப்படை

B) சிறுபாணாற்றுப்படை

C) மதுரைக்காஞ்சி

**D) குறிஞ்சித்திணை**

**(குறிப்பு - திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை மற்றும் மலைபடுகடாம் ஆகியவை பத்துப்பாட்டு நூல்கள் ஆகும்)**

12) முதன்மை காப்பியங்கள் என்று அழைக்கப்படுவது எது?

I. சிலப்பதிகாரம்

II. மணிமேகலை

III. சீவக சிந்தாமணி

**A) I, II மட்டும்**

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவை அனைத்தும்

**(குறிப்பு - சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பண்பாடு மற்றும் மத வரலாற்றுக்கு சிறந்த சான்றுகளாக பயன்படுபவை. இவை இரண்டும் முதன்மை காப்பியங்கள் என அழைக்கப்படுகின்றன)**

13) பொருத்துக

I. கிரேக்கம் - a) இயற்கை வரலாறு

II. பிளினி - b) ஜியோகிராபி

III. தாலமி - c) பீயூட்டெஞ்செரியன்

IV. ரோமானியர் - d) பெரிப்ளஸ்

**A) I-d, II-a, III-b, IV-c**

B) I-a, II-c, III-b, IV-d

C) I-d, II-a, III-c, IV-b

D) I-b, II-d, III-a, IV-c

**(குறிப்பு - மேற்கண்ட கிரேக்க இலத்தீன் சான்றுகள் தொலைதூர வணிகப் பண்பாட்டுத் தொடர்புகள் குறித்த செய்திகளைத் தெரிவிக்கின்றன)**

14) அசோகரின் இரண்டாம் பாறைகல்வெட்டு மூலம் யாரைப் பற்றி அறிய முடிகிறது?

I. சோழர்

II. பாண்டியர்.

III. கேரள புத்திரர்

IV. சத்திய புத்திரர்

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - அசோகரின் இரண்டாம் பாறைக் கல்வெட்டில் மௌரிய அரசின் எல்லைக்கு அப்பால் அமைந்த அண்டை அரசுகளான தமிழகத்தில் ஆட்சி புரிந்த அரச மரபுகள் ஆன சோழர், பாண்டியர், கேரள புத்திரர், சத்திய புத்திரர் ஆகியோரை குறிப்பிடுகின்றார்.)**

15) மௌரியப் பேரரசின் கீழ் இருந்த பகுதிகள் எது?

I. கர்நாடகம்

II. ஆந்திராவின் வடபகுதி

III. தமிழகம்

**A) I, II மட்டும்**

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவை அனைத்தும்

**(குறிப்பு - மௌரிய பேரரசு கர்நாடகா, ஆந்திராவின் பல பகுதிகளையும் கொண்டிருந்தது. தமிழக அரசுகள் சுதந்திரமான அண்டை நாடுகள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளன)**

16) சங்க பாடல்களில் தொகுப்பிற்கு பங்களித்த புலவர்களின் எண்ணிக்கை என்ன?

**A) 450**

B) 250

C) 150

D) 200

**(குறிப்பு - சங்கப் பாடல்களின் தொகுப்பிற்கு பங்களித்த 450க்கும் மேற்பட்ட புலவர்களின் 30 பெண்பாற் புலவர்களும் அடங்குவர்)**

17) கீழ்காணும் புலவர்களுள் பெண்பாற்புலவர் அல்லாதவர் யார் எது?

A) நல்வெளியார்

B) காக்கைபாடினியார்

**C) ஒட்டக்கூத்தர்**

D) காவற்பெண்டு

**(குறிப்பு - அவ்வையார், அள்ளூர் நன்முல்லையார், காக்கைபாடினியார், காவற்பெண்டு, நல்வெளியார், ஒக்கூர் மாசாத்தியார், பாரிமகளிர் ஆகியோர் மிகமுக்கிய பெண்பாற் புலவர்கள் ஆவர்)**

18) சாதவாகனர் எந்த நதிக்கரையில் தனது தலைநகரை நிறுவினார் ?

**A) கோதாவரி**

B) கிருஷ்ணா

C) காவிரி

D) நர்மதா

**(குறிப்பு - அண்மைக் காலத் தொல்லியல் ஆய்வுகளின் படி தெலுங்கானா பகுதிகளில் ஆட்சியை தொடங்கிய சாதவாகனர் மகாராஷ்டிர பகுதிகளுக்கு நகர்ந்து கோதாவரி நதி தீரத்தில் தனது தலைநகரை நிறுவினார்)**

19) சாதவாகனர் தலைநகரம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) இந்துஸ்தான்

B) பர்மிஸ்தான்

**C) பிரதிஸ்தான்**

D) பிரதிஷ்டஸ்தான்

**(குறிப்பு - கோதாவரி நதி தீரத்தில் பிரதீஸ்தான்( மகாராஷ்டிராவில் பைத்தன்) என்னும் நகரை தலைநகராக கொண்டு ஆட்சி புரிந்தனர். பின்னர் கிழக்கு நோக்கி நகர்ந்து ஆந்திராவின் கடற்கரை பகுதிகளை கட்டுப்படுத்தினார்)**

20) சாக அரசர் நாகாபனா என்பவரை தோற்கடித்த சாதவாகன அரசர் யார்?

**A) கௌதமபுத்திர சாதகர்ணி**

B) கௌதமபுத்திர பாலஸ்ரீ

C) கௌதமபுத்திர பகல்வர்

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - சாதவாகன அரசர்கள் கௌதமபுத்திர சதகர்ணி பெரும் அரசன் ஆவார். சாக அரசர் நாகபனாவை வென்ற அவர் நாகபனாவின் நாணயங்களை தன் அரச முத்திரையோடு மீண்டும் வெளியிட்டார்)**

21) கௌதமிபுத்ர சதகர்னிக்கு பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர் யார்?

**A) வசிஷ்டபுத்ர புலுமாவி**

B) கௌதம பாலஸ்ரீ

C) கௌதமபுத்ர யக்னஸ்ரீ

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - கௌதமிபுத்திர சதகர்னிக்கு பின்னர் ஆட்சி பொறுப்பேற்ற அவர் வசிஷ்டபுத்திர புலுமாவி என்பவர் ஆவார். கௌதமிபுத்ர சாதகர்னியின் தாய் கௌதம பாலஸ்ரீ என்பவராவார்.)**

22) சாதவாகனப் பேரரசின் கீழ் வராத பகுதி எது?

A) கல்யாண்

**B) பிரதிஸ்தானம்**

C) கலிங்கம்

D) அனுபம்

**(குறிப்பு - அனுபம், நாசிக், கல்யாண், சோபரா, முலுகா, பிரதிஸ்தானம், அஸ்மாகா போன்றவை சாதவாகனப் பேரரசின் கீழ் இருந்த பகுதிகள் ஆகும்)**

23) கப்பலின் வடிவம் பதிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்ட சாதவாகன அரசர் யார்?

A) கௌதமிபுத்ர சதகர்ணி

B) கௌதம பாலஸ்ரீ

**C) யக்னஸ்ரீ சதகர்னி**

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - யக்னஸ்ரீ சதகர்னி, தனது ஆட்சியின் வெளிநாட்டு வணிகத்தின் முக்கியத்துவத்தை காட்டும் வகையில் கப்பலின் வடிவம் பதிப்பிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டார்.)**

24) சாதவாகனர்களின் பேரரசு எந்த நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்தது?

A) பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டு

**B) பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு**

C) பொ.ஆ. நான்காம் நூற்றாண்டு

D) பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டு

**(குறிப்பு - சாதவாகனப் பேரரசு மூன்றாம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்தது. அவர்களைத் தொடர்ந்து ஆந்திரப் பகுதியில் இக்ஷ்வாகு, பட கர்நாடகப் பகுதிகளில் கடம்பர் ஆகியோர் ஆட்சி புரிந்தனர்)**

25) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - சாதவாகன அரசர் ஹால 700 காதற் பாடல்களைக் கொண்ட காதா சப்த சதி என்ற நூலை இயற்றினார்.

கூற்று 2 - மகாராஷ்டிர பிராகிருத மொழியில் எழுதப்பட்ட இந்த நூலின் கருப்பொருள் சங்க இலக்கியத்தின் அகப்பொருளை ஒத்துள்ளன.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - சாதவாகன அரசர் ஹால பிராகிருத மொழியில் எழுதிய காதா சப்த சதி என்னும் நூல் சாதவாகனர் காலத்து இலக்கியச் சான்றாக விளங்குகிறது.)**

26) கீழ்காணும் கூற்றுகளில் எது சரி?

கூற்று 1 - நில மானியம் வழங்குவது சாதவாகனர் காலத்தின் முக்கிய அம்சமாகும்.

கூற்று 2 - சாதவாகனர் காலத்தில் நிலமானியத்தின் பயனாளிகள் பெரும்பாலும் பௌத்தர்களும், பிராமணர்களும் ஆவர்.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - பௌத்த துறவிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. இவ்வாறு மத குருமார்களை கொண்ட குழுக்கள் செல்வாக்குப் பெற்று உயரிடத்தை வகிக்கத்தொடங்கியதை காணமுடிகிறது.)**

27) பௌத்த துறவிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டதை குறிப்பிடும் கல்வெட்டு எது?

A) அசோகரின் இரண்டாம் பாறை கல்வெட்டு

**B) நனிகாட் கல்வெட்டு**

C) கேரளா குகைகளில் காணப்படும் தமிழ் பிராமி கல்வெட்டு

D) ஆந்திரப் பகுதியில் உள்ள சாதவாகனர் கல்வெட்டு,

**(குறிப்பு - பௌத்த துறவிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டதை நனிகாட் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. நிலங்களைக் கொடையாக வழங்கும் இந்த முறை நிலங்களில் வேளாண்மை செய்யாமல், நிலங்களுக்கு உரிமையாளராக மாறிய ஒரு பிரிவினரை உருவாக்கியது)**

28) சாதவாகனர் காலத்தைப் பற்றிய கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - முதன் முதலாக தக்காணத்தின் பெரும் பகுதியை உள்ளடக்கிய ஒரு பெரிய அரசு நிறுவப்பட்டது.

கூற்று 2 - பௌத்த சங்கங்களுக்கு என்றே பல குடைவரைக்குகைகள் உருவாக்கப்பட்டன.

கூற்று 3 - சாதவாகனர் பேரரசு பொ.ஆ. நான்காம் நூற்றாண்டில் வீழ்ச்சி அடைந்தது.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

**B) கூற்று 1, 2 மட்டும் சரி**

C) கூற்று 2, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

**(குறிப்பு - சாதவாகனர் பேரரசு பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்தது. பௌத்த சங்கங்களுக்கு என்று பல குடைவரைக் குகைகள் உருவாக்கப்பட்டன. அவை உள்நாட்டு பகுதிகளையும், கொங்கன கடற்கரை பகுதியையும், உள்நாட்டு வணிகப் பாதைகளை யும் இணைக்கும் புள்ளிகளாக அமைக்கப்பட்டு இருந்தமைக்கான சான்றுகளை கொண்டுள்ளன)**

29) சங்க காலம் என்பது கீழ்காணும் காலங்களில் எது?

A) பொ.ஆ. முதல் ஐந்து நூற்றாண்டுகள்

B) பொ.ஆ. முதல் இரண்டு நூற்றாண்டுகள்

**C) பொ.ஆ. முதல் மூன்று நூற்றாண்டுகள்**

D) பொ.ஆ. முதல் நான்கு நூற்றாண்டுகள்

**(குறிப்பு - பொ. ஆ. முதல் மூன்று நூற்றாண்டுகளில் சங்ககாலம் என்பது பெரும்பாலானோர் ஒத்துக்கொள்ளும் காலவரையறை ஆகும். இக்காலம் பற்றிய செய்திகள் அனைத்தும் சங்க இலக்கியங்களில் இருந்து பெறப்படுகின்றன. இலக்கிய சான்றுகள் தவிர தெளிவான கல்வெட்டுச் சான்றுகளும் தொல்பொருளியல் சான்றுகளும் கிடைக்கப் பெறுவதால் இக்காலம் ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே தொடங்குகிறது எனக் கூறலாம்)**

30) அசோகர் கல்வெட்டுகளில் மூவேந்தர்களும் இடம்பெற்றுள்ள சத்திய புத்திரர் என்பது யாரைக் குறிக்கிறது?

**A) அதியமான்**

B) கடம்பன்

C) இக்சவாகு

D) இவர்கள் யாரும் இல்லை

**(குறிப்பு - மூவேந்தர்கள் என்று அறியப்பட்ட சேர சோழ பாண்டியர்கள் பெரும்பாலான வேளாண் நிலங்களையும், வணிக பெருவழிகளையும், நகரங்களையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அசோகர் கல்வெட்டுகளில் மேற்சொல்லப்பட்ட மூவேந்தர்களோடு இடம்பெற்றுள்ள சத்தியபுத்திரர் என்பது அதியமான் என்னும் வேளிரை குறிப்பதாக உள்ளது)**

31) சோழர்களின் ஆட்சியின் மையப் பகுதியாக இருந்த இடம் எது?

**A) காவிரி ஆற்றின் கழிமுகப் பகுதி**

B) தாமிரபரணி ஆற்றின் கழிமுகப் பகுதி

C) வைகை ஆற்றின் கழிமுகப் பகுதி

D) கிருஷ்ணா ஆற்றின் கழிமுகப் பகுதி

**(குறிப்பு - சோழர்கள் தமிழகத்தின் மத்திய மற்றும் வட பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டிருந்தனர். அவர்களது ஆட்சியின் மையமாக இருந்த பகுதி காவிரி ஆற்றின் கழிமுகப் பகுதி ஆகும். இதுவே பின்னர் சோழமண்டலம் என்று அழைக்கப்பட்டது)**

32) சோழர்களின் தலைநகரான உறையூர் எந்த நகரத்திற்கு அருகே அமைந்துள்ளது?

**A) திருச்சிராப்பள்ளி**

B) புதுக்கோட்டை

C) கரூர்

D) ஈரோடு

**(குறிப்பு - சோழர்களின் தலைநகராக விளங்கிய ஊர் உறையூர் ஆகும். இது திருச்சிராப்பள்ளி நகரத்திற்கு அருகே அமைந்துள்ளது. காவிரிப்பூம்பட்டினம் இந்துமாகடலின் பல பகுதிகளை சேர்ந்த வணிகர்களை தன் பால் ஈர்த்தது)**

33) சங்க கால சோழ அரசர்களில் ஒருவரான கரிகாலன் யாருடைய மகன் ஆவார்?

**A) இளஞ்சேட்சென்னி**

B) ராஜேந்திர சோழன்

C) விஜயாலய சோழன்

D) குலோத்துங்க சோழன்

**(குறிப்பு - இளஞ்சேட்சென்னியின் மகன் ஆவான் கரிகாலன் சங்க கால சோழ அரசர்களில் தலைவராக அறியப்படுகிறார். பட்டினப்பாலை என்னும் நூல் கரிகாலனுடைய ஆட்சியைப் பற்றி விரிவாகக் கூறுகிறது)**

34) பட்டினப்பாலை என்னும் நூலை எழுதியவர் யார்?

A) ஒக்கூர் மாசாத்தியார்

B) பட்டினத்தார்

**C) கடியலூர் உருத்திரங்கண்ணனார்**

D) அள்ளூர் நன்முல்லையார்

**(குறிப்பு - கரிகாலனின் ஆட்சியின்போது காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெற்ற ஆரவாரமான வணிக நடவடிக்கைகள் குறித்து கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப் பாலை என்னும் நூலில் விரிவாக விளக்குகிறார்)**

35) வெண்ணிப் போர்க்களத்தில் சேரர்களையும் பாண்டியர்களையும் வெற்றி கொண்ட சோழ அரசர் யார்?

**A) கரிகாலச்சோழன்**

B) குலோத்துங்கச் சோழன்

C) இளஞ்சேட்சென்னி

D) ராஜேந்திர சோழன்

**(குறிப்பு - கரிகாலனுடைய தலையாய போர் வெற்றி என்பது வெண்ணிப் போர்க்களத்தில் சேரரையும் பாண்டியனையும் அவர்களுக்கு உதவிய 11 வேளிர் குல தலைவர்களையும் வெற்றி கொண்டது ஆகும். இதைப்பற்றி உருத்திரங்கண்ணனார் என்பவர் எழுதிய பட்டினப்பாலை என்னும் நூல் விளக்குகிறது.)**

36) வேத வேள்வி யான ராஜசூய யாகத்தில் நடத்திய சோழ அரசன் யார்?

A) விஜயாலய சோழன்

**B) பெருநற்கிள்ளி**

C) இளஞ்சேட்சென்னி

D) கரிகால சோழன்

**(குறிப்பு - பெருநற்கிள்ளி என்னும் பெயருடைய சோழ அரசர் வேத வேள்வி யான ராஜசூய யாகத்தில் நடத்தியுள்ளார். கரிகாலனின் மறைவைத் தொடர்ந்து உறையூர் மற்றும் புகார் அரச குடும்பத்தினர் இடையே வாரிசுரிமை தொடர்பான மோதல் ஏற்பட்டதற்கு சான்றுகள் இருக்கின்றன)**

37) சேரர்கள் ஆண்ட பகுதிகளில் தவறானது எது?

I. மத்திய கேரள பகுதிகள்

II. வடக்கு கேரள பகுதிகள்

III. தமிழ்நாட்டின் கொங்கு பகுதிகள்

IV. தமிழ்நாட்டின் காவிரிநதி படுகை பகுதிகள்

A) III மட்டும் தவறு

**B) IV மட்டும் தவறு**

C) I, IV மட்டும் தவறு

D) II, III மட்டும் தவறு

**(குறிப்பு - சேரர்கள் மத்திய கேரள பகுதிகள், வடக்கு கேரள பகுதிகள், தமிழ்நாட்டின் கொங்கு பகுதிகளை ஆட்சி செய்தனர்)**

38) சேரர்களின் தலைநகரமான வஞ்சி தற்போது தமிழகத்தின் எந்த ஊராக அடையாளம் காணப்படுகிறது?

**A) கரூர்**

B) பூம்புகார்

C) கோயம்புத்தூர்

D) திருப்பூர்

**(குறிப்பு - சேரர்களின் தலைநகராக வஞ்சி நகரம் இன்றைய தமிழகத்தின் கரூர் என்று அடையாளம் காணப்படுகிறது. எனினும் சில அறிஞர்கள் கேரளத்திலுள்ள திருவஞ்சைக்களம் என்னும் ஊரே வஞ்சி என்று அடையாளம் காண்கின்றனர்.)**

39) சேரர்களின் கடற்கரை துறைமுகங்களாக விளங்கியது எது?

I. தொண்டி துறைமுகம்

II. முசிறி துறைமுகம்

III. புகார் துறைமுகம்

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - மேலைக் கடற்கரை துறைமுகங்களான முசிறி துறைமுகமும், தொண்டி துறைமுகமும் சேரர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. சேரர்களில் பொறையர் என்னும் கிளையினர் தமிழ்நாட்டில் கரூர் நகரில் இருந்து ஆட்சிபுரிந்தனர் என பல அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்)**

40) எட்டு சேர அரசர்கள் குறித்தும் அவர்கள் ஆண்ட பகுதிகள் குறித்தும் பேசும் நூல் எது?

**A) பதிற்றுப்பத்து**

B) ஐங்குறுநூறு

C) புறநானூறு

D) பரிபாடல்

**(குறிப்பு - எட்டு சேர அரசர்கள் குறித்தும் அவர்கள் ஆண்ட பகுதிகள், அவர்களது சாதனைகள் குறித்தும் பதிற்றுப்பத்து என்னும் நூல் பேசுகிறது. பதிற்றுப்பத்து என்பது ஒரு எட்டுத்தொகை நூல் ஆகும்)**

41) தன் பெயரில் நாணயங்களை வெளியிட சேர மன்னர் யார்?

A) சேரன் செங்குட்டுவன்

**B) சேரல் இரும்பொறை**

C) சேரல் இளஞ்சேட்சென்னி

D) நெடுஞ்சேரலாதன்

**(குறிப்பு - கரூர் நகருக்கு அருகேயுள்ள புகளூரில் உள்ள கல்வெட்டு மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த சேர அரசர்களை குறிப்பிடுகின்றது)**

42) கடற் கொள்ளையர்களை அடக்கி அதன் மூலம் முக்கிய துறைமுகமான கொடுங்களூரை காப்பாற்றிய சேர மன்னர் யார்?

**A) சேரன் செங்குட்டுவன்**

B) சேரல் இரும்பொறை

C) சேரல் இளஞ்சேட்சென்னி

D) நெடுஞ்சேரலாதன்

**( இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் போன்றோர் முக்கிய சேர அரசர்கள் ஆவர். சேரன் செங்குட்டுவன் பல குறுநில மன்னர்களை வெற்றி கண்டுள்ளார். கடற் கொள்ளையர்களை அடக்கி அதன் மூலம் முக்கிய துறைமுகமான முசிறியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார் என வரலாற்று சான்றுகள் கூறுகின்றன)**

43) சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் __________ மாபெரும் வட இந்திய படையெடுப்பு சங்க இலக்கியங்களில் சொல்லப்படவில்லை.

**A) செங்குட்டுவனின்**

B) சேரல் இரும்பொறையின்

C) நெடுஞ்சேரலாதனின்

D) இமயவரம்பனின்

**(குறிப்பு - சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் செங்குட்டுவனின் மாபெரும் வட இந்திய படையெடுப்பு சங்க இலக்கியங்களில் சொல்லப்படவில்லை. இவர் 56 ஆண்டுகள் ஆட்சி செய்ததாகவும் வைதீக, அவைதீக மதங்களை ஆதரித்ததாகவும் கூறப்பட்டுள்ளது)**

44) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - சேரர்கள் செப்பு மற்றும் ஈய நாணயங்களை வெளியிட்டனர்.

கூற்று 2 - சேரர்களின் நாணயத்தில் தமிழ் பிராமியில் புராண குறிப்புகளைக் கொண்டுள்ளன நாணயங்கள் ரோம நாணயங்கள் போல உள்ளன.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - சேரர் காலத்து நாணயங்களில், எழுத்துக்கள் எவையும் இல்லாமல் சேரர்களின் வில் அம்பு சின்னங்களைத் தாங்கிய சேர நாணயங்களும் தொல்லியல் ஆய்வுகளில் கிடைத்துள்ளன.)**

45) பாண்டியர்களின் தலைநகராக விளங்கியது எது?

A) திருச்சிராப்பள்ளி

B) தஞ்சாவூர்

**C) மதுரை**

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - பாண்டியர்களின் தலைநகராக மதுரை இருந்தது. பாண்டியர்களின் சின்னமாக மீன் இருந்தது)**

46) பாண்டியர்களின் துறைமுகமாக விளங்கியது?

A) முசிறி துறைமுகம்

B) தொண்டி துறைமுகம்

C) பூம்புகார் துறைமுகம்

**D) கொற்கை துறைமுகம்**

**(குறிப்பு - தாமிரபரணி நதி வங்காள விரிகுடா கடலில் கலக்கும் இடத்தில் அமைந்துள்ள கொற்கை துறைமுகம் பாண்டியர்களின் முக்கிய துறைமுகமாக விளங்கியது. இது முத்துக்குளிப்பு இருக்கும் சங்குகள் சேகரிப்பிற்கும்க்கும் பெயர் பெற்ற துறைமுகம் ஆகும்)**

47) பெரிப்ளஸின் குறிப்புகளில் சொல்லப்பட்டிருக்கும் துறைமுகம் எது?

A) முசிறி துறைமுகம்

B) தொண்டி துறைமுகம்

C) பூம்புகார் துறைமுகம்

**D) கொற்கை துறைமுகம்**

**(குறிப்பு - பெரிப்ளஸ் குறிப்புகளில் கொற்கை துறைமுகம் கொல்கொய் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது)**

48) கேரளத்தின் தெற்கு பகுதிகளில் மீது போர் தொடுத்து கோட்டத்திற்கு அருகே உள்ள நெல்கிண்டா துறைமுகத்தை கைப்பற்றியவர்கள் யார்?

A) சேரர்கள்

**B) பாண்டியர்கள்**

C) சோழர்கள்

D) பல்லவர்கள்

**(குறிப்பு - பாண்டியர்களின் நாணயங்களில் ஒரு புறம் யானையின் வடிவமும் மற்றொருபுறம் புதிய பாணியில் மீன் உருவமும் பொறிக்கப்பெற்றுள்ளன. மரபுவழிச் செய்தியின் படி பாண்டியர் தமிழ் சங்கங்களை ஆதரித்து சங்க நூல்களை தொகுப்பித்தனர்.)**

49) மாங்குளம் தமிழ் பிராமி கல்வெட்டு கீழ்க்காணும் எந்த அரசரைப் பற்றி குறிப்பிடுகிறது?

**A) நெடுஞ்செழியன்**

B) நெடுஞ்சேரலாதன்

C) சேரல் இரும்பொறை

D) சேரன் செங்குட்டுவன்

**(குறிப்பு - மாங்குளம் தமிழ் பிராமி கல்வெட்டு பொ.ஆ.மு.இரண்டாம் நூற்றாண்டை சார்ந்த பாண்டிய அரசன் நெடுஞ்செழியனை குறிப்பிடுகிறது.)**

50) மதுரைக் காஞ்சி என்னும் நூல் கீழ்க்காணும் எந்த பாண்டிய மன்னர்களை பற்றி குறிப்பிடுகிறது?

I. காஞ்சி முதுகுடுமிப் பெருவழுதி.

II. தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்

III. முப்பெரும் வழுதி

**A) I, II மட்டும் சரி**

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - மதுரைக்காஞ்சி என்னும் நூல் ஒரு பத்துப்பாட்டு நூல் ஆகும். இதில் மன்னர்களான காஞ்சி முதுகுடுமிப் பெருவழுதி மற்றும் நெடுஞ்செழியனான தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் மற்றும் பல பாண்டிய மன்னர்களையும் குறிப்பிடுகிறது)**

51) முதுகுடுமிப் பெருவழுதி பற்றிக் கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. இவர் பிராமணர்களுக்கு நிலங்களை தானமாக வழங்கினார்.

II. இவர் பல வேத வேள்வி சடங்குகளை நடத்தினார்.

III. இவர் பெருவழுதி என்ற பெயரில் புராணகதை பொறுப்புகளை கொண்ட நாணயங்களை வெளியிட்டுள்ளார்.

IV. இவரைப் பற்றிய பாடல்கள் பட்டினப்பாலை என்னும் நூலில் காணப்படுகிறது.

A) I, II, IV மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

**C) I, II, III மட்டும் சரி**

D) எல்லாமே சரி

**(குறிப்பு - காஞ்சி முதுகுடுமிப் பெருவழுதி பற்றிய குறிப்புகள் பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான மதுரைக் காஞ்சி என்னும் நூலில் காணப்படுகிறது.)**

52) முதுகுடுமிப் பெருவழுதி என்பவரால் தலையாலங்கானத்து போரில் வீழ்த்தப்பபெற்ற ஐந்து வேளிர் குல சிற்றரசர்களுள் தவறானவர் யார்?

I. திதியன்

II. எழினி

III. எருமையூரான்

IV. வண்டியூரான்

V. பொருநன்

A) I மட்டும் தவறு

B) II மட்டும் தவறு

C) III மட்டும் தவறு

**D) IV மட்டும் தவறு**

**(குறிப்பு - நெடுஞ்செழியன், சேரர், சோழர், ஐந்து வேளிர் குல சிற்றரசர்கள்( திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் )ஆகியோரின் கூட்டுப் படைகளை தலையானங்கானத்து போரில் வெற்றி வெற்றி கொண்டதாக முதுகுடுமிப் பெருவழுதி பாராட்டப்படுகிறார்)**

53) முதுகுடுமிப் பெருவழுதி பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. கொற்கையின் தலைவன் என்று அழைக்கப்பட்டார்.

II. தென்பகுதி பரதவர்களின் தலைவன் என்று அழைக்கப்பட்டார்.

III. எட்டாம் நூற்றாண்டை சேர்ந்த வேள்விக்குடி செப்பேடுகளில் இவர் பிராமணர்களுக்கு நிலங்களை தானமாக வழங்கினார் என குறிப்பிடப்படுகிறது.

A) I, II மட்டும் சரி

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - திருநெல்வேலி கடற்கரை பகுதியில் வாழும் மீன் பிடிக்கும், போர் புரியும் திறன் பெற்ற தென்பகுதி பரதவர்களின் தலைவன் என்று இவர் புகழப்படுகிறார். மேலும் சிற்றரசர்கள் இடமிருந்து மிலலை, முத்தூர் என்னும் இடங்களை கைப்பற்றிய பெருமை இவரையே சாரும்)**

54) கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையை தேர்ந்தெடு.

**A) சேரர்கள் - காவிரிப்பூம்பட்டினம்**

B) சோழர்கள் - காவிரி ஆற்றின் கழிமுகப் பகுதி

C) பாண்டியர்கள் - கொற்கை துறைமுகம்

D) கரிகாலன் - பட்டினப்பாலை

**(குறிப்பு - காவிரிப்பூம்பட்டினம் என்பது சோழர்களின் முக்கிய துறைமுகம் ஆகும். சேரர்களின் முக்கிய துறைமுகமாக விளங்கியது, முசிறி துறைமுகம் மற்றும் தொண்டி துறைமுகம் ஆகும்)**

55) முத்து குளிப்பிற்கும் சங்குகள் சேகரிப்புக்கும் பெயர் பெற்ற துறைமுகம் எது?

A) பூம்புகார் துறைமுகம்

**B) கொற்கை துறைமுகம்**

C) முசிறி துறைமுகம்

D) தொண்டி துறைமுகம்

**(குறிப்பு - தாமிரபரணி நதி வங்காள விரிகுடா கடலில் கலக்கும் இடத்தில் அமைந்துள்ள கொற்கை துறைமுகம் பாண்டியர்களின் முக்கிய துறைமுகம் ஆகும். இது முத்து குளிப்பதற்கும் சங்குகள் சேகரிப்பதற்கும் பெயர் பெற்ற துறைமுகம் ஆகும்)**

56) பொருத்துக

I. குறிஞ்சி - a) வயலும் வயல் சார்ந்த இடம்

II. முல்லை - b) கடலும் கடல் சார்ந்த இடம்

III. மருதம் - c) மலையும் மலை சார்ந்த இடம்

IV. நெய்தல் - d) காடு சார்ந்த இடம்

**A) I-c, II-d, III-a, IV-b**

B) I-c, II-b, III-a, IV-d

C) I-c, II-a, III-b, IV-d

D) I-d, II-b, III-a, IV-c

**(குறிப்பு - திணைக் கோட்பாட்டில் பின்புலத்தில் தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை இன்னும் ஐந்து முக்கிய நிலப்பரப்புகளாக பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிலத்திற்கும் தெய்வம், மக்கள், சூழல் சார்ந்த பண்பாட்டு வாழ்க்கை என தனித் தன்மைகளைக் கொண்டு இருந்தது)**

57) பொருத்துக

I. குறிஞ்சி - a) மீன்பிடித்தல் மற்றும் உப்பு சேகரித்தல்

II. முல்லை - b) வேட்டையாடுதல்

III. மருதம் - c) கால்நடை மேய்த்தல்

IV. நெய்தல் - d) வேளாண்மை செய்தல்

**A) I-b, II-c, III-d, IV-a**

B) I-c, II-b, III-a, IV-d

C) I-c, II-a, III-b, IV-d

D) I-d, II-b, III-a, IV-c

**(குறிப்பு - பாலை நிலம் மணலும் மணல் சார்ந்த வறண்ட நிலப்பகுதி ஆகும். இங்கு வேளாண்மை சாத்தியமில்லை என்பதால் மக்கள் கால்நடை திருட்டையும் கொள்ளையடிப்பதும் தொழிலாகக் கொண்டனர்)**

58) தமிழ் அரசமைப்புகளில் காணப்பட்ட ஆட்சியாளர்களின் வகைகளுள் சரியானது எது?

I. கிழார்

II. வேளிர்

III. வேந்தன்

A) I, II மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - ஆட்சியாளர்களின் மூன்று வகைப்பட்ட தலைமைத்துவம் கொண்டவர்களை காணமுடிகிறது. அவை கிழார், வேளிர் மற்றும் வேந்தன் என்பனவாம். ஒருவகையில் திணை சார் பாகுபாடு சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் நிலவிய சமச்சீரற்ற வளர்ச்சியை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது என்றும் சொல்லப்படுகிறது)**

59) கிழார் என்பவரை பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. கிழார் என்பவர் கிராமங்களில் அல்லது ஒரு சிறிய பகுதியில் தலைவராக இருந்து பின்னர் நாடு என்று அறியப்பட்ட நிர்வாகப் பிரிவில் தலைவர் ஆவார்.

II. இவர்கள் குறிப்பிட்ட இடங்களில் வாழும் பழங்குடி சமூகங்களில் தலைவர்கள் ஆவர்.

A) I மட்டும் சரி

B) II மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**(குறிப்பு - கிழார் என்பவர்கள் ஒரு கிராமங்களின் தலைவராக இருந்து பின்னர் ஒரு சிறிய பகுதியில் தலைவராக இருந்து பின்னர் நாடு என்று அறியப்பட்ட நிர்வாகப் பிரிவின் தலைவராக படிப்படியாக உயர்ந்தவர்கள் ஆவர்)**

60) வேந்தர் எனப்படுபவர்களைப் பற்றிய கீழ்க்காணும் கூற்றுக்களுள் எது சரியானது?

கூற்று 1 - வேந்தர் எனப்பட்டவர் மிகப்பெரும் வளமான நிலப்பகுதியை கட்டுப்படுத்திய அரசர்கள் ஆவர்.

கூற்று 2 - சேரர்கள், சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் ஆகியோர் வேந்தர்கள் ஆவர்.

கூற்று 3 - அதியமான், பாரி, இருங்கோ போன்றவர்கள் வேந்தர்களுக்கு எடுத்துக்காட்டு ஆவர்.

A) கூற்று 1, 3 மட்டும் சரி

**B) கூற்று 1, 2 மட்டும் சரி**

C) கூற்று 2, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

**(குறிப்பு - இரும்பு காலகட்டத்தில் தோன்றிய தலைவர்களில் இருந்து தொடக்க வரலாற்று கால வேந்தர்கள் உருவாகினர். ஒரு சிலர் மேய்ச்சல் நிலங்களின் மீதும், வேளாண் நிலங்களின் மீதும் தங்கள் ஆதிக்கத்தை செலுத்தினர்.)**

61) வேளிர் குறித்து கீழ்காணும் கூற்றுகளில் சரியானது எது?

கூற்று 1 - அதியமான், பாரி, ஆய், இருங்கோ போன்றவர்கள் வேளிர் ஆவர்.

கூற்று 2 - இவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென இயற்கை வளம் மிக்க ஒரு பகுதியை ஆண்டனர்.

கூற்று 3 - ஆநிரை கவர்தல் காரணமாக இவர்கள் இடையே அடிக்கடி மோதல்கள் நடைபெற்றன.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - வேளிர் என்போர் பல்வேறு புவியியல் தன்மைகளைக் கொண்ட, குறிப்பாக மூவேந்தர்களின் வளம் நிறைந்த பகுதிகளில் இடையே அமைந்திருந்த மலைப்பாங்கான காட்டுப் பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தனர்.)**

62) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - கிழார்களையும், வேளிர் குல தலைவர்களையும் வேந்தர்கள் அடிபணிய செய்ததோடு தங்களுக்குள்ளும் போரிட்டுக் கொண்டனர்.

கூற்று 2 - சங்ககாலத்தை சேர்ந்த வேந்தர்கள் தங்களது வலிமையை பறைசாற்றிய கொள்வதற்காக சிறப்புப் பட்டங்களை சூடிக்கொண்டனர்.

கூற்று 3 - அசோகன் கல்வெட்டுகளில் சத்தியபுத்திர என்று குறிப்பிடப்பட்டுள்ளவர் பாரி ஆவார்.

**A) கூற்று 1, 2 மட்டும் சரி**

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

**(குறிப்பு - இரும்பு காலகட்டத்தில்(பொ.ஆ.மு 1100-300) தோன்றிய தலைவர்களில் இருந்து தொடக்க வரலாற்று கால வேந்தர்கள் உருவாகினர். தலைவர்களில் ஒருசிலர் மேய்ச்சல் நிலங்களின் மீதும்,**

**வேளாண் நிலங்களின் மீதும் தங்கள் முழுமையான கட்டுப்பாட்டை வைத்ததன் மூலம் உயர் நிலையை(வேந்தர்) அடைந்தனர்)**

63) வானவரம்பன், பெருவழுதி, கடுங்கோ, இமயவரம்பன் போன்ற பட்டங்களை சூட்டி கொண்டவர்கள் யார்?

A) கிழார்

**B) வேந்தர்கள்**

C) வேளிர்

D) பேரரசர்கள்

**(குறிப்பு - மேற்கண்ட பட்டப் பெயர்களை சூட்டி கொள்வதன் மூலம் வேந்தர்கள் தங்களை ஏனைய மக்களிடம் இருந்தும் வேளிர் குல தலைவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிக் கொண்டனர்)**

64) பட்டினப்பாலை நூலை இயற்றிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்கு யார் பொன் அளித்த சான்றுகள் பெருமளவில் உள்ளன?

A) இளஞ்சேட்சென்னி

B) நெடுஞ்செழியன்

**C) கரிகாலன்**

D) சேரல் இரும்பொறை

**(குறிப்பு - வேந்தர்கள் புலவர்களையும் கலைஞர்களையும் ஆதரித்து அவர்களை தங்களது அரசவையில் அமர வைத்துக் கொண்டது ஒரு வகையில் தங்களையும் தங்கள் நாட்டையும் புகழ்ந்து பாடுவதற்காக இருக்கலாம் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.)**

65) சங்ககாலத்தில் செய்யப்பட்ட கைவினை தொழில்களாக கருதப்படுபவை கீழ்க்கண்டவற்றுள் எது?

I. சங்கு வளையல் செய்தல்.

II. கண்ணாடி செய்தல்

III. மட்பாண்டம் செய்தல்

IV. உலோக பாண்டம் செய்தல்

A) I, II, III மட்டும் சரி

B) I, III, IV மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - சங்ககாலத்தில் கைவினை தொழில்களான உலோக பாண்டம் செய்தல், மணி மற்றும் தங்க அணிகலன் செய்தல், சங்கு வளையல் செய்தல், அணிகலன் செய்தல், கண்ணாடி மற்றும் இரும்பு வேலை, மண்பாண்டம் செய்தல் போன்ற உற்பத்தி நடவடிக்கைகள் குறித்த சான்றுகள் உள்ளன)**

66) சங்க காலத்தில் உற்பத்தி மையங்களாக விளங்கிய இடங்கள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. அரிக்கமேடு, உறையூர்

II. காஞ்சிபுரம், மதுரை

III. காவிரிப்பூம்பட்டினம், கொற்கை

IV. கேரளத்தின் பட்டணம்

A) I, II, III மட்டும் சரி

B) I, III, IV மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - மேற்கண்ட இடங்களில் கைவினைப் பொருள் உற்பத்தி வழமையாக நடந்துள்ளன. மதுரைக்காஞ்சி பகல் மற்றும் இரவு நேர கடைவீதிகளையும் அங்கு விற்பனையாகும் பல வகைப்பட்ட கைவினைப் பொருட்கள் பற்றியும் பேசுகிறது)**

67) மராத்திய எந்திர பொறியாளர்கள் தமிழக கைவினைஞர்களோடு இணைந்து பணியாற்றிய தாக கூறும் நூல் எது?

A) சிலப்பதிகாரம்

**B) மணிமேகலை**

C) மதுரைகாஞ்சி

D) பட்டினப்பாலை

**(குறிப்பு - மகத கைவினைஞர்கள், மாளவ உலோக பணியாளர்கள் மற்றும் மராத்திய எந்திர பொறியாளர்கள் போன்றோர் தமிழக கைவினை பொருள் செய்பவர்களோடு இணைந்து பணியாற்றியதற்கான சான்றுகள் மணிமேகலை என்னும் நூலில் கிடைத்துள்ளன)**

68) சங்ககாலத்தில் உப்பு வணிகர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

**A) உமணர்**

B) நிகம

C) சாத்தன்

D) உசிலன்

**(குறிப்பு - தமிழ் பிராமி கல்வெட்டுகளில் வணிகத்தோடு தொடர்புடைய வணிகன், சாத்தன், நிகம போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன. உப்பு வணிகர்கள் உமணர் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் மாடுகள் பூட்டிய வண்டிகளில் குடும்பத்தோடு வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்)**

69) இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களை குறிக்கும் சொல் எது?

**A) சாத்து**

B) நிகம

C) வணிக

D) வியாபாரி

**(குறிப்பு - ஷாப்பிங் என்னும் சொல் இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களை குறிப்பதாகும். சங்ககாலத்தில் வணிகத்தில் நாணயங்கள் பயன்படுத்தப்பட்டாலும் பண்டமாற்று முறையை அதிக அளவில் புழக்கத்தில் இருந்தது)**

70) சங்ககால வணிகத்தின் போது பயன்படுத்தப்பட்ட ரோமானிய தங்க வெள்ளி நாணய குவியல்கள் கண்டெடுக்கப்பட்ட இடம் எது?

**A) கோயம்புத்தூர்**

B) திருச்சிராப்பள்ளி

C) அரியலூர்

D) திருப்பூர்

**(குறிப்பு - அம்போரா என்னும் ரோம நாட்டு ஜாடிகள், கண்ணாடிப் பொருள்கள், கடல்கடந்த வணிக நடவடிக்கைகளில் சுட்டுகின்றன. அயல்நாட்டு வணிகர்களின் வருகை ஆகியவை குறித்து தொல்பொருள் சான்றுகள் இலக்கியச் சான்றுகளும் உள்ளன. ரோமானிய தங்க வெள்ளி நாணயங்கள் கோயம்புத்தூர் பகுதிகளிலும் தென் இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ளன)**

71) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. முறைப்படுத்தப்பட்ட மத நடவடிக்கைகளின் தோற்றம் அசோகர் காலத்தில் இருந்து தென்பட தொடங்குகிறது.

II. இந்தக் காலகட்டத்தில்தான் பௌத்தமதம் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பரவியிருந்தது.

III. அசோகரின் மகள் போதி மரத்தை இலங்கைக்கு கொண்டு சென்றதாக கருதப்படுகிறது.

A) I, II மட்டும் சரி

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - சாதவாகனர்களும், சங்ககாலத்து அரசர்களும், இக்சவாக்குகளும் வேத வேள்விகளை ஆதரித்தனர். பிராமணருடைய வருகை குறித்தும் வேத சடங்குகள் நடைபெற்றமைக்கும் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன)**

72) கீழ்க்காணும் எந்த நதிகளின் கழிமுகப் பகுதிகள் பல பௌத்த மையங்களை கொண்டுள்ளன?

I. கிருஷ்ணா.

II. கோதாவரி

III. நர்மதா

A) I, III மட்டும்

B) II, III மட்டும்

**C) I, II மட்டும்**

D) இவை அனைத்தும்

**(குறிப்பு - பௌத்த மதம் தொடர்பான சான்றுகள் தமிழகத்தில் பரவலாக காணப்படுகின்றன. ஆந்திராவில் கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதிகளின் கழிமுகப் பகுதிகள் பல பௌத்த மையங்களை கொண்டுள்ளன)**

73) தமிழகத்தில் பௌத்த ஸ்தூபிகள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன?

**A) காஞ்சிபுரம்**

B) திருச்சிராப்பள்ளி

C) அரிக்கமேடு

D) கும்பகோணம்

**(குறிப்பு - ஆந்திராவில் அமராவதி, நாகார்ஜுன கொண்டா ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் பௌத்த மதம் வேரூன்றி இருந்தமைக்கான சான்றுகளை அளிக்கிறது. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், காவிரிபூம்பட்டினம் ஆகிய இடங்களில் பௌத்த ஸ்தூபிகள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன)**

74) சங்க கால புத்தர் சிலை கீழ்க்காணும் எந்த இடத்தில் கிடைத்துள்ளது?

**A) நாகார்ஜுன கொண்டா**

B) அமராவதி

C) காஞ்சிபுரம்

D) எல்லாமே தவறு

**(குறிப்பு - பௌத்த மதத்தை காட்டிலும் சமண மதம் செல்வாக்குடன் விளங்கியுள்ளது. வணிகர்களும் சாதாரண மக்களும் சமணத் துறவிகளுக்கு பாறை மறைவில் படுக்கைகள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். சங்கம் மருவிய காலத்தில் சமணர் தமிழ் இலக்கியத்திற்கு அளப்பரிய சேவை செய்து உள்ளனர்)**

75) களப்பிரர் காலம் என்று அறியப்படும் காலம் எது?

A) பொ.ஆ. 300 - 500

**B) பொ.ஆ. 300 - 600**

C) பொ.ஆ. 500 - 800

D) பொ.ஆ. 400 - 700

**(குறிப்பு - சங்க காலத்திற்கும், பல்லவர், பாண்டியர் காலத்திற்கும் இடைப்பட்ட காலமே தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் என்று அறியப்படுகிறது. களப்பிரர் என்போர் தமிழகத்தைக் கைப்பற்றி தமிழகத்தின் பாரம்பரிய அரசுகளான மூவேந்தர்களையும் தோற்கடித்த அவர்கள் ஆவர்)**

76) திருக்குறளும் அதோடு ஏனைய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் இயற்றப்பட்ட காலமாக கருதப்படுவது எது?

A) சங்க காலம்

**B) சங்கமருவியகாலம்**

C) இடை சங்க காலம்

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - தமிழ் பண்பாட்டின் பல சிறந்த கூறுகள் சங்கமருவியகாலம் என்று அழைக்கப்படும் களப்பிரர்களின் காலத்தின் போதே தோன்றியிருக்கிறது. இக்காலத்தில்தான் உன்னதமான தமிழ் இலக்கியமான திருக்குறளும் அதோடு ஏனைய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் இயற்றப்பட்டன.)**

77) ஐந்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியை சேர்ந்த சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களின் பெயர்களை கொண்ட கல்வெட்டு கீழ்க்காணும் எந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது?

**A) பூலாங்குறிச்சி**

B) பாஞ்சாலங்குறிச்சி

C) நடுவக்குறிச்சி

D) அரவக்குறிச்சி

**(குறிப்பு - சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சி இல் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியை சேர்ந்த கல்வெட்டுகளில் ஒன்று சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது. இவர்கள் களப்பிர அரசர்களாக இருக்கக்கூடும் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்)**

# 11th History Lesson 3 Questions in Tamil

## 3] குப்தர்கள்

1. குப்தர்களின் காலம் ______ என்று அழைக்கப்படுகிறது.

அ) பொற்காலம்

ஆ) செவ்வியல் கலைகளின் காலம்

இ) பண்பாட்டு மலர்ச்சியின் காலம்

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு: குப்தர்களின் காலம் பொற்காலம், செவ்வியல் கலைகளின் காலம் மற்றும் பண்பாட்டு மலர்ச்சியின் காலம் என்றழைக்கப்படுகிறது.**

2. முத்ராராட்சசம் என்ற நூலை எழுதியவர்

அ) கௌடில்யர்

ஆ) தொல்காப்பியர்

**இ) விசாகதத்தர்**

ஈ) தாலமி

**குறிப்பு: விசாகதத்தரின் தேவிசந்திரகுப்தம், முத்ராராட்சசம் ஆகியவை குப்தரின் எழுச்சி குறித்த விவரங்களை அளிக்கின்றன.**

3. இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த சீனப் பயணி

அ) மெகஸ்தனிஸ்

**ஆ) பாஹியான்**

இ) பிளினி

ஈ) தாலமி

**குறிப்பு: இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த சீனப் பயணி பாஹியான் குறிப்புகளில் குப்தர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.**

4. மெஹ்ரோலி இரும்புத்தூண் கல்வெட்டு யாருடைய சாதனைகளைக் குறிக்கிறது?

**அ) முதலாம் சந்திரகுப்தர்**

ஆ) இரண்டாம் சந்திரகுப்தர்

இ) ஸ்ரீகுப்தர்

ஈ) சமுத்திரகுப்தர்

**குறிப்பு: முதலாம் சந்திரகுப்தரின் சாதனைகளைப் பற்றி மெஹ்ரோலி இரும்புத்தூண் கல்வெட்டு குறிப்பிடுகிறது.**

5. சமுத்திரகுப்தரின் ஆட்சி, அவரது ஆளுமை மற்றும் சாதனைகள் பற்றி விளக்கும் கல்வெட்டு

அ) மெஹ்ரோலி இரும்புத்தூண் கல்வெட்டு

**ஆ) அலகாபாத்தூண் கல்வெட்டு**

இ) அசோகர் கல்வெட்டுகள்

ஈ) ஸ்தூபிகள்

**குறிப்பு: அலகாபாத்தூண் கல்வெட்டைப் பொறித்தவர் ஹரிசேனர்.**

6. முதலாம் சந்திரகுப்தர் குமாரதேவி என்ற _________ இளவரசியை மணந்தார்.

அ) அலகாபாத்

ஆ) தக்காணம்

**இ) லிச்சாவி**

ஈ) நேபாளம்

**குறிப்பு: குப்தவம்சத்தின் மூன்றாவது ஆட்சியாளரான முதலாம் சந்திரகுப்தர் குமாரதேவி என்ற லிச்சாவி இளவரசியை மணந்தார். லிச்சாவி என்பது வடக்கு பீகாரில் இருந்த பழமையான கணசங்கமாகும். அது கங்கைக்கும் நேபாள தெராய்க்கும் இடைப்பட்ட பகுதியாகும்.**

7. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?

(1) சந்திரகுப்தரின் ஒப்பற்ற புதல்வர் சமுத்திரகுப்தர்

(2) சமுத்திரகுப்தரின் பிரயாகை (இன்றைய அலகாபாத்) தூண்கல்வெட்டின்படி, அவர் பிரயாகைக்கு மேற்கே மதுரா வரையுள்ள செழிப்பான நிலங்கள் முழுவதையும் கைப்பற்றினார்.

(3) கலிங்கம் வழியாகத் தெற்கே, பல்லவர்களின் தலைநகரமான காஞ்சிபுரம் வரை வெற்றிகரமான படையெடுப்பையும் சமுத்திரகுப்தர் நடத்தினார்.

அ) 1 மட்டும் சரி

ஆ) 2 மட்டும் சரி

இ) 1, 2 சரி

**ஈ) அனைத்தும் சரி**

**குறிப்பு: மகதம், அலகாபாத், அவுத் ஆகியவற்றை குப்தர்களின் பகுதிகளாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன.**

8. குப்த வம்சத்தின் முதல் அரசர்

அ) கடோத்கஜர்

ஆ) முதலாம் சந்திரகுப்தர்

இ) சமுத்திரகுப்தர்

**ஈ) ஸ்ரீ குப்தர்**

**குறிப்பு: குப்தவம்சத்தின் முதல் அரசர் ஸ்ரீகுப்தர் (பொ.ஆ. 240-280). இவரைத் தொடர்ந்து இவரது புதல்வர் கடோத்கஜர் (பொ.ஆ. 280-319) ஆட்சிக்கு வந்தார். கல்வெட்டுகளில் ஸ்ரீகுப்தர், கடோத்கஜர் ஆகிய இருவரும் மகாராஜா என்று குறிக்கப்படுகிறார்கள்.**

9. குப்தப் பேரரசின் முதல் பேரரசர் யார்?

**அ) முதலாம் சந்திரகுப்தர்**

ஆ) கடோத்கஜர்

இ) ஹரிசேனர்

ஈ) சமுத்திரகுப்தர்

**குறிப்பு: கடோத்கஜரின் புதல்வரான முதலாம் சந்திரகுப்தர் பொ.ஆ. 319 முதல் 335 வரை ஆட்சிபுரிந்தார். இவர் குப்தப் பேரரசின் முதல் பேரரசராகக் கருதப்படுகிறார்.**

10. மகாராஜா– அதிராஜா என்ற பட்டத்தை ஏற்றவர்

**அ) முதலாம் சந்திரகுப்தர்**

ஆ) கடோத்கஜர்

இ) ஹரிசேனர்

ஈ) சமுத்திரகுப்தர்

**குறிப்பு: மகாராஜா– அதிராஜா என்ற பட்டத்தை ஏற்றவர் கடோத்கஜரின் புதல்வரான முதலாம் சந்திரகுப்தர்.**

11. எந்த ஆண்டில் முதலாம் சந்திரகுப்தர் தனது புதல்வர் சமுத்திரகுப்தரைத் தனது வாரிசாக நியமித்தார்?

அ) பொ.ஆ. 200

ஆ) பொ.ஆ. 235

இ) பொ.ஆ. 300

**ஈ) பொ.ஆ. 335**

**குறிப்பு: பொ.ஆ. 335ல் முதலாம் சந்திரகுப்தர் தனது புதல்வர் சமுத்திரகுப்தரைத் தனது வாரிசாக நியமித்தார்.**

12. சமுத்திரகுப்தர் மௌரிய வம்சத்தில் வந்ததாகக் கூறும் கல்வெட்டு

அ) மெஹ்ரோலி இரும்புத்தூண் கல்வெட்டு

ஆ) அலகாபாத்தூண் கல்வெட்டு

**இ) அசோகர் கல்வெட்டு**

ஈ) ஸ்தூபிகள்

**குறிப்பு: அசோகர் கல்வெட்டு சமுத்திரகுப்தர் நாடு முழுவதும் படையெடுத்துச் சென்ற போது அவருக்கு அடிபணிந்த அரசர்கள், ஆட்சிப் பகுதிகள் ஆகியன குறித்த மிகப் பெரும் பட்டியலைத் தருகிறது.**

13. கயாவில் பௌத்தமடம் கட்ட சமுத்திரகுப்தரிடம் அனுமதி கோரிய அரசர்

அ) அதியமான்

**ஆ) மேகவர்மன்**

இ) கரிகாலன்

ஈ) பெருநற்கிள்ளி

**குறிப்பு: இலங்கை அரசர் மேகவர்மன் பரிசுகளை அனுப்பி, கயாவில் ஒரு பௌத்தமடம் கட்ட சமுத்திரகுப்தரிடம் அனுமதி கோரியுள்ளார்.**

14. சமுத்திரகுப்தரின் ஆட்சிக்காலம் எத்தனை ஆண்டுகள்?

அ) 20

ஆ) 30

**இ) 40**

ஈ) 50

**குறிப்பு: சமுத்திரகுப்தரின் ஆட்சிக்காலம் 40 ஆண்டுகள் வரை இருந்தது.**

15. தனது ராணுவ வெற்றிகளைப் பிரகடனம் செய்ய அசுவமேதயாகம் நடத்திய குப்தப்பேரரசர் யார்?

அ) முதலாம் சந்திரகுப்தர்

ஆ) கடோத்கஜர்

இ) ஹரிசேனர்

**ஈ) சமுத்திரகுப்தர்**

**குறிப்பு: தனது ராணுவ வெற்றிகளைப் பிரகடனம் செய்ய சமுத்திரகுப்தர் அசுவமேதயாகம் நடத்தினார்.**

16. ஹரிசேனர், வசுபந்து போன்ற கவிஞர்களையும், அறிஞர்களையும் ஆதரித்த குப்தப்பேரரசர் யார்?

அ) முதலாம் சந்திரகுப்தர்

ஆ) கடோத்கஜர்

இ) ஹரிசேனர்

**ஈ) சமுத்திரகுப்தர்**

**குறிப்பு: சமுத்திரகுப்தர் அறிஞர்களையும், ஹரிசேனர் போன்ற கவிஞர்களையும் ஆதரித்தார். இதன் மூலம் சமஸ்கிருத இலக்கியத்தை வளர்ப்பதில் பங்காற்றினார். வைணவத்தை அவர் தீவிரமாகப் பின்பற்றினார் என்றாலும் வசுபந்து என்ற மாபெரும் பௌத்த அறிஞரையும் ஆதரித்தார்.**

17. கவிராஜா என்ற பட்டத்தைப் பெற்றவர்

அ) முதலாம் சந்திரகுப்தர்

ஆ) கடோத்கஜர்

இ) ஹரிசேனர்

**ஈ) சமுத்திரகுப்தர்**

**குறிப்பு: கவிதை, இசைப் பிரியரான இவருக்குக் கவிராஜா என்ற பட்டம் வழங்கப்பட்டது. குப்தர் நாணயங்களில் அவர் வீணை வாசிப்பது போன்ற சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.**

18. விக்ரமாதித்யன் என்று அழைக்கப்பட்டவர்

அ) முதலாம் சந்திரகுப்தர்

ஆ) ஹரிசேனர்

இ) சமுத்திரகுப்தர்

**ஈ) இரண்டாம் சந்திரகுப்தர்**

**குறிப்பு: தனது தாத்தா பெயரையே சூடிய இரண்டாம் சந்திரகுப்தர் மிகத்திறமையான அரசர். அவர் பொ.ஆ. 375 முதல் 415 வரை 40 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.**

19. இரண்டாம் சந்திரகுப்தரின் சகோதரர் யார்?

அ) முதலாம் சந்திரகுப்தர்

ஆ) ஸ்ரீ குப்தர்

**இ) ராம குப்தர்**

ஈ) சமுத்திரகுப்தர்

**குறிப்பு: இரண்டாம் சந்திர குப்தர் தனது சகோதரரான ராமகுப்தருடன் பொ.ஆ. (370–375) வாரிசுரிமைக்குப் போராடி ஆட்சிக்கு வந்தார்.**

20. இரண்டாம்சந்திரகுப்தர் எந்த இடத்தை தலைதகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார்?

அ) முசிறி

**ஆ) பாடலிபுத்திரம்**

இ) கொற்கை

ஈ) காவிரி பூம்பட்டினம்

**குறிப்பு: பாடலிபுத்திரத்தைத் தலைநகரமாகக் கொண்ட இரண்டாம் சந்திரகுப்தர் தனது அரசின் எல்லைகளைப் போர்கள், திருமண உறவுகள் ஆகியனவற்றின் மூலம் விரிவுபடுத்தினார்.**

21. சமஸ்கிருதத்தில் பல பெரிய படைப்புக்கள் யாருடைய காலத்தில் தோன்றின?

அ) சோழப் பேரரசு

ஆ) குஷாணப் பேரரசு

**இ) குப்தப் பேரரசு**

ஈ) மௌரியப் பேரரசு

**குறிப்பு: குப்தப் பேரரசு காலத்தில் சமஸ்கிருதத்தில் பல பெரிய படைப்புக்கள் தோன்றின.**

22. கங்கைச் சமவெளியில் மேற்குப்பகுதியில் ஒன்பது அரசர்களை படை பலத்தால் வென்றவர்

அ) முதலாம் சந்திரகுப்தர்

ஆ) ஸ்ரீ குப்தர்

இ) ராம குப்தர்

**ஈ) சமுத்திரகுப்தர்**

**குறிப்பு: கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள இடங்களைப் பார்க்கும்போது, சமுத்திரகுப்தரின் படையெடுப்பு கிழக்குக் கடற்கரையோரம் காஞ்சிபுரம் வரை நீண்டதாகத் தெரிகிறது. கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியில் ஒன்பது அரசர்களைப் படைபலத்தால் வென்றார்.**

23. 400 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த சாக அரசர்களை படையெடுப்பின் மூலம் வென்றவர்

**அ) இரண்டாம் சந்திரகுப்தர்**

ஆ) ஸ்ரீ குப்தர்

இ) ராம குப்தர்

ஈ) சமுத்திரகுப்தர்

**குறிப்பு: மேற்கு இந்திய அரசுகள் மீதான படையெடுப்பின் போது மேற்கு மாளவம், குஜராத் ஆகிய பகுதிகளை 400 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த சாக அரசர்களை இப்படையெடுப்பின் மூலம் இரண்டாம் சந்திரப்குப்தர் வென்றார்.**

24. நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாம் சந்திரகுப்தரின் வேறு பெயர்கள்

அ) விக்ரமன், தேவகுப்தன்,

ஆ) தேவராஜன், சிம்ஹவிக்ரமன்

இ) விக்ரமாதித்யன், சகாரி

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு: விக்ரமன், தேவகுப்தன், தேவராஜன், சிம்ஹவிக்ரமன், விக்ரமாதித்யன், சகாரி ஆகியன இரண்டாம் சந்திரகுப்தரின் வேறு பெயர்களாகும். இவை நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

25. ஹுணர், காம்போஜர், கிராதர் போன்ற வடநாட்டு அரசுகளை வென்ற அரசர்

**அ) இரண்டாம் சந்திரகுப்தர்**

ஆ) ஸ்ரீ குப்தர்

இ) ராம குப்தர்

ஈ) சமுத்திரகுப்தர்

**குறிப்பு: கிழக்கு மற்றும் மேற்கு இந்தியாவை வென்ற பின்னர், இரண்டாம் சந்திரகுப்தர் ஹுணர், காம்போஜர், கிராதர் போன்ற வடநாட்டு அரசுகளை வென்றார். அவர் மிகப் பெரிய வெற்றி வீரராக மட்டுமின்றி, சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந்தார்.**

26. நவரத்தினங்கள் எனப்பட்ட ஒன்பது அறிஞர்கள் யாருடைய அவையில் இருந்தனர்?

**அ) இரண்டாம் சந்திரகுப்தர்**

ஆ) ஸ்ரீ குப்தர்

இ) ராம குப்தர்

ஈ) சமுத்திரகுப்தர்

**குறிப்பு: கலை, இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கிய நவரத்தினங்கள் எனப்பட்ட ஒன்பது அறிஞர்கள் இரண்டாம் சந்திரகுப்தரின் அவையில் இருந்தனர்.**

27. வெள்ளி நாணயங்களை வெளியிட்ட முதல் குப்த அரசர்

அ) ஸ்ரீ குப்தர்

ஆ) ராம குப்தர்

இ) சமுத்திரகுப்தர்

**ஈ) இரண்டாம் சந்திரகுப்தர்**

**குறிப்பு: வெள்ளி நாணயங்களை வெளியிட்ட முதல் குப்த அரசர் இரண்டாம் சந்திரகுப்தர். இவரது ஆட்சிக்காலத்தில் தான் பேரரசின் விரிவாக்கம் உச்சத்தை எட்டியது.**

28. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (1) காளிதாஸர் | - | மருத்துவர் |
| (2) ஹரிசேனர் | - | அகராதியை உருவாக்கியவர் |
| (3) அமரசிம்மர் | - | சமஸ்கிருதப் புலவர் |
| (4) தன்வந்திரி | - | சமஸ்கிருத கவிஞர் |

அ) 4 2 3 1

**ஆ) 4 3 2 1**

இ) 3 4 2 1

ஈ) 2 1 4 3

**குறிப்பு: நவரத்தினங்கள் எனப்பட்ட ஒன்பது அறிஞர்கள் இரண்டாம் சந்திரகுப்தரின் அவையில் இருந்தனர். இவர்களில் மாபெரும் சமஸ்கிருதக் கவிஞர் காளிதாஸர், சமஸ்கிருதப் புலவர் ஹரிசேனர், அகராதியை உருவாக்கிய அமரசிம்மர், மருத்துவர் தன்வந்திரி ஆகியோர் அடங்குவர்.**

29. நாளந்தா பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர்

அ) சமுத்திர குப்தர்

ஆ) ஸ்கந்த குப்தர்

**இ) முதலாம் குமாரகுப்தர்**

ஈ) விஷ்ணு குப்தர்

**குறிப்பு: இரண்டாம் சந்திரகுப்தருக்குப் பின்னர் அவரது புதல்வர் முதலாம் குமாரகுப்தர் பொ.ஆ. 455 வரை ஆட்சி செய்தார்.**

30. குப்த வம்சத்தின் கடைசிப் பேரரசர்

**அ) ஸ்கந்த குப்தர்**

ஆ) சமுத்திர குப்தர்

இ) விஷ்ணு குப்தர்

ஈ) முதலாம் சந்திரகுப்தர்

**குறிப்பு: குப்த வம்சத்தின் கடைசிப் பேரரசரான ஸ்கந்தகுப்தர் முதலாம் குமாரகுப்தரின் புதல்வராவார்.**

**31.** சக்ராதித்யர் என்றழைக்கப்பட்டவர்

அ) ஸ்கந்த குப்தர்

ஆ) சமுத்திர குப்தர்

இ) விஷ்ணு குப்தர்

**ஈ) முதலாம் சந்திரகுப்தர்**

32. குப்த வம்சத்தின் கடைசிப் அரசர்

அ) ஸ்கந்த குப்தர்

ஆ) சமுத்திர குப்தர்

**இ) விஷ்ணு குப்தர்**

ஈ) முதலாம் சந்திரகுப்தர்

**குறிப்பு: குப்த வம்சத்தின் கடைசி அரசர் விஷ்ணுகுப்தர். இவர் பொ.ஆ. 540 முதல் 550 வரை ஆட்சி புரிந்தார்.**

33. சாகர் அரசு, இலங்கை அரசு போன்ற வெளிநாட்டு அரசுகளும் கப்பம் கட்டியதாக குறிப்பிடும் கல்வெட்டு

அ) அலகாபாத் தூண் கல்வெட்டு

ஆ) மெஹ்ரோலி இரும்புத்தூண் கல்வெட்டு

**இ) அசோகர் கல்வெட்டு**

ஈ) ஸ்தூபிகள்

**குறிப்பு: சாகர் அரசு, இலங்கை அரசு போன்ற வெளிநாட்டு அரசுகளும் கப்பம் கட்டியதாக அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.**

34. பரம-தைவத, பரம-பாகவத போன்ற அடைமொழிகளால் கடவுளோடு தம்மை கடவுளோடு இணைத்துக் கொண்டவர்கள்

**அ) அரசர்கள்**

ஆ) அமைச்சர்கள்

இ) அதிகாரிகள்

ஈ) ஜமீன்தார்கள்

**குறிப்பு: பரம-தைவத (கடவுளின் பரமபக்தன்), பரம-பாகவத (வாசுதேவ கிருஷ்ணனின் பரமபக்தன்) போன்ற அடைமொழிகளால் அரசர்கள் தம்மைக் கடவுளோடு இணைத்துக் கொண்டனர்.**

35. அலகாபாத்தூண் கல்வெட்டில் புருஷா என்ற கடவுளுடன் ஒப்பிடப்படுபவர்

அ) ஸ்கந்த குப்தர்

**ஆ) சமுத்திர குப்தர்**

இ) விஷ்ணு குப்தர்

ஈ) முதலாம் சந்திரகுப்தர்

**குறிப்பு: அலகாபாத் கல்வெட்டுகளில் சமுத்திரகுப்தர் புருஷா(அனைவருக்கும் மேலானவர்) என்ற கடவுளுடன் ஒப்பிடப்படுகிறார்.**

36. குமாரமாத்யா என்ற சொல் எத்தனை வைசாலி முத்திரைகளில் இடம் பெற்றுள்ளது?

அ) 4

ஆ) 5

**இ) 6**

ஈ) 7

**குறிப்பு: குமாரமாத்யா என்ற சொல் ஆறு வைசாலி முத்திரைகளில் இடம் பெற்றுள்ளது. இந்தப் பதவி தனக்கெனத் தனியாக அலுவலகம் உள்ள ஒரு உயரதிகாரியைக் குறிப்பிடுவது போல் உள்ளது. அமாத்யா என்ற சொல் பல முத்திரைகளில் காணப்படுகிறது.**

37. மஹாதண்டநாயகா, சந்திவிக்ரஹா ஆகிய பட்டங்களைக் கொண்டவர்

அ) சமுத்திரகுப்தர்

**ஆ) ஹரிசேனர்**

இ) முதலாம் சந்திர குப்தர்

ஈ) இரண்டாம் சந்திர குப்தர்

**குறிப்பு: அலகாபாத் பிரசஸ்தியை (மெய்க்கீர்த்தி அல்லது புகழுரைக் கல்வெட்டு) எழுதிய ஹரிசேனர் ஒரு குமாரமாத்யா, சந்திவிக்ரஹிகா, மஹாதண்டநாயகா ஆகிய பட்டங்களைக் கொண்டவராக இருந்துள்ளார். அவர் மஹாதண்டநாயகா துருவபூதியின் புதல்வர் ஆவார்.**

38. சபா என்ற ஒரு குழுவைப் பற்றிக் கூறும் கல்வெட்டு

**அ) அலகாபாத் தூண் கல்வெட்டு**

ஆ) மெஹ்ரோலி இரும்புத்தூண் கல்வெட்டு

இ) அசோகர் கல்வெட்டு

ஈ) ஸ்தூபிகள்

**குறிப்பு: குப்த அரசர்களுக்கு ஒரு அமைச்சர் குழு உதவி புரிந்தது. அலகாபாத் கல்வெட்டு சபா என்ற ஒரு குழு குறித்துக் கூறுகிறது**

39. குப்தப் பேரரசில் அமைச்சர்களில் உயர்ந்த நிலையில் இருந்தவர் யார்?

**அ) மஹாசந்திவிக்ரஹா**

ஆ) குமாரமாத்யா

இ) மஹாதண்டநாயகா

ஈ) தண்டநாயகா

**குறிப்பு: மஹாசந்திவிக்ரஹா என்பவர் அமைச்சர்களில் உயர் நிலையில் இருந்துள்ளார். இவர் அமைதி மற்றும் போருக்கான அமைச்சர். இவர் தான் போர் தொடுத்தல், உடன்பாடு காணுதல், ஒப்பந்தங்கள் மேற்கொள்ளுதல் என்று பிற நாடுகளுடனான தொடர்புகளுக்குப் பொறுப்பானவர்.**

40. குப்தர் காலத்தில் நீதித்துறை, ராணுவம் ஆகியவற்றில் பொறுப்பு வகித்தவர்

அ) மஹாதண்டநாயகா

ஆ) தண்டநாயகா

இ) குமாரமாத்யா

**ஈ) அ, ஆ இரண்டும்**

**குறிப்பு: ஒரு முத்திரை அக்கினிகுப்தர் என்ற மஹாதண்டநாயகா குறித்துப் பேசுகிறது. அலகாபாத் கல்வெட்டு மூன்று மஹாதண்டநாயகாக்களைக் குறித்து கூறுகிறது. இவையனைத்தும் இந்தப் பதவிகள் எல்லாம் வாரிசுரிமையாக வருபவை என்பதைக் காட்டுகின்றன.**

41. குப்தர்களின் பேரரசு _____ அல்லது ___ எனப்படும் மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன.

அ) தேசம்

ஆ) புக்தி

**இ) அ, ஆ இரண்டும்**

ஈ) மேற்கூறிய ஏதும் இல்லை

**குறிப்பு: குப்தர்களின் பேரரசு 'தேசம்' அல்லது 'புக்தி' எனப்படும் மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. உபாரிகா என்றழைக்கப்பட்ட ஆளுநர்களால் இவை நிர்வகிக்கப்பட்டன.**

42. தாமோதர்பூர் செப்பேடுகள் மூன்று உபாரிகாக்களுக்கு ______ என்ற பட்டம் இருந்ததாகக் குறிப்பிடுகிறது.

**அ) மகாராஜா**

ஆ) மஹாதாரா

இ) அமாத்யா

ஈ) தண்டநாயகா

**குறிப்பு: தாமோதர்பூர் செப்பேடுகளில் மூன்று உபாரிகாக்களுக்கு மகாராஜா என்ற பட்டம் இருந்ததாகக் குறிப்பிடப்படுவதன் மூலம் நிர்வாகத்தில் உபாரிகாக்களுக்கு இருந்த உயர்நிலை தெரிகிறது.**

43. புத்தகுப்தரின் ________ கல்வெட்டு காளிந்தி மற்றும் நர்மதை நதிகளுக்கிடையிலான நிலங்களை ஆட்சிசெய்த லோகபாலா என்ற மகாராஜா சுரஷ்மிசந்திரா என்பவரைக் குறிப்பிடுகிறது

அ) அசோகர் கல்வெட்டு

ஆ) அலகாபாத்தூண் கல்வெட்டு

**இ) ஈரன் தூண் கல்வெட்டு**

ஈ) மெஹ்ரோலி கல்வெட்டு

**குறிப்பு: குப்தஆண்டு 165 என்று தேதியிடப்பட்டுள்ள புத்தகுப்தரின் ஈரன் தூண்கல்வெட்டு காளிந்தி மற்றும் நர்மதை நதிகளுக்கிடையிலான நிலங்களை ஆட்சிசெய்த லோகபாலா என்ற மகாராஜா**

**சுரஷ்மிசந்திரா என்பவரைக் குறிப்பிடுகிறது. இங்கு லோகபாலா என்பது மாநில ஆளுநரைக் குறிப்பிடுவதாகலாம்.**

44. குப்தப்பேரரசின் மாநிலங்கள் ____என்ற அதிகாரியின் கீழ் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன.

அ) தண்டநாயகா

**ஆ) விஷ்யபதி**

இ) மஹா அஸ்வபதி

ஈ) மஹா தண்டநாயகா

**குறிப்பு: குப்தப்பேரரசின் மாநிலங்கள் விஷ்யபதி என்ற அதிகாரியின் கீழ் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. இவை விஷ்யா என அழைக்கப்பட்டன. விஷ்யபதிகள் பொதுவாக மாநில ஆளுநரால் நியமிக்கப்பட்டதாகத் தெரிகிறது. சில சமயங்களில் அரசரே நேரடியாக விஷ்யபதிகளை நியமித்தார்.**

45. புத்தகுப்தர் காலத்து தாமோதர்பூர் செப்பேடு, மஹாதாரா தலைமையிலான எதைப் பற்றிக் குறிப்பிடுகிறது?

அ) மஹா அஸ்வபதி

**ஆ) அஷ்டகுல-அதிகாரனா**

இ) கிராமிகா

ஈ) பதகா

**குறிப்பு: புத்தகுப்தர் காலத்து தாமோதர்பூர் செப்பேடு, மஹாதாரா என்பவர் தலைமையிலான அஷ்டகுல-அதிகாரனா (எட்டு உறுப்பினர் கொண்ட குழு) குறித்து குறிப்பிடுகிறது. மஹாதாரா என்பதற்கு கிராமப் பெரியவர், கிராமத்தலைவர், குடும்பத்தலைவர் என்று பல பொருள் உண்டு.**

46. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

(1) மாவட்ட மட்டத்திற்குக் கீழ் விதி, பூமி, பதகா, பீடா என்று பல்வேறு விதமான நிர்வாக அலகுகள் இருந்தன. ஆயுக்தகா, விதி-மஹாதரா எனப்படும் அதிகாரிகள் குறித்த குறிப்புகளும் காணப்படுகின்றன.

(2) கிராம மட்டத்தில் கிராமிகா, கிராம் அத்யக்ஷா போன்ற அதிகாரிகள் இருந்துள்ளனர். இவர்களை கிராம மக்களே தேர்ந்தெடுத்தனர்.

(3) இரண்டாம் சந்திரகுப்தர் காலத்து சாஞ்சி கல்வெட்டு பஞ்சமண்டலி என்பதைக் குறிப்பிடுகிறது. இது ஒரு குழும நிறுவனமாக இருக்கலாம்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

47. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (1) மஹா அஸ்வபதி | - | அரச சமையலறைக் கண்காணிப்பாளர் |
| (2) பாலாதிகிருத்யா | - | அரண்மனைக் காவலர்கள் தலைவர் |
| (3) மஹா பாலாதிகிருத்யா | - | குதிரைப்படைத் தலைவர் |
| (4) மஹா பிரதிஹாரா | - | காலாட்படைத் தளபதி |
| (5) கத்யதபகிதா | - | குதிரைப்படைத் தளபதி |

**அ) 5 4 1 2 3**

ஆ) 4 3 2 1 5

இ) 3 2 1 4 5

ஈ) 4 2 1 3 5

48. ரணபந்தகர் அதிகாரனா என்பவை?

அ) காவல்துறை அலுவலகம்

**ஆ) ராணுவக்கிடங்கு அலுவலகம்**

இ) ரயில் நிலையம்

ஈ) மருத்துவமனை

**குறிப்பு: ஒரு வைசாலி முத்திரை ராணுவக்கிடங்கின் அலுவலகமான ரணபந்தகர் அதிகாரனாவைக் குறிப்பிடுகிறது. மற்றொரு வைசாலி முத்திரை, தண்டபாஷிகா என்ற அதிகாரியின் அலுவலகத்தைக் குறிப்பிடுகிறது. இது மாவட்ட அளவிலான காவல்துறை அலுவலகமாக இருக்கலாம்.**

49. குப்தப் பேரரசில் நிர்வாக அமைப்பின் மேல்மட்டத்தில் இருந்தவர்கள்

அ) தண்டபாஷிகா, மஹா தண்டபாஷிகா

ஆ) குமாரமாத்யாக்கள்

இ) பிரதிஹாரா, மஹா பிரதிஹாரா

**ஈ) அமாத்தியா, சச்சிவா**

**குறிப்பு: குப்தப் பேரரசில் நிர்வாக அமைப்பின் மேல்மட்டத்தில் அமாத்தியா, சச்சிவா ஆகியோர் இருந்தார்கள். இவர்கள் பல்வேறு துறைகளுக்குப் பொறுப்பாக இருந்த நிர்வாக அதிகாரிகளாவர்.**

50. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (1) துடகா | - | அரசு ஆவணங்களை பராமரித்த அதிகாரி |
| (2) ஆயுக்தகா | - | பாஹியான் |
| (3) மதுரா பாடலிபுத்திரம் | - | டாசிடஸ் |
| (4) ரோமானிய வரலாற்றாளர் | - | ஒற்றர்கள் கொண்ட உளவு அமைப்பு |
| (5) அக்ஷபதலிக்கிருதா | - | உயர்மட்ட அதிகாரப் பதவி |

அ) 5 4 1 3 2

**ஆ) 5 3 4 1 2**

இ) 4 3 2 1 5

ஈ) 4 5 2 1 3

51. குப்தர் காலத்தில் காமாந்தகா எழுதியது ________ என்ற நூல்.

**அ) நீதிசாரா**

ஆ) அர்த்தசாஸ்திரம்

இ) முத்ராராட்சசம்

ஈ) தேவிசந்திர குப்தர்

**குறிப்பு: குப்தர் காலத்தில் காமாந்தகா எழுதியது நீதிசாரா என்ற நூல் ஆகும். இந்நநூல் மௌரியர் காலத்து நூலான அர்த்தசாஸ்திரம் போன்ற நூலாகும். இந்நூல் அரச கருவூலத்தின் முக்கிய வருவாய்க்கான பல்வேறு மூலவளங்கள் பற்றிக் குறிப்பிடுகிறது.**

52. குப்தர் கல்வெட்டுகளில் உள்ள இரண்யவெஷ்தி என்பதன் பொருள்

அ) போர் புரிதல்

ஆ) தன்னம்பிக்கை

இ) வேலைவாய்ப்பு

**ஈ) கட்டாய உழைப்பு**

**குறிப்பு: குப்தர் கல்வெட்டுகள் கிலிப்தா, பலி, உத்ரங்கா, உபரிகரா, இரண்யவெஷ்தி போன்ற சொற்களைக் குறிப்பிடுகின்றன. இரண்யவெஷ்தி என்றால் கட்டாய உழைப்பு என்று பொருள்.**

53. குப்தர் காலத்தில் பழமரங்கள் வளர்ப்பது குறித்து அறிவுரை கூறியவர்

அ) காளிதாசர்

ஆ) டாசிடஸ்

**இ) வராகமிகிரர்**

ஈ) அட்டில்லா

**குறிப்பு: காளிதாசர் மூலம் தென்பகுதியானது மிளகு, ஏலம் ஆகியவற்றிற்குப் புகழ் பெற்றிருந்தது தெரிய வருகிறது.**

54. பஹார்பூர் செப்பேடு நிலத்தின் ஒரே உரிமையாளர் என்று யாரைக் காட்டுகிறது?

அ) அமைச்சர்

**ஆ) அரசர்**

இ) ஜமீன்தார்கள்

ஈ) சேனாதிபதி

**குறிப்பு: பஹார்பூர் செப்பேடு அரசர்தான் நிலத்தின் ஒரே உரிமையாளர் என்று காட்டுகிறது. நில மானியங்கள் தரும்போதும், அதன் மீதான தனியுரிமையைத் தன்னிடமே அவர் வைத்துக் கொண்டார்.**

55. குப்தர் காலத்தில் மாவட்டத்தின் நிலப் பரிமாற்றம் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் பாதுகாத்த அதிகாரி

அ) அமாத்யா

ஆ) கிராம கணக்கர்

இ) தண்டநாயகா

**ஈ) உஸ்தபாலா**

**குறிப்பு: பஹார்பூர் செப்பேடுகளின்படி உஸ்தபாலா என்ற அதிகாரி மாவட்டத்தின் நிலப் பரிமாற்றம் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் பாதுகாத்தார். கிராமத்தில் நிலங்கள் தொடர்பான ஆவணங்களை கிராமகணக்கர் பராமரித்தார்.**

56. வயல்களை வெள்ளங்களிலிருந்து பாதுகாக்க பந்தியா, பாசனத்திற்கு உதவிய கரா என்ற இருவகை அணைக்கரைகள் இருந்ததாகக் கூறும் நூல்

**அ) நாரதஸ்மிருதி**

ஆ) முத்ராராட்சசம்

இ) அர்த்தசாஸ்திரம்

ஈ) ஸ்மிருதி

57. குப்தர் கால நிலங்களின் அடிப்படையில் பொருத்துக.

| | | |
|---|---|---|
| (1) க்ஷேத்ரா | - | மேய்ச்சல்நிலம் |
| (2) கிலா | - | குடியிருக்கத் தகுந்த நிலம் |
| (3) அப்ரஹதா | - | தரிசு நிலம் |
| (4) வாஸ்தி | - | பயிரிடக்கூடிய நிலம் |
| (5) கபடசஹாரா | - | காடு அல்லது தரிசு நிலம் |

அ) 5 3 2 1 4

ஆ) 4 3 2 1 5

இ) 3 4 2 1 5

**ஈ) 5 4 2 1 3**

58. தண்ணீர் தேங்குவதைத் தடுக்க ஜலநிர்கமா என்ற வடிகால்கள் இருந்ததாக குறிப்பிடுபவர்

அ) சாணக்கியர்

**ஆ) அமரசிம்மர்**

இ) பாஹியான்

ஈ) டாசிடஸ்

**குறிப்பு: குப்தர் காலத்தில் தண்ணீர் தேங்குவதைத் தடுக்க ஜலநிர்கமா என்ற வடிகால்கள் இருந்ததாக அமரசிம்மர் குறிப்பிடுகிறார். நதிகளிலிருந்து மட்டுமில்லாமல், ஏரிகளிலிருந்தும் குளங்களிலிருந்தும் வாய்க்கால்கள் வெட்டப்பட்டன.**

59. குஜராத்தின் கிர்னார் மலையின் அடிவாரத்தில் அமைந்திருந்த ஏரி

அ) அப்ரஹதா

ஆ) ஜலநிர்கமா

**இ) சுதர்சனா**

ஈ) கிலா

**குறிப்பு: குஜராத்தின் கிர்னார் மலையின் அடிவாரத்தில் இருந்த சுதர்சனா ஏரி மிகவும் புகழ் பெற்றதாகும்.**

60. குப்தர் காலத்தில் மிகவும் செழித்தத் தொழில்கள்

அ) சுரங்கத்தொழில்

ஆ) உலோகத்தொழில்

**இ) அ, ஆ இரண்டும்**

ஈ) ஏதுமில்லை

**குறிப்பு: குப்தர் காலத்தில் மிகவும் செழித்தத் தொழில்கள் சுரங்கத்தொழில், உலோகவியல் ஆகியன ஆகும். சுரங்கங்கள் இருந்தது குறித்து அமரசிம்மர், வராஹமிகிரர், காளிதாசர் ஆகியோர் அடிக்கடி குறிப்பிடுகிறார்கள்.**

61. நிலகுத்தகை முறையின் அடிப்படையில் பொருத்துக.

(1) நிவி தர்மா - தரிசு நிலத்தை சாகுபடி நிலமாக மாற்றுதல்

(2) நிவி தர்மஅக்சயனா - வருவாயைப் பிறருக்குத் தானம் செய்ய முடியாது

(3) அப்ரதா தர்மா - அறக்கட்டளை போன்ற அமைப்பின் மூலம் நில மானியம்

(4) பூமிசித்ராயனா - நிரந்தரமான அறக்கட்டளை

அ) 4 2 1 3

**ஆ) 4 3 1 2**

இ) 3 1 4 2

ஈ) 4 1 3 2

**குறிப்பு:**

பல்வேறு விதமான நிலகுத்தகை முறை

| நிலகுத்தகை வகை | உரிமையின் தன்மை |
|---|---|
| நிவி தர்மா | அறக்கட்டளை போன்ற அமைப்பின் மூலம் நில மானியம் – இம்முறை வடக்கு, மத்திய இந்தியா மற்றும் வங்கத்தில் நிலவியது |
| நிவி தர்ம அக்சயனா | நிரந்தரமான அறக்கட்டளை – பெற்றவர் அதிலிருந்து வரும் வருவாயைப் பயன்படுத்திக் கொள்ளலாம் |
| அப்ரதா தர்மா | வருவாயைப் பயன்படுத்தலாம். ஆனால் அதை பிறருக்குத் தானம் செய்யமுடியாது. நிர்வாக உரிமையும் இல்லை. |
| பூமிசித்ராயனா | தரிசு நிலத்தை முதன்முதலாகச் சாகுபடி நிலமாக மாற்றுபவருக்குத் தரப்படும் உரிமை. இந்த நிலத்திற்குக் குத்தகையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. |

62. குப்தர் காலகட்டத்தில் இரும்புப்படிவுகள் எங்கிருந்து தோண்டியெடுக்கப்பட்டன?

**அ) பீகார்**

ஆ) ராஜஸ்தான்

இ) குஜராத்

ஈ) மஹாராஷ்டிரா

**குறிப்பு: பீகாரிலிருந்து இரும்புப் படிவுகள், இராஜஸ்தானிலிருந்து செம்புப் படிவுகள் ஆகியன பெருமளவில் தோண்டி எடுக்கப்பட்டன.**

63. குப்தர் கால நிலக்கொடைகளின் அடிப்படையில் பொருத்துக.

(1) அக்ரஹார மானியம் - நிலப்பிரபுகளுக்கு தரப்பட்ட மானியம்

(2) தேவக்கிரஹார மானியம் - பிராமணர்களுக்கு தரப்பட்ட மானியம்

(3) சமயச் சார்பற்ற மானியம் - கோயில் மராமத்து பணிகளுக்குத் தரப்பட்ட மானியம்

**அ) 3 1 2**

ஆ) 2 1 3

இ) 1 3 2

ஈ) 2 3 1

**குறிப்பு:**

**ஏனைய நிலக்கொடைகள்**

| | |
|---|---|
| அக்ரஹார மானியம் | பிராமணர்களுக்குத் தரப்படுவது. இது நிரந்தரமானது. பரம்பரையாக வரக்கூடியது. வரி கிடையாது. |
| தேவக்கிரஹார மானியம் | கோயில் மராமத்து, வழிபாடு ஆகிய பணிகளுக்காகப் பிராமணர்கள், வணிகர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் நில மானியம். |
| சமயச் சார்பற்ற மானியம் | குப்தர்களுக்குக் கீழிருந்த நிலப்பிரபுக்களுக்குத் தரப்பட்ட மானியம். |

64. மெஹ்ரோலி இரும்புத்தூண் அமைந்துள்ள இடம்

**அ) டெல்லி**

ஆ) ராஜஸ்தான்

இ) குஜராத்

ஈ) மஹாராஷ்டிரா

**குறிப்பு: குப்தர் காலகட்டத்தில், உலோகவியல் நுட்பங்கள் உச்சத்தில் இருந்தன என்பதை நிறுவுவதற்கு, இன்று தில்லி குதுப்மினார் வளாகத்தில் காணப்படும் மெஹ்ரோலி இரும்புத்தூண் சான்றாகக் காட்டப்படுகிறது. இது இரண்டாம் சந்திரகுப்தருடன் அடையாளம் காணப்படுகிறது. இந்த இரும்புத்தூண் பல நூற்றாண்டுகளாகத் துருப்பிடிக்காமல் அப்படியே இருக்கிறது. இது குப்தர் காலத்து உலோகவியல் கைவினைஞர்களின் திறனுக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்கிறது.**

65. குப்தர் காலத்து வரிகளின் அடிப்படையில் பொருத்துக.

(1) பாகா - கிராமத்தினர் மீது குறிப்பிட்ட கால இடைவெளியில் விதிக்கப்படும் ஒரு வரி

(2) போகா - கட்டாய வரி

(3) கரா - காவல் வரி அல்லது நீர் வரி

(4) பலி - அரசருக்கு கிராமங்கள் அவ்வப்போது வழங்க வேண்டிய பழங்கள், விறகு, பூக்கள்

(5) உதியங்கா - விளைச்சலில் அரசன்பெறும் வழக்கமான ஆறில் ஒரு பங்கு

அ) 3 5 2 4 1

**ஆ) 3 4 5 2 1**

இ) 5 4 3 1 2

ஈ) 4 3 2 1 5

**குறிப்பு:**

பல்வேறு வரிகளின் பட்டியல்

| வரி | அதன் தன்மை |
|---|---|
| பாகா | விளைச்சலில் அரசன் பெறும் வழக்கமான ஆறில் ஒரு பங்காகும். |
| போகா | அரசருக்கு கிராமங்கள் அவ்வப்போது வழங்க வேண்டிய பழங்கள், விறகு, பூக்கள் போன்றவை. |
| கரா | கிராமத்தினர் மீது குறிப்பிட்ட கால இடைவெளியில் விதிக்கப்படும் ஒரு வரி (இது வருடாந்திர நிலவரியின் ஒரு பகுதியல்ல) |
| பலி | ஆரம்பத்தில் விருப்பப்பட்டு வழங்கப்பட்ட வரியாக இருந்து பின்னர் கட்டாய வரியாக மாற்றப்பட்டது. இது ஒரு ஒடுக்குமுறை வரி. |
| உதியங்கா | காவல் நிலையங்களின் பராமரிப்பிற்காக விதிக்கப்பட்ட காவல் வரியாக இருக்கலாம். அல்லது நீர் வரியாகவும் இருக்கலாம். எனினும், இது ஒரு கூடுதல் வரிதான். |
| உபரிகரா | இதுவும் ஒரு கூடுதல் வரிதான். இது எதற்காக வசூலிக்கப்பட்டது என்பது குறித்து அறிஞர்கள் மாறுபட்ட விளக்கங்களைத் தருகின்றனர். |
| ஹிரண்யா | தங்க நாணயங்கள் மீது விதிக்கப்படும் வரி என்பது நேரடிப் பொருள். நடைமுறையில் இது சில குறிப்பிட்ட தானியங்களின் விளைச்சலில் ஒரு பங்கினை, அரசின் பங்காகப் பொருளாகவே அளிப்பதாகும். |
| வாத–பூதா | காற்றுக்கும் ஆவிகளுக்கும் செய்ய வேண்டிய சடங்குகளுக்காக விதிக்கப்பட்ட பல்வேறு வரிகள் |
| ஹலிவகரா | கலப்பை வைத்திருக்கும் ஒவ்வொரு உழவரும் கட்ட வேண்டிய கலப்பை வரி |
| சுல்கா | வர்த்தகர்கள் நகரத்திற்கோ துறைமுகத்திற்கோ கொண்டுவரும் வணிகச் சரக்குகளில் அரசருக்கான பங்கு. இதைச் சுங்க, நுழைவு வரிகளுக்கு ஒப்பிடலாம். |
| கிளிப்தா; உபகிளிப்தா | நிலப்பதிவின் போது விதிக்கப்படும் விற்பனை வரி |

66. இலாபத்திற்காக ஊர் ஊராகச் சென்று வணிகம் செய்தவர்கள்

அ) சிரேஷ்டி

**ஆ) சார்த்தவாஹா**

இ) கிளிப்தா

ஈ) உபகிளிப்தா

**குறிப்பு: சிரேஷ்டி, சார்த்தவஹா என்ற இரு வேறுபட்ட வகைகளைச் சேர்ந்த வணிகர்கள் இருந்தனர். சிரேஷ்டி என்பவர் பொதுவாக ஒரே இடத்தில் தங்கியிருப்பவர். தனது செல்வம் மற்றும் வணிகத்திலும்,**

**வணிக மையத்தை நிர்வகிப்பதன் மூலமும் பெற்ற வளத்தால் மரியாதைக்குரிய நிலையில் இருந்தவர். சார்த்தவஹா என்பவர் இலாபத்திற்காக ஊர் ஊராகச் சென்று வணிகம் செய்தவர்.**

**67.** கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

(1) நாரதஸ்மிருதி, பிருகஸ்பதி ஸ்மிருதி ஆகியவை வணிகக் குழுக்களின் அமைப்பு, செயல்பாடு குறித்து விவரிக்கின்றன. ஒரு குழுவில் குழுத்தலைவர், இரண்டு, மூன்று அல்லது ஐந்து நிர்வாக அதிகாரிகள் இருந்ததாக இவை குறிப்பிடுகின்றன.

(2) குழுச் சட்டங்கள் எழுத்துப்பூர்வமாக ஆவணங்களில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(3) தமது குழு உறுப்பினர்களின் தகராறுகளின் மீது தீர்ப்பு வழங்கியது குறித்து பிருகஸ்பதி ஸ்மிருதி கூறுகிறது. குழுவின் தீர்ப்பு எப்படி இருந்தாலும் அரசு ஒப்புதல் அளித்தே தீர வேண்டும்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

**குறிப்பு: சட்டப்பிரிவு 216-ன் படி ஒவ்வொரு உயர் நீதிமன்றத்திற்கும், தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகளை குடியரசுத் தலைவர் காலத்திற்கேற்றவாறு நியமனம் செய்கிறார்.**

68. வணிகக்குழுக்கள் வங்கிகளின் பங்கினை ஆற்றியதாகக் கூறும் கல்வெட்டு

**அ) மண்டசோர் கல்வெட்டு**

ஆ) மெஹ்ரோலி இரும்புத்தூண் கல்வெட்டு

இ) அலகாபாத்தூண் கல்வெட்டு

ஈ) அசோகர் கல்வெட்டுகள்

**குறிப்பு: மண்டசோர் கல்வெட்டுச் சான்றின் படி வணிகக்குழுக்கள் வங்கிகளின் பங்கினை ஆற்றியதாகவும் அறிய முடிகிறது. இதற்கான கொடையாளர்களின் பெயர்கள் இக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன.**

69. குப்தர் காலத்தில் மேற்குக் கரையில் இருந்த கல்யாண், கால்-போர்ட் என்பவை

அ) வணிகச்சந்தைகள்

ஆ) கோவில்கள்

**இ) வணிகத்துறைமுகங்கள்**

ஈ) காய்கறிச்சந்தைகள்

**குறிப்பு: குப்தர் காலத்தில் மேற்குக் கரையில் கல்யாண், கால்-போர்ட் ஆகிய வணிகத்துறைமுகங்களும், மலபார், மங்களூர் சலோபடானா, நயோபடான, பந்தேபடானா ஆகிய வணிகச்சந்தைகளும் இயங்கியுள்ளன.**

70. வங்கத்தின் கிழக்குக் கடற்கரையின் முக்கியமான வணிக மையம் என்று பாஹியான் எதைக் குறிப்பிடுகிறார்?

அ) மலபார்

ஆ) சலோபடானா

**இ) தாமிரலிப்தி**

ஈ) பந்தேபடானா

**குறிப்பு: வங்கத்தின் தாமிரலிப்தி கிழக்குக் கடற்கரையின் முக்கியமான வணிக மையம் என்று பாஹியான் குறிப்பிடுகிறார்.**

71. பொருத்துக

(1) அஜந்தா, எல்லோரா - ஒடிசா

(2) பாக் - மஹாராஷ்டிரம்

(3) உதயகிரி - மத்தியப்பிரதேசம்

**அ) 3 1 2**

ஆ) 2 1 3

இ) 3 2 1

ஈ) 2 3 1

**குறிப்பு: குடைவரைக் கோயில்கள் அஜந்தா, எல்லோரா (மஹாராஷ்டிரம்) மற்றும் பாக் (மத்தியப் பிரதேசம்) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. உதயகிரி குகைகளும் (ஒடிசா) இவ்வகையைச் சேர்ந்தவைதான்.**

72. பொருத்துக.

(1) சமத் - சிந்து

(2) ரத்தினகிரி - உத்திரப்பிரதேசம்

(3) மிர்பூர்கான் - ஒடிசா

**அ) 3 1 2**

ஆ) 2 1 3

இ) 1 3 2

ஈ) 3 2 1

**குறிப்பு: மிகச் சிறந்த ஸ்தூபிகள் சமத் (உத்தரப்பிரதேசம்), ரத்தினகிரி (ஒடிசா), மிர்பூர்கான் (சிந்து) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.**

73. குப்தர் காலத்தில், கல் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்றாக உள்ள நிற்கும் நிலையிலுள்ள புத்தர் சிலை அமைந்துள்ள இடம்

அ) பத்ரிநாத்

ஆ) கேதார்நாத்

இ) மிர்பூர்கான்

**ஈ) சாரநாத்**

**குறிப்பு: குப்தர் காலத்தில், கல் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று சாரநாத்தில் காணப்படும் நிற்கும் நிலையிலுள்ள புத்தர் சிலை.**

74. உதயகிரி குகையின் நுழைவாயிலில் இருக்கும் புராணச் சிற்பம்

அ) செம்புச்சிலை

ஆ) செவ்வகக்கோவில்

இ) புத்தர் சிலை

**ஈ) வராஹ அவதாரச் சிலை**

**குறிப்பு: புராணச் சிற்பங்களில் மிக அழகானது உதயகிரி குகையின் நுழைவாயிலில் இருக்கும் வராஹ அவதாரச் சிலை ஆகும்.**

75. குப்தர் காலத்து உலோகச்சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டு

அ) புத்தரின் பதினெட்டடி செம்புச் சிலை

ஆ) ஏழரையடி புத்தர் சிலை - சுல்தான்கஞ்ச்

**இ) அ, ஆ இரண்டும்**

ஈ) மேற்கூறிய ஏதுமில்லை

**குறிப்பு: பீகாரின் நாளந்தாவில் உள்ள புத்தரின் பதினெட்டடி செம்புச் சிலை, சுல்தான்கஞ்சில் உள்ள ஏழரையடி புத்தர் சிலை ஆகிய இரண்டும் குப்தர் காலத்து உலோகச் சிற்பங்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.**

76. குப்தரின் சுவரோவியங்கள் காணப்படும் இடங்கள்

அ) அஜந்தா

ஆ) பாக்

இ) பாதாமி

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு: குப்தரின் சுவரோவியங்கள் அஜந்தா, பாக், பாதாமி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன**

77. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

(1) அஜந்தாவின் சுவர் ஓவியங்கள் ஃபிரெஸ்கோ எனப்படும் சுவரோவிய வகையைச் சேர்ந்தவை.

(2) அஜந்தா மற்றும் பாக்கில் காணப்படும் ஓவியங்கள் மத்திய தேச ஓவியப் பள்ளி முறையின் தலைசிறந்த ஓவியங்களாகும்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் தவறு

**இ) கூற்று 1 மட்டும் தவறு**

ஈ) மேற்கூறிய ஏதுமில்லை

**குறிப்பு: அஜந்தாவின் சுவர் ஓவியங்கள் ஃபிரெஸ்கோ எனப்படும் சுவரோவிய வகையைச் சேர்ந்தவையல்ல. ஏனெனில் ஃபிரெஸ்கோ ஓவியங்கள் சுவரின் பூச்சு ஈரமாக இருக்கும் போதே வரையப்படுபவை. ஆனால் அஜந்தாவின் சுவரோவியங்கள் பூச்சு காய்ந்தபின் வரையப்பட்டவை.**

78. குப்தர் காலத்து மட்பாண்டங்கள் மட்பாண்டக் கலையின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டு

அ) அச்சிசத்திரா

ஆ) ராய்கார்

இ) ஹஸ்தினாபூர், பஷார்

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு: குப்தர் காலகட்டத்து மட்பாண்டங்களின் தனிப்பட்ட சிறப்பம்சம் "சிவப்பு மட்பாண்டங்கள்" ஆகும்.**

79. குப்தர் காலத்து அலுவல் மொழி

அ) ஹிந்தி

ஆ) பாரசீகம்

இ) உருது

**ஈ) சமஸ்கிருதம்**

**குறிப்பு: குப்தர் சமஸ்கிருதத்தை அலுவல் மொழியாக்கினார்கள். அவர்களின் அனைத்து கல்வெட்டுகளும் பட்டயங்களும் அம்மொழியில் தான் எழுதப்பட்டன. இக்காலகட்டம்தான் சமஸ்கிருத இலக்கியத்தின் உச்சகட்டமாகும்.**

80. பண்டைய காலத்தில் உருவான ____ நல்லொழுக்கம், அரசியல், கலை மற்றும் பண்பாடு என்று பல்வேறு கருப்பொருள்கள் குறித்துப் பேசிய சமய நூல்களாகும்.

அ) அர்த்தசாஸ்திரம்

**ஆ) ஸ்மிருதிகள்**

இ) கல்வெட்டுகள்

ஈ) தூண்கள்

**குறிப்பு: பண்டைய காலத்தில் உருவான ஸ்மிருதிகள் நல்லொழுக்கம், அரசியல், கலை மற்றும் பண்பாடு என்று பல்வேறு கருப்பொருள்கள் குறித்துப் பேசிய சமய நூல்களாகும். தர்ம சாஸ்திரங்களும் புராணங்களும் இந்த இலக்கியக் கட்டமைப்பின் மையப்பொருளை வடிவமைத்தன.**

81. பொருத்துக

| | | |
|---|---|---|
| (1) அஷ்டத்யாயி | - | சந்திரகோமியர் |
| (2) மஹாபாஷ்யா | - | அமரசிம்மர் |
| (3) அமரகோசம் | - | பதஞ்சலி |
| (4) சந்திரவியாகரணம் | - | பாணினி |

**அ) 4 3 2 1**

ஆ) 3 2 1 4

இ) 2 3 1 4

ஈ) 3 1 2 4

**குறிப்பு: பாணினி எழுதிய அஷ்டத்யாயி, பதஞ்சலியால் எழுதப்பட்ட மஹாபாஷ்யா ஆகிய படைப்புகளின் அடிப்படையில் குப்தர் காலத்தில் சமஸ்கிருத இலக்கணத்தின் வளர்ச்சி புலப்படுகிறது. இக்காலகட்டம் குறிப்பாக அமரசிம்மரால் அமரகோசம் என்ற சமஸ்கிருத சொற்களஞ்சியம்**

**தொகுக்கப்பட்டதாக அறியப்படுகிறது. வங்கத்தைச் சேர்ந்த பௌத்த அறிஞர் சந்திரகோமியர் சந்திரவியாகரணம் என்ற இலக்கணநூலைப் படைத்தார்.**

82. குப்தர் காலத்தின் குறிப்பிடத் தகுந்த எழுத்தாளர்கள்

அ) ஆர்யதேவர்

ஆ) ஆர்யஅசங்கர்

இ) தாலமி

**ஈ) அ, ஆ இரண்டும்**

**குறிப்பு: தொடக்க கால பௌத்த இலக்கியங்கள் மக்கள் மொழியான பாலி மொழியில் இருந்தன. பின்னர் சமஸ்கிருதக் கலப்புடன் கவிதையும் வசனமுமாக மீண்டும் எழுதப்பட்டன. ஆர்யதேவர், ஆர்யஅசங்கர் ஆகியோர் குப்தர் காலத்தின் குறிப்பிடத் தகுந்த எழுத்தாளர்கள் ஆவர்.**

83. குப்தர் காலத்தில் அறிவியல் சார்ந்த முதலாவது முழுமையான நூல் யாரால் எழுதப்பட்டது?

அ) சாணக்கியர்

ஆ) தாலமி

**இ) வசுபந்து**

ஈ) பாணினி

**குறிப்பு: அறிவியல் சார்ந்த முதலாவது முழுமையான பௌத்தநூல் வசுபந்துவால் குப்தர் காலகட்டத்தில் எழுதப்பட்டது. வசுபந்துவின் சீடரான திக்நாகரும் பல அரிய நூல்களை எழுதினர்.**

84. சமண ராமாயணத்தை எழுதியவர்

**அ) விமலா**

ஆ) தாலமி

இ) வசுபந்து

ஈ) பாணினி

**குறிப்பு: சமணர்களின் மதநூல்களும் தொடக்கத்தில் பிராகிருத மொழியிலேயே எழுதப்பட்டன. பின்னர்தான் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டன. விமலா சமண இராமாயணத்தை எழுதினார். சித்தசேன திவாகரா சமணர்களிடையே தர்க்கசாஸ்திரத்திற்கு அடித்தளமிட்டார்.**

85. சாகுந்தலம், மாளவிகாக்னிமித்ரம், விக்ரமோர்வசியம் ஆகிய நாடகங்களை எழுதியவர்

அ) தாலமி

ஆ) பாணினி

இ) வசுபந்து

**ஈ) காளிதாசர்**

**குறிப்பு: காளிதாசர் இயற்கையை, அழகை எழுதிய கவிஞர். சாகுந்தலம், மாளவிகாக்னிமித்ரம், விக்ரமோர்வசியம் ஆகியவை இவரது புகழ்பெற்ற நாடகங்கள்.**

86. மிருச்சகடிகம் என்ற நூலை எழுதியவர்

**அ) சூத்ரகர்**

ஆ) தாலமி

இ) வசுபந்து

ஈ) பாணினி

87. பொருத்துக.

(1) சூரசேனி வடிவம் - பீகார்

(2) அர்த்தமகதி வடிவம் - மதுரா

(3) மகதி வடிவம் - அவுத், பண்டேல்கண்ட்

அ) 2 1 3

**ஆ) 3 1 2**

இ) 3 2 1

ஈ) 2 3 1

**குறிப்பு: குப்தர் காலத்தில் பிராகிருத மொழியின் பல்வேறு வடிவங்கள் உருவாகின. மதுரா பகுதியில் சூரசேனி என்ற வடிவமும், அவுத், பண்டேல்கண்ட் பகுதிகளில் அர்த்தமகதி வடிவமும், நவீன பீகார் பகுதியில் மகதி வடிவமும் வழக்கத்தில் இருந்தன.**

88. கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) மகாவிஹாரா என்று பெயர் பெற்ற நாளந்தா இந்தியாவின் பண்டைய மகதப் பேரரசில் (இன்றைய பிகார்) இருந்த மிகப் பெரிய பௌத்த மடாலயமாகும்.

(2) நாளந்தா பாட்னாவிற்குத் தென்மேற்கே சுமார் 95 கிமீ தூரத்தில் பீகார் ஷெரீப் நகரத்திற்கு அருகே உள்ளது. இது பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து 1200 வரை புகழ்பெற்ற கல்விச்சாலையாக இருந்தது.

(3) நாளந்தா யுனெஸ்கோவால் பாதுகாக்கப்படும் உலகின் தொன்மைச் சின்னமாகும்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

89. இந்தியாவின் தொடக்ககாலப் பல்கலைக்கழகங்கள் எவை?

அ) தட்சசீலம்

ஆ) நாளந்தா

இ) விக்ரமசீலா

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு: இந்தியாவின் தொடக்ககாலப் பல்கலைக்கழகங்கள் என்று குறிப்பிடப்படுபவை தட்சசீலம், நாளந்தா, விக்ரமசீலா ஆகும்.**

90. கீழ்க்கண்ட கூற்றுக்களை ஆராய்க.

(1) ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் நாளந்தா பல்கலைக்கழகம் குப்தப் பேரரசின் ஆதரவிலும், பின்னர் கன்னோசியின் பேரரசரான ஹர்ஷரின் ஆதரவிலும் செழித்தது.

(2) வங்கத்தின் பால வம்ச அரசர்களின் ஆதரவால் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் பௌத்த மதம் புகழ்பெறத் துவங்கியது.

(3) திபேத், சீனா, கொரியா, மத்திய ஆசியா போன்ற இடங்களிலிருந்தெல்லாம் மாணவர்கள் நாளந்தாவில் படித்தனர். இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மூலம் இப்பல்கலைக்கழகத்திற்கு

இந்தோனேஷியாவின் சைலேந்திரா வம்சத்தோடு தொடர்பு இருந்தது தெரிய வருகின்றது. இவ்வம்சத்தின் அரசர் ஒருவர் இவ்வளாகத்தில் ஒரு மடாலயத்தைக் கட்டியுள்ளார்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

91. கில்ஜியின் படைகளால் நாளந்தா சூறையாடப்பட்டு அழிக்கப்பட்ட ஆண்டு

**அ) பொ.ஆ.1200**

ஆ) பொ.ஆ.1300

இ) பொ.ஆ.1400

ஈ) பொ.ஆ.1500

**குறிப்பு: பொ.ஆ.1200இல் தில்லி சுல்தானிய மம்லூக் வம்சத்தின் பக்தியார் கில்ஜியின் படைகளால் நாளந்தா சூறையாடப்பட்டு, அழிக்கப்பட்டது.**

92. நாளந்தா பல்கலைக்கழகத்தைப் பற்றி முறையான அகழ்வாய்வு நடைபெற்ற ஆண்டு

அ) 1918

ஆ) 1917

இ) 1916

**ஈ) 1915**

**குறிப்பு: முறையான அகழ்வாய்வு 1915இல் ஆரம்பித்தது. அப்போது 12 ஹெக்டேர் பரப்பில் (30 ஏக்கர்) அமைந்திருந்த பதினோரு மடாலயங்களும், ஆறு செங்கல் கோயில்களும் கண்டுபிடிக்கப்பட்டன.**

93. சுழியம் என்ற கருத்தாக்கத்தைக் கண்டுபிடிக்கப்பட்ட காலம்

**அ) குப்தர் காலம்**

ஆ) குஷாணர் காலம்

இ) முகாலயர் காலம்

ஈ) மராத்தியர் காலம்

**குறிப்பு: சுழியம் என்ற கருத்தாக்கத்தைக் கண்டுபிடித்தது, அதன் விளைவாக பதின்ம இலக்கமுறை கண்டுபிடித்தது ஆகிய பெருமைகள் இக்காலகட்டத்தின் அறிவியலாளர்களையேச் சாரும்.**

94. சூரிய கிரகணங்களின் உண்மையான காரணங்களை ஆராய்ந்தவர்

அ) வசுபந்து

ஆ) வராகமிகிரர்

**இ) ஆரியபட்டர்**

ஈ) தாலமி

**குறிப்பு: சூரிய சித்தாந்தா என்ற நூலில் ஆரியபட்டர் (பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி முதல் ஆறாம் நூற்றாண்டின் துவக்கம் வரை) சூரிய கிரகணங்களின் உண்மையான காரணங்களை ஆராய்ந்தார்.**

95. பூமி ஒரு அச்சில் தன்னைத் தானே சுற்றுகிறது என்பதைக் கண்டுபிடித்த முதல் வானவியலாளர்

அ) வசுபந்து

ஆ) வராகமிகிரர்

**இ) ஆரியபட்டர்**

ஈ) தாலமி

**குறிப்பு: பூமியின் சுற்றளவு குறித்த கணக்கீட்டில் ஆரியபட்டர் கணிப்பு நவீன மதிப்பீட்டிற்கு மிக நெருக்கமாக உள்ளது.**

96. வானவியல், புவியியல், தாவரவியல், இயற்கை வரலாறு ஆகியவற்றிற்கான கலைக்களஞ்சியமாகக் கூறப்படும் நூல்

அ) பிருஹத்ஜாதகா

**ஆ) பிருஹத்சம்ஹிதா**

இ) பஞ்சசித்தாந்திகா

ஈ) கண்டகாத்யகா

**குறிப்பு: வராகமிகிரரின் (ஆறாம் நூற்றாண்டு) பஞ்சசித்தாந்திகா, பிருஹத்ஜாதகா ஆகியவை இவரது மற்ற படைப்புகளாகும்.**

97. ஆரியபட்டீயம் என்ற நூலை எழுதியவர்?

அ) வசுபந்து

ஆ) வராகமிகிரர்

**இ) ஆரியபட்டர்**

ஈ) தாலமி

**குறிப்பு: கணிதம், கோணவியல், இயற்கணிதம் ஆகியவற்றைப் பேசும் ஆரியபட்டீயம் என்ற நூலை அவர் எழுதினார்.**

98. பிரும்மஸ்புத- சித்தாந்தா, கண்டகாத்யகா ஆகிய நூல்களை எழுதியவர்

அ) சமுத்திரகுப்தர்

ஆ) முதலாம் சந்திர குப்தர்

இ) இரண்டாம் சந்திர குப்தர்

**ஈ) பிரம்ம குப்தர்**

**குறிப்பு: பிரம்மகுப்தர் (ஆறாம் நூற்றாண்டின் இறுதி, ஏழாம் நூற்றாண்டின் துவக்கம்) கணிதம் மற்றும் வானவியலுக்கான முக்கிய நூல்களான பிரும்மஸ்புத- சித்தாந்தா, கண்டகாத்யகா ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.**

99. நோய்களுக்கான மருந்துகள், மருந்துகள் தயாரிக்கும் முறை ஆகியவற்றைப் பற்றிக் கூறும் மருத்துவ நூல்

அ) ஆரியப்பட்டியம்

**ஆ) நவனிதகம்**

இ) ஹஸ்த்யாயுர்வேதா

ஈ) கண்டகாத்யகா

**குறிப்பு: நவனிதகம் என்ற மருத்துவ நூல் நோய்களுக்கான மருந்துகள், மருந்துகள் தயாரிக்கும் முறை ஆகியவற்றைக் கூறுகிறது.**

100. ஹஸ்த்யாயுர்வேதா என்ற விலங்குகளுக்கான மருத்துவ நூலை எழுதியவர்

அ) வசுபந்து

ஆ) வராகமிகிரர்

**இ) பாலகாப்யா**

ஈ) தாலமி

**குறிப்பு: பாலகாப்யா எழுதிய ஹஸ்த்யாயுர்வேதா என்ற நூல் விலங்குகளுக்கான மருத்துவ நூலாகும்.**

101. நிலப்பிரபுத்துவ பண்புகளை வரையறுத்த வரலாற்றாளர்

அ) டாசிடஸ்

ஆ) அட்டில்லா

இ) பாலகாப்யா

**ஈ) ஆர்.எஸ். சர்மா**

**குறிப்பு: நிலப்பிரபுத்துவம் என்ற சமூக அமைப்பு இந்தியாவின் மத்தியகால சமூகத்தின் ஒரு பண்புநிலை ஆகும்.**

winmeen.com

## 11th History Lesson 4 Questions in Tamil

## 4] தென்னிந்தியாவில் பண்பாட்டு வளர்ச்சி

1. ஐஹோல் கல்வெட்டு ரவிகீர்த்தியால் எந்த மொழியில் எழுதப்பட்டது?

அ) பாரசீகம்

ஆ) உருது

இ) பாலி

**ஈ) சமஸ்கிருதம்**

**குறிப்பு: இரண்டாம் புலிகேசியினுடைய அவைக்களப்புலவரான ரவிகீர்த்தி என்பவர் சமஸ்கிருதத்தில் எழுதிய ஐஹோல் கல்வெட்டு சாளுக்கியக் கல்வெட்டுகளிலேயே மிக முக்கியமானதாகும்.**

2. கன்னட மொழியில் எழுதப்பட்ட இலக்கணநூல்கள்

அ) கவிராஜமார்கம்

ஆ) பம்ப- பாரதம்

**இ) விக்கிரமார்ஜுன விஜயம்**

ஈ) மேற்கூறிய அனைத்தும்

**குறிப்பு: கன்னட மொழியில் எழுதப்பட்ட இலக்கணநூலான 'கவிராஜமார்கம்', 'பம்ப- பாரதம்', 'விக்கிரமார்ஜுன விஜயம்' ஆகியவை தென்னிந்தியாவில் பண்பாட்டு வளர்ச்சி குறித்த விவரங்களை அளிக்கின்றன.**

3. மகாபாரதம் தெலுங்கு மொழியில் யாரால் எழுதப்பட்டது?

அ) ரவிகீர்த்தி

**ஆ) நன்னையா**

இ) பிளினி

ஈ) தாலமி

**குறிப்பு: நன்னையாவால் தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட மகாபாரதம் முக்கிய வரலாற்றுச் செய்திகளை முன் வைக்கின்றது.**

4. வைணவ ஆழ்வார்களின் பாடல்கள் _______ எனத் தொகுக்கப்பட்டது.

**அ) நாலாயிர திவ்வியப்பிரபந்தம்**

ஆ) திருவாசகம்

இ) மகாபாரதம்

ஈ) பன்னிருத்திருமுறைகள்

**குறிப்பு: வைணவ ஆழ்வார்களின் பாடல்கள் தொகுக்கப்பட்டு நாலாயிர திவ்வியப்பிரபந்தம் எனப் போற்றப்பட்டது.**

5. சைவ இலக்கியங்கள் _______ எனத் தொகுக்கப்பட்டன.

அ) நாலாயிர திவ்வியப்பிரபந்தம்

ஆ) திருவாசகம்

இ) மகாபாரதம்

**ஈ) பன்னிருத்திருமுறைகள்**

**குறிப்பு: சைவ இலக்கியங்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன.**

6. அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் இயற்றிய நூல்

அ) திருவாசகம்

ஆ) மகாபாரதம்

**இ) தேவாரம்**

ஈ) நாலாயிர திவ்வியப்பிரபந்தம்

**குறிப்பு: அப்பர் (திருநாவுக்கரசர்), சம்பந்தர் (திருஞானசம்பந்தர்), சுந்தரர் ஆகியோர் இயற்றியது தேவாரம் ஆகும்.**

7. திருவாசகம் யாரால் இயற்றப்பட்டது?

அ) அப்பர்

**ஆ) மாணிக்கவாசகர்**

இ) சுந்தரர்

ஈ) சம்பந்தர்

**குறிப்பு: மாணிக்கவாசகரால் திருவாசகம் இயற்றப்பட்டது.**

8. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (1) பெரிய புராணம் | - | மூன்றாம் நந்திவர்மன் |
| (2) மத்தவிலாச பிரகாசனம் | - | சேக்கிழார் |
| (3) நந்திக்கலம்பகம் | - | முதலாம் மகேந்திரவர்மன் |

அ) 2 1 3

ஆ) 1 3 2

இ) 2 3 1

**ஈ) 3 1 2**

**குறிப்பு: சேக்கிழாரால் எழுதப்பட்ட பெரியபுராணம் பல வரலாற்றுச் செய்திகளை முன் வைக்கின்றது. முதலாம் மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாச பிரகாசனம் பல்லவர் கால வரலாற்றிற்கு ஒரு முக்கியச் சான்றாகும். சிற்றிலக்கிய வகையைச் சார்ந்த நந்திக்கலம்பகம் மூன்றாம் நந்திவர்மனின் போர் வெற்றிக்குச் சான்றாகும்.**

9. பொருத்துக.

(1) அலகாபாத்தூண் கல்வெட்டு - பரமேஸ்வரவர்மன்

(2) ஐஹோல் கல்வெட்டு - மூன்றாம் நந்திவர்மன்

(3) கூரம் செப்பேடுகள் - இரண்டாம் புலிகேசி

(4) வேலூர்பாளையம் செப்பேடுகள் - சமுத்திரகுப்தர்

**அ) 3 4 2 1**

ஆ) 3 4 1 2

இ) 4 3 2 1

ஈ) 1 2 3 4

**குறிப்பு: சமுத்திரகுப்தருடைய அலகாபாத்தூண் கல்வெட்டு, சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் கல்வெட்டு உள்ளிட்டபல கல்வெட்டுக்கள் பல்லவ - சாளுக்கிய மோதல்கள் குறித்தவிவரங்களை வழங்குகின்றன. பரமேஸ்வரவர்மனின் கூரம் செப்பேடுகள், மூன்றாம் நந்திவர்மனின் வேலூர்பாளையம் செப்பேடுகள் அவ்வரசர்களின் போர் வெற்றிகளைப் பதிவு செய்கின்றன.**

10. பௌத்த நூல்களான தீபவம்சம், மகாவம்சம் ஆகியன எந்த மொழியில் எழுதப்பட்டன?

**அ) பாலி**

ஆ) சமஸ்கிருதம்

இ) பாரசீகம்

ஈ) உருது

**குறிப்பு: பௌத்தநூல்களான தீபவம்சம், மகாவம்சம் ஆகியன பல்லவர் காலச் சமூக, மத பண்பாட்டு நிலைகள் குறித்தவிவரங்களை வழங்குகின்றன.**

11. யுவான் சுவாங், இட்சிங் ஆகியோர் எந்த நாட்டைச் சார்ந்தோர்?

அ) பிரேசில்

ஆ) இத்தாலி

இ) ஸ்பெயின்

**ஈ) சீனா**



winmeen.com

**குறிப்பு: சீனப்பயணிகளான யுவான் சுவாங், இட்சிங் ஆகியோரின் பயணக் குறிப்புகள் ஆகியன பல்லவர்காலச் சமூக, மத பண்பாட்டு நிலைகள் குறித்த விவரங்களை வழங்குகின்றன.**

12. கீழ்க்கண்டவர்களுள் அரப நாடுகளைச் சார்ந்த பயணிகள் யாவர்?

அ) சுலைமான்

ஆ) அல்மசூதி

இ) இபின் கவ்கா

**ஈ) மேற்கூறிய அனைவரும்**

**குறிப்பு: ஒன்பது, பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த அரபு நாடுகளைச் சேர்ந்த பயணிகளும் மற்றும் புவியியலாளர்களுமான சுலைமான், அல்மசூதி, இபின் கவ்கா போன்றோரின் பயணக்குறிப்புகள் இக்காலகட்ட இந்தியாவின் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளைப்பற்றி நமக்குக் கூறுகின்றன.**

13. பல்லவ – சாளுக்கிய காலகட்டப் பண்பாட்டைப் பற்றி விளக்கும் சிற்பங்கள் அமைந்துள்ள கோயில்கள்

அ) ஐஹோல்

ஆ) வாதாபி

இ) பட்டாடக்கல்

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு: ஐஹோல், வாதாபி, பட்டாடக்கல் ஆகிய இடங்களைச் சேர்ந்த கோயில்களிலுள்ள சிற்பங்கள் இக்காலகட்டப் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன.**

14. குடமுனி என்று அழைக்கப்படுபவர்

அ) நாதமுனி

ஆ) திருவாசகர்

**இ) அகத்தியர்**

ஈ) அப்பர்

**குறிப்பு: அகத்தியரே குடமுனி என்று அழைக்கப்படுகிறார்.**

15. ஐஹோல் கோயில் எங்கு அமைந்துள்ளது?

அ) தமிழ்நாடு

**ஆ) கர்நாடகா**

இ) மகாராஷ்டிரா

ஈ) குஜராத்

**குறிப்பு: ஐஹோல் (கர்நாடகா) மேகுடி கோயில் ஒரு குன்றின் மேலுள்ளது. இச்சமணக் கோயிலின் கிழக்குச் சுவரில் 19 வரிகளைக் கொண்ட சமஸ்கிருதக் கல்வெட்டு ஒன்று உள்ளது. (சக வருடம் 556: கி.பி. 634-635 காலத்தைச் சார்ந்தது)**

16. ஐஹோல் கல்வெட்டுச் செய்திகளை எழுதியவர்

அ) கடம்பர்

ஆ) நாதமுனி

இ) இரண்டாம் புலிகேசி

**ஈ) ரவிகீர்த்தி**

**குறிப்பு: ஐஹோல் கல்வெட்டுச் செய்திகளை எழுதியவர் ரவிகீர்த்தி என்றகவிஞர். இக்கல்வெட்டு சாளுக்கிய அரசர்களைக் குறிக்கும் மெய்கீர்த்தியாகும். இக்கல்வெட்டு சாளுக்கியரின் அரச வம்ச வரலாற்றை, இரண்டாம் புலிகேசி தன் பகைவர்கள் அனைவரையும் குறிப்பாக ஹர்சவர்தனரைத் தோற்கடித்ததைக் கோடிட்டுக் காட்டுகிறது.**

17. சத்யஸ்ராய என்று குறிப்பிடப்படுபவர்

அ) முதலாம் சந்திரகுப்தர்

ஆ) கடோத்கஜர்

இ) ஹரிசேனர்

**ஈ) சமுத்திரகுப்தர்**

**குறிப்பு: சத்யஸ்ராய என்றால் உண்மையின் உறைவிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.**

18. எத்தனை வகையான சாளுக்கிய அரசக்குடும்பங்கள் உள்ளன?

அ) 6

**ஆ) 2**

இ) 3

ஈ) 5

**குறிப்பு: இரண்டு சாளுக்கிய அரச குடும்பங்கள் உள்ளன. ஒன்று வாதாபி சாளுக்கியர்; மற்றொன்று கல்யாணி சாளுக்கியர்.**

19. சாளுக்கிய வம்சத்தை உருவாக்கியவர்

**அ) முதலாம் புலிகேசி**

ஆ) இரண்டாம் புலிகேசி

இ) கீர்த்திவர்மன்

ஈ) கடம்பர்

**குறிப்பு: சாளுக்கிய அரசவம்சம் அதனை உருவாக்கிய முதலாம் புலிகேசி (சுமார் கி.பி. (பொ.ஆ) 543-566) வாதாபிக்கு அருகேயுள்ள ஒரு குன்றினைச் சுற்றி கோட்டையைக் கட்டியதோடு வலுவான சக்தியாக உதயமானது.**

20. வாதாபி யாரால் நிறுவப்பட்டது?

அ) முதலாம் புலிகேசி

ஆ) இரண்டாம் புலிகேசி

**இ) கீர்த்திவர்மன்**

ஈ) கடம்பர்

**குறிப்பு: தலைநகர் வாதாபி கீர்த்திவர்மனால் (566-597) நிறுவப்பட்டது.**

21. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாதாபி சாளுக்கியர்கள் யாரால் தோற்கடிக்கப்பட்டனர்?

அ) சோழர்கள்

ஆ) குஷாணர்கள்

**இ) ராஷ்டிரகூடர்கள்**

ஈ) மௌரியர்கள்

**குறிப்பு: எட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாதாபி சாளுக்கியர்கள் ராஷ்டிரகூடர்களால் வெற்றி கொள்ளப்பட்டனர்.**

22. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

(1) கடம்பரின் மேலாதிக்கத்தின் கீழிருந்த முதலாம் புலிகேசி, தன்னை சுதந்திர அரசராக பிரகடனப்படுத்திக் கொண்டார். அவர் யக்ஞங்களை நடத்தியதாகவும் அஸ்வமேத யாகம் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

(2) மாளவம், கலிங்கம் மற்றும் தக்காணத்தின் கிழக்குப்பகுதியைச் சேர்ந்த அரசர்கள் இரண்டாம் புலிகேசியின் அரசியல் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டனர்.

அ) கூற்று 1 சரி

ஆ) கூற்று 2 சரி

**இ) கூற்று 1, 2 சரி**

ஈ) மேற்கூறிய ஏதுமில்லை

23. இரண்டாம் புலிகேசி யாரைத் தோற்கடித்த பின்னர் தன்னை அரசராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார்?

அ) கங்கர்கள்

ஆ) முதலாம் நந்திவர்மன்

இ) ஹர்சர்

**ஈ) மங்களேசன்**

**குறிப்பு: முதலாம் புலிகேசியின் பேரன் இரண்டாம் புலிகேசி (609-642) அரசர் மங்களேசனைத் தோற்கடித்த பின்னர் தன்னை அரசராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். இந்நிகழ்வு ஐஹோல் கல்வெட்டில் விவரிக்கப்பட்டுள்ளது.**

24. இரண்டாம் புலிகேசி நர்மதை நதிக்கரையில் யாரை வென்றார்?

அ) விக்ரமன்

ஆ) தேவராஜன்,

**இ) ஹர்ஷர்**

ஈ) சிம்ஹவிக்ரமன்

**குறிப்பு: இரண்டாம் புலிகேசியின் போர் வெற்றிகளில் குறிப்பிடத்தக்கது நர்மதை நதிக்கரையில் ஹர்ஷரை வென்றதாகும்.**

25. பனவாசியின் கடம்பர்களையும், மைசூரின் கங்கர்களையும் வென்ற அரசர்

**அ) இரண்டாம் புலிகேசி**

ஆ) முதலாம் புலிகேசி

இ) கீர்த்திவர்மன்

ஈ) முதலாம் நந்திவர்மன்

**குறிப்பு: இரண்டாம் புலிகேசி பனவாசியின் கடம்பர்களையும், மைசூரின் கங்கர்களையும் வென்றார்.**

26. இரண்டாம் புலிகேசி காஞ்சிபுரத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலை முறியடித்த அரசன்

**அ) முதலாம் மகேந்திரவர்மன்**

ஆ) இரண்டாம் மகேந்திரவர்மன்

இ) சிம்ம விஷ்ணு

ஈ) மானவர்மன்

**குறிப்பு: இரண்டாம் புலிகேசி காஞ்சிபுரத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலைப் பல்லவ அரசன் முதலாம் மகேந்திரவர்மன் முறியடித்தார். இது சாளுக்கியருக்கும் பல்லவருக்கும் இடையே ஒரு நீண்டகாலப்போருக்கு இட்டுச்சென்றது.**

27. வாதாபியைக் கைப்பற்றிய பல்லவ அரசன்

**அ) முதலாம் நரசிம்மவர்மன்**

ஆ) இரண்டாம் நரசிம்மவர்மன்

இ) கீர்த்திவர்மன்

ஈ) முதலாம் மகேந்திரவர்மன்

**குறிப்பு: பல்லவ அரசன் முதலாம் நரசிம்மவர்மன் (630-668) வாதாபியைத் தாக்கிக் கைப்பற்றினார். இப்போரில் இரண்டாம் புலிகேசி உயிர் துறந்தார். இதனைத் தொடர்ந்து வாதாபி சாளுக்கியப் பேரரசின் கிழக்குப்பகுதிகளின் மீதான பல்லவர்களின் கட்டுப்பாடு பல ஆண்டுகள் நீடித்தது.**

28. மனுசாஸ்திரம், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய சாளுக்கிய அரசர்

அ) முதலாம் புலிகேசி

**ஆ) இரண்டாம் புலிகேசி**

இ) ஹர்ஷர்

ஈ) சிம்மவிஷ்ணு

**குறிப்பு: நவரத்தினங்கள் எனப்பட்ட ஒன்பது அறிஞர்கள் இரண்டாம் சந்திரகுப்தரின் அவையில் இருந்தனர். இவர்களில் மாபெரும் சமஸ்கிருதக் கவிஞர் காளிதாஸர், சமஸ்கிருதப் புலவர் ஹரிசேனர், அகராதியை உருவாக்கிய அமரசிம்மர், மருத்துவர் தன்வந்திரி ஆகியோர் அடங்குவர்.**

29. தொடக்கக்காலத்தில் சாளுக்கிய அரசர்கள் சூடிக்கொண்ட பட்டங்கள்

அ) மகாராஜன்

ஆ) சத்யசிரயன்

இ) ஸ்ரீபிருத்திவிவல்லபன்

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு: தொடக்கக்காலத்தில் சாளுக்கிய அரசர்கள் மகாராஜன், சத்யசிரயன், ஸ்ரீபிருத்திவிவல்லபன் எனும் பட்டங்களைச் சூடிக் கொண்டனர். விரைவில் பத்ரகாரன், மகாராஜாதிராஜன் எனும் பட்டங்களும் பிரபலமாயின.**

30. ஹர்சவர்தனரை வென்ற பின்னர் இரண்டாம் புலிகேசி சூடிக்கொண்ட பட்டம்

**அ) பரமேஸ்வரன்**

ஆ) மகாராஜாதிராஜன்

இ) பத்ரகாரன்

ஈ) ஸ்ரீபிருத்திவிவல்லபன்

**குறிப்பு: ஹர்சவர்தனரை வென்ற பின்னர் இரண்டாம் புலிகேசி பரமேஸ்வரன் எனும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்.**

31. பல்லவ அரசர்கள் சூடிக்கொண்ட பட்டங்கள்

அ) தர்மமகாராஜாதி ராஜா

ஆ) மகாராஜாதி ராஜா

இ) தர்மமகாராஜா, மகாராஜா

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு: பல்லவ அரசில், அரசர்கள், தர்மமகாராஜாதி ராஜா, மகாராஜாதி ராஜா, தர்மமகாராஜா, மகாராஜா எனும் உயர்வாக ஒலிக்கும் பட்டங்களைச் சூட்டிக் கொண்டனர்.**

32. ஹிரகடஹள்ளி செப்புப்பட்டயத்தின் படி, அரசர்கள் நடத்திய வேள்விகள்

அ) அக்னிஸ்தோம

ஆ) வாஜ்பேய

இ) அஸ்வமேத

ஈ) **மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு: ஹிரகடஹள்ளி செப்புப்பட்டயத்தில், அக்னிஸ்தோம, வாஜ்பேய, அஸ்வமேத வேள்விகளை நடத்தியவர் என்று அரசர் அறிமுகம் செய்யபடுகிறார்.**

33. சாளுக்கியரின் அரச முத்திரை

அ) புலி

ஆ) காளை

**இ) காட்டுப்பன்றி**

ஈ) சிங்கம்

**குறிப்பு: காட்டுப்பன்றியின் உருவமே சாளுக்கியரின் அரச முத்திரையாகும். இது விஷ்ணுவின் வராக அவதாரத்தைக் குறிப்பதாகும்**.

34. பல்லவர்களின் அரச முத்திரை

அ) புலி

**ஆ) காளை**

இ) காட்டுப்பன்றி

ஈ) சிங்கம்

**குறிப்பு: சிவபெருமானின் வாகனமான காளை (நந்தி) பல்லவர்களின் அரச முத்திரையாகும்.**

35. முதலாம் ஜெயசிம்மனின் வழிவந்த சாளுக்கிய வம்சாவளியினர் அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை __________ ஆக நியமித்தனர்.

அ) அமைச்சர்கள்

**ஆ) மாநில ஆளுநர்கள்**

இ) முதல்வர்கள்

ஈ) தளபதிகள்

**குறிப்பு: முதலாம் ஜெயசிம்மனின் வழிவந்த சாளுக்கிய வம்சாவளியினர் அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை மாநில ஆளுநர்களாக நியமித்தனர்.**

36. ______ என்னும் பெயரைக் கொண்ட சாளுக்கிய இளவரசி கல்வெட்டாணைகளைப் பிறப்பித்துள்ளனர்.

**அ) விஜயபத்திரிகா**

ஆ) சமந்தா

இ) கரணா

ஈ) போகபதி

**குறிப்பு: விஜயபத்திரிகா என்னும் பெயரைக் கொண்ட சாளுக்கிய இளவரசி கல்வெட்டாணைகளைப் பிறப்பித்துள்ளனர்.**

37. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலிலுள்ள கல்வெட்டில் எந்த அரசியின் உருவம் காணப்படுகிறது?

அ) சமந்தா

**ஆ) ரங்கபதாகா**

இ) விஜயபத்திரிகா

ஈ) சாவித்திரி

**குறிப்பு: ராஜசிம்மனின் அரசி ரங்கபதாகாவின் உருவம், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலிலுள்ள கல்வெட்டில் காணப்படுகிறது.**

38. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (1) பிரதான | - | வெளிவிவகாரத்துறை அமைச்சர் |
| (2) மகாசந்தி-விக்கிரகிக | - | அரசு கருவூல அமைச்சர் |
| (3) அமத்யா | - | முதலமைச்சர் |
| (4) சமகர்த்தா | - | வருவாய்த்துறை அமைச்சர் |

**அ) 2 4 1 3**

ஆ) 1 3 4 2

இ) 2 3 1 4

ஈ) 1 3 2 4

**குறிப்பு: நான்கு அமைச்சர்களைக் குறித்து கல்வெட்டுகள் பேசுகின்றன. அவர்கள் பிரதான (முதலமைச்சர்), மகாசந்தி-விக்கிரகிக (வெளிவிவகாரத்துறை அமைச்சர்), அமத்யா (வருவாய்த்துறை அமைச்சர்), சமகர்த்தா (அரசு கருவூல அமைச்சர்) ஆகியோராவர்.**

39. விஷ்யம், ராஷ்ட்ரம், நாடு, கிராமம் என்பன

**அ) சாளுக்கியர்கள் நாட்டின் பல பிரிவுகள்**

ஆ) பல்லவர்கள் நாட்டின் பல பிரிவுகள்

இ) சாளுக்கியர்கள் மாநிலங்களின் பல பிரிவுகள்

ஈ) பல்லவர்கள் மாநிலங்களின் பல பிரிவுகள்

**குறிப்பு: நிர்வாக வசதிக்காகச் சாளுக்கியர்கள் நாட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்திருந்தனர். அவை விஷ்யம், ராஷ்ட்ரம், நாடு, கிராமம் என்பவனவாகும்.**

40. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (1) விசயாபதி | - | கிராம அளவிலான அதிகாரிகள் |
| (2) சமந்தா | - | கிராமத்தைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள் |
| (3) கிராம்போகி, கிராமகூடர் | - | நிலப்பிரபுக்கள் |
| (4) மகாத்ரா | - | அரசரின் கட்டளைப்படி அதிகாரங்களைக் கையாண்டவர் |

அ) 2 3 4 1

ஆ) 2 4 1 3

இ) 3 1 2 4

**ஈ) 3 4 2 1**

**குறிப்பு: கல்வெட்டுகள் விசயாபதி, சமந்தா, கிராம்போகி, மபத்ரா என்னும் அதிகாரிகள் குறித்துப் பேசுகின்றன.**

41. சாளுக்கிய நிர்வாகத்தில் மாகாண ஆளுநர்கள் தங்களை எவ்வாறு அழைத்துக் கொண்டனர்?

அ) ராஜமார்க்கராஜன்

ஆ) ராஜாதித்யராஜ பரமேஸ்வரன்

**இ) அ, ஆ இரண்டும்**

ஈ) மேற்கூறிய ஏதும் இல்லை

**குறிப்பு: மாகாண ஆளுநர்கள் தங்களை ராஜமார்க்கராஜன் என்றும், ராஜாதித்யராஜ பரமேஸ்வரன் என்றும் அழைத்துக் கொண்டனர். இவர்களில் சிலர் மகா- சமந்தா என்னும் பட்டத்தைப் பெற்றிருந்தனர். இவர்கள் படைகளை வைத்துப் பராமரித்தனர்.**

42. விஷ்யாவின் தலைவர்

**அ) விசாயபதி**

ஆ) மஹாதாரா

இ) அமாத்யா

ஈ) தண்டநாயகா

**குறிப்பு: விஷ்யாவின் தலைவர் விசாயபதியாவார். விசாயபதி அரசரின் கட்டளைப்படி அதிகாரங்களைக் கையாண்டவர்.**

43. புக்தியின் தலைவர் போகபதி ஆவார்.

அ) விசாயபதி

ஆ) மஹாதாரா

**இ) போகபதி**

ஈ) தண்டநாயகா

**குறிப்பு: இவ்விஷயாக்கள் மீண்டும் புக்திகளாகப் பிரிக்கப்பட்டன. புக்தியின் தலைவர் போகபதி ஆவார்.**

44. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (1) நல-கவுண்ட | - | சிறுநகரங்களின் அதிகாரிகள் |
| (2) கமுண்டர் அல்லது போகிகன் | - | சட்ட, ஒழுங்கு, நிர்வாகக்குழு |
| (3) கரணா | - | கிராமத்தில் அமைதியைப் பாதுகாக்கும் அதிகாரி |
| (4) மகாஜனம் | - | கிராம நிர்வாகத்தின் மையப்புள்ளி |
| (5) மகாபுருஷ் | - | கிராமக் கணக்கர் |
| (6) நகரபதி, புறபதி | - | வருவாய் அலுவலர்கள் |

அ) 5 4 3 2 1 6

**ஆ) 6 4 5 2 3 1**

இ) 5 4 3 6 2 1

ஈ) 4 3 2 6 5 1

**குறிப்பு: கிராமங்களில் பாரம்பரியமாக வருவாய் அலுவலர்களாகப் பணியாற்றிவர் நல-கவுண்ட என்றழைக்கப்பட்டனர். அரசரால் நியமிக்கப்பட்ட கமுண்டர் அல்லது போகிகன், கிராம நிர்வாகத்தின் மையப்புள்ளியாக இருந்தார். கிராமக் கணக்கர் கரணா ஆவார். இவர் கிராமணி எனவும் அழைக்கப்பட்டனர். கிராம அளவில் கிராம மக்களைக் கொண்ட 'மகாஜனம்' என்னும் குழுவின் கைகளில் சட்டம் ஒழுங்கு நிர்வாகம் இருந்தது. 'மகாபுருஷ்' என்னும் சிறப்பு அதிகாரி கிராமத்தில் அமைதியைப் பாதுகாக்கும் பணியை மேற்கொண்டார். நகரபதி, புறபதி ஆகியோர் சிறுநகரங்களின் அதிகாரிகளாவர்.**

45 ஐஹோல், மகாகூடம் தூண் கல்வெட்டுக்களைச் சாளுக்கியர் எந்த மொழியில் பொறித்துள்ளனர்?

அ) கன்னடம்

**ஆ) சமஸ்கிருதம்**

இ) பாரசீகம்

ஈ) உருது

**குறிப்பு: ஐஹோல், மகாகூடம் தூண் கல்வெட்டுக்களைச் சாளுக்கியர் சமஸ்கிருதத்தில் பொறித்துள்ளனர்.**

46. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

(1) சைவம், வைணவம் ஆகிய இரு மதங்களையும் சாளுக்கியர் ஆதரித்தனர். சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் கோயில்களை எழுப்பினர்.

(2) சாளுக்கிய அரசர்களில் குறிப்பிடத் தகுந்த அரசர்களான முதலாம் கீர்த்திவர்மன் (566-594), மங்களேசன் (594-609), இரண்டாம் புலிகேசி (609-642) ஆகியோர் வேள்விகளை நடத்தினர். அவர்கள் பரம-வைஷ்யண, பரம-மஹேஸ்வர என்னும் பட்டங்களையும் தரித்துக்கொண்டனர்.

(3) போர்க் கடவுளான கார்த்திகேயனுக்கு முக்கியத்துவம் அளித்தனர்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

47. கவிஞர் ரவிகீர்த்தி ஒரு _____ அறிஞர்

**அ) சமண**

ஆ) பௌத்த

இ) தமிழ்

ஈ) கன்னட

**குறிப்பு: கவிஞர் என இரண்டாம் புலிகேசியால் புகழ்மாலை சூட்டப்பட்ட ரவிகீர்த்தி ஒரு சமண அறிஞர் ஆவார்.**

48. இரண்டாம் கீர்த்திவர்மனின் ஆட்சியின்போது சமண மதத்தைச் சேர்ந்த கிராம அதிகாரி ஒருவர் எந்த இடத்தில் சமணக் கோவிலைக் கட்டினார்?

அ) ஐஹொல்

**ஆ) அனெகெரி**

இ) தக்காணம்

ஈ) வாதாபி

**குறிப்பு: இரண்டாம் கீர்த்திவர்மனின் ஆட்சியின்போது (744-745) சமண மதத்தைச் சேர்ந்த கிராம அதிகாரி ஒருவர் அனெகெரி என்ற இடத்தில் ஒரு சமணக் கோவிலைக் கட்டினார்.**

49. குணபத்ரா என்ற சமணத் துறவியை தனது ஆசிரியராகக் கொண்டிருந்தவர்

அ) இரண்டாம் புலிகேசி

ஆ) மங்களேசன்

இ) கீர்த்திவர்மன்

**ஈ) கிருஷ்ணா**

**குறிப்பு: இளவரசர் கிருஷ்ணா(756-775) குணபத்ரா என்ற சமணத் துறவியை தனது ஆசிரியராகக் கொண்டிருந்தார்.**

50. ஜெய்னேந்திரிய வியாகரணம் என்னும் நூலை இயற்றியவர்

அ) நாதமுனி

**ஆ) பூஷ்யபட்டர்**

இ) ஆர்யபட்டர்

ஈ) விஜயாதித்தன்

**குறிப்பு: விஜயாதித்தனின் (775-772) சமகாலத்தவரும் ஜெய்னேந்திரிய வியாகரணம் என்னும் நூலை இயற்றியவருமான பூஷ்யபட்டர் ஒரு சமணத்துறவியாவார்.**

51. சாளுக்கியப் பகுதிகளில் பல பௌத்த மையங்கள் இருந்ததாகவும் அவற்றில் மகாயான, ஹீனயான பிரிவுகளைப் பின்பற்றும் 5000 பௌத்தர்கள் வாழ்ந்ததாகவும் கூறியவர்

**அ) யுவான் சுவாங்**

ஆ) இட்சிங்

இ) மெகஸ்தனிஸ்

ஈ) பாஹியான்

**குறிப்பு: சீனப்பயணி யுவான் சுவாங் சாளுக்கியப் பகுதிகளில் பல பௌத்த மையங்கள் இருந்ததாகவும் அவற்றில் மகாயான, ஹீனயான பிரிவுகளைப் பின்பற்றும் 5000 பௌத்தர்கள் வாழ்ந்ததாகவும் கூறுகிறார்.**

52. சாளுக்கிய அரசனின் ஏழாம் நூற்றாண்டுக் கல்வெட்டு கன்னட மொழியை எவ்வாறு குறிப்பிடுகின்றது?

அ) உள்ளூர் பிராகிருதம்

ஆ) மக்களின் மொழி

இ) பண்பாட்டின் மொழி

**ஈ) அ, ஆ இரண்டும்**

**குறிப்பு: வாதாபியிலுள்ள ஒரு சாளுக்கிய அரசனின் ஏழாம் நூற்றாண்டுக் கல்வெட்டு கன்னட மொழியை 'உள்ளூர் பிராகிருதம்' அதாவது மக்களின் மொழியென்றும், சமஸ்கிருதத்தைப் பண்பாட்டின் மொழி என்றும் குறிக்கின்றது.**

53. சப்தாவதாரம் எனும் இலக்கண நூலை எழுதியவர்

அ) முதலாம் புலிகேசியின் தளபதி

ஆ) இரண்டாம் புலிகேசி

**இ) இரண்டாம் புலிகேசியின் தளபதி**

ஈ) கீர்த்திவர்மன்

**குறிப்பு: இரண்டாம் புலிகேசியின் தளபதி ஒருவன் 'சப்தாவதாரம்' எனும் இலக்கண நூலை சமஸ்கிருத மொழியில் எழுதினார்.**

54. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

(1) வரலாற்று ரீதியில் தக்காணத்தில் சாளுக்கியர்களே முதன்முறையாக, சற்றே மிருதுவான மணற்கல் (sand stone) பயன்படுத்திக் கோயில்களை எழுப்பினர்.

(2) வாதாபியில் நான்கு விதமான கோயில்கள் காணப்படுகின்றன. இரண்டு கோயில்கள் விஷ்ணுவுக்கும், ஒரு கோயில் சிவனுக்கும் மற்றொன்று சமணதீர்த்தங்கரர்களுக்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

(3) சாளுக்கியர்களின் கோயில்களைக் குடைவரை குகைக்கோயில்கள், கட்டுமானக் கோயில்கள் எனப் பிரிக்கலாம்..

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

55. குடைவரைக் குகைக் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள் ஆகிய இரண்டுக்கும் பெயர் பெற்றது

**அ) வாதாபி**

ஆ) பட்டாடக்கல்

இ) ஐஹோல்

ஈ) மணிமங்கலம்

**குறிப்பு: வாதாபி, குடைவரைக் குகைக் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள் ஆகிய இரண்டுக்கும் பெயர் பெற்றது. பட்டாடக்கல், ஐஹோல் ஆகியவை கட்டுமானக் கோயில்களுக்குப் பெயர் பெற்றவையாகும்.**

56. ஐயாவொளே எனும் வணிகக் குழுமத்தின் தலைமையிடம் எங்கு அமைந்திருந்தது?

அ) வாதாபி

ஆ) பட்டாடக்கல்

**இ) ஐஹோல்**

ஈ) மணிமங்கலம்

**குறிப்பு: 634 இல் உருவாக்கப்பட்ட ஐஹோல் இடைக்காலத்தில் புகழ் பெற்றிருந்த ஐயாவொளே எனும் வணிகக் குழுமத்தின் தலைமையிடமும், முக்கியமான வணிக மையமுமாகும்.**

57. ஐஹோலில் எத்தனை கோயில்கள் உள்ளன?

அ) 40

ஆ) 50

இ) 60

**ஈ) 70**

58. பழமையான கற்கோவில் அமைந்துள்ள இடம்

அ) குசிமல்லிகுடி

**ஆ) லட்கான்**

இ) ஐஹோல்

ஈ) மேகுடி

**குறிப்பு: காலத்தால் முந்தைய கற்கோயில் லட்கான் கோயிலாகும். இதனுடைய தனித்தன்மை இங்குள்ள வடஇந்திய பாணியிலிருந்து வேறுபட்ட சிகரத்தைக் கொண்ட, அழகான, நேர்த்தியான மென்சாந்து மேற்பூச்சைக் கொண்ட தூணாகும்.**

59. சாளுக்கியர் காலத்தில் துர்க்கை கோவில்கள் எந்தெந்த வடிவங்களில் அமைக்கப்பட்டிருந்தன?

அ) அரை வட்டவடிவம்

ஆ) செவ்வக வடிவம்

இ) முக்கோண வடிவம்

**ஈ) அ, ஆ இரண்டும்**

**குறிப்பு: துர்க்கைக்கு அர்ப்பணிக்கப்பட்ட மற்றொரு கோயில், புத்த சைத்ய பாணியில் அமைந்துள்ளது. சற்றே மேடான தளத்தின் மேல் அரை வட்டவடிவில் இக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இதே போன்று துர்க்கைக்கு அர்ப்பணிக்கப்பட்ட குசிமல்லிகுடி எனும் மற்றொரு துர்க்கைக் கோயில் செவ்வக வடிவத்தில் அமைந்துள்ளது.**

60. ______ல் உள்ள சமணக்கோயில் சாளுக்கியர் காலத்திய கட்டடக்கலையின் பரிணாம வளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு

அ) குசிமல்லிகுடி

ஆ) லட்கான்

இ) ஐஹோல்

**ஈ) மேகுடி**

**குறிப்பு: மேகுடியிலுள்ள சமணக்கோயில், சாளுக்கியர் காலத்திய கட்டடக்கலையின் பரிணாம வளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். மண்டப பாணியில் அமைக்கப்பட்டுள்ள குகைகள் ஐஹொலில் பாதுகாக்கப்படுகின்றன.**

61. விஷ்ணு குகைக்கோயிலைக் கட்டியவர்

அ) முதலாம் புலிகேசி

**ஆ) மங்களேசன்**

இ) கீர்த்திவர்மன்

ஈ) இரண்டாம் புலிகேசி

**குறிப்பு: வாதாபியில் நான்கு குகைகள் உள்ளன. மங்களேசன் (578) கட்டிய மிகப்பெரிய குகைக்கோயில் விஷ்ணுவிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. பாம்புப்படுக்கையில் சயனக் கோலத்திலுள்ள விஷ்ணு, நரசிம்மர் சிற்பங்கள் சாளுக்கியரின் கலைமேன்மைக்கு நேர்த்தி மிகுந்த எடுத்துக்காட்டுகளாகும்.**

62. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

(1) கர்நாடக மாநிலம், பாகல்கோட் மாவட்டத்திலுள்ள பட்டாடக்கல் எனும் அமைதியான சிறிய கிராமம் கலையழகும், நேர்த்தியும் மிக்க கோயில்களுக்குப் பெயர் பெற்றதாகும்.

(2) பட்டாடக்கல் அரச சடங்குகள் நடத்துவதற்கான இடமாகும்.

(3) பட்டாடக்கல் கோயில் சுவரில் இடம் பெற்றுள்ள பல சிற்பங்கள் அவற்றைச் செதுக்கிய சிற்பிகளின் கையொப்பத்தையும் கொண்டுள்ளன.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

63. இரண்டாம் விக்கிரமாதித்தன் __________ஐக் கைப்பற்றியதன் நினைவாக விருப்பாக்சர் கோயில் கட்டப்பட்டது.

**அ) காஞ்சிபுரம்**

ஆ) தொண்டை மண்டலம்

இ) வாதாபி

ஈ) பட்டடக்கல்

**குறிப்பு: இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றியதன் நினைவாக அவனுடைய மனைவி லோகமாதேவியின் ஆணைப்படி விருப்பாக்சர் கோயில் கட்டப்பட்டது. பல்லவ அரசன் ராஜசிம்மன் மாமல்லபுரத்தில் எழுப்பிய கட்டுமானக் கோயில்களின் தனித்தன்மைகளைத் தழுவி இக்கோயில் அமைந்துள்ளது.**

64. பட்டாடக்கல்லில் உள்ள விருப்பாக்சர் கோயிலை வடிவமைத்த கட்டக் கலைஞருக்கு சூட்டப்பட்ட பட்டம்

**அ) திரிபுவாசாரியா**

ஆ) சத்யசிரயன்

இ) பத்ரகாரன்

ஈ) மகாராஜாதிராஜன்

**குறிப்பு: பட்டாடக்கல் விருப்பாக்சர் கோயிலின் கிழக்கு வாசலில் இடம் பெற்றுள்ள ஒரு கன்னடக் கல்வெட்டு இக்கோவிலை வடிவமைத்த கட்டடக் கலைஞரை வெகுவாகப் பாராட்டுகின்றது. அக்கட்டடக் கலைஞருக்குத்‘ ‘திரிபுவாசாரியா” (மூன்று உலகையும் உருவாக்கியவன்) என்ற பட்டமும் சூட்டப்பட்டது.**

65. பட்டாடக்கல் பாபநாத கோயிலின் கிழக்குச் சுவரிலுள்ள கன்னடக் கல்வெட்டு கருவறையை வடிவமைத்தவரின் பெயர்

அ) ரவிகீர்த்தி

**ஆ) ரேவதி ஓவஜா**

இ) மங்களேசன்

ஈ) கீர்த்திவர்மன்

**குறிப்பு: கோயிலின் கிழக்குச் சுவரிலுள்ள ஒரு சிறிய கன்னடக் கல்வெட்டு கருவறையை வடிவமைத்தவரின் பெயர் ‘ரேவதி ஓவஜா’ எனக் குறிப்பிடுகின்றது.**

66. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

(1) பட்டாடக்கல் கிராமத்தின் தென்கிழக்கு மூலையில் பாபநாத கோயில் அமைந்துள்ளது. விருப்பாக்சர் கோவிலைப் போன்ற அடித்தள கட்டுமானத் திட்டத்தின்படி கட்டப்பட்ட இக்கோயில் வடஇந்திய பாணியிலான சிகரத்தைக் கொண்டுள்ளது. வெளிப்புறச் சுவர்கள் ராமாயணக் கதாபாத்திரங்களையும் காட்சிகளையும் சித்தரிக்கும் தொடர் சிற்பங்களால் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டுள்ளன.

(2) சாளுக்கியர் பத்துக்கும் மேற்பட்ட கோயில்களை எழுப்பியுள்ளார்கள். இவை சாளுக்கியக் கட்டடக் கலையின் பரிணாம வளர்ச்சியைக் காட்டுகின்றன

(3) கட்டப்பட்டபாணியின் அடிப்படையில் இக்கோயில்களை இந்தோ-ஆரியன், திராவிடகட்டடக் கலை என இரண்டாகப் பிரிக்கலாம்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

67. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

(1) வாதாபியில் விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட குகைக்கோயிலில் சில ஓவியங்கள் காணப்படுகின்றன.

(2) ஓவியக்கலையில் சாளுக்கியர் வாகடகர்களின் பாணியைப் பின்பற்றினர். அவ்வாறான ஓவியங்களில் பெரும்பாலானவை விஷ்ணுவின் அவதாரங்களைப் பற்றியதாகும்.

(3) சாளுக்கிய ஓவியங்களில் மிகப்பிரபலமானது. அரசன் மங்களேசனால் (597-609) கட்டப்பட்ட அரண்மனையில் உள்ளது. அக்காட்சி நடன நிகழ்ச்சி ஒன்றை அரச குடும்ப உறுப்பினர்களும் மற்றவரும் கண்டுகளிப்பதாய் அமைந்துள்ளது.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

68. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

(1) தொடக்ககால அறிஞர்கள் சிலர் பார்த்தியர் எனும் அரச மரபின் மற்றொரு பெயரான 'பஹல்வ' என்ற சொல்லின் திரிபே 'பல்லவ' ஆகும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

(2) இன்றைய அறிஞர் பலர் பார்த்தியரைத் தென்னிந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் அல்லது வடஇந்தியரோடு ரத்தக்கலப்பு கொண்டவர்கள் என்றும் பல்லவர்களை கருதுகின்றனர்.

(3) பல்லவர்கள் வடபெண்ணை ஆற்றுக்கும், வட வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பான தொண்டை மண்டலத்தோடு தொடர்புடையவராவர்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

69. பல்லவ வம்ச ஆட்சியை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்ட அரசர்

அ) சிம்மவர்மன்

ஆ) கீர்த்திவர்மன்

**இ) சிம்மவிஷ்ணு**

ஈ) முதலாம் மகேந்திரவர்மன்

**குறிப்பு: சிம்மவர்மனின் மகனான சிம்மவிஷ்ணு காவேரி வரை முன்னேறி சோழர்களுக்குச் சொந்தமான பகுதிகளைக் கைப்பற்றி, தன் தந்தை தொடங்கிய பல்லவ வம்ச ஆட்சியை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்டார்.**

70. களப்பிரர்களை முற்றிலும் அழித்தொழித்த பல்லவ அரசன்

அ) சிம்மவர்மன்

ஆ) கீர்த்திவர்மன்

**இ) சிம்மவிஷ்ணு**

ஈ) முதலாம் மகேந்திரவர்மன்

**குறிப்பு: சிம்மவிஷ்ணு களப்பிரர்களை முற்றிலும் அழித்தொழித்து காவேரி வரை முன்னேறி அவர்களின் பகுதிகளைக் கைப்பற்றியபோது பாண்டியர்களோடு மோத வேண்டியதாயிற்று.**

71. முதலாம் மகேந்திரவர்மனை சைவராக மாற்றியவர்

**அ) அப்பர்**

ஆ) சம்பந்தர்

இ) சுந்தரர்

ஈ) மாணிக்கவாசகர்

**குறிப்பு: சிம்மவிஷ்ணுவைத் தொடர்ந்து அவரது மகன் முதலாம் மகேந்திரவர்மன் (பொ.ஆ. 590-630) அரியணை ஏறினார். சமண மதத்தைப் பின்பற்றிய இவரை அப்பர் சைவராக மாற்றினார். கலைகளை ஆதரித்த மகேந்திரவர்மன் கவிஞனும் இசைவித்தகனுமாவார்.**

72. மகேந்திரவர்மனின் ஆட்சிக்காலத்தில் பல்லவ அரசினுடைய வடபகுதிகளைக் கைப்பற்றித் தலைநகர் காஞ்சிபுரம் வரை முன்னேறி சென்ற சாளுக்கிய அரசர்

**அ) இரண்டாம் புலிகேசி**

ஆ) முதலாம் புலிகேசி

இ) மங்களேசன்

ஈ) கீர்த்திவர்மன்

**குறிப்பு: மகேந்திரவர்மனின் ஆட்சிக்காலத்தில் இரண்டாம் புலிகேசி, பல்லவ அரசினுடைய வடபகுதிகளைக் கைப்பற்றித் தலைநகர் காஞ்சிபுரம் வரை முன்னேறினார்.**

73. சாளுக்கியர்களுக்கு எதிரானப் போர்களில் பல்லவர்களுக்கு உதவிய இலங்கை இளவரசர்

அ) அபராஜிதன்

ஆ) ராஜசிம்மன்

இ) கிருஷ்ணா

**ஈ) மானவர்மன்**

**குறிப்பு: முதலாம் நரசிம்மவர்மனின் ஆட்சிக்காலத்தில் (630-668) சாளுக்கியர்களுக்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் பல்லவர்கள் சாளுக்கியர்களுக்கு எதிராகப் பல வெற்றிகளை ஈட்டினர். இப்போர்களில் பல்லவர்களுக்கு மானவர்மன் எனும் இலங்கை இளவரசர் உதவினார். இவ்விளவரசரே பின்னர் இலங்கையின் அரசராகப் பதவியேற்றார்.**

74. சாளுக்கிய அரசின் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றிய பல்லவ அரசன்

அ) முதலாம் மகேந்திரவர்மன்

ஆ) முதலாம் பரமேஸ்வரவர்மன்

இ) சிம்ம விஷ்ணு

**ஈ) நரசிம்மவர்மன்**

**குறிப்பு: நரசிம்மவர்மன் சாளுக்கிய அரசின் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றினார். இரண்டாம் புலிகேசி இப்போரில் கொல்லப்பட்டார். நரசிம்மவர்மன் சேர, சோழர்களையும், களப்பிரர்களையும் வெற்றி கொண்டதாகக் கூறுகிறார். இலங்கை அரசன் மானவர்மனுக்கு ஆதரவாக இருமுறை அனுப்பப்பட்ட கப்பற்படைகள் வெற்றி பெற்றன.**

75. பல்லவ அரசன் முதலாம் பரமேஸ்வரவர்மனின் ஆட்சியின்போது படையெடுத்த சாளுக்கிய அரசர்

அ) முதலாம் புலிகேசி

ஆ) மங்களேசன்

**இ) விக்கிரமாதித்யன்**

ஈ) கீர்த்திவர்மன்

**குறிப்பு: பல்லவ அரசன் முதலாம் பரமேஸ்வரவர்மனின் ஆட்சியின்போது (670- 700) சாளுக்கிய அரசர் விக்கிரமாதித்யன் பல்லவ நாட்டின் மீது படையெடுத்தார். முதலாம் பரமேஸ்வரவர்மன் கங்கர் பாண்டியர் ஆகியோரின் உதவியோடு விக்கரமாதித்தனை எதிர்த்துப் போரிட்டார். இதன் விளைவாகப் பின்னர் தெற்கில் பல்லவருக்கும் பாண்டியருக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன.**

76. தண்டிவர்ம பல்லவனின் ஆட்சியின்போது காஞ்சிபுரம் எந்த அரசரினுடைய தாக்குதலுக்கு உள்ளானது?

அ) விக்கிரமாதித்யன்

ஆ) மூன்றாம் நந்திவர்மன்

இ) இரண்டாம் புலிகேசி

**ஈ) மூன்றாம் கோவிந்தன்**

**குறிப்பு: ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கக்காலத்தில், தண்டிவர்ம பல்லவனின் ஆட்சியின்போது காஞ்சிபுரம் ராஷ்ட்டிரகூட அரசர் மூன்றாம் கோவிந்தனின் தாக்குதலுக்கு உள்ளானது.**

77. மூன்றாம் நந்திவர்மன், மேலைக்கங்கர், சோழர் ஆகியோரின் ஆதரவோடு பாண்டியரை எந்தப் போரில் தோற்கடித்தான்?

அ) ஸ்ரீபிரம்பியம்

ஆ) திரும்புறம்பியம்

**இ) அ, ஆ இரண்டும்**

ஈ) மேற்கூறிய ஏதுமில்லை

**குறிப்பு: தண்டிவர்மனின் மகன் மூன்றாம் நந்திவர்மன், மேலைக்கங்கர், சோழர் ஆகியோரின் ஆதரவோடு பாண்டியரை ஸ்ரீபிரம்பியம் அல்லது திரும்புறம்பியம் போரில் தோற்கடித்தான்.**

78. அபராஜிதன் தொண்டைமண்டலப் பகுதியின் மீது படையெடுத்து வந்த யாருடன் போர் புரிந்து மடிந்தான்?

அ) முதலாம் பரமேஸ்வரவர்மன்

ஆ) மூன்றாம் நந்திவர்மன்

இ) இரண்டாம் ஆதித்த சோழன்

**ஈ) முதலாம் ஆதித்த சோழன்**

**குறிப்பு: மூன்றாம் நந்திவர்மனின் பேரனான அபராஜிதன் தொண்டைமண்டலப் பகுதியின் மீது படையெடுத்து வந்த முதலாம் ஆதித்த சோழனோடு போர் புரிந்து மடிந்தான். இத்துடன் பல்லவரின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இதன் பின்னர் தொண்டைமண்டலம் சோழர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.**

79. பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை, சேரபெருமாள் அரசர்களால் ஆளப்பட்ட பகுதி

அ) தொண்டை மண்டலம்

ஆ) தக்காணம்

இ) வாதாபி

**ஈ) கேரளா**

**குறிப்பு: பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை கேரளா, சேரபெருமாள் அரசர்களால் ஆளப்பட்டிருந்தது.**

80. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (1) அமத்யா | - | நன்கொடைகளுக்கான அதிகாரிகள் |
| (2) மந்திரி மண்டல | - | அந்தரங்கச் செயலாளர் |
| (3) ரகஸ்யதிகிரதா | - | அமைச்சர் குழு |
| (4) மாணிக்கப் பண்டாரம் காப்பான் | - | ஆலோசகர் |
| (5) கொடுக்காப்பிள்ளை | - | கருவூலத்தைக் காப்பவர் |

அ) 4 3 5 1 2

**ஆ) 5 3 2 1 4**

இ) 3 2 1 4 5

ஈ) 4 5 3 2 1

**குறிப்பு: (மாணிக்கப் பண்டாரம் காப்பான் - மாணிக்க- விலைமதிப்பில்லா; பண்டாரம்-கருவூலம்; காப்பான்- காவல் புரிபவர்).**

81. பொருத்துக.

| | |
|---|---|
| (1) கோச-அதீயட்சா | - மேல்நிலை நீதிமன்றங்களில் விதிக்கப்படும் அபராதங்கள் |
| (2) அதிகர்ணமண்டபம் | - நீதிபதிகள் |
| (3) தர்மாதிகாரி | - கீழ்நிலை நீதிமன்றங்களில் விதிக்கப்படும் அபராதங்கள் |
| (4) கர்ணதண்டம் | - நீதிமன்றங்கள் |
| (5) அதிகர்ணதண்டம் | - மாணிக்கப்பண்டாரம் காப்பாளர்களை மேற்பார்வை செய்பவர் |

**அ) 4 3 5 2 1**

ஆ) 3 2 1 4 5

இ) 2 3 1 4 5

ஈ) 3 1 2 4 5

**குறிப்பு: கோச-அதீயட்சா என்பவர் மாணிக்கப்பண்டாரம் காப்பாளர்களை மேற்பார்வை செய்பவர். நீதிமன்றங்கள் அதிகர்ணமண்டபம் என்றும், நீதிபதிகள் தர்மாதிகாரி என்றும் அழைக்கப்பட்டனர். மேல்நிலை நீதிமன்றங்களில் விதிக்கப்படும் அபராதங்கள் கர்ணதண்டம் ஆகும். கீழ்நிலை நீதிமன்றங்களில் விதிக்கப்படும் அபராதங்கள் அதிகர்ணதண்டமாகும்.**

82. நந்திவர்ம பல்லவனின் அபராதங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படும் செப்பேடுகள்

அ) பஹார்பூர் செப்பேடுகள்

ஆ) கூரம் செப்புப்பட்டயம்

இ) தாமோதர்பூர் செப்பேடுகள்

**ஈ) காசக்குடி செப்பேடுகள்**

**குறிப்பு: நந்திவர்ம பல்லவனின் காசக்குடி செப்பேடுகளில் அபராதங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.**

83. ஒரு பிராமணருக்கோ அல்லது சில பிராமணர்களைக் கொண்ட ஒரு குழுவுக்கோ கொடையாக வழங்கப்பட்ட கிராமங்கள்

அ) **பிரம்மதேய கிராமங்கள்**

ஆ) தேவதான கிராமங்கள்

இ) அ, ஆ இரண்டும்

ஈ) ஏதுமில்லை

**குறிப்பு: பிரம்மதேய கிராமங்கள் ஒரு பிராமணருக்கோ அல்லது சில பிராமணர்களைக் கொண்ட ஒரு குழுவுக்கோ கொடையாக வழங்கப்பட்டன. வரி செலுத்த வேண்டியதில்லை என்பதால் இக்கிராமங்கள் ஏனைய கிராமங்களைக் காட்டிலும் செழிப்பாக இருந்தன.**

84. கிராமஅளவில் அடிப்படையான அமைப்பு

**அ) சபை**

ஆ) ஊரார்

இ) நாடு

ஈ) அரசு

**குறிப்பு: சபை என்பது நிர்வாக முறையைச் சேர்ந்த அமைப்பாகும். கிராமத்தவர் அனைவரும் பங்கேற்கும் நிர்வாக முறை சாராத மக்கள் மன்றமான 'ஊரார்' என்ற அமைப்போடு இது இணைந்து செயல்பட்டது. இதற்கு மேலான மாவட்ட குழு 'நாடு' அல்லது மாவட்ட நிர்வாகத்தோடு இணைந்து செயல்பட்டது.**

85. கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட கிராமங்கள்

அ) பிரம்மதேய கிராமங்கள்

**ஆ) தேவதான கிராமங்கள்**

இ) அ, ஆ இரண்டும்

ஈ) ஏதுமில்லை

**குறிப்பு: தேவதான கிராமங்களின் வருவாயை கோயில் நிர்வாகிகள் பெற்றுக்கொண்டனரேயன்றி அரசு பெறவில்லை.**

86. கிராம அளவிலான அமைப்புகளுக்கும் அரசு நிர்வாகத்திற்குமிடையே பாலமாக செயல்பட்டவர்

அ) அரசர்

ஆ) மாவட்ட ஆளுநர்

**இ) கிராமத்தலைவர்**

ஈ) அமத்யா

87. வேளாண் மக்கள் விளைச்சலில் எத்தனை பங்கில் தொடங்கி பத்தில் ஒரு பங்கு வரை வரியாக அரசுக்குச் செலுத்தினர்?

அ) நான்கில் ஒரு பங்கு

ஆ) ஐந்தில் ஒரு பங்கு

**இ) ஆறில் ஒரு பங்கு**

ஈ) ஏழில் ஒரு பங்கு

**குறிப்பு: வேளாண் மக்கள் விளைச்சலில் ஆறில் ஒரு பங்கில் தொடங்கி பத்தில் ஒரு பங்கு வரை வரியாக அரசுக்குச் செலுத்தினர். இவ்வரியை கிராமமே வசூல் செய்து அரசின் வசூல் அதிகாரியிடம் கட்டியது.**

88. கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) 1879இல் புதுச்சேரிக்கு அருகே உருக்காட்டுக்கோட்டம் என்னுமிடத்தில் இருபுறமும் இணைக்கப்பட்டு லிங்கம், நந்தி ஆகியன (பல்லவர்களின் முத்திரை) பொறிக்கப்பட்ட செப்பு வளையத்தில் கோர்க்கப்பட்ட பதினோரு செப்புப்பட்டயங்கள் கண்டறியப்பட்டன.

(2) அரசன் நந்திவர்மனின் (பொ.ஆ 753) இருபத்திரண்டாவது ஆட்சியாண்டில், மானியமாகத் தரப்பட்ட ஒரு கிராமம் குறித்த செய்திகள் பதினோரு செப்புப்பட்டயங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(3) மேற்கூறியவற்றின் உள்ளடக்கம் அரசரைப் பற்றிய சமஸ்கிருத மொழியில் புகழ்வதில் தொடங்கி மானியத்தைப் பற்றிய விவரங்களைத் தமிழில் கூறி இறுதியில் சமஸ்கிருத செய்யுளோடு முடிவடைகிறது.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

89. நந்திவர்மன் காலத்தில் பல்லவப்படைகள் ஒரு கோட்டையைத் தாக்குவது போன்ற போர்க்களக் காட்சிகள் தொடர் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ள வைகுண்டப்பெருமாள் கோயில் அமையப்பெற்றுள்ள இடம்

அ) ஐஹோல்

ஆ) மாமல்லபுரம்

இ) வாதாபி

**ஈ) காஞ்சிபுரம்**

**குறிப்பு: காஞ்சிபுரம் வைகுண்டப்பெருமாள் கோயிலில் நந்திவர்மன் காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகள், குறிப்பாகப் பல்லவப்படைகள் ஒரு கோட்டையைத் தாக்குவது போன்ற போர்க்களக் காட்சிகள், தொடர் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. அக்கோட்டை உயரமான மதிற்சுவர்களை கொண்டதாயும், வீரர்கள் அதைத்தாக்குவது போலவும் அருகில் யானைகள் நிற்பது போலவும் அக்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.**

90. பல்லவர்கள் கப்பல்தளங்களைக் கட்டிய இடங்கள்

அ) மாமல்லபுரம்

ஆ) நாகப்பட்டினம்

இ) தூத்துக்குடி

**ஈ) அ, ஆ இரண்டும்**

91. பல்லவர் காலத்தில் முக்கியமான வணிக மையாக இருந்த இடம்

**அ) காஞ்சிபுரம்**

ஆ) நாகப்பட்டினம்

இ) மாமல்லபுரம்

ஈ) தூத்துக்குடி

**குறிப்பு: பல்லவர் காலத்தில் காஞ்சிபுரம் முக்கியமான வணிக மையாக இருந்தது. வணிகர்கள் தங்கள் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு அரசிடம் உரிமம் பெறவேண்டும். பொதுவாகப் பண்டமாற்று முறையே நடைமுறையில் இருந்தது.**

92. கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) பல்லவர் காலத்தில் வணிகர்கள் தங்களுக்கென 'மணிக்கிராமம்' போன்ற அமைப்புகளைக் கொண்டிருந்தனர்.

(2) பல்லவர் காலத்தில் வெளிநாட்டு வணிகத்தில் நறுமணப் பொருள்கள், பருத்தி ஆடைகள், விலையுயர்ந்த கற்கள், மூலிகைகள் ஆகியவை ஜாவா, சுமத்ரா, கம்போடியா, இலங்கை, சீனா, மியான்மர் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. மாமல்லபுரம் ஒரு முக்கியத் துறைமுகமாக விளங்கியது.

(3) பல்லவர் காலத்தில் வணிகர்கள் தங்களுக்கெனத் தனிக்குழுக்களை (guild) சுதேசி, நானாதேசிகர், ஐநூற்றுவர் என்ற பெயர்களில் அமைத்துக் கொண்டனர். அவர்களின் முக்கிய அமைப்பு ஐஹோல் நகரினை மையமாகக் கொண்டு செயல்பட்டது.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

93. வெளிநாடுகளோடு வணிகம் மேற்கொண்ட வணிகர்களின் குழு ஆகும்.

**அ) நானாதேசி**

ஆ) சுதேசி

இ) ஐநூற்றுவர்

ஈ) சபை

**குறிப்பு: வெளிநாடுகளோடு வணிகம் மேற்கொண்ட வணிகர்களின் குழு நானாதேசி ஆகும். இவ்வமைப்பு மையப்பகுதியில் காளையின் வடிவத்தைக் கொண்ட தனிக் கொடியைக் கொண்டிருந்தது. வீரசாசனம் என்ற பிரகடனங்களை வெளியிடும் உரிமையையும் பெற்றிருந்தது. நானாதேசியின் செயல்பாடுகள் தென்கிழக்கு ஆசிய நாடுகள் முழுவதும் விரிந்து பரந்திருந்தது.**

94. நானாதேசியின் தலைவர் எவ்வாறு அழைக்கப்பட்டதாகக் கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது?

அ) பட்டன்சாமி

ஆ) பட்டணக்கிழார்

இ) தண்டநாயகன்

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு: நானாதேசியின் தலைவர் பட்டன்சாமி, பட்டணக்கிழார், தண்டநாயகன் என்ற பெயர்களில் கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதன் உறுப்பினர்கள் ஐஹொல் பரமேஸ்வரியார் என்றழைக்கப்பட்டனர்.**

95. பொருத்துக.

(1) காம்போஜா - தெற்கு மலேசிய தீபகற்பம், சுமத்ரா

(2) சம்பா - கம்போடியா

(3) ஸ்ரீவிஜயா - ஆனம்

அ) 2 1 3

**ஆ) 3 1 2**

இ) 3 2 1

ஈ) 2 3 1

**குறிப்பு: தென்கிழக்கு ஆசிய நாடுகளோடு கடல் கடந்த வணிகத்தில் பல்லவர் ஈடுபட்டிருந்தனர். அப்பகுதியில் இக்காலத்தில் காம்போஜா(கம்போடியா), சம்பா(ஆனம்), ஸ்ரீவிஜயா(தெற்கு மலேசிய தீபகற்பமும் சுமத்ராவும்) மூன்று முக்கிய அரசுகள் இருந்தன.**

96. மத்தவிலாச பிரகசனம் என்ற நூலை எழுதியவர்

அ) முதலாம் பரமேஸ்வரவர்மன்

ஆ) விக்கிரமாதித்யன்

**இ) முதலாம் மகேந்திரவர்மன்**

ஈ) தாலமி

**குறிப்பு: முதலாம் மகேந்திரவர்மன் மத்தவிலாச பிரகசனம் என்ற நூலை சமஸ்கிருதத்தில் எழுதினார்.**

97. பல்லவர் பகுதிகளில் குடைவரைக் கோயில்களை அறிமுகம் செய்த பெருமைக்குரியவர்

அ) விக்கிரமாதித்யன்

**ஆ) முதலாம் மகேந்திரவர்மன்**

இ) கீர்த்திவர்மன்

ஈ) முதலாம் பரமேஸ்வரவர்மன்

**குறிப்பு: பல்லவர் பகுதிகளில் குடைவரைக் கோயில்களை அறிமுகம் செய்த பெருமை முதலாம் மகேந்திரவர்மனைச் சேரும்.**

98. பொருத்துக.

(1) கீர்த்தர்ஜூன்யம் - தண்டி

(2) தசகுமாரசரிதம் - தண்டி பல்லவ

(3) காவிய தர்சா - பாரவி

அ) 3 2 1

ஆ) 2 1 3

இ) 3 1 2

**ஈ) 2 3 1**

**குறிப்பு: தென்னிந்தியாவில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட வியக்கத்தக்க இரு நூல்கள் சமஸ்கிருத இலக்கியத்திற்கான தர அளவுகளை உருவாக்கின. அவை பாரவியின் கீர்த்தர்ஜுன்யம், தண்டியின் தசகுமாரசரிதம் ஆகிய நூல்களாகும். மிகச் சிறந்த அணி இலக்கணமாகிய 'காவிய தர்சா' என்னும் நூலை இயற்றிய தண்டி பல்லவ அரசவையைச் சில ஆண்டுகள் அலங்கரித்ததாகத் தெரிகிறது.**

99. கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) பிரம்மா, ஈஸ்வரா, விஷ்ணு ஆகியோர்க்கு, தான் கட்டிய கோயில்கள், கோயில் கட்டுவதற்குப் பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் செங்கல், மரம், உலோகம், சாந்து ஆகியன கொண்டு கட்டப்படவில்லை என முதலாம் மகேந்திரவர்மன் தனது மண்டகப்பட்டுக் கல்வெட்டில் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

(2) மகேந்திரவர்மனின் குடைவரைக் கோயில்கள் வழக்கமாக மண்டபபாணியில் தூண்களைக் கொண்ட ஒரு மண்டபத்தைக் கொண்டிருக்கும்; அல்லது முதலில் ஒரு மண்டபத்தையும் அதற்குப் பின்புறமோ, பக்கவாட்டிலோ ஒரு கருவறையைக் கொண்டிருக்கும்

(3) காஞ்சிப்பகுதியிலும் கிருஷ்ணா கோதாவரி நதிகளுக்கிடைப்பட்ட பகுதிகளிலும் பௌத்தத்துறவி மடாலயங்கள் அமைந்திருந்தன. இவையே பௌத்தக் கல்வி முறையின் மையமாக இருந்தன.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

100. எல்லோரா, அஜந்தா குகைகள் காணப்படும் இடம்

**அ) மகாராஷ்டிரா**

ஆ) குஜராத்

இ) மத்தியப்பிரதேசம்

ஈ) ராஜஸ்தான்

**குறிப்பு: மகாராஷ்டிர மாநிலத்தின் ஔரங்காபாத் மாவட்டத்தில் எல்லோரா, அஜந்தா என்னுமிடங்களில் திரளாகக் குகைகளும் கோயில்களும் அமைந்துள்ளன. எல்லோரா குகைக் கோயில்கள் அவற்றின் சிற்பங்களுக்காகப் பெயர் பெற்றவை. அஜந்தா குகைக் கோயில்கள் அவற்றின் ஓவியங்களுக்காகப் புகழ் பெற்றவை. இக்கோயில்களின் காலம் சுமார் பொ.ஆ. 500-950 ஆகும்.**

101. எல்லோராவிலுள்ள குடைவரைக் கோயில்களில் எத்தனை வகையான குகைகள் உள்ளன?

அ) 32

ஆ) 24

இ) 30

**ஈ) 34**

**குறிப்பு: எல்லோராவிலுள்ள குடைவரைக் கோயில்களில் 34 குகைகள் சரணத்ரி மலையில் அமைந்துள்ளன.**

102. எல்லோராவில் எத்தனை குகைகளில் சுவரோவியங்கள் காணப்படுகின்றன?

அ) 6

ஆ) 7

இ) 4

**ஈ) 5**

**குறிப்பு: எல்லோராவில் ஐந்து குகைகளில் சுவரோவியங்கள் காணப்படுகின்றன. ஆனால் கைலாசநாதர் கோயிலில் உள்ளவை மட்டும் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளன.**

103. எல்லோரா குகைகளை உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ அறிவித்த ஆண்டு

அ) 1938

**ஆ) 1983**

இ) 1987

ஈ) 1986

**குறிப்பு: எல்லோரா குகைகளை 1983இல் உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.**

104. எல்லோராவில் மொத்தம் எத்தனை பௌத்தக் குகைகள் உள்ளன?

அ) 10

**ஆ) 12**

இ) 14

ஈ) 16

**குறிப்பு: எல்லோராவில் மொத்தம் 12 பௌத்தக் குகைகள் உள்ளன. ஒவ்வொன்றும் தனித்துவம் கொண்ட கட்டடக்கலைப்பாணியைக் கொண்டுள்ளது. அவற்றில் சில அளவில் சிறியன. மற்றவை இரண்டு அல்லது மூன்று அடுக்குகளைக் கொண்டவை.**

105. அஜந்தா குகைகளில் குகை எண் ஒன்பதிலும் பத்திலும் காணப்படும் சுவரோவியங்கள் யாருடைய காலத்தைச் சேர்ந்தவை?

அ) ஹரிசேனர்

**ஆ) சாதவாகனர்**

இ) அகத்தியர்

ஈ) சத்ரியர்

**குறிப்பு: அஜந்தா குகைகள் சிறப்பு வாய்ந்த சுவரோவியங்களின் கருவூலமாகும். முதல் கட்ட ஓவியங்கள் பெரும்பாலானவை குகைஎண் ஒன்பதிலும் பத்திலும் காணப்படுகின்றன. இவை சாதவாகனர் காலத்தைச் சேர்ந்தனவாகும்.**

106. பொருத்துக.

(1) தியான முத்ரா - போதனை செய்யும் புத்தர்

(2) வியாக்கியான முத்ரா - பூமி ஸ்பர்ஸ முத்ரா

(3) பூமி ஸ்பர்ஸ முத்ரா - தியான புத்தர்

அ) 2 1 3

**ஆ) 2 3 1**

இ) 1 3 2

ஈ) 3 1 2

**குறிப்பு: புத்தரின் மூன்று வகைத் தோற்றங்கள்; 1. தியான புத்தர் (தியான முத்ரா) 2. போதனை செய்யும் புத்தர் (வியாக்கியான முத்ரா) 3. வலது கைஆள்காட்டி விரலால் பூமியைத் தொடும் புத்தர் (பூமி ஸ்பர்ஸ முத்ரா).**

107. கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) மகாராஷ்டிர மாநிலம் ஔரங்காபாத் நகரத்திற்கு வடக்கே 100 கிலோமீட்டர் தொலைவில் அஜந்தா குகைகள் அமைந்துள்ளன. எரிமலைப் பாறைகளிலிருந்து மொத்தம் 30 குகைகள் குடைந்தெடுக்கப்பட்டுள்ளன. இவை சுவரோவியங்களுக்குப் பெயர் பெற்றனவாக இருந்தாலும் இங்குச் சிற்பங்களும் உள்ளன.

(2) ஹீனயான பௌத்த மதப்பிரிவினைச் சேர்ந்தவர்களே முதன்முதலில் அஜந்தா குகைகளை அமைக்கத் துவங்கினர். பொ.ஆ.மு. 200 பொ.ஆ. 200 வரையில் தக்காண பீடபூமிப் பகுதிகளை ஆண்ட அரசர்கள் இம்முயற்சிகளுக்கு ஆதரவளித்தனர்.

(3) முதற்கட்டக் குகைகள் பொ.ஆ.மு. 200 - பொ.ஆ. 200 காலகட்டத்தைச் சேர்தவையாகும். இரண்டாவது கட்டக் குகைகள் சுமார் பொ.ஆ.200 - பொ.ஆ.400 காலப்பகுதியைச் சேர்ந்தனவாகும்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

108. போதிசத்துவர் ஓவியம் காணப்படும் இடம்

**அ) அஜந்தா**

ஆ) எல்லோரா

இ) மாமல்லபுரம்

ஈ) காஞ்சிபுரம்

109. கட்டடக்கலை நோக்கில் அஜந்தா குகைகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?

அ) 3

**ஆ) 2**

இ) 4

ஈ) 5

**குறிப்பு: கட்டடக்கலை நோக்கில் அஜந்தா குகைகளை இரு குழுக்களாகப் பிரிக்கலாம். ஒன்று சைத்தியங்கள்; மற்றொன்று விகாரங்கள்.**

110. பல்லவர்களின் அடையாளமாகக் கருதப்படும் கடற்கரைக் கோயில் யாருடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது?

அ) சிம்மவிஷ்ணு

**ஆ) ராஜசிம்மன்**

இ) முதலாம் மகேந்திரவர்மன்

ஈ) மங்களேசன்

**குறிப்பு: பல்லவர்களின் அடையாளமாகக் கருதப்படும் மாமல்லபுரம் (மகாபலிபுரம்) கடற்கரைக் கோயில் ராஜசிம்மனின் (700-728) ஆட்சிக் காலத்தில் எழுப்பியதாகும். இக்கோயில் மூன்று கருவறைகளைக் கொண்டுள்ளது.**

111. கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலின் வெளிப்புறச் சுவர் விஷ்ணுவிற்குப் படைத்தளிக்கப்பட்டுள்ளது. எல்லைச் சுவற்றின் உட்பக்கம் விரிவான செதுக்கு வேலைப்பாடுகளையும் சிற்பங்களையும் கொண்டுள்ளது. தென்னிந்தியாவில் கட்டுமானக் கோயில்களில் இது முதன்மையானதாகும்.

(2) இப்பகுதியிலுள்ள ஏனைய கோயில் கட்டடங்களைப் போலின்றி இக்கடற்கரைக் கோயில் பாறையில் செதுக்கப்பட்ட ஐந்து அடுக்குகளைக் கொண்ட கோவிலாகும்.

(3) ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் மாமல்லபுரபல்லவர் கோயில்களின் சிறப்புப் பண்பாகும்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

112. பஞ்சபாண்டவர் ரதங்களில் மிக நேர்த்தியானது

அ) அர்ச்சுன ரதம்

**ஆ) தர்மராஜ ரதம்**

இ) நகுல, சகாதேவ ரதம்

ஈ) பீம ரதம்

**குறிப்பு: மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலிலுள்ள ஒற்றைக்கல் தேர்கள் பஞ்சபாண்டவர் ரதம் என அறியப்படுகின்றன. இவ்வைந்து ரதங்களில் மிக நேர்த்தியானது தர்மராஜ ரதமாகும். இது சதுர வடிவிலான அடித்தளத்தையும் மூன்றடுக்கு விமானத்தையும் கொண்டுள்ளது.**

113. கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) தமிழ் பக்தி இயக்கத்தின் வலுவான அலை பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை நாடு முழுதும் வீசியது

(2) நாயன்மார், ஆழ்வார் ஆகியோர் இயற்றிய பாடல்களே தமிழ் பக்தி இயக்கத்தின் அடிப்படையாகும்.

(3) பன்னிரு ஆழ்வார்களும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் தமிழ்ச் சமூகத்தின் கைவினைஞர்கள், வேளாண்குடியினர் போன்ற பல பிரிவுகளிலிருந்து வந்தவராவர்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

114. பன்னிரு ஆழ்வார்களுள் இருந்த பெண் ஆழ்வார்

அ) முடத்தாமக்கண்ணியார்

ஆ) காரைக்கால் அம்மையார்

**இ) ஆண்டாள்**

ஈ) மங்கையற்கரசியார்

**குறிப்பு: கவிஞர் காரைக்கால் அம்மையார், பாண்டிய அரசி மங்கையற்கரசியார் ஆகியோர் பெண் நாயன்மார்கள் ஆவர்.**

115. பக்தி இயக்க வரலாற்றிற்கான முக்கியச் சான்றுகள்

அ) தேவாரம், நாலாயிரத்திவ்வியபிரபந்தம்,

ஆ) திருத்தொண்டர்தொகை

இ) திருவாசகம், பெரியபுராணம்

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு:** தேவாரம், நாலாயிரத்திவ்வியபிரபந்தம், திருத்தொண்டர்தொகை, மாணிக்கவாசகரின் திருவாசகம், பெரியபுராணம் முதலான பக்தி இயக்கப்பாடல்களே பக்தி இயக்க வரலாற்றிற்கான முக்கியச் சான்றுகளாகும்.

116. ஆழ்வார்களின் வைணவப்பாடல்களை எந்தப் பெயரில் நாதமுனி தொகுத்தார்?

அ) தேவாரம், நாலாயிரத்திவ்வியபிரபந்தம்,

ஆ) திருத்தொண்டர்தொகை

இ) திருவாசகம், பெரியபுராணம்

**ஈ) மேற்கூறிய அனைத்தும்**

**குறிப்பு: ஆழ்வார்கள் வைணவப்பாடல்களை இயற்றினர். ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இப்பாடல்கள் அனைத்தையும் (நான்காயிரம்) நாலாயிரதிவ்வியபிரபந்தமாக நாதமுனி தொகுத்தார்.**

117. திருவரங்கம் ரங்கநாதர் கோயிலில் அர்ச்சகராகப் பணியாற்றியவர்.

அ) சுந்தரர்

ஆ) அப்பர்

**இ) நாதமுனி**

ஈ) பெரியாழ்வார்

**குறிப்பு:** நாதமுனி திருவரங்கம் ரங்கநாதர் கோயிலில் அர்ச்சகராகப் பணியாற்றியவர்.

118. பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் ஆட்சிக்காலத்தில் திருவில்லிபுத்தூரில் வாழ்ந்தவர்

அ) நம்மாழ்வார்

ஆ) திருமங்கையாழ்வார்

இ) பேயாழ்வார்

**ஈ) பெரியாழ்வார்**

**குறிப்பு: ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் ஆட்சிக்காலத்தில் திருவில்லிபுத்தூரில் வாழ்ந்தவர் பெரியாழ்வார். கண்ணனின் குழந்தைப்பருவமே அவருடையபாடல்களின் கருவாயிருந்தது.**

119. ஆழ்வார்களில் தலைசிறந்தவராகக் கருதப்படுபவர்

**அ) நம்மாழ்வார்**

ஆ) திருமங்கையாழ்வார்

இ) பேயாழ்வார்

ஈ) பெரியாழ்வார்

**குறிப்பு: நம்மாழ்வார் ஆழ்வார்களில் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார். அவர் இன்றைய தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள குருகூரைச் (ஆழ்வார்திருநகரி) சேர்ந்தவர். திருவாய்மொழி உட்பட நான்கு நூல்களை அவர் எழுதியுள்ளார். அவருடைய பாடல்கள் நான்கு வேதங்களின் சாரத்தை வடித்தெடுத்து எழுதப்பட்டதென்பது வைணவ நம்பிக்கை.**

120. சைவக் கவிஞர்களில் முக்கியமானவர்கள்

அ) திருநாவுக்கரசர்

ஆ) திருஞானசம்பந்தர், சுந்தரர்

இ) மாணிக்கவாசகர்

**ஈ) மேற்கூறிய அனைவரும்**

**குறிப்பு: சைவக் கவிஞர்களில் முக்கியமானவர்கள் திருநாவுக்கரசர் (அப்பர்), திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆவர்.**

121. பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர்

அ) திருநாவுக்கரசர்

ஆ) திருஞானசம்பந்தர், சுந்தரர்

இ) மாணிக்கவாசகர்

**ஈ) நம்பியாண்டார்நம்பி**

**குறிப்பு: பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் திருநாவுக்கரசர் (அப்பர்), திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் பாடல்களை நம்பியாண்டார்நம்பி பன்னிரு திருமுறைகளாகத் தொகுத்தார்.**

122. கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) தேவாரம் என்றறியப்படும் முதல் ஏழு நூல்களில் உள்ள பாடல்கள் சம்பந்தர் (1-3), அப்பர் (4-6), சுந்தரர் (7) ஆகியோரால் இயற்றப்பட்டனவாகும்.

(2) எட்டாம் திருமுறை மாணிக்கவாசகரின் பாடல்களைக் கொண்டதாகும்.

(3) சேக்கிழாரின் பெரியபுராணத்தோடு சேர்த்து பன்னிரண்டு நூல்கள் உள்ளதாலும் இவை பன்னிரு திருமுறை என்று போற்றப்படுகின்றன.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

123. பெரியபுராணம் யாருடைய காலத்தில் இயற்றப்பட்டது?

அ) சேரர்

**ஆ) சோழர்**

இ) பாண்டியர்

ஈ) சாளுக்கியர்கள்

**குறிப்பு: பெரியபுராணம் சோழர் காலத்தில் இயற்றப்பட்டதாகும். இது அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றைச் சொல்லுவதோடல்லாமல் அவர்தம் வாழ்வில் நடந்த அதிசய சம்பவங்கள் குறித்தும் பெரியபுராணம் கூறுகிறது.**

124. ஆதிசங்கரர் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்

**அ) கேரளா**

ஆ) ஆந்திரா

இ) தமிழ்நாடு

ஈ) கர்நாடகா

**குறிப்பு: இந்தியாவின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய அரச வம்சங்களுக்கு அரசு என்ற ஒன்றை உருவாக்க ஒரு சித்தாந்தம் தேவைப்பட்டதின் பின்னணியில் ஒரு புதிய கோட்பாடு கேரள மாநிலம் காலடியைச் சேர்ந்த சங்கரர் என்பவரால் முன் வைக்கப்பட்டது.**

125. கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) ஆதிசங்கரரின் காலம் 788 – 820. மாயை கோட்பாடு குறித்துப் பல்வேறு மதப்பிரிவுகளைச் சார்ந்தவர்களோடு விவாதம் செய்து வென்றார்.

(2) அடிப்படையில் ஆதிசங்கரரின் அத்வைதக் கோட்பாடு வேதாந்தம் அல்லது உபநிடதத்தத்துவங்களில் வேரூன்றி இருந்தது.

(3) பௌத்தமதத்தை வேரறுத்துவிட்டு ஸ்மார்த்தமடங்களை நிறுவ ஆதிசங்கரர் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாய் சிருங்கேரி, துவாரகை, பத்ரிநாத், பூரி ஆகிய இடங்களில் மடங்கள் உருவாயின. பிராமணமடாதிபதிகள் அவற்றிற்குத் தலைமை தாங்கினர்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

126. ஸ்ரீ ராமானுஜர் பிறந்த ஊர்

அ) ஸ்ரீவில்லிப்புத்தூர்

**ஆ) ஸ்ரீபெரும்புதூர்**

இ) ஸ்ரீரங்கம்

ஈ) திருப்பரங்குன்றம்

**குறிப்பு: ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த ஸ்ரீ ராமானுஜர் (1017- 1138) காஞ்சிபுரத்தில் சங்கரரின் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட யாதவபிரகாசரிடம் தத்துவப்பயிற்சி பெற்றார்.**

127. "பக்தியெனும் ஒருங்கிணைக்கும் சக்தி அரசர்களையும் பிராமண குருமார்களையும் சாதாரண மக்களையும் முரண்பாடில்லாத விதத்தில் ஒருங்கிணைத்து சாதிய அமைப்பைக் கொண்ட புதிதாக நிறுவப்பட்ட இந்து அரசுகளின் ஆட்சியை வலிமைப்படுத்தியது". என்று கூறியவர்

அ) எம்.ஜி.எஸ். நாராயணன்

ஆ) கேசவன் வேலுதாட்

இ) நாதமுனி

**ஈ) அ, ஆ இரண்டும்**

**குறிப்பு: எம்.ஜி.எஸ். நாராயணன், கேசவன் வேலுதாட் ஆகியோரின் சொற்களில் பக்திக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தைச் சொல்வதென்றால் "பக்தியெனும் ஒருங்கிணைக்கும் சக்தி அரசர்களையும் பிராமண குருமார்களையும் சாதாரண மக்களையும் முரண்பாடில்லாத விதத்தில் ஒருங்கிணைத்து சாதிய அமைப்பைக் கொண்ட புதிதாக நிறுவப்பட்ட இந்து அரசுகளின் ஆட்சியை வலிமைப்படுத்தியது".**

128. ஸ்ரீ ராமானுஜர் இறப்பிற்கு நூறு ஆண்டுகளுக்குப்பின் அவரைப் பின்பற்றுவரோரிடம் கோட்பாட்டின் அடிப்படையில் முரண்பாடு ஏற்பட்டு தோன்றிய இரு பிரிவுகளைத் தலைமை தாங்கியவர்கள்

அ) வேதாந்ததேசிகர்

ஆ) மணவாளமாமுனிகள்

இ) கேசவன் வேலுதாட்

**ஈ) அ, ஆ இரண்டும்**

**குறிப்பு: ஸ்ரீ ராமானுஜர் இறப்பிற்கு நூறு ஆண்டுகளுக்குப்பின் அவரைப் பின்பற்றுவரோரிடம் கோட்பாட்டின் அடிப்படையில் முரண்பாடு ஏற்பட்டு வேதாந்ததேசிகர், மணவாளமாமுனிகள் ஆகியோரின் தலைமையில் இரு பிரிவுகள் தோன்றின.**

129. கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

(1) ராமானுஜர் திருவரங்கத்திற்குச் சென்றவசில நாட்களில் யமுனாச்சாரியார் இயற்கை எய்தினார். இதனைத் தொடர்ந்து ராமானுஜரே திருவரங்கம் மடத்தின் தலைவராக அறிவிக்கப்பட்டார்.

(2) ராமானுஜர் ஆதிசங்கரரின் அத்வைதக் கோட்பாட்டை மறுத்தார்.

(3) ராமானுஜர் வைணவத்தின் சமூகத்தளத்தை விரிவடையச் செய்யும் நோக்கில் பிராமணர் அல்லாதோரையும் இணைத்துக் கொண்டார்.

அ) கூற்று 1 மட்டும் சரி

ஆ) கூற்று 2 மட்டும் சரி

இ) கூற்று 3 மட்டும் சரி

**ஈ) அனைத்தும் சரி**

130. விசிஷ்டாத்வைதம் என்ற கோட்பாட்டை முன் வைத்தவர்

அ) வேதாந்ததேசிகர்

ஆ) ஆதிசங்கரர்

**இ) ராமானுஜர்**

ஈ) யமுனாச்சாரியார்

**குறிப்பு: அத்வைதத்திற்கு மாற்றாக ராமானுஜர் முன் வைத்த விசிஷ்டாத்வைதம் சிந்தனையாளர்களிடம் செல்வாக்குப் பெற்று தனி மரபாக வளர்ச்சி பெற்றது.**

# 11th History Lesson 5 Questions in Tamil

## 5] அரேபியர், துருக்கியரின் வருகை

1) இந்தியாவில் இஸ்லாமிய அரசு நிறுவப்பட்ட காலம் எது?

**A) 1200 - 1550**

B) 1100 - 1250

C) 1200 - 1300

D) 1000 - 1400

**(குறிப்பு - 13 முதல் 16 ஆம் நூற்றாண்டு(1200 - 1550) வரையான காலத்தில் இஸ்லாமிய அரசு என்று அழைக்கப்படும் டெல்லி சுல்தானிய அரசு நிறுவப்பட்டது. இதன் விளைவாக இஸ்லாமிய நிறுவனங்களும் இஸ்லாமிய பண்பாடும் இந்தியாவில் கால் கொண்டன)**

2) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - இந்தியாவுக்கும் அரேபியாவுக்கும் இடையே வணிக தொடர்புகள் ஏற்பட பூகோள அமைவிடம் உதவியது.

கூற்று 2 - இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பே கடல்வழி வணிகத்தில் அரேபியர் ஈடுபட்டிருந்தனர்.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி.

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரை களுடன் கடல்வழி வணிகத் தொடர்புகளை அரேபியர்கள் கொண்டிருந்தனர்)**

3) இந்தியாவின் மீதான முதல் அரேபிய படையெடுப்பு எப்போது நிகழ்ந்தது?

A) 700 ஆம் ஆண்டு

**B) 712 ஆம் ஆண்டு**

C) 726 ஆம் ஆண்டு

D) 750 ஆம் ஆண்டு

**(குறிப்பு - பொது ஆண்டு 712இல் இந்தியாவின் மீதான முதல் அரேபிய படையெடுப்பு நிகழ்ந்தது. அதைத் தொடர்ந்து கஜினி மற்றும் கோரி மன்னர்களின் படையெடுப்பு, இந்தியாவில் இருந்து கொள்ளையடித்துச் சென்ற செல்வத்தைக் கொண்டு மத்திய ஆசியாவில் அவர்கள் ஆட்சி வலுப்படுத்தும் நோக்கத்துடன் செயல்பட்டதும் நிகழ்ந்தது)**

4) மலபார் பெண்களை திருமணம் செய்து கொண்டு அங்கேயே குடியமர்ந்த அரேபியர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

A) பாய்கள்

**B) மாப்பிள்ளை**

C) துலுக்கர்

D) இஸ்லாமியர்

**(குறிப்பு - அரேபியர்கள் தென்னிந்தியாவின் மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரை கல்யாண மலபார் மற்றும் கோரமண்டல் கடற்கரைகளில் குடியேறினர். மலபார் பெண்களை திருமணம் செய்து கொண்டு அங்கேயே குடியமர்ந்த அரேபியர் மாப்பிள்ளை என்று அழைக்கப்பட்டனர்)**

5) குரசன் நாடு என்று அழைக்கப்பட்ட நாடு எது?

A) ஈராக்

**B) கிழக்கு ஈரான்**

C) ஈரான்

D) ஆப்கானிஸ்தான்

**(குறிப்பு - கஜினி முகமது மற்றும் முகமது கோரி நிகழ்த்திய திடீர் தாக்குதல்கள் ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளானவர்கள் என்ற உறவை இந்தியாவிற்கும் அரேபியர்களுக்கும் ஏற்படுத்தின.குரசன் நாட்டு ஷா (கிழக்கு ஈரான்) பின்னர் செங்கிஸ் கான் ஆகியோர் ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்தனர்)**

6) தொடக்கத்தில் இஸ்லாமிய ஆட்சியாளர்களின் தலைநகரமாக இருந்த இடம் எது?

**A) தில்லி**

B) அஜ்மீர்

C) கான்பூர்

D) ஹைதராபாத்.

**(குறிப்பு - வட இந்தியாவில் தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கு சுல்தான் இல்துமிஷுக்கு இருந்தது. இது டில்லியை தலைநகராகக் கொண்டு இந்திய மாகாணங்களை இஸ்லாமிய ஆட்சியாளர்கள் ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் ஆள்வதற்கு வழிவகுத்தது)**

7) கீழ்க்கண்டவர்களில் அபெர்லாய் துருக்கியர் என்பவர் யார்?

**A) இல்துமிஷ்**

B) இப்ராஹிம் லோடி

C) அக்பர்

D) பாபர்

**(குறிப்பு - அரேபியர், துருக்கியர், பாரசீகர், மத்திய ஆசிரியரும் ராணுவத்திலும் நிர்வாகத்திலும் பங்கு கொண்டிருந்தனர். இல்துமிஷ் ஓர் அபேர்லாய் துருக்கியர் என்பதோடு அவரது ராணுவ அடிமைகள் பலரும் தில்லிக்கு அழைத்து வரப்பட்டு அடிமைகளாக விற்கப்பட்டனர்)**

8) பொருத்துக

I. அடிமை வம்சம் - a) 1290 முதல் 1320 வரை

II. கில்ஜி வம்சம் - b) 1414 முதல் 1451 வரை

III. துக்ளக் வம்சம் - c) 1206 முதல் 1290 வரை

IV. சையது வம்சம் - d) 1320 முதல் 1414 வரை

**A) I-c, II-a, III-d, IV-b**

B) I-d, II-b, III-c, IV-a

C) I-c, II-d, III-a, IV-b

D) I-b, II-d, III-c, IV-a

**(குறிப்பு - 1206 முதல் 1526 வரை டெல்லி சுல்தானியம் ஒரே மரபை சேர்ந்த ஆட்சியாளர்களால் ஆளப்படவில்லை. அதன் ஆட்சியாளர்கள் ஐந்து வெவ்வேறு அம்சங்களை சேர்ந்தவர்கள் ஆவர். அடிமை வம்சம், கில்ஜி வம்சம், துக்ளக் வம்சம், சையது வம்சம் மற்றும் லோடி வம்சம் என்பன ஆகும்.)**

9) டெல்லி சுல்தானிய மரபுகளை சரியான வரிசையைத் தேர்ந்தெடு.

A) அடிமை, கில்ஜி, துக்ளக், லோடி, சையது

B) அடிமை, கில்ஜி, லோடி, துக்ளக், சையது

**C) அடிமை, கில்ஜி, துக்ளக், சையது, லோடி**

D) அடிமை, கில்ஜி, சையது, துக்ளக், லோடி

**(குறிப்பு - டெல்லி சுல்தானியம் 5 வம்ச மரபு ஆட்சியாளர்களால் ஆளப்பட்டது. அவையாவன அடிமை வம்சம், கில்ஜி வம்சம், துக்ளக் வம்சம், சையது வம்சம் மற்றும் லோடி வம்சம் ஆகும்)**

10) இல்துமிஷ் ஆட்சியின்போது இந்தியாவின் மிஹிரிலிருந்து சிறைபிடிக்கப்பட்டவர் யார்?

**A) ஹிந்து கான்**

B) அப்சல் கான்

C) கபீர் கான்

D) ஷேர் கான்

**(குறிப்பு - இல்துமிஷ் தில்லிக்கு தனது ராணுவ அடிமைகளான புக்காரா, சாமர்கண்ட், பாக்தாத் ஆகிய இடங்களை சேர்ந்தவர்களை அழைத்து வந்தார். மத்திய இந்தியாவில் மிஹிரிலிருந்து சிறைபிடிக்கப்பட்ட இந்து கான் போன்றவர்களும் அடிமைகளில் இருந்தனர். இருந்தாலும் இல்துமிஷ் அவர்கள் அனைவருக்கும் துருக்கிய பெயர்களையே சூட்டினார்)**

11) நூல்களையும் அதன் ஆசிரியர்களையும் பொருத்துக

I. அல்- பெருனி - a) தாரிக்-இ-பெரோஸ்

II. மின்ஹஜ் உஸ் சிராஜ் - b) தாரிக்-அல்-ஹிந்த்

III. ஜியாவுதீன் பாரனி - c) மிஃப்தா உல் ஃபுதா

IV. அமிர் குஸ்ரூ - d) தபகத்-இ-நஸரி

**A) I-b, II-d, III-a, IV-c**

B) I-d, II-a, III-b, IV-c

C) I-c, II-a, III-d, IV-b

D) I-a, II-b, III-d, IV-c

**(குறிப்பு - அல்-பெருனி என்பவரால் எழுதப்பட்ட தாரிக்-அல்-ஹிந்த் என்பது அரபு மொழியில் எழுதப்பட்ட இந்தியத் தத்துவ ஞானமும் மதமும் என்னும் நூலாகும்.**

12) மின்ஹஜ் உஸ் சிராஜ் என்பவரால் தபகத்-இ-நசிரி என்னும் நூல் எந்த ஆண்டு எழுதப்பட்டது?

A) 1250

**B) 1260**

C) 1270

D) 1280

**( குறிப்பு - மின்ஹஜ் உஸ் சிராஜ் என்பவரால் தபகத்-இ-நசிரி என்னும் நூல் 1260ஆம் ஆண்டு எழுதப்பட்டது. இது அரபு மொழியில் எழுதப்பட்ட உலக இஸ்லாமிய வரலாறு என்பது ஆகும்)**

13) மிஃப்தா உல் ஃபுதா என்று அழைக்கப்பட்ட ஜலாலுதீன் கில்ஜியின் வெற்றிகள் என்னும் நூலை எழுதியவர் யார்?

A) அமீர் குஸ்ரு

**B) அல்பெருனி**

C) மின்ஹஜ் உஸ் சிராஜ்

D) ஃபெரிஷ்டா

**(குறிப்பு - ஜலாலுதீன் கில்ஜியின் வெற்றிகள் என்று அழைக்கப்படும் மிஃப்தா உல் ஃபுதா என்ற நூலை எழுதியவர் அமிர்குஸ்ரு என்பவராவார். கஜைன் என்பவர் அலாவுதீன் கில்ஜியின் வெற்றிகள் என்று அழைக்கப்படும் உல் ஃபுதா என்னும் நூலை பாரசீக மொழியில் எழுதியுள்ளார்)**

14) இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியின் வரலாறு என்னும் நூல் எது?

A) துக்ளக் நாமா

B) தாரிக்-இ-ஃபெரோஜ் ஷாஹி

**C) ஃபெரிஷ்டா**

D) தாரிக்-இ-முபாரக் ஷாஹி

**(குறிப்பு - ஃபெரிஷ்டா என்னும் நூல் இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியின் வரலாறு இன்று அடைக்கப்பட்ட பாரசீக மொழியில் எழுதப்பட்ட நூல் ஆகும்)**

15) கீழ்க்காணும் நூல்களில் பாரசீக மொழியில் எழுதப்பட்ட நூல்கள் எது?

I. துக்ளக் நாமா

II. தாரிக் அல் ஹிந்த்

III. ஃபெரிஷ்டா

IV. தாரிக் இ பெரோஸ்

A) I, II, III மட்டும்

B) I, II மட்டும்

C) II, III, IV மட்டும்

**D) இவை அனைத்தும்**

**(குறிப்பு - மேற்கண்ட அனைத்து நூல்களும் பாரசீக மொழியில் எழுதப்பட்ட நூல்கள் ஆகும். மேற்கண்ட அனைத்து உணவுகளும் டெல்லி சுல்தானியம் மற்றும் இஸ்லாமியம் பட்டியல் சான்றுகளை கூறுவன ஆகும்)**

16) சிந்து அரசர் தாகீரை எதிர்த்து தரைவழி மற்றும் கடல்வழி என இரு தனித்தனி படைப் பிரிவுகளை அனுப்பிய ஈராக்கின் அரபு ஆளுநர் யார்?

A) மின்ஹஜ் உஸ் சிராஜ்

**B) ஹஜ்ஜ் பின் யூசுப்**

C) குலாம் யாஹ்யா பின் அஹ்மத்

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - ஈராக்கின் அரபு ஆளுநர் ஹஜ்ஜ் பின் யூசுப் கடற்கொள்ளையர் எதிரான நடவடிக்கை என்ற காரணம் காட்டி சிந்து அரசர் தாகீரை எதிர்த்து தரைவழி மற்றும் கடல்வழி என இரு தனித்தனி படைப்பிரிவுகளை அனுப்பினார். ஆனால் இரு படைப்பிரிவுகளும் தோற்றன)**

17) ஹஜ்ஜ் பின் யூசுப் என்பவரால் கலிபாவின் அனுமதியுடன் அனுப்பப்பட்ட படைக்கு தலைமை தாங்கியவர் யார்?

**A) முகமது பின் காசிம்**

B) முகமது கோரி

C) முகமது சல்மான்

D) முகமது கஜினி

**(குறிப்பு - சிந்து அரசர் தாகீருக்கு எதிராக தோற்ற பின்னர், ஹஜ்ஜ் பின் யூசுப் கலிபாவின் அனுமதியுடன் 6000 வலுவான குதிரைப்படை, போர்த் தளவாடங்களை சுமந்து வந்த ஒரு பெரிய ஒட்டக படை ஆகியவை அடங்கிய ஒரு முழுமையான ராணுவத்தை 17 வயது நிரம்பிய தனது மருமகன் முகமது பின் காசிம் தலைமையில் அனுப்பினார்)**

18) முகமது பின் காசிம் கைப்பற்றிய இடம் கீழ்க்கண்டவற்றுள் எது?

A) இஸ்லாமாபாத்

B) பைசலாபாத்

**C) பிராமணாபாத்**

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - பிராமணாபாத் என்னும் இடத்தில் ராணுவம் உள்ளிட்ட நிர்வாகப் பதவிகளில் பிராமணர்களே இருந்தனர். சிந்து அரசர் தாகீரின் முன்னோர்கள் பல அரச வம்சத்தில் இருந்து இன் நகரை கைப்பற்றி ஆட்சி நடத்தி வந்தனர்)**

19) சிந்துவின் தேபல் துறைமுக நகரத்தை அழித்தவர் யார்?

**A) முகமது பின் காசிம்**

B) முகமது கோரி

C) முகமது கஜினி

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - முகமது பின் காசிம் பிராமணாபாத் நகரை எளிதில் கைப்பற்றினார். சிந்து அரசர் தாகீரை விரட்டி சென்ற முகமது பின் காசிம் ரோஹரீ என்னும் இடத்தில் அவரைக் கொன்றார்.)**

20) 963ஆம் ஆண்டு கிழக்கு ஆப்கானிஸ்தானில் இருந்த கஜினி நகரை கைப்பற்றி ஒரு சுதந்திர அரசை நிறுவியவர் யார்?

**A) அல்ப்ட்டிஜின்**

B) சபுக்திஜின்

C) முகமது பின் காசிம்

D) முகமது கஜினி

**(குறிப்பு - மத்திய ஆசியாவில் சாமானித் பேரரசு உடைந்து பல சுதந்திர அரசுகள் தோன்றின. இவ்வாறு 963 கிழக்கு ஆப்கானிஸ்தானில் இருந்த கஜினி நகரை கைப்பற்றி ஒரு சுதந்திர அரசை நிறுவியவர் அல்ப்திஜின் என்பவர் ஆவார்.)**

21) தனது சகோதரன் இஸ்மாயில் என்பவரை தோற்கடித்து கஜினிமுகமது ஆட்சியில் அமர்ந்தபோது அவரது வயது?

A) 25 வயது

B) 26 வயது

**C) 27 வயது**

D) 28 வயது

**(குறிப்பு - சாபுக்திஜ்ஜின் இறந்தபோது கஜினிமுகமது குரசன் என்னும் நகரில் இருந்தார். எனவே இளைய மகன் இஸ்மாயில் என்பவர் வாரிசாக அறிவிக்கப்பட்டார். பிறகு தனது சகோதரன் இஸ்மாயில் என்பவரை தோற்கடித்து 27 வயது கஜினிமுகமது ஆட்சியில் அமர்ந்தார்)**

22) கஜினி முகமது ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது கலீபாவினால் அவருக்கு வழங்கப்பட்ட பட்டம் என்ன?

**A) யாமினி உத் தவுலா**

B) யாமின் அராஸ் தவுலா

C) யாமின் ராஜ்ய தவுலா

D) யாமின் பின் தவுலா

**(குறிப்பு - தனது சகோதரர் இஸ்மாயில் என்பவரை தோற்கடித்து கஜினிமுகமது ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். கஜினி முகமது பதவியேற்பினை அங்கீகரித்து கலீபா ஒரு பதவியேற்பு அங்கியை அளித்தும் யாமினி உத் தௌலா அதாவது பேரரசின் வலதுகை என்ற பட்டத்தை வழங்கியும் கவுரவித்தார்)**

23) கஜினி முகமது எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தார்?

A) 30 ஆண்டுகள்

**B) 32 ஆண்டுகள்**

C) 34 ஆண்டுகள்

D) 36 ஆண்டுகள்

**(குறிப்பு - 32 ஆண்டுகள் ஆட்சி புரிந்த கஜினிமுகமது 17 முறை இந்தியா மீது தாக்குதல்களை நடத்தினார். செல்வக் களஞ்சியமாக இருந்த இந்து கோயில்களில் கொள்ளையடிப்பது இவரது முதன்மை நோக்கமாக இருந்தது)**

24) முகமது கஜினியால் தோற்கடிக்கப்பட்ட ஹாஜி அரசர் யார்?

A) சிசுபாலர்

**B) அனந்தபாலர்**

C) ஜெயபாலர்

D) விஜயபாலர்

**(குறிப்பு - முகமது கஜினி ஹாஜி அரசர் அனந்தபாலரை தோற்கடித்தார். பின்பு பஞ்சாப்பை கடந்து கங்கை சமவெளியில் நெடுந்தொலைவு உள்ளே வந்தார்)**

25) முகமது கஜினி குஜராத் கடற்கரையில் உள்ள கோயில் நகரமான சோம்நாத்தின் மீது படையெடுத்த ஆண்டு எது?

A) 1020 ஆம் ஆண்டு

**B) 1025 ஆம் ஆண்டு**

C) 1030 ஆம் ஆண்டு

D) 1035 ஆம் ஆண்டு

**(குறிப்பு - முகமது கஜினி கண்ணு ஜி சென்று அடைவதற்கு முன்னர் மதுராவை சூறையாடினார். பின்னர் குஜராத் கடற்கரையில் உள்ள கோயில் நகரமான சோமநாதர் கோவிலின் மீது 1025இல் படையெடுத்து கொள்ளை அடித்தார்.)**

26) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - அரேபியர்களும், ஈரானியர்களும் இந்தியாவை ஹிந்த் என்று அழைத்தனர்.

கூற்று 2 - இஸ்லாமிய சமுதாயம் தோன்றிய பிறகு ஹிந்து என்னும் பெயர் இஸ்லாமியர் அல்லாத இந்தியர்களை குறிப்பதாயிற்று.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு.

**(குறிப்பு - தொடக்கத்தில் அரேபியர்களும் ஈரானியர்கள் இந்தியாவை ஹிந்த் என்று அழைத்தனர். இந்தியர்களை ஹிந்துக்கள் என்றும் குறிப்பிட்டனர். இருப்பினும் இந்தியாவில் இஸ்லாமிய சமுதாயம் தோன்றிய பிறகு ஹிந்து என்னும் பெயர் இஸ்லாமியர் அல்லாத இந்தியர்களை குறிப்பதாயிற்று)**

27) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - துருக்கியர் படை என்பது நிரந்தரமான தொழில் நேர்த்தி பெற்ற படையாகும்.

கூற்று 2 - இவர்கள் அனைவரும் விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளாவர்.

கூற்று 3 - இந்தியாவில் இந்து அரசாட்சிகளிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை கொண்டு இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - துருக்கியர் படை என்பது ஒரு நிரந்தரமான தொழில் நேர்த்தி பெற்ற படையாகும். அது தெரிந்தெடுத்து தகுதி உயர்த்தப்பட்ட வில்லாளிகள் பிரிவை மையமாகக் கொண்டு கட்டப்பட்டது. இவர்கள் அனைவரும் அடிமைகள் ஆவர். இவர்களுக்கு பயிற்சி அளித்து ஆயுதங்கள் கொடுக்கப்பட்டன)**

28) கஜினி முகமது அவர்களால் 1029 ஆம் ஆண்டு சூறையாடப்பட்ட நகரம் எது?

A) சோமநாதர் கோவில்

**B) ரேய் நகரம்**

C) பஞ்சாப் நகரம்

D) மதுரா நகரம்

**(குறிப்பு - 1029 ஆம் ஆண்டு ரேய் என்ற ஈரானிய நகரத்தை சூரையாடியதில் கஜினிமுகமதுவிற்கு 50000 தினார்கள் மதிப்புள்ள ஆபரணங்கள், நாணயங்களாக 26000 தினார்கள், 30, 000 தினார்கள் மதிப்புடைய தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரங்கள் கிடைத்ததாக கூறப்படுகிறது)**

29) சோமநாதர் படையெடுப்பு குறித்த தகவல்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து அரபு மரபுவழி பதிவுகளில் காணப்படுகின்றன என்று எடுத்துக் கூறியவர் யார்?

**A) வரலாற்று அறிஞர் ரோமிலா தாப்பர்**

B) வரலாற்று அறிஞர் வில்லியம் ஹென்றி

C) வரலாற்று அறிஞர் ஜார்ஜ் பூலே

D) வரலாற்று அறிஞர் காபர்னிகஸ்

**(குறிப்பு - சோமநாதர் படையெடுப்பு குறித்த தகவல்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து அரபு மரபுவழி பதிவுகளில் காணப்படுகின்றன ஆனால் இதன் சமகால சமண மதச் சான்றுகள் இதனை உறுதிப்படுத்தவில்லை என்று வரலாற்று அறிஞர் ரொமிலா தாப்பர் என்பவர் கூறுகிறார்.)**

30) கஜினி முகமதுக்கு பின்னர் கஜினி வம்சத்தில் 42 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி புரிந்தவர் யார்?

A) சுல்தான் முகமது

**B) சுல்தான் இப்ராஹிம்**

C) சுல்தான் மசூத்

D) சுல்தான் அப்துல்லா

**(குறிப்பு - கஜினி முகமது இறந்த பிறகு கஜினி வம்சத்தில் உறவினர்களிடையே அரச வாரிசுரிமை தொடர்பாக முடிவற்ற மோதல்கள் நிகழ்ந்தன. இருப்பினும் சுல்தான் இப்ராஹிம் என்பவர் 42 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி புரிந்தார்)**

31) மொய்சுதீன் முகமது என்பவர் கஜினி வம்சத்தினரை தோற்கடித்து லாகூர் நகரை கைப்பற்றிய ஆண்டு எது?

A) 1182

B) 1184

**C) 1186**

D) 1188

**(குறிப்பு - கஜினி வம்சத்தின் பிற்கால ஆட்சியாளர்கள் லாகூர் பகுதியில் மட்டுமே அதிகாரம் செலுத்த முடிந்தது. 1186 ஆம் ஆண்டு கோரி அரசர் மொய்சுதீன் அகமது என்கிற கோரி முகமது பஞ்சாப் மீது படையெடுத்து லாகூரை கைப்பற்றினார்)**

32) கஜினி வம்சத்தின் கடைசி அரசர் யார்?

A) ஆலம் ஷா

**B) குரவ் ஷா**

C) பகதூர் ஷா

D) நீரவ் ஷா

**(குறிப்பு - கஜினி வம்சத்தின் கடைசி அரசர் குரவ் ஷா என்பவராவார். இவர் 1192 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார். இவருடன் கஜினி அரசு முடிவுக்கு வந்தது)**

33) பஞ்சாப், சிந்து, ஹரியானா மாகாணங்களில் காவலரண்களை அமைத்தவர் யார்?

A) முகமது கஜினி

**B) முகமது கோரி**

C) முகமது பின் காசிம்

D) பிரித்திவிராஜ் சௌஹான்

**(குறிப்பு - கோரி முகமது தாம் கைப்பற்றிய நிலப்பகுதிகளில் முதலீடு செய்தார். 1180களிலும், 1190களிலும் நவீன பஞ்சாப், சிந்து மற்றும் அரியானா மாகாணங்களில் அவர் காவலரண்களை அமைத்தார். இந்த படை மையங்களில் பல கூலிப் படை வீரர்கள் விரைவில் குடியேறினர்)**

34) உச் என்று அழைக்கப்பட்ட இடம் கீழ்க்கண்டவற்றுள் எது?

**A) லாகூர்**

B) சிந்து

C) ஹரியானா

D) காபுல்

**(குறிப்பு - உச் என்பது லாகூரை குறிக்கும். தொடக்கத்தில் லாகூர், முல்தான் ஆகியன குறிப்பிடத்தக்க அதிகார மையங்களாக கருதப்பட்டன)**

35) முல்தான் நகரை முகமது கோரி கைப்பற்றிய ஆண்டு எது?

A) 1170ஆம் ஆண்டு

**B) 1175ஆம் ஆண்டு**

C) 1180ஆம் ஆண்டு

D) 1185ஆம் ஆண்டு

**(குறிப்பு - 1175 ஆம் ஆண்டு முல்தான் நகரை முகமது கோரி அதன் இசுமாயிய வம்ச ஆட்சியாளர்களிடமிருந்து கைப்பற்றினார். தொடர்ந்து உச்(லாகூர்) கோட்டையும் தாக்குதல் இன்றி பணிந்தது.)**

36) 1179ஆம் ஆண்டு முகமது கோரி யாரிடம் ஒரு பயங்கர தோல்வியை கண்டார்?

**A) சாளுக்கியர்கள்**

B) துருக்கியர்கள்

C) இசுமாயியர்கள்

D) சௌகான்கள்

**(குறிப்பு - குஜராத்தின் சாளுக்கியர் அபு மலையில் கோரி முகமதுவுக்கு ஒரு பயங்கர தோல்வியை கொடுத்தனர்.(1179ஆம் ஆண்டு). இந்த தோல்விக்கு பிறகு முகமது கோரி தமது படையெடுப்பின் போக்கை மாற்றிக்கொண்டு சிந்துவிலும், பஞ்சாபிலும் தமது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார்)**

37) அல்பெரூணி கீழ்க்கண்டவற்றில் எதில் சிறந்து விளங்கினார்?

I. கணிதம்

II. தத்துவம்

III. வானியல்

IV. ஜோதிடம்

A) I, II மட்டும் சரி

**B) I, II, III மட்டும் சரி**

C) II, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - கணிதவியலாளரும், தத்துவ ஞானியும், வானியலாளரும், வரலாற்று ஆசிரியருமான அல்பெருனி கஜினிமுகமது உடன் இந்தியா வந்தார்.)**

38) கிரேக்க கணித மேதையான யூக்ளிட் என்பவரின் நூலை அல்பெருனி எந்த மொழியில் மொழி பெயர்த்தார்?

A) அரேபிய மொழியில்

B) துருக்கிய மொழியில்

**C) சமஸ்கிருத மொழியில்**

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - அல்பெருனி கிதாப் உல் ஹிந்த் என்ற நூலை இயற்றுவதற்கு முன்னர் அவர் சமஸ்கிருதம் கற்றுக் கொண்டார். இந்து மத நூல்களையும் தத்துவ நூல்களையும் கற்றார்.)**

39) அஜ்மீர் சௌகான்களின் எந்த கோட்டையை முகமது கோரி தாக்கினார்?

**A) தபர்ஹிந்தா கோட்டை**

B) கோல்கொண்டா கோட்டை

C) ஹல்திண்டா கோட்டை

D) அல்பெண்டா கோட்டை

**(குறிப்பு - அஜ்மீர் சௌகான்களின் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தபர்ஹிந்தா (பட்டிண்டா) கோட்டையை முகமது கோரி தாக்கினார்)**

40) முதல் தரைன் போர் எந்த ஆண்டு நிகழ்ந்தது?

A) 1190 இல்

**B) 1191 இல்**

C) 1192 இல்

D) 1193 இல்

**(குறிப்பு - அஜ்மீர் அரசர் பிரிதிவிராஜ் சவுகான் தபர்ஹிந்தா கோட்டைக்கு அணிவகுத்துச் சென்று 1191 ஆம் ஆண்டு முதலாவது தரைன் போரை நிகழ்த்தினார். இதில் பிரிதிவிராஜ் சவுகான் வெற்றி பெற்றார்)**

41) பிரிதிவிராஜ் சவுகான் முகமது கோரியை குறைத்து மதிப்பிட்டார் மேலும் தனது அமைச்சரான ______________ என்பவரின் ஆலோசனையை நிராகரித்தார்.

**A) சோமேஸ்வர ராவ்**

B) நாகேஸ்வர ராவ்

C) சந்திரசேகர ராவ்

D) சுந்தரேஸ்வர ராவ்

**(குறிப்பு - பிரிதிவிராஜ் சவுகான் தனது அமைச்சரான சோமேஸ்வரர்ராவின் ஆலோசனையை நிராகரித்தார். முகமது கோரி க்கு எதிராக ஒரு சிறு படை குழுவை தலைமை ஏற்று சென்றார். எனவே இரண்டாம் தரைன் போரில் தோல்வி அடைந்தார்)**

42) இரண்டாம் தரைன் போர் எந்த ஆண்டு நிகழ்ந்தது?

A) 1191 ஆம் ஆண்டு

**B) 1192 ஆம் ஆண்டு**

C) 1193 ஆம் ஆண்டு

D) 1194 ஆம் ஆண்டு

**(குறிப்பு - இரண்டாம் தரைன் போர் 1192 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இதில் பிரிதிவிராஜ் சவுகான் தோல்வி அடைந்தார். அவர் சிறை பிடிக்கப்பட்டார். எனினும் போரில் வெற்றி பெற்ற முகமது கோரி மீண்டும் அஜ்மீரின் ஆட்சியை பிரித்திவிராஜ் இடமே ஒப்படைத்தார்)**

43) முகமது கோரியால் இந்திய பகுதிக்கான துணை ஆட்சியாளராக நியமிக்கப்பட்டவர் யார்?

**A) குத்புதீன் ஐபக்**

B) இல்துமிஷ்

C) இப்ராஹிம் லோடி

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - இரண்டாம் தரைன் போருக்குப் பின்னர், பிரிதிவிராஜ் சவுகான் ராஜ துரோக குற்றம் சுமத்தப்பட்டு கொல்லப்பட்டார். அவருக்குப் பின்னர் குத்புதீன் ஐபக் என்பவரை இந்திய பகுதிக்கான துணை ஆட்சியாளராக முகமது கோரி நியமித்தார்)**

44) கன்னோசி போரில் முகமது கோரி யாரை வீழ்த்தினார்?

**A) ஜெயச்சந்திரன்**

B) ஜெயபாலர்

C) விஜய பாலர்

D) சம்யுக்தர்

**(குறிப்பு - கன்னோசி அரசர் ஜெயச்சந்திரா முகமது கோரியால் வீழ்த்தப்பட்டார். கன்னோசி போரில் வெற்றி பெற்ற பின்பு திரும்பும் வழியில் சிந்து நதிக்கரையில் தங்கியிருந்தபோது அடையாளம் தெரியாதவர்களால் முகமது கோரி கொல்லப்பட்டார்)**

45) பத்தாம் நூற்றாண்டில் இருந்த ரஜபுத்திர அரசாட்சிகள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. கூர்ஜா பிரதிஹாரர்

II. ராஷ்டிரகூடர்

III. பரமர்

**A) I, II மட்டும் சரி**

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கூர்ஜா பிரதிஹாரர், இராஷ்டிரகூடர் ஆகிய வலுவான இரண்டு ராஜபுத்திர அரசாட்சிகள் தங்கள் அதிகாரத்தை இழந்தன)**

46) வட இந்தியாவின் முக்கியமான அரசவம்சங்களை பொருத்துக.

I. டோமர் - a) ராஜஸ்தான்

II. சௌஹான் - b) மால்வா

III. சோலங்கி - c) குஜராத்

IV. பரமர் - d) தில்லி

**A) I-d, II-a, III-c, IV-b**

B) I-d, II-a, III-b, IV-c

C) I-c, II-a, III-d, IV-b

D) I-a, II-b, III-d, IV-c

**(குறிப்பு - டோமர் (டில்லி), சௌகான் (ராஜஸ்தான்), சோலங்கி (குஜராத்), பரமர் (மால்வா), கடவாலா (கன்னோசி), சந்தேலர் (புந்தேல்கந்த்) ஆகியன வட இந்தியாவின் முக்கியமான அரச வம்சங்கள் ஆகும்)**

47) வம்சங்களையும் அதன் அரசர்களையும் பொருத்துக

I. சௌஹான் அரசர் - a) ஜெயச்சந்திரா

II. பரமர் அரசர் - b) பிரித்திவிராஜ்

III. கடவாலா அரசர் - c) யசோவர்மன்

IV. சந்தேலா அரசர் - d) போஜர்

**A) I-b, II-d, III-a, IV-c**

B) I-d, II-a, III-b, IV-c

C) I-c, II-a, III-d, IV-b

D) I-a, II-b, III-d, IV-c

**(குறிப்பு - ராஜபுத்திரர்கள் போர் பாரம்பரியம் கொண்டவர்கள். துருக்கியர்களும் ரஜபுத்திரர்களும் ஒரே மாதிரியான ஆயுதங்களையே பயன்படுத்தினர், எனினும் படை ஒழுங்கிலும் பயிற்சியிலும் ராஜபுத்திரர்கள் கவனமின்றி இருந்தனர்)**

48) ராஜபுத்திரர்கள்களை துருக்கியர்கள் எளிதாக வென்றதற்கான காரணங்களுள் சரியானது கீழ்க்கண்டவற்றுள் எது?

I. படை ஒழுங்கிலும், பயிற்சியிலும் ராஜபுத்திரர்கள் கவனமின்றி இருந்தனர்.

II. துருக்கியர்களின் குதிரைப்படை இந்திய குதிரைப் படையை விட மேம்பட்டதாக இருந்தது.

III. நேரத்திற்கு தக்கவாறு உத்திகள் வகுப்பதில் துருக்கியர்கள் மேம்பட்டவர்களாக இருந்தனர்.

A) I, II மட்டும் சரி

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

(குறிப்பு - ராஜபுத்திர படை யானைகளை மையப்படுத்தி இருந்தது. துருக்கியர்களின் குதிரைப்படை இந்தியர்களின் குதிரை படையை விட மேம்பட்டதாக இருந்தது. குதிரைகள் யானைகளை விட வேகமானவை. இவை அனைத்தும் துருக்கியர்கள் இந்தியர்களை வீழ்த்த காரணமாக இருந்தன)

49) அடிமை வம்சத்தை சாராதவர்கள் யார்?

A) இல்துமிஷ்

B) பால்பன்

C) குத்புதீன் ஐபக்

**D) முகமது கோரி**

**(குறிப்பு - முகமது கோரியின் இறப்பிற்குப் பிறகு, அதிகாரத்திற்கு மூவர் போட்டியிட்டனர். அதில் ஒருவர் குத்புதீன் ஐபக் ஆவார். அவர் டில்லியில் அரியணை ஏறினார். இந்த வம்சத்தின் முக்கியமான மூன்று ஆட்சியாளர்கள் குத்புதீன் ஐபக், இல்துமிஷ் மற்றும் பால்பன் ஆவர்)**

50) குத்புதீன் ஐபக் எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்?

**A) நான்கு ஆண்டுகள்**

B) ஐந்து ஆண்டுகள்

C) ஆறு ஆண்டுகள்

D) ஏழு ஆண்டுகள்

**(குறிப்பு - முகமது கோரியால் இந்தியாவுக்கு நியமிக்கப்பட்ட ஆட்சியாளர் குத்புதீன் ஐபக் ஆவார். அவர் 1206 முதல் 1210ஆம் ஆண்டுவரை சுமார் நான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்)**

51) கஜுராகோ கோவில் எந்த வம்சத்தினரால் கட்டப்பட்டது?

A) சவுகான் வம்சத்தினர்

B) பரமர் வம்சத்தினர்

**C) சந்தேலா வம்சத்தினர்**

D) டோமர் வம்சத்தினர்

**(குறிப்பு - உலகப் புகழ்பெற்ற கஜுராஹோ கோவில் வளாகம், கஜுராஹோவில் இருந்து ஆட்சி புரிந்த புந்தேல்கண்ட் சந்தேலர்களால் கட்டப்பட்டது)**

52) அடிமை வம்சத்தை எவ்வாறு கூறுவர்?

**A) மாம்லுக் வம்சம்**

B) கில்ஜி வம்சம்

C) துக்ளக் வம்சம்

D) எல்லாமே தவறு

**(குறிப்பு - அடிமை வம்சத்தை மாம்லுக் வம்சம் என்றும் கூறுவர். மாம்லுக் என்பதற்கு உடைமை என்று பொருளாகும். இது ஒரு அடிமை என்பதற்கான அரபு தகுதி பெயருமாகும்)**

53) புகழ் பெற்ற நாலந்தா பல்கலைக்கழகத்தை அழித்தவர் என்று கருதப்படுபவர் யார்?

A) அலாவுதீன் கில்ஜி

**B) பக்தியார் கில்ஜி**

C) ஜலாலுதீன் கில்ஜி

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - புகழ் பெற்ற நாலந்தா பல்கலைக்கழகத்தை அழித்தவர் பக்தியார் கில்ஜி என்று கருதப்படுகிறது. சீனப் பயணி யுவான் சுவாங் தனது பயணக் குறிப்புகளில் நாளந்தா பல்கலைக்கழகம் குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்)**

54) வட இந்தியாவில் மொய்சுதீன் கோரியின் அடிமைகளாக இருந்தவர்கள் யார்?

**A) குரித் பண்டகன்**

B) மாம்லுக் பண்டகன்

C) சம்ரத் பண்டகன்

D) எல்லாமே தவறு

**(குறிப்பு - பண்டகன் என்பது பண்ட என்பதன் பன்மையாகும். இச்சொல்லுக்கு படை அடிமை என்று பொருள். வட இந்தியாவில் குரித் பண்டகன், மொய்சுதீன் கோரியின் அடிமைகளாவர். இந்த அடிமைகளுக்கு சொந்த சமூக அடையாளம் இல்லை. இதனால் அவர்களது எஜமானர்கள் அவர்களுக்கு புதிய பெயர்கள் சூட்டினர்.)**

55) குத்புதீன் ஐபக்கிற்கு பின்னர் தில்லி ஆட்சியை பிடித்தவர் யார்?

**A) சம்சுதீன்**

B) ஆரம் ஷா

C) ஆலம் ஷா

D) மொய்சுதீன்

**(குறிப்பு - குத்புதீன் ஐபக்கின் அடிமையும் மருமகனுமான சம்சுதீன் இல்டுமிஷ், குத்புதீன் ஐபக்கின் மகன் ஆரம்ப ஆட்சிக்கு வருவதை தடுத்து தானே தில்லி ஆட்சி கட்டிலில் அமர்ந்தார்)**

56) சுல்தான்கள் ஆட்சி காலத்தில் இரண்டு அடிப்படை நாணயங்களாக செப்பு மற்றும் வெள்ளி தங்காவை அறிமுகம் செய்தது யார்?

A) குத்புதீன் ஐபக்

**B) சம்சுதீன் இல்துமிஸ்**

C) ஆரம் ஷா

D) கவாரிஸ்மி ஷா

**(குறிப்பு - குத்புதீன் ஐபக்கிற்கு பின்னர் தில்லி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தவர் சம்சுதீன் இல்துமிஷ் என்பவராவார். இவர் 243 அடி உயரமுள்ள குதுப்மினார் என்ற ஒரு வெற்றித் தூணை கட்டி முடித்தார். மேலும் செப்பு மற்றும் வெள்ளி தங்காவை அறிமுகம் செய்தார்)**

57) அடிமை வம்சத்தின் கடைசி ஆட்சியாளர் யார்?

A) சுல்தானா ரஸியா

**B) இரண்டாம் நசீர் அல்லுதின் முகமது**

C) சுல்தான் சம்சுதீன் முகமது

C) சுல்தான் முகமது ஆரம் ஷா

**(குறிப்பு - குத்புதீன் ஐபக், சம்சுதீன் இல்துமிஸ் ஆகியோருக்கு பின்னர் அடிமை வம்சம் சுல்தானா ரஸியா, இல்துமிஷ் அவர்களின் மற்றொரு மகன் பேரன் என பலரும் ஆட்சிக்கு வந்தனர். இறுதியில் இல்துமிஷ் அவர்களின் கடைசி மகன் சுல்தான் இரண்டாம் நசீர் அல்லுதீன் முகமது (1244-1266)ஆட்சி செய்தார்)**

58) வடமேற்கில் சிவாலிக் ஆட்சி பகுதிகளின் தளபதியாக இருந்தவர் யார்?

A) ரசூல் கான்

B) பாபர் கான்

C) அப்சல் கான்

**D) உலுக் கான்**

**(குறிப்பு - 1754 ஆம் ஆண்டு வடமேற்கில் சிவாலிக் ஆட்சிப் பகுதிகளில் தளபதியாக இருந்த உலுக் கான் டெல்லியை கைப்பற்றினார். இவர் சம்சுதீன் இல்துமிஸ் ஆட்சியின்போது அடிமையாகவும் இளைஞனாகவும் இருந்தவர்)**

59) நயிப்-இ முல்க் என்ற பட்டத்தைச் சூடிக் கொண்டவர் யார்?

A) சுல்தானா ரஸியா

B) சம்சுதீன் இல்துமிஷ்

**C) உலுக் கான்**

D) பால்பன்

**(குறிப்பு - சம்சுதீன் இல்துமிஸ் ஆட்சியின் போது அவரிடம் அடிமையாகவும் இளைஞனாகவும் இருந்தவர் உலுக் கான். அவர் சுல்தானுக்கு துணையாக இருந்த ஆட்சி அதிகார பிரதிநிதி என்று பொருள்படும், நயிப்-இ முல்க் என்னும் பட்டத்தைச் சூடிக் கொண்டார்)**

60) அடிமைவம்சத்தில் கியாசுதீன் பால்பன் டெல்லியை கைப்பற்றிய ஆண்டு எது?

A) 1264 ஆம் ஆண்டு

**B) 1266 ஆம் ஆண்டு**

C) 1268 ஆம் ஆண்டு

D) 1270 ஆம் ஆண்டு

**(குறிப்பு - 1266 ஆம் ஆண்டு சுல்தான் கியாஸ்-அல்-தின் பால்பன் தில்லியின் ஆட்சியைக் கைப்பற்றினார்)**

61) சுல்தானா ரஸியா கொல்லப்பட்ட ஆண்டு எது?

**A) 1240**

B) 1242

C) 1244

D) 1246

**(குறிப்பு - தில்லி அரசவையில் ஒரே பெண் அரசி சுல்தானா ரஸியா ஆவார். இவர் 1240 ஆம் ஆண்டு கொல்லப்பட்டார்)**

62) ரசியா பேகம் குதிரை லாயம் பணித்துறை தலைவராக யாரை நியமித்தார்?

A) ஜலாலுதீன் முகமது

B) ஜலாலுதீன் அகமது

**C) ஜலாலுதீன் யாகுத்**

D) ஜலாலுதீன் பீர்ஷா

**(குறிப்பு - ரசியா பேகம் ஜலாலுதீன் யாகுத் என்ற ஓர் அபிசீனிய அடிமையை குதிரை லாயபணித்துறை தலைவராக (அமீர் இ அகுர்) நியமித்தார். இது துருக்கிய பிரபுக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது)**

63) பால்பன் அவர்களால் கைப்பற்றப்பட்ட நிலங்கள் படையில் சேர்ந்த ஆப்கானியர் களுக்கும் மற்றவர்களுக்கும் குத்தகை இல்லாத வழங்கப்பட்டு அவை பயிரிடப்பட்டன. அவ்வாறு வழங்கப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

A) ராஜ்தான்

**B) மஃப்ருஸி**

C) நிஸ்பா

D) இவை எதுவும் இல்லை

**(குறிப்பு - பால்பன் அரசு டில்லியை சுற்றியுள்ள பகுதிகளிலும் தோவாப்பிலும் தாக்குதல்களை நடத்தினர். இந்த தாக்குதல்களின் போது காடுகள் அழிக்கப்பட்டன.புதிய சாலைகள் அமைக்கப்பட்டன.)**

64) மேவார் பகுதியில் கொலையிலும் கொள்ளைகளிலும் ஈடுபட்டிருந்த ஒரு இஸ்லாமிய சமூகம் எது?

A) நியோ

**B) மியோ**

C) சியோ

D) எல்லாமே தவறு

**(குறிப்பு - வடமேற்கில் மேவாரை சுற்றிய அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ்ந்த மியோ என்ற ஒரு இஸ்லாமிய சமூகம் கொலைகளிலும், கொள்ளைகளிலும் ஈடுபட்டிருந்தது. இதை ஒரு சவாலாக ஏற்ற பால்பன் தாமே முன்னின்று மேவாரை சேர்ந்தவர்கள் மீது தாக்குதல் தொடுத்தார்)**

65) வங்கத்தின் ஆளுநராக பால்பன் யாரை நியமித்தார்?

A) கைகுபாத்

**B) புக்ரா கான்**

C) அப்சல் கான்

D) அமின் கான்

**(குறிப்பு - வங்கத்தின் ஆளுநராக பால்பனின் மகன் புக்ரா கான் நியமிக்கப்பட்டார். பால்பன் இறந்த பிறகு புக்ரா கான் ஒரு சுதந்திர அரசாக பிரிந்து போனாரே அன்றி தந்தையின் அரியணையை கோரவில்லை)**

66) சட்லஜ் நதிக்கு அப்பால் முன்னேறி வர மாட்டோம் என்ற வாக்குறுதியை எந்த மங்கோலிய அரசரிடமிருந்து பால்பன் பெற்றார்?

A) செங்கிஸ்கான்

B) சிங்கிஸ்கான்

**C) ஹுலுக் கான்**

D) அப்சல் கான்

**(குறிப்பு - பால்பன் ஈரானின் மங்கோலிய பொறுப்பு ஆளுநரும் செங்கிஸ்கானின் பேரனுமான ஹுலுக் கானுடன் நல்லுறவைப் பேணுவதற்கு முயற்சி செய்தார். சட்லெஜ் நதிக்கு அப்பால் முன்னேறி வர மாட்டோம் என்ற வாக்குறுதியை மங்கோலியர்கள் இடமிருந்து பால்பன் பெற்றார்)**

67) ஹுலுக் கான் ஒரு நல்லெண்ண குழுவை தில்லிக்கு அனுப்பி வைத்த ஆண்டு எது?

A) 1253

B) 1256

**C) 1259**

D) 1262

**(குறிப்பு - 1259 ஆம் ஆண்டு ஹுலுக் கான் தில்லிக்கு ஒரு நல்லெண்ண குழுவை அனுப்பி வைத்தார். மங்கோலிய தாக்கங்கள் தாக்குதல்களில் இருந்து எல்லைப் பகுதிகளை காப்பதற்காக தனது விருப்பத்திற்குரிய மகன் முகமது கானுக்கு முல்தானின் ஆளுநர் பொறுப்பு அளித்திருந்தார் பால்பன்)**

68) ஜலாலுதீன் கில்ஜி ஆட்சிக்கு வந்த ஆண்டு எது?

A) 1280

**B) 1290**

C) 1295

D) 1300

**(குறிப்பு - படைத் தலைவராகப் பணியாற்றி வந்த மாலிக் ஜலாலுதீன் கில்ஜி கைக்குபாத்தின் பெயரால் அரசாட்சி செய்தார். விரைவிலேயே ஜலாலுதீன் கில்ஜி முறைப்படி அரசரானார்)**

69) மங்கோலியர்கள் இந்தியாவிற்குள் நுழைவதை ஜலாலுதீன் கில்ஜி எந்த ஆண்டு வெற்றிகரமாக தடுத்து நிறுத்தினார்?

A) 1290

B) 1291

**C) 1292**

D) 1293

**(குறிப்பு - ஜலாலுதீன் கில்ஜி அரசரான பின்பு பல சண்டைகளில் வெற்றி பெற்றார். மேலும் தமது முதிய வயதில் கூட மங்கோலிய கூட்டங்களை எதிர்த்து அணிவகுத்த அவர் இந்தியாவுக்குள் அவர்கள் நுழைவதை வெற்றிகரமாக தடுத்து நிறுத்தினார்)**

70) எந்த ஆண்டு அலாவுதீன் கில்ஜியின் ஆட்சியின்போது மங்கோலியர்கள் தில்லியை தாக்கினர்?

A) 1292

B) 1294

C) 1296

**D)1298**

**(குறிப்பு - மங்கோலியப் படை எடுப்புகள் அலாவுதீன் கில்ஜிக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தன. அவரது இரண்டாவது ஆட்சி ஆண்டில் (1298) மங்கோலியர்கள் தில்லியை உக்கிரமாக தாக்கினர். அலாவுதீன் கில்ஜியின் படையால் அவர்களை எதிர்த்து நிற்க இயலவில்லை)**

71) இந்தியாவின் மீதான மங்கோலியர்களின் கடைசி தாக்குதல் எந்த ஆண்டு நிகழ்ந்தது?

**A) 1307**

B) 1310

C) 1312

D) 1315

**(குறிப்பு - 1298, 1305 போன்ற ஆண்டுகளில் மங்கோலியர்கள் இந்தியர்கள் மீது தாக்குதல் நடத்தினார். இருப்பினும் பல முறை மங்கோலியர் ஐ தோற்கடித்த சுல்தானின் படை அதிக எண்ணிக்கையில் அவர்களை சிறை பிடித்து கொன்றது. இந்தியர்களின் மீதான கடைசி மங்கோலிய தாக்குதல் 1307 மற்றும் 1308ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தது)**

72) அலாவுதீன் கில்ஜி நடத்திய தாக்குதல்களை பொருத்துக.

I. தேவகிரி - a) 1303

II. குஜராத் - b) 1305

III. சித்தோர் - c) 1299

IV. மால்வா - d) 1296

**A) I-d, II-c, III-a, IV-b**

B) I-d, II-a, III-b, IV-c

C) I-c, II-a, III-d, IV-b

D) I-a, II-b, III-d, IV-c

**(குறிப்பு - சுல்தானியம் தனது அரசியல் இலக்குகளை அடைவதற்கு அதன் வட இந்திய நிலப்பரப்புகளில் வேளாண் நிலங்களை பயன்படுத்திக் கொள்ள இயலவில்லை. இது கொள்ளை பொருள்தேடி இடைவிடாமல் அவர்கள் நடத்திய சூரையாடல்களால் தெளிவாகிறது)**

73) 1307ஆம் ஆண்டு அலாவுதீன் கில்ஜி தனது தளபதியான மாலிக் கபூர் என்பவரின் தலைமையில் எந்த கோட்டையை கைப்பற்றுவதற்காக படையை அனுப்பினார்?

A) மேவார் கோட்டை

**B) தேவகிரி கோட்டை**

C) அஜ்மீர் கோட்டை

D) டில்லி கோட்டை

**(குறிப்பு - தீபகற்பத்தில் அலாவுதீன் கில்ஜியின் முதல் இலக்கு மேற்கு தக்காணத்தில் இருந்த தேவகிரி ஆகும். 1307ஆம் ஆண்டு தேவகிரி கோட்டையை கைப்பற்றுவதற்காக மாலிக்கபூர் தலைமையில் ஒரு பெரும்படையை அலாவுதீன் கில்ஜி அனுப்பினார்)**

74) ஜலாலுதீன் கில்ஜியின் தளபதியான மாலிக் கபூர் தலைமையிலான படை 1309ஆம் ஆண்டு யாரை தோற்கடித்தது?

**A) பிரதாபருத்ராதேவா**

B) வீரவல்லாளன்

C) விஜயதேவோ

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - 1309 ஆம் ஆண்டு மாலிக்கபூர் தலைமையிலான படை தெலுங்கானா பகுதியில் இருந்த வாரங்கல்லின் காகதீய அரசர் பிரதாபருத்ராதேவா என்பவரை தோற்கடித்தது)**

75) மாலிக்கபூர் தலைமையிலான படை தமிழ்நாட்டில் எந்த இடங்களை சூறையாடினர்?

I. சிதம்பரம்

II. திருவரங்கம்

III. மதுரை

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - மாலிக் கபூரின் தமிழ்நாட்டு தாக்குதல் கனத்த மழை வெள்ளத்தால் தடைபட்டது. எனினும் சிதம்பரம் திருவரங்கம் ஆகிய கோயில் நகரங்களையும் பாண்டியர் தலைநகரம் மதுரையும் சூறையாடினர்)**

76) நாற்பதின்மர் குழுவை உருவாக்கியவர் யார்?

A) பால்பன்

**B) இல்துமிஷ்**

C) அலாவுதீன் கில்ஜி

D) ஜலாலுதீன் கில்ஜி

**(குறிப்பு - இல்துமிஷ் நாற்பதின்மர் குழுவை அமைத்து அவர்களில் இருந்து தெரிவு செய்து ராணுவத்திலும் குடிமை நிர்வாகத்திலும் நியமித்தார். இல்துமிஷ் இறந்த பிறகு ருக்னுத்தீன் ஃபெரோசை அரசனாக வேண்டும் என்ற இல்துமிஷ்ஷின் விருப்பத்தை புறம் தள்ளும் அளவுக்கு இந்த நாற்பதின்மர் குழு வலுமிக்கதாயிற்று)**

77) நாற்பதின்மர் குழுவை ஒழித்தவர் யார்?

**A) பால்பன்**

B) அலாவுதீன் கில்ஜி

C) ஜலாலுதீன் கில்ஜி

D) மாலிக் கபூர்

**(குறிப்பு - சுல்தானியத்தின் நிலைதன்மைக்கு பெரிய அபாயத்தை ஏற்படுத்துகின்றது எனக்கூறி நாற்பதின்மர் குழுவை பால்பன் ஒழித்தார். இதன் மூலம் துருக்கிய பிரபுக்கள் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்)**

78) மதுவும், போதை மருந்துகளின் பயன்பாடும் யாருடைய ஆட்சியில் தடை செய்யப்பட்டன?

A) பால்பன்

**B) அலாவுதீன் கில்ஜி**

C) ஜலாலுதீன் கில்ஜி

D) கியாசுதீன் துக்ளக்

**(குறிப்பு - அலாவுதீன் கில்ஜி ஊழல் வயப்பட்ட அரசு அலுவலர்களை கடுமையாக கண்டித்தார். மது, போதை தரும் மருந்துகளின் பயன்பாடு தடை செய்யப்பட்டன. சூதாட்டமும் தடை செய்யப்பட்டது. சூதாடிகள் நகரத்துக்கு வெளியே விரட்டப்பட்டனர்)**

79) படை வீரர்களுக்கு கொள்ளையில் பங்கு தராமல் பணமாக ஊதியம் வழங்கிய முதல் சுல்தான் யார்?

**A) அலாவுதீன் கில்ஜி**

B) ஜலாலுதீன் கில்ஜி

C) கியாசுதீன் துக்ளக்

D) முகமது பின் துக்ளக்

**(குறிப்பு - அலாவுதீன் கில்ஜி ஒரு பெரிய திறமை வாய்ந்த படையை பராமரிக்க வேண்டி இருந்தது. படைவீரர்களுக்கு கொள்ளையில் பங்கு தராமல் பணமாக ஊதியம் வழங்கிய முதல் சுல்தான் அலாவுதீன் கில்ஜி ஆவார். படைவீரர்களுக்கு குறைந்த ஊதியமே அளிக்கப்பட்டது)**

80) கியாசுதீன் துக்ளக் என்பவரின் இயற்பெயர் என்ன?

**A) காஸி மாலிக்**

B) அப்துல் மாலிக்

C) மாலிக் கபூர்

D) எல்லாமே தவறு

**(குறிப்பு - அலாவுதீன் கில்ஜிக்கு பின்னர் மாலிக்கபூர் தாமே அரசாங்க அதிகாரத்தை எடுத்துக் கொண்டார். எனினும் ஆட்சிக்கு வந்து 35 நாட்களில் அவர் கொலை செய்யப்பட்டார். பின்னர் மங்கோலியர்க்கு எதிராக பல படையெடுப்புகளில் பங்கேற்ற திறமைசாலியான காஸிமாலிக் என்னும் கியாசுதீன் துக்ளக் 1320ஆம் ஆண்டு ஆட்சியில் அமர்ந்தார்)**

81) துக்லக் வம்சத்தின் ஆட்சி எப்போது வரை நீடித்தது?

A) 1410 வரை

B) 1412 வரை

**C) 1414 வரை**

D) 1416 வரை

**(குறிப்பு - 1320ஆம் ஆண்டு கியாசுதீன் துக்ளக் ஆட்சியில் அமர்ந்தார். பதவியில் இருந்த கில்ஜி ஆட்சியாளர் குஸ்ரோவை கொன்றதன் மூலம் கில்ஜி வம்சத்தில் இருந்து எவரும் அரசுரிமை கூறுவதை தடுத்தார்.1414வரையிலும் நீடித்த துக்ளக் வம்சத்தின் ஆட்சி தொடங்கியது)**

82) முகமது பின் துக்ளக் என்பவரின் இயற்பெயர் என்ன?

**A) ஜான் கான்**

B) அப்சல் கான்

C) ஷேர் கான்

D) பைரம் கான்

**(குறிப்பு - கியாசுதீன் துக்ளக் ஐந்தாவது ஆட்சி ஆண்டில் (1325இல்) இறந்தார். மூன்று நாள்கள் கழித்து ஜான் கான் என்ற இயற்பெயர் கொண்ட அவரது மகன் ஆட்சிக்கட்டிலில் ஏறியதோடு முகமது பின் துக்ளக் எனும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்)**

83) தலைநகரை தில்லியிலிருந்து தௌலதாபாத்திற்கு மாற்றியவர் யார்?

A) கியாஸ் உத்தின் துக்ளக்

**B) முகமது பின் துக்ளக்**

C) அலாவுதீன் கில்ஜி

D) ஜலாலுதீன் கில்ஜி

**(குறிப்பு - முகமது பின் துக்ளக், கற்றவர், நற்பண்பு நிறைந்தவர், திறமை வாய்ந்த அரசர் என்ற போதிலும் இரக்கமற்றவர், கொடூரமானவர் மற்றும் நியாயமற்றவர் எனும் பெயர் பெற்றிருந்தார். டெல்லிக்கு அருகே மீரட் வரையிலும் அணிவகுத்து வந்த மங்கோலிய படையை முகமது பின் துக்ளக் திறமையாக பின்வாங்கச் செய்தார்)**

84) முகமது பின் துக்ளக் எந்த நகரத்திற்கு தௌலதாபாத் என்று பெயர் சூட்டினார்?

A) சித்தோர்

**B) தேவகிரி**

C) ரண்தம்போர்

D) மால்வா

**(குறிப்பு - மகாராஷ்டிரத்தில் உள்ள தேவகிரிக்கு முகமது பின் துக்ளக் சூட்டிய மறுபெயரே தௌலதாபாத் ஆகும். தில்லியில் இருந்து தௌலதாபாத்திற்கு தலைநகரை மாற்ற உத்தரவிட்டவர் முகமது பின் துக்ளக் ஆவார்)**

85) அடையாள நாணயங்களை அறிமுகப்படுத்தியவர் யார்?

A) கியாஸ் உத்தின் துக்ளக்

**B) முகமது பின் துக்ளக்**

C) அலாவுதீன் கில்ஜி

D) ஜலாலுதீன் கில்ஜி

**(குறிப்பு - முகமது பின் துக்ளக் மேற்கொண்ட அடுத்த முக்கியமான பரிசோதனை அடையாள நாணயங்களை அறிமுகப்படுத்தியது ஆகும். இந்த நாணய முறை ஏற்கனவே சீனாவிலும், ஈரானிலும் நடைமுறையில் இருந்தது.)**

86) வேளாண்மையை கவனித்துக்கொள்ள திவான்-இ-அமிர்-கோஹி என்ற தனித் துறையை உருவாக்கியவர் யார்?

A) கியாஸ் உத்தின் துக்ளக்

**B) முகமது பின் துக்ளக்**

C) அலாவுதீன் கில்ஜி

D) ஜலாலுதீன் கில்ஜி

**(குறிப்பு - வேளாண்மையை விரிவாக்க முகமது பின் துக்ளக்கின் திட்டம் புதுமையானது என்றாலும் அதுவும் துயரமாக தோற்றது. கால்நடைகளையும் விதைகளையும் வாங்க கிணறு வெட்ட விவசாயிகளுக்கு கடன் தரப்பட்டது என்றாலும் இது பயன் தரவில்லை.)**

87) முகமது பின் துக்ளக் எந்த ஆண்டு மறைந்தார்?

A) 1350 இல்

**B) 1351 இல்**

C) 1352 இல்

D) 1353 இல்

**(குறிப்பு - கிளர்ச்சியாளர்களுடன் சண்டை விடுவதிலேயே முகமது தமது கடைசி நாட்களை கழித்தார். குஜராத்தில் ஒரு கிளர்ச்சி தலைவரை விரட்டி செல்வதில் ஈடுபட்டிருந்த போது உடல் நலம் கெட்டு தனது 26வது ஆட்சி ஆண்டின் முடிவில் முகமது பின் துக்ளக் இறந்தார்)**

88) ஃபெரோஸ் துக்ளக் பற்றிய கீழ்காணும் செய்திகளில் எது தவறானது?

A) இவர் கியாசுதீன் துக்ளக்கின் தம்பி ஆவார்.

B) இவர் ஒரு ஜாட் இளவரசியை மணந்தார்.

C) சுல்தானியத்தின் நான்கு பிரிவுகளில் ஒன்றின் பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டது.

**D) இவர் முகமது பின் துக்ளக்கை வீழ்த்தி பின்னர் ஆட்சி பொறுப்பேற்றார்**

**(குறிப்பு - . கியாசுதீன் துக்ளக் ஆட்சிக்கு வந்தபோது இவரை 12, 000 குதிரை வீரர்களை கொண்ட சிறப்பு படைக்குத் தளபதியாக்கினார். முகமது பின் துக்ளக் தனது வாரிசை அறிவிக்காமலேயே இறந்துவிட்டார். எனவே பெரோஸ் ஷா துக்ளக் ஆட்சியில் அமர்ந்தார்)**

89) ஃபெரோஸ் துக்ளக்கிடம் பணிபுரிந்த இஸ்லாமுக்கு மாறிய பிராமணர் யார்?

**A) கான்-இ-ஜஹன்**

B) கான் அப்துல்லா

C) கான் மஃகான்

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - ஃபெரோஸ் துக்ளக்கிடம் ஓர் உயர் அதிகாரியாக இருந்த புகழ்பெற்ற கான்-இ-ஜஹன் இஸ்லாமுக்கு மாறிய ஒரு பிராமணர் ஆவார். ஆதியில் கண்ணு என்று அறியப்பட்ட அவர் வாரங்கல்லில் நிகழ்ந்த சுல்தானிய படையெடுப்பு ஒன்றின்போது சிறைபிடிக்கப்பட்டவர்)**

90) அடிமைகள் நலனுக்காக ஒரு அரசுத் துறையை உருவாக்கியவர் யார்?

A) கியாசுதீன் துக்ளக்

**B) ஃபெரோஸ் துக்ளக்**

C) அலாவுதீன் கில்ஜி

D) கான்-இ-ஜஹன்

**(குறிப்பு - ஃபெரோஸ் துக்ளக் அவருக்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர் செயல்படுத்திய பல்வேறு சித்திரவதைகளை ஒழித்தார். அடிமைகள் குறித்து இவருக்கு ஒரு மெய்யான அக்கறை இருந்தது எனவே அவர்களது நலன்களை கவனிப்பதற்காக தனியே ஒரு அரசுத் துறையை ஏற்படுத்தினார்.)**

91) போர்கள் வேண்டாம் என்பது கீழ்க்கண்டவர்களில் யாருடைய கொள்கையாகும்?

**A) ஃபெரோஸ் துக்ளக்**

B) கியாசுதீன் துக்ளக்

C) முகமது பின் துக்ளக்

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - ஃபெரோஸ் துக்ளக், போர்கள் எதுவும் தொடுக்கவில்லை. இருப்பினும் கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டுவருவதற்கான அவரது வங்கப் படையெடுப்பு ஒரு விதிவிலக்காகும்)**

92) ஃபெரோஸ் துக்ளக் காலத்திய ஒரே பெரிய ராணுவ படையெடுப்பு எது?

**A) சிந்து படையெடுப்பு**

B) குஜராத் படையெடுப்பு

C) மால்வா படையெடுப்பு

D) தேவகிரி படையெடுப்பு

**(குறிப்பு - ஃபெரோஸ் துக்ளக் போர்கள் எதுவும் தொடுக்கவில்லை. அவரது காலத்தில் இரண்டு மங்கோலிய தாக்குதல்களை நிகழ்ந்தன இரண்டுமே வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன. அவரது காலத்திய ஒரே பெரிய ராணுவப் படையெடுப்பு 1362 இல் சிந்துவின் மீது தொடுக்கப்பட்டதாகும்)**

93) ஃபெரோஸ் துக்ளக் பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - இவர் வைதீக இஸ்லாமை ஆதரித்தார்.

கூற்று 2 - இஸ்லாமியர் அல்லாதவர் ஜிசியா எனும் வரியை விதித்தார்.

கூற்று 3 - புதிய இந்து கோயில் கட்டுவதை இவர் தடை செய்தார்.

**A) கூற்று 1, 2 மட்டும் சரி**

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

**(குறிப்பு -ஃபெரோஸ் துக்ளக் புதிய இந்து கோயில் கட்டுவதை தடை செய்யவில்லை. இவரது பண்பாட்டு ஆர்வம், மதம், மருத்துவம், இசை தொடர்பான பல சமஸ்கிருத நூல்களை மொழிபெயர்ப்பதற்கு வித்திட்டது)**

94) இந்தியாவில் முதன் முறையாக இஸ்லாமியர் அல்லாதவர்கள் மீது ஜிஸ்யா வரியை விதித்தவர் யார்?

**A) குத்புதீன் ஐபக்**

B) பால்பன்

C) அலாவுதீன் கில்ஜி

D) ஃபெரோஸ் துக்ளக்

**(குறிப்பு - ஜெசியா என்பது இஸ்லாமிய அரசுகளால் அவர்கள் நிலத்தில் வாழும் இஸ்லாமியர் அல்லாத குடிமக்களின் தலைக்கு இவ்வளவு என விதித்து வசூலிக்கப்பட்ட ஒரு வரியாகும். இந்தியாவில் முதன்முதலாக இஸ்லாமியர் அல்லாதவர் மீது ஜிஸ்யா வரியை விதைத்தவர் குத்புதீன் ஐபக் ஆவார்)**

95) கடைசி துக்ளக் அரசர் யார்?

A) முகமது பாமன் ஷா

**B) நசுருதின் முகமது ஷா**

C) முகமது ஷா

D) ஆலம் ஷா

**(குறிப்பு - கடைசி துக்ளக் அரசர் நசுருதின் முகமது ஷா என்பவர் ஆவார். இவரது காலம் 1394 முதல் 1412 வரையாகும். இவரது காலத்தில்தான் மத்திய ஆசியாவிலிருந்து தைமூரின் படையெடுப்பு நிகழ்ந்தது)**

96) தைமூர் இந்தியாவின் எந்த நகரத்தை சூறையாடினார்?

**A) டில்லி**

B) பஞ்சாப்

C) குஜராத்

D) தேவகிரி

**(குறிப்பு - தைமூர் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரும் மங்கோலிய அரசர் செங்கிஸ்கான் உடன் ரத்த உறவு இருப்பதாக கூறத்தக்க துருக்கியர் ஆவார்.)**

97) பஞ்சாப் போர் அணிவகுப்புகளில் தன் நலன்களை மேற்பார்வை பார்ப்பதற்கு தைமூர் யாரை நியமித்தார்?

A) அப்சல் கான்

**B) கிஸிர் கான்**

C) மாப் கான்

D) சையது கான்

**(குறிப்பு - பஞ்சாப் போர் அணி வகுப்புகளில் தன் நலன்களை மேற்பார்வை பார்ப்பதற்கு கிசர்கானை தனது துணையாக நியமித்தார் தைமூர். கிசர்கான் தானே சென்று டில்லியை கைப்பற்றி செய்வது வம்ச ஆட்சியை நிறுவினார்)**

98) சையது வம்சத்தில் 1414 முதல் 1451 வரை எத்தனை சுல்தான்கள் ஆட்சி செய்தனர்?

**A) நான்கு**

B) ஐந்து

C) ஆறு

D) ஏழு

**(குறிப்பு - கிஸ்ர்கான் நிறுவிய சையது வம்சத்தில், 1451ஆம் ஆண்டு காலம் வரையில் நான்கு சுல்தான்கள் ஆண்டனர். முற்பட்ட சையது சுல்தான்கள் தைமூரின் மகனுக்கு திறை செலுத்தி ஆட்சி புரிந்தனர்.)**

99) டெல்லி சுல்தானிய ஆட்சியின் ஒட்டுமொத்த வரலாற்றில் ஆட்சி உரிமையை தாமாகவே துறந்த சுல்தான் யார்?

**A) சுல்தான் ஆலம் ஷா**

B) சுல்தான் பகதூர் ஷா

C) சுல்தான் பாமன் ஷா

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - டெல்லி சுல்தானிய ஆட்சியின் ஒட்டுமொத்த வரலாற்றில் ஆட்சி உரிமையை தாமாகவே துறந்து தில்லிக்கு வெளியே ஒரு சிறிய நகருக்குச் சென்று முழுமையாக 30 ஆண்டுகள் மன நிறைவோடும் அமைதியாகவும் வாழ்ந்த ஒரே சுல்தான் சையது வம்சத்தில் வந்த ஆலம் ஷா ஆவார்)**

100) லோடி வம்ச ஆட்சியை நிறுவியவர் யார்?

A) இப்ராஹிம் லோடி

**B) பஹ்லால் லோடி**

C) சிக்கந்தர் லோடி

D) இவர்கள் யாரும் அல்ல.

**(குறிப்பு - லோடி வம்சம் ஆட்சியை நிறுவியவர் பஹ்லால் லோடி ஆவார். 1451ஆம் ஆண்டு லோடி வம்சம் தோன்றியது.)**

101) லோடி வம்ச ஆட்சியில் தலைநகரை தில்லியிலிருந்து ஆக்ராவிற்கு மாற்றியவர் யார்?

A) இப்ராஹிம் லோடி

B) பஹ்லால் லோடி

**C) சிக்கந்தர் லோடி**

D) இவர்கள் யாரும் அல்ல.

**(குறிப்பு - பஹ்லால் லோடியின் ஆட்சியின் போது வங்கத்தில் ஆட்சி புரிந்த ஷார்க்கி அரசு கைப்பற்றப்பட்டது. இவரது மகன் சிக்கந்தர் லோடி 1504ஆம் ஆண்டு தலைநகரை தில்லியிலிருந்து ஆக்ராவிற்கு மாற்றினார்)**

102) லோடி வம்சத்தின் கடைசி ஆட்சியாளர் யார்?

**A) இப்ராஹிம் லோடி**

B) பஹ்லால் லோடி

C) சிக்கந்தர் லோடி

D) இவர்கள் யாரும் அல்ல.

**(குறிப்பு - கடைசி லோடி ஆட்சியாளரான இப்ராஹிம் லோடி, முகலாய வம்ச ஆட்சியை நிறுவிய முதலாம் பானிபட் போரில் பாபரிடம் தோற்றார்)**

103) சுல்தானிய ஆட்சி நிர்வாகம் குறித்து கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - சுல்தானிய அரசு முறையான ஓர் இஸ்லாமிய அரசாக கருதப்பட்டது.

கூற்று 2 - பூமியில் கடவுளின் பிரதிநிதியாக தாம் ஆட்சி செய்வதாக பால்பன் கூறினார்.

கூற்று 3 - மதத்தின் பரிந்துரைகள் குறித்து தாம் கவலைப்படவில்லை என கூறிக்கொண்டு அலாவுதீன் கில்ஜி முழு அதிகாரத்தை கோரினார்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - சுல்தான்கள் பலரும், கலிபாக்களின் தலைமையை அங்கு ஏற்பதாக கூறினாலும் அவர்கள் முழு அதிகாரமுள்ள ஆட்சியாளர்களாக விளங்கினார். ராணுவ தலைவர் என்ற வகையில் ஆயுதம் தாங்கிய படைகளின் தலைமைப்பதவி தளபதி எனும் அதிகாரம் அவர்களிடம் இருந்தது)**

104) சுல்தானிய ஆட்சியின்போது வரி வசூலுக்கு எதிரான ஒரு விவசாய கிளர்ச்சி எங்கு தோன்றியது?

**A) தோவாப்**

B) தேவகிரி

C) ஆக்ரா

D) அஜ்மீர்

**(குறிப்பு - டெல்லி அருகே தோவாபில் 1332ஆம் ஆண்டு சுல்தானிய வழி வசூலுக்கு எதிராக ஒரு விவசாய கிளர்ச்சி தோன்றியது.தொடர்ந்து வந்த பஞ்சமும் தில்லி பகுதியிலும் தோவாப் பகுதிகளிலும் உழவர்களுக்கு கடன் வழங்குவதை அடிப்படையாகக் கொண்ட ஒரு வேளாண் வளர்ச்சித் திட்டத்தை கொண்டு வருமாறு முகமது பின் துக்ளக்கை நிர்ப்பந்தித்தன.)**

105) தங்க நாணயங்கள் சிலவற்றில் பெண் கடவுள் லட்சுமியின் உருவத்தை பொறித்த இஸ்லாமிய அரசர் யார்?

A) முகமது கஜினி

B) முகமது கோரி

**C) முகமது பின் துக்ளக்**

D) அலாவுதீன் கில்ஜி

**(குறிப்பு - இந்தியாவை வென்றடக்கிய முகமது கோரி தமது தங்க நாணயங்கள் சிலவற்றில் பெண் கடவுள் லட்சுமியின் உருவத்தை பொறித்திருக்கிறார்)**

106) முகமது பின் துக்ளக் சமணத் துறவிகளுக்கு அனைத்து அரசு அலுவலர்களும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற ஆணையை எந்த ஆண்டு வெளியிட்டார்?

A) 1320ஆம் ஆண்டு

**B) 1325ஆம் ஆண்டு**

C) 1330ஆம் ஆண்டு

D) 1335ஆம் ஆண்டு

**(குறிப்பு - முகமது பின் துக்ளக் ஹோலி பண்டிகையில் பங்கேடுத்ததோடு யோகிகள் உடன் நல்ல நட்புடன் இருந்திருக்கிறார்.)**

107) தென்னிந்திய பக்தி இயக்கத்தையும், ஓரிறைக் கொள்கையும் வட இந்தியாவிற்குக் கொண்டு சென்றவர்களில் முக்கியமானவர்கள் கீழ்க்கண்டவர்களுள் யார்?

I. நாமதேவர்

II. ராமானுஜர்

III. ராமானந்தர்

**A) I, II மட்டும் சரி**

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - நாமதேவர் மகாராஷ்டிரத்தை சேர்ந்தவர் ஆவார். இவர் உருவ வழிபாட்டையும் சாதிப் பாகுபாடுகளையும் எதிர்த்தார். ஓரிறை கொள்கையை மிகத் தீவிரமாக பின்பற்றினார். இன்னொருவர் ராமானுஜரை பின்பற்றிய ராமானந்தர் ஆவார்.)**

108) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - வணிகக் குழுக்கள் சுல்தான்கள் காலத்தில் இருந்ததற்கு சான்று இல்லை.

கூற்று 2 - பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே செப்புக்காசுகளோடு தங்கம் மற்றும் வெள்ளி காசுகளையும் தில்லி சுல்தான்கள் வெளியிடத் தொடங்கினர்.

கூற்று 3 - டெல்லி சுல்தானியர் காலத்தில் காகிதம் தயாரிக்கும் தொழில்நுட்பம் இந்தியாவில் அறிமுகமானது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - சீனர்கள் கண்டுபிடித்த நூற்பு சக்கரம் பதினான்காம் நூற்றாண்டில் ஈரான் வழியே இந்தியாவுக்கு வந்தது. இது நூற்ப்பவர்களின் உற்பத்தித்திறனை 6 மடங்கு அதிகரிக்க உதவியது.)**

109) வங்கத்தில் பட்டுப்புழு வளர்ப்பு எந்த நூற்றாண்டில் நிறுவப்பட்டது?

A) பதிமூன்றாம் நூற்றாண்டு

B) பதினான்காம் நூற்றாண்டு

**C) பதினைந்தாம் நூற்றாண்டு**

D) பதினாறாம் நூற்றாண்டு

**(குறிப்பு - சீனர்கள் கண்டுபிடித்த நூற்பு சக்கர தொழில்நுட்பம் ஈரான் வழியே இந்தியாவுக்கு வந்தது. இதன் மூலம் நூல் உற்பத்தி பெருகியது போலவே நெசவு வேலையை விரைவுபடுத்த இது உதவியது. பதினைந்தாம் நூற்றாண்டில் வங்கத்தில் பட்டுப்புழு வளர்ப்பு நிறுவப்பட்டது)**

110) டெல்லி சுல்தானிய காலத்தில் இருந்த மதரசா என்பதற்கான சரியான பொருள் எது?

I. இதில் ஒரு பள்ளி ஆசிரியர் குழந்தைகளுக்கு படிக்கவும் எழுதவும் கற்றுத் தந்தார்.

II. உயர்கல்வியில் மேலும் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவம் மதரசா என்பது ஆகும்.

III. பதினோராம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவிலும் ஈரானிலும் இது பரவலாக நிறுவப்பட்டது.

IV. வழக்கமாக மதரஸாவுக்கு ஒரு கட்டடம் இருந்தது. தனி ஆசிரியர்கள் கல்வி கற்பித்தனர்.

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - மதரஸா என்னுமிடத்தில் மாணவர்கள் தங்கி இருக்கவும் நூலகத்திற்கும், தொழுகைக்கும் என சில அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. பெரோஸ் துக்ளக் ஒரு பெரிய மதராசாவை கட்டினார்)**

111) சூஃபிகளிடையே தோன்றிய செல்வாக்குமிக்க இரு பிரிவுகள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. சுஹ்ரவார்தி

II. சிஸ்டி

III. மியோ

**A) I, II மட்டும் சரியானது**

B) II, III மட்டும் சரியானது

C) I, III மட்டும் சரியானது

D) இவை அனைத்தும் சரியானது

**(குறிப்பு - 13 மற்றும் 14 ஆம் நூற்றாண்டுகளின் சூபிகள் மத்தியில் செல்வாக்குமிக்க இரு பிரிவுகள் தோன்றின. முல்தானி மையமாகக் கொண்ட சுஹ்ரவார்தி, தில்லியிலும் பிற இடங்களிலும் கோலோச்சிய சிஸ்டி ஆகியன ஆகும்)**

112) மங்கோலியர்கள் பாக்தாத் நகரை எந்த ஆண்டு கைப்பற்றினர்?

A) 1252 இல்

B) 1254 இல்

C) 1256 இல்

**D) 1258 இல்**

**(குறிப்பு - முகமது நபியின் வாரிசாக கருதப்படும் கலீபாக்கள் ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகத்தின் குடிமை மற்றும் மதம் தொடர்பான விவகாரங்களில் மீது அதிகாரம் செலுத்தி வந்தனர். 1258ஆம் ஆண்டு பாக்தாத் நகரை மங்கோலியர்கள் கைப்பற்றும் வரை கலிபா அந்நகரை ஆட்சி செய்தார்)**

113) கலீபா பதவி எந்த ஆண்டு முதல் ஒழிக்கப்பட்டது?

A) 1910 முதல்

**B) 1920 முதல்**

C) 1930 முதல்

D) 1940 முதல்

**(குறிப்பு - ஆட்டோமானிய பேரரசு நீக்கப்பட்டு(1920) முஸ்தபா கமால் அத்தாதுர்க்கின் தலைமையில் துருக்கிய குடியரசு உருவானபோது இக்கலீபா பதவி ஒழிக்கப்பட்டது)**

114) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. இஸ்லாமிய மரபில் விதவைகள் உடன்கட்டை ஏறும் வழக்கம் அறியப்பட்டிருக்கவில்லை.

II. இஸ்லாமிய மரபில் பெண்கள் படிக்கவும் எழுதவும் கற்பதை இஸ்லாம் தடை செய்யவில்லை.

III. இஸ்லாமிய மரபு பலதார மணத்திற்கு ஏற்பளித்தது.

IV. இஸ்லாமிய மரபில் தங்களின் பெற்றோரிடமிருந்து சொத்துரிமை பெறவும், மணவிலக்கு பெறவும் உரிமை இருந்தது.

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - பர்தா அணிந்து இருந்த போதிலும் சில விஷயங்களில் இஸ்லாமிய பெண்களுக்கு பெரும்பாலான இந்து பெண்களை காட்டிலும் ஒப்பீட்டளவில் சமூகத்தில் உயர்ந்த தகுதியும் அதிக சுதந்திரமும் இருந்தன)**

115) சுல்தானிய காலத்தில் கட்டப்பட்ட முதல் கவிகை எது?

**A) அலாய் தர்வாஸா**

B) குவாத் உல் இஸ்லாம் மசூதி

C) அத்ஹை-தின்-க-ஜோப்ரா

D) இது எதுவும் இல்லை.

**(குறிப்பு - மேற்கு ஆசியாவில் இருந்து கைவினைஞர்கள் வந்து சேர்ந்ததும் வளைவுகளும் கவிகைகளும் துல்லியமும் முழுமையும் அடைந்தன. படிப்படியாக உள்ளூர் கைவினைஞர்களும் இதில் பயிற்சி பெற்றனர். முதல் மெய்யான விளைவால் அலங்கரிக்கப்பட்டது பால்பனின் கல்லறை ஆகும்)**

116) ராக்தர்பன் எனும் இசை நூல் எந்த மொழியைச் சார்ந்ததாகும்?

A) குஜராத்தி

**B) சமஸ்கிருதம்**

C) ஹிந்தி

D) கன்னடம்

**(குறிப்பு - சுல்தானிய அரசர் ஃபெரோஸ் துக்ளக் இசையில் காட்டிய ஆர்வம், ராக்தர்பன் என்ற இந்திய சமஸ்கிருத இசை நூலை பாரசீக மொழிக்கு மொழி பெயர்த்ததன் மூலம் ஒத்திசைவுக்கு இட்டுச் சென்றது.)**

117) 'ஒன்பது வானங்கள் 'என்ற நூலை எழுதியவர் யார்?

**A) அமிர் குஸ்ரு**

B) மீர் அஃப்ரோஸ்

C) ஜலாலுதீன் கில்ஜி

D) நுஸ்ரத் காட்டன்

**(குறிப்பு - பாரசீக உரைநடையிலும் கவிதையிலும் ஒரு முக்கியமான நபராக விளங்குபவர் அமீர் குஸ்ரு ஆவார். அவர் தமது ' ஒன்பது வானங்கள்' என்னும் நூலில் தம்மை ஓர் இந்தியன் என்று அழைத்துக் கொள்வதில் அவர் பெருமிதம் கொள்கிறார்)**

118) பாரசீக உரைநடையின் ஆசானாக கருதப்படுபவர் யார்?

A) நிசாமுதீன் அவுலியா

B) அப்துல் மாலிக் இசுலாமி

**C) ஜியாவுதீன் பரனி**

D) சம்சுதீன் சிராஜ்

**(குறிப்பு - பாரசீக உரைநடையில் ஆசானாக கருதப்படுபவர் ஜியாவுதீன் பரனி என்பவராவார்.ஃபுதூ உஸ் salathin என்ற தனது கவிதைத் தொகுப்பில் அப்துல் மாலிக் இஸ்லாமி கஜனவிய காலம் தொடங்கி முகமது பின் துக்ளக் ஆட்சி வரையிலுமான இஸ்லாமிய ஆட்சியின் வரலாற்றை பதிவு செய்திருக்கிறார்)**

119) காஷ்மீர் அரசர்களின் வரலாற்று நூலான ஜைனவிலாஸ் என்னும் நூலை இயற்றியவர் யார்?

**A) பட்டவதாரா**

B) பக்ருதீன் கவ்வாஸ்

C) ஜியாவுதீன் பரனி

D) அப்துல்மாலிக் இஸ்லாமி

**(குறிப்பு - காஷ்மீர அரசர்களின் வரலாறான ஜைனவிலாஸ் நூலை இயற்றுவதற்கு பட்டவதார, ஷா நாமா எனும் ஃபிர்தௌசியின் நூலை ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொண்டுள்ளார்)**

120) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - சமஸ்கிருத நூல்களை மொழிபெயர்த்ததன் மூலம் பாரசீக இலக்கியம் வளம் அடைந்தது,

கூற்று 2 - பாரசீக சொற்களுக்கு நிகரான ஹிந்தாவி சொற்களைக் கொண்ட அகராதிகள் தொகுக்கப்பட்டன.

கூற்று 3 - மகாபாரதமும், ராஜதரங்கிணியும் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - சமஸ்கிருத இலக்கியத்தில் முன்னேற்றத்தை டெல்லி சுல்தானிய ஆட்சி தடுக்கவில்லை. உயர் அறிவுப்பூர்வ சிந்தனை மொழியாக சமஸ்கிருதம் தொடர்ந்தது. பேரரசின் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த சமஸ்கிருத பள்ளிகளும் கல்வி நிலையங்களும் தொடர்ந்து செழித்தன.)**

# 11th History Lesson 6 Questions in Tamil

## 6] பிற்கால சோழரும் பாண்டியரும்

1) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - பிற்காலச் சோழரின் தோற்றத்திற்கு வேளாண்மை விரிவாக்கமும் ஒரு காரணமாக கருதப்படுகிறது.

கூற்று 2 - இந்த வேளாண் விரிவாக்கம் ஆற்று வடிநிலங்களில் ஏற்பட்டது.

கூற்று 3 - வைகை ஆற்று வடிநிலப் ஆன மதுரை பகுதியில் பாண்டியர் ஆட்சி செய்யத் தொடங்கினர்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - பதினான்காம் நூற்றாண்டு வாக்கில் பாண்டியரின் ஆட்சி வலிமை பெற்றது. சோழர் போலவே பாண்டியர்களும் வேளாண்மை, வணிகம் மூலம் பெரும் வருவாய் ஈட்டினர்)**

2) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - திருநெல்வேலியிலிருந்து மலபார் கடற்கரை பகுதிக்கு தானியங்களும், பருத்தியும், பருத்தித் துணிகளும், காளைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

கூற்று 2- பாண்டியர்கள் மேற்கு, தென்கிழக்கு ஆசியப் பகுதிகளுடன் வணிகத்தொடர்பு மேற்கொண்டனர்.

கூற்று 3 - பாண்டியர்கள் உருவாக்கிய பண்பாட்டு மரபானது குப்த அரசர்கள் செவ்வியல் காலத்தில் உருவாக்கியதாக கருதப்படும் பண்பாட்டுடன் ஒத்துள்ளது.

**A) கூற்று 1, 2 மட்டும் சரி**

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - பாண்டிய மன்னர்கள் மத, பண்பாட்டு, அரசியல் கூறுகளை தொகுத்து உருவாக்கிய பண்பாட்டு மரபானது குப்த அரசர்கள் செவ்வியல் காலத்தில் உருவாக்கியதாக கருதப்படும் ஒற்றை பரிமாண பண்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்)**

3) சங்க காலத்துக்குப் பிறகு கிடைக்கும் ஆவணங்களின்படி சோழர்கள் யாருக்கு கீழ்நிலை ஆட்சியாளராக இருந்துள்ளார்கள் என தெரிகிறது?

**A) பல்லவர்கள்**

B) குப்தர்கள்

C) சாளுக்கியர்கள்

D) களப்பிரர்கள்

**(குறிப்பு - சங்க காலத்துக்கு பிறகு கிடைக்கும் ஆவணங்களின்படி காவிரி பகுதியில் சோழர்கள் பல்லவர்கள் கீழ்நிலை ஆட்சியாளராக இருந்துள்ளார்கள் என தெரிகிறது)**

4) முத்தரையர்களிடம் இருந்து காவிரி ஆற்றின் கழிமுகம் பகுதிகளை வென்றவர் யார்?

**A) விஜயாலய சோழன்**

B) ராஜராஜ சோழன்

C) ராஜேந்திர சோழன்

D) குலோத்துங்க சோழன்

**(குறிப்பு - பொ.ஆ 850 முதல் 871 வரை ஆட்சி செய்து விசயாலய சோழன் முத்தரையர்களிடமிருந்து காவிரி ஆற்றின் கழிமுக பகுதிகளை வென்றார். அவர் தஞ்சாவூரை கட்டமைத்து சோழ அரசை நிறுவினார்.)**

5) சோழ அரசு நிறுவப்பட்ட ஆண்டு எது?

A) பொ.ஆ 850

B) பொ.ஆ 853

C) பொ.ஆ 856

**D) பொ.ஆ 859**

**(குறிப்பு - விஜயாலய சோழன் தஞ்சாவூர் நகரை பக் கட்டமைத்து சோழ அரசை நிறுவினார். எனவே வரலாற்று ஆய்வாளர்கள் இச்சோழர்களை பிற்காலச் சோழர் என்றும் பேரரசு சோழர் என்றும் குறிப்பிடுகின்றனர்)**

6) பொ.ஆ.907 முதல் 955 வரை ஆண்ட சோழ அரசன் யார்?

A) விஜயாலய சோழன்

**B) முதலாம் பராந்தக சோழன்**

C) முதலாம் குலோத்துங்க சோழன்

D) ராஜராஜ சோழன்

**(குறிப்பு - முதலாம் பராந்தக சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன், கரிகால சோழன், போன்றவர்கள் சோழருக்கு பெருமையும் புகழும் சேர்த்தனர். பராந்தகச் சோழன் நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்தினார். ஆட்சி முறையின் அடித்தளத்தையும் விரிவாக்கினார்)**

7) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - சோழர்களின் வரலாற்று ஆவணங்களில் பெரும்பான்மையானவை அரசர்களும் பிறரும் கோயிலுக்கு வழங்கிய கொடை குறித்த தகவல்கள் ஆகவே உள்ளன.

கூற்று 2 - பிற்கால கல்வெட்டுகள் சோழர் சமூக வேறுபாடுகள் குறித்து குறிப்பிடுகின்றன. அவை சமூகத்தில் சாதிகள் மற்றும் துணைசாதிகள் இருந்ததைக் காட்டுகின்றன.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூறுகளும் தவறு

**(குறிப்பு - சோழர்களின் செப்பேடுகளில் அரசர்களின் ஆணைகள் காணப்படுகின்றன. அவற்றிலும் கொடிவழி, போர்கள், வெற்றிகள், நிர்வாக பிரிவுகள், உள்ளாட்சி அமைப்பு, நில உரிமைகள், பல்வேறு வரிகள் குறித்த செய்திகள் உள்ளன.)**

8) யாருடைய ஆட்சி காலத்தில் சைவ வைணவ நூல்கள் தொகுத்து முறை படுத்தப்பட்டன?

**A) சோழர்கள்**

B) சேரர்கள்

C) பாண்டியர்கள்

D) பல்லவர்கள்

**(குறிப்பு - சோழர் ஆட்சியில் இலக்கியங்களும் செழித்தன. சைவ மற்றும் வைணவ நூல்கள் தொகுத்து முறைப்படுத்தப்பட்டன. இது சோழர் காலத்தில் நடந்த முக்கியமான சமய இலக்கிய பணியாகும்)**

9) சோழர்கள் காலத்தில் இயற்றப்பட்ட நூல்களில் தவறானது எது?

A) கம்பராமாயணம்

B) கலிங்கத்துபரணி

C) மூவருலா

**D) தொல்காப்பியம்**

**(குறிப்பு - பெருங்காவியம் நூலான கம்பராமாயணம், இலக்கிய வடிவிலான வரலாற்று நூல்களான கலிங்கத்து பரணி, குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ், மூவருலா ஆகியன சோழர் காலத்தில் இயற்றப்பட்டன)**

10) சோழர்கள் காலத்தில் இயற்றப்பட்ட இலக்கண நூல்களுள் தவறானது எது?

A) நன்னூல்

B) நேமிநாதம்

**C) தொல்காப்பியம்**

D) வீரசோழியம்

**(குறிப்பு - நன்னூல், நேமிநாதம், வீரசோழியம் ஆகியவை காலத்தில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க இலக்கண நூல்கள் ஆகும். பாண்டிக்கோவை, தக்கயாகப்பரணி ஆகியவை பிற இலக்கிய படைப்புகள் ஆகும்.)**

11) கீழ்காணும் கூற்றுகளுள் எது சரியானது?

I. காவிரி ஆற்றின் கழிமுகப் பகுதி சோழ அரசின் மையப் பகுதியாக விளங்கியது.

II. சோழ அரச மரபின் கீழிருந்த ஆட்சிப் பகுதிகள் சோனாடு எனப்படுகிறது.

III. சோழமண்டலம் என்ற சொல் ஐரோப்பியர் நாவில் கோரமண்டல் என திரிபடைந்தது.

IV. தற்போது கோரமண்டல் என்னும் சொல் தென்னிந்தியாவின் கிழக்கு பகுதி முழுவதையும் குறிக்கிறது.

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) II, IV மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - சோழர்கள் தமது படை வலிமையைப் பயன்படுத்தி தற்போதைய புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களையும் தற்போதைய மேற்கு தமிழ்நாட்டில் கொங்கு பகுதியையும் இணைத்து சோழப்பேரரசை விரிவுபடுத்தினார்கள்)**

12) மும்முடிச் சோழமண்டலம் என்று அழைக்கப்பட்ட பகுதி எது?

A) தெற்கு கர்நாடகத்தை சேர்ந்த கங்கைவடி

B) மலைமண்டலம் என்ற கேரளம்

**C) இலங்கையின் வடகிழக்குப் பகுதிகள்**

D) இவை எதுவுமல்ல

**(குறிப்பு - பதினொன்றாம் நூற்றாண்டு வாக்கில் படையெடுப்புகள் மூலம் தொண்டை நாடு, பாண்டிய நாடு, தெற்கு கர்நாடகத்தை சேர்ந்த கங்கை வடி, மலைமண்டலம் என்ற கேரளம் ஆகிய பகுதிகள் வரை விரிவுபடுத்தினார்கள்.)**

13) இந்தியப் பெருங்கடலில் உள்ள மாலத் தீவுகளைக் கைப்பற்றிய சோழ அரசர் யார்?

A) விஜயாலய சோழன்

B) முதலாம் பராந்தகன்

**C) ராஜராஜ சோழன்**

D) ராஜேந்திர சோழன்

**(குறிப்பு - சோழ அரசர்களில் மிகவும் போற்றப்படுபவர் முதலாம் ராஜராஜன் ஆவார். அவரது கடல்கடந்த படையெடுப்புக்கள் மேற்கு கடற்கரை, இலங்கை ஆகியவற்றில் வெற்றியை பெற்று தந்தன. அவர் இந்திய பெருங்கடலில் மாலத் தீவுகளை கைப்பற்றும் இதில் சேரும்.)**

14) ராஜராஜசோழன் கட்டிய ராஜராஜேஸ்வரம் என்ற கோவில் எந்த இடத்தில் அமைந்துள்ளது?

A) கேரளா

B) மாலத்தீவு

**C) இலங்கை**

D) தெற்கு கர்நாடகம்

**(குறிப்பு - இலங்கையில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் நிர்வகிப்பதற்கு ஒரு தமிழ் தளபதியை ராஜராஜசோழன் நியமித்தார். மேலும் இலங்கையில் ஒரு சிவாலயம் கட்டினார். இராஜராஜேஸ்வரம் என்று அழைக்கப்படும் அக்கோவில் இலங்கையின் மகாதிட்டா என்ற பகுதியில் அமைந்துள்ளது)**

15) சோழ அரசின் எல்லையை துங்கபத்திரை ஆறு வரை விரிவுபடுத்தியவர் யார்?

A) ராஜராஜ சோழன்

**B) முதலாம் ராஜேந்திர சோழன்**

C) கரிகால சோழன்

D) முதலாம் குலோத்துங்க சோழன்

**(குறிப்பு - ராஜராஜசோழன் தமது வாரிசாக தன் மகன் முதலாம் ராஜேந்திர சோழனை அறிவித்தார். தந்தையின் படையெடுப்புகளில் பங்கேற்று மேலைச் சாளுக்கியரை தாக்கி சோழ அரசின் எல்லையை துங்கபத்திரை ஆறு வரை முதலாம் ராஜேந்திர சோழன் விரிவுபடுத்தினார்)**

16) முதலாம் ராஜேந்திர சோழன் அரச பொறுப்பை ஏற்ற ஆண்டு எது?

A) 1020இல்

**B) 1023இல்**

C) 1026இல்

D) 1029இல்

**(குறிப்பு - முதலாம் ராஜேந்திர சோழன் 1023 ஆம் ஆண்டில் அரச பொறுப்பை ஏற்றார். அவர் வட இந்தியாவின் மீது மிகத் தீவிரமான ஒரு படையெடுப்பை நிகழ்த்தினார். இதற்காக படைகளை கோதாவரி ஆறு வரை அவரை வழிநடத்திச் சென்றார்)**

17) எந்த சோழ அரசருக்கு கிடைத்த வெற்றியின் நினைவாக கங்கை கொண்ட சோழபுரம் கோவில் கட்டப்பட்டது?

A) ராஜராஜ சோழன்

**B) முதலாம் ராஜேந்திர சோழன்**

C) கரிகால சோழன்

D) இரண்டாம் குலோத்துங்க சோழன்

**(குறிப்பு - கோதாவரி வரை தமது படைகளை முதலாம் ராஜேந்திர சோழன் நடத்திச் சென்றார். அதன் பிறகு தமது தளபதியிடம் ஒப்படைத்தார். ராஜி முதலாம் ராஜேந்திரனுக்கு வட இந்தியாவில் கிடைத்த வெற்றியின் நினைவாக கங்கை கொண்ட சோழபுரம் என்ற கோவில் கட்டப்பட்டது.)**

18) சோழர்கள் காலத்தில் ஸ்ரீவிஜயா என்று அழைக்கப்பட்ட இடம் எது?

**A) தெற்கு சுமத்ரா**

B) கிழக்கு இலங்கை

C) வடக்கு இலங்கை

D) மாலத்தீவு

**(குறிப்பு - சோழர் சோழமண்டல கடற்கரை யோடு மலபார் கடற்கரையையும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். வங்காள விரிகுடா பகுதிகளில் சோழரின் செல்வாக்கு சில பத்தாண்டு காலத்திற்கு நீடித்தது. முதலாம் இராஜேந்திரனின் கடற்படை ஸ்ரீவிஜயா என்று அழைக்கப்படும் தெற்கு சுமத்திராவின் மீது தாக்குதல் தொடுத்தது)**

19) கடாரம் கொண்டான் என்ற பட்டம் எந்த சோழ அரசருக்கு சூட்டப்பட்டது?

**A) முதலாம் ராஜேந்திர சோழன்**

B) இரண்டாம் ராஜேந்திர சோழன்

C) முதலாம் குலோத்துங்க சோழன்

D) கரிகால சோழன்

**(குறிப்பு - குறுநில மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்த கெடா (கடாரம்) முதலாம் ராஜேந்திர சோழனின் படையால் தோற்கடிக்கப்பட்டன. எனவே முதலாம் ராஜேந்திர சோழனுக்கு கடாரம் கொண்டான் என்ற பட்டம் சூட்டப்பட்டது)**

20) சாளுக்கியரின் தலைநகராக விளங்கியது எது?

A) வாரணாசி

**B) கல்யாணி**

C) நாகபந்தா

D) வாதாபி

**(குறிப்பு - மேலைச்சாளுக்கிய அரசின் மீது முதலாம் ராஜேந்திர சோழன் 1009 ஆம் ஆண்டு போர் தொடுத்தார். சாளுக்கியர் தலை நகரான கல்யாணியை தகர்ப்பதற்கு முதலாம் ராஜேந்திரன் தனது மகனை அனுப்பினார்)**

21) முதலாம் ராஜேந்திர சோழனுக்கு வழங்கப்பட்ட பட்டங்களுள் சரியானது எது?

I. முடிகொண்ட சோழன்

II. கங்கைகொண்டான்

III. கடாரம் கொண்டான்

IV. சுங்கம் தவிர்த்த சோழன்

A) I, II மட்டும் சரி

**B) I, II, III மட்டும் சரி**

C) II, II, IV மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - கங்கைகொண்டான், முடிகொண்ட சோழன், கடாரம் கொண்டான், பண்டித சோழன் போன்ற பட்டங்கள் முதலாம் ராஜேந்திர சோழனுக்கு வழங்கப்பட்டவை ஆகும்.)**

22) சாளுக்கியர் தலை நகரான கல்யாணியில் இருந்து கொண்டுவரப்பட்ட துவாரபாலகர் என்றழைக்கப்படும் வாயிற்காப்போன் சிலை தற்போது எங்கு வைக்கப்பட்டுள்ளது?

**A) கும்பகோணம் தாராசுரம் கோவில்**

B) தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில்

C) திருச்சி தாயுமானவர் கோவில்

D) பேரூர் பட்டீஸ்வரர் கோவில்

**(குறிப்பு - சாளுக்கியரின் தலைநகரான கல்யாணியை தகர்ப்பதற்கு ராஜேந்திர சோழன் தனது மகனை அனுப்பினார். ராஜேந்திர சோழனின் மகன் சாலுக்கிய வெற்றிகொண்டு, துவாரபாலகர் என்றழைக்கப்படும் வாயிற்காப்போன் சிலையை கைப்பற்றினார்,. அது தற்போது கும்பகோணத்தில் உள்ள தாராசுரம் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது)**

23) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - சோழ அரசு மரபுவழிப்பட்ட முடியாட்சியை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

கூற்று 2 - சோழர் காலத்தில் மன்னர்கள் பெருமகன், உலகுடைய பெருமாள், உலகு உடைய நாயனார் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

கூற்று 3 - சோழ அரசர்கள் அரசராக பட்டம் சூட்டும் விழாவின்போது அவரது பெயருக்கு பின் தேவன் என்ற சொல்லை பின்னொட்டமாக சேர்க்கும் நடைமுறை இருந்தது

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - பிற்கால சோழர்கள் பேரரசர் என்ன பொருள் தரும் சக்கரவர்த்தி, மூன்று உலகங்களுக்கும் பேரரசர் என்ற பொருளைத் தரும் திரிபுவன சக்கரவர்த்தி என்ற பட்டங்களை சூடிக்கொண்டனர்.**

**அரசர்கள் தங்களை கடவுளின் நண்பன்( தம்பிரான் தோழன்) என்று உரிமை கோரி தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்தினர்)**

24) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - சோழ அரசர்கள் தங்கள் ஆன்மீக வழிகாட்டி அல்லது ராஜகுருவாக பிராமணர்களை நியமித்தார்கள்.

கூற்று 2 - முதலாம் இராஜராஜனும் முதலாம் இராஜேந்திர சோழனும் தங்களுடைய ராஜ குழுக்களாக உரையே ஈசான சிவன் மற்றும் சர்வ சிவன் ஆகியோரை கல்வெட்டு குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளனர்.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - சோழ அரசர்கள் தங்கள் சமூக மதிப்பையும் அதிகாரத்தையும் உயர்த்திக் கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவே பிராமணர்களை ஆதரித்தனர் அதன் பொருட்டு பிராமணர்களுக்கு பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் பெரும் நிலப் பரப்புகளை இறையிலியாக அளித்தனர்)**

25) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. முதலாம் ராஜராஜன் அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிகளை எல்லாம் மண்டலங்களாக ஒன்றிணைத்து ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு ஆளுநரை நியமித்தார்.

II. இளங்கோ வேளிர், இருக்குவேளிர், மழவர்கள், பானர்கள் போன்ற சிற்றரசர்கள் ஆட்சி செய்த முக்கியத்துவம் குறைந்த பகுதிகளும் பின்னர் சூலமென் அரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன.

III. பாண்டியநாட்டில் சோழபாண்டியர், இலங்கையில் சோலை இலங்கேஸ்வரர், தெற்கு கருநாடகத்தின் வெங்கைவடி பகுதியில் சோழகங்கர் என ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - சோழர் காலத்தில் சிற்றரசர்கள் மற்றும் திறை செலுத்துபவர்கள் என்று வரலாற்று ஆசிரியர்களால் விளக்கம் அளிக்கப்படும் சிற்றரசர்கள் அல்லது குறுநில மன்னர்கள் போருக்கு பின்னர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிகள் சோழ அரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன)**

26) சோழப் பேரரசில் இருந்த படைகளின் பிரிவுகள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. காலாட்படை

II. குதிரைப்படை

III. யானைப்படை

IV. வில் வீரர்கள், வாள் வீரர்கள்

IV. தற்கொலைப்படை

A) I, II, III மட்டும் சரி

**B) I, II, III, IV மட்டும் சரி**

C) II, III, IV மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - சோழர்களின் படைப்பிரிவில் காலாட்படை, குதிரைப்படை( குதிரைச் சேவகர்), யானைப்படை(ஆனையாட்கள்), வில் வீரர்கள்( வில்லாளிகள்), வாள்வீரர்கள்(வாளிளர்), ஈட்டி வீரர்கள்(கொண்டுவார்) ஆகியோர் இருந்தனர்)**

27) சோழர்கால படைப்பிரிவின் தலைவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

I. நாயகம்

II. படைமுதலி

III.சேனாபதி

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - சோழர் படையில் படைவீரர்களுக்கு படைபற்று என்ற உரிமை வழங்கப்பட்டிருந்தது. புதிதாக சேர்க்கப்படும் பகுதிகளில் அமைக்கப்பட்ட புறக்காவல் படைகள் நிலைபடைகள் என அழைக்கப்பட்டன.)**

28) சோழர்கால படைத்தளபதி எவ்வாறு அழைக்கப்பட்டார்?

I. சேனாபதி

II. நாயகம்

III. தண்ட நாயகம்

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

**C) I, III மட்டும் சரி**

D) எல்லாமே சரி

**(குறிப்பு - சோழர்கால படைத்தளபதிகள் சேனாபதி என்றும் தண்டநாயகன் என்றும் அழைக்கப்பட்டனர். சோழர்களிடம் அறுபது ஆயிரம் போர் யானைகள் இருந்தன அவற்றின் முதுகில் வீடு போன்ற அமைப்பு இருக்கும் அதில் வீரர்கள் நிறைந்து இருப்பார்கள் என பதிமூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சீன புவியியலாளர் கூறும் சான்று விளக்குகிறது)**

29) சோழர் காலத்தில் இருந்த உள்ளாட்சி குழுக்கள் எது?

I. ஊரார்

II. சபையார்

III. நகரத்தார்

IV. நாட்டவர்

A) I, II, III மட்டும் சரி

B) II, III, IV மட்டும் சரி

C) I, II, IV மட்டும் சரி

D) எல்லாமே சரி

(குறிப்பு - சோழர் காலத்தில் பல்வேறு உள்ளாட்சி குழுக்கள் சிறப்பாக இயங்கி உள்ளன. அவை ஊரார், சபையார், நகரத்தார், நாட்டார் ஆகியன ஆகும். இவை ஒப்பீட்டளவில் தன்னாட்சி உரிமை கொண்டவையாக இயங்கின)

30) ஊரார் என்பவர்களின் கடமையாவன எது?

I. கோவில்களின் நிர்வாகத்தையும் குளங்களின் பராமரிப்பு மேற்கொள்ளுதல்.

II. வரி வசூலித்தல்

III. சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல்.

A) I, II மட்டும்

B) I மட்டும்

C) II, III மட்டும்

**D) இவை அனைத்தும்**

**(குறிப்பு - வேளாண்மை விரிவாக்கத்தை தொடர்ந்து கிராமப்புறங்களில் வேளாண் குடியிருப்புகள் அதிக அளவில் தோன்றின. அவை ஊர் என்று அழைக்கப்பட்டன. அந்த ஊர்களில் நிலவுடைமையாளர்கள் ஊரின் பிரதிநிதிகளாக செயல்பட்டார்கள். அவர்கள் ஊரார் என்று அழைக்கப்பட்டார்கள்)**

31) சோழர்கால உள்ளாட்சி அமைப்பான சபையார் குறித்த கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. கோவில்கள், அவற்றின் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பது சபையாரின் பணியாகும்.

II. பிரம்மதேய குடியிருப்புகளை பராமரிப்பது சபையாரின் பணியாகும்.

III. கோவில் நிலங்கள் உடன் இணைக்கப்பட்டிருந்த பாசன குளங்கள் இன் பராமரிப்புக்கு சபை பொறுப்பாக இருந்தது.

A) I, II மட்டும் சரி

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - ஊர் என்பது நிலவுடைமை சார்ந்தோரின் குடியிருப்பு. பிரம்மதேயம் என்பது பிராமணர்களின் குடியிருப்பு ஆகும். நிர்வாகம், நீதி மற்றும் நிதி ஆகிய துறைகள் சார்ந்த பணிகளையும் சபையார் மேற்கொண்டது)**

32) சுங்கம் தவிர்த்த சோழன் என்று அழைக்கப்படும் சோழ அரசர் யார்?

A) முதலாம் ராஜேந்திர சோழன்

B) முதலாம் பராந்தக சோழன்

C) கரிகால சோழன்

**D) குலோத்துங்க சோழன்**

**(குறிப்பு - சோழர் காலத்தில் உள்ளூர் பொருள்கள் நகரங்களில் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டன. பட்டு, பீங்கான், கிராம்பு, சந்தனக்கட்டை போன்றவை இவ்வாறு பரிமாற்றம் செய்யப்பட்டதாக சீன வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இவ்வாறு பரிமாற்றம் செய்வதற்கான வரியை ரத்து காரணத்தினால் குலோத்துங்க சோழன் சுங்கம் தவிர்த்த சோழன் என அழைக்கப்பட்டார்)**

33) சோழர்கால ஆட்சி முறையில் மரபுவழி நில உரிமைகள் பெற்றிருந்த உள்ளாட்சி அமைப்பினர் யார்?

A) ஊரார்

B) சபையார்

C) நகரத்தார்

**D) நாட்டார்**

**(குறிப்பு - பிரம்மதேயங்கள் நீங்களாக பல ஊர்களின் தொகுப்பு நாடு எனப்பட்டது. கால்வாய்கள், குளங்கள் போன்ற பாசன ஆதாரங்களை சுற்றி இவை உருவாக்கப்பட்டிருந்தன. நிலம் வைத்திருந்தவர்களின் மன்றம் நாட்டார் எனப்பட்டது. போலரோ அரச கட்டமைப்பின் அடிப்படை உறுப்புகளாக நாட்டார் செயல்பட்டனர்)**

34) சோழர் கால ஆட்சி முறையில் நாட்டார்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்களுள் சரியானவை எது?

I. ஆசுடையான்

II. கிழவன்.

III. அரையன்

IV. நாட்டு வையவன்

**A) I, II, III மட்டும் சரி**

B) I, III, IV மட்டும் சரி

C) II, III, IV மட்டும் சரி

D) இவை எல்லாமே சரி

**(குறிப்பு - நாடார்களுக்கு மரபுவழி நில உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. அவர்களுக்கு மரியாதை செலுத்தும் நோக்கில் ஆசுடையான் ( நில உரிமையாளர்), அரையன்( வழிநடத்துவோர்), கிழவன்(தலைவன்) போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டன. நாட்டுக் கணக்கு, நாட்டு வையவன் எனும் பணியாளர்கள் நாட்டாரின் நிர்வாக பணிகளை ஆவணப்படுத்தினர்)**

35) சோழர்களின் உள்ளாட்சி தேர்தல் பற்றிய உத்திரமேரூர் கல்வெட்டுகளின்படி ஒரு கிராமம் எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது?

**A) 30**

B) 40

C) 50

D) 60

**(குறிப்பு - ஒரு கிராமம் 30 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு உறுப்பினரை தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்வானவர்கள் அனைவரும் சேர்ந்து வெவ்வேறு குழுக்களை உருவாக்குவார்கள்)**

36) சோழர்காலக் உள்ளாட்சி தேர்தலில் உறுப்பினராக தேவையான தகுதி பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு கூறுவனவற்றுள் எது சரியானது?

I. ஆண்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும்,

II. 35 வயதுக்கு மேலும் 25 வயதுக்கு கீழும் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

III. சொத்தும், சொந்த வீடும் உடையவராக இருக்க வேண்டும்.

IV. வேதங்களிலும், பாஷ்யங்களிலும் தேர்ந்தவராக இருக்க வேண்டும்

A) I, II மட்டும் சரி

B) I, II, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

**D) இவை எல்லாமே சரி**

**(குறிப்பு - 30 பிரிவுகளில், ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு உறுப்பினரை தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்வானவர்கள் அனைவரும் சேர்ந்து வெவ்வேறு குழுக்களை உருவாக்குவார்கள். அவை**

**பொதுப்பணி குழு, குளங்களுக்கான குழு, தோட்டங்களுக்கான குழு, பஞ்ச நிவாரண குழு போன்றவை ஆகும்)**

37) சோழர்கால ஆட்சி முறையில் நில வருவாய் நிர்வாகத்தை கவனிக்கும் துறையாக செயல்பட்டது எது?

A) நில வருவாய் துறை

**B) புறவழிதிணைக்களம் துறை**

C) நிலவரித் திணை துறை

D) நில மற்றும் நிதித்துறை

**(குறிப்பு - சோழர் கால ஆட்சியில் வேளாண்மையில் கிடைத்த கூடுதல் வருவாய் நிலவரியாக சோழ அரசுக்கு வலுவூட்டியது. நில வருவாய் நிர்வாகத்திற்கு என 'புறவரிதிணைக்களம்' பெயரில் ஒரு துறை இயங்கியது. அதன் தலைவராக 'புறவரி திணைக்கள நாயகம் 'செயல்பட்டார்)**

38) நிலங்களை வகைப்படுத்தி அளவீடு செய்து அதற்கேற்றவாறு வரிகளை விதித்த சோழ அரசர் யார்?

A) ராஜராஜ சோழன்

B) முதலாம் குலோத்துங்க சோழன்

C) மூன்றாம் குலோத்துங்க சோழன்

**D) இவர்கள் அனைவரும்**

**(குறிப்பு - வரிகளை மதிப்பிடுவதற்காக சோழர் விரிவான முறையில் நில அளவை செய்வதிலும், தீர்வை விதிப்பதிலும் ஈடுபட்டார்கள். முதலாம் ராஜராஜன், முதலாம் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய சோழ அரசர்கள் நிலங்களை வகைப்படுத்தி அளவீடு செய்து அதற்கேற்றவாறு வரிகளை விதித்தனர்.)**

39) சோழர்கள் நில அளவீடு செய்ய பயன்படுத்திய அலகுகள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. குழி, மா

II. வெளி, பட்டி

III. பாடகம்

IV. சதுரம்

A) I, II மட்டும்

**B) I, II, III மட்டும்**

C) II, III, IV மட்டும்

D) இவை அனைத்தும்

**(குறிப்பு - நில அளவீடு பணியில் ஈடுபட்டவர்கள் நாடு வகை செய்கிற என்று குறிப்பிட்டார்கள். இவர் நிலவுடைமை சமூகத்தை சேர்ந்தவர்களே ஆவர். நில அளவீடு செய்ய மா, குழி, வெளி, பட்டி, பாடகம் முதலிய அலகுகள் பயன்படுத்தப்பட்டன.)**

40) சோழர் கால நிலை வருவாய் குறித்த கீழ்காணும் கூற்றுகள் எது சரியானது?

I. நிலத்தின் வளம், நில உடைமையாளர்களின் சமூக மதிப்பு ஆகியவற்றைப் பொருத்து வழி நிர்ணயிக்கப்பட்டது.

II. அரசரும் உள்ளூர் தலைவர்களும் ஒப்படி என்ற வரியை வசூலித்தனர்.

III. பிராமணர்களுக்கும், கோவில்களுக்கும் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை.

**A) I, II மட்டும் சரியானது**

B) II, III மட்டும் சரியானது

C) I, III மட்டும் சரியானது

D) எல்லாமே சரியானது

**(குறிப்பு - கோவில்களுக்கும் பிராமணர்களுக்கும் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. விளைபொருளாக செலுத்தப்பட்ட வரி இறை கட்டின நெல்லு எனப்பட்டது. இவ்வரிகள் அனைத்தும் பெரும்பாலும் காவிரி சமவெளி பகுதிகளில் தான் நடைமுறையில் இருந்தன)**

41) சோழர் கால அளவீடு முறையில் ஒரு களம் என்பது எவ்வளவு?

A) 20 கிலோ ஆகும்

B) 24 கிலோ ஆகும்

**C) 28 கிலோ ஆகும்**

D) 32 கிலோ ஆகும்

**(குறிப்பு - வரியாக வசூலிக்கப்பட்ட நெல் 'களம்' என்ற அலகின் அடிப்படையில் வசூலிக்கப்பட்டது. ஒரு களம் என்பது 28கிலோ ஆகும். முதலாம் ராஜராஜன் வரிவசூல் முறைப்படுத்தினார். ஒரு வேலி நிலத்திற்கு(6.5 ஏக்கர்) 100 களம் வரியாக வசூலிக்கப்பட்டது.)**

42) சோழர்கால பாசன முறையில் வாய்க்கால் என்பது கீழ்க்கண்டவற்றுள் எதனைக் குறிக்கிறது?

A) வடக்கு தெற்காக ஓடும் நீர்

**B) கிழக்கு மேற்காக ஓடும் நீர்**

C) கிழக்கு தெற்காக ஓடும் நீர்

D) வடக்கு வட மேற்காக ஓடும் நீர்

**(குறிப்பு - சோழர்கால பாசன முறைகளில் வடி, வாய்க்கால் என்ற குறுக்கு மறுக்கு கால்வாய்கள் மழைநீரை சேமித்து வைப்பதற்கு காவிரி வடிநில பகுதிகள் பயன்பட்ட மரபு வழி முறை ஆகும். படி என்பது நீர் வடக்கு தெற்காக ஓடுவதாகும். வாய்க்கால் என்பது கிழக்கு மேற்காக ஓடும் நீராகும்)**

43) ராஜேந்திர சோழன் எதனை ஜலமய ஜெயஸ்தம்பம் எனக் குறிப்பிடுகிறார்?

**A) வெள்ளத்தைத் தடுக்கும் கட்டுமானம்**

B) போரில் வெற்றி பெற்றதற்காக வைக்கப்பட்ட நினைவு தூண்

C) மிகப்பெரிய கப்பல் கட்டுமானம்

D) இவை எதுவுமல்ல

**(குறிப்பு - கங்கைகொண்ட சோழபுரத்தில் ராஜேந்திர சோழன் மேற்கொண்ட பாசனப்பணி குறிப்பிடத்தக்கது. அங்கு உள்ள ஏரியில் வெள்ளம் ஏற்படுவதை தடுக்கும் நோக்கத்துடன் 16 மைல்கள் நீளமுள்ள ஒரு உறுதியான கட்டுமானத்தை அவர் எழுப்பியுள்ளார். அது ' ஜலமைய ஜயஸ்தம்பம்' எனக் குறிப்பிடுகிறார். அதற்கு 'நீரில் கிடைத்த வெற்றியின் நினைவாக எழுப்பிய தூண்' என்று பொருளாகும்)**

44) கீழ்க்கண்ட ஏரிகளுள் சோழர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏரி எது?

A) வைரமேக தடாகம்

B) பாகூர் பெரிய ஏரி

**C) கலியனேரி**

D) ராஜேந்திரசோழ பேரேரி

**(குறிப்பு - சோழர் கல்வெட்டுகள் சில பெரிய பாசன ஏரிகளை குறிப்பிடுகின்றன. சோழ வாரிதி, கலியனேரி போன்றவை சோழர்களால் உருவாக்கப்பட்டவை. பல்லவர்கள் வைரமேகதடாகம், பாகூர் பெரிய ஏரி, ராஜேந்திர சோழ பேரேரி போன்றவைகளை உருவாக்கினார்கள்)**

45) சோழர் காலத்தில் கிராம சபைகள் பாசனக் குளங்களை பழுதுபார்க்க வசூலித்த வரியின் பெயர் என்ன?

A) குள ஆயம்

**B) ஏரி ஆயம்**

C) நீர் ஆயம்

D) இது எதுவும் இல்லை

**(குறிப்பு - ஊருக்குப் பொதுவான குளம் 'எங்கள் குலம்' என்று அழைக்கப்பட்டது. நன்கொடை யாகவும் மானியமாகவும் நடைபெற்ற நில பரிமாற்றங்களில் நீர் மீதான உரிமைகளும் இணைக்கப்பட்டிருந்தன. சோழர் காலத்தில் கிராம சபைகள் பாசன குளங்களை பழுதுபார்க்க ஏரிஆயம் என்ற வரி வசூலிக்கப்பட்டது)**

46) சிவபாதசேகரன் எனும் பட்டம் எந்த சோழ அரசருக்கு வழங்கப்பட்டது?

**A) ராஜராஜ சோழன்**

B) ராஜேந்திர சோழன்

C) குலோத்துங்க சோழன்

D) முதலாம் பராந்தக சோழன்

**(குறிப்பு - தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் உள்ள ஒரு சுவர் ஓவியத்தில் முதலாம் இராஜராஜனும் அவருடைய மனைவியும் சிவனை வணங்குவதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. சிவபாதசேகரன் என்பது**

**அவருக்குரிய பட்டங்களில் ஒன்று. இதனுடைய பாதங்களை இறுகப் பற்றியவன் என்பது இதற்குப் பொருள்)**

47) சிவஞானபோதம் என்ற நூலை இயற்றியவர் யார்?

A) திருமூலர்

B) திருஞானசம்பந்தர்

C) நக்கீரர்

**D) மெய்கண்டர்**

**(குறிப்பு - சோழர் காலத்தில் முதன்மைக் கடவுளான சிவன் இரு வடிவங்களில் வணங்கப்பட்டார். இக்காலகட்டத்தில் மிகவும் மேம்பட்ட தத்துவமாக சைவ சித்தாந்தம் உருவானது. இத்தத்துவத்தின் அடிப்படை நூலான சிவஞான போதம் மெய்கண்டரால் இயற்றப்பட்டது)**

48) சைவ சமய நூல்களை மீட்டெடுத்து திருமுறை என்ற பெயரில் தொகுத்து வரிசைபடுத்தியவர் யார்?

A) திருஞானசம்பந்தர்

B) அப்பர்

**C) நம்பியாண்டார் நம்பி**

D) மாணிக்கவாசகர்

**(குறிப்பு - நம்பியாண்டார் நம்பி சைவ சமய நூல்களை மீட்டெடுத்து திருமுறை என்ற பெயரில் தொகுத்து வரிசைபடுத்தினார். சோழர் காலத்தில் கோவில்களில் தினமும் திருமுறைகளை ஓதுவதற்கு ஓதுவார், பதிகம் பாடுவோர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டனர்)**

49) வைணவ சமயத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட சோழ அரசர் யார்?

A) இரண்டாம் ராஜேந்திரச் சோழன்

**B) இரண்டாம் குலோத்துங்க சோழன்**

C) கரிகால சோழன்

D) முதலாம் ராஜசேகர சோழன்

**(குறிப்பு - காலப் போக்கில் சைவம் மீதான சோழ அரசர்களின் பக்தி மிகையான ஆர்வமாக மாறியது. இரண்டாம் குலோத்துங்கனிடம் இத்தகைய தன்மையை காணமுடியும். அரச சமயமான சைவத்துக்கும் வைணவத்துக்கும் இடையே நடந்து வந்த சமய மோதல்களில் வைணவம் ஒதுக்கப்பட்டது.)**

50) வைணவத் திருத்தொண்டரான ஸ்ரீ ராமானுஜர் சோழ நாட்டை விட்டு எங்கு குடியேறினார்?

A) கேரளம்

**B) கர்நாடகம்**

C) ஆந்திரப்பிரதேசம்

D) இது எதுவும் இல்லை

**(குறிப்பு - பிற்காலத்தில் சோழ அரச சமயமான சைவத்திற்கும் வைணவத்திற்கும் இடையே நடந்து வந்த சமய மோதல்களில் வைணவம் ஒதுக்கப்பட்டது. இவை வைணவத் திருத்தொண்டரான ஸ்ரீராமானுஜர் சோழ நாட்டை விட்டு வெளியேறி கர்நாடகத்திலுள்ள மேல்கோட்டைக்கு சென்ற நிகழ்வுக்கும் இட்டுச் சென்றது)**

51) கீழ்க்கண்டவற்றுள் சரியான இணை எது?

A) கோயிரமர் - கோவில் கணக்காளர்

B) தேவகன்னி - கடவுளின் பிரதிநிதி

C) ஸ்ரீ வைஷ்ணவர் கண்டேசர் - கோயில் மேலாளர்

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - சோழர் காலத்தில் கோயில்கள் சமூகத்தில் விழாக்களுக்கான ஒரு களமாக மாறி சமூக நிறுவனங்களாக இயங்கின. சமூகம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு நடவடிக்கைகளுக்கான மையங்களாக கோவில்கள் விளங்கின.)**

52) தஞ்சை பெருவுடையார் கோவிலின் கருவறை மீது அமைக்கப்பட்டுள்ள விமானத்தின் எடை என்ன?

**A) 80 டன்கள்**

B) 82 டன்கள்

C) 84 டன்கள்

D) 86 டன்கள்

**(குறிப்பு - பிரகதீஸ்வரர் கோவில் என்று அழைக்கப்படும் தஞ்சை பெரிய கோவில் கட்டடக்கலை, ஓவியம், சிற்பம், சிலை வடித்தல் ஆகிய கலைகளுக்கு தன்னிகரற்ற எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ராஜராஜனின் ஆட்சி அதிகாரத்துக்கு இக்கோயில் அழுத்தமான சட்ட அங்கீகாரமாக உள்ளது)**

53) தாராசுரம் கோவில் யாரால் கட்டப்பட்டது?

A) முதலாம் ராஜராஜ சோழன்

B) முதலாம் ராஜேந்திர சோழன்

**C) இரண்டாம் ராஜராஜ சோழன்**

D) இரண்டாம் ராஜேந்திர சோழன்

**(குறிப்பு - இரண்டாம் ராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தாராசுரம் கோவில் சோழர்கால கட்டுமான கலைக்கு மற்றொரு சிறந்த உதாரணம் ஆகும். இக்கோவிலில் கருவறை சுவரில் தளத்தில் பெரிய புராண நிகழ்வுகள் குறுஞ்சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன)**

54) சோழர் காலத்து வணிக முறையில் அஞ்சுவண்ணத்தார் யாரை குறித்தது?

I. யூதர்கள்.

II. கிறிஸ்தவர்கள்

III. இஸ்லாமியர்கள்

IV. மேற்கு ஆசியர்கள்

A) I, II மட்டும்

B) I, II, III மட்டும்

C) I, III, IV மட்டும்

**D) இவர்கள் அனைவரையும்**

**(குறிப்பு - சோழர் காலத்தில் வேளாண் உற்பத்தி அதிகரிப்புடன் கைவினைத் தொழில்கள் நடவடிக்கைகளாலும் உற்பத்தி பொருள் அதிகரித்து பண்டமாற்று முறை வணிக வளர்ச்சிக்கு இட்டுச் சென்றது)**

55) சோழர் காலத்தில் ஐந்நூற்றுவர், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், வளஞ்சியர் போன்ற வணிகக் குழுக்களின் தலைமை வணிகக்குழு எந்த இடத்தில் இயங்கியது?

**A) கர்நாடகம்**

B) ஆந்திர பிரதேசம்.

C) கேரளம்

D) ஒடிசா

**(குறிப்பு - சோழர் காலத்தின் வணிக குழுக்கள் அஞ்சுவண்ணத்தார் மற்றும் மணிக்கிராமத்தார் ஆகிய இரு வணிக குழுக்கள் இருந்ததை அறிய முடிகின்றது. பின்னர் இந்த இருகுழுவும் ஒன்றாகி ஐநூற்றுவர், வளஞ்சியர் போன்ற பெயர்களுடன் இயங்கின. இவர்களது தலைமை வணிகக்குழு கர்நாடகத்தில் உள்ள ஐஹோல் என்ற இடத்தில் இயங்கியது)**

56) சோழர் காலத்து கடல் வணிகக் குழுக்களின் மையங்களாக விளங்கிய இடங்களில் தவறானது எது?

A) மயிலாப்பூர்

B) திருவொற்றியூர்

C) விசாகப்பட்டினம்

**D) கன்னியாகுமரி**

**(குறிப்பு - முனை சந்தை(புதுக்கோட்டை), மயிலாப்பூர், திருவொற்றியூர், நாகப்பட்டினம், விசாகப்பட்டினம், கிருஷ்ணபட்டினம் போன்ற இடங்கள் கடல் வணிக குழுக்களின் மையங்களாக மாறின. உள்நாட்டு வணிகம் விலங்குகள், படகுகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டன)**

57) வளஞ்சியர் வெட்டிய ஐந்நூற்றுவப்பேரேரி என்ற பாசன ஏரி எங்கு அமைந்துள்ளது?

**A) புதுக்கோட்டை**

B) தஞ்சாவூர்

C) அரியலூர்

D) திருச்சிராப்பள்ளி

**(குறிப்பு - சோழர் காலத்தில் பாசன நடவடிக்கைகளில் வணிகர்களும் ஆர்வம் கொண்டனர். வளஞ்சியர் குழு வெட்டிய ஐநூற்றுவப்பேரேரி என்ற பாசன ஏரி புதுக்கோட்டையில் அமைந்துள்ளது)**

58) சம்புவராயர்கள் சூடிக்கொண்ட பட்டங்கள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. சகலலோக சக்கரவர்த்தி

II. மண்கொண்ட சம்புவராயன்

III. ராஜநாராயணன் சம்புவராயன்

A) I, II மட்டும் சரி

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - சம்புவராயர்கள் ராஜாதி ராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய சோழ அரசர்களின் ஆட்சிக் காலத்தில் வட ஆற்காடு மற்றும் செங்கல்பட்டு பகுதிகளில் வலிமை படைத்த குறுநில மன்னர்களாக விளங்கினர். தாங்கள் சார்ந்திருந்த பேரரசுகளுக்கு ஆதரவாக போர்களில் ஈடுபட்டனர். சில சமயம் தங்களுக்குள்ளும் போரிட்டுக் கொண்டனர்)**

59) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - முதலாம் ராஜேந்திரன் தென் ஆற்காடு பகுதியில் உள்ள எண்ணாயிரத்தில் வேத கல்லூரி ஒன்றை நிறுவினார்..

கூற்று 2 - 1048ஆம் ஆண்டு புதுச்சேரிக்கு அருகிலுள்ள திருபுவனியில் ஒரு வேத கல்லூரி நிறுவப்பட்டது.

கூற்று 3 - 1065ஆம் ஆண்டு செங்கல்பட்டுக்கு அருகில் உள்ள திருமுக்கூடல் என்னும் இடத்தில் ஒரு வேத கல்லூரி அமைந்தன.

**A) கூற்று 1, 2 மட்டும் சரி**

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

**(குறிப்பு - 1061ஆம் ஆண்டு சோழர்களால் செங்கல்பட்டுக்கு அருகில் உள்ள திருமுக்கூடல் என்னும் இடத்தில் ஒரு வேத கல்லூரி நிறுவப்பட்டது. இதுபோன்ற சமஸ்கிருதக் கல்வி மையங்களில் வேதங்கள், சமஸ்கிருத இலக்கணம், சமயம், தத்துவம் போன்றவை கற்றுத்தரப்பட்டன.)**

60) சோழர்களின் தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்தை பாண்டிய மன்னன் முதலாம் ஜடாவர்மன் எந்த ஆண்டு கைப்பற்றினார்?

A) 1260 இல்

B) 1262 இல்

**C) 1264 இல்**

D) 1266 இல்

**(குறிப்பு - அடிக்கடி நிகழ்ந்த பாண்டியர்களின் தொடர் படையெடுப்புகளால் ஒரு காலத்தில் வலிமை பெற்று விளங்கிய சோழ அரசு தன்னை விட வலிமையில் குறைந்த ஹொய்சாள அரசை சார்ந்து இருக்கும் அளவிற்கு வலுவிழந்தது.)**

61) கடைசி சோழ அரசர் யார்?

A) இரண்டாம் குலோத்துங்க சோழன்

B) மூன்றாம் ராஜசேகர சோழன்

**C) மூன்றாம் ராஜேந்திர சோழன்**

D) குலசேகர சோழன்

**(குறிப்பு - 1279 ஆம் ஆண்டு முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் கடைசி சோழ அரசரான மூன்றாம் ராஜேந்திர சோழனை தோற்கடித்தார். இத்துடன் சோழரின் ஆட்சி முடிவுக்கு வந்து பாண்டியரின் ஆட்சி தொடங்கியது)**

62) கீழ்காணும் எந்த பாடல்களில் கூடல் என்பது பாண்டியர்களின் தலைநகரம் என குறிப்பிடப்பட்டுள்ளது?

I. பட்டினப்பாலை.

II. மதுரைக்காஞ்சி.

III. மணிமேகலை

**A) I, II இல் மட்டும்**

B) I, III இல் மட்டும்

C) II, III இல் மட்டும்

D) இவை அனைத்திலும்

**(குறிப்பு - பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலிமான்கோம்பை என்ற கிராமத்தில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் கூடல் என்ற சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டினப்பாலை மற்றும் மதுரைக்காஞ்சி ஆகிய நூல்களில் கூடல் பாண்டியர் தலைநகரமாக குறிப்பிடப்பட்டுள்ளது)**

63) மணிமேகலை என்னும் நூலை இயற்றிய சீத்தலைச் சாத்தனார் எந்த ஊரை சார்ந்தவர் ஆவார்?

**A) மதுரை**

B) திருச்சிராப்பள்ளி

C) புதுக்கோட்டை

D) திருநெல்வேலி

**(குறிப்பு - மணிமேகலையை இயற்றிய சீத்தலை சாத்தனார் மதுரையைச் சேர்ந்தவர் ஆவார். மணிமேகலை என்பது ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகும். கூடல்நகர் என்பது மதுரையை குறிப்பதாகும்)**

64) பாண்டியரின் ஆட்சி மண்டலம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) பாண்டி மண்டலம்

B) தென் மண்டலம்

C) பாண்டி நாடு

**D) இவை அனைத்தும்**

**(குறிப்பு - பாண்டியரின் ஆட்சி பகுதி மேற்கண்ட அனைத்து பெயர்களில் அழைக்கப்பட்டது. வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் வளம்பெறும் சில பகுதிகள் நீங்கலாக பெரும்பாலும் பாறைகளும் குன்றுகளும் மலைகளும் நிறைந்த பகுதியே பாண்டிய நாடு ஆகும்.)**

65) பாண்டிய நாட்டின் வட எல்லையாக விளங்கிய ஆறு எது?

A) வைகை

B) தாமிரபரணி

C) காவிரி

**D) வெள்ளாறு**

**(குறிப்பு - புதுக்கோட்டை வழியே ஓடும் வெள்ளாறு பாண்டிய நாட்டின் வட எல்லை ஆகும். இந்திய பெருங்கடல் தென் எல்லை ஆகும். மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேற்கு எல்லையாக அமைந்துள்ளது. வங்காள விரிகுடா கிழக்கு எல்லையாகவும் அமைந்திருந்தன)**

66) அரிகேசரி மாறவர்மன் எந்த ஆண்டு பதவி ஏற்றார் என்று வைகை ஆற்று பகுதி கல்வெட்டுகள் கூறுகின்றன?

A) 640 இல்

**B) 642 இல்**

C) 644 இல்

D) 646 இல்

**(குறிப்பு - தொடக்க கால பாண்டிய அரசர்களில் சிறந்தவரான அரிகேசரி மாறவர்மன் 642 இல் பதவி ஏற்றார் என்பதை வைகை ஆற்றுப் பகுதி கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோருக்கு சமகாலத்தவர் ஆவார்)**

67) மாறவர்மன் அரிகேசரியை சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்கு மாற்றியவர் யார்?

A) அப்பர்

B) சுந்தரர்

**C) திருஞானசம்பந்தர்**

D) மாணிக்கவாசகர்

**(குறிப்பு - சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியை சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்கு மாற்றினார். சமணர்களை கழுவேற்றிய கூன் பாண்டியனே அரிகேசரி என்று அடையாளம் காணப்படுகிறார்)**

68) புகழ்பெற்ற வேள்விக்குடி நிலக்கொடை அளித்த பாண்டிய மன்னர் யார்?

A) கோச்சடையான் ரணதீரன்

B) மாறவர்மன் அரிகேசரி

C) மாறவர்மன் ராஜசிம்மன்

**D) பராந்தக நெடுஞ்சடையன்**

**(குறிப்பு - ஜதில பராந்தக நெடுஞ்சடையன் என்று அழைக்கப்பட்ட முதலாம் வரகுண பாண்டியன் (756-815) மாறவர்மன் ராஜசிம்மனுக்கு பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இவரே புகழ்பெற்ற வேள்விக்குடி நிலக்கொடை அளித்தவர் ஆவார். பாண்டிய அரச மரபில் மிகச் சிறந்தவறான இவர் பல்லவர்களையும் சேரர்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டவர்)**

69) திருப்புறம்பியம் போரில் அபராஜித பல்லவனால் தோற்கடிக்கப்பட்ட பாண்டிய மன்னன் யார்?

A) ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபர்

**B) இரண்டாம் வரகுண பாண்டியன்**

C) பராந்தக வீரநாராயணன்

D) மாறவர்மன் ராஜசிம்மன்

**(குறிப்பு - இரண்டாம் வரகுண பாண்டியன் திருப்புறம்பியம் போரில் அபராஜித பல்லவனால் தோற்கடிக்கப்பட்டார். இவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பராந்தக வீரநாராயணன், இரண்டாம் ராஜசிம்மன் ஆகியோரால் முதலாம் பராந்தகனின் தலைமையில் தோன்றிய சோழரின் எழுச்சிக்கு ஈடுகொடுக்க முடியவில்லை)**

70) பாண்டிய நாட்டுக்கு வருகை தந்த இத்தாலி நாட்டு பயணி யார்?

A) யுவான் சுவாங்

**B) மார்க்கோ போலோ**

C) இபின் பதூதா

D) வாசஃப்

**(குறிப்பு - பாண்டிய நாட்டுக்கு வருகை தந்த இத்தாலி நாட்டுப் பயணி மார்க்கோ போலோ நேர்மையான நிர்வாகத்துக்காகவும் வெளிநாட்டு வணிகர்களை சிறந்த முறையில் நடத்தியதற்காக பாண்டிய**

**அரசரை பாராட்டியுள்ளார். உடன்கட்டை ஏறும் வழக்கம், அரசர்கள் பின்பற்றிய பலதார மணமுறை ஆகியவை மார்க்கோபோலோவின் பயணக்கட்டுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளன)**

71) இரண்டாம் பாண்டிய அரசின் சிறப்பு மிக்க ஆட்சியாளராக திகழ்ந்தவர் யார்?

A) மாறவர்மன் குலசேகரன்

**B) சுந்தரபாண்டியன்**

C) சடையவர்மன் ஸ்ரீவல்லபன்

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - சுந்தரபாண்டியன் தமிழ் நாடு முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததுடன் ஆந்திராவில் உள்ள நெல்லூர் வரை தனது அரசியல் அதிகாரத்தை செலுத்தினார். இவர் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்று அழைக்கப்படுகிறார்)**

72) சுந்தரபாண்டியன் யாரை வீழ்த்தி மால்வாவை  கைப்பற்றினார்?

A) வீர பரமேஸ்வரன்

**B) வீர சோமேசுவரன்**

C) வீர விக்னேஸ்வரன்

D) இவர்கள்  யாரும் அல்ல

**(குறிப்பு - சுந்தர பாண்டியன் சேர அரசரான மலை நாட்டு தலைவரை அடக்கி தனக்கு கப்பம் செலுத்த வைத்தார். சோழரின் வீழ்ச்சிக்கு பின்னர் மால்வா பகுதியை ஆட்சி செய்த போஜ அரசன் வீர சோமேஸ்வரனின் அழைப்பின் பெயரில் நிகழ்ந்த கண்ணனூர் போரில் சுந்தரபாண்டியன் வெற்றி பெற்றார்)**

73) அலாவுதீன் கில்ஜியிடம் அடைக்கலம் கேட்டு தில்லி சென்ற பாண்டிய அரசர் யார்?

**A) சுந்தரபாண்டியன்**

B) மாறவர்மன் குலசேகரன்

C) வீரபாண்டியன்

D) சடையவர்மன் ஸ்ரீவல்லபன்

**(குறிப்பு - மாறவர்மன் குலசேகரன் என்னும் பாண்டிய மன்னனின் மூத்த மகன் சுந்தரபாண்டியன் ஆவார். இளைய மகன் வீரபாண்டியனுக்கு இளவரசு பட்டம் சூட்டப்பட்டதினால் ஆத்திரமுற்ற சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியிடம் அடைக்கலம் புகுந்தார். இதுவே மாலிக் கபூரின் படையெடுப்புக்கு காரணமாக அமைந்தது)**

74) மாலிக்கபூர் எந்த ஆண்டு மதுரை மீது படையெடுத்தார்?

A) 1309 இல்

**B) 1311 இல்**

C) 1313 இல்

D) 1315 இல்

**(குறிப்பு - 1309 இல் மாலிக்காபூர் மதுரையை அடைந்த போது அங்கே யாரும் இல்லை. வீரபாண்டியன் ஏற்கனவே தப்பியோடியிருந்தார். அங்கிருந்த முத்து, மரகதம், மாணிக்க நகைகள் மாலிக் கபூரால் எடுத்துச் செல்லப்பட்டதாக என தெரிகிறது)**

75) மதுரையை ஆட்சி செய்த ஆளுநர் ஜலாலுதீன் ஹசன் ஷா எப்போது தன்னை மதுரை அரசராக அறிவித்துக் கொண்டார்?

A) 1330 இல்

**B) 1335 இல்**

C) 1340 இல்

D) 1345 இல்

**(குறிப்பு - மாலிக் கபூரின் படையெடுப்புக்கு பிறகு மதுரையில் தில்லி சுல்தானின் அரசுக்குக் கட்டுப்பட்ட ஒரு அரசு உருவாகியது. மதுரையை ஆட்சி செய்த ஆளுநர் ஜலாலுதீன் அஸன் ஷா 1335 ஆம் ஆண்டு தன்னை மதுரை அரசராக அறிவித்துக் கொண்டார்)**

76) செம்பியன், வானவன், தென்னவன் போன்ற பட்டங்கள் எந்த மரபினைச் சேர்ந்த அரசர்கள் சூடிக்கொண்டவை ஆகும்?

A) சேரர்கள்

B) சோழர்கள்

**C) பாண்டியர்கள்**

D) பல்லவர்கள்

**( குறிப்பு - பாண்டிய அரசர்களை கூடல் கோன், கூடல்நகர் காவலன், மதுராபுரி பரமேஸ்வரன் எனப் போற்றுவது மரபாக இருந்தது. தூய தமிழில் அமைந்த பட்டங்கள் ஆவண செம்பியன், வானவன், தென்னவன் போன்றவை ஆகும்)**

77) குறுநில மன்னர்கள் மீது அரசர்களின் சட்டபூர்வ மேலாளுமையை காட்டும் விதத்திலும் அரியணைக்கு பெயரிடும் வழக்கம் எந்த மரபில் இருந்தது?

A) சேரர்கள்

B) சோழர்கள்

**C) பாண்டியர்கள்**

D) பல்லவர்கள்

**(குறிப்பு - பாண்டிய அரசர்கள் நீளமான, ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அமரும் இடவசதி கொண்ட அரியணையில் அமர்ந்த படி நிர்வாகம் செய்தனர். முன்னையதரையன், பாண்டியதரையன்,**

**கலிங்கத்தரையன் என சட்டபூர்வ மேல்ஆளுமையை காட்டும் விதத்தில் அரியணைகளுக்கு பெயரிடும் வழக்கம் பாண்டியர்களிடம் இருந்தது)**

78) பாண்டியர்களின் படைத்தளபதிகளுக்கு சூட்டப்பட்ட பட்டங்களில் கீழ்கண்டவற்றுள் எது சரியானது?

I. பள்ளி வேலன்.

II. பராந்தகன் பள்ளி வேலன்.

III. மாறன் ஆதித்தன்

IV. தென்னவன் தமிழவேள்

V. கண்டிசன்

A) I, II, III மட்டும் சரியானது

**B) I, II, III, IV மட்டும் சரியானது**

C) I, III, IV, V மட்டும் சரியானது

D) எல்லாமே சரியானது

**(குறிப்பு - பாண்டிய மரபுகளில் அதிகாரிகள் குழு அரசகட்டளைகளை நிறைவேற்றியது. முதன்மை அமைச்சர் உத்தர மந்திரி எனப்பட்டார். படைத் தளபதிகளுக்கு பள்ளி வேலன், பராந்தகன் பள்ளி வேலன், மாறன் ஆதித்தன், தென்னவன் தமிழவேள் ஆகிய பட்டங்கள் சூட்டப்பட்டன)**

79) பாண்டிய நாட்டு அரசியல் பிரிவுகள் சரியான வரிசையில் அமைந்துள்ளதை தேர்ந்தெடு?

**A) வளநாடு, நாடு, கூற்றம், மங்கலம், நகரம், ஊர், குடி**

B) வளநாடு, கூற்றம், நாடு, மங்கலம், நகரம், ஊர், குடி

C) வளநாடு, மங்கலம், கூற்றம், நாடு, நகரம், ஊர், குடி

D) வளநாடு, மங்கலம், கூற்றம், நகரம், நாடு, ஊர், குடி

**(குறிப்பு - பாண்டிய மண்டலம் என்பது பல வளநாடுகள் கொண்டது. ஒரு வளநாடு பல நாடுகளாகவும் கூற்றங்களாகவும் பிரிக்கப்பட்டது. நாடு, கூற்றம் ஆகியன மங்கலம், நகரம், ஊர், குடி ஆகிய குடியிருப்புகளை கொண்டவையாக இருந்தன)**

80) பாண்டியர் காலத்தில் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட பாசன வசதிகளுடன் கூடிய குடியிருப்புகள் எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) தச்சர் மானியம்

B) தட்டார் காணி

**C) சதுர்வேதி மங்கலம்**

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - அரசர்களும் குறுநில மன்னர்களும் பாசன வசதிகளுடன்கூடிய குடியிருப்புகளை உருவாக்கி மங்கலம், சதுர்வேதி மங்கலம் என்ற பெயரிட்டு பிராமணர்களுக்கு வழங்கினர். இக்குடியிருப்புகளுக்கு அரசனின் பெயர்களும் கடவுளின் பெயர்களும் சூட்டப்பட்டன)**

81) கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானது எது?

I. இஸ்லாமியர்களை தமிழ்நாட்டுக்குள் முதன்முதலாக வரவழைத்தது மாலிக் காபூரின் படையெடுப்பு அல்ல.

II. ஏழாம் நூற்றாண்டிலேயே இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் அரபு குடியிருப்புகள் தோன்றிவிட்டன.

III. காயல் துறைமுக நகரில் அரபு தலைவன் மாடிக்கு இஸ்லாம் ஜமாலுதீன் என்பவரால் ஒரு முகவர் நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. இது பாண்டியர்களுக்கு குதிரைகளை இறக்குமதி செய்யும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

A) I, II மட்டும் சரியானது

B) II, III மட்டும் சரியானது

C) III மட்டும் சரியானது

**D) இவை அனைத்தும் சரியானது**

**(குறிப்பு - ஏழாம் நூற்றாண்டிலேயே தென்னிந்தியாவின் மேற்கு கடற்கரையில் அரபு குடியிருப்புகள் தோன்றிவிட்டன. இதன் மூலம் தங்கள் வணிகத்தை கிழக்கு கடற்கரையில் இருந்த தமிழர்களுடன் விரிவுபடுத்திக் கொண்டனர். இதன் காரணமாக கிழக்கு கடற்கரையில் இருந்த அரசுகள் இந்த அரபு வணிகர்கள் மீது மிகவும் தாராளமாக கொள்கைகளை தளர்த்தி ஆதரவு அளித்துள்ளனர்)**

82) பாண்டியர் கால குதிரை வணிகம் குறித்து பதிவு செய்துள்ளவர் யார்?

A) மார்க்கோ போலோ

**B) வாசஃப்**

C) இபின்பதூதா

D) யுவான்சுவாங்

**(குறிப்பு - காயல் மட்டும் இந்தியாவின் பிற துறைமுகங்களில் ஏறத்தாழ பத்தாயிரம் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றுள் 1400 குதிரைகள் காயல் துறைமுக அரபு தலைவன் ஜமாலுதீன் சொந்தமானவை. குதிரையின் சராசரி விலை 220 செம்பொன் தினார்கள் ஆகும் என பாண்டிய காலத்து வெளிநாட்டு பயணியான வாசஃப் எழுதி வைத்திருக்கும் சான்றுகள் கூறுகின்றன)**

83) திருவண்ணாமலை கோயில் நிலங்கள் பாசன வசதி பெற பெண்ணை ஆற்றில் இருந்து வாய்க்கால் அமைத்து தந்தவர்கள் யார்?

A) சேரர்கள்

B) சோழர்கள்

**C) பாண்டியர்கள்**

D) பல்லவர்கள்

**(குறிப்பு - ஏரிகளின் கரைகளை அமைக்கும்போது பண்டைய கட்டுமான கலைஞர்கள் கட்டத்தை சமமாக பராமரிக்க நூல் பயன்படுத்தினர். திருவண்ணாமலை கோயில் நிலங்கள் பாசன வசதி பெற ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் பெண்ணை ஆற்றில் இருந்து வாய்க்கால் அமைத்து தந்துள்ளார்)**

84) பாண்டியர் காலத்தில் இயற்றப்பட்ட முக்கியமான இலக்கிய நூல்களுள் தவறானது எது?

A) திருவெம்பாவை

B) திருவாசகம்

C) திருப்பாவை

**D) திருமுறை**

**(குறிப்பு - பாண்டியர் ஆட்சி காலத்தில் இயற்றப்பட்ட முக்கியமான இலக்கிய நூல்களாவன திருப்பாவை, திருவெம்பாவை, திருவாசகம், கோவை முதலியன ஆகும். தமிழை வளர்க்கவும் மகாபாரதத்தை மொழிபெயர்க்கவும் ஒரு கலைக் கழகம் அமைக்கப்பட்டதாக ஒரு செப்பேடு கூறுகிறது)**

85) பாண்டியர்களால் கீழ்காணும் எந்த கோவில் கருவறை விமானங்கள் தங்கத் தகடுகளால் வேயப்பட்ட?

I. திருவரங்கம்

II. திருவேங்கடம்

III. சிதம்பரம்

A) I மட்டும்

B) II, III மட்டும்

**C) I, III மட்டும்**

D) இவை அனைத்தும்

**(குறிப்பு - இடைக்கால பாண்டியரும் பிற்காலப் பாண்டியரும் பல கோயில்களை பழுது பார்த்து அவற்றுக்கு தங்கம் மற்றும் நிலம் ஆகியவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளனர். திருவரங்கம், சிதம்பரம் ஆகிய கோயில்களில் கருவறை மீது உள்ள விமானங்கள் தங்க தகடுகளால் வேயப்பட்டன)**

86) திருவரங்கம் கோவிலில் அரசபட்டம் சூட்டிக் கொண்ட பாண்டிய மன்னர் யார்?

**A) சடையவர்மன் சுந்தரபாண்டியன்**

B) சடையவர்மன் வீரபாண்டியன்

C) ஸ்ரீவல்லபன்

D) மாறவர்மன் குலசேகரன்

**(குறிப்பு - சடையவர்மன் சுந்தரபாண்டியன் திருவரங்கம் கோயிலில் பட்டம் சூட்டினார், அதன் நினைவாக அக்கோயிலுக்கு ஒரு விஷ்ணு சிலையை நன்கொடையாக கொடுத்தார். இக்கோயிலில் ஒற்றர்களும் பிற மூன்று விமானங்களும் தங்கத் தகடுகள் பொருத்தப்பட்டவை ஆகும்)**

87) பாண்டிய மன்னர்களால் உருவாக்கப்பட்ட குடைவரைக் கோவில்கள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. திருமயம், பிள்ளையார்பட்டி

II. குன்றக்குடி, கன்னியாகுமரி

III. திருச்செந்தூர், கழுகுமலை

A) I, II மட்டும்

B) II, III மட்டும்

C) I, III மட்டும்

**D) இவை அனைத்தும்**

**(குறிப்பு - மேற்கண்ட அனைத்து கோயில்களும் பாண்டியர்களால் உருவாக்கப்பட்ட குடைவரைக் கோவில்கள் ஆகும். சித்தன்னவாசல், அரிட்டாபட்டி, திருமலைபுரம், திருநெடும்கரை ஆகிய கோவில்களில் ஓவியங்கள் காணப்படுகின்றன)**

88) பாண்டியர் காலத்தில் கடல் வணிக மையங்களாக இருந்தவை கீழ்கண்டவற்றுள் எது?

I. சிந்தாமணி

II. காவிரிப்பூம்பட்டினம்

III. மைலாப்பூர்

IV. மகாபலிபுரம்

A) I, II, III மட்டும்

**B) I, III, IV மட்டும்**

C) II, III, IV மட்டும்

D) இவை அனைத்தும்

**(குறிப்பு - சிந்தாமணி, மைலாப்பூர், திருவொற்றியூர், திருவாடானை, மகாபலிபுரம் ஆகியவை சுறுசுறுப்பான கடல் வணிக மையங்களாக இருந்தன என்பதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்)**

# 11th History Lesson 7 Questions in Tamil

## 7] பாமினி விஜயநகர அரசுகள்

1. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தில்லி சுல்தானியம் தெற்கே விரிவாக்கத்திற்குத் தயாரான போது தக்காண தென்னிந்தியா எத்தனை அரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன?

A) 2 B) 3 **C) 4** D) 5

**(குறிப்பு: நான்கு அரசுகள்**

- **தேவகிரியின் யாதவர் (மேற்குத் தக்காணம்/தற்போதைய மகாராஷ்டிரா)**
- **ஹொய்சாலரின் துவாரசமுத்திரம் (கர்நாடகா)**
- **வாரங்கல் பகுதியை சார்ந்த காகத்தியர்**
- **மதுரையை சார்ந்த பாண்டியர்)**

2. தக்காண தென்னிந்திய அரசுகள் ___________ஆண்டுகளில் நடைபெற்ற மாலிக்காபூரின் படையெடுப்புகளினால் ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்கடிக்கப்பட்டன.

A) 1302, 1309

B) 1304, 1312

**C) 1304, 1310**

D) 1306, 1314

**(குறிப்பு: தென்னிந்திய அரசுகள் சேர்த்து வைக்கப்பட்டிருந்த தங்கள் செல்வங்களின் பெரும்பகுதியையும் தில்லி சுல்தானியத்தின் படையெடுப்பின் போது இழந்தன.)**

3. தன் அரசை சிறப்பாக ஆட்சி புரிவதற்கென தலைநகரை தேவகிரிக்கு மாற்றியவர்

A) பால்பன்

B) முகமது பின் காசிம்

C) அலாவுதீன் கில்ஜி

**D) முகம்மது பின் துக்ளக்**

**(குறிப்பு: தலைநகர் மாற்றத்தின் போது தேவகிரி தௌலதாபாத் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் இம்முயற்சி தோல்வியடைந்து மக்கள் பெருந்துயருக்கு ஆளாயினர். மீண்டும் தன் தலைநகரை தில்லிக்கு மாற்றியபோது முகமது பின் துக்ளக்கின் தென் பகுதி மாகாண ஆளுநர்கள் தங்களை சுதந்திர அரசர்களாக அறிவித்தனர்.)**

4. வடக்கு கர்நாடகாவில் ஜாபர்கான் தன்னைச் சுதந்திர அரசராக அறிவித்துக் கொண்டு தன் தலைநகரை தேவகிரியிலிருந்து குல்பர்காவிற்கு மாற்றிய ஆண்டு

A) 1342 B) 1343 C) 1344 **D) 1345**

**(குறிப்பு: ஜாபர்கான் பாமன் ஷா என்ற பட்டத்தைச் சூடி பாமினி அரசவம்சத்தைத் (1347-1527) தோற்றுவித்தார்.)**

5. விஜயநகர அரசு சங்கம வம்ச சகோதரர்களான ஹரிஹரர், புக்கர் ஆகியோரால் __________ நதிக்கரையில் தோற்றுவிக்கப்பட்டது.

A) கிருஷ்ணா

**B) துங்கபத்ரா**

C) கங்கை

D) யமுனை

**(குறிப்பு: 1336 ஆம் ஆண்டு விஜயநகரைத் தலைநகராகக் கொண்டு (தற்போதைய ஹம்பி) விஜயநகர அரசு தோற்றுவிக்கப்பட்டது.)**

6. பாமினி, விஜயநகர அரசுகள் ___________ ஆற்றிடைப் பகுதியைக் கட்டுப்படுத்த தங்களுக்குள் கடுமையாக போரிட்டனர்.

A) ஹனோவர்

B) தோ-ஆப்

**C) ரெய்ச்சூர்**

D) கன்னோசி

**(குறிப்பு: மேலும் இராணுவத்திற்குத் தேவைப்படும் குதிரைகளை இறக்குமதி செய்யவும், மேற்குக் கடற்கரையிலுள்ள கோவா, ஹனோவர் துறைமுகங்களைக் கட்டுப்படுத்தவும் இடைவெளியில்லாமல் கடுமையாகப் போரிட்டனர்.)**

7. கிருஷ்ணதேவராயரின் கீழ் இருந்த நாயக்க முறை பற்றிய தகவல்களைத் தரும் இலக்கியம்

A) மனுசரிதம்

B) சாளுவவையுதயம்

**C) ராயவாசகமு**

D) மதுரா விஜயம்

**(குறிப்பு: ராயவாசகமு என்பது தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட இலக்கியம் ஆகும்.)**

8. தவறான இணையைத் தேர்ந்தெடு. (அயல்நாட்டுப் பயணிகள் - நாடு)

A) இபன் பதூதா - மொராக்கோ

B) அப்துர் ரசாக் – பாரசீகம்

C) நிகிடின் – ரஷ்யா

**D) டோமிங்கோ பயஸ் – இத்தாலி**

**(குறிப்பு: டோமிங்கோ பயஸ் – போர்த்துகல் நாடு, நூனிஸ் – இத்தாலி.)**

9. பொருத்துக. (அயல்நாட்டுப் பயணிகள் - காலம்)

1. இபன்பதுதா i) 1520 – 35
2. அப்துர் ரசாக் ii) 1470 – 74
3. நிகிடின் iii) 1443 – 45
4. நூனிஸ் iv) 1333 – 45

A) i ii iii iv

B) ii i iv iii

**C) iv iii ii i**

D) iii i ii iv

10. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. விஜயநகர அரசர்கள் வராகன் என்று குறிப்பிடப்பட்ட தங்க நாணயங்களை அதிக எண்ணிக்கையில் வெளியிட்டனர்.

2. இது தமிழில் பொன் என்றும் கன்னடத்தில் ஹொன்னு என்றும் குறிப்பிடப்பட்டது.

3. நாணயத்தில் அரசனுடைய பெயர் நகரி அல்லது கன்னட எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

**(குறிப்பு: வராகன் என்ற தங்க நாணயங்கள் வெவ்வேறு இந்து தெய்வங்களின் உருவங்களையும் காளை, யானை, கண்ட பெருண்டா என்ற கற்பனைப் பறவை ஆகிய விலங்கு உருவங்களையும் தாங்கியுள்ளன.)**

11. சுமூகமான நிர்வாகத்திற்காக தில்லி சுல்தானியர் முறையைப் பின்பற்றிய பாமன்ஷா தன் ஆட்சிப் பகுதியை எத்தனை பிரிவுகளாக பிரித்தார்?

A) 2 B) 3 **C) 4** D) 5

**(குறிப்பு: குல்பர்கா, தௌலதாபாத், பீடார், பெரார் ஆகியவை பாமன்ஷா ஆட்சியின் நான்கு மாகாணங்களாகும்.)**

12. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) பாமன்ஷா ஆட்சியின் நான்கு பிரிவுகள் தராப்ஸ் எனப்பட்டன.

B) பாமன்ஷா ஆட்சியின் பிரிக்கப்பட்ட நான்கு பகுதிகளுக்கும் ஒவ்வொரு ஆளுநர் நியமிக்கப்பட்டு, அவர்கள் அப்பகுதியின் படைகளையும் வழிநடத்தினர்.

C) மாகாண ஆளுநர்கள் மாகாண நிர்வாகம், வரிவசூல் போன்றவற்றிற்கு முழுப்பொறுப்பாவர்.

**D) பாமன்ஷா தன் அரசியல் எதிரிகளை அடக்கி 21 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தார்.**

**(குறிப்பு: அலாவுதீன் ஹசன் பாமன்ஷாவின் ஆட்சிக் காலம் 1347 - 1358. (11 ஆண்டுகள்))**

13. சுதந்திரமான மதுரை சுல்தானியம் உருவான ஆண்டு

A) 1234 B) 1332 **C) 1333** D) 1344

14. தான் பெற்ற வெற்றிகளை நினைவு கூரும் வகையில் நாணயங்களில் இரண்டாம் அலெக்சாண்டர் என்று பொறித்து கொண்டவர்

A) முதலாம் முகமது

**B) ஜாபர்கான்**

C) முகமது கவான்

D) ராஜா கிருஷ்ண தேவ்

**(குறிப்பு: பாமன்ஷா வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்டவீடு ஆகியவற்றிடமிருந்து வருடம்தோறும் கப்பம் பெற அவர் மேற்கொண்ட முயற்சி பல போர்களுக்கு இட்டுச்சென்றது.)**

15. முதலாம் முகமது __________ ஆண்டு வாரங்கல் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினார்.

A) 1362 **B) 1363** C) 1364 D) 1365

**(குறிப்பு: இப்போரின் முடிவில் வாரங்கல் போரர் நஷ்டஈட்டை வாரி வழங்கியது. கோல்கொண்டா கோட்டை முதலாம் முகமது வசமானது. அங்கிருந்த கருவூலங்கள், ரத்தினக்கற்கள், பாமினி அரசின் வசமாயின.)**

16. கூற்று 1: ஆகாய நீல வண்ணத்திலுள்ள ரத்தினக்கற்கள் ஓரளவு விலை மதிப்புள்ள கற்களாகும்.

கூற்று 2: நீல வண்ண மாணிக்கக் கற்களினால் இழைக்கப்பட்ட அரியணை பாரசீக அரசர்களின் ஒரு சிம்மாசனமாக இருந்தது என மனுசரிதம் என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

**A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: நீல வண்ண மாணிக்கக் கற்களினால் இழைக்கப்பட்ட அரியணை பாரசீக அரசர்களின் ஒரு சிம்மாசனமாக இருந்தது என பிர்தௌசியின் ஷாநாமா என்னும் நூல் குறிப்பிடுகின்றது.)**

17. தவறான இணையைத் தேர்ந்தெடு. (முதலாம் முகமதுவின் அமைச்சர்கள் குழு)

A) வகில்-உஸ்-சுல்தானா : படைத்தலைவர், அரசருக்கு அடுத்தநிலையில் உள்ளவர்.

B) வசீர்-குல்: மற்ற அமைச்சர்களின் பணிகளை மேற்பார்வையிடுபவர்

**C) அமீர்-இ-ஜும்லா: நிதித்துறை இணையமைச்சர்**

D) வசீர்-இ-அஷ்ரப்: வெளியுறவு அமைச்சர்

**(குறிப்பு: அமீர்-இ-ஜும்லா: நிதியமைச்சர், வசீர்-இ-அஷ்ரப்: வெளியுறவு அமைச்சர் அரசு விவகாரத்துறை அமைச்சர், அரசு விழாக்களை முன்னின்று நடத்தும் பொறுப்புடையவர்.)**

18. பொருத்துக. (முதலாம் முகமதுவின் அமைச்சர்கள் குழு)

| | |
|---|---|
| 1. நசீர் | i) தலைமை நீதிபதி |
| 2. பேஷ்வா | ii) காவல்துறைத் தலைவர் |
| 3. கொத்வால் | iii) அரசப் படைகளின் பொறுப்பாளர் |
| 4. சதர்-இ-ஜஹான் | iv) நிதித்துறை இணையமைச்சர் |

A) i ii iii iv

B) ii i iv iii

**C) iv iii ii i**

D) ii iii i iv

**(குறிப்பு:**

- **கொத்வால்- காவல்துறைத் தலைவர், தலைநகரின் நீதிபதி**
- **சதர்-இ-ஜஹான்: தலைமை நீதிபதி, சமய அறநிலையத்துறை அமைச்சர்.)**

19. முதலாம் முகமது __________இல் இரு மசூதிகளை எழுப்பினார்.

**A) குல்பர்கா**

B) தௌலதாபாத்

C) பீடார்

D) பெரார்

**(குறிப்பு: இதில் ஒரு மசூதி 1367ல் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டது.)**

20. கூற்று 1: முதலாம் முகமது வழிப்பறி கொள்ளையர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தார்.

கூற்று 2: நிறுவன மற்றும் புவியியல் ரீதியில் முகமது ஷா ஏற்படுத்திய ஒருங்கிணைப்பே அவர் அரசுக்கு திடமான அடித்தளத்தை உருவாக்கியது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

21. பாமினி அரசாட்சியின் போது, ஒரிசா ஆட்சியாளர்கள் __________ ஆண்டு வாரங்கல் மற்றும் அதன் கிழக்கிலிருந்த பகுதிகளை கைப்பற்றினர்.

A) 1365 B) 1375 C) 1413 **D) 1425**

22. முதலாம் முகமதுவின் ஆட்சிக்கு பின் பாமினி அரசின் தலைநகரம் குல்பர்காவிலிருந்து _________ ஆண்டு பீடாருக்கு மாற்றப்பட்டது.

A) 1426 B) 1427 C) 1428 **D) 1429**

**(குறிப்பு: முதலாம் முகமது ஷாவிற்குப் பின் சில சுல்தான்கள் ஆட்சி செய்தனர். அவர்கள் திறமையற்றவர்களாக விளங்கினர்.)**

23. சிறந்த அரசியல் விவேகியான முகமது கவான் யாருடைய காலத்தில் அமைச்சராக விளங்கினார்?

A) ஜாபர்கான்

B) முதலாம் முகமது

C) இரண்டாம் முகமது

**D) மூன்றாம் முகமது**

**(குறிப்பு: மூன்றாம் முகமதுவின் காலம் 1463 – 1482.)**

24. முகமது கவான் __________ல் ஒரு பெரிய மதரசாவை நிறுவி அதில் ஒரு பெரிய நூலகத்தை அமைத்தார்.

A) குல்பர்கா

B) தௌலதாபாத்

**C) பீடார்**

D) பெரார்

**(குறிப்பு: பாரசீகத்தில் பிறந்த முகமது கவான் புகழ்பெற்ற இஸ்லாமிய சமய வல்லுநராகவும், பாரசீக மொழியில், கணிதத்தில் புலமை பெற்றவராகவும் விளங்கினார்.)**

25. தவறான கூற்றைத் தேர்ந்தெடு. (முகமது கவான்)

A) முகமது கவான் பீடாரில் நிறுவிய நூலகத்தில் 3000 கையெழுத்து நூல்கள் இருந்தன.

B) கொங்கணம், ஒரிசா, விஜயநகர மன்னர்களுக்கு எதிராக வெற்றிகரமாகப் போரை நடத்தினார்.

**C) ஆங்கிலேய வேதியியல் வல்லுநர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வெடிமருந்தை பயன்படுத்தினார்.**

D) பாமினி அரசை நிர்வகிக்க வசதியாக நாட்டை எட்டு மாகாணங்களாகப் பிரித்தார்.

**(குறிப்பு: பாரசீக வேதியியல் வல்லுநர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வெடிமருந்தை பயன்படுத்தினார்.)**

26. கூற்று 1: முகமது கவான் அறிமுகப்படுத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள் மூன்றாம் முகமது அரசின் நிலையை உயர்த்தின. ஆனால் மாகாணத் தலைவர்களுக்குத் தரப்பட்ட அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

கூற்று 2: மாகாணத் தலைவர்களில் பலர் தக்காணத்தை சேர்ந்தவர்களாவர். தக்காணத்தில் அவர்களுக்கிடையே இருபிரிவுகள் உண்டாயின.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: <u>மாகாணத் தலைவர்களின் இருபிரிவுகள்</u>**

- **தக்காண முஸ்லீம்கள்**
- **வெளிநாட்டிலிருந்து வந்த முஸ்லீம்கள்)**

27. கோல்கொண்டா கோட்டையை கட்டிய காகத்திய வம்ச அரசர்

A) ராஜா ரனதேவ்

B) குலிகுதப்ஷா

C) பிரதாபருத்ரன்

**D) ராஜா கிருஷ்ண தேவ்**

**(குறிப்பு: ராஜா கிருஷ்ண தேவ் வாரங்கல்லைத் தலைநகராகக் கொண்ட காகத்திய அரசர் ஆவார்.)**

28. கோல்கொண்டா கோட்டை சுல்தான் குலி குதப்ஷாவிற்கு ஜாகீராகத் தரப்பட்ட ஆண்டு

A) 1492 - 1493

B) 1493 – 1494

C) 1494 – 1495

**D) 1495 – 1496**

**(குறிப்பு: குலிகுதப்ஷா கோல்கொண்டா கோட்டையை கருங்கற்கள் கொண்டு புனரமைத்தார். அதன் பின் இக்கோட்டைப் பகுதி இருந்த நகரம் முகம்மது நகர் எனப்பட்டது.)**

29. குதுப்ஷாகி வம்சத்தின் ஐந்தாவது சுல்தான் ___________ ஆவார்.

A) முகமது அலி

**B) முகம்மது குலி குதுப்ஷா**

C) அகமது குலி குதுப்ஷா

D) அலாவுதீன் குலி குதுப்ஷா

**(குறிப்பு: முகம்மது குலி குதுப்ஷா காலத்தில் கம்பீரமான கோட்டையாக கோல்கொண்டா கோட்டை திகழ்ந்தது.)**

30. ___________நூற்றாண்டில் கோல்கொண்டா ஒரு சிறந்த வைரச் சந்தையாகத் திகழ்ந்தது.

A) 15 B) 16 **C) 17** D) 18

**(குறிப்பு: கோல்கொண்டா வைரச் சந்தை, கோஹினூர் வைரம் உட்பட மிகச்சிறந்த வைரங்களை உலகிற்கு வழங்கியது.)**

31. கூற்று 1: கோல்கொண்டா கோட்டை பெங்களூருவிலிருந்து 11 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மலைமீது 120 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

கூற்று 2: கோல்கொண்டா கோட்டை அதன் ஒலி அம்ச அடிப்படையில் சிறந்த கட்டடக் கலையின் அம்சமாகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

**B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி**

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: கோல்கொண்டா கோட்டை ஹைதராபாத்திலிருந்து 11 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மலைமீது 120 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கோல்கொண்டா கோட்டையில் அரச அவையும் உள்ளது.)**

32. கோல்கொண்டா கோட்டையின் உயர்ந்த பகுதி__________ என்றழைக்கப்படுகிறது.

A) பதேதர்வாசா

B) தர்பார்வாசா

**C) பாலா ஹிசார்**

D) பதேதர்ஹிசா

**(குறிப்பு: கோல்கொண்டா கோட்டையின் நுழைவாயில் பகுதி பதேதர்வாசா (அ) வெற்றி நுழைவாயில் என்றழைக்கப்படுகிறது.)**

33. கோல்கொண்டா கோட்டையில் ________ன் கல்லறை உள்ளது.

A) ராஜா கிருஷ்ண தேவ்

B) ஔரங்கசீப்

C) ஷாஜகான்

**D) குதுப்ஷாகி**

**(குறிப்பு: கோல்கொண்டா கோட்டையில் பீரங்கிகள், பாலங்கள், அரச அரண்மனைகள், அறைகள், மசூதிகள், தொழுவங்கள் உட்பட நான்கு சிறிய கோட்டைகளும் இதனுள் அடங்கும்.)**

34. ஔரங்கசீப் கோல்கொண்டா கோட்டையை எட்டு மாதங்கள் முற்றுகையிட்டு _________ ஆண்டு அதன் ஆட்சியாளரிடமிருந்து கைப்பற்றினார்.

A) 1686 **B) 1687** C) 1688 D) 1689

**(குறிப்பு: 1687 இல் ஆப்கானிய வாசல் காப்பாளரின் துரோகம் காரணமாக ஔரங்கசீப் கோல்கொண்டா கோட்டையை கைப்பற்றினார்.)**

35. மூன்றாம் முகம்மது இறந்தபின் பாமினி அரசிலிருந்து பிரிந்த சுதந்திர அரசுகள் எவை?

1. பீஜப்பூர் 2. அகமது நகர் 3. பெரார்

4. கோல்கொண்டா 5. பீடார்

**A) அனைத்தும்** B) 1, 2, 5 C) 1, 2, 3, 5 D) 2, 3, 4, 5

**(குறிப்பு: பிற்காலத்தில் பீஜப்பூர் வலிமையான அரசானது. பீடார், பெரார் போன்றவை அதில் இணைக்கப்பட்டன. அதே நேரத்தில் அகமதுநகர், கோல்கொண்டா போன்றவை சுதந்திர அரசுகளாயின.)**

36. மூன்றாம் முகம்மது இறந்த பின் பாமினி வம்சத்தை சேர்ந்த _________ மன்னர்கள் ஆட்சி செய்தனர்.

A) 3 B) 4 **C) 5** D) 6

**(குறிப்பு: மூன்றாம் முகம்மது இறந்த பின் பாமினி அரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது.)**

37. விஜயநகர அரசுக்கும், பாமினி அரசிலிருந்து உருவான ஐந்து சுதந்திர அரசுகளுக்கும் இடையிலான ராக்சஷி தங்கடி போர் நடைபெற்ற ஆண்டு

A) 1525 B) 1545 **C) 1565** D) 1656

**(குறிப்பு: ராக்கஷி தங்கடி போரில் (தலைக்கோட்டைப் போர்) விஜயநகர அரசு தோற்கடிக்கப்பட்டது. இப்போருக்கு பின் தக்காண சுல்தானியங்கள் முகலாய அரசுடன் இணைக்கப்பட்டன.)**

38. ஹொய்சாள அரசரிடம் சில காலம் பணி செய்த ஹரிஹரர், புக்கர் ஆகியோர் தங்களை சுதந்திர அரசர்களாக நிலைநிறுத்திக் கொண்டு ________ ஆண்டு புதிய அரசுக்கான அடித்தளத்தை அமைத்தனர்.

A) 1334 **B) 1336** C) 1342 D) 1346

**(குறிப்பு: இந்நிகழ்வு ஹொய்சாள அரசர் மூன்றாம் பல்லாலர் மதுரை சுல்தானால் கொல்லப்பட்ட பின்னர் நடைபெற்றிருக்க வேண்டும். ஹரிஹரர் புக்கர் ஆகியோர் சங்கமரின் புதல்வர்கள் ஆவர்.)**

39. கூற்று 1: விஜயநகர அரசின் தொடக்கத்தில் துங்கபத்திரை நதியின் வடக்குக் கரையில் அனகொண்டி அருகே தலைநகர் அமைந்திருந்தது.

கூற்று 2: விரைவில் துங்கபத்திரை ஆற்றின் தென்கரையில் அமைந்திருந்த ஹொய்சாள நகரமான ஹொசபட்னா என்னும் இடத்திற்கு தலைநகர் மாற்றப்பட்டது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: தலைநகரமான ஹொசபட்னா விரிவுபடுத்தப்பட்ட பின்னர் வெற்றியின் நகரம் என்ற பொருளில் விஜயநகரம் என புதிய பெயர் சூட்டப்பட்டது.)**

40. விஜயநகர அரசர்கள், சாளுக்கியரின் முத்திரையான ________ உருவத்தைத் தங்களது அரச முத்திரையாகக் கொண்டனர்.

A) பசு

B) குதிரை

C) யானை

**D) பன்றி (வராகம்)**

**(குறிப்பு: வரலாற்றறிஞர்கள் ஹரிஹரர் தொடங்கிய அரச வம்சத்தை அவரின் தந்தையாரின் பெயரில் அல்லது மூதாதையாரின் பெயரில் சங்கம வம்சம் என அழைத்தனர்.)**

41. கல்வெட்டுச் சான்றுகளின்படி வித்யாரண்யர் __________ நூற்றாண்டின் இறுதி பகுதியில் வாழ்ந்தவர் ஆவார்.

A) 13 **B) 14** C) 15 D) 16

**(குறிப்பு: வித்யாரண்யர் விஜயநகரப் பேரரசு உருவான ஆறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்தவர் ஆவார்.)**

42. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) சங்கம வம்சம்: (1336 – 1485)

B) சாளுவ வம்சம்: (1485 - 1505)

C) துளுவ வம்சம்: (1505 - 1570)

**D) ஆரவீடு வம்சம்: (1570 - 1630)**

**(குறிப்பு: ஆரவீடு வம்சம்: (1570 - 1650). விஜயநகர அரசு நான்கு அரச வம்சத்து அரசர்களால் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆளப்பட்டது.)**

43. பதிமூன்றாம் நூற்றாண்டின் பெரிய அரசுகளான தமிழ்நாட்டில் பாண்டியர், கர்நாடகத்தைச் சேர்ந்த ஹொய்சாளர், ஆந்திர காகத்தியர் ஆகிய மூன்று அரசுகளும் பதினான்காம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளில் _________ படையெடுப்புகளால் அழிவுற்று பெரும் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தியது.

A) விஜயநகர அரசு

B) பாமினி அரசு

C) சோழ அரசு

**D) தில்லி சுல்தானியம்**

**(குறிப்பு: குழப்பமும் கொந்தளிப்பும் நிறைந்த இச்சூழ்நிலை சங்கம வம்சத்தை சேர்ந்த ஹரிஹரர் முதலான ஐந்து சகோதரர்களுக்கு தங்கள் பகுதிகளை ஒருங்கிணைக்கவும் விரிவாக்கம் செய்யவும் வாய்ப்பினை வழங்கியது.)**

44. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. விஜயநகர அரசு உருவான நாற்பதாண்டுகளுக்கு உள்ளாகவே ஐந்து சகோதரர்களும் வெவ்வேறு திசைகளில் மேற்கொண்ட படையெடுப்புகளின் விளைவாக குறுநில அரசு என்ற நிலையிலிருந்து பெரிய அரசாக மாறியது.

2. முதலில் கர்நாடகாவில் ஹொய்சாள அரசின் இதயமாக இருந்த பகுதிகள் விஜயநகரோடு இணைக்கப்பட்டன. தொடர்ந்து கர்நாடகாவின் கடற்கரைப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன.

3. பல துறைமுகங்களை சென்றடையும் வாய்ப்பினை இப்பகுதி கொண்டிருந்ததால் இப்பகுதியின் பிரதானிகள் அல்லது அல்லது ஆளுநர்கள் இப்பகுதியின் நிர்வாகத்தில் அக்கறை செலுத்தினர்.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

45. விஜயநகர பேரரசில் _________ ஆட்சியின் போது தமிழகத்தின் தொண்டை மண்டலப் பகுதியின் மீது கவனம் திரும்பியது.

A) மாரையா நாயக்கர்

**B) முதலாம் புக்கர்**

C) இரண்டாம் புக்கர்

D) மூன்றாம் புக்கர்

**(குறிப்பு: இச்சமயத்தில் தமிழகத்தின் வட மாவட்டங்களை உள்ளடக்கிய தொண்டை மண்டலப் பகுதியை சம்புவராயர் ஆண்டு வந்தனர்.)**

46. இளவரசர் கம்பண்ணாவின் (குமார கம்பண்ணா) நம்பிக்கைக்குரிய தளபதி__________.

A) மாலிக் கபூர்

B) மார்க்கண்டேயன்

**C) மாரையா**

D) மாணிக்கராயர்

**(குறிப்பு: முதலாம் புக்கரின் தொண்டை மண்டலப் பகுதியை கைப்பற்றும் பணியை கம்பண்ணா, தளபதி மாரையாவின் உதவியுடன் வெற்றிகரமாக முடித்தார்.)**

47. குமார கம்பண்ணா _________ ஆண்டு மதுரை சுல்தானைக் கொன்று மதுரை சுல்தானிய ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தார்.

A) 1340 B) 1348 C) 1360 **D) 1370**

**(குறிப்பு: ஆனால் மதுரை உள்ளிட்ட பாண்டிய நாடு அப்போது விஜயநகர அரசோடு இணையவில்லை. நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் 1500 வாக்கில் பாண்டியநாடு விஜயநகர அரசின் ஒரு பகுதியானது.)**

48. குமார கம்பண்ணாவின் மனைவி கங்காதேவி எழுதிய 'மதுரா விஜயம்' எனும் நூல் __________மொழியில் எழுதப்பட்டது.

A) தெலுங்கு

B) கன்னடம்

**C) சமஸ்கிருதம்**

D) தமிழ்

**(குறிப்பு: இந்நூல் குமார கம்பண்ணா மதுரை சுல்தானை வெற்றிக் கொண்டதை பற்றிக் குறிப்பிடுகிறது.)**

49. __________ நதி விஜயநகர பாமினி அரசுகளை பிரிக்கும் எல்லைக் கோடாக அமைந்திருந்தது.

**A) கிருஷ்ணா**

B) கோதாவரி

C) மகாநதி

D) தபதி

**(குறிப்பு: விஜயநகர அரசர்கள் முஸ்லீம்கள் அல்லாத இந்து அரசுகளான வாராங்கல், கொண்டவீடு, ஒரிசா ஆகியவற்றுடன் போரிட்டபோது முஸ்லீம் அரசுகள் சிலசமயம் விஜயநகருக்கு ஆதரவாகவும் சில சமயம் எதிர்தரப்புக்கு ஆதரவாகவும் பங்கேற்றனர்.)**

50. ஆந்திராவின் கடற்கரைப்பகுதிகளில் அதிகாரத்திற்கான போட்டி ஒரிசாவை சேர்ந்த ___________ அரசுக்கும் விஜயநகருக்குமிடையே நடைபெற்றது.

A) காகத்திய அரசு

B) ஹொய்சாள அரசு

C) சோளங்கிகள் அரசு

**D) கஜபதி அரசு**

**(குறிப்பு: இரண்டாம் தேவராயர் (1422 - 46) ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை இப்பிரச்சனையில் விஜயநகரால் பெரும் வெற்றி என எதையும் பெற இயலவில்லை.)**

51. கூற்று 1: இரண்டாம் தேவராயர் ஒரியர்களை சில போர்களில் தோற்கடித்தார்.

கூற்று 2: இப்போர்களின் மூலம் ஒரியாவின் பல பகுதிகள் விஜயநகர அரசுடன் இணைக்கப்பட்டன.

**A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: இரண்டாம் தேவராயர் மேற்கொண்ட போர்கள் அனைத்தும் கப்பம் வசூல் செய்வதற்காகவே நடைபெற்றன. இடங்கள் கைப்பற்றப்பட்டு இணைக்கப்படவில்லை.)**

52. சங்கம வம்ச அரசர்களுள் மிகச்சிறந்த அரசர் __________.

A) முதலாம் புக்கர்

B) இரண்டாம் புக்கர்

C) முதலாம் தேவராயர்

**D) இரண்டாம் தேவராயர்**

**(குறிப்பு: இரண்டாம் தேவராயர் தனது குதிரைப் படையின் வலிமையைப் பெருக்குவதற்காகப் பயிற்சி பெற்ற முஸ்லீம் குதிரைப்படை வீரர்களை தனது படைகளில் சேர்த்துக் கொண்டார்.)**

53. இரண்டாம் தேவராயரின் காலத்தில் விஜயநகருக்கு வருகை தந்த பாரசீக நாட்டின் தூதுவர்

A) நூனிஸ்

B) இபன் பதூதா

**C) அப்துர் ரசாக்**

D) நிகிடின்

**(குறிப்பு: அப்துர் ரசாக், கொச்சி சாமுத்திரி அரசவைக்கும் விஜயநகரத்திற்கும் வருகை தந்தார். அப்துர் ரசாக் தனது குறிப்புகளில், இரண்டாம் தேவராயர் மிகப்பெரும் பகுதியைக் கட்டுப்படுத்தினார் என்று குறிப்பிடுகின்றார்.)**

54. இலங்கை அரசனிடமிருந்து கப்பம் பெற்ற விஜயநகர அரசர்

A) கிருஷ்ண தேவராயர்

B) முதலாம் புக்கர்

C) ஹரிஹரர்

**D) இரண்டாம் தேவராயர்**

55. இரண்டாம் தேவராயரின் இறப்புக்குப் பின்_________ ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் கஜபதி படைகள் விஜயநகரின் மீது பலமுறை தாக்குதல்களை மேற்கொண்டன.

A) 1446 – 1450

B) 1450 – 1455

C) 1455 – 1460

**D) 1460 – 1465**

**(குறிப்பு: திருச்சிராப்பள்ளி வரை வெற்றிகரமாகப் படையெடுத்து வந்த கஜபதி படைகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியதோடு கோவில்களின் செல்வத்தையும் கொள்ளையடித்தன.)**

56. கஜபதியர்களிடமிருந்து விஜயநகரை காத்து, ஆந்திரக் கடற்கரை பகுதிகளை மீட்ட தளபதி சாளுவ நரசிம்மர் ________ஆண்டு அரசாட்சியை கைப்பற்றினார்.

A) 1483 B) 1484 **C) 1485** D) 1486

**(குறிப்பு: சாளுவ வம்ச அரசர்களின் எழுச்சி வரை தஞ்சாவூர், திருச்சி பகுதிகளில் திருமலைத்தேவர், கோனேரித் தேவர் போன்ற குறுநில மன்னர்கள் ஒரு சில பத்தாண்டுகள் சுதந்திர அரசர்களை போல ஆட்சி நடத்தினர்.)**

57. __________ என்ற மாபெரும் போர்வீரர் சாளுவ நரசிம்மரின் தளபதியாக திகழ்ந்தார்.

A) வீரநரசிம்மர்

**B) நரச நாயக்**

C) நரசிம்மர்

D) நரசிம்மராஜன்

**(குறிப்பு: நரச நாயக் தென்பகுதியில் கலகத்தில் ஈடுபட்ட உள்ளூர் தலைவர்களை அடக்க முயன்றார்.)**

58. சாளுவ நரசிம்மர் _________ ஆண்டு மரணமடைந்தார்.

A) 1486 B) 1488 C) 1490 **D) 1491**

**(குறிப்பு: சாளுவ நரசிம்மர் இறப்பதற்கு முன்பாக தனது இளம் வயது மகன்களை நரச நாயக்கரின் பாதுகாப்பில் விட்டுச்சென்றார். உண்மையான ஆட்சி அதிகாரம் தனது கைகளுக்கு வரப்பெற்ற நரச நாயக் தனது மரணம் வரையிலும் நாட்டை பாதுகாக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்.)**

59. நரச நாயக்கின் மூத்த மகனான வீரநரசிம்மர் துளுவ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்த ஆண்டு

A) 1501 B) 1503 **C) 1505** D) 1508

**(குறிப்பு: வீரநரசிம்மரைத் தொடர்ந்து அவருடைய தம்பி கிருஷ்ண தேவராயர் அரியணை ஏறினார்.)**

60. மைசூருக்கு அருகே இருந்த கலக மனப்பான்மை கொண்ட உம்மத்தூர் குறுநில மன்னனைத் தோற்கடித்துப் பணியச் செய்தவர்

**A) கிருஷ்ண தேவராயர்**

B) முதலாம் புக்கர்

C) ஹரிஹரர்

D) இரண்டாம் தேவராயர்

**(குறிப்பு: இந்த வெற்றியைத் தொடர்ந்து கிருஷ்ண தேவராயர் இருமுனைகளில் போரிட வேண்டியிருந்தது. ஒன்று பரம்பரை எதிரிகளான பாமினி சுல்தான்களுடன், மற்றொன்று ஒரிசாவின் கஜபதி அரசர்களுடன்.)**

61. கிருஷ்ணதேவராயர் தனது வெற்றித் தூணை நிறுவிய இடம்

A) பீடார்

B) குல்பர்கா

**C) சிம்மாச்சலம்**

D) விஜயநகர்

**(குறிப்பு: கிருஷ்ணதேவராயருடைய கிழக்குத் திசை படையெடுப்பின்போது கஜபதி அரசர்களின் வசமிருந்த உதயகிரி கோட்டையைப் போன்று பல கோட்டைகள் கைப்பற்றப்பட்டதைப் பற்றி பல கல்வெட்டுகள் தெளிவாக விளக்குகின்றன.)**

62. கூற்று: பாமினி படைகளை முறியடிப்பதற்காகக் கிருஷ்ணதேவராயர் ஒன்றுக்கும் மேற்பட்ட படையெடுப்புகளை ஆண்டுதோறும் மேற்கொள்ள நேர்ந்தது.

காரணம்: ஆண்டுக்கு ஒருமுறை என்ற கணக்கில் பாமினிப் படைகள் விஜயநகரை ஊடுருவின.

A) கூற்று சரி மற்றும் காரணம் தவறு

B) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**C) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

63. கிருஷ்ணதேவராயரிடமிருந்து, போர்ச்சுக்கீசியர்கள் ________ என்னும் இடத்தில் கோட்டை கட்டிக்கொள்ளும் உரிமையை பெற்றனர்.

A) கோவா

B) சிம்மாச்சலம்

C) தௌலதாபாத்

**D) பத்கல்**

**(குறிப்பு: ஒரு சில படையெடுப்புகளின்போது, மலபார், கொங்கணக் கடற்கரைப் பகுதிகளில் தங்களுடைய அதிகாரத்தை நிறுவுவதற்கு முயன்றுகொண்டிருந்த போர்த்துகீசியர் விஜயநகருக்கு இராணுவ உதவிகளைச் செய்தனர்.)**

64. கீழ்க்கண்ட எந்த இடங்களில் உள்ள சைவ வைணவக் கோயில்களுக்கு கிருஷ்ண தேவராயர் கொடையளித்தார்?

1. ஸ்ரீசைலம் 2. திருப்பதி 3. காளஹஸ்தி

4. காஞ்சிபுரம் 5. திருவண்ணாமலை 6. சிதம்பரம்

**A) அனைத்தும்** B) 1, 2, 3, 4 C) 2, 3, 4, 5 D) 1, 2, 3, 6

**(குறிப்பு: பல கோவில்களில் கிருஷ்ணதேவராயர் எழுப்பிய கோபுரங்கள் இன்று வரை உள்ளன.)**

65. கூற்று 1: விஜயநகருக்கு வருகை தந்த சமகாலத்து வெளிநாட்டுப் பயணிகளான நூனிஸ், பயஸ் போன்றோர் அவருடைய ஆளுமை குறித்தும் விஜயநகரத்தின் உயர் நிலை, செல்வச்செழிப்பு ஆகியன பற்றியும் பாராட்டுகளை விட்டுச் சென்றுள்ளனர்.

கூற்று 2: கிருஷ்ணதேவராயருடைய அரசவையை அல்லசானி பெத்தண்ணா போன்ற தலைசிறந்த புலவர்கள் அலங்கரித்தனர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

66. கூற்று 1: கிருஷ்ணதேவராயர் ஆமுக்தமால்யதா (ஆண்டாளின் கதை) எனும் நூலை இயற்றியுள்ளார்.

கூற்று 2: அச்சுததேவராயர் நாயக் அல்லது நாயங்காரா முறையை முதன்முதலில் அறிமுகப்படுத்தினார்.

**A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: கிருஷ்ணதேவராயர் நாயக் அல்லது நாயங்காரா முறையை மறுசீரமைப்பு செய்து அதற்கு சட்ட அங்கீகாரத்தையும் கொடுத்தார்.)**

67. கிருஷ்ணதேவராயர் இறந்தபோது அவருடைய மகன் குழந்தையாக இருந்ததால் அவருடைய சகோதரரான __________ என்பவர் ஆட்சிப் பொறுப்பேற்றார்.

A) ராமராஜா

**B) அச்சுத தேவராயர்**

C) நரச நாயக்கர்

D) செல்லப்பா

**(குறிப்பு: கிருஷ்ணதேவராயரின் மருமகனான ராமராஜா அச்சிறு வயது இளவரசனுக்கு பட்டம் சூட்டுவதன் வழியாக அரசியல் மேலாதிக்கம் செலுத்த விரும்பினார்.)**

68. விஜயநகர பேரரசின் வாரிசுரிமை பிரச்சனையில் கிருஷ்ணதேவராயரின் சகோதரரான அச்சுதராயருக்கு _________ என்பாரின் ஆதரவு இருந்தது.

A) வீரநரசிம்மர்

B) நரச நாயக்

**C) செல்லப்பா**

D) நரசிம்மராஜன்

**(குறிப்பு: செல்லப்பா (சாளுவ நாயக் என்றும் அறியப்படுபவர்) என்பவர் அக்காலக் கட்டத்தில் தமிழகத்தின் பெரும்பகுதியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். காலப்போக்கில் இவரே கிளர்ச்சியில் ஈடுபட அச்சுதராயர் பெரும்படையோடு தென்னகம் வந்து இவரை அடக்கினார்.)**

69. அச்சுததேவராயர் மரணமடைந்த ஆண்டு__________.

A) 1539 B) 1540 C) 1541 **D) 1542**

**(குறிப்பு: அச்சுததேவராயர் மரணமடைந்த பிறகு அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் அரச பதவியேற்று ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் ஆண்டார் (1542-70). ஆனால் உண்மையான அதிகாரம் ராமராஜாவின் கைகளில் இருந்தது.)**

70. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. சிறந்த வீரரும் ராணுவ வல்லுநருமான ராமராஜர் பாமினி சுல்தான்களை ஒருவரோடு ஒருவர் மோதச் செய்யும் திறமை பெற்றிருந்தார்.

2. போர்த்துகீசியரோடு ஒப்பந்தம் மேற்கொண்டதன் மூலம் பீஜப்பூர் அரசருக்குக் குதிரைகள் அனுப்பப்படுவதை நிறுத்தினார்.

3. சிலகாலம் கழித்து கோல்கொண்டா, அகமதுநகர் சுல்தான்களுக்கு எதிராக பீஜப்பூரோடு கைகோத்தார்.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

**(குறிப்பு: இத்தகைய பிரித்தாளும் சூழ்ச்சியின் விளைவாக, தக்காண சுல்தான்கள் தங்களது பரஸ்பர பகையை மறந்து ஒன்றுபட்டு, பொது எதிரிக்கு (விஜயநகர அரசு) எதிராக இறுதிப்போர் புரிய கைகோத்தனர்.)**

71. தலைக்கோட்டை போரில் விஜயநகரம் தோல்வியடைந்த பின் அரசர் சதாசிவராயரும் அவருடைய வீரர்களும் ________க்கு தப்பிச் சென்றனர்.

A) சந்திரகிரி

**B) பெனுகொண்டா**

C) மங்களூர்

D) பரகூர்

72. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. தலைக்கோட்டை போருக்கு பின் ராமராஜாவின் சகோதரர் 1570 இல் தன்னை அரசராக அறிவித்து நான்காவது அரசமரபான ஆரவீடு வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார்.

2. ராமராஜாவின் சகோதரரைத் தொடர்ந்து அவருடைய மகன்களும் பேரன்களும் அளவில் சுருங்கிய அரசை இரு தலைமுறை காலத்திற்கு 1620 வரை ஆட்சி புரிந்தனர்.

3. வேறு சில அரசர்கள் நிரந்தரத் தலைநகரமில்லாமல் நாடோடிகளாகத் திரிந்து 1670 வரை ஆட்சி புரிந்தனர்.

A) 1 மட்டும் தவறு

**B) 2 மட்டும் தவறு**

C) 3 மட்டும் தவறு

D) எதுவுமில்லை

**(குறிப்பு: ராமராஜாவின் சகோதரரைத் தொடர்ந்து அவருடைய மகன்களும் பேரன்களும் அளவில் சுருங்கிய அரசை இரு தலைமுறை காலத்திற்கு 1630 வரை ஆட்சி புரிந்தனர்.)**

73. கூற்று 1: 1601 இல் விஜயநகர அரசின் விசுவாசிகள் பெரும்பேடு என்னும் ஊரைச் சேர்ந்த யச்சம நாயக்கர் தலைமையிலும் எதிர்தரப்பினர் வேலூர் நாயக் (வேலூர்) தலைமையிலும் உத்திரமேரூரில் கடுமையான போரில் ஈடுபட்டனர்.

கூற்று 2: இப்போரில் சுதந்திர அரசுகளாக மாறிவிட்ட தஞ்சாவூர், மதுரை, செஞ்சி நாயக்க அரசுகள் வேலூர் நாயக்கை ஆதரித்தனர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

74. பொருத்துக.

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் | i) மகாபிரதானி |
| 2. தளவாய் | ii) தளபதி |
| 3. வாசல் | iii) அரண்மனைப் பாதுகாவலர் |
| 4. ராயசம் | iv) செயலர்/கணக்கர் |
| 5. அடைப்பம் | v) தனி உதவியாளர் |
| 6. காரிய கர்த்தா | vi) செயல் முகவர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **A)** | **i** | **ii** | **iii** | **iv** | **v** | **vi** |
| B) | ii | i | iii | v | iv | vi |
| C) | i | ii | iii | v | iv | vi |
| D) | iv | ii | iii | vi | i | v |

75. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு. (விஜயநகரப் பேரரசு)

1. முதலாம் ஹரிஹரரும் அவரைத் தொடர்ந்து ஆட்சி செய்தவர்களும் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை ஒருங்கிணைத்து அவற்றில் நிர்வாக அமைப்புகளை உருவாக்க முயன்றனர்.

2. ராஜ்யா என்னும் மண்டலங்களாக நாடு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ராஜ்யாவுக்கும் ஒரு ராயசம் நியமிக்கப்பட்டார்.

3. ஹொய்சாள, ராஜ்யா, அரகா, பரகூர், மங்களூர், முளுவாய் ஆகியன முக்கியமான ராஜ்யாக்களாகும்.

A) 1 மட்டும் தவறு

**B) 2 மட்டும் தவறு**

C) 3 மட்டும் தவறு

D) 1, 2 தவறு

**(குறிப்பு: ராஜ்யா என்னும் மண்டலங்களாக நாடு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ராஜ்யாவுக்கும் ஒரு பிரதானி (ஆளுநர்) நியமிக்கப்பட்டார்.)**

76. 1400இல் தமிழக பகுதிகளில் விஜயநகரை சேர்ந்த _________ராஜ்யாக்கள் இருந்தன.

A) 2 B) 3 C) 4 **D) 5**

**(குறிப்பு: சந்திரகிரி, படைவீடு, வலுதலும்பட்டு, திருச்சி, திருவாரூர் என்பன ஐந்து ராஜ்யாக்களாகும்.)**

77. கூற்று 1: விஜயநகர அரசில் பிரதானி என்பவர் அரசவை உறுப்பினராகவோ அல்லது ராணுவ அதிகாரியாகவோ இருப்பார்.

கூற்று 2: பிரதானி அரச குடும்பத்திற்கு உறவினராக இருப்பார்.

**A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: பிரதானி அரச குடும்பத்திற்கு உறவினர் அல்ல. நிர்வாகத்தில் அவருக்கு உதவி செய்யக் கணக்கர்களும் ராணுவ அதிகாரிகளும் பணியமர்த்தப்பட்டனர்.)**

78. கீழ்க்கண்டவற்றுள் எது ராஜ்யாவின் (விஜயநகர பேரரசு) நிர்வாகப் பிரிவு அல்ல?

A) சீமை

B) ஸ்தலம்

C) கம்பனா

**D) வாசல்**

**(குறிப்பு: விஜயநகர பேரரசின் மிகச்சிறிய நிர்வாக அலகு கிராமமாகும். துளுவ வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ணதேவராயரால் நாயக் முறை அறிமுகமானபோது ராஜ்யாக்கள் தங்களது நிர்வாக, வருவாய் முக்கியத்துவத்தை இழந்தன.)**

79. நாயக்க என்னும் சொல் தெலுங்கு, கன்னடப் பகுதிகளில் _________ நூற்றாண்டிலிருந்தே இராணுவத் தலைவர், அல்லது இராணுவ வீரர் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

A) 11 B) 12 **C) 13** D) 14

**(குறிப்பு: பதிமூன்றாம் நூற்றாண்டில் காகத்திய அரசில் ஒரு நாயக்கின் இராணுவ சேவைக்கும் பதிலாக ஒரு குறிப்பிட்ட பகுதியின் வருவாயை வழங்கும் முறை நடைமுறையில் இருந்தது. இது தில்லி சுல்தானியத்தில் பின்பற்றப்பட்ட இக்தா முறையைப் போன்றதாகும்.)**

80. கூற்று 1: விஜயநகர அரசில் இராணுவ சேவைக்கு பதிலாக வருவாய் ஈட்டித்தரும் நிலப்பகுதிகளை வழங்கும் முறை 1500 அல்லது அதற்குச் சற்று முன்னதாகவே தொடங்கிற்று.

கூற்று 2: கல்வெட்டுகள் இம்முறையைத் தமிழில் நாயக் கட்டணம் எனவும், நாயக்தானம் என மலையாலத்திலும், நாயன் கரமு என தெலுங்கிலும் குறிப்பிடுகின்றன.

**A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: கல்வெட்டுகள் இம்முறையைத் தமிழில் நாயக் கட்டணம் எனவும், நாயக்தானம் என கன்னடத்திலும், நாயன் கரமு என தெலுங்கிலும் குறிப்பிடுகின்றன.)**

81. நாயக்க முறை யாருடைய ஆட்சியின் போது நிறுவன வடிவம் பெற்றது?

1. ஹரிஹரர் 2. இரண்டாம் தேவராயர்

3. கிருஷ்ணதேவராயர் 4. அச்சுததேவராயர்

A) 1, 2 B) 2, 3 C) 1, 4 **D) 3, 4**

**(குறிப்பு: கல்வெட்டுச் சான்றுகளும் நூனிஸ், பயஸ் போன்ற வெளிநாட்டவரின் பயணக் குறிப்புகளும் இதை உறுதி செய்கின்றன.)**

82. விஜயநகர அரசு __________க்கும் மேற்பட்ட நாயக்குகளாக பிரிக்கப்பட்டிருந்ததாக நூனிஸ் குறிப்பிட்டுள்ளார்.

**A) 200** B) 250 C) 300 D) 400

**(குறிப்பு: இந்நாயக்குகள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரை, காலாட்படை வீரர்களைப் பராமரித்து தேவைப்படும் நேரத்தில் அரசருக்கு இராணுவச் சேவை செய்ய வற்புறுத்தப்பட்டார்கள் எனவும் நூனிஸ் குறிப்பிடுகின்றார்.)**

83. விஜயநகர பேரரசின் நாயக்க முறை பற்றிய நூனிஸின் கூற்றை _________ என்னும் நூல் உறுதிபடுத்துகிறது.

A) மதுரா விஜயம்

B) ஆமுக்த மால்யதா

**C) ராயவாசகமு**

D) மனுசரித்ரா

**(குறிப்பு: ராயவாசகமு என்பது தெலுங்கு மொழி நூலாகும். இந்நூல் கிருஷ்ணதேவராயரின் காலத்தில் நாயக்க முறை நடைமுறையில் இருந்ததைக் கூறுகிறது.)**

84. கூற்று 1: நாயக்குகள் ஒவ்வொரு ஆண்டிலும் சில குறிப்பிட்ட ஒன்பது நாள் இராமநவமித் திருவிழா போன்ற சமயங்களில் அரசருக்குக் குறிப்பிட்ட வருவாயை வழங்க வேண்டும்.

கூற்று 2: கிருஷ்ணதேவராயரிடம் பணிபுரிந்த செல்லப்பா போன்ற மிகச்சிறந்த நாயக்குகள் பிராமணர்கள் ஆவர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: பெரும்பாலான நாயக்குகள் கன்னட, தெலுங்கு போர்த் தளபதிகளாகவும் இருந்தனர்.)**

85. ___________ நூற்றாண்டு பெரும் நாயக்க அரசுகளின் நூற்றாண்டாகும்.

A) 15 B) 16 **C) 17** D) 18

**(குறிப்பு: நாயக்குகள் நாயக்தானம் எனப்பட்ட தங்களின் பகுதிகளில் உற்பத்தியைக் கட்டுப்படுத்தினர். பேட்டை எனும் வணிக மையங்களை நிறுவினர்.)**

86. கூற்று 1: பாமினி அரசவைகளில் நடைபெற்ற மோதல்களுக்குத் தக்காணப் பகுதிகளில் துருக்கியர், ஆப்கானியர், பாரசீகர் ஆகியோர் குடியேறியதே காரணமாயிற்று.

கூற்று 2: விஜயநகரப் பகுதிகளைப் பொறுத்த அளவில் கன்னட, தெலுங்கு போர் மரபுச் சமூகங்களும் அவர்களைச் சேர்ந்தோரும் தமிழகப் பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் குடியேறினர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

87. ட்டின் மையப்பகுதிகளில் ஒரு கிளர்ச்சி நடைபெற்றது

காரணம்: அரசு பிரதானி (ஆளுநர்) அவருடைய படைவீரர்கள் மற்றும் நிலப்பிரபுக்கள் உட்பட நியாயத்திற்குப் புறம்பாக அதிக வரி கட்டும்படி மக்களை வற்புறுத்தியதன் காரணமாக இக்கிளர்ச்சி ஏற்பட்டது.

A) கூற்று சரி மற்றும் காரணம் தவறு

B) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**C) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

**(குறிப்பு: சங்கம வம்ச அரசர்களின் காலத்தில் விஜயநகரத்தின் ஆட்சி புதிய பகுதிகளுக்குப் பரவியபோது வரிவசூல் அதிகாரிகள் கடுமையாக நடந்து கொண்டதால் உழைக்கும் மக்கள் கிளர்ச்சி செய்ததாகத் தெரிகிறது.)**

88. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

1. பதினாறாம் நூற்றாண்டில், நாயக்க நிர்வாக முறையில் நாயக்குகள் நெசவு போன்ற கைவினைத் தொழில்களை வளர்ப்பதற்காக அவ்வப்போது வரிச்சலுகை வழங்கினர்.

2. விஜயநகர அரசின் காலத்தில் வேளாண் சாராத கைவினைத்தொழில் உற்பத்தி வியத்தகு வளர்ச்சியை அடைந்தது.

3. வேளாண் அல்லாத பிரிவுகளை சார்ந்த பட்டடை அல்லது காஸய வர்க்கம் என்றழைக்கப்பட்டவர்கள் வரிகளைப் பணமாகவே வழங்கினர்.

4. தமிழகத்தின் வட பகுதி, ராயலசீமை, ஆந்திரக் கடற்கரைப்பகுதி ஆகியவற்றில் பெரும் எண்ணிக்கையில் வணிக மையங்களும் நெசவு மையங்களும் உருவாயின.

A) 1, 2 தவறு

B) 3 மட்டும் தவறு

C) 2, 4 தவறு

**D) எதுவுமில்லை**

**(குறிப்பு: பதினாறாம் நூற்றாண்டிலிருந்து ஜவுளி வணிகமானது இந்தியாவிற்கு வந்த போர்த்துகீசியர் மற்றும் ஏனைய ஐரோப்பிய வணிகர்களைப் பெரிதும் ஈர்த்த ஒன்றாகும்.)**

89. எந்த இரு பகுதிகளிடையே இடைப்படு நாடாகப் புதுக்கோட்டை இருந்தது

A) சோழ மற்றும் விஜயநகர அரசுகள்

**B) சோழ மற்றும் பாண்டிய அரசுகள்**

C) சேர மற்றும் பாண்டிய அரசுகள்

D) சோழ மற்றும் சேர அரசுகள்

**(குறிப்பு: புதுக்கோட்டை ஒரு சிறிய சிற்றரசாக மதுரை மற்றும் தஞ்சாவூர் நாயக்க அரசுகளின் இடையில் அமைந்திருந்தது.)**

90. இராமநாதபுரம் சிற்றரசு மதுரை நாயக்க அரசர் முத்துகிருஷ்ணப்ப நாயக்கரால் __________நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் துவக்கிவைக்கப்பட்டது.

A) 15 B) 16 **C) 17** D) 18

**(குறிப்பு: போர்புரியும் மரபினைக் கொண்டிருந்த இப்பகுதி வாழ் மக்கள் பாண்டிய சோழ விஜயநகர அரசர்களிடம் படை வீரர்களாக பணியாற்றினர்.)**

91. இராமேஸ்வரம் கோயில் _________ என்பவரின் பாதுகாப்பின் கீழிருந்தது.

A) நாயக்கர்கள்

B) அறங்காவலர்கள்

**C) உடையான் சேதுபதி**

D) பாண்டியர்கள்

**(குறிப்பு: உடையான் சேதுபதி என்பதற்கு இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான நீர் இணைப்பின் அல்லது பாலத்தின் தலைவர் என்று பொருள்.)**

92. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. இராமநாதபுரம் பகுதி வாழ் மக்களைப் போலவே புதுக்கோட்டை பகுதி வாழ் மக்களும் போர்புரியும் மரபை சார்ந்தவர்களாவர்.

2. இதன் காரணமாகவே தொண்டைமான்களின் தலைமையில் புதுக்கோட்டை ஒரு சிற்றரசு என்னும் மதிப்பை பெற்றது.

3. இத்தொண்டைமான்கள் சேதுபதி, மதுரை, தஞ்சை நாயக்க அரசர்களின் அரண்மனைகளில் முக்கிய பணிகளில் பணியாற்றினர்.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 4 சரி

# 11th History Lesson 8 Questions in Tamil

## 8] பண்பாட்டு ஒருமைப்பாடு: இந்தியாவில் பக்தி இயக்கம்

1) தாய் தெய்வ வழிபாடு கீழ்காணும் எந்த இடத்தில் தொடங்கியது?

**A) ஹரப்பா**

B) மொகஞ்சதாரோ

C) லோத்தல்

D) காலிபங்கன்

**(குறிப்பு - ஆரிய மொழி பேசிய மக்களின் வருகையோடு இந்தியா வந்த வேத மதம் ஹிந்து நாகரிகத்தின் பல கூறுகளை உள்வாங்கிக் கொண்டது. ஹரப்பாவில் தாய் தெய்வ வழிபாடு தொடங்குகிறது)**

2) சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட சிற்பம் கீழ்க்காணும் எந்த தெய்வத்தை பிரதிபலித்தது?

**A) சிவன்**

B) விஷ்ணு

C) இந்திரன்

D) வருணன்

**(குறிப்பு - நீண்ட பண்பாட்டு வரலாற்றை கொண்டிருக்கும் நாடான இந்தியாவில், மதங்கள் பல்வகைப்பட்ட மரபுகளோடு தொடர்புகொண்டு வளர்ந்துள்ளன. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சிற்பம் சிவன் என அடையாளம் காணப்பட்டுள்ளது)**

3) கீழ்காணும் கடவுள்களுள் வேத கடவுள் அல்லாதவர் யார்?

A) வருணன்

B) இந்திரன்

C) அக்கினி

**D) பிரம்மன்**

**(குறிப்பு - இந்திரன், வருணன் மற்றும் அக்கினி ஆகியோர் முக்கிய வேத கடவுள்கள் ஆவர். சிவன் மற்றும் விஷ்ணு வழிபாடு பின்னர் வளர்ந்தனவாகும்)**

4) பொது ஆண்டுக்கு முந்திய முதலாயிரமாண்டின் இடைப்பகுதியில் சிந்து கங்கைச்சமவெளியில் தோன்றிய மதம் எது?

I. பௌத்தம்

II. சமணம்

III. சீக்கியம்

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - பொது ஆண்டுக்கு முந்திய முதலாயிரமாண்டின் (கி.மு 1000) இடைப்பகுதியில் சிந்து கங்கை சமவெளியில் பௌத்தம் மற்றும் சமனம் எனும் இரு மகத்தான மதங்கள் உருவாகின.( ஆசிவகம் போன்ற ஏனைய புறக்கோட்பாட்டு மதங்கள் போன்றே) இவை வைதீக வேத மத நடைமுறைகளை எதிர்த்தன)**

5) ஆதிசங்கரர் உருவாக்கிய தத்துவக்கோட்பாடு எது?

A) துவைதம்

**B) அத்வைதம்**

C) விசிஷ்டாத்வைதம்

D) இவை எதுவும் அல்ல

**(குறிப்பு - ஆதிசங்கரர் பிற மதக் கோட்பாடுகளை எதிர்கொள்ளும் பொருட்டு இந்து மதத்திற்கு அத்வைதம் என்னும் தத்துவக் கோட்பாட்டை வழங்கினா**ர்)

6) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - தென்னிந்தியா ஏழாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரை மத மறுமலர்ச்சியின் இல்லமாக விளங்கியது.

கூற்று 2 - பதினோராம் நூற்றாண்டில் ஒரு தத்துவ, சித்தாந்த இயக்கமாக மறுவடிவம் கொண்டது.

கூற்று 3 - பக்தி வழிபாடு அடியார்கள் கொடுத்த ஊக்கத்தினால் 14ஆம் நூற்றாண்டில் இந்தியா முழுவதிலும் பரவியது

**A) கூற்று 1, 2 மட்டும் சரி**

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

**(குறிப்பு - சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் உள்ளத்தை உருக்கும் பாடல்களால் பக்தி கோட்பாட்டிற்கு ஒரு வடிவம் கொடுத்து மக்களின் ஆதரவைப் பெற்றனர். வரலாற்று ஆய்வாளர்கள் இதனை பக்தி இயக்கம் என அழைக்கின்றனர்)**

7) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. பௌத்தமும் சமணமும் பெரும்பாலும் வணிக வர்க்கத்தினரால் ஆதரிக்கபட்டன.

II. பக்தி இயக்கம் நிலவுடைமை சாதிகளிடையே இருந்து தோன்றியதால் அது பௌத்தத்தையும் சமணத்தையும் விமர்சனம் செய்தது.

III. இதன் விளைவாக அரசர்களின் ஆதரவை பெறுவதில் மோதல்கள் ஏற்பட்டன.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - பக்தியானது சாதி, பாலின வேறுபாடுகள் இன்றி அனைவராலும் அணுக இயலும் என்ற நிலையை ஏற்படுத்தியது மூலம் சமணமும் பௌத்தமும் பிராமணர்களின் அதிகாரத்தை எதிர்த்தன)**

8) தேவாரம் என்னும் நூல் கீழ்க்கண்ட யாரால் எழுதப்பட்ட பாடல்களைக் கொண்டவை ஆகும்?

A) திருநாவுக்கரசர்

B) திருஞானசம்பந்தர்

C) சுந்தரர்

**D) இம்மூவரும்**

**(குறிப்பு - பக்தி இலக்கியங்கள், பெரும்பாலும் புராணங்கள் திருத்தொண்டர்கள் ஐ பற்றிய வரலாற்று நூல்கள் ஆகியவை தமிழகத்தில் நடைபெற்ற மத மோதல்கள் குறித்த செய்திகளை வழங்குகின்றன. தேவாரம் ஆனது திருநாவுக்கரசர் என்றழைக்கப்படும் அப்பர், ஞானசம்பந்தர் மற்றும் சுந்தரர் ஆகிய மூவரால் எழுதப்பட்ட பாடல்களைக் கொண்டவை)**

9) தேவாரம் பன்னிரு திருமுறைகளுள் எந்த இடத்தில் வகிக்கிறது?

**A) முதல் ஏழு திருமுறைகள்**

B) எட்டு மற்றும் ஒன்பதாம் திருமுறைகள்

C) பத்தாம் திருமுறை

D) பதினோராம் திருமுறை

**(குறிப்பு - தேவாரம் அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரால் எழுதப்பட்ட பாடல்களைக் கொண்டவை. இவை மூன்றும் சேர்ந்து பன்னிரு சைவத் திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளாக இடம்பெறுகின்றன. மாணிக்கவாசகரின் பாடல்கள் எட்டாவது திருமுறையாகும்)**

10) 63 நாயன்மார்கள் பற்றி கூறும் நூல் எது?

**A) பெரியபுராணம்**

B) சிவபுராணம்

C) அடியார் புராணம்

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - அறுபத்து மூன்று நாயன்மார்கள் பற்றி கூறும் சேக்கிழாரின் பெரியபுராணம் பக்தி இயக்கம் குறித்த முக்கிய சான்று ஆகும். வைணவ அடியார்கள் ஆன ஆழ்வார்களின் பாடல்கள் நாலாயிர திவ்ய பிரபந்தமாக தொகுக்கப்பட்டுள்ளன)**

11) யாருடைய காலத்தில் முதன்முதலாக சைவமும் வைணவமும் ஒரு புறமாகவும் சமணம் மறுபுறமாகவும் இருந்து மோதிக்கொண்டன?

A) சேரர்கள்

B) சோழர்கள்

C) பாண்டியர்கள்

**D) பல்லவர்கள்**

**(குறிப்பு - பல்லவர் காலத்தில்தான் முதன் முதலாக சைவமும் வைணவமும் ஒரு புறமாகவும் சமணம் மறுபுறம் இருந்து மோதிக்கொண்டன. முதலாம் மகேந்திரவர்ம பல்லவர் சமணத்தை பின்பற்றியதால் ஏனைய மதங்களை சேர்ந்தவர்களை துன்புறுத்தினார்)**

12) தர்மசேனன் என்னும் இயற்பெயர் கீழ்க்கண்டவரில் யாருடையது ஆகும்?

A) சுந்தரர்

B) திருஞானசம்பந்தர்

**C) அப்பர்**

D) மாணிக்கவாசகர்

**(குறிப்பு - அப்பர் தொடக்கத்தில் சமண மதத்தை சார்ந்தவராக இருந்தார். தருமசேனர் என்னும் பெயரை உடையவராய் இருந்தார். பின்னர் தமது தமக்கையின் செல்வாக்கால் சைவ சமயத்தை தழுவினார்)**

13) முதலாம் மகேந்திரவர்மன் யாரால் ஈர்க்கப்பட்டு சைவ மதத்திற்கு மாறினார்?

A) சுந்தரர்

B) திருஞானசம்பந்தர்

**C) அப்பர்**

D) மாணிக்கவாசகர்

**(குறிப்பு - அப்பர் தொடக்கத்தில் சமணராக தருமசேனர் என்னும் பெயருடன் இருந்தார். பின்னர் தமது தமக்கையின் செல்வாக்கால் சைவ மதத்தைத் தழுவினார். சில சமணர்களால் தூண்டப்பட்ட மகேந்திரவர்ம பல்லவர் அப்பரை மீண்டும் சமணராக மாறும்படி வற்புறுத்தினார். எனினும் முடிவில் மகேந்திரவர்மன் சைவ மதத்திற்கு மாறினார்)**

14) சமணர்கள் கழுவில் ஏற்ற காரணம் என்ன?

A) பிற சமய வழிபாட்டினரை கொன்றதால்

**B) இறையியல் வாதங்களில் தோற்றதால்**

C) பிற சமயங்களை தூற்றியதால்

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - மரபு சார்ந்த ஒரு கதையின் படி திருஞானசம்பந்தர் இறையியல் வாதங்களில் சமணர்களை வென்றதால் தோற்றுப்போன சமணர்கள் கழுவில் ஏற்றப்பட்டனர்)**

15) கீழ்காணும் எந்த பாண்டிய அரசன் சைவ மதத்தில் இருந்து சமண சமயத்திற்கு மாறிய பின்னர் மீண்டும் சைவ மதத்திற்கு மாறியவர்?

A) சுந்தரபாண்டியன்

B) வீர சேகர பாண்டியன்

**C) மாறவர்மன் அரிகேசரி**

D) வீரபாண்டியன்

**(குறிப்பு - கூன்பாண்டியன் எனவும் அறியப்பட்ட மாறவர்மன் அரிகேசரி (640-670) சைவத்தில் இருந்து சமணத்திற்கு மாறிய பின்னர் சம்பந்தருடைய செல்வாக்கால் மீண்டும் சைவரானார். ஒரு சைவ கதையின்படி சைவத்திற்கு திரும்பிய பின்னர் சமணர் பலரை மதுரை மாவட்டத்திலுள்ள சமந்தம் என்னும் ஊரில் கொல்லும்படி ஆணையிட்டதாகவும் தெரிகிறது)**

16) பௌத்த சமண பாதங்களை முற்றிலுமாக எதிர்க்கும் பிரிவான 'பரபக்கம்' என்னும் பிரிவு எந்த நூலில் அமைந்துள்ளது?

**A) சிவஞான சித்தியார்**

B) பெரியபுராணம்

C) திருத்தொண்டர் புராணம்

D) நாலாயிர திவ்ய பிரபந்தம்

**(குறிப்பு - சைவ சித்தாந்தம் போன்ற தத்துவ ஆய்வு நூல்கள் பௌத்த சமண தத்துவ மோதல்களை விரிவாக விளக்குகின்றன. சைவ சித்தாந்த நூல்களில் ஒன்றான சிவஞானசித்தியாரில் பரபக்கம் என்ற பெயரில் தனி பிரிவு ஒன்று உள்ளது. அது பௌத்த சமண மதங்களை முற்றிலுமாக எதிர்க்கின்றது)**

17) பௌத்தமும் சமணமும் கீழ்காணும் எந்த நூற்றாண்டில் முற்றிலுமாக தோற்கடிக்கப்பட்டன?

A) பத்தாம் நூற்றாண்டில்

**B) பதினோராம் நூற்றாண்டில்**

C) பன்னிரண்டாம் நூற்றாண்டில்

D) பதின்மூன்றாம் நூற்றாண்டில்

**(குறிப்பு - தத்துவம் சார்ந்த வாதங்கள் ஒரு பக்கம் நடைபெற்றாலும் பக்தி இயக்கம் மன்னர் ஆதரவைப் பெற்று இருந்ததன் விளைவாக பௌத்தமும் சமணமும் தோல்வியைச் சந்தித்தன. பதினோராம் நூற்றாண்டில் இவ்விரு மதங்களும் முற்றிலுமாக தோற்கடிக்கப்பட்டன)**

18) பௌத்தம் மற்றும் சமணம் ஆகியவற்றின் மையக்கருத்தான ___________ சைவமும் வைணவமும் ஏற்றுக்கொண்டன.

A) அன்புடைமையை

B) பொருளுடைமையை

**C) துறவறத்தை**

D) உருவ வழிபாட்டினை

**(குறிப்பு - பௌத்தம், சமணம் ஆகியவற்றின் மையக்கருத்தான துறவறத்தை சைவமும் வைணவமும் ஏற்றுக்கொண்டன. பௌத்தம், வைணவம் ஆகிய இரண்டும் எளிமையையும் உலக சுகங்களை மறுப்பதையும் முன்னிறுத்திய போது பக்தி இயக்கம், விழாக்கள், சடங்குகள் என வாழ்க்கையை கொண்டாடியது)**

19) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - புறச் சமயங்கள் வடமொழியான பிராகிருதத்தை பயன்படுத்ததற்கு எதிர்வினையாக தமிழ்மொழிக்கு மேல் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

கூற்று 2 - பௌத்தமும் சமணமும் ஊழ்வினை கோட்பாட்டை பேசியபோது பக்தி இயக்கத்தை விளக்கியவர்கள் சிவனையும் விஷ்ணுவையும் சரணடைவது மூலம் விதியை வெல்ல முடியும் எனக் கூறினர்

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - பௌத்தம் மற்றும் சமணம் ஆகியவற்றுடன் ஏற்பட்ட மோதலின் விளைவாக வேத மதங்கள் சில மாறுதல்களுக்கு உள்ளாயின)**

20) ராமானுஜர் உருவாக்கிய தத்துவக் கோட்பாடு எது?

A) துவைதம்

B) அத்வைதம்

**C) விசிஷ்டாத்வைதம்**

D) இவை எதுவும் அல்ல

**(குறிப்பு - தென்னிந்தியாவில் பக்தி இயக்கம் அதன் புகழின் உச்சத்தை எட்டிய போது பக்தி கோட்பாட்டளவில் வைணவ புலவர்களாலும் அடியார்களாளும் தத்துவ தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விளக்கப்பட்டது. ராமானுஜர் விசிஷ்டாத்வைதம் என்னும் தத்துவத்தை உருவாக்கினார்)**

21) கீழ்க்காணும் எந்த சமூகப் பின்னடைவுகளுக்கு எதிராக வட இந்தியாவில் பக்தி இயக்கம் குரல் கொடுத்தது?

I. சாதியை அடிப்படையாகக் கொண்ட பிரிவினைகள்

II. ஒதுக்கி வைத்தல்

III. பல கடவுள்களை வணங்கும் முறை

IV. உருவவழிபாடு

A) I, II, III

B) I, II, IV

C) II, III, IV

**D) I, II, III, IV**

**(குறிப்பு - தமிழகத்தில் பக்தி இயக்கம் ஏழாம் நூற்றாண்டிலேயே செழித்தோங்கி இருந்த நிலையில் வட இந்தியாவில் பதினைந்தாம் நூற்றாண்டில் தான் அது முழு வேகத்தை பெற்றது. இக்காலத்தில் பெரும் எண்ணிக்கையில் பக்தி பாடல்கள் எழுதப்பட்டன)**

22) கீழ்க்கண்டவர்களுள் இஸ்லாமிய ஞானிகளாக கருதப்படுபவர்கள் யார்?

I.சூபி

II. வாலி

III. தர்வீஷ்

IV. பக்கீர்

A) I, II, IV மட்டும்

B) I, III, IV மட்டும்

C) II, III, IV மட்டும்

**D) I, II, III, IV**

**(குறிப்பு - இந்து மதத்தில் தோன்றிய பக்தி இயக்கத்திற்கு இணையாக இஸ்லாம் மதத்தில் அதை போன்ற கருத்துக்களை சூஃபியிசம் கொண்டிருந்தது. சூபி, வாலி, தர்வீஷ், பக்கீர் ஆகிய பெயர்கள் இஸ்லாமிய ஞானிகளே குறிப்பதாகும். இவர்கள் தியானம், யோகா பயிற்சிகள், துறவரம், தியாகம் போன்றவற்றின் மூலம் உள்ளுணர்வை பெருக்கி இறைநிலையை உணர்ந்தவர்கள் ஆவர்)**

23) சூபியிசம் கீழ்க்காணும் எந்த நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்ற சக்தியாக விளங்கியது?

A) பத்தாம் நூற்றாண்டில்

B) பதினோராம் நூற்றாண்டில்

**C) பன்னிரண்டாம் நூற்றாண்டில்**

D) பதிமூன்றாம் நூற்றாண்டில்

**(குறிப்பு - துருக்கிய படையெடுப்புடன் கூடிய இஸ்லாமின் வருகை வேத மதங்களுக்கும் குருமார்களுக்கும் பெரும் சவாலாக திகழ்ந்தது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இஸ்லாமியரின் சமூக வாழ்வில் சூபியிசம் செல்வாக்கு மிக்க சக்தியாக விளங்கியது)**

24) சூபியிசம் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. சூபியிசம் இஸ்லாமின் உள்ளுணர்வு சார்ந்த உள்முகமான, ஆச்சரியமான மற்றொரு பக்கம் ஆகும்.

II. இவர்கள் மனித குலத்தின் மேம்பாட்டிற்காக பணி செய்தனர். இவர்கள் தத்துவஞானிகள் ஆவர்.

III. இறைவனை அனைத்துக்கும் மேலான அழகின் உச்சம் என சூபிகள் கருதினர்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - இறைவனை அனைத்துக்கும் மேலான அழகின் உச்சம் என சூபிகள் கருதினர். அவ்வழகை கண்டு ஆச்சரியப்படவேண்டும், அதை நினைத்து மகிழ்ச்சி கொள்ளுதல் வேண்டும், முழு கவனத்தையும் இறைவன் மேல் குவித்தல் வேண்டும் என்றனர்)**

25) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. சூபிசம் அனைத்து விதமான மத சம்பிரதாயம், பழமைவாதம், வெளிவேடம் ஆகியவற்றை எதிர்த்தது.

II. ஆன்மீக பேரின்ப நிலையை மட்டும் இலக்காகக் கொண்ட புதிய உலக ஒழுங்கை உருவாக்க ஆசை கொண்டது

III. சூபீஸம் பல பிரிவுகளைக் கொண்டது ஆகும்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - சூபிகளின் மகத்தான பங்களிப்பு இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயான வெறுப்பின் கூறிய முனைகளை மழுங்கடித்து அவர்களிடையே சகோதரத்துவத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தியதாகும்)**

26) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளாக கருதப்படுவனவற்றுள் தவறானது எது?

A) பக்தி இயக்க சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையை போதித்தனர்.

B) குருவானவர் வழிகாட்டியாகவும் ஆசிரியராகவும் இருத்தல் வேண்டும்.

C) ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாட வேண்டும் என வலியுறுத்தினர்

**D) எந்த மொழியையும் புனிதமான மொழி என அவர்கள் கருதினர்**

**(குறிப்பு - பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளாக கருதப்படுவன, பிறப்பு இறப்பு எலும்பு சுழற்சியிலிருந்து விடுபட முடியும் என நம்பினர். இறைவனிடம் ஆழமான மற்றும் நம்பிக்கையும் கொள்வதன் மூலம் முக்தி அடைய முடியும் என்னும் கருத்தை முன்வைத்தனர். உருவ வழிபாட்டை விமர்சனம் செய்தனர். மனிதர்கள் உட்பட அனைத்து உயிரினங்களும் கடவுளின் குழந்தைகளே எனக் கூறினர்)**

27) கீழ்க்கண்டவரில் ராமானந்தரின் சீடராக இருந்தவர் யார்?

A) நாமதேவர்

**B) கபீர்**

C) சைதன்யர்

D) குருநானக்

**(குறிப்பு - இடைக்கால இந்தியாவின் மிக முக்கியமான பண்பாட்டு ஆளுமையாக கபீர் கருதப்படுகிறார். புனிதங்கள் எனக் கருதப்பட்டவற்றை கேள்விக்குறியாக்கும் அவருடைய பாடல்கள், சடங்குகள் சம்பிரதாயங்களை கேலிக்குரியதாக்கி கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்ற கருத்தை முன்வைத்தன)**

28) கபீர் பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எது தவறானது?

A) இவர் ராமானந்தரின் சீடர் ஆவார்.

B) உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு போன்றவற்றை எதிர்த்தார்.

C) இஸ்லாம் மதத்தில் இருந்த சம்பிரதாயங்களை கடுமையாக விமர்சித்தார்

**D) இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரிப்பதற்கு ஆதரவு காட்டினார்.**

**(குறிப்பு - முற்போக்கான மதச்சிந்தனைகளைக் கொண்ட கபீர், இந்து இஸ்லாமிய மதங்களில் உள்ள பிரிவினைவாதங்களையும், குறுகிய மனப்பான்மைகளையும் எதிர்த்தார். இந்து சமூகத்தின் கீழ் தட்டுகளை சார்ந்த மக்கள் அவருடைய கருத்துக்களால் கவரப்பட்டனர். கடவுளை அடைய அவர் கண்டடைந்த பாதை கீழ்நிலையில் உள்ளோருக்கும் மேல் நிலையில் உள்ளோருக்கும் ஏற்புடையதாக இருந்தது)**

29) சூபிசம் கொண்டுள்ள பிரிவுகளில் கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?

I. சிஸ்டி

II. சுரவார்ட்டி

III. குவாதிரியா

IV. நஸ்பந்தி

A) I, II, IV மட்டும்

B) I, III, IV மட்டும்

C) II, III, IV மட்டும்

**D) I, II, III, IV**

**(குறிப்பு - சூபிகள் கடவுளை மஸ்க் ( நேசிக்கப்படவேண்டியவர்) என்றும் தங்களை ஆசிக் ( நேசிப்பவர்கள்) என்றும் நம்பினர். பின்னாளில் சூபியிசம் பல பிரிவுகளைக் கொண்டதாக மாறியது)**

30) அவர்களில் யார் தோல் பதனிடுவோர் குடும்பத்தை சேர்ந்தவர் என வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர்?

A) நாமதேவர்

B) கபீர்

C) சைதன்யர்

**D) ரவிதாஸ்**

**(குறிப்பு - ரவிதாஸ் பதினாறாம் நூற்றாண்டின் பக்தி இயக்கத்தை சேர்ந்த கவிஞரும் துறவியும் ஆவார். பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம் ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்களால் குருவாக வணங்கப்படுபவர். அவர் இயற்றிய பக்தி பாடல்கள் பக்தி இயக்கத்தின் மேல் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின)**

31) சீக்கியர்களின் மத பாடல்களில் யாருடைய பாடல்கள் இடம்பெற்றுள்ளன?

A) கபீர்

**B) ரவிதாஸ்**

C) நாமதேவர்

D) சைதன்யர்

**(குறிப்பு - ரவிதாஸ் பக்தி இயக்க துறவியும், புலவருமான ராமானந்தரின் சீடர்களில் ஒருவராவார். சீக்கியர்களின் மத பாடல்களில் ரவிதாசரின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. சாதி அடிப்படையிலான சமூக பிரிவுகள் ஆண், பெண் சமத்துவமின்மை ஆகியவற்றுக்கு எதிராக பேசினார்)**

32) சீக்கிய மதத்தை உருவாக்கியவர் யார்?

**A) குருநானக்**

B) குரு கோவிந்த சிங்

C) குரு அர்ஜுன் சிங்

D) நாமதேவர்

**(குறிப்பு - குருநானக் மிகப்பெரும் அமைப்பின் செல்வாக்குமிக்க துறவியாவார். அவரால் நிறுவப்பட்ட சீக்கிய மதம் அவருடைய, ஐயப்பாடிற்கு அப்பாற்பட்ட பண்பாட்டு ஒற்றுமை சிந்தனையை பறைசாற்றுகிறது)**

33) சீக்கிய மதத்தின் கடைசி குரு யார்?

A) குரு ராமதாஸ்

B) குரு தேக் பகதூர் சிங்

C) குரு அர்ஜுன் தேவ்

**D) குரு கோவிந்த சிங்**

**(குறிப்பு - சீக்கிய குருக்களின் தலைமையில் சீக்கிய மதம் பஞ்சாப் முழுவதும் விரிவடைந்து பெருவாரியான மக்களை ஈர்த்தது. சீக்கிய மத போதனைகள் வலிமை வாய்ந்த சமூக உணர்வை ஏற்படுத்தின. அக்காலத்தில் நிலவிய அரசியல் சூழல் முகலாயப் பேரரசுடன் பகைமையை உருவாக்கிக் அடக்குமுறைக்கு வழிவகுத்து இறுதியில் குருக்களின் உயிர் தியாகத்தில் முடிந்தது)**

34) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - குரு கோவிந்த சிங் சீக்கிய மதத்தின் கடைசி குரு ஆவார்.

கூற்று 2 - அவருக்குப் பின்னர் கிரந்த சாகிப் (புனித நூல்) குருவாக கருதப்பட்டது.

கூற்று 3 - குருநானக்கின் போதனைகள் குரு கிரந்த சாகிப் ஆகும்.

**A) கூற்று 1, 2 மட்டும் சரி**

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

**(குறிப்பு - குருநானக்கின் போதனைகள் ஆதிகிரந்தம் ஆகும். ஏனைய சீக்கிய குருக்களின் போதனைகளும், ராமானந்தர், கபீர், நாமதேவர் போன்ற பக்தி இயக்கக் கவிஞர் களின் சூபி துறவிகளின் போதனைகளும் ஆதி கிரந்தத்தோடு சேர்த்து குரு கிரந்த சாகிப் எனப்படுகிறது)**

35) சைதன்யர் கீழ்காணும் எந்த மாநிலத்தை சேர்ந்தவர் ஆவார்?

A) பீகார்

B) குஜராத்

**C) வங்காளம்**

D) பஞ்சாப்

**(குறிப்பு - வங்காளத்தைச் சேர்ந்த சைதன்யர் பக்தி இயக்கத்தின் ஒரு குறிப்பிட்ட நிலையை பிரதிபலித்தார். கபீர் மற்றும் அவரைத் தொடர்ந்து வந்த பக்தி இயக்க துறவிகளின் போதனைகளில் இருந்து அவர் வேறுபட்டார். அனைத்து வேறுபாடுகளையும் கடந்து நிற்கும் இறைவனை புரிந்து கொள்ள மக்களை ஒருங்கிணைத்த கபீரை போலல்லாமல் சைதன்யர் ஏனைய கடவுள்கள் காட்டிலும் கிருஷ்ணர் உயர்வானவர் என கொண்டார்)**

36) இறைவழிபாட்டில் குழுவாக கூடி பாட்டிசைத்து அத்துடன் பரவசத்தை ஏற்படுத்தும் நடனமாடும் பழக்கத்தை பிரபலமாக்கியவர் யார்?

A) கபீர்

B) நாமதேவர்

**C) சைதன்யர்**

D) ரவிதாஸ்

**(குறிப்பு - சைதன்யர் இறைவழிபாட்டில் குழுவாக கூடி பாட்டிசைத்து அத்துடன் பரவசத்தை ஏற்படுத்தும் நடனமாடும் பழக்கத்தை பிரபலம் ஆக்கினார். அவருடைய இயக்கம் வங்காளத்திலும் ஒரிசாவிலும் பிரபலமானது.)**

37) நாமதேவர் கீழ்க்காணும் எந்த மாநிலத்தை சேர்ந்தவர் ஆவார்?

A) பீகார்

B) குஜராத்

**C) மகாராஷ்டிரா**

D) வங்காளம்

**(குறிப்பு - மகாராஷ்டிராவில் சதாரா மாவட்டத்தில் நரஸ் வாமணி எனும் கிராமத்தில் தையல் கலைஞரின் மகனாக நாமதேவர் பிறந்தார்)**

38) நாமதேவர் யாரால் ஈர்க்கப்பட்டார்?

**A) ஜன தேவர்**

B) சைதன்யர்

C) குருநானக்

D) ராமானந்தர்

**(குறிப்பு - நாமதேவர், ஜன தேவர் எனும் துறவியால் ஈர்க்கப்பட்டு பக்தி இயக்கத்தில் பங்கெடுத்தார். நாமதேவர் பந்தர்பூரிலுள்ள விட்டலாவின்(விஷ்ணு) மேல் தீவிர பக்தி கொண்டவர்.)**

39) அபங்க எனும் இந்து மத குருமார்கள் இறைவனைப் புகழ்ந்து எழுதிய பாடல்களை எழுதியவர் யார்?

A) ஜன தேவர்

**B) நாமதேவர்**

C) குருநானக்

D) ராமானந்தர்

**(குறிப்பு - நாமதேவர் பெரும்பாலும் தன் சீடர்களுடன் பெரும்பாலான நேரத்தை இறைவழிபாட்டிலும் தானே இயற்றிய பாடல்களைப் பாடுவதிலும் கழித்தார். மராத்திய மற்றும் இந்திய மொழிகளில் அபங்க( மகாராஷ்டிராவை சேர்ந்த இந்து மத குருமார்கள் இறைவனை புகழ்ந்து எழுதிய பாடல்கள்) என்றழைக்கப்பட்ட பாடல்களை எழுதினார். இவர் பஞ்சாப் வரை பயணம் மேற்கொண்டார்)**

40) அலகாபாத் என்றழைக்கப்படும் பிரயாகையில் பிறந்தவர் யார்?

A) ஜன தேவர்

B) சைதன்யர்

C) குருநானக்

**D) ராமானந்தர்**

**( குறிப்பு - ராமானந்தர் மாதவாச்சாரியாரின் தத்துவ பள்ளியை சேர்ந்தவர். ராமானந்தர் ராமானுஜரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர். பிரயாகை என்றழைக்கப்படும் அலகாபாத்தில் பிறந்த ராமானந்தர் காசியில் இந்து மத தத்துவத்தின் உயர் கல்வியைக் கற்று ராமானுஜரின் பள்ளியில் போதகராக பணியில் அமர்ந்தார்)**

41) ராமானந்தரின் சீடர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர்கள் கீழ்க்கண்டவர்களுள் யார்?

I. ரவிதாஸ்

II. கபீர்

III. சூர்தாஸ்

**A) I, II மட்டும்**

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவர்கள் அனைவரும்

**(குறிப்பு - கடவுளின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையை ராமானந்தர் போதித்தார். சமூகத்தின் அடித்தளத்தில் சேர்ந்த மக்கள் இவரை பின்பற்றினர். ரவிதாஸ், கபீர் மற்றும் இரண்டு பெண்கள் அவருடைய 12 சீடர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர் என்பது மரபு)**

42) பிராந்திய மொழியான இந்தியில் தனது கொள்கைகளை போதித்தவர்களில் முதலாமவர் கீழ்கண்டவருள் யார்?

A) ஜன தேவர்

B) சைதன்யர்

C) குருநானக்

**D) ராமானந்தர்**

**(குறிப்பு - ராமானந்தரின் சீடர்கள், மிதவாதிகள் மற்றும் முற்போக்கர்கள் என இரு பிரிவாக பிரிந்தனர். துளசிதாசர் உள்ளடக்கிய முற்போக்கு பிரிவினர் இந்துக்களும் முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் புதிய சிந்தனையை உருவாக்கப் பெரும் முயற்சி எடுத்தனர்)**

43) மீராபாய் கீழ்காணும் எந்த மாநிலத்தில் பிறந்தார்?

**A) ராஜஸ்தான்**

B) பஞ்சாப்

C) மகாராஷ்டிரா

D) மத்திய பிரதேசம்

**(குறிப்பு - மீராபாய் ராஜஸ்தானில், மேர்தா மாவட்டத்தில் குத் என்னும் ஊரில் பிறந்தார். ஜோத்புர் அரசை நிறுவிய ராணா ஜோதாஜியின் கொள்ளு பேத்தி ஆவார்)**

44) மேவாரின் அரசனான ராணா சங்காவின் மகனான போஜராஜன் என்பவரை மணந்தவர் யார்?

**A) மீராபாய்**

B) ஜான்சிராணி

C) சிந்தியா பாட்டீல்

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - கிருஷ்ணரின் தீவிர பக்தையாக மாறிய மீராபாய் அரண்மனையை விட்டு வெளியேறி அன்பே கடவுளை அடையும் வழி என போதனை செய்யவும் பஜனை பாடல்களை பாடவும் தொடங்கினார்.)**

45) சூர்தாஸ் கீழ்காணும் எந்த முகலாய மன்னரின் அவையில் இடம் பெற்றிருந்தார்?

A) ஷாஜகான்

B) ஜஹாங்கீர்

**C) அக்பர்**

D) அவுரங்கசீப்

**(குறிப்பு - அக்பரின் அவையில் இடம்பெற்றிருந்த சூர்தாஸ் ஆக்ராவின் பார்வை திறனற்ற பாடகன் என பலராலும் அறியப்பட்டவர். சூர்தாஸ் டெல்லி சுல்தானியர் காலத்து வைணவ போதகரான வல்லபாச்சாரியார் என்பவரின் சீடர் என நம்பப்படுகிறது)**

46) கிருஷ்ணரை பற்றிய 'பாலலீலா' என்னும் என்னும் நூலை எழுதியவர் யார்?

A) மீராபாய்

B) ராமானந்தர்

**C) சூர்தாஸ்**

D) துக்காராம்

**(குறிப்பு - சூர்தாஸ் அன்பெனும் மதத்தையும் தனிப்பட்ட கடவுளிடம் பக்தியோடு இருப்பதையும் போதித்தார். கடவுள் கிருஷ்ணரை குறித்து ஹிந்தி மொழியில் உணர்வுபூர்வமான பாடல்களை இயற்றினார். சூர்தாஸின் கவிதைகளில் கிருஷ்ணருடைய பால லீலா முக்கிய கருப்பொருளாக விளங்கியது)**

47) சூர்தாசரின் படைப்புகளுள் அல்லாதது எது?

A) சூர்சாகர்

B) சூர்சரவளி

C) சைத்ய லகிரி

**D) தஸ்கிரா இஸிந்த்**

**(குறிப்பு - பால லீலா, சூர்சாகர், சூர்சரவளி, சைத்யலகிரி போன்றவை சூர்தாஸ் அவர்களின் படைப்புகளாகும். அவருடைய மாபெரும் படைப்பான சூர்சாகர் அல்லது சூர் சமுத்திரம் கிருஷ்ணர் பிறந்ததில் இருந்து மதுராவிற்க்குப் புறப்படும் வரையிலான கதைகளை கொண்டுள்ளது)**

48) துக்காராம் மகாராஷ்டிராவில் பூனாவுக்கு அருகே ___________ பிறந்தார்.

A) 1600 இல்

B) 1602 இல்

C) 1604 இல்

**D) 1608 இல்**

**(குறிப்பு - துக்காராம் 1608 ஆம் ஆண்டு மகாராஷ்டிராவில் பூனாவுக்கு அருகே ஒரு கிராமத்தில் பிறந்தார். சத்ரபதி சிவாஜி, ஏக் நாத், ராம்தாஸ் போன்றோரின் சமகாலத்தவர் ஆவார்)**

49) துக்காராம் போதித்தவைகளில் கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

A) இவர் கடவுள் வடிவமற்றவர் என்றார்.

B) இவர் வேத வேள்விகள் மற்றும் சடங்குகளை நிராகரித்தார்.

**C) இவர் உருவ வழிபாட்டை ஏற்றார்.**

D) இவர் புனிதப் பயணங்களை நிராகரித்தார். உலக நடவடிக்கைகளில் ஆன்மீக இன்பத்தை துய்க்க முடியாது எனக்கூறினார்

**(குறிப்பு - துக்காராம் உருவவழிபாடு நிராகரித்தார். கடவுள் பற்று, மன்னிக்கும் மனப்பாங்கு, மன அமைதி ஆகியவற்றை போதித்தார். சமத்துவம் சகோதரத்துவம் ஆகிய செய்திகளை பரப்பினார். இந்து முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றார்)**

50) வர்ணாசிரம கொள்கையின் படி முக்தி என்பது யாருக்கு மட்டுமே உரியது?

A) முதல் படிநிலையை சேர்ந்த மக்களுக்கு

B) முதலிரண்டு படிநிலையை சேர்ந்த மக்களுக்கு

**C) முதல் மூன்று படிநிலையை சேர்ந்த மக்களுக்கு**

D) நான்கு படிநிலைகளை சேர்ந்த மக்களுக்கும்

**(குறிப்பு - முக்தி என்பது வர்ணாசிரமக்கொள்கையின்படி முதல் மூன்று படிநிலைகளை சேர்ந்த மக்களுக்கு மட்டுமே உரியது என்ற நம்பிக்கையை மாற்றி அது அனைவருக்கும் உரியது என்ற கருத்தை முன்வைத்தது பக்தி இயக்கம். பெண்களுக்கும் சமூகத்தின் அடித்தட்டில் இருந்த மக்களுக்கும் சேர்த்து ஆன்ம விடுதலைக்கான வழியை காட்டியது)**

# 11th History Lesson 9 Questions in Tamil

## 9] முகலாயப் பேரரசு

1. முகலாயப் பேரரசு 1526 ஆண்டு பானிப்பட் போரில், பாபர் _________ ஐ தோற்கடித்த பின் நிறுவப்பட்டது.

A) தௌலத்கான் லோடி

**B) இப்ராகிம் லோடி**

C) முகமது பின் துக்ளக்

D) காசிம் மாலிக்

**(குறிப்பு: இவ்வாறு தொடங்கிய முகலாய சகாப்தம் 1526 முதல் 1857 வரை நீடித்தது.)**

2. _________ ஆண்டு ஔரங்கசீப்பின் மறைவைத் தொடர்ந்து முகலாய பேரரசு வீழ்ச்சியடைந்தது.

A) 1698 B) 1702 **C) 1707** D) 1709

**(குறிப்பு: முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்தாலும் 1707 முதல் 1857 வரை முகலாயர் அரசு பெயரளவுக்கு ஓர் அரசாக இயங்கி வந்தது.)**

3. சரியான இணையைத் தேர்ந்தெடு.

1. உஸ்பெக்குகள் – துருக்கிய இனக்குழு

2. சபாவி - ஈரானை ஆட்சி செய்த அரச வம்சத்தினர், ஷியா முஸ்லீம் பிரிவை ஆதரித்தவர்கள்

3. உதுமானியத் துருக்கியர் - சன்னி முஸ்லீம் பிரிவைச் சேர்ந்தவர்கள்

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

**(குறிப்பு: மத்திய ஆசியாவில் மேற்கண்டோரிடையே நடைபெற்ற மேலாதிக்கத்திற்கான போட்டி, சாமர்கண்ட் பகுதியின் அரசரான பாபரை, தனது வாழ்க்கை வளத்துக்கான வாய்ப்புகளை வேறு இடங்களில் தேடிச் செல்லக் கட்டாயப்படுத்தியது.)**

4. கூற்று 1: வரலாற்று ரீதியாக மத்திய ஆசிய நாடுகள் பட்டுப்பாதை வழியாக இந்தியாவோடு செய்து வந்த வர்த்தகம் பாபருக்கு இந்தியாவை பற்றிய தகவல்களை வழங்கியது.

கூற்று 2: ஒன்றேகால் நூற்றாண்டுக்கு முன்னர் தைமூர் செய்த்ததை மீண்டும் செய்ய வேண்டுமெனக் கனவு கண்டு கொண்டிருந்த பாபர், தில்லி சுல்தானியம் அரசியல் ரீதியாகச் சிதைவுற்றதைத் தொடர்ந்து 1526ல் தில்லியைத் தலைநகராகக் கொண்டு முகலாயப் பேரரசை நிறுவுவதில் வெற்றிபெற்றார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

5. பாபர் ___________ வயதில் தனது தந்தையிடமிருந்து சமர்கண்டை மரபுரிமைச் சொத்தாகப் பெற்றார்.

**A) 11** B) 12 C) 13 D) 14

**(குறிப்பு: சாமர்கண்ட் என்பது தற்போது உஸ்பெக்கிஸ்தானிலுள்ள ஒரு நகரம் ஆகும்.)**

6. பாபர் ___________ ஆண்டுகளுக்கு இடையே பேரா, சியால்கோட் லாகூர் ஆகியவற்றின் மீது படையெடுத்து இந்துஸ்தானை கைப்பற்றும் உறுதியான எண்ணத்தை வெளிக்காட்டினார்.

A) 1509 - 1520

B) 1512 – 1528

**C) 1519 – 1524**

D) 1518 – 1520

**(குறிப்பு: காபூல், கஜினி ஆகியவற்றை கைப்பற்றிய பாபர் சிந்து நதியைக் கடந்து ஒரு சிறிய அரசை ஏற்படுத்தினார்.)**

7. கூற்று: பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வரவேண்டும் என்ற வேண்டுகோளோடு இப்ராகிம் லோடியின் எதிரியான தௌலத்கான் லோடியும், மேவாரின் அரசனும் ரஜபுத்திர அரசுகளின் கூட்டமைப்பின் தலைவருமான ராணா சங்காவும் பாபரிடம் தூதுக் குழுக்களை அனுப்பினர்.

காரணம்: லோடி வம்சத்தை சேர்ந்த தில்லி சுல்தான் இப்ராகிம் லோடி தன் நாட்டை விரிவுபடுத்த மேற்கொண்ட முயற்சிகள் ஆப்கானியர், ரஜபுத்திரர் ஆகியோரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன.

A) கூற்று சரி மற்றும் காரணம் தவறு

B) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**C) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

8. கூற்று 1: பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது முதலில் தனக்கு உதவி செய்வதாக உறுதிகூறி பின்னர் பின் வாங்கிய தௌலத்கான் லோடியின் படைகளை டெல்லியில் வென்றார்.

கூற்று 2: பின்னர் பாபர் லோடியால் ஆளப்பட்ட பஞ்சாப்பை நோக்கித் திரும்பி, இப்ராகிம் லோடியின் பெரும்படையை பானிப்பட்டில் தோற்கடித்தார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

**B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி**

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது முதலில் தனக்கு உதவி செய்வதாக உறுதிகூறி பின்னர் பின் வாங்கிய தௌலத்கான் லோடியின் படைகளை லாகூரில் வென்றார்.)**

9. பீரங்கியைப் பயன்படுத்தும் ராணுவப் படைப்பிரிவு __________ ஆகும்.

A) territory

**B) artillery**

C) artifact

D) firepower

**(குறிப்பு: பீரங்கி ஒருவருக்கும் மேற்பட்ட நபர்களால் இயக்கப்படும். பாபருக்கு முன்பாக இந்தியாவில் போர்களில் பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை.)**

10. வெடிமருந்து முதன்முதலில் சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்டு __________ நூற்றாண்டில் ஐரோப்பாவை அடைந்தது.

A) கி.பி 11

B) கி.பி 12

**C) கி.பி 13**

D) கி.பி 14

**(குறிப்பு: பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து வெடிமருந்து துப்பாக்கிகளிலும் பீரங்கிகளிலும் பயன்படுத்தப்பட்டது.)**

11. 1527ஆம் ஆண்டு நடைபெற்ற கான்வா போர் பாபருக்கும் ____________க்கும் இடையே நடைபெற்றது.

A) ராணா பிரதாப் சிங்

**B) ராணா சங்கா**

C) ராஜா ஹரிசிங்

D) ஹுமாயூன்

**(குறிப்பு: சித்தூரின் ராணா சங்கா என்பவர் மேவாரின் அரசனும் ராஜஸ்தான் மாளவம் ஆகிய பகுதிகளில் பெரும் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தவர் ஆவார்.)**

12. கான்வா போரில் ரானா சங்காவுக்கு உதவியவர்கள் யார்?

1. ஆப்கன் முஸ்லீம்கள்
2. முகமது லோடி
3. மேவாட்டின் அரசன் ஹசன்கான் மேவாட்டி
4. இப்ராகிம் லோடி

**A) 1, 2, 3** B) 2, 3, 4 C) 1, 3, 4 D) 3, 4

**(குறிப்பு: முகமது லோடி என்பவர் இப்ராகிம் லோடியின் சகோதரர் ஆவார். இப்போரில் பாபரின் வெற்றியை தொடர்ந்து குவாலியர், தோல்பூர் ஆகிய கோட்டைகள் கைப்பற்றப்பட்டன.)**

13. பாபருக்கும் மேதினிராய்க்கும் இடையே சந்தேரி போர் __________ ஆண்டு நடைபெற்றது.

A) 1527 **B) 1528** C) 1529 D) 1530

**(குறிப்பு: சந்தேரி போர் சிறப்பு வாய்ந்த மாளவப் பகுதியின் மீது பாபரின் மேலாதிக்கத்தை உறுதி செய்தது. இப்போரின் வெற்றியைத் தொடர்ந்து பாபர் ஆப்கானியரின் வளர்ந்துவரும் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கு எதிராகத் திரும்பினார்.)**

14. ஆப்கானியர்களுக்கு எதிராக பாபர் மேற்கொண்ட இறுதிப்போர்

A) கான்வா போர்

**B) காக்ரா போர்**

C) சந்தேரி போர்

D) பானிபட் போர்

**(குறிப்பு: கங்கை நதியின் துணை நதியான காக்ரா ஆற்றின் கரையில் இறுதியாக நடைபெற்ற போரில் பாபர் ஆப்கானியரைத் தோற்கடித்தார்.)**

15. கூற்று 1: காக்ரா போரின்போது போது சுல்தான் இப்ராகிம் லோடியின் சகோதரனான முகம்மது லோடியும் அவரது மருமகனான சுல்தான் நஸ்ரத்ஷாவும் பாபருக்கு எதிராகச் சதி செய்தனர்.

கூற்று 2: காக்ரா போரில் வெற்றி பெற்ற பாபர் ஆக்ராவிலிருந்து திரும்பி லாகூர் செல்லும் வழியில் 1529இல் காலமானார்.

**A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: காக்ரா போரில் வெற்றி பெற்ற பாபர் ஆக்ராவிலிருந்து திரும்பி லாகூர் செல்லும் வழியில் 1530இல் காலமானார்.)**

16. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. முகலாயப் பேரரசை நிறுவிய பாபர் பாரசீக அராபிய மொழிகளில் புலமை பெற்றவராவார்.

2. தனது வாழ்க்கையைப் பற்றிய பாபரின் நினைவுக் குறிப்புகளான துசுக்-இ-பாபுரி (பாபர் நாமா) உலகச் செவ்வியல் இலக்கியமாகக் கருதப்படுகிறது.

3. பாபர் தனது மகன் ஹுமாயூனுக்கு இடர்பாடுகள் நிறைந்த பணியை விட்டுச் சென்றார்.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

**(குறிப்பு: இந்துஸ்தானத்தின் தலையாய மேன்மை எதுவெனில் இது ஒரு மிகப் பெரிய நாடு. பெருமளவிலான தங்கத்தையும் வெள்ளியையும் கொண்டுள்ளது என்று பாபர் இந்தியாவை பற்றி குறிப்பிடுகிறார்.)**

17. ஹீமாயூனின் சகோதரரான கம்ரான் பொறுப்பு வகித்த பகுதிகள்?

1. பீகார் 2. காபூல்

3. குஜராத் 4. காந்தகார்

A) அனைத்தும் B) 1, 2 C) 1, 3 **D) 2, 4**

**(குறிப்பு: கம்ரான் தன்னுடைய அதிகாரத்தைப் பஞ்சாப் வரை நீட்டித்தார். ஹுமாயூன் பஞ்சாப் மீதான கம்ரானின் ஆட்சியதிகாரத்தை ஓர் உள்நாட்டுப் போரைத் தவிப்பதற்காக ஏற்றுக்கொண்டார்.)**

18. ஹுமாயூன் ___________ ஆண்டு தௌரா என்னுமிடத்தில் ஆப்கானியரைத் தோற்கடித்து பலம் வாய்ந்த சுனார் கோட்டையை முற்றுகையிட்டார்.

A) 1529 B) 1530 C) 1531 **D) 1532**

**(குறிப்பு: நான்கு மாதங்களுக்குப் பின்னர் முகலாயருக்கு விசுவாசமாக இருப்பேன் எனப் பொய்யாக வாக்குறுதியளித்த ஷெர்ஷாவின் வார்த்தைகளை நம்பி ஹுமாயூன் சுனார் கோட்டை முற்றுகையை கைவிட்டார்.)**

19. ஷெர்கான் (ஷெர்ஷா) என்பவரின் தலைமையில் ஆப்கானியரின் அதிகாரம் வளர்ந்து வந்த பகுதிகள்

1. டெல்லி 2. தௌலதாபாத்

3. பீகார் 4. உத்திரப் பிரதேசம்

A) அனைத்தும் B) 1, 2 C) 2, 3 **D) 3, 4**

**(குறிப்பு: வளர்ந்து வரும் ஆப்கானியரின் அதிகாரத்திற்கு எதிராக ஹுமாயூன் நடவடிக்கைகள் மேற்கொண்டு சுனார் கோட்டையைக் கைப்பற்றினார்.)**

20. தில்லியில் 'தீன்பனா' என்ற புதிய நகரை உருவாக்கியவர்

A) பாபர்

B) ஷெர்ஷா

**C) ஹுமாயூன்**

D) கம்ரான்

**(குறிப்பு: ஹுமாயூன் தீன்பனா நகரை உருவாக்கிய சமயத்தில் பகதூர்ஷா ராஜஸ்தானைக் கைப்பற்றி இணைத்துக் கொண்டதோடு முகலாயர்களுக்கு எதிரானவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களைத் தூண்டியும் விட்டார்.)**

21. பகதூர்ஷாவின் மேல் போர் தொடுத்து குஜராத்தையும் மாளவத்தையும் கைப்பற்றி அவற்றை _________ன் பொறுப்பில் விட்டார்.

A) கம்ரான்

**B) அஸ்காரி**

C) ஹிண்டால்

D) ஷெர்ஷா

**(குறிப்பு: குஜராத் மக்களின் கலகங்களை அடக்க இயலாத நிலையில் அஸ்காரி ஆக்ரா செல்ல தீர்மானித்தார். அஸ்காரி ஆக்ராவைக் கைப்பற்றி தனதாக்கிக் கொள்வார் என்ற அச்சத்தில் மாண்டுவில் தங்கியிருந்த ஹுமாயூன் குஜராத்தையும் மாளவத்தையும் கைவிட்டு விட்டுப் சகோதரரை பின் தொடர்ந்தார். இருவரும் ராஜஸ்தானில் சந்தித்து சமாதானமாயினர்.)**

22. ஷெர்கானை எதிர் கொள்வதற்காக ஹுமாயூன் கவுர் அல்லது கௌடா என்ற இடத்தை அடைந்தபோது கலகத்தில் ஈடுபட்டவர்

A) கம்ரான்

B) அஸ்காரி

**C) ஹிண்டால்**

D) பகதூர் ஷா

**(குறுப்பு: ஹுமாயூன் இக்கலகத்தை அடக்குவதற்காக ஆக்ரா நோக்குப் புறப்பட்டார்.)**

23. சௌசா போர் பற்றிய கூற்றுகளில் சரியானதைத் தேர்ந்தெடு.

1. இப்போரில் 7000 முகலாயப் பிரபுக்களும் வீரர்களும் கொல்லப்பட்டனர்.

2. தன்னுயிரைக் காத்துக் கொள்ளத் தப்பியோடிய ஹுமாயூன் கங்கை நதியை நீந்திக் கடந்தார்.

3. ஆக்ராவை சென்றடைந்த ஹுமாயூன், சகோதரர்கள் அஸ்காரி, ஹிண்டால் ஆகியோரின் உதவியோடு ஷெர்கானை எதிர்கொள்ள படையொன்றைத் திரட்டினார்.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

**(குறிப்பு: சௌசா போரில், ஷெர்கான் தனது மேலான, அரசியல், ராணுவத் திறமைகளால் வெற்றி பெற்றார். ஹுமாயூன் பெருந்தோல்வியைச் சந்தித்தார்.)**

24. சௌசா போரைத் தொடர்ந்து ஹுமாயூன் ஷெர்ஷா இடையேயான இறுதி மோதல் __________ல் நடைபெற்றது.

A) வங்காளம்

B) ஆக்ரா

**C) கன்னோசி**

D) சௌசா

**(குறிப்பு: கன்னோசிப் போரில் ஹுமாயூனின் படைகள் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டன. அவர் நாடற்ற அரசரானார்.)**

25. கன்னோசி போரில் தோல்வியடைந்த ஹுமாயூன் தனது அரியணையை துறந்த பின்னர் மீண்டும் தில்லியைக் கைப்பற்றித் தன் அதிகாரத்தை மீட்ட ஆண்டு

A) 1545 B) 1548 C) 1553 **D) 1555**

**(குறிப்பு: இந்த இடைப்பட்ட காலத்தில் சூர் வம்சத்தைச் சேர்ந்த ஷெர்ஷாவால் தில்லி ஆளப்பட்டது.)**

26. ஒரு ஜாகீர்தாரின் குடும்பத்தில் பிறந்து பரித் என்றழைக்கப்பட்டவர்

A) அக்பர்

B) பாபர்

**C) ஷெர்கான்**

D) ஜஹாங்கீர்

**(குறிப்பு: பரீத் ஒரு புலியைக் (ஹிந்தியில் ஷெர்) கொன்றதனால் ஷெர்கான் என்னும் பெயரைப் பெற்றார். அரியணை ஏறிய பின் ஷெர்ஷா என்றழைக்கப்பட்டார்.)**

27. ஷெர்ஷா குறித்த கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு.

A) தன் திறமையினாலும் ஆற்றலினாலும் இந்தியாவிலிருந்த ஆப்கானியரின் தலைவரானார்.

B) மாளவம் போரிடாமலேயே ஷெர்ஷாவிடம் வீழ்ந்தது.

C) மேவாரின் உதய்சிங் எதிர்ப்பேதும் தெரிவிக்காமல் ஷெர்ஷாவிடம் சரணடைந்தார்.

**D) கலிஞ்சாரைக் கைப்பற்ற வேண்டும் என்ற முயற்சியில் ஷெர்ஷா வெற்றிபெற்றார்.**

**(குறிப்பு: கலிஞ்சாரைக் கைப்பற்ற வேண்டும் என்ற முயற்சியில் ஷெர்ஷா தோல்விகண்டார்.)**

28. வெடிகுண்டு விபத்தின் காரணமாக ஷெர்ஷா உயிரிழந்த ஆண்டு

A) 1544 **B) 1545** C) 1549 D) 1553

**(குறிப்பு: ஷெர்ஷாவிற்க்கு பின் பதவியேற்ற அவருடைய இரண்டாவது மகன் இஸ்லாம்ஷா 1553 வரை ஆட்சி புரிந்தார்.)**

29. விவசாயி சீர்குலைந்தால் அரசன் சீர்குலைவான் என நம்பியவர்

A) பாபர்

B) அக்பர்

C) ஷாஜகான்

**D) ஷெர்ஷா**

**(குறிப்பு: படைகள் ஓரிடம் விட்டு வேறிடங்களுக்கு செல்கையில் பயிர்களுக்குச் சேதம் ஏற்படக் கூடாது என்பதில் ஷெர்ஷா தனிக்கவனம் செலுத்தினார்.)**

30. ஹுமாயூனைப் பின்தொடர்ந்த ஷெர்ஷா அதற்கு முன்னர் ________ என்பவரை வங்காளத்தின் ஆளுநராக நியமித்திருந்தார்.

A) இஸ்லாம்ஷா

B) பகதூர்ஷா

**C) கிசிர்கான்**

D) ஹிண்டால்

**(குறிப்பு: கிசிர்கான் வங்காளத்தின் முன்னாள் ஆட்சியரான சுல்தான் மகமுதுவின் மகளை மணந்தவர்.)**

31. ஷெர்ஷாவின் சீர்திருத்தங்களில் தவறானதை தேர்ந்தெடு.

A) நிலங்கள் முறையாக அளவை செய்யப்பட்டு நிலங்களின் வளத்திற்கு ஏற்றவாறு வரி நிர்ணயம் செய்யப்பட்டது.

B) சிந்து பகுதியிலிருந்து வங்காளத்தில் சோனார்கான் வரையிலான முக்கிய பெருவழியைச் செப்பனிட்டதோடு குஜராத் கடற்கரைத் துறைமுகங்களை ஆக்ராவோடும் ஜோத்பூரோடும் இணைக்கும் புதிய சாலைகளை அமைத்தார்.

C) ஷெர்ஷாவுடைய நாணய முறையானது முகலாயர் காலம் முழுவதும் பின்பற்றப்பட்டு ஆங்கிலேயர் காலத்து நாணய முறைக்கு அடித்தளமானது.

**D) ஷெர்ஷா காலத்தில் ஜாகீர்தாரி முறையும் ஜமீன்தாரி முறையும் முற்றிலும் ஒழிக்கப்பட்டன.**

**(குறிப்பு: ஷெர்ஷா காலத்தில் ஜாகீர்தாரி முறையும் ஜமீன்தாரி முறையும் சில பகுதிகளில் தொடர்ந்து செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன.)**

32. கீழ்க்கண்டவற்றுள் ஷெர்ஷா காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள் எவை?

1. நுழைவு வரி 2. வருமான வரி

3. விற்பனை வரி 4. ஏற்றுமதி வரி

A) அனைத்தும் B) 1, 2 C) 2, 3 **D) 1, 3**

**(குறிப்பு: ஷெர்ஷா வணிகத்தை ஊக்குவிப்பதற்காக வணிக வரிகளை எளிமைப்படுத்தினார். தங்கம், வெள்ளி, செப்புக் காசுகளில் இடம்பெறும் உலோகங்களின் தர அளவு வரையறை செய்யப்பட்டது வணிகத்திற்கு வசதி கொடுத்தது.)**

33. ஷெர்ஷா காலத்தில் அனைத்து சாலைகளிலும் __________ எனப்படும் சத்திரங்கள் அமைக்கப்பட்டு வணிகர்கள் தங்கவும் உணவருந்தவும் வசதிகள் செய்துதரப்பட்டன.

A) சன்னி

B) ஜாகீர்

**C) சராய்**

D) இலாகி

**(குறிப்பு: ஷெர்ஷாவால் உருவாக்கப்பட்ட ஒரு சில சராய்கள் இன்றளவும் உள்ளன. இத்தகைய சராய்கள் தங்களுக்கு அருகே நகரங்கள் உருவாவதையும் உறுதி செய்தன.)**

34. ஷெர்ஷா தன்னுடைய கல்லறை மாடத்தை ___________ என்னுமிடத்தில் கட்டினார்.

A) புராணகிலா

**B) சசாரம்**

C) டெல்லி

D) ஆக்ரா

**(குறிப்பு: ஷெர்ஷா தில்லியில் கோட்டைச் சுவர்களுடன் கூடிய ஒரு புதிய நகரத்தை நிர்மாணிக்கத் தொடங்கினார். பின்னர் அது புராண கிலா என அழைக்கப்பட்டது.)**

35. ஷெர்ஷா 1545 இல் காலமான பின்னர் அவருக்கு பின் வந்த வலிமை குன்றிய அரசர்கள் __________ ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.

A) 8 **B) 10** C) 15 D) 18

36. கன்னோசிப் போரில் தோற்று தப்பியோடிய ஹுமாயூன் ___________ல் தஞ்சம் புகுந்தார்.

A) காபூல்

B) காந்தகார்

**C) பாரசீகம்**

D) ஈரான்

**(குறிப்பு: பாரசீகப் படைகளுடன் ஆப்கானிஸ்தான் சென்ற ஹுமாயூன் காந்தகாரையும் காபூலையும் கைப்பற்றினார்.)**

37. "வாழ்க்கை முழுவதும் தவறி விழுந்த ஹீமாயூன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்" என்பது யாருடைய வார்த்தைகள்

A) அமீர் குஸ்ரு

B) அமீர் ஹாசன்

C) குலாம் ரசூல்

**D) ஸ்டேன்லி லேன்பூல்**

**(குறிப்பு: ஹுமாயூன் தில்லி கோட்டைக்குள் இருந்த நூலகம் ஒன்றின் மாடிப்படிகளில் இடறி விழுந்து இறந்தார்.)**

38. ஜலாலுதீன் என்று அறியப்பட்ட அக்பர் பிறந்த ஆண்டு

A) 1539 B) 1540 C) 1541 **D) 1542**

**(குறிப்பு: ரஜபுதனத்துப் பாலைவனங்களில் ஹுமாயூன் அலைந்து திரிந்தபோது அவருடைய மனைவி 1542 இல் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார். அவரே அக்பர் என்றழைக்கப்பட்டார்.)**

39. கூற்று 1: பதினோறாவது வயதில் அக்பருக்கு முடிசூட்டப்பட்டது.

கூற்று 2: அக்பர், பைராம்கான் என்ற தலைசிறந்த பாதுகாவலரை பெற்றிருந்தார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

**B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி**

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: பதினான்காவது வயதில் அக்பருக்கு முடிசூட்டப்பட்டது. அக்பர் அரியணை ஏறிய போது இன்னும் வலிமையாக இருந்த ஆப்கானியரும் ரஜபுத்திரரும் பெரும் சவாலாகத் திகழ்ந்தனர்.)**

40. அக்பர் ஹெமு இடையே இரண்டாம் பானிபட் போர் எப்போது நடைபெற்றது?

A) 1556 ஆகஸ்ட்

B) 1556 அக்டோபர்

**C) 1556 நவம்பர்**

D) 1556 டிசம்பர்

**(குறிப்பு: இரண்டாம் பானிபட் போர் ஹெமுவுக்கு சாதகமாக முடியவிருந்த தருவாயில் அவர் கண்ணில் அம்பொன்று பாய மயக்கமுற்று கீழே விழுந்தார். தலைமை இல்லாத ஆப்கானிய படைகளை முகலாயப் படைகள் வெற்றிபெற்றன.)**

41. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. தில்லியில் வீற்றிருந்த ஷெர்ஷாவின் வழிவந்த ஆப்கானிய அரசன் அடில்ஷாவின் இந்து படைத்தளபதியான ஹெமு, முகலாயருக்கு எதிராக ஆப்கானியர் படைகளுக்கு தான் தலைமையேற்றுச் செல்ல அனுமதிக்குமாறு அரசனைக் கேட்டுக்கொண்டார்.

2. அரசர் ஹெமுவிற்கு ஊக்கம் அளிக்கவே, ஹெமு முதலில் குவாலியரைக் கைப்பற்றி அதன் முகலாய ஆளுநரை வெளியேற்றினார்.

3. அடுத்து எவ்வித எதிர்ப்புமின்றி ஆக்ராவைக் கைப்பற்றினார்.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 1 மட்டும் சரி

D) 2, 3 சரி

42. கூற்று 1: அக்பரின் முதல் நான்காண்டு ஆட்சிக்காலத்தில் பகர ஆளுநர் பைராம்கானின் கீழ், நாடு குவாலியர், அஜ்மீர் உட்பட காபூலிலிருந்து ஜான்பூர் வரை விரிவடைந்தது.

கூற்று 2: பைராம்கான் அறிவுக் கூர்மை மிக்க மேதையாக கான்-இ-கானான் என்ற பட்டத்துடன் அக்பரின் அவையில் ஒளிர்ந்தார்.

**A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: பைரம்கானின் மகன் அப்துர் ரகீம் அறிவுக் கூர்மை மிக்க மேதையாக கான்-இ-கானான் என்ற பட்டத்துடன் அக்பரின் அவையில் ஒளிர்ந்தார்.)**

43. அக்பர் __________ ஆண்டு மாளவத்தை பாஜ்பகதூரிடமிருந்து கைப்பற்றினார்.

A) 1560 **B) 1562** C) 1564 D) 1566

**(குறிப்பு: மாளவம் கைப்பற்றப்பட்ட பிறகு பாஜ்பகதூர் அக்பரின் அரசவையில் ஒரு மன்சப்தாராக ஆக்கப்பட்டார்.)**

44. இந்தியாவின் மையப் பகுதியிலிருந்த கோண்டுவானா __________ ஆண்டு அக்பரால் கைப்பற்றப்பட்டது.

A) 1560 B) 1563 **C) 1564** D) 1566

**(குறிப்பு: கோண்டுவானா அதன் ராணி துர்காதேவி அவ்வம்மையாரின் மகன் வீர்நாராயணன் ஆகியோருடனான மூர்க்கமான போருக்குப்பின் கைப்பற்றப்பட்டது.)**

45. கூற்று 1: அக்பர், மேவார் அரசரான ராணா உதய்சிங்கிடமிருந்து சித்தூரை ஆறுமாதகால முற்றுகைக்கு பின்னர் கைப்பற்றினார்.

கூற்று 2: ராணா உதய்சிங்கின் தளபதிகளான ஜெய்மால், பட்டா ஆகியோரின் துணிச்சலைக் கண்டு பெரும் வியப்படைந்த அக்பர் அவர்களின் நினைவாகவும் அவர்களைச் சிறப்பிக்கும் வகையிலும் ஆக்ரா கோட்டையின் பிரதான வாசலில் அவர்களின் சிலைகளை நிறுவினார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: சித்தூர் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து ரஜபுத்திர அரசுகளான ராந்தம்பூர், கலிஞ்சார், பிக்கானீர், ஜோத்பூர், ஜெய்சால்மார் ஆகியவை அக்பரிடம் சரணடைந்தன.)**

46. அக்பர் _________ ஆண்டு முசாபர்ஷாவிடமிருந்து குஜராத்தைக் கைப்பற்றினார்.

A) 1568 B) 1570 C) 1572 **D) 1573**

**(குறிப்பு: மத்திய இந்திய பகுதிகளைக் கீழ்படிய வைத்த பின்னர் அக்பர் தனது கவனத்தை செல்வச் செழிப்புமிக்க, கடல்சார் வணிகத்திற்குப் புகழ்பெற்ற குஜராத் மீது செலுத்தினார்.)**

47. பீகார், வங்காளம் ஆகிய பகுதிகளை ஆண்டு வந்த தாவுத்கான் அக்பரால் தோற்கடிக்கப்பட்டு அவ்விரு பகுதிகளும் __________ ஆண்டு முகலாய பேரரசோடு இணைக்கப்பட்டன.

A) 1574 B) 1575 **C) 1576** D) 1577

48. கூற்று 1: ராஜா மான்சிங், பகவன்தாஸ் ஆகியோரின் உதவியுடன் அக்பர் காபூலைச் சேர்ந்த மிர்சா ஹக்கீமைத் தோற்கடித்தார்.

கூற்று 2: 1586 ஆம் ஆண்டு காஷ்மீரையும் 1590 ஆம் ஆண்டு சிந்துவையும் அக்பர் கைப்பற்றியது வடமேற்கில் அவருடைய பேரரசை வலுப்படுத்தியது.

**A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: அக்பர் 1591 ஆம் ஆண்டு சிந்துவை கைப்பற்றினார்.)**

49. அக்பருடைய படைகள் ___________ ஆண்டு காண்டேஷ் பகுதியைக் கைப்பற்றின.

**A) 1591** B) 1592 C) 1593 D) 1594

50. அக்பரின் படைகள் சாந்த்பீபியிடமிருந்து பெராரை கைப்பற்றிய ஆண்டு ___________.

A) 1592 B) 1594 **C) 1596** D) 1598

**(குறிப்பு: சாந்த்பீபி அம்மையார் அகமதுநகரின் நிஜாம்சாகி வம்சத்தை சேர்ந்த தன் உடன்பிறப்பின் மகனான முசாபர்ஷாவினுடைய பகர ஆளுநராக அகமதுநகரைத் தாக்கிய முகலாயப் படைகளை எதிர்த்து வீரத்தோடு போராடினார். 1600 இல் அகமதுநகர் அரசின் ஒரு சில பகுதிகள் முகலாயர் படைகளின் கைவசமானது.)**

51. 1604 இல் செப்டம்பர் மாதம் அக்பர் நோய்வாய்ப்பட்டு __________ நாள் இயற்கை எய்தினார்.

A) 1604 அக்டோபர் 21

B) 1605 மார்ச் 18

C) 1605 ஆகஸ்ட் 28

**D) 1605 அக்டோபர் 27**

**(குறிப்பு: அக்பருக்குப் பின் அவருடைய மகன் சலீம் நூருதீன் ஜஹாங்கீர் என்ற பட்டப் பெயருடன் அரியணை ஏறினார்.)**

52. அக்பர் குறித்த கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு.

A) முஸ்லீம் அல்லாத மக்களின் மீது விதிக்கப்பட்டிருந்த ஜிசியா வரியையும் (தலைவரி) இந்து புனித யாத்திரைகளின் மீது விதிக்கப்பட்டிருந்த வரியையும் நீக்கினார்.

B) இந்து விதவைகள் பின்பற்றிய உடன்கட்டை ஏறும் முறை ஒழிக்கப்பட்டது.

C) அக்பருடை காலத்தில் போர்க்கைதிகளை அடிமைகளாக்கும் நடைமுறை கைவிடப்பட்டது.

**D) மேவார், மார்வார் ஆகிய ரஜபுத்திர அரசுகள் முகலாய பேரரசின் நட்பு நாடுகளாக திகழ்ந்தன.**

**(குறிப்பு: மேவார், மார்வார் ஆகியவை முகலாயப் பேரரசை எதிர்த்து நின்ற ரஜபுத்திர அரசுகளாகும்.)**

53. ஆம்பர் நாட்டு அரசர் ராஜா பார்மல் (பீகாரிமால் என்று அறியப்பட்டவரின்) மகளான ஹர்க்கா பாயை மணந்தவர்

A) ராஜா பகவன்தாஸ்

B) ராஜா மான்சிங்

**C) அக்பர்**

D) ஹுமாயூன்

**(குறிப்பு: ஹர்க்காபாய் பின்னாளில் ஜோதா அக்பர் என்று அழைக்கப்பட்டார்.)**

54. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. பிக்கானீர், ஜெய்சால்மர் ஆகிய ரஜபுத்திர அரசுகளின் இளவரசிகளை அக்பர் திருமணம் செய்து கொண்டார்.

2. ஹர்க்காபாய் பெற்றெடுத்த இளவரசர் சலீம் பின்னர் ராஜா பகவன்தாஸின் மகளைக் கரம்பற்றினார்.

3. ராஜா பகவான்தாஸின் மகனான ராஜா மான்சிங் அக்பரின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதியானார்.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

**(குறிப்பு: அக்பரின் அவையில் வருவாய்த்துறை நிர்வாகத்தில் நிபுணத்துவம் உடைய ராஜா தோடர்மால் திவானாக பதவி உயர்த்தப்பட்டார்.)**

55. முகலாயப் படைகளுக்கும் ராணா பிரதாப் சிங்குக்குமிடையே நடைபெற்ற நேரடி போர்

A) கான்வா போர்

B) சௌசா போர்

**C) ஹால்டிகாட் போர்**

D) இரண்டாம் பானிபட் போர்

**(குறிப்பு: ஹால்டிகாட் போர் 1576 ஆம் ஆண்டு நடைபெற்றது.)**

56. ராணா உதய்சிங்கின் மரணத்திற்கு பின்னர் அவருடைய மகன் ராணா பிரதாப்சிங் அக்பரின் அதிகாரத்தை ஏற்காமல் ________இல் தனது மரணம் வரை தொடர்ந்து போரிட்டார்.

A) 1578 B) 1586 C) 1592 **D) 1597**

**(குறிப்பு: மார்வாரில் (ஜோத்பூர்) மால்தியோ ராத்தோரின் மகனான அரசர் சந்திரா சென் 1581 இன் தான் இறக்கும்வரை முகலாயரை எதிர்த்தார்.)**

57. தொடக்கத்தில் ___________ அக்பரின் தலைநகராக இருந்தது.

A) குவாலியர்

B) டெல்லி

**C) ஆக்ரா**

D) பதேபூர்சிக்ரி

**(குறிப்பு: பின்னாளில் பதேபூர்சிக்ரி என்னும் புதிய தலைநகரை அக்பர் உருவாக்கினார். தற்போது கைவிடப்பட்ட நகரமாக இருந்தாலும் இன்றும் அது அழகான மசூதிகளோடு உன்னதமான புலந்தர்வாசா மற்றும் ஏனைய கட்டடங்களோடும் திகழ்கிறது.)**

58. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. ஷெர்ஷா அறிமுகப்படுத்திய மன்சப்தாரி முறையை அக்பர் மேலும் விரிவுப்படுத்தினார்.

2. பிரபுக்கள், குடிமைப் பணிசார்ந்த இராணுவ நிர்வாகம் சார்ந்த அதிகாரிகள் ஆகிய அனைவரும் ஒன்றுபடுத்தப்பட்டு ஒரே பணியின் கீழ் கொண்டுவரப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் மன்சப்தார் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

3. மன்சப்தார் தகுதி ஜாட், சவார் என இருவகைப்பட்டது.

A) அனைத்தும் சரி

B) 1, 2 சரி

**C) 2, 3 சரி**

D) 1, 3 சரி

**(குறிப்பு: மன்சப்தாரி முறையை அறிமுகம் செய்தவர் அக்பர்.)**

59. கூற்று 1: மன்சப்தாரி முறையில் ஜாட் என்பது ஒவ்வொரு மன்சப்தாரும் பெறும் ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வதாகும். அவ்வெண்ணிக்கை 10 முதல் 10000 வீரர்கள் வரை ஆனதாகும்.

கூற்று 2: சவார் என்பது மன்சப்தாரின் கீழிருக்கும் குதிரைகளின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: வீரர்களின் எண்ணிக்கை, குதிரைகளின் எண்ணிக்கை ஆகியவற்றை அதிகரிப்பது அல்லது குறைப்பதன் மூலம் ஒரு மன்சப்தாரின் உயர்வும் தாழ்வும் நிர்ணயம் செய்யப்பட்டன.)**

60. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) அக்பரின் தொடக்கக் காலங்களில் பிரபுக்கள் முற்றிலுமாக மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்களாகவும் பாரசீகத்தை சார்ந்தவர்களாகவும் மட்டுமே இருந்தனர்.

B) மன்சப்தாரி முறை அறிமுகமான பின்னர் ரஜபுத்திரரும் ஷேக்சதா என்றழைக்கப்பட்ட இந்திய முஸ்லீம்களும் பிரபுக்கள் வரிசையில் இடம் பெறலாயினர்.

C) மன்சப்தார்களின் ஊதியம் பணமாக நிர்ணயம் செய்யப்பட்டாலும் அதற்கு மாறாக அவர்களுக்கு நிலங்கள் (ஜாகீர்) ஒதுக்கப்பட்டன.

**D) மன்சப்தார் முறை பரம்பரை உரிமையாக காணப்பட்டது.**

**(குறிப்பு: மன்சப்தார் முறை பரம்பரை உரிமை சார்ந்ததல்ல. ஒரு மன்சப்தார் மரணமடைந்துவிட்டால் அவருக்கு வழங்கப்பட்டிருந்த ஜாகீரை அரசு உடனடியாக கையகப்படுத்தும்.)**

61. அக்பரின் மதக்கொள்கை குறித்த கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு.

A) அக்பர், சூபி தத்துவங்கள் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக ஓர் இணக்கமான போக்கை மேற்கொண்டார்.

B) அக்பா அனைவருக்கும் அமைதி (சுல்க்-இ-குல்) என்னும் தத்துவத்தைப் பரப்புரை செய்தார்.

C) அக்பர் இபாதத்கானா எனும் வழிபாட்டுக் கூடத்தை நிறுவினார்.

**D) இபாதத் கானாவில் நடைபெற்ற விவாதங்கள் மதங்களிடையே கசப்புணர்வை ஏற்படுத்தியதால் 1578 இல் அக்பர் அவ்விவாதங்களை நிறுத்தினார்.**

**(குறிப்பு: அக்பர் 1582 இல் இபாதத் கானாவில் நடந்த விவாதங்களை நிறுத்தினார்.)**

62. அக்பர் இஸ்லாமைப் புறக்கணித்தார் என குற்றம் சாட்டிய அக்பர் காலத்து வரலாற்று அறிஞர்

A) நூனிஸ்

**B) பதானி**

C) ராஜா தோடர்மால்

D) ராஜா பீர்பால்

**(குறிப்பு: மதங்களுக்கு இடையிலான தொடர்புகள் பற்றி அக்பர் மேற்கொண்ட தத்துவ விவாதங்கள் மீது பதானி வெறுப்பு கொண்டு இவ்வாறு கூறினார்.)**

63. கூற்று 1: அக்பருடைய தத்துவத்தை விளக்குவதற்கு அக்பரும் பதானியும் பயன்படுத்திய சொல் 'தெளகித்-இ-இலாகி' (தீன் இலாகி) என்பதாகும்.

கூற்று 2: தெளகித்-இ-இலாகி என்ற சொல்லின் நேரடிப் பொருள் தெய்வீக ஒரு கடவுள் கோட்பாடாகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: பல்வகைப்பட்ட மதங்களின் பெயர்களுக்கு பின்னே ஒரே ஒரு கடவுள் மட்டும் இருப்பதாக அக்பர் உணர்ந்தார். இதுவே அவருடைய தத்துவமாக விளங்கியது.)**

64. கூற்று 1: சமஸ்கிருத, அராபிய, கிரேக்க மற்றும் ஏனைய மொழி நூல்களைப் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்வதற்காக ஒரு பெரிய மொழியாக்கத் துறையை அக்பர் உருவாக்கினார்.

கூற்று 2: இராமாயாணம், மகாபாரதம், அதர்வவேதம், விவிலியம், குரான் ஆகியவை அனைத்தும் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: அக்பரின் உண்மையான நோக்கம் மதச்சார்பற்ற கோட்பாடுகளை, பல்வேறு நம்பிக்கைகளைச் சார்ந்தவர்களுக்குச் சரி சமமான சகிப்புத்தன்மையையும் சம மதிப்பையும் வழங்குவதை குறிக்கோளாகக் கொண்ட ஓர் அரசை உருவாக்குவதாகும்.)**

65. ஜஹாங்கீர் அரசரானதை எதிர்த்து அவரது மூத்தமகன் குஸ்ரு சீக்கிய குரு________ன் ஆதரவோடு கலக்கத்தில் இறங்கினார்.

A) குரு கோபிந்த் சிங்

B) குரு தேஜ் பகதூர்

**C) குரு அர்ஜுன் தேவ்**

D) குரு ராம்தாஸ்

**(குறிப்பு: ஜஹாங்கீரால் கலகம் ஒடுக்கப்பட்டு இளவரசர் கைது செய்யப்பட்டு விழிகள் அகற்றப்பட்டன. கலகத்தைத் தூண்டியதாக குரு அர்ஜுன் தேவ் கொல்லப்பட்டார்.)**

66. தக்காண அரசான அகமது நகர் மாலிக் ஆம்பரின் தலைமையின் கீழ் தன்னை சுதந்திர அரசாக அறிவித்த ஆண்டு

A) 1603 B) 1606 **C) 1608** D) 1609

**(குறிப்பு: அகமது நகரை இளவரசர் குர்ரம் கைப்பற்ற மேற்கொண்ட பல முயற்சிகள் கடைசியில் தோல்வியில் முடிந்தன. 14 மாத கால முற்றுகைக்குப் பின்னர் காங்ரா கோட்டையைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார்.)**

67. கூற்று 1: வங்காளத்தில் தனக்கெதிராகக் கலகம் செய்த ஆப்கானியரான உஸ்மான் கான் என்பவரை ஜஹாங்கீர் பணிய வைத்தார்.

கூற்று 2: ராணா உதய்சிங், ராணா பிரதாப் சிங் ஆகியோர் காலத்தில் முகலாயருக்கு அடிபணிய மறுத்த மேவார் ராணா உதய்சிங்கின் பேரன் ராணா அமர்சிங்கிற்கு எதிராக ஜஹாங்கீர் தனது மகன் இளவரசர் குர்ரம் தலைமையில் படையெடுப்பு நடத்தி ஒழுங்குக்கு கொண்டுவரப்பட்டது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: ஜஹாங்கீர், குர்ரம் (ஷாஜகான்) இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமர்சிங் ஜஹாங்கீரின் மேலதிகாரத்தை ஏற்றுக்கொண்ட அரசராகத் தனது பகுதிகளை ஆண்டார்.)**

68. 1595 இல் பாரசீகர்களிடமிருந்து அக்பரால் கைப்பற்றப்பட்ட காந்தகாரை ___________இல் பாரசீக அரசர் ஷா அப்பாஸ் மீட்டிருந்தார்.

A) 1602 B) 1614 C) 1619 **D) 1622**

**(குறிப்பு: காந்தகாரை மீண்டும் கைப்பற்ற முயன்ற ஜஹாங்கீரால் குர்ரம் மேற்கொண்ட கிளர்ச்சியின் காரணமாக அதை செய்ய இயலவில்லை.)**

69. தாமஸ் ரோ இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் அனுப்பிய தூதுவராய் ________ நகரில் ஒரு வணிக குடியேற்றத்தை அமைத்து கொள்வதற்கான அனுமதியை ஜஹாங்கீரிடம் பெற்றார்.

A) கோவா

B) வங்காளம்

C) ஆக்ரா

**D) சூரத்**

**(குறிப்பு: ஜஹாங்கீரின் ஆட்சி வில்லியம் ஹாக்கின்ஸ் மற்றும் சர் தாமஸ் ரோ என்ற இரு ஆங்கிலேயரின் வருகைக்கு சாட்சியமா சாட்சியமானது. இந்தியாவில் ஆங்கிலேய வணிகக் குடியேற்றம் ஒன்றை நிறுவுவதற்குப் பேரரசின் அனுமதியை ஹாக்கின்சால் பெற இயலவில்லை.)**

70. ஜாகீர்தாரி முறை குறித்த கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு.

1. இது ஒரு நில உடைமை முறையாகும்.

2. தில்லி சுல்தானியர் காலத்தில் இம்முறை வளர்ச்சி பெற்றது.

3. இம்முறையின் கீழ் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வரிவசூல் செய்கின்ற அதிகாரமும் அப்பகுதியை நிர்வகிக்கிற அதிகாரமும் அரசாங்கத்தை சேர்ந்த ஒரு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும்.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 1, 3 சரி

D) 2, 3 சரி

71. கூற்று 1: பாரசீக மொழியில் ஜமீன்தார் என்ற வார்த்தைக்கு நிலத்தின் உடைமையாளர் என்று பொருள்.

கூற்று 2: முகலாயர் காலத்தில் பிரபுக்கள் வர்க்கத்தை சேர்ந்தோரே ஜமீன்தார்களாக இருந்தனர். அக்பர் பிரபுக்களுக்கும் முந்தைய அரச குடும்பங்களின் வழித்தோன்றல்களுக்கும் நிலங்களை வழங்கி அவற்றை பரம்பரையாக அனுபவிக்கும் உரிமையையும் வழங்கினார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: ஜமீன்தார்கள் குத்தகைதாரர்களிடமிருந்தும் விவசாயிகளிடமிருந்தும் வரி வசூல் செய்து ஒரு குறிப்பிட்ட தொகையை அரசுக்குச் செலுத்தினர்.)**

72. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. தக்காணத்தில் முஸ்லீம்களும் மராத்தியர்களும் தங்கள் அரசியல் மற்றும் பிராந்தியத் தனித்தன்மைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் ஒருங்கிணைந்து முகலாயரின் மேலாதிக்கத்தை எதிர்த்தனர். இதன் பின்னே மூளையாக செயல்பட்டவர் மாலிக் ஆம்பர்.

2. 1624 இல் மே 14 இல் மாலிக் ஆம்பர் தன்னுடைய 78ஆம் வயதில் மரணமடைந்த போது அவரால் பயிற்றுவிக்கப்பட்ட மராத்தியர்கள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட சக்தியாக மாறினர்.

3. எத்தியோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு ஓர் அடிமையாக கொண்டுவரப்பட்டவர் மாலிக் ஆம்பர்.

A) 1 மட்டும் தவறு

**B) 2 மட்டும் தவறு**

C) 2, 3 தவறு

D) 3 மட்டும் தவறு

**(குறிப்பு: மாலிக் ஆம்பர் 1626 மே 14 இல் மரண மடைந்தார்.)**

73. கூற்று: ஜஹாங்கீரின் பாரசீக மனைவி மெகருன்னிசா அரியணையின் பின்னே உண்மையான அதிகாரம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

காரணம்: ஜஹாங்கீர் அரசு விஷயங்களைக் காட்டிலும் கலை, ஓவியம், தோட்டம், மலர்கள் ஆகியவற்றில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்.

A) கூற்று சரி மற்றும் காரணம் தவறு

B) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**C) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

**(குறிப்பு: ஜஹாங்கீரால் நூர்ஜகான் எனப் பெயரிடப்பட்டவர் மெகருன்னிசா.)**

74. கூற்று 1: ஜஹாங்கீர் இறந்தவுடன் நூர்ஜகான் தன் மருமகன் ஷாரியர் என்பவருக்கு மணிமுடி சூட்ட முயன்றார்.

கூற்று 2: நூர்ஜகானின் சகோதரரும் குர்ரமின் மாமனாருமான ஆசப்கான் மேற்கொண்ட முயற்சிகளால் குர்ரம் ஷாஜகான் என்ற பெயருடன் அடுத்த முகலாய அரசராக அரியணை ஏறினார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: 1641இல் ஷாஜகானின் அமைச்சரும் மாமனாருமான ஆசப்கான் மரணமடைந்தார்.)**

75. பத்து ஆண்டுகள் நாட்டையாண்ட நூர்ஜகான், __________இல் ஜஹாங்கீரின் இறப்புக்குப் பின்னர் அதிகாரத்தையும் செல்வாக்கையும் இழந்தார்.

A) 1623 B) 1625 **C) 1627** D) 1631

**(குறிப்பு: நூர்ஜகான் ஓய்வு பெற்ற பின் பிரச்சனைகள் எதையும் ஏற்படுத்தவில்லை.)**

76. ஆசப்கானின் சகோதரியும் ஷாஜகானின் முன்னாள் எதிரியுமான நூர்ஜகான்___________ வரை உயிரோடிருந்தார்.

A) 1641 நவம்பர்

B) 1643 அக்டோபர்

C) 1644 செப்டம்பர்

**D) 1645 டிசம்பர்**

77. ஷாஜகான் ஆட்சியின் தொடக்கத்தில் தெற்கு பிராந்தியங்களின் ஆளுநராக இருந்தவர்

**A) கான்ஜகான்**

B) இரண்டாம் மூர்தசா

C) இராதத்கான்

D) ஆசம்கான்

**(குறிப்பு: ஷாஜகானிடம் பகைமைப் பாராட்டிய ஆப்கானிய பிர்லோடியின் பட்டப்பெயர் கான்ஜகான் ஆகும்.)**

78. கான்ஜகான் ஷாஜகானுக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்டதால் அவரை தொடர்ந்து __________ என்பவர் தக்காணத்தின் ஆளுநராக அமர்த்தப்பட்டார்.

A) பிர்லோடி

B) இரண்டாம் மூர்தசா

**C) இராதத்கான்**

D) ஆகம்கான்

**(குறிப்பு: ஆசம்கான் எனும் பட்டத்தைப் பெற்ற இராதத்கான், இரண்டாம் மூர்தசா மற்றும் கான்ஜகானுக்கு எதிராக பால்காட் பகுதியைத் தாக்கினார்.)**

79. கான்ஜகான் தௌலதாபாத்திலிருந்து தப்பி மாளவம் சென்றதும் தக்காணத்தில் அமைதி நிலவியது. பின் ஷாஜகான் தக்காணத்தை விட்டு செல்லும் முன்பாக அப்பகுதியை__________ மாநிலங்களாகப் பிரித்தார்.

A) 2 B) 3 **C) 4** D) 5

**(குறிப்பு: தௌலதாபாத் உள்ளிட்ட அகமதுநகர், காண்டேஷ், பெரார், தெலுங்கானா ஆகியவை தக்காணத்தின் நான்கு மாநிலங்களாகும். அந்நான்கு மாநிலங்களுக்கும் ஆளுநராக பதினெட்டே வயது நிரம்பிய தனது மகன் ஔரங்கசீப்பை நியமித்தார்.)**

80. தவறான இணையைத் தேர்ந்தெடு.

1. கோல்கொண்டா – குதுப்ஷாகி

2. பீஜப்பூர் – அடில்ஷாஹி

3. பெரார் – இமத்ஷாஹி

4. பீடார் – பரித்ஷாஹி

5. அகமதுநகர் – நிஜாம்ஷாஹி

A) 2, 4 தவறு

B) 1, 3 தவறு

C) 1, 3, 5 தவறு

**D) எதுவுமில்லை**

**(குறிப்பு: மேற்கண்ட அனைத்து அரசுகளும் கூட்டாகத் தக்காணச் சுல்தானியம் என்றழைக்கப்படுகிறது.)**

81. ஷாஜகான் மகபத்கானின் உதவியோடு அகமதுநகரின் நிஜாம் ஷாஹி அரசர்களைப் பணியச் செய்த ஆண்டு

A) 1626 B) 1632 **C) 1636** D) 1642

**(குறிப்பு: 1638இல் ஷாஜகான் பாரசீகப் பேரரசில் அரங்கேறிய அரசியல் சூழ்ச்சிகளைப் பயன்படுத்தி, அக்பரால் கைப்பற்றப்பட்டு ஜஹாங்கீரால் இழக்கப்பட்ட காந்தகாரைக் கைப்பற்றி இணைத்துக்கொண்டார்.)**

82. அல்புகர்க் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து __________ ஆண்டு கோவாவைக் கைப்பற்றி அதைக் கீழ்த்திசை போர்த்துகீசியப் பேரரசின் தலைநகராக்கினார்.

A) 1508 B) 1509 **C) 1510** D) 1512

**(குறிப்பு: மேற்குக் கடற்கரையில் டாமன், சால்செட், பம்பாய் ஆகிய இடங்களிலும் போர்த்துகீசியர் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன.)**

83. பொருத்துக. (டச்சுக்காரர்களின் வணிக நிலையங்கள் அமைக்கப்பட்ட ஆண்டு)

1. மசூலிப்பட்டினம் i) 1605

2. புலிக்காட் ii) 1610

3. சூரத் iii) 1616

4. பிமிலிபட்டினம் iv) 1641

**A) i ii iv iii v**

B) ii iv iii i v

C) ii i iii v iv

D) ii i iii iv v

84. தவறான இணையைத் தேர்ந்தெடு (டச்சுக்காரர்களின் வணிக நிலையங்கள் அமைக்கப்பட்ட ஆண்டு)

A) காரைக்கால் - 1645

B) சின்சுரா – 1653

C) கொச்சி – 1663

**D) பாலசோர் – 1656**

**(குறிப்பு: காசிம் பஜார், பாராநகர், பாட்னா, பாலசோர், நாகப்பட்டினம் அனைத்திலும் 1658 ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள் வணிகதளங்களை ஏற்படுத்தினர்.)**

85. டேனியர்கள் தரங்கம்பாடியில் குடியேற்றத்தை நிறுவிய ஆண்டு

A) 1605 B) 1616 C) 1618 **D) 1620**

**(குறிப்பு: வங்காளத்தில் செராம்பூர் டேனியர்களின் தலைமையிடமாக இருந்தது.)**

86. தவறான இணையைத் தேர்ந்தெடு. (பிரெஞ்சுக்காரர்களின் தொடக்க காலக் குடியேற்றங்கள் - அமைக்கப்பட்ட ஆண்டு)

A) சூரத் - 1668

B) மசூலிப்பட்டினம் – 1669

C) புதுச்சேரி – 1673

**D) சந்தன்நகர் (வங்காளம்) – 1680**

**(குறிப்பு: சந்தன்நகர் - 1690)**

87. மலபாரில் உள்ள மாஹி, சோழ மண்டல கடற்கரையில் உள்ள ஏனாம் ஆகியவை பிரெஞ்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்ட ஆண்டு

A) 1715 B) 1721 **C) 1725** D) 1728

**(குறிப்பு: பிரெஞ்சுக்காரர்கள் 1739 ஆம் ஆண்டு காரைக்காலைக் கைப்பற்றினர்.)**

88. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி சூரத்தில் வணிக நிறுவனத்தை அமைத்த ஆண்டு

A) 1610 B) 1611 **C) 1612** D) 1613

**(குறிப்பு: பின்னர் சென்னை (1639), பம்பாய் (1668), கல்கத்தா (1690) ஆகியவற்றைப் ஆங்கிலேயர்கள் பெற்றனர்.)**

89. பிரான்ஸ் அரசன் XIV ஆம் லூயியின் சமகாலத்து அரசனான ஷாஜகான் __________ ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.

A) 20 B) 22 C) 25 **D) 30**

**(குறிப்பு: ஷாஜகான் காலத்தில் அரசருக்காகப் புகழ்பெற்ற மயிலாசனம் செய்யப்பட்டது.)**

90. பொருத்துக. (ஷாஜகான் ஆட்சியில் இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்கள்)

1. பெர்னியர் i) இத்தாலிய எழுத்தாளர், பயணி
2. தாவர்னியர் ii) இங்கிலாந்து வணிகர்
3. மான்டெல்சோ iii) ஜெர்மன் பயணி, துணிச்சல் வீரர்
4. பீட்டர்முன்டி iv) பிரெஞ்சு வைர வியாபாரி, பயணி
5. மனுச்சி v) பிரெஞ்சு மருத்துவர், பயணி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A) | i | ii | iii | iv | v |
| B) | ii | iii | i | v | iv |
| **C)** | **v** | **iv** | **iii** | **ii** | **i** |
| D) | v | iii | ii | iv | i |

91. தாராஷுகோ குறித்த கூற்றுகளில் சரியானதைத் தேர்ந்தெடு.

1. தாராஷூகோ சன்னி இஸ்லாமியப் பிரிவைச் சேர்ந்தவராயினும் சூபி தத்துவங்களின் மேல் ஆர்வம் கொண்டிருந்தார்.

2. தில்லி அரியணைக்கான வாரிசுரிமைப் போரில் ஔரங்கசீப்பிடம் தோற்றுப்பான தாராஷூகோ தத்துவஞான இளவரசர் என அறியப்பட்டார்.

3. தாராஷூகோ சமஸ்கிருத மொழியிலமைந்த உபநிடதங்களைப் பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார்.

4. பல்வேறு பண்பாடுகளை உரையாடலுக்கு உட்படுத்திய தாராஷூகோ இந்து மதத்திற்கும் இஸ்லாத்துக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதைக் கண்டறிந்தார்.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2, 3 சரி

C) 1, 2, 4 சரி

D) 2, 3, 4 சரி

**(குறிப்பு: ஷாஜகானின் நான்கு மகன்களிடையே நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் மூன்றாவது மகன் ஔரங்கசீப் வெற்றி பெற்றார்.)**

92. கூற்று 1: தாஜ்மஹால் இந்தியப் பாரசீக இஸ்லாமியக் கட்டடக் கலைகளின் கூட்டுக் கலவையாகும்.

கூற்று 2: பாரசீக வம்சாவளியைச் சேர்ந்த இந்தியராகிய உஸ்தத் அகமத் லஹாவ்ரி என்பவர் தலைமை கட்டடக்கலை நிபுணராக இருந்தாலும் தாஜ்மகாலுக்கான வரைபடத்தை தயாரித்த பெருமை அக்காலக்கட்டத்தை சேர்ந்த கட்டடக்கலை நிபுணர்களைச் சாரும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: 1612 இல் திருமணமானதில் தொடங்கி 1631இல் குழந்தைப் பேறின் போது மரணமடையும் வரை இணைபிரியாமல் உற்ற துணையாய் இருந்த தனது மனைவி மும்தாஜுக்கு அழியாப் புகழை அளிப்பதற்காக ஷாஜகான் தாஜ்மஹாலைக் கட்டினார்.)**

93. தாஜ்மகால் குறித்த கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடு.

1. தாஜ்மகாலின் கட்டிட வேலைகள் 1632 இல் தொடங்கின.

2. இந்தியா, பாரசீகம், உதுமானியப் பேரரசு, ஐரோப்பா ஆகியவற்றிலிருந்து இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கல்லறை மாடப் பணியை 1638-39இல் முடிப்பதற்காகப் பணியமர்த்தப்பட்டனர்.

3. அருகிலுள்ள ஏனைய கட்டடங்கள் 1643 இல் முடிவடைந்தன.

4. அலங்கார வேலைகள் குறைந்தபட்சம் 1644 வரை தொடர்ந்தது.

A) 1 மட்டும் தவறு

B) 2, 3 தவறு

C) 1, 4 தவறு

**D) 4 மட்டும் தவறு**

**(குறிப்பு: தாஜ்மகாலின் அலங்கார வேலைகள் குறைந்தபட்சம் 1647 வரை தொடர்ந்தது.)**

94. ஔரங்கசீப்பால் வீட்டு சிறையிலடைக்கப்பட்ட ஷாஜகான் அரண்மனைக் கைதியாகவே இருந்து எப்போது மரணமடைந்தார்?

A) 1665 ஜனவரி

B) 1665 செப்டம்பர்

**C) 1666 ஜனவரி**

D) 1666 செப்டம்பர்

**(குறிப்பு: ஷாஜகான், தாஜ்மகாலில் அவரது மனைவியின் அருகே நல்லடக்கம் செய்யப்பட்டார்.)**

95. ஔரங்கசீப் ஆலம்கீர் வாரிசுரிமைப் போரில் அரியணைக்காகத் தன்னோடு போட்டியிட்ட தாராஷுகோ, ஷுஜா, முராத் ஆகியோரை வெற்றிக் கொண்டு ________ ஆண்டு அரியணை ஏறினார்.

A) 1652 B) 1657 **C) 1658** D) 1659

**(குறிப்பு: ஔரங்கசீப் ஆலம்கீர் என்பதற்கு உலகை வெல்பவர் என்று பொருள்.)**

96. ஔரங்கசீப் குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.

A) ஔரங்கசீப் தனது ஐம்பது ஆண்டுகால ஆட்சியில் முதல் இருபத்தைந்து ஆண்டுகள் வட இந்திய அரசியலில் பெரும்பாலும் ஈடுபட்டிருந்தார்.

B) ஔரங்கசீப் ஆட்சியின் தொடக்கத்தில் தக்காணப் பகுதி அவருடைய ஆளுநர்களின் கைகளில் விடப்பட்டிருந்தன.

C) 1681இல் ஔரங்கசீப்புடைய மகன்களில் ஒருவரான இளவரசர் அக்பர் மேற்கொண்ட கிளர்ச்சியின் காரணமாய் ஔரங்கசீப் தக்காணம் சென்று மீண்டும் தில்லிக்கு திரும்பவில்லை.

**D) ஔரங்கசீப் அகமதுநகரில் 1705இல் காலமானார்.**

**(குறிப்பு: ஔரங்கசீப் 1707 ஆம் ஆண்டு அகமதுநகரில் காலமானார்.)**

97. ஔரங்கசீப் ஆட்சியின் தொடக்கத்தில் _________ அவரின் தலைநகராக அமைந்தது.

A) ஆக்ரா

B) குவாலியர்

C) அலகாபாத்

**D) ஷாஜகானாபாத்**

**(குறிப்பு: இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் தனது நீண்ட படையெடுப்புகளின்போது ஔரங்கசீப் எங்கெல்லாம் முகாமிட்டாரோ அவ்விடங்களுக்குத் தலைநகர் மாறியது.)**

98. வட இந்தியாவில் ஔரங்கசீப்பிற்கு எதிராக கலகம் செய்தவர்கள் யார்?

1. ஜாட் 2. சத்னாமியர்

3. சீக்கியர் 4. ஈரானியர்

**A) 1, 2, 3** B) 2, 3, 4 C) 1, 3, 4 D) 1, 2, 4

**(குறிப்பு: ஜஹாங்கீர், ஷாஜகான் காலத்திலேயே தொடர்ந்து கலகம் செய்யும் இயல்பினைக் கொண்ட ஜாட்டுகளின் 1669 ஆம் ஆண்டு கலகம் ஒடுக்கப்பட்டாலும் ஔரங்கசீப் இறப்பிற்கு பின் மீண்டும் கலகத்தில் ஈடுபட்டனர். சத்னாமியர் கிளர்ச்சியானது உள்ளூர் இந்து ஜமீன்தார்களின் உதவியோடு ஒடுக்கப்பட்டது. சீக்கியர் கலகமானது ஒன்பதாவது குருவான தேஜ்பகதூர் கொல்லப்பட்டதோடு கிளர்ச்சி முடிவுற்றது.)**

99. மார்வாரில் ஜஸ்வந்த் சிங்கின் மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வாரிசுரிமை சிக்கல் காரணமாக ஔரங்கசீப் ___________ என்பவரை பெயரளவிற்கு அரச பதவியில் அமர்த்த முயற்சி மேற்கொண்டார்.

A) ராணி ஹாடி

**B) இந்திர சிங்**

C) ராஜ் சிங்

D ஜெய் சிங்

**(குறிப்பு: ஔரங்கசீப்பின் இம்முயற்சியை ஜஸ்வந்த் சிங்கின் மனைவி ராணி ஹாடி வெறுத்தார். இது தொடர்பாக, ரத்தோர் ராஜபுத்திரரின் உதவியோடு மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஒடுக்கப்பட்டது.)**

100. மார்வார் அரசியலில் ஔரங்கசீப் தலையிட்டதால் வெறுப்பு கொண்ட மேவார் ராணாவான _________ என்பவர் கலகத்தில் ஈடுபட்டார்.

A) ராணி ஹாடி

B) இந்திர சிங்

**C) ராஜ் சிங்**

D ஜெய் சிங்

**(குறிப்பு: ராஜ் சிங்கின் கிளர்ச்சியை ஔரங்கசீப்பின் மகன் இளவரசர் அக்பர் ஆதரித்தார். இருந்தபோதிலும் முகலாயர் படைகளுக்கு ராணா இணையானவர் அல்ல என்பதால் கொரில்லா போர்முறையைக் கையாண்டு 1680இல் தான் மரணமடையும்வரை ராணா போராடினார்.)**

101. மேவாரின் புதிய ராணாவாக ராணா ஜெய்சிங் பதவியேற்ற ஆண்டு

A) 1680

**B) 1681**

C) 1682

D) 1683

**(குறிப்பு: ராணா ஜெய் சிங் ஔரங்கசீப்புடன் ஒரு அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.)**

102. ஔரங்கசீப்பின் தக்காணக் கொள்கையின் நோக்கம்,

1. வளர்ந்து வந்த மராத்தியரின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவது.

2. ஷியா பிரிவைச் சேர்ந்த தக்காணச் சுல்தானியங்களானக் கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகியவற்றின் கிளர்ச்சிப் போக்கிற்கு அணைபோடுவது

3. தக்காணத்தை புகலிடமாகக் கொண்ட தனது மகன் இளவரசர் அக்பரின் கிளர்ச்சிகளை ஒடுக்குவது

4. ஷியா முஸ்லிம்களின் கலகங்களை ஒடுக்குவது.

A) அனைத்தும்

**B) 1, 2, 3**

C) 2, 3, 4

D) 1, 2, 4

103. பீஜப்பூரின் அடிச்சாஹி வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் ________ என்பவர் ஔரங்கசீப்பின் பல படையெடுப்புகளை எதிர்த்து நின்றார்.

A) அப்துல் ஹசன்

B) முகமது அடில்ஷா

**C) சிக்கந்தர் அடில்ஷா**

D) ஹசன் அடில்ஷா

**(குறிப்பு: ஔரங்கசீப் 1685 இல் தனது மகன் ஆசாம் ஷாவையும் பின் ஷா ஆலமையும் பீஜப்பூரை கைப்பற்ற அனுப்பி வைத்தார். இதில் பலன் கிட்டாததால் ஔரங்கசீப் நேரடியாகப் போர்க்களத்தில் இறங்கி இறுதிவரை போரிடும்படி தனது படைகளுக்கு உற்சாகம் அளித்தார். இதனால் பீஜப்பூர் சுல்தான் தோல்வியடைந்தார்.)**

104. கோல்கொண்டா சுல்தான் அப்துல் ஹசன் __________ ஆண்டு ஔரங்கசீப்பால் தோற்கடிக்கப்பட்டு கோல்கொண்டா கோட்டை கைப்பற்றப்பட்டது.

A) 1682 B) 1684 C) 1686 **D) 1687**

105. சிவாஜியை கைது செய்ய ஔரங்கசீப்பால் அனுப்பி வைக்கப்பட்ட தளபதிகள்

A) ராஜ் சிங், செயிஷ்டகான்

B) இந்திரசிங், செயிஷ்டகான்

C) ஹரிசிங், செயிஷ்டகான்

**D) ஜெய்சிங், செயிஷ்டகான்**

**(குறிப்பு: ஜெய்சிங் சிவாஜியைக் கைது செய்து தில்லிக்கு அழைத்துச் சென்றார். ஆனால் அங்கிருந்து தப்பிய சிவாஜி மீண்டும் தக்காணத்தை அடைந்தார்.)**

106. கொரில்லா போர் முறையைப் பின்பற்றி முகலாயர்களை எதிர்த்து போர் செய்த சிவாஜி மரணமடைந்த ஆண்டு

A) 1678 B) 1679 **C) 1680** D) 1681

**(குறிப்பு: சிவாஜியின் மகன்களும் தொடர்ந்து எதிர்த்து ஔரங்கசீப்பை 1707இல் அவர் மரணமடையும் வரை பெரும் சோதனைக்கு உள்ளாக்கினர்.)**

107. கூற்று 1: ஔரங்கசீப், அரியணைப் போட்டியில் தனக்கு எதிரான முக்கிய போட்டியாளரான தனது சகோதரர் தாராஷுகோவுக்கு சீக்கியர் உதவினர் என்ற காரணத்திற்காக அவர்களின் மீது வெறுப்புக் கொண்டார்.

கூற்று 2: ஔரங்கசீப்பின் உத்தரவின்படியே குரு தேஜ்பகதூர் கொல்லப்பட்டார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: ஔரங்கசிப்பிற்கு கடுமையான எதிர்ப்பென்பது மராத்தியரிடமிருந்தே வந்தது.)**

108. கோல்கும்பாஸ் குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.

1. 1480 முதல் 1686 வரை பீஜப்பூரை ஆட்சி செய்த அடில்ஷாஹி மன்னர் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

2. அடர் சாம்பல் நிறக் கருங்கற்களால் கட்டப்பட்ட இதிலுள்ள 4 மூலைகளும் எண்கோண வடிவில் அமைந்துள்ளன.

3. கோல்கும்பாஸ் உலகின் இரண்டாவது பெரிய குவிமாடக் கட்டடமாகும்.

4. உயரமான இக்கட்டடம் 135 அடி சராசரி அளவில் அமைக்கப்பட்டுள்ளதுடன் 178 அடி உயர தளமேடை கொண்டதாகவும் உள்ளது.

A) 4 மட்டும் தவறு

B) 1, 2 தவறு

C) 3 மட்டும் தவறு

**D) எதுவுமில்லை**

**(குறிப்பு: கோல்கும்பாஸில் முகமது அடில்ஷா அவர் மனைவி அருஸ்பீபி, அவர் மகள், பேரன், பேரனின் பிரிய மனைவி ரம்பா ஆகியோரின் ஐந்து கல்லறைகள் உள்ளன.)**

109. சிவாஜியின் மகன் சாம்பாஜி ____________ ஆண்டு ஔரங்கசீப்பால் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்.

A) 1687 B) 1688 **C) 1689** D) 1690

**(குறிப்பு: கலகத்தில் ஈடுபட்ட ஔரங்கசீப்பின் மகன் அக்பர் தக்காணத்தில் சாம்பாஜியின் உதவியை பெற்றார். ஔரங்கசீப் நேரடியாகக் களத்தில் இறங்கவே பாரசீகத்திற்கு தப்பிச் சென்றார். சாம்பாஜி கொல்லப்பட்டார்.)**

110. ஔரங்கசீப் குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.

1. ஔரங்கசீப் 'ஜிஸியா' வரியை மீண்டும் விதித்தார்.

2. ஔரங்கசீப் ஆட்சிக் காலத்தில் புதிய கோவில்கள் கட்டவும், பழைய கோவில்கள் பழுது நீக்கவும் அனுமதிக்கவில்லை.

3. வழக்கமாக விதிக்கப்படும் நிலவரிக்கு மேலாக வசூலிக்கப்பட்ட 'அப்வாப்' என்னும் வரிவசூலை, அது ஷரியத் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற காரணத்திற்காக நிறுத்தினார்.

4. ஒரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் இந்து அதிகாரிகள் அதிகமான எண்ணிக்கையில் அரசு நிர்வாகத்தில் பணியாற்றினர்.

A) 3 மட்டும் தவறு

B) 3, 4 தவறு

C) 4 மட்டும் தவறு

**D) 2 மட்டும் தவறு**

**(குறிப்பு: ஔரங்கசீப் ஆட்சிக் காலத்தில் புதிய கோவில்கள் கட்டப்படக் கூடாதெனவும், பழைய கோவில்கள் பழுது நீக்கும் பணிகள் அனுமதிக்கப்பட்டன.)**

111. கூற்று 1: முகலாயர் ஆட்சியில் முக்காடம் என்றழைக்கப்பட்டக் கிராமத் தலைவர்கள் கிராமத்தின் நிர்வாக உறுப்பான பஞ்ச் (பஞ்சாயத்து) என்ற அமைப்பினை உருவாக்கினர்.

கூற்று 2: கிராம அளவில் வரிகளை வசூலிப்பதும் அவை தொடர்பான கணக்குகளைப் பராமரிப்பதும் இப்பஞ்சாயத்தின் பொறுப்பாகும்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படாத நிலங்களைக் கிராமக் கைவினைஞர்கள், கடைநிலை ஊழியர்கள், சேவை செய்வோர் ஆகியோருக்கு அவர்கள் செய்யும் சேவைகளுக்குக் கைமாறாக இப்பஞ்சாயத்து வழங்கியது.)**

112. ___________ என்பவர் தன்னுடைய நூலில் முகலாயர் ஆட்சியில் ஜமீன்தார்கள் ஆவதற்கான தகுதிகளையுடைய சாதிகளைப் பட்டியலிட்டுள்ளார்.

A) அபுல் பைசி

**B) அபுல் பாசல்**

C) பாணினி

D) நூனிஸ்

**(குறிப்பு: அபுல் பாசல் தன்னுடைய அய்னி அக்பரி நூலில் இதைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். பெரும்பாலும் இந்து மேல் சாதிகளைச் சேர்ந்தோரும் ரஜபுத்திரர்களும் ஜமீன்தார்களாக இருந்தனர். சில பகுதிகளில் முஸ்லீம்களும் ஜமீன்தார்களாக இருந்துள்ளனர்.)**

113. அக்பருடைய ஆட்சிக் காலத்தில் ___________ விழுக்காடுக்கும் மேற்பட்ட பிரபுக்கள் ரஜபுத்திரர்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

**A) 15** B) 20 C) 25 D) 30

**(குறிப்பு: ராஜா தோடர்மால், ராஜா மான்சிங், ராஜா பீர்பால் ஆகியோர் அக்பர் காலத்தில் புகழ்பெற்ற பிரபுக்களாவர்.)**

114. கூற்று 1: ரஜபுத்திரர்கள் அரசு நிர்வாகத்திலிருந்த பல்வேறு பணியிடங்களுக்கு காயஸ்தர், கத்ரி சமூகத்தை சேர்ந்தவர்களை நியமித்தனர்.

கூற்று 2: ஜஹாங்கீர், ஷாஜகான், ஔரங்கசீப் ஆகியோர் மராத்தியரைப் பிரபுக்களாக நியமித்தனர்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

115. புகையிலையும், மக்காச்சோளமும் ___________ நூற்றாண்டில் இந்தியாவில் அறிமுகமாயின.

A) 15 B) 16 **C) 17** D) 18

**(குறிப்பு: இதற்குப் பின்னரே மிளகாயும் வேர்க்கடலையும் அறிமுகமாயின.)**

116. முகலாயர் காலத்தில் ரபி, காரிப் ஆகிய இரு வேளாண் பருவங்களில் பயிர்செய்யப்பட்டப் பயிர் வகைகளை__________நூல் பட்டியலிடுகிறது.

A) அக்பர் நாமா

**B) அய்னி அக்பரி**

C) பாதுஷா நாமா

D) ரசகங்காதரா

**(குறிப்பு: அன்னாசிப்பழம் பதினாறாம் நூற்றாண்டில் அறிமுகமானது. ஒட்டுமுறையில் பல மாம்பழ ரகங்களை போர்த்துகீசியர் வளர்த்தார்கள்.)**

117. முகலாயர் காலத்தில் __________பட்டு உற்பத்தியில் பிரமிப்பூட்டும் வளர்ச்சியைப் பெற்று உலக சந்தைக்கு அதிகமான பட்டுத் துணியை அனுப்பிவைக்கும் தலைமை பட்டு உற்பத்தி மையமாயிற்று.

A) குஜராத்

B) ஆக்ரா

C) அகமது நகர்

**D) வங்காளம்**

118. சரியானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. முகலாயர் காலத்தில் முஸ்லீம் மணப்பெண்கள் திருமணத்தின்போது 'மகர்' எனும் பணப்பரிசை பெறுவதற்கு உரிமை பெற்றிருந்தனர்.

2. முகலாயர் ஆட்சியில் கிணற்று நீர்ப்பாசனமே முக்கியப் பாசன முறையாக இருந்தது.

3. முகலாய ஆளும் வர்க்கத்தாருக்கு நிலவரியே மிக முக்கியமான வருவாயாகும்.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

**(குறிப்பு: அரசு நிர்வாகம் நிலத்தின் உற்பத்தித் திறனை மதிப்பிட்டு, நிலத்தை அளவை செய்து மொத்த அளவை அடிப்படையாகக் கொண்டு வரியை நிர்ணயம் செய்தது.)**

119. தோடர்மாலால் அறிமுகம் செய்யப்பட்ட ஜப்தி முறையை பிரகடனம் செய்த முகலாய மன்னர்

**A) அக்பர்**

B) ஜஹாங்கீர்

C) ஷாஜகான்

D) ஔரங்கசீப்

**(குறிப்பு: பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டிய வரிகள் தொடர்பான விவரங்களைக் கொண்ட அட்டவணைகள் தஸ்தர் என அழைக்கப்பட்டன.)**

120. முகலாயர் காலத்தில் __________ என்னும் தொழிற்கூடங்களில் விலையுயர்ந்த கைவினைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

A) பர்கானா

**B) கர்கானா**

C) பஞ்சாரா

D) சைன்

**(குறிப்பு: அரசக் குடும்பங்களுக்குத் தேவையான பொருட்களை அரண்மனை சார்ந்த கர்கானாக்கள் உற்பத்தி செய்தன.)**

121. முகலாயர் கால வர்த்தகம் குறித்த கூற்றுகளில் சரியானதை தேர்ந்தெடு.

1. அரிசி, சர்க்கரை, மஸ்லின் பட்டு, உணவு தானியம் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதில் வங்காளம் முக்கிய மையமாகத் திகழ்ந்தது.

2. சோழமண்டலக் கடற்கரை, தனது பருத்தித் துணி உற்பத்திக்காகப் புகழ்பெற்றிருந்தது.

3. காஷ்மீர் சால்வைகளும் தரைவிரிப்புகளும் கைவினைப் பொருட்களின் உற்பத்திக்குப் பெயர் பெற்றிருந்த லாகூரிலிருந்து விநியோகமாகின.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

122. முகலாயர் காலத்தில் பொருட்கள் இடம் விட்டு இடம் செல்வதற்கு _________ என்றழைக்கப்பட்ட கடன் பத்திரங்கள் உதவின.

A) சராய்

B) பஞ்சாரா

C) சைன்

**D) உண்டி**

**(குறிப்பு: முகலாயர் காலத்தில் ஒருங்கிணைக்கப்பட்டிருந்த "சராய்கள்" (ஓய்வுவிடுதிகள்) வணிகர்களின் பயணங்களை ஊக்குவித்தன.)**

123. தவறான இணையைத் தேர்ந்தெடு. (வணிக சமூகத்தினர்)

**A) வங்காளம் - போராமுஸ்லிம்கள்**

B) ரஜபுதனம் – மார்வாரிகள்

C) சோழமண்டல கடற்கரை – செட்டியார்கள்

D) மலபார் - முஸ்லீம்கள்

**(குறிப்பு: போராமுஸ்லிம்கள் – குஜராத்.)**

124. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு.

A) இராமர் வழிபாட்டு மரபை தனது புகழ்பெற்ற பக்திப் பாடல்கள் வழி முன்மொழிந்த துளசிதாசர் (ராமசரிதமனஸ்) இராமரைக் கடவுளின் அவதாரமாகக் சித்தரித்தார்.

B) வல்லபாச்சாரியார் அவருடைய மகன் வித்தால் நாத் ஆகியோர் கிருஷ்ண வழிபாட்டை பரப்புரை செய்தனர்.

C) சூர்தாஸ் சூர்-சராவளி என்னும் இலக்கியத்தை உள்ளூர் மொழியில் எழுதினார்.

**D) ஏகநாதர், துக்காராம் ஆகியோர் வங்காளத்தை சேர்ந்த பக்தி இயக்கக் கவிஞர்களாவர்.**

**(குறிப்பு: ஏகநாதர், துக்காராம் ஆகியோர் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பக்தி இயக்கக் கவிஞர்களாவர்.)**

125. வியாசரால் பிரபலப்படுத்தப்பட்ட 'தசருதா' இயக்கம் எப்பகுதியை சேர்ந்த பக்தி இயக்கம்?

A) தமிழ்நாடு

**B) கர்நாடகா**

C) ஆந்திரா

D) வங்காளம்

**(குறிப்பு: பக்தி இயக்கத்தின் மிக முக்கிய ஆளுமை கபீர் ஆவார். இவர் முழுமையான ஒரு கடவுள் கோட்பாட்டை முன்வைததார்.)**

126. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) கபீர் – நெசவாளர்

B) ரவிதாஸ் - தோல் பதனிடும் தொழிலாளி

C) சைன் - சிகையலங்காரத் தொழில்

**D) தாது – நெசவாளர்**

**(குறிப்பு: தாது - பருத்தியைச் சுத்தம் செய்பவர்.)**

127. கூற்று 1: சீக்கியரின் புனித நூலான குரு கிரந்த சாகிப் இஸ்லாமிய மத குருவான ஷேக் பரித், பக்தி இயக்கப் புலவர்களான நாமதேவர், கபீர், சைன், ரவிதாஸ் ஆகியோரின் போதனைகளை உள்ளடக்கமாய்க் கொண்டுள்ளது.

கூற்று 2: "கடவுள் ஒருவரே" என குரு நானக் நம்பினார். அக்கடவுள் உருவமற்றவர், எங்கும் நிறைந்திருப்பவர் என கூறினார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

128. டேனியர்களின் ஆதரவின் கீழ் முதல் லூத்தரன் மத பரப்பாளர்கள் ___________ ஆண்டு தரங்கம்பாடிக்கு வந்தனர்.

A) 1702 B) 1705 **C) 1706** D) 1709

**(குறிப்பு: அவர்களில் ஒருவரான சீகன்பால்கு விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை 1714 இல் தமிழில் மொழியாக்கம் செய்தார்.)**

129. ஐரோப்பாவிலிருந்த பல்கலைக் கழகங்களுக்கு நிகராக இந்தியாவில் கல்வி நிறுவனங்கள் இல்லை என கூறிய பிரான்ஸ் நாட்டு பயணி

A) ராபர்ட்-டி-நோபிலி

**B) பெர்னியர்**

C) அல்புகர்க்கு

D) அல்மெய்டா

**(குறிப்பு: இதனால் அறிவியல் பாடங்களைக் கற்பிப்பது இயலாத நிலையில் இருந்தது. இருந்தபோதிலும் கணிதம், வானியல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தப்பட்டது.)**

130. பாஸ்கராச்சாரியாரின் புகழ்பெற்ற கணித நூலான லீலாவதியை மொழிப்பெயர்த்த அக்பர் அவைக்களப் புலவர்

A) ராஜா தோடர்மால்

B) அபுல் பாசல்

**C) பெய்சி**

D) பெர்னியர்

131. நீர் இறைப்பதற்காகப் பல பீப்பாய்கள் இணைக்கப்பட்ட சக்கரமான பாரசீகச் சக்கரம் யாருடைய காலத்தில்இந்தியாவில் அறிமுகமானது?

A) அக்பர்

B) ஹுமாயூன்

C) ஷாஜகான்

**D) பாபர்**

**(குறிப்பு: வரிசையாக விசைச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட சற்றே கடினமான நீர் இறைக்கும் இயந்திரம் பதேபூர் சிக்ரியில் நிறுவப்பட்டது.)**

132. கப்பலின் ஒட்டகம் என சொல்லப்படும் தொழில்நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் மனிதர்

**A) அக்பர்**

B) ஹுமாயூன்

C) ஷாஜகான்

D) பாபர்

**(குறிப்பு: இத்தொழில் நுட்பத்தின்படி ஒரு பெரிய படகின் மீதே கப்பல் கட்டப்படும். அவ்வாறு கட்டப்படுவது அக்கப்பல்களை கடலுக்குள் கொண்டு செல்வதை எளிதாக்கியது.)**

133. "தொழில்நுட்பத்தில் இந்தியாவின் பின் தங்கிய நிலை வெளிப் படையாகத் தெரிகிறது. இந்தியப் படைகளில் மேட்ச் லாக் எனப்படும் பழைய பாணியிலானத் துப்பாக்கிக்கள் அதிகமான பயன்பாட்டில் இருந்தபோது ஐரோப்பாவில் பிளின்ட்லாக் எனப்படும் நவீனத் துப்பாக்கிகள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டன. செலவு மிக்க செம்பிலான பீரங்கிகளை இந்தியா தொடர்ந்து பயன்படுத்தி வந்தபோது ஐரோப்பாவில் முன்னதாகவே அவை பயன்பாட்டிலிருந்து நீங்கிவிட்டன. இதற்கு காரணம் 17ஆம் நூற்றாண்டில் கூட இந்தியாவால் வார்ப்பிரும்பை உற்பத்தி செய்ய இயலாமல் போனதேயாகும்' என்று கூறியவர்

**A) இர்பான் ஹபீப்**

B) பெர்னியர்

C) அல்புகர்க்கு

D) அல்மெய்டா

134. கூற்று 1: மணற்பாறைகளால் கட்டப்பட்ட ஆக்ரா கோட்டை ரஜபுத்திர பாணிகளை இணைத்து கட்டப்பட்டதற்கு ஒரு எடுத்துக்காட்டாய் திகழ்கிறது.

கூற்று 2: ஆக்ராவுக்கு அருகே சிக்கந்தராவிலுள்ள அக்பரின் கல்லறை மாடம் சில பௌத்த கட்டடக்கலைக் கூறுகளையும் கொண்டுள்ளது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: அக்பரின் கல்லறை மாடம் அக்பர் காலத்தில் தொடங்கப்பட்டு ஜஹாங்கீரின் காலத்தில் நிறைவு பெற்றது.)**

135. முகலாயர் காலத்திய முதல் வெள்ளை நிறப் பளிங்கு கற்களால் கட்டப்பட்ட கட்டடம்

A) தாஜ்மகால்

B) புராணகிலா

C) சசாரம்

**D) இதிமத் உத் தௌளா கல்லறை**

**(குறிப்பு: நூர்ஜஹானின் தந்தையான இதிமத் உத் தௌளாவின் கல்லறையை கட்டியவர் ஜஹாங்கீர்.)**

136. யாருடைய காலத்தில் முகலாயக் கட்டடக்கலை அதன் சிகரத்தை எட்டியது?

A) ஜஹாங்கீர்

**B) ஷாஜகான்**

C) அக்பர்

D) ஔரங்கசீப்

**(குறிப்பு: திவானி ஆம், திவானி காஸ், மோதி மஹால், ஹீரமஹால் போன்ற பிரமிப்பூட்டும் கட்டடங்களால் சூழப்பட்டுள்ள செங்கோட்டை ஷாஜகான் காலத்து கட்டடக்கலைத் திறன்களைப் பிரதிபலிக்கின்றன.)**

137. வெடியுப்பை பயன்படுத்தி நீரைக் குளிர்விக்கும் முறையைப் பரவலாக்கிய பெருமை __________ ஐச் சாரும்.

**A) அக்பர்**

B) ஹுமாயூன்

C) ஷாஜகான்

D) பாபர்

138. யாருடைய காலத்தில் லாகூரில் பாதுஷாகி மசூதி கட்டப்பட்டது?

A) ஜஹாங்கீர்

B) ஷாஜகான்

C) அக்பர்

**D) ஔரங்கசீப்**

**(குறிப்பு: ஔரங்காபாத்தில் ரபியா உத் தௌராணியின் பளிங்கிலான கல்லறையும் கட்டப்பட்டது. இக்கல்லறை பீபிமக்பரா (பெண்ணின் கல்லறை) என்றழைக்கப்படுகிறது.)**

139. முகலாயர் கால ஓவியக்கலை குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.

A) இந்தியா வந்த நுண் ஓவியக் கலைஞர்களான அப்துல் சமத், மீர் சையத் அலி ஆகியோரிடமிருந்து இந்திய ஓவியர்கள் ஊக்கம் பெற்றனர்.

**B) தஷ்வந்த், பசவன் ஆகியோர் பாபரின் அவையை அலங்கரித்த முக்கிய ஓவியர்களாவர்.**

C) ஜஹாங்கீர் காலத்தில் உருவுப் படத்தை வரைதலும் விலங்குகளை வரைவதும் வளர்ச்சி பெற்றன.

D) முகலாய நுண்ணோவியங்கள் டச்சு நாட்டின் தலைச்சிறந்த ஓவியரான ரெம்பிராண்ட் மீது தாக்கத்தை ஏற்படுத்தின.

**(குறிப்பு: தஷ்வந்த், பசவன் ஆகியோர் அக்பரின் அவையை அலங்கரித்த முக்கிய ஓவியர்களாவர்.)**

140. பல மெல்லிசைப் பாடல்களை இயற்றிய குவாலியரை சேர்ந்த தான்சென் ஏனைய 35 இசைக் கலைஞர்களோடு ___________ ஆல் ஆதரிக்கப்பட்டார்.

**A) அக்பர்**

B) ஹுமாயூன்

C) ஷாஜகான்

D) ஔரங்கசீப்

**(குறிப்பு: இச்செய்தியை அய்னி அக்பரி நூல் குறிப்பிடுகிறது.)**

141. கூற்று 1: ஜஹாங்கீரும் ஷாஜகானும் இசையை ஆதரித்தனர். ஔரங்கசீப் இசைக்கு எதிரானவராகத் திகழ்ந்தார்.

கூற்று 2: பாபர் நாமா, பாதுஷா நாமா ஆகிய நூல்களில் இசைக்கருவிகளோடு பெண்கள் நடனமாடும் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

**B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி**

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: ஔரங்கசீப் இசைக்கு எதிரானவர் அல்ல. அவருடைய காலத்தில்தான் இந்தியாவின் செவ்வியல் இசை குறித்த பல நூல்கள் எழுதப்பட்டன.)**

142. முகலாயப் பேரரசிலும் தக்காண அரசுகளிலும் __________மொழி நிர்வாக மொழியாக இருந்தது.

A) சமஸ்கிருதம்

**B) பாரசீகம்**

C) உருது

D) தெலுங்கு

**(குறிப்பு: பாரசீகம், சமஸ்கிருதம் மற்றும் பிராந்திய மொழிகள் முகலாயர் காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்தன.)**

143. அக்பர் நாமா என்னும் நூலில் அக்பரின் வரலாற்றை தொகுத்து வழங்கியவர்

A) அக்பர்

B) முகமது காஸிம்

**C) அபுல் பாசல்**

D) முகமது வாரிஸ்

**(குறிப்பு: அபுல் பாசல் முகலாய நிர்வாகத்தைப் பற்றி அய்னி அக்பரியில் விவரித்துள்ளார்.)**

144. ஔரங்கசீப்பின் முதல் பத்தாண்டு கால ஆட்சியைப் பற்றி விளக்கும் ஆலம்கீர் நாமா என்னும் நூலை இயற்றியவர்

A) முகமது வரிஸ்

B) முகமது காஸிம்

C) அபுல் பாசல்

**D) முகமது காஸிம்**

**(குறிப்பு: அப்துல் ஹமீது லகோரி, முகமது வரிஸ் ஆகிய இருவரும் இணைந்து எழுதிய ஷாஜகான் வாழ்க்கை வரலாறான பாதுஷா நாமா அய்னி அக்பரியை முன்னுதாரணமாகக் கொண்டு எழுதப்பட்டது. ஆலம்கீர் நாமாவும் இதே முறையைப் பின்பற்றி எழுதப்பட்டது.)**

145. ___________ என்னும் நூல் பல்வேறு மதங்களின் நம்பிக்கைககள், அம்மதங்கள் தொடர்பான நூல்கள் ஆகியன குறித்துப் பாரபட்சமற்ற விபரங்களைக் கொண்டுள்ளது.

A) அக்பர் நாமா

B) பாதுஷா நாமா

**C) தபிஸ்தான்**

D) சர்-இ-அக்பர்

**(குறிப்பு: பாபரின், சகாட்டி துருக்கிய மொழியில் எழுதிய சுயசரிதையை அப்துல் ரகீம் கானி-இ-கானான் என்பவர் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்தார்.)**

146. உபநிடதங்களை 'சர்-இ-அக்பர்' (மாபெரும் ரகசியம்) என்னும் பெயரில் மொழிபெயர்த்தவர் மொழிப்பெயர்த்த அக்பர் அவைக்களப் புலவர்

A) ராஜா தோடர்மால்

B) அபுல் பாசல்

**C) தாராஷூகோ**

D) பெர்னியர்

**(குறிப்பு: அபுல் பெய்சியின் மஸ்னாவி, உத்பி, நசிரி ஆகியன இந்தியாவில் பாரசீகக் கவிதைகளுக்கு வளம் சேர்த்தன.)**

147. யாருடைய மேற்பார்வையில் மகாபாரதம் பாரசீக மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது?

A) முகமது வரிஸ்

B) முகமது காஸிம்

**C) அபுல் பெய்சி**

D) முகமது காஸிம்

**(குறிப்பு: சமஸ்கிருத நூல்களை மொழி பெயர்த்ததால் பாரசீக மொழி வளம் பெற்றது.)**

148. கல்ஹனார் காஷ்மீரின் முழுமையான வரலாறு குறித்து எழுதிய நூல்

A) தஜிகனிலகந்தி

B) ரசகங்காதரா

**C) ராஜவலிபதகா**

D) மஸ்னாவி

**(குறிப்பு: இந்நூல் அக்பர் ஆட்சிக் காலத்தில் பிரக்ஞபட்டரால் தொகுக்கப்பட்டது.)**

149. தஜிகனிலகந்தி என்னும் வானியல் ஆய்வு நூலைப் படைத்த நீலகண்டர் யாருடைய வானியலறிஞராக திகழ்ந்தார்?

**A) அக்பர்**

B) ஹுமாயூன்

C) ஷாஜகான்

D) ஔரங்கசீப்

**(குறிப்பு: ஷாஜகானின் அவைக்களப் புலவரான ஜெகநாத பண்டிதர் 'ரசகங்காதரா' எனும் சிறப்புக்குரிய நூலை எழுதினார்.)**

150. கூற்று 1: அப்துர் ரகீம் கான்-இ-கானான் என்பவர் வாழ்க்கை குறித்த மனித உறவுகள் தொடர்பான பாரசீகர்களின் சிந்தனைகள் இழையோடும் பக்திப் பாடல்களை இந்தியின் கிளை மொழியான பிரிஜி என்னும் வடிவத்தில் எழுதினார்.

கூற்று 2: கிழக்கு உத்திரப்பிரதேசத்து மக்கள் பேசிய இந்தி மொழியின் வட்டார மொழியான அவதியில் துளசிதாசர் எழுதிய பாடல்கள் அவற்றின் பக்திச் சிந்தனைகளுக்காகப் பிரபலமாயின.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: முக்தீஸ்வரர் மகாபாரதத்தையும் இராமாயணத்தையும் இலக்கிய வளம் கொண்ட மராத்திய மொழியில் எழுதினார்.)**

151. மாபெரும் சைவப் புலவரான குமரகுருபரர் ___________ நூற்றாண்டின் பிற்பகுதியில் காசி சென்று வந்ததாகக் கூறப்படுகிறது.

A) 15 B) 16 **C) 17** D) 18

**(குறிப்பு: குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், நீதிநெறி விளக்கம் ஆகிய முக்கிய இலக்கியங்களை இயற்றினார்.)**

152. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு.

1. விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் தனது அமுக்தமால்யதா மூலமாகவும், அவருடைய அவைக்களப்புலவரான அல்லசானி பெத்தண்ணா தனது 'மனுசரித்திரா' எனும் நூலின் மூலமாகவும் தெலுங்கு இலக்கியத்தின் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றனர்.

2. அஸ்ஸாமிய மொழியில் பக்திப் பாடலை முன்மாதிரியாகக் கொண்டு சங்கர தேவர் ஒரு புதிய இலக்கியமரபை உருவாக்கினார்.

3. கிருஷ்ணருக்கும் ராதைக்குமான காதலைச் சித்தரிக்கும் கவிதைகளை கொண்ட சைதன்ய வழிபாட்டு முறை வங்காள இலக்கியத்தை மேம்படுத்தியது.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

153. கீழே உள்ள ஆட்சியாளர்களுள் யார் அக்பரின் சமகாலத்தவர் இல்லை?

A) இங்கிலாந்தின் எலிசபெத்

B) ஷேக்ஸ்பியர்

C) பிரான்ஸின் நான்காம் ஹென்றி

**D) இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணி**

**(குறிப்பு: ஐரோப்பாவில் நடைபெற்ற ஸ்பானிய ஆட்சிக்கு எதிராக நெதர்லாந்தின் கிளர்ச்சி அக்பரின் காலத்தில் தொடங்கி ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் தொடர்ந்து 1648 இல் முடிவடைந்தது. சாபாவி அரச வம்சத்தின் மாபெரும் வலிமைமிக்க அரசனான மகா அப்பாஸும் அக்பர் காலத்தில் பாரசீகத்தை ஆண்டார்.)**

154. ஜஹாங்கீர் மற்றும் ___________ அமைத்த ஷாலிமர் தோட்டங்கள், இந்திய தோட்டக்கலையில் குறிப்பிடத்தக்கவையாகும்.

A) அக்பர்

**B) ஷாஜகான்**

C) ஹுமாயூன்

D) ஔரங்கசீப்

# 11th History Lesson 10 Questions in Tamil

## 10] மராத்தியர்கள்

1) முகலாயரின் வீழ்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தவர்கள் யார்?

**a) மராத்தியர்**

b) ஆங்கிலேயர்

c) போர்த்துக்கீசியர்

d) ராஜபுத்திரர்கள்

**விளக்கம்: முகலாயரின் வீழ்ச்சியில் மராத்தியர் முக்கியப் பங்கு வகித்தனர். 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவின் மையப்பகுதியில் மராத்திய மாமன்னர் சிவாஜியின் தலைமையில் முகலாய ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதில் வெற்றி பெற்றனர்.**

2) தஞ்சாவூரில் நாயக்க மன்னரின் ஆட்சி முடிவடைந்த உடன் மராத்திய ஆட்சியை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டவர்?

**a) வெங்கோஜி**

b) சாம்பாஜி

c) சாகு

d) ராஜாராம்

**விளக்கம்: தஞ்சாவூரில் நாயக்க மன்னரின் ஆட்சி முடிவடைந்த உடன் மராத்தியத் தளபதி வெங்கோஜி (சிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரர்) தமிழகத்தில் மராத்திய ஆட்சியை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டார்.**

3) தஞ்சாவூரில் மராத்தியரின் ஆட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

a) 1664

b) 1684

**c) 1674**

d) 1774

**விளக்கம்: தஞ்சாவூரில் 1674ஆம் ஆண்டு தொடங்கிய மராத்தியரின் ஆட்சி 1832ஆம் ஆண்டு இரண்டாவது சரபோஜி மன்னர் மரணம் வரை நீடித்தது.**

4) மராத்தியர் வாழ்ந்த குறுகலான நிலப்பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது?

a) மலபார்

b) கொரமண்டல்

**c) கொங்கணம்**

d) மத்தியப்பகுதி

**விளக்கம்: மராத்தியர் வாழ்ந்த குறுகலான நிலப்பகுதி கொங்கணம் என்று அழைக்கப்பட்டது. செங்குத்தான மலைகளும், எளிதில் அணுகமுடியாத பள்ளத்தாக்குகளும், பாதுகாப்பு அரண்களாகத் திகழ்ந்த மலைகோட்டைகளும் இராணுவப் பாதுகாப்புக்கு உகந்தவையாக இருந்தன.**

5) சிவாஜி காலத்தில் எழுச்சிப் பெற்ற மராத்தியர் முன்னதாக யாருடைய ஆட்சியின் கீழ் செயல்பட்டனர்?

**a) பாமினி சுல்தான்**

b) முகலாயர்

c) ராஜபுத்திரர்கள்

d) சாளுக்கியர்கள்

**விளக்கம்: போர்ச் செயல்பாடுகளில் நீண்ட மரபைக் கொண்ட மராத்தியர் விசுவாசம், வீரம், ஒழுக்கம், தந்திரம், எதிரிகளை தாக்கும் ஆற்றல் ஆகியவற்றில் சிறந்து விளங்கினார்கள். முன்னதாக பாமினி சுல்தான்களின் கீழ் செயல்பட்ட மராத்தியர், சிவாஜி காலத்தில் எழுச்சிப் பெற்றனர். சிவாஜி மறைவுக்குப் பிறகு அகமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா, பீடார், பெரார் ஆகிய சுல்தான்களின் கீழ் செயல்பட்டனர்.**

6) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) வலிமை மிகுந்த காலாட்படையும் ஆபத்தான ஆயுதங்களையும் கொண்டிருந்த முகலாய இராணுவத்துடன் நேரடியாக மோதுவதை மராத்தியர் தவிர்த்தனர்.

ii ) கொரில்லா தாக்குதல் முறை அவர்களின் வலிமையாகத் திகழ்ந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: வலிமை மிகுந்த காலாட்படையும் ஆபத்தான ஆயுதங்களையும் கொண்டிருந்த முகலாய இராணுவத்துடன் நேரடியாக மோதுவதை மராத்தியர் தவிர்த்தனர். கொரில்லா தாக்குதல் முறை அவர்களின் வலிமையாகத் திகழ்ந்தது. இரவு நேரங்களில் திடீரென மின்னல் வேகத்தில் தாக்குதல்களைத் திட்டமிடுவதிலும் நடத்துவதிலும் திறமை கொண்டிருந்தனர். மேலும் மேலதிகாரியின் உத்தரவுக்குக் காத்திருக்காமல் போர்ச்சூழலைக் கருத்தில் கொண்டு வழிமுறைகளை மாற்றிச் செயல்படுத்தும் திறனையும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.**

7) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பக்தி இயக்கம் பரவியதன் மூலமாக மராத்தியரிடம் வே ற் று மை உண ர் வு மேலோங்கியது

ii ) துக்காராம், ராம்தாஸ், ஏக்நாதர் , ஆகியோர் பக்தி இயக்கத்தின் முன்னோடிகளாக த் தி கழ்ந்தனர்.

a) (i) சரி

**b) (ii) சரி**

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பக்தி இயக்கம் பரவியதன் மூலமாக மராத்தியரிடம் ஒ ற் று மை உண ர் வு மேலோங்கியது. துக்காராம், ராம்தாஸ், ஏக்நாதர் , ஆகியோர் பக்தி இயக்கத்தின் முன்னோடிகளாக த் தி கழ்ந்தனர். மராத்தி மொழியில் பாடப்பட்ட பக்திப் பாடல்கள் சமூகத்தில் வாழ்ந்த மக்களிடையே பிணைப்பை ஏற்படுத்தின.**

8) "(மராத்திய நாட்டில்) மத எழுச்சி என்பது பிராமணச் சமயம் சார்ந்ததாக இல்லை" என்பது யார் கூற்று?

**a) ரானடே**

b) தாதாபாய் நௌரோஜி

c) வீரராகவாச்சாரி

d) மஜும்தார்

**விளக்கம்: "(மராத்திய நாட்டில்) மத எழுச்சி என்பது பிராமணச் சமயம் சார்ந்ததாக இல்லை. அமைப்புகள், சடங்குகள், வகுப்பு வேறுபாடுகள், ஆகியவற்றுக்கு எதிரான தனது போராட்டத்தைப் பொறுத்த அளவில் வழக்கத்தில் உள்ள கொள்கைக்கு மாறானதாக அது அமைந்தது. துறவிகள் பெரும்பாலும் பிராமண வகுப்பைச் சாராமல் சமூகத்தின் அடிநிலையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்"- நீதிபதி ரானடே**

9) கீழ்க்கண்டவற்றுள் மராத்திய அரசுக்கு தலைநகராக விளங்கியது எது?

**a) ராய்கர்**

b) அகமது நகர்

c) சதாரா

d) பூனா

**விளக்கம்:பீஜப்பூர், கோல்கொண்டா அரசுகள் கலைந்த சூழலில் மராத்தியர் ஒன்றிணைந்து தங்களுடைய வாழ்க்கைக்காகப் போராட வேண்டிய உந்துதலைப் பெற்றனர். பீஜப்பூர், கோல்கொண்டா, அகமதுநகர் ஆகிய சுல்தான்களுக்கு எதிராக நடந்த தக்காணப் போர்களின் காரணமாக முகலாயர்களின் கருவூலம் காலியானது. தக்காணப் பகுதியில் சிதறிக் கிடந்த மராத்தியரைத் தனது தலைமையின் கீழ் ஒன்றுதிரட்டி சிவாஜி ஒரு வலுவான அரசை நிறுவினார். அந்த அரசுக்கு ராய்கர் தலைநகராக விளங்கியது.**

10) கீழ்க்கண்டவற்றுள் சிவாஜி பிறந்த இடம் எது?

a) ராய்கர்

b) புரந்தர்

**c) ஷிவ்னர்**

d) கோல்கர்

**விளக்கம்: ஜுன்னார் என்ற இடத்திற்கு அருகே ஷிவ்னர் என்ற பகுதியில் ஷாஜி போன்ஸ்லே மற்றும் அவரது முதல் மனைவி ஜீஜாபாய்க்கு மகனாக சிவாஜி பிறந்தார்.**

11) தாய் வழியில் யாதவ மன்னர்களின் வழித்தோன்றலாகவும் தந்தை வழியில் சிசோடியாக்களின் வழித்தோன்றலாகவும் விளங்கியவர் யார்?

a) தாதாஜி கொண்டதேவ்

b) சிவாஜி

**c) ஷாஜி போன்ஸ்லே**

d) வெங்கோஜி

**விளக்கம்: தாய் வழியில் தேவகிரியை ஆண்ட யாதவ மன்னர்களின் வழித்தோன்றலாகவும் தந்தை வழியில் மேவாரின் சிசோடியாக்களின் வழித்தோன்றலாகவும் ஷாஜி போன்ஸ்லே விளங்கினார்.**

12) மாலிக் அம்பர் யாருடைய ஆட்சி யில் அமைச்சராக விளங்கினார்?

a) முகமது அலி

**b) அகமது ஷா**

c) ஜெய்சிங்

d) ஆலம் ஷா

**விளக்கம்: அகமது நகர், அகமது ஷாவின் அபிசீனிய அமைச்சராகவும், முன்னாள் அடிமையாகவும் இருந்த மாலிக் அம்பர் (1548- 1626) என்பவரின் கீழ் ஷாஜி போன்ஸ்லே சேவை புரிந்தார்.**

13) அகமதுநகர் முகலாயர்களால் இணைக்கப்பட்ட பிறகு ஷாஜி போன்ஸ்லே யாரிடம் தன் பணியைத் தொடர்ந்தார்?

a) முராத்

b) செயிஷ்டகான்

**c) பீஜப்பூர் சுல்தான்**

d) மாலிக் அம்பர்

**விளக்கம்:மாலிக் அம்பர் மறைவுக்குப் பிறகு அரசியலில் ஈடுபட்ட ஷாஜி போன்ஸ்லே அகமதுநகர் முகலாயர்களால் இணைக்கப்பட்ட பிறகு பீஜப்பூர் சுல்தானிடம் தன் பணியைத் தொடர்ந்தார்.**

14) சிவாஜியும் அவரது தாயும் யாருடைய பராமரிப்பில் விடப்பட்டனர்?

**a) தாதாஜி கொண்டதேவ்**

b) நானாசாகிப்

c) ஜெய்சிங்

d) மாலிக் அம்பர்

**விளக்கம்:பூனாவில் இருந்த ஷாஜி போன்ஸ்லேவின் ஜாகீர்தாரான தாதாஜி கொண்டதேவ் என்பவரின் பராமரிப்பில் சிவாஜியும் அவரது தாயும் விடப்பட்டனர். (இராணுவ மற்றும் நிர்வாக சேவைகளுக்கான அங்கீகாரமாக வழங்கப்பட்ட நிலம் ஜாகீர் ஆகும்.)**

15) சிவாஜி தனது குருவாக ஏற்று மரியாதை செலுத்திய துறவி யார்?

**a) ராம்தாஸ்**

b) துக்காராம்

c) ஏக்நாத்

d) சைதன்யர்

**விளக்கம்: பூனாவைச் சுற்றியிருந்த மலைப்பாங்கான பகுதிகளில் அனுபவமும் அறிவும் வலிமையும் கொண்ட மாவலியைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் தலைவர்களின் நன்மதிப்பை சிவாஜி பெற்றார். மதத் துறவிகளாக விளங்கிய ராம்தாஸ், துக்காராம் ஆகியோரும் சிவாஜியிடம் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள், துறவி ராம்தாஸ் அவர்களை சிவாஜி தனது குருவாக ஏற்று மரியாதை செலுத்தினார்.**

16) சிவாஜி தமது எத்தனையாவது வயது முதல் இராணுவத்தில் ஈடுபாடு காட்டத் தொடங்கினார்?

**a) 19**

b) 18

c) 20

d) 16

**விளக்கம்: சிவாஜி தமது 19ஆவது வயது முதல் இராணுவத்தில் ஈடுபாடு காட்டத் தொடங்கினார். 1646இல் தோர்னா கோட்டையை பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றினார். தோர்னாவில் இருந்து ஐந்து மைல் தொலைவில் இருந்த ராய்கர் கோட்டையையும் கைப்பற்றி மீண்டும் முழுமையாக அதனைக்கட்டினார்.**

17) தாதாஜி கொண்டதேவ் மறைந்த பிறகு தமது தந்தையின் (ஜாகீர்) நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றவர்?

a) ஜீஜாபாய்

**b) சிவாஜி**

c) ஷாஜி போன்ஸ்லே

d) சாந்தாஜி

**விளக்கம்:1647இல் தாதாஜி கொண்டதேவ் மறைந்த பிறகு தமது தந்தையின் (ஜாகீர்) நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பை சிவாஜி ஏற்றார். அதனைத் தொடர்ந்து பாராமதி, இந்தபுரம், புரந்தர்,**

**கொன்டானா ஆகிய கோட்டைகளும் அடுத்தடுத்து அவரது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. அந்தப் பகுதியிலிருந்த கல்யாண் என்ற முக்கிய நகரையும் மராத்தியர் முன்பே கைப்பற்றி இருந்தார்கள்.**

18) சிவாஜியின் தந்தையை சிறுமைப்படுத்திச் சிறையில் அடைத்தவர்?

a) ஔரங்கசீப்

**b) பீஜப்பூர் சுல்தான்**

c) ஜெய்சிங்

d) செயிஷ்டகான்

**விளக்கம்: பீஜப்பூர் சுல்தான், சிவாஜியின் தந்தையை சிறுமைப்படுத்திச் சிறையில் அடைத்தார். தக்காணத்தின் முகலாய அரசப்பிரதிநிதியாக இருந்த இளவரசர் மூராத் உடன் பேச்சுவார்த்தை நடத்திய அவர் முகலாய சேவையில் சேர விருப்பம் தெரிவித்தார்.**

19) சிவாஜி இராணுவச் செயல்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருந்த காலகட்டம் எது?

a) 1639 முதல் 1645 வரை

b) 1640 முதல் 1655 வரை

c) 1647 முதல் 1653 வரை

**d) 1649 முதல் 1655 வரை**

**விளக்கம்: 1649ஆம் ஆண்டு சில நிபந்தனைகளின் அடிப்படையில் பீஜப்பூர் சுல்தான் ஷாஜியை விடுதலை செய்தார். 1649 முதல் 1655 வரை இராணுவச் செயல்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து சிவாஜி விலகியிருந்தார். இந்தக் காலகட்டத்தில் அவர் தனது அதிகாரத்தையும் நிர்வாகத்தையும் ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்தினார்.**

20) ஜாவ்லி என்ற இடத்திலிருந்து மேற்கே இரண்டு மைல் தொலைவில் சிவாஜியால் கட்டப்பட்ட புதிய கோட்டை எது?

**a) பிரதாப்கர்**

b) புரந்தர்

c) தோர்னா

d) ராய்கர்

**விளக்கம்: 1656ஆண்டு முதல் சிவாஜி, தனது இராணுவச் செயல்பாடுகளை மீண்டும் தொடங்கினார். சதாரா மாவட்டத்தில் ஜாவ்லி என்ற இடத்தைக் கைப்பற்றினார். இந்தக் குறிப்பிடத்தக்க வெற்றியால் அவர் மராத்தியரின் மத்தியில் பிரபலம் அடைந்தார். இளைஞர்கள் அவரது இராணுவத்தில் இணைந்தனர். ஜாவ்லி என்ற இடத்திலிருந்து மேற்கே இரண்டு மைல் தொலைவில் பிரதாப்கர் என்ற புதிய கோட்டை கட்டப்பட்டது.**

21) பீஜப்பூரின் முகமது அடில்ஷா மரணமடைந்த பிறகு ஆட்சிப் பொறுப்பேற்றவர்?

a) சிவாஜி

b) அகமது அடில்ஷா

c) ஜெய்சிங்

**d) இரண்டாம் அடில்ஷா**

**விளக்கம்:1656 நவம்பர் மாதம் பீஜப்பூரின் முகமது அடில்ஷா மரணமடைந்தார். பதினெட்டு வயதே நிரம்பிய இளைஞர் இரண்டாம் அடில்ஷா அடுத்துப் பொறுப்பேற்றார்.**

22) கூற்று (கூ): பீஜப்பூர் சுல்தானும் சிவாஜியும் ஔரங்கசீப்புடன் சமரசம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

காரணம் (கா): 1657ஆம் ஆண்டு பீடார், கல்யாணி, பரிந்தர் ஆகியவற்றை ஔரங்கசீப் கைப்பற்றினார்.

a) கூற்று தவறு; காரணம் சரி

**b) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது**

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று மற்றும் காரணம் சரியானவை

**விளக்கம்:1657ஆம் ஆண்டு பீடார், கல்யாணி, பரிந்தர் ஆகியவற்றை ஔரங்கசீப் கைப்பற்றினார். எனவே பீஜப்பூர் சுல்தானும் சிவாஜியும் ஔரங்கசீப்புடன் சமரசம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் ஷாஜகான் நோய்வாய்ப்பட்டா ர். தில்லியில் அவரைத் தொடர்ந்து யார் ஆட்சிக்கு வருவது என்பதில் போட்டி நிலவியது. ஔரங்கசீப் ஆட்சியைக்கைப்பற்றி தில்லி வந்தார். இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்ட சிவாஜி வடக்கு கொங்கணம் மீது போர் தொடுத்து கல்யாண், பிவாண்டி, மாகுலி கோட்டைகளைக் கைப்பற்றினார்.**

23) ”மலையில் ஒளிந்துகொண்டிருக்கும் எலியை” சங்கிலியில் கட்டி இழுத்துக்கொண்டு வருவதாக சூளுரைத்தவர்?

a) ஜெய்சிங்

b) இரண்டாம் அடில்ஷா

c) செயிஷ்டகான்

**d) அஃப்சல்கான்**

**விளக்கம்: முகலாயரிடமிருந்து எந்த ஆபத்தும் இல்லை என்பதால் பீஜப்பூர் சுல்தான் சிவாஜி மீது தாக்குதல் நடத்த முடிவு செய்தார். அஃப்சல்கான் பெரும்படையுடன் அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டார். ”மலையில் ஒளிந்துகொண்டிருக்கும் எலியை” சங்கிலியில் கட்டி இழுத்துக்கொண்டு வருவதாக அவர் சூளுரைத்தார். ஆனால் மலைப்பாங்கா ன பகுதியில் சண்டையிடுவது அவருக்கு சிரமமாக இருந்தது. சூழ்ச்சி மூலமாக சிவாஜியை வீழ்த்த நினைத்தார். ஆனால் அதிலும் தோல்வியே கிடைத்தது.**

24) பீஜப்பூர் சுல்தான் உடனான போரில் மராத்தியர்கள் கைப்பற்றிய கோட்டை எது?

a) புரந்தர்

b) ராய்கர்

**c) பன்ஹலா**

d) செஞ்சிக்கோட்டை

**விளக்கம்: தெற்கு கொங்கணம் மற்றும் கோல்ஹாபூர் மாவட்டங்களைத் தாக்கிய மராத்தியப் படைகள் பன்ஹலா கோட்டையை கைப்பற்றின. பீஜப்பூர் சுல்தான் தாமே இந்தப் படைகளுக்குத் தலைமை தாங்கினார். இந்தப் போர் சுமார் ஓராண்டுக் காலம் நீடித்தது. ஆனாலும் எந்தப் பகுதியையும் வெல்ல முடியவில்லை. இறுதியாக, பேச்சுவார்த்தைக்குப் பிறகு சிவாஜி, தமது ஆளுகையின் கீழுள்ள பகுதிகளின் ஆட்சியாளராக அங்கீகரிக்கப்பட்டார்.**

25) சிவாஜியை அடக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு 1660ஆம் ஆண்டு தக்காணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டவர்?

a) ஜெய்சிங்

b) மூர்வாசம்

**c) செயிஷ்டகான்**

d) அஃப்சல்கான்

**விளக்கம்: 1658 ஜூலை மாதம், ஔரங்கசீப் மாமன்னராக அரியணை ஏறினார். சிவாஜியை அடக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு 1660ஆம் ஆண்டு செயிஷ்டகான் தக்காணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.**

26) கூற்று (கூ): ஓர் இரவு நேரத்தில், பூனாவுக்கு 400 படை வீரர்களுடன் திருமணக் குழுவினர் போல் சென்ற அவர் செயிஷ்டகானின் இல்லம் மீது தாக்குதல் நடத்தினார்.

காரணம் (கா): இதனால் 1663 டிசம்பர் மாதம் ஔரங்கசீப் செயிஷ்டகானை தக்காணத்திலிருந்து திரும்ப அழைத்துக்கொண்டார்.

a) கூற்று தவறு; காரணம் சரி

**b) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது**

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று மற்றும் காரணம் சரியானவை

**விளக்கம்: சிவாஜி ஒரு தைரியமான திட்டத்தை வகுத்தார். ஓர் இரவு நேரத்தில், பூனாவுக்கு 400 படை வீரர்களுடன் திருமணக் குழுவினர் போல் சென்ற அவர் செயிஷ்டகானின் இல்லம் மீது தாக்குதல் நடத்தினார். இதனால் 1663 டிசம்பர் மாதம் ஔரங்கசீப் செயிஷ்டகானை தக்காணத்திலிருந்து திரும்ப அழைத்துக்கொண்டார்.**

27) அரபிக் கடல் பகுதியில் முகாலாயரின் முக்கியத் துறைமுகமாக விளங்கியது எது?

a) கொச்சின்

b) மங்களூர்

**c) சூரத்**

d) பூனா

**விளக்கம்: அரபிக் கடல் பகுதியில் முகாலாயரின் முக்கியத் துறைமுகமாக விளங்கிய சூரத் நகரைக் குறிவைத்து 1664ஆம் ஆண்டு சிவாஜி தாக்குதல் நடத்தினார். அவரது படை வீரர்கள் நகரைச் சூறையாடினார்கள்.**

28) சிவாஜியை வீழ்த்துவதற்காகவும் பீஜப்பூரை இணைப்பதற்காகவும் அனுப்பப்பட்ட ரஜபுத்திரத் தளபதி?

**a) ஜெய்சிங்**

b) மூவாசம்

c) செயிஷ்டகான்

d) அஃப்சல்கான்

**விளக்கம்: சிவாஜியை வீழ்த்துவதற்காகவும் பீஜப்பூரை இணைப்பதற்காகவும் ரஜபுத்திரத் தளபதி ராஜா ஜெய்சிங் தலைமையில் ஒரு இராணுவத்தை ஔரங்கசீப் அனுப்பினார். அப்பொழுது இளவரசர் மூவாசம் (பின்னர் முதலாம் பகதூர் ஷா என அழைக்கப்பட்டவர்,) தக்காணத்தின் ஆளுநராக பதவி வகித்தார்.**

29) புரந்தர் உடன்படிக்கை எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது?

**a) 1665 ஜூன் 11**

b) 1663 ஜூன் 11

c) 1668 ஜூன் 10

d) 1662 ஜூன் 21

**விளக்கம்: அனைத்துத் தரப்புக்களிலிருந்தும் சிவாஜியைச் சுற்றி வளைக்க ஜெய்சிங் விரிவான திட்டம் வகுத்திருந்தார். ராய்கர் கோட்டையும் அச்சுறுத்தலுக்கு உள்ளானது. 1665 ஜூன் மாதம் புரந்தர் கோட்டையைப் படைகள் சுற்றி வளைத்தன. சிவாஜியின் தீரமான வீரதீர தற்காப்பு பலன் தரவில்லை. இதை உணர்ந்த சிவாஜி பேச்சுவார்த்தை மேற்கொள்ள முடிவு செய்தார். 1665 ஜூன் 11ஆம் தேதி ஏற்பட்ட புரந்தர் உடன்படிக்கையின்படி சிவாஜிக்கு அவர் கைப்பற்றிய கோட்டைகளை வைத்துக்கொள்ள அனுமதி கிடைத்தது. மன்சப்தாராகச் செயல்பட்டு பீஜப்பூரைக் கைப்பற்ற முகலாயருக்கு உதவ ஒப்புக்கொண்டார்.**

30) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) முகலாய அரசவையை பார்வையிடுமாறு சிவாஜியிடம் ஜெய்சிங் வற்புறுத்தினார்.

ii ) 1665 மே மாதம் சிவாஜியும் அவரது மகன் சாம்பாஜியும் ஆக்ராவை அடைந்தனர்.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: முகலாய அரசவையை பார்வையிடுமாறு சிவாஜியிடம் ஜெய்சிங் வற்புறுத்தினார். சிவாஜியிடம் அதிக நம்பிக்கை வார்த்தைகளைச் கூறிய ஜெய்சிங், தலைநகரில் சிவாஜியின் பாதுகாப்புக்குத் தாமே உறுதியளித்தார். 1666 மே மாதம் சிவாஜியும் அவரது மகன் சாம்பாஜியும் ஆக்ராவை அடைந்தனர். ஆனால் அவர்களுக்கு அவமரியாதை காத்திருந்தது. சிறுமைப்படுத்தப்பட்ட அவர் கொதித்தெழுந்து மன்னரை கண்டித்துப் பேசினார். சிறையில் அடைக்கப்பட்ட சிவாஜி பழக்கூடை ஒன்றில் ஒளிந்துகொண்டு அங்கிருந்து தப்பியதாக கூறப்படுகிறது.**

31) ஆண்டு முதல் சிவாஜி தீவிர போர்க் கொள்கையைக் கடைபிடிக்கலானார்?

a) 1664

b) 1665

**c) 1666**

d) 1772

**விளக்கம்: 1666 ஆண்டு முதல் சிவாஜி தீவிர போர்க் கொள்கையைக் கடைபிடிக்கலானார். அதனால் மராத்திய வீரர்கள் புதிய வெற்றிகளைப் பெற்றனர். வடமேற்கே ஆப்கன் எழுச்சி காரணமாக அதில் கவனம் செலுத்திய முகலாயருக்கு சிவாஜியை சமாளிக்க முடியவில்லை. தனது உள் நிர்வாகத்தை மறு சீரமைப்பு செய்வதில் சிவாஜி ஈடுபாடு காட்டினார்.**

32) மன்சப்தார் ஐந்தாயிரம் என்ற படிநிலையில் நியமிக்கப்பட்டார்

**a) சாம்பாஜி**

b) சிவாஜி

c) சாகு

d) சாந்தாஜி

**விளக்கம்: இளவரசர் மூவாசம், தக்காணத்தின் அரசப் பிரதிநிதி (வைஸ்ராய்) மிகவும் வலுகுறைந்தும் சோம்பலுடனும் இருந்தார். ராஜா ஜஸ்வந்த் சிங் சிவாஜியுடன் நட்பு பாராட்டினார். மன்சப்தார் ஐந்தாயிரம் என்ற படிநிலையில் சாம்பாஜி நியமிக்கப்பட்டார்.**

33) கூற்று (கூ): பெராரில் சிவாஜிக்கு முன்னர் கொடுக்கப்பட்ட ஜாகீர் நிலத்தின் ஒரு பகுதியை ஔரங்கசீப் எடுத்துக்கொண்டா ர்.

காரணம் (கா): இதனால் கோபமடைந்த சிவாஜி முகலாயர் சேவையிலிருந்த தனது படைகளைத் திரும்ப அழைத்துக்கொண்டார்.

a) கூற்று தவறு; காரணம் சரி

**b) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது**

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று மற்றும் காரணம் சரியானவை

**விளக்கம்:பெராரில் சிவாஜிக்கு முன்னர் கொடுக்கப்பட்ட ஜாகீர் நிலத்தின் ஒரு பகுதியை ஔரங்கசீப் எடுத்துக்கொண்டார் . இதனால் கோபமடைந்த சிவாஜி முகலாயர் சேவையிலிருந்த தனது படைகளைத் திரும்ப அழைத்துக்கொண்டார். பு ரந்தர் உடன் படிக்கையால் சிவாஜி தான் இழந்த கோட்டைகளைத் திரும்பவும் மீட்டுக்கொண்டார்.**

34) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) 1670ஆம் ஆண்டு மேற்குக் கடற்கரையோரத்தின் முக்கியத் துறைமுகமான சூரத்தை அவர் மீண்டும் கைப்பற்றினார்.

ii ) 1672ஆம் ஆண்டு சூரத்திலிருந்து சௌத் எனப்படும் பத்தில் ஒரு பங்கு வருமானத்தை வருடாந்திரக் கப்பமாக மராத்தியர் பெற்றனர்.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: 1670ஆம் ஆண்டு மேற்குக் கடற்கரையோரத்தின் முக்கியத் துறைமுகமான சூரத்தை அவர் மீண்டும் கைப்பற்றினார். 1672ஆம் ஆண்டு சூரத்திலிருந்து சௌத் எனப்படும் நான்கில் ஒரு பங்கு வருமானத்தை வருடாந்திரக் கப்பமாக மராத்தியர் பெற்றனர்.**

35) சிவாஜி சத்ரபதி’ (Supreme King) என்ற பட்டத்தை எந்த ஆண்டு சூடினார்?

a) 1665

b) 1672

c) 1676

**d) 1674**

**விளக்கம்: 1674 ஜூன் 6ஆம் தேதி சிவாஜி ராய்கர் கோட்டையில் வேத முறைப்படி அரியணை ஏறினார். ‘சத்ரபதி’ (Supreme King) என்ற பட்டத்தைச் சூடினார்.**

36) சிவாஜி பின்வரும் யாருடன் இரகசிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்?

a) ஔரங்கசீப்

b) பீஜப்பூர் சுல்தான்

**c) கோல்கொண்டா சுல்தான்**

d) சொரூப்சிங்

**விளக்கம்: 1676ஆம் ஆண்டு தெற்குப் பகுதியில் சிவாஜி தனது வெற்றியைத் துவக்கினார். கோல்கொண்டா சுல்தானுடன் இரகசிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இதற்குக் கைமாறாக சிவாஜி சில பகுதிகளைத் தருவதாக உறுதியளித்தார்.**

37) சிவாஜி தஞ்சாவூரை நிர்வகிக்குமாறு யாரை பணித்தார்?

a) சாந்தாஜி

**b) வெங்கோஜி**

c) முதலாம் சரபோஜி

d) துல்ஜாஜி

**விளக்கம்: செஞ்சி, வேலூர் ஆகியவற்றைக் கைப்பற்றிய அவர், அடுத்திருந்த தனது தந்தை ஷாஜிக்குச்சொந்தமான பகுதிகளையும் சேர்த்துக்கொண்டார். சகோதர உறவிலான வெங்கோஜியை அல்லது இகோஜி, தஞ்சாவூரை நிர்வகிக்குமாறு அவர் பணித்தார். மதுரை நாயக்கர்களுக்குப் பெரும் தொகையைக் கப்பமாக தரவும் உறுதியளித்தார்.**

38) சிவாஜிக்குப் பிறகு பொறுப்பேற்றவர்களுக்கு இரண்டாம் கட்டப் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்தது எது?

a) புரந்தர்

**b) செஞ்சி**

c) தஞ்சாவூர்

d) மதுரை

**விளக்கம்:கர்நாடக முற்றுகை முயற்சிகள் சிவாஜிக்கு பெருமையையும் புகழையும் கொடுத்தன. புதிதாகக் கைப்பற்றிய செஞ்சி அவருக்குப் பிறகு பொறுப்பேற்றவர்களுக்கு இரண்டாம் கட்டப் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்தது.**

39) சாம்பாஜி ஔரங்கசீப்பால் சிறைபிடிக்கப்பட்டு எந்த கோட்டைக்கு அனுப்பப்பட்டார்?

**a) பன்ஹலா**

b) பிரதாப்கர்

c) ஜாவ்லி

d) கல்யான்

**விளக்கம்: சிவாஜியின் கடைசி நாட்கள் மகிழ்ச்சியானவையாக இல்லை. அவரது மூத்த மகன் சாம்பாஜி அவரைக் கைவிட்டுவிட்டு முகலாய முகாமில் இணைந்தார். சாம்பாஜி திரும்பியபோது ஔரங்கசீப்பால் சிறைபிடிக்கப்பட்டு பன்ஹலா கோட்டைக்கு அனுப்பப்பட்டார்.**

40) சிவாஜி எந்த ஆண்டு காலமானார்?

a) 1678

**b) 1680**

c) 1684

d) 1679

**விளக்கம்: அடுத்தடுத்த போர்கள் சிவாஜியின் உடல்நலத்தைப் பாதித்தன. அவர் தனது 53ஆவது வயதில் 1680ஆம் ஆண்டு காலமானார்.**

41) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சிவாஜியின் மறைவின்போது மேற்குத் தொடர்ச்சி மலைகள், கல்யாண் மற்றும் கோவா இடையேயான கொங்கணப் பகுதி ஆகியன சிவாஜி அரசின் கீழ் இருந்தன.

ii ) தெற்கில் பெல்காம் தொடங்கி துங்கபத்திரை நதிக்கரை வரை மேற்கு கர்நாடகாவை உள்ளடக்கிய பகுதிகள் அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சிவாஜியின் மறைவின்போது மேற்குத் தொடர்ச்சி மலைகள், கல்யாண் மற்றும் கோவா இடையேயான கொங்கணப் பகுதி ஆகியன சிவாஜி அரசின் கீழ் இருந்தன. தெற்கில் பெல்காம் தொடங்கி துங்கபத்திரை நதிக்கரை வரை மேற்கு கர்நாடகாவை உள்ளடக்கிய பகுதிகள் அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. அவரது மரணத்தின்போது வேலூர், செஞ்சி மற்றும் இதர சில மாவட்டங்கள் பற்றிய விஷயத்தில் தீர்வு காணப்படவில்லை.**

42) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சாம்பாஜி முகலாயப் பகுதிக்குள் நுழைந்து பெராரில் பகதூர்பூரைக் கைப்பற்றி அங்கிருந்த சொத்துக்களைக் கைப்பற்றினார்.

ii ) ஆத்திரமடைந்த ஔரங்கசீப் மேவாரைச் சேர்ந்த ரஜபுத்திரர்களுடன் சமரசம் மேற்கொண்டு தக்காணப் பகுதிக்குள் படைகளை வழிநடத்திச் சென்றார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சிவாஜி மறைந்து ஓராண்டுக்குப் பிறகு அவரது மூத்த மகன் சாம்பாஜி மராத்திய இராணுவத்திற்கு தலைமை ஏற்று முகலாயப் பகுதிக்குள் நுழைந்து பெராரில் பகதூர்பூரைக் கைப்பற்றி அங்கிருந்த சொத்துக்களைக் கைப்பற்றினார். இதனால் ஆத்திரமடைந்த ஔரங்கசீப்**

**மேவாரைச் சேர்ந்த ரஜபுத்திரர்களுடன் சமரசம் மேற்கொண்டு தக்காணப் பகுதிக்குள் படைகளை வழிநடத்திச் சென்றார்.**

43) பின்வரும் எந்த இளவரசருக்கு பாதுகாப்பு கொடுத்ததற்காக ஔரங்கசீப் சாம்பாஜிக்கு தண்டனைக் கொடுத்தார்?

**a) இரண்டாம் அக்பர்**

b) அகமது ஷா

c) முராத்

d) மூவாசம்

**விளக்கம்: 1686இல் பீஜப்பூரும் 1687இல் கோல்கொண்டாவும் வெல்லப்பட்டன. தன்னுடன் மல்லுக்கட்டும் தனது மகன் இளவரசர் இரண்டாம் அக்பருக்குப் பாதுகாப்பு கொடுத்ததற்காக சாம்பாஜிக்கு தண்டனைக் கொடுப்பதே ஔரங்கசீப்பின் அடுத்த இலக்காக இருந்தது. 1689இல் முகலாயப் படை சாம்பாஜியைச் சிறைப்பிடித்தது. அவரது உடல் சிதைக்கப்பட்டு பின்னர் ஆற்றில் வீசப்பட்டது.**

44) செஞ்சிக்கோட்டையிலிருந்து முகலாயருக்கெதிரான சண்டையைத் தொடங்கியவர்?

**a) இராஜாராம்**

b) சாகு

c) இரண்டாம் சாம்பாஜி

d) தாராபாய்

**விளக்கம்:சாம்பாஜியின் மறைவு மராத்தியரை முடக்கி விடவில்லை. அவரது இளவல் ராஜாராம் செஞ்சிக்கோட்டையிலிருந்து சண்டையைத் தொடங்கினார். இந்த மோதல் பல ஆண்டுகள் நீடித்தது.**

45) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சாம்பாஜி 1700இல் மரணமடைந்த பிறகு அவரது மனைவி தாராபாய் தலைமையில் போராட்டம் தொடர்ந்தது.

ii ) இதன் காரணமாக அருகிலிருந்த மசூலிப்பட்டினம் துறைமுகத்தில் வர்த்தகம் பல ஆண்டுகளுக்கு பாதிக்கப்பட்டது

a) (i) சரி

**b) (ii) சரி**

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ராஜாராம் 1700இல் மரணமடைந்த பிறகு அவரது மனைவி தாராபாய் தலைமையில் போராட்டம் தொடர்ந்தது. கைக்குழந்தை சார்பாக செயல்பட்ட தாராபாய் 50 ஆயிரம் வீரர்கள் அடங்கிய குதிரைப்படை மற்றும் காலாட்படையை ஹைதராபாத் அரசுக்கு எதிராகப் போர்தொடுக்க பணித்தார்.**

**அதன் விளைவாகத் தலைநகர் சூறையாடப்பட்டது. இதன் காரணமாக அருகிலிருந்த மசூலிப்பட்டினம் துறைமுகத்தில் வர்த்தகம் பல ஆண்டுகளுக்கு பாதிக்கப்பட்டது.**

46) ஔரங்கசீப்பின் மரணத்துக்குப் பிறகு மராத்தியரின் அரியணையை அலங்கரித்தவர்?

**a) சாஹு**

b) இரண்டாம் சாம்பாஜி

c) சாம்பாஜி

d) இராஜாராம்

**விளக்கம்: 1707இல் ஔரங்கசீப் மறைந்தபோது மராத்தியர் பல கோட்டை, கொத்தளங்களை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். ஔரங்கசீப்பின் மரணத்துக்குப் பிறகு சாம்பாஜியின் மகன் சாஹு விடுதலையாகி மராத்தியரின் அரியணையை அலங்கரித்தார். தாராபாய் இதை எதிர்த்தார். அதன் பின் உள்நாட்டுக் கலகம் வெடித்தது. அதில் சாஹு வெற்றி பெற்று 1708இல் அரியணையில் அமர்ந்தார்.**

47) பாலாஜி விஸ்வநாத் எங்கிருந்து ஆட்சி செய்யத் தொடங்கினார்?

**a) பூனா**

b) சதாரா

c) ராய்கர்

d) சூரத்

**விளக்கம்: அரியணை ஏறிய பிறகு, பாலாஜி விஸ்வநாத் அவருக்கு ஆதரவாக இருந்தார். அதற்கு நன்றிக்கடனாக பாலாஜி விஸ்வநாத்தைப் பேஷ்வாவாக 1713இல் நியமித்தார். பின்னர் சாஹு சதாராவுக்கு ஓய்வெடுக்கச் சென்றார். பூனாவில் இருந்து பேஷ்வா ஆட்சி செய்யத் தொடங்கினார்.**

48) எந்த நகரைத் தலைநகராகக் கொண்டு தாராபாய் ஒரு மாற்று அரசாங்கத்தை நடத்தினார்?

a) சதாரா

**b) கோல்ஹாபூர்**

c) ஜாவ்லி

d) பூனா

**விளக்கம்: கோல்ஹாபூரைத் தலைநகராகக் கொண்டு தாராபாய் ஒரு மாற்று அரசாங்கத்தை நடத்தினார். ராஜாராமின் இரண்டாவது மனைவி ராஜாபாய், அவரது மகன் இரண்டாம் சாம்பாஜி, தாராபாய் மற்றும் அவரது மகன் ஆகியோரை 1714ஆம் ஆண்டு சிறைப்பிடித்தனர்.**

49) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) இரண்டாம் சாம்பாஜி கோல்ஹாபூரில் அரியணை ஏறினார்.

ii ) சாஹு 1749இல் மறைந்தபிறகு ராம ராஜா அரியணை ஏறினார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: இரண்டாம் சாம்பாஜி கோல்ஹாபூரில் அரியணை ஏறினார். சாஹுவின் அதிகாரத்தை அவர் ஏற்கவேண்டியிருந்தது. சாஹு 1749இல் மறைந்தபிறகு ராம ராஜா அரியணை ஏறினார். அவர் பேஷ்வாக்களுடன் ஒப்பந்தத்தை எட்டியதால் தலைமைப் பொறுப்பை அடைந்தார். தாராபாய் இதனால் ஏமாற்றம் அடைந்தார். 1761இல் தாராபாய், 1777இல் ராமராஜா ஆகியோர் மரணமடைந்தனர்.**

50) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ராமராஜாவின் தத்துப் புதல்வரான இரண்டாவது சாஹு 1808இல் மரணமடையும் வரை பெயருக்கு மன்னராக ஆட்சியில் இருந்தார்.

ii )பிரதாப் சிங் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டி, 1839ஆம் ஆண்டு அவரை பிரிட்டிஷ் அரசு ஆட்சியில் இருந்து நீக்கியது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ராமராஜாவின் தத்துப் புதல்வரான இரண்டாவது சாஹு 1808இல் மரணமடையும் வரை பெயருக்கு மன்னராக ஆட்சியில் இருந்தார். அவரது மகன் பிரதாப் சிங் அடுத்து அரியணை ஏறினார். பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டி, 1839ஆம் ஆண்டு அவரை பிரிட்டிஷ் அரசு ஆட்சியில் இருந்து நீக்கியது. பிரதாப் சிங் ஒரு சிறைக்கைதியாக 1847இல் மரணமடைந்தார்.**

51) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பிரதாப் சிங்கின் இளவல் ஷாஜி அப்பா சாஹிப், இரண்டாம் ஷாஜி 1839ஆம் ஆண்டு அரசராக பிரிட்டீஷ் அரசால் பதவியில் அமர்த்தப்பட்டா ர்.

ii ) தனக்குப் பின் ஆள்வதற்கு ஒருவருமற்ற நிலையில் இரண்டாம் ஷாஜி 1848இல் மரணமடைந்தார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பிரதாப் சிங்கின் இளவல் ஷாஜி அப்பா சாஹிப், இரண்டாம் ஷாஜி 1839ஆம் ஆண்டு அரசராக பிரிட்டீஷ் அரசால் பதவியில் அமர்த்தப்பட்டா ர். தனக்குப் பின் ஆள்வதற்கு ஒருவருமற்ற நிலையில் இரண்டாம் ஷாஜி 1848இல் மரணமடைந்தார்.**

52) சிவாஜியின் ஆலோசனைக்குழுவில் எத்தனை பேர் இடம்பெற்றிருந்தனர்?

**a) எட்டு**

b) பத்து

c) ஒன்பது

d) ஏழு

**விளக்கம்:சிவாஜி பெரிய போர்வீரர் மட்டுமல்ல ஒரு நல்ல நிர்வாகியும்கூட. அன்றாட நிர்வாகத்தில் தனக்கு உதவுவதற்காக ஓர் ஆலோசனை சபையை அவர் வைத்திருந்தார். “அஷ்டபிரதான்” என அழைக்கப்பட்ட இந்தச் சபையில் எட்டு அமைச்சர்கள் இடம்பெற்று இருந்தனர். அந்தச் சபையின் செயல்பாடு ஆலோசனை கூறுவதாகவே அமைந்திருந்தது.**

53) மராத்தியர் காலத்தில் நாட்டின் பொதுநலன்கள் மற்றும் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவது பின்வரும் யாரின் முக்கிய கடமை?

a) வாக்கியநாவிஸ்

**b) பேஷ்வா**

c) அமத்யா

d) சுமந்த்

**விளக்கம்: முக்கிய பிரதான் அல்லது பேஷ்வா அல்லது பிரதம மந்திரி. நாட்டின் பொதுநலன்கள் மற்றும் முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவது இவரது முக்கியக் கடமை.**

54) மராத்தியர் ஆட்சியில் அரசின் அனைத்துப் பொதுக்கணக்குகளையும் ஆராய்ந்து ஒப்புதல் கையொப்பமிடுவது யாருடைய வேலை?

a) வாக்கியநாவிஸ்

b) பேஷ்வா

**c) அமத்யா**

d) சுமந்த்

**விளக்கம்: அமத்யா அல்லது நிதி அமைச்சர். அரசின் அனைத்துப் பொதுக்கணக்குகளையும் ஆராய்ந்து ஒப்புதல் கையொப்பமிடுவது இவரது வேலை**

55) அரசரின் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆவணங்கள் வடிவில் பராமரித்தல் யாருடைய வேலை?

**a) வாக்கியநாவிஸ்**

b) பேஷ்வா

c) அமத்யா

d) சுமந்த்

**விளக்கம்: வாக்கியநாவிஸ் அல்லது மந்திரி, அரசரின் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆவணங்கள் வடிவில் பராமரித்தல்.**

56) மன்னருக்குப் போர் மற்றும் அமைதி குறித்த அனைத்து விஷயங்களிலும் ஆலோசனைகளை வழங்கியவர்?

a) வாக்கியநாவிஸ்

b) பேஷ்வா

c) அமத்யா

**d) சுமந்த்**

**விளக்கம்: சுமந்த் அல்லது டாபிர் அல்லது வெளியுறவுச் செயலர், மன்னருக்குப் போர் மற்றும் அமைதி குறித்த அனைத்து விஷயங்களிலும் ஆலோசனைகளை வழங்கினார். பிறநாடுகளின் தூதர்களையும் பிரதிநிதிகளையும் வரவேற் கு ம் பொறுப்பையும் ஏற்றிருந்தார்.**

57) அரசரின் அன்றாட கடிதப் போக்குவரத்தை கவனித்துக் கொண்டதோடு வரைவுகளைத் திருத்தும் அதிகாரமும் கொண்டிருந்தவர் யார்?

**a) சச்சீவ்**

b) பண்டிட்ராவ்

c) நியாயதீஷ்

d) சுமந்த்

**விளக்கம்:சச்சிவ் அல்லது சுருநாவிஸ் அல்லது உள்துறை செயலர், அரசரின் அன்றாட கடிதப் போக்குவரத்தை கவனித்துக் கொண்டதோடு வரைவுகளைத் திருத்தும் அதிகாரமும் கொண்டிருந்தார். பர்கானாக்களின் கணக்குகளையும் அவர் சரிபார்த்தார்.**

58) சமூகச் சட்டதிட்டங்கள் மற்றும் பொது ஒழுக்க நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கு நீதிபதியாக இருந்தவர் யார்?

a) சச்சீவ்

**b) பண்டிட்ராவ்**

c) நியாயதீஷ்

d) சாரிநௌபத்

**விளக்கம்: பண்டிட் ராவ் அல்லது தனத்தியாக்சா அல்லது சதர் அல்லது முதாசிப் அல்லது மதத்தலைவர் என்பவர் மதம் தொடர்பான சடங்குகளுக்கும் தானதர்மங்களுக்கும் பொறுப்பேற்றிருந்தார். சமூகச்**

**சட்டதிட்டங்கள் மற்றும் பொது ஒழுக்க நடைமுறைகளை நெறிப்படுத்துவதற்கு அவர் நீதிபதியாக இருந்தார்.**

59) மராத்தியர் ஆட்சியில் இராணுவத்தை நிர்வகிப்பது யாருடைய வேலை?

a) சச்சீவ்

b) பண்டிட்ராவ்

**c) நியாயதீஷ்**

d) சுமந்த்

**விளக்கம்: நியாயதீஷ் அல்லது தலைமை நீதிபதி குடிமை மற்றும் இராணுவ நீதிக்குப் பொறுப்பேற்றிருந்தார். சாரிநௌபத் அல்லது தலைமைத் தளபதி இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பு, அமைப்பு ரீதியாக பராமரிப்பது, இராணுவத்தை நிர்வகிப்பது ஆகியவற்றைக் கவனித்துக் கொண்டார்.**

60) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) நியாயதீஷ் மற்றும் பண்டிட்ராவ் தவிர அமைச்சர்கள் அனைவரும் இராணுவத்தை வழிநடத்துவதற்கு தலைமை ஏற்பதோடு, பயணங்களுக்கும் தலைமை ஏற்க வேண்டும்.

ii ) பல அமைச்சர்களின் கீழ் 18 அரசு துறைகள் இருந்தன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: நியாயதீஷ் மற்றும் பண்டிட்ராவ் தவிர அமைச்சர்கள் அனைவரும் இராணுவத்தை வழிநடத்துவதற்கு தலைமை ஏற்பதோடு, பயணங்களுக்கும் தலைமை ஏற்க வேண்டும். அனைத்து அரசுக் கடிதங்கள், ஆவணங்கள், ஒப்பந்தங்கள் ஆகியன அரசர், பேஷ்வா ஆகியோரின் இலச்சினையையும் மற்றும் தனத்தியாக்சா, நியாயதிக்சா, சேனாபதி தவிர்த்த நான்கு அமைச்சர்களின் ஒப்புதலையும் பெறவேண்டும். பல அமைச்சர்களின் கீழ் 18 அரசு துறைகள் இருந்தன.**

61) நிர்வாக வசதிக்காக சிவாஜி தனது அரசை எத்தனை மாகாணங்களாகப் பிரித்தார்?

**a) நான்கு**

b) ஐந்து

c) மூன்று

d) ஆறு

**விளக்கம்: நிர்வாக வசதிக்காக சிவாஜி தனது அரசை நான்கு மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒரு வைஸ்ராய் எனப்படும் அரசப்பிரதிநிதியை அமர்த்தினார். மாகாணங்கள் பிராந்த் (pranths) எனப்படும் பல பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டன.**

62) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்தியர் ஆட்சியில் ஜாகீர் வழங்கும் நடைமுறை ஒழிக்கப்பட்டு அனைத்து அதிகாரிகளுக்கும் ரொக்கமாகப் பணம் வழங்கப்பட்டது.

ii ) ஒரு குறிப்பிட்ட பகுதியின் வருவாய் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பும் எந்த ஒரு அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும் சொத்துகள் மூலமாகக் கிடைத்த வருவாய் மட்டுமே அவருக்கு உரியது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஜாகீர் வழங்கும் நடைமுறை ஒழிக்கப்பட்டு அனைத்து அதிகாரிகளுக்கும் ரொக்கமாகப் பணம் வழங்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பகுதியின் வருவாய் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பும் எந்த ஒரு அதிகாரிக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும் சொத்துகள் மூலமாகக் கிடைத்த வருவாய் மட்டுமே அவருக்கு உரியது. அதனுடன் தொடர்புடைய மக்களுடன் அந்த அதிகாரிக்கு எந்தத் தொடர்பும் இருந்ததில்லை.**

63) மராத்தியர் ஆட்சியில் நிர்வாக நடைமுறையின் கடைசி அலகாக இருந்தது எது?

a) மாவட்டம்

**b) கிராமம்**

c) பிராந்தியம்

d) வில்லா

**விளக்கம்: எந்தப் பதவியும் பரம்பரையானதில்லை. பிராந்தியத்தின் செயல்பாடுகளுக்கான மையமாகக் கோட்டை அமைந்திருந்தது. பாரம்பரியப்படி கிராமம் என்பது நிர்வாக நடைமுறையின் கடைசி அலகாக இருந்தது.**

64) சிவாஜியின் வருவாய் நிர்வாகம் நியாயமானதாக யாருக்குச் சாதகமாக அமைந்திருந்தது?

a) நுகர்வோர்

b) விற்பனையாளர்

**c) உற்பத்தியாளர்**

d) வரி வசூலிப்போர்

**விளக்கம்: சிவாஜியின் வருவாய் நிர்வாகம் நியாயமானதாக, உற்பத்தியாளர்களுக்குச் சாதகமாக அமைந்திருந்தது. நிலம் அளவீடு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டது. மொத்த உற்பத்தியில் அரசின் உரிமையாக 30 சதவீதம் நிர்ணயிக்கப்பட்டு அது பணமாகவோ பொருளாகவோ செலுத்தப்பட்டது.**

**பின்னர் இந்த வரி 40 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. செலுத்த வேண்டிய வரித் தொகை தெளிவாக நிர்ணயிக்கப்பட்டு இருந்தது.**

65) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்தியர் ஆட்சியில் பஞ்சகாலத்தில் அரசு பணத்தையும் உணவுதானியங்களையும் உழவர்களுக்கு முன்பணம் அல்லது முன்பொருளாகக் கொடுத்தது.

ii ) விவசாயிகள் கால்நடை வாங்க, விதைப்புக்காக, இன்னபிற தேவைகளுக்காகக் கடன்கள் வழங்கப்பட்டன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்:பஞ்சகாலத்தில் அரசு பணத்தையும் உணவுதானியங்களையும் உழவர்களுக்கு முன்பணம் அல்லது முன்பொருளாகக் கொடுத்தது. பின்னர் அவற்றை அவர்கள் தவணைகளில் திரும்பச் செலுத்தவேண்டும். விவசாயிகள் கால்நடை வாங்க, விதைப்புக்காக, இன்னபிற தேவைகளுக்காகக் கடன்கள் வழங்கப்பட்டன.**

66) அரசு வசூலிக்கும் வருவாய், தேவைகளுக்குப் போதுமானதாக இல்லாத நிலையில் விதிக்கப்பட்ட வரிகள்?

a) சௌத்

b) சர்தேஷ்முகி

**c) a) மற்றும் b)**

d) சதமனா

**விளக்கம்: அரசு வசூலிக்கும் வருவாய், தேவைகளுக்குப் போதுமானதாக இல்லாத நிலையில் சௌத், சர்தேஷ்முகி என இரண்டு வரிகளைத் தனது சாம்ராஜ்யத்தின் அண்டை பகுதிகளான முகலாய மாகாணங்களிட மி ரு ந் து ம் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகளிலிருந்தும் சிவாஜி வசூலித்தார்.**

67) மரபுவழியாகத் தனது நாட்டின் சர்தேஷ்முக் ஆக விளங்கியவர்?

**a) சிவாஜி**

b) ஷாஜி போன்ஸ்லே

c) பாலாஜி விஸ்வநாத்

d) ராம்தாஸ்

**விளக்கம்: மராத்தியர் கைப்பற்றிய மாவட்டத்தின் வருவாயில் நான்கில் ஒரு பங்கு 'சௌத்' என வசூலிக்கப்பட்டது. சர்தேஷ்முக் என்ற தகுதியின் காரணமாக சிவாஜி தனது கூடுதல் வருவாயில் 10%-ஐ சர்தேஷ்முகி என்னும் வரிமூலம் பெற்றார். தேசாய்கள், தேஷ்முக்குகளின் பிரதம தலைமையாக சர்தேஷ்முக் திகழ்ந்தார். மரபுவழியாகத் தனது நாட்டின் சர்தேஷ்முக் ஆக சிவாஜி விளங்கினார்.**

68) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சிவாஜி நிலையான இராணுவத்தைக் கொண்டிருந்தார்.

ii ) ஜாகீர்களை வழங்குவதையும் மரபுவழியாகச் செய்யப்படும் நியமனங்களையும் அவர் ஊக்கப்படுத்தவில்லை.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சிவாஜி நிலையான இராணுவத்தைக் கொண்டிருந்தார். ஜாகீர்களை வழங்குவதையும் மரபுவழியாகச் செய்யப்படும் நியமனங்களையும் அவர் ஊக்கப்படுத்தவில்லை. படைவீரர்களுக்கு வீடு வழங்கப்பட்டது. அவர்களுக்கு முறைப்படி ஊதியமும் வழங்கப்பட்டது.** காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, ஆயுதப்படை **என இராணுவத்தில் நான்கு பிரிவுகள் இருந்தன.**

69) ரெஜிமெண்டுகள், பிரிகேடுகள் எனப்பிரிக்கப்பட்ட படைப்பிரிவு எது?

**a) காலாட்படை**

b) குதிரைப்படை

c) யானைப்படை

d) ஆயுதப்படை

**விளக்கம்: கொரில்லாபோர்முறையில் வீரர்கள் சிறந்து விளங்கியபோதிலும் பாரம்பரியப் போர்முறையிலும் அவர்கள் பயிற்சி பெற்றனர். ரெஜிமெண்டுகள், பிரிகேடுகள் எனக் காலாட்படை பிரிக்கப்பட்டது. ஒன்பது வீரர்களைக் கொண்ட சிறிய படைப்பிரிவுக்கு நாயக் (கார்ப்பரல்) தலைமை வகித்தார்.**

70) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

**a) ஹவில்தார் < ஜமால்தார் < ஹஜாரி < சாரிநௌபத்**

b) ஜமால்தார் < ஹஜாரி < ஹவில்தார் < சாரிநௌபத்

c) சாரிநௌபத் < ஜமால்தார் < ஹஜாரி < ஹவில்தார்

d) ஹஜாரி < ஹவில்தார் < சாரிநௌபத் < ஜமால்தார்

**விளக்கம்: ஒவ்வொரு படைப்பிரிவிலும் 25 குதிரைப் படை வீரர்கள் சார்ஜண்ட் தகுதிக்கு இணையான தகுதியில் ஹவில்தார் தலைமையின் கீழ் செயல்பட்டனர். ஒரு ஜமால்தாரின் கீழ் ஐந்து ஹவில்தார் செயல்பட்டனர். பத்து ஜமால்தார்களின் தலைவராக ஒரு ஹஜாரி திகழ்ந்தார். சாரிநௌபத் குதிரைப்படையின் தலைமைத்தளபதி ஆவார்.**

71) அரசு மூலமாகக் குதிரைகள் வழங்கப்பட்ட படைவீரர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

**a) பர்கிர்கள்**

b) ஷைலேதார்கள்

c) ஹஜாரிகள்

d) ஹவில்தார்கள்

**விளக்கம்: ஒவ்வொரு குதிரைப்படையும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அரசு மூலமாகக் குதிரைகள் வழங்கப்பட்ட படைவீரர்கள் பர்கிர்கள் என்றும், தாங்களாகவே குதிரைகளை ஏற்பாடு செய்து கூலிக்கு வேலை செய்யும் வீரர்கள் ஷைலேதார்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இதுதவிர நீர் கொண்டு செல்லும் குதிரைப்படைவீரர்களும் குதிரைகளுக்கு லாடம் கட்டுபவர்களும் இருந்தனர்.**

72) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்தியர் ஆட்சியில் நீதி நிர்வாகம் மரபுவழிப்பட்டதாக இருந்தது.

ii ) நிரந்தரமான நீதிமன்றங்களோ நிரந்தரமான நீதிவழிமுறைகளோ இல்லை, விசாரணைமுறை அனைவருக்கும் பொதுவாக இருந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: நீதி நிர்வாகம் மரபுவழிப்பட்டதாக இருந்தது. நிரந்தரமான நீதிமன்றங்களோ நிரந்தரமான நீதிவழிமுறைகளோ இல்லை, விசாரணைமுறை அனைவருக்கும் பொதுவாக இருந்தது. கிராமங்களில் பஞ்சாயத்து நடைமுறை இருந்தது. கிரிமினல் வழக்குகளை பட்டேல்கள் விசாரித்தனர்.**

73) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்தியர் ஆட்சியில் சிவில், கிரிமினல் வழக்குகளுக்கான மேல்முறையீடுகளைத் தலைமை நீதிபதி நியாயதேஷ், ஸ்மிருதிகளின் ஆலோசனையோடு விசாரித்தார்.

ii ) 'ஹவில்தார்மஜ்லிம்' இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாக இருந்தது.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சிவில், கிரிமினல் வழக்குகளுக்கான மேல்முறையீடுகளைத் தலைமை நீதிபதி நியாயதேஷ், ஸ்மிருதிகளின் ஆலோசனையோடு விசாரித்தார். 'ஹாஜிர்மஜ்லிம்' இறுதி மேல்முறையீட்டு நீதிமன்றமாக இருந்தது.**

74) சிவாஜியின் அமைச்சரவையான அஷ்டபிரதான் அமைப்பில் முதன்மையானவர் யார்?

a) வாக்கியநாவிஸ்

b) சச்சீவ்

c) பண்டிட்ராவ்

**d) பேஷ்வா**

**விளக்கம்: பேஷ்வா அல்லது பிரதமமந்திரி என்பவர் சிவாஜியின் அமைச்சரவையான அஷ்டபிரதான் அமைப்பில் முதன்மையானவர். பதினெட்டாம் நூற்றாண்டில் பேஷ்வாக்கள் அதிக அதிகாரங்களைப் பெற்று ஆட்சிபுரிந்தனர். பாலாஜி விஸ்வநாத் என்பவர் ஆற்றல் மிகுந்த முதல் பேஷ்வா ஆவார்.**

75) உள்நாட்டுப் போரால் சிக்கலிலிருந்த அரசைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர சாஹூவுக்கு உதவியவர்?

a) பாலாஜி பாஜிராவ்

b) இரண்டாம் பாஜிராவ்

**c) பாலாஜி விஸ்வநாத்**

d) ஔரங்கசீப்

**விளக்கம்: பேஷ்வா என்ற பாரசீக சொல்லின் பொருள் "முதன்மையான" அல்லது "பிரதம அமைச்சர்" என்பதாகும். பாலாஜி விஸ்வநாத் (1713-1720) உள்நாட்டுப் போரால் சிக்கலிலிருந்த அரசைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர சாஹூவுக்கு பாலாஜி விஸ்வநாத் உதவினார்.**

76) மேற்குக் கரையோரத்தில் அதிக அதிகாரம் படைத்த கடற்படைத் தளபதியாகத் திகழ்ந்தவர்?

**a) கனோஜி ஆங்கிரே**

b) மாலிக் ஆம்பர்

c) பாலாஜி பாஜிராவ்

d) திரிம்பக்ராவ்

**விளக்கம்: மேற்குக் கரையோரத்தில் கனோஜி ஆங்கிரே அ தி க அ தி காரம் படைத்த கடற்படைத் தளபதியாகத் திகழ்ந்தார். உள்நாட்டுப்போரின்போது கனோஜி ஆங்கிரே தாராபாய்க்கு ஆதரவு தெரிவித்திருந்தார். ஐரோப்பியரால் ஏற்படும் ஆபத்தைப் பற்றி அவருக்கு எடுத்துரைத்த பேஷ்வா சாஹூவிடம் தனக்குள்ள விசுவாசத்தை உறுதிசெய்தார். ஜாகீர்களை வழங்கும் நடைமுறை மீண்டும் வழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பேஷ்வாவின் பதவி மரபுசார்ந்ததாக ஆனது.**

77) பாலாஜி விஷ்வநாத்துக்குப் பிறகு சாஹூவால் பேஷ்வாவாக நியமிக்கப்பட்டவர்?

a) பாலாஜி பாஜிராவ்

b) இரண்டாம் பாஜிராவ்

**c) முதலாம் பாஜிராவ்**

d) சதாசிவ ராவ்

**விளக்கம்:முதலாம் பாஜி ராவ் (1720-1740)**

**பாலாஜி விஷ்வநாத்துக்குப் பிறகு அவரது மகன் முதலாம் பாஜிராவ் 1720இல் மன்னர் சாஹுவால் பேஷ்வாவாக நியமிக்கப்பட்டார். ஹைதராபாத் நிஜாம், மால்வாவின் ரஜபுத்திர ஆளுநர், குஜராத் ஆளுநர் ஆகியோரை வீழ்த்தி மராத்திய சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தை பாஜிராவ் மேம்படுத்தினார்.**

78) பேஷ்வாவுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய தலைமைத் தளபதி யார்?

a) கனோஜி ஆங்கிரே

b) மாலிக் ஆம்பர்

c) நானா சாகிப்

**d) திரிம்பக்ராவ்**

**விளக்கம்: முகலாயரின் கட்டுப்பாட்டிலிருந்து புந்தேல்கண்டை முதலாம் பாஜி ராவ் விடுவித்தார். அதனால் மராத்தியருக்கு அதன் ஆட்சியாளரிடமிருந்து மூன்றில் ஒரு பங்கு பகுதிகள் தாரை வார்க்கப்பட்டது. பேஷ்வாவுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய தலைமைத் தளபதி திரிம்பக்ராவ் 1731இல் பரோடா அருகே தபாய் என்ற இடத்தில் நடந்த போரில் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். தலைமைத்தளபதியின் பதவியையும் பேஷ்வா ஏற்றுக்கொண்டார்.**

79) எந்த ஒப்பந்தத்தின்படி சாஹுவின் இறையாண்மையை ஏற்குமாறு கோல்ஹாபுரின் சாம்பாஜிக்கு நெருக்குதல் அளிக்கப்பட்டது?

**a) வார்னா ஒப்பந்தம்**

b) தோர்னா ஒப்பந்தம்

c) புரந்தர் ஒப்பந்தம்

d) ஜாவ்லி ஒப்பந்தம்

**விளக்கம்:1731இல் எட்டப்பட்ட வார்னா ஒப்பந்தத்தின்படி சாஹுவின் இறையாண்மையை ஏற்குமாறு கோல்ஹாபுரின் சாம்பாஜிக்கு நெருக்குதல் அளிக்கப்பட்டது.**

80) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) தானே, சால்செட், பேசின் ஆகிய பகுதிகள் 1738இல் போர்த்துகீசியரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அவர்கள் கொங்கணக் கடற்கரைப் பிரதேசத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

ii ) மராத்தியருடன் ஆங்கிலேயர் நட்புறவை ஏற்படுத்தியதன் மூலம் தக்காணப்பகுதியில் தடையில்லா வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார்கள்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: தானே, சால்செட், பேசின் ஆகிய பகுதிகள் 1738இல் போர்த்துகீசியரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அவர்கள் கொங்கணக் கடற்கரைப் பிரதேசத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். அதே நேரத்தில் மராத்தியருடன் ஆங்கிலேயர் நட்புறவை ஏற்படுத்தியதன் மூலம் தக்காணப்பகுதியில் தடையில்லா வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார்கள்.**

81) நானா சாகிப் என்று அழைக்கப்பட்ட பேஷ்வா யார்?

**a) பாலாஜி பாஜிராவ்**

b) இரண்டாம் பாஜிராவ்

c) பாலாஜி விஸ்வநாத்

d) முதலாம் பாஜிராவ்

**விளக்கம்: பாலாஜி பாஜி ராவ் (1740 -1761)**

**பாஜிராவ் மறைவுக்குப் பிறகு பாலாஜி பாஜிராவ் பேஷ்வாவாக பதவியேற்றார். நானா சாகிப் என்று அழைக்கப்பட்ட அவர் நல்ல நிர்வாகியாகவும் நிதி தொடர்பான விஷயங்களில் வல்லுநராகவும் விளங்கினார்.**

82) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) 1739இல் தஞ்சாவூரை ஆண்ட மராத்திய ஆட்சியாளர் சாஹூவிடம் உதவி கோரினார்.

ii ) 1740ஆம் ஆண்டு ரகுஜி போன்ஸ்லே ஆற்காடு நவாப் தோஸ்த் அலியை வீழ்த்திக் கொன்றார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஆற்காடு நவாபின் மருமகன் சந்தா சாகிப் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றிய பிறகு தஞ்சாவூரை முற்றுகை இடப்போவதாக அச்சுறுத்தினார். 1739இல் தஞ்சாவூரை ஆண்ட மராத்திய ஆட்சியாளர் சாஹூவிடம் உதவி கோரினார். இந்தக் கோரிக்கையை ஏற்ற பேஷ்வா, தனது மைத்துனர் ரகுஜி போன்ஸ்லேவைத் தஞ்சாவூருக்கு அனுப்பினார். 1740ஆம் ஆண்டு ரகுஜி போன்ஸ்லே ஆற்காடு நவாப் தோஸ்த் அலியை வீழ்த்திக் கொன்றார். திருச்சிராப்பள்ளி கைப்பற்றப்பட்டு சந்தா சாகிப் சிறையில் அடைக்கப்பட்டார்.**

83) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) புந்தேல்கண்ட் மற்றும் வங்காளத்தில் நடந்த இராணுவத் தாக்குதல்களில் பேஷ்வா ஈடுபட்டிருந்ததால் அடுத்து வந்த நவாப் முகமது அலி 1743இல் ஆற்காட்டை எளிதாகக் கைப்பற்றியதோடு திருச்சிராப்பள்ளியையும் மீட்டார்.

ii ) மராத்தியரின் அதிகாரம் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டபோதிலும் அவர்களால் திருச்சிராப்பள்ளியை மீட்க முடியவில்லை.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: புந்தேல்கண்ட் மற்றும் வங்காளத்தில் நடந்த இராணுவத் தாக்குதல்களில் பேஷ்வா ஈடுபட்டிருந்ததால் அடுத்து வந்த நவாப் முகமது அலி 1743இல் ஆற்காட்டை எளிதாகக் கைப்பற்றியதோடு திருச்சிராப்பள்ளியையும் மீட்டார். இதனால் பேஷ்வா தனது உடன் பிறவா சகோதரரான சதாசிவ ராவை கர்நாடகத்துக்கு அனுப்பினார். மராத்தியரின் அதிகாரம் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டபோதிலும் அவர்களால் திருச்சிராப்பள்ளியை மீட்க முடியவில்லை.**

84) உத்கிர் போர் எந்த ஆண்டு நடைபெற்றது?

**a) 1760**

b) 1770

c) 1765

d) 1772

**விளக்கம்: உத்கிர் போர், 1760: 1748இல் நிஜாம் ஆசப்ஜாவின் மறைவுக்குப் பிறகு வாரிசுப் போட்டி வெடித்தது. நிஜாமின் மூத்த மகனுக்குப் பேஷ்வா தனது ஆதரவைத் தெரிவித்தார்.**

85) யாருடைய தலைமையில் பேஷ்வா அனுப்பிய இராணுவம் உத்கிர் போரில் எதிரிகளை வீழ்த்தியது?

a) பாலாஜி பாஜிராவ்

b) இரண்டாம் பாஜிராவ்

c) பாலாஜி விஸ்வநாத்

**d) சதாசிவராவ்**

**விளக்கம்: சதாசிவ ராவ் தலைமையில் பேஷ்வா அனுப்பிய இராணுவம் 1760இல் நடந்த உத்கிர் போரில் எதிரிகளை வீழ்த்தியது. மராத்தியரின் இராணுவ பலத்துக்குக் கடைசி கட்டமாக இந்த வெற்றி அமைந்தது. பீஜப்பூர், ஔரங்காபாத், தௌலதாபாத், அகமதுநகர், புர்கான்பூர் ஆகிய பகுதிகளைப் பேஷ்வா கைப்பற்றினார்.**

86) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ரஜபுதனத்தை (1741 முதல் 1748 வரை) ஆறு தாக்குதல் முயற்சிகளுக்குப் பிறகு மராத்தியர் தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தார்கள்.

ii ) 1781இல் வங்காள நவாப் ஒரிஸ்ஸாவைக் கைவிட்டு மராத்தியருக்கு கப்பம் கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ரஜபுதனத்தை (1741 முதல் 1748 வரை) ஆறு தாக்குதல் முயற்சிகளுக்குப் பிறகு மராத்தியர் தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தார்கள். 1751இல் வங்காள நவாப் ஒரிஸ்ஸாவைக் கைவிட்டு மராத்தியருக்கு கப்பம் கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.**

87) மராத்தியரின் உதவியோடு வைஸ்ராயாகப் பொறுப்பேற்றவர்?

a) மீர்மன்னு

**b) இமாத் உல் முல்க்**

c) தைமூர் ஷா

d) மீர் பக்ஷி

**விளக்கம்: முகலாயரின் ஆட்சியைக் குறிவைத்தே மராத்தியர் செயல்பட்ட காரணத்தால் அவர்கள் 1752இல் தில்லியில் நுழைந்தார்கள். தில்லியை விட்டு ஆப்கனியரையும் ரோகில்லாக்களையும் விரட்டியடித்தார்கள். மராத்தியரின் உதவியோடு வைஸ்ராயாகப் பொறுப்பேற்ற இமாத் உல் முல்க் அவர்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு செயல்படும் பொம்மையானார்.**

88) ஆப்கானிஸ்தானில் துராணி சாம்ராஜ்யத்தை நிறுவியவர்?

a) நாதிர்ஷா

b) முகமது ஷா

c) தைமூர் ஷா

**d) அகமது ஷா அப்தலி**

**விளக்கம்: பஞ்சாபைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பிறகு ஆப்கானிஸ்தானில் துராணி சாம்ராஜ்யத்தை நிறுவிய அகமதுஷா அப்தலியின் பிரதிநிதியை அங்கிருந்து அகற்றினார்கள். இதனால் அகமது ஷா அப்தலியுடனான பெரிய சண்டையைத் தவிர்க்க இயலவில்லை.**

89) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) 1757இல் நடந்த பிளாசி போரில் சிராஜ் உத் தௌலாவுக்கு மராத்தியர் உதவவில்லை.

ii ) சீக்கியர், ஜாட் தலைவர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் மராத்தியரை நம்பத் தயாராக இல்லை.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: வ டமேற் கிலிருந்த அ திகார மையங்களிலும் மராத்தியர் தங்கள் கூட்டாளிகளை உருவாக்க முனைந்தனர். ஆனால் மராத்தியரின் முந்தைய செயல்பாடுகளால் வடமேற்கு அவர்களுக்கு எதிரான மனநிலையைக் கொண்டிருந்தது. சீக்கியர், ஜாட் தலைவர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் மராத்தியரை நம்பத் தயாராக இல்லை. 1757இல் நடந்த பிளாசி போரில் சிராஜ் உத் தௌலாவுக்கு மராத்தியர் உதவவில்லை. அதனால் வங்காளத்திலிருந்தும் பெரிதாக ஏதும் உதவி கிடைக்கவில்லை.**

90) மூன்றாம் பானிபட் போர் நடைபெற்ற ஆண்டு?

**a) 1761**

b) 1782

c) 1765

d) 1776

**விளக்கம்:கர்நாடகத்திலும் வங்காளத்திலும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பேஷ்வா எடுத்த முயற்சிகளின் விளைவாக அவர்களால் மேலும் முன்னேறமுடியாமல் போனது. தில்லி மீதான பேஷ்வாவின் தேவையற்ற ஆர்வம் பல பிரதேச ஆட்சியாளர்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தது. 1761இல் அகமதுஷா அப்தலி பெரும் இன்னலை பானிப்பட் போர்க்களத்தில் உருவாக்கினார்.**

91) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மூன்றாவது பானிப்பட் போர், 1761 இந்திய வரலாற்றில் 1761இல் நடந்த மூன்றாவது பானிப்பட் போர் முக்கிய முடிவைக் கொடுத்ததாகும்.

ii ) இந்தப் போரில் மராத்தியர்க்கும் முகலாயருக்கும் கிடைத்த மிகப் பெரிய தோல்வி இந்தியாவில் ஆங்கிலேய அரசு காலூன்ற வழி வகுத்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: மூன்றாவது பானிப்பட் போர், 1761 இந்திய வரலாற்றில் 1761இல் நடந்த மூன்றாவது பானிப்பட் போர் முக்கிய முடிவைக் கொடுத்ததாகும். இந்தப் போரில் மராத்தியர்க்கும் முகலாயருக்கும் கிடைத்த மிகப் பெரிய தோல்வி இந்தியாவில் ஆங்கிலேய அரசு காலூன்ற வழி வகுத்தது.**

92) கோகினூர் வைரம், மதிப்புமிகு மயிலாசனம் ஆகியவற்றை அவர் கைப்பற்றிச் சென்றவர்?

**a) நாதிர்ஷா**

b) அகமது ஷா அப்தாலி

c) தைமூர் ஷா

d) மீர்பக்ஷி

**விளக்கம்: பலவீனமான முகலாய அரசு வடமேற்கு எ ல்லைப்ப குதிகளில் பாதுகா ப்பை உறுதிசெய்யத் தவறிவிட்டது. இதனால் அப்போது ஆப்கானிஸ்தானை ஆண்ட நாதிர் ஷா போர் தொடுக்க நேரிட்டது. மீண்டும் மீண்டும் அளித்த வேண்டுகோள்களுக்குப் பிறகு முகலாய ஆட்சியாளர் முகம்மது ஷா ஆப்கன் நாட்டுக் கிளர்ச்சியாளர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார். இதனால் 1739இல் நாதிர் ஷாவின் தாக்குதல்கள் தொடங்கின. தில்லி சூறையாடப்பட்டது. கோகினூர் வைரம், மதிப்புமிகு மயிலாசனம் ஆகியவற்றை அவர் கைப்பற்றிச் சென்றார்.**

93) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) 1747இல் நாதிர் ஷா கொல்லப்பட்ட பிறகு அவரது இராணுவ தளபதிகளில் ஒருவரான அகமதுஷா அப்தலி ஆப்கானிஸ்தானின் ஆட்சியாளராக மாறினார்.

ii )முல்தான் மற்றும் பஞ்சாபை அவருக்குத் தாரை வார்த்த முகலாய மாமன்னர் அமைதியை நிலை நிறுத்தினார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: 1747இல் நாதிர் ஷா கொல்லப்பட்ட பிறகு அவரது இராணுவ தளபதிகளில் ஒருவரான அகமதுஷா அப்தலி ஆப்கானிஸ்தானின் ஆட்சியாளராக மாறினார். தனது நிலையை உறுதிப்படுத்திய அவர் பின்னர் இராணுவத் தாக்குதல்களைத் தொடங்கினார். முல்தான் மற்றும் பஞ்சாபை அவருக்குத் தாரை வார்த்த முகலாய மாமன்னர் அமைதியை நிலை நிறுத்தினார்.**

94) பஞ்சாப் ஆளுநராக முகலாய மாமன்னரால் நியமிக்கப்பட்டவர்?

**a) மீர்மன்னு**

b) இமாத் உல் முல்க்

c) மீர் முனிம்

d) மீர்பக்ஷி

**விளக்கம்: பஞ்சாப் ஆளுநராக முகலாய மாமன்னரால் நியமிக்கப்பட்ட மீர்மன்னு, அகமது ஷா அப்தலியின் முகவர் போலவே செயல்பட முடிந்தது. மீர் மன்னுவின் மரணத்துக்குப் பிறகு அவரது மனைவி தில்லி வசீர் இமாத் உல் முல்க்கின் துணையோடு பஞ்சாப் ஆளுநராக மீர் முனிமை**

**அப்தலியின் ஒப்புதலின்றி நியமித்தார். இதனால் ஆத்திரம் அடைந்த அப்தலி படையெடுத்து வந்து பஞ்சாபைக் கைப்பற்றினார்.**

95) அப்தலி தில்லியில் தனது பிரதிநிதியாக யாரை நியமனம் செய்தார்?

a) மீர்மன்னு

b) இமாத் உல் முல்க்

c) மீர் முனிம்

**d) மீர்பக்ஷி**

**விளக்கம்: மீர் முனிம் தில்லிக்குத் தப்பினார். அவரைத் தொடர்ந்து விரட்டிய அப்தலி தில்லியைக் கைப்பற்றினார். 1757ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தில்லி சூறையாடப்பட்டது. மதுராவும் பிருந்தாவனமும் சிதைக்கப்பட்டன. தில்லியை விட்டு வெளியேறும் முன் அப்தலி தில்லியில் தனது பிரதிநிதியாக மீர் பக்ஷியை நியமனம் செய்தார். அவரது மகன் தைமூர் ஷா லாகூரின் (வைஸ்ராயாக) அரசபிரதிநிதியாக ஆக்கப்பட்டார்.**

96) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) அப்தலி தில்லியிலிருந்து வெளியேறிய பிறகு மல்ஹர் ராவ் ஹோல்கர், ரகுநாத ராவ் ஆகியோரின் தலைமையின் கீழ் ஒரு தாக்குதல் நடந்தது.

ii ) லாகூர், முல்தான், சர்கிந்த் ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டிய நிலைமைக்கு மராத்தியர் தள்ளப்பட்டனர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: அப்தலி தில்லியிலிருந்து வெளியேறிய பிறகு மல்ஹர் ராவ் ஹோல்கர், ரகுநாத ராவ் ஆகியோரின் தலைமையின் கீழ் ஒரு தாக்குதல் நடந்தது. தில்லியில் அப்தலி நியமித்த பிரதிநிதியை அவர்கள் அகற்றினார்கள். பின்னர் தங்களுக்கு பிடித்த ஒருவரை வசீராக நியமித்தனர். 1758இல் சர்கிந்த் மற்றும் லாகூரை அவர்கள் கைப்பற்றினார்கள். ஆப்கன் படைகள் வீழ்த்தப்பட்டு தைமூர் ஷா ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார். 1759 அக்டோபர் மாதம் அப்தலி பஞ்சாபை மீட்டார். லாகூர், முல்தான், சர்கிந்த் ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டிய நிலைமைக்கு மராத்தியர் தள்ளப்பட்டனர்.**

97) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பஞ்சாபின் நிலைமையைச் சீராக்குவதற்காக மகாதாஜி சிந்தியாவின் சகோதரரான தத்தாஜி சிந்தியாவை பேஷ்வா அங்கு அனுப்பினார்

ii ) சதாசிவ ராவின் தலைமையில் பெரும்படையைப் பேஷ்வா உருவாக்கினார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பஞ்சாபின் நிலைமையைச் சீராக்குவதற்காக மகாதாஜி சிந்தியாவின் சகோதரரான தத்தாஜி சிந்தியாவை பேஷ்வா அங்கு அனுப்பினார். ஆனால் 1760இல் நடந்த போரில் அப்தலி அவரை வீழ்த்திக் கொன்றார். சிகந்தராவில் மல்ஹர் ராவ் ஹோல்கரும் தோல்வி கண்டார். அதன் பிறகு சதாசிவ ராவின் தலைமையில் பெரும்படையைப் பேஷ்வா உருவாக்கினார்.**

98) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ரோகில்கண்டின் நஜீப் உத் தௌலா மற்றும் அயோத்தியின் ஷுஜா உத் தௌலா ஆகியோருடன் கூட்டணி அமைத்து அப்தலி பதிலடி கொடுத்தார்.

ii ) அயோத்தி நவாப், சீக்கியர், ஜாட் தலைவர்கள் ஆகியோரைப் பகைத்துக்கொண்ட மராத்தியர், ரஜபுத்திரர்களின் நம்பிக்கையையும் இழந்தனர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ரோகில்கண்டின் நஜீப் உத் தௌலா மற்றும் அயோத்தியின் ஷுஜா உத் தௌலா ஆகியோருடன் கூட்டணி அமைத்து அப்தலி பதிலடி கொடுத்தார். வடக்கு அதிகார மையங்களில் மராத்தியருக்குக் கூட்டாளிகள் கிடைக்கவில்லை. அயோத்தி நவாப், சீக்கியர், ஜாட் தலைவர்கள் ஆகியோரைப் பகைத்துக்கொண்ட மராத்தியர், ரஜபுத்திரர்களின் நம்பிக்கையையும் இழந்தனர்.**

99) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பேஷ்வாவின் இளைய புதல்வர் விஸ்வாஸ் ராவின் ஒட்டுமொத்த தலைமையின் கீழ் மராத்திய இராணுவம் இருந்தது.

ii )படைகளுக்கு சதாசிவ ராவ் உண்மையான தளபதியாகத் திகழ்ந்தார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பேஷ்வாவின் இளைய புதல்வர் விஸ்வாஸ் ராவின் ஒட்டுமொத்த தலைமையின் கீழ் மராத்திய இராணுவம் இருந்தது. இந்தப் படைகளுக்கு சதாசிவ ராவ் உண்மையான தளபதியாகத் திகழ்ந்தார். வழியில் ஹோல்கர், சிந்தியா, கெய்க்வாட் ஆகியோரை இணைத்துக் கொண்டனர்.**

100) இரண்டாம் ஆலம்கீரின் படுகொலையைத் திட்டமிட்ட வசீர் யாருக்கு பட்டம் சூட்டினார்?

**a) மூன்றாம் ஷாஜகான்**

b) இரண்டாம் ஷா ஆலம்

c) மூன்றாம் அக்பர்

d) இரண்டாம் பகதூர் ஷா

**விளக்கம்: இந்த நேரத்தில் முகலாய மன்னர் இரண்டாம் ஆலம்கீர் கொல்லப்பட்டா ர். அவரது இளைய மகன் இரண்டாம் ஷாஆலம் தானே முடி சூடிக்கொண்டார். இந்தப் படுகொலையைத் திட்டமிட்ட வசீர் மூன்றாம் ஷாஜகானுக்கு பட்டம் சூட்டினார்.**

101) சதாசிவ ராவ் மூன்றாம் ஷாஜகானை ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு யாரை மன்னராக அறிவித்தார்?

a) மூன்றாம் பகதூர்ஷா

**b) இரண்டாம் ஷா ஆலம்**

c) மூன்றாம் அக்பர்

d) இரண்டாம் பகதூர் ஷா

**விளக்கம்:இதில் தலையிட்ட சதாசிவ ராவ் மூன்றாம் ஷாஜகானை ஆட்சியிலிருந்து அகற்றிவிட்டு இரண்டாம் ஷா ஆலம் என்பவரை மன்னராக அறிவித்தார். அப்தலியின் படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பதிலாக சதாசிவ ராவ் உணவுப்பற்றாக்குறை ஏற்படும் வரை நீண்ட காலம் அமைதிகாத்தார். தட்டுப்பாடின்றி உணவு கிடைக்கக்கூடிய பசுமையான ஆற்றிடைப் பகுதிகளில் அப்தலி தனது படைகளை நிறுத்தினார்.**

102) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மூன்றாவது பானிப்பட் போரில் பேஷ்வாவின் மகன் விஸ்வாஸ் ராவ், சதாசிவ ராவ், மற்றும் எண்ணற்ற மராத்திய தளபதிகள் கொல்லப்பட்டனர்.

ii ) இதயம் நலிவடைந்த பேஷ்வா 1761 ஜூனில் மரணமடைந்தார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: 1761 ஜனவரி 14ஆம் தேதி மூன்றாவது பானிப்பட் போர் நடந்தது. மராத்தியரின் இராணுவம் முற்றிலுமாக அழிந்தது. பேஷ்வாவின் மகன் விஸ்வாஸ் ராவ், சதாசிவ ராவ், மற்றும் எண்ணற்ற**

**மராத்திய தளபதிகள் கொல்லப்பட்டனர். போர்க்களத்தில் 28,000 பேரின் உடல்கள் கிடந்தன. ஹோல்கர் தப்பியோடினார். சிந்தியாவின் படைகள் அவரைத் துரத்தின. இந்தத் துயர செய்தி கேட்டு பேஷ்வா அதிர்ச்சி அடைந்தார். இதயம் நலிவடைந்த பேஷ்வா 1761 ஜூனில் மரணமடைந்தார்.**

103) பானிப்பட் போருக்குப் பிறகு அப்தலி யாரை தில்லியின் மன்னராக அங்கீகரித்தார்?

a) மூன்றாம் பகதூர்ஷா

**b) இரண்டாம் ஷா ஆலம்**

c) மூன்றாம் அக்பர்

d) இரண்டாம் பகதூர் ஷா

**விளக்கம்: பானிப்பட் போருக்குப் பிறகு அப்தலி இரண்டாம் ஷா ஆலத்தை தில்லியின் மன்னராக அங்கீகரித்தார். ஆண்டொன்றுக்கு நான்கு மில்லியன் கப்பம் கிடைத்தது. முதலில் கடுமையான அதிர்ச்சியைச் சந்தித்த மராத்தியர் பத்து ஆண்டுகளுக்குள் முகலாய மன்னர் ஷா ஆலத்தின் பாதுகாவலராக உருவாகி வடக்கே தங்களுடைய அதிகாரத்தை நிலைநிறுத்த முயன்றனர்.**

104) 1761ஆம் ஆண்டு , பேஷ்வாவின் இளைய சகோதரர் ரகோபாவின் ஆட்சியில் பேஷ்வா ஆகப் பதவியேற்றார்.

a) விஸ்வாசராவ்

b) மூன்றாம் ம் பாஜிராவ்

**c) மாதவ் ராவ்**

d) சதாசிவ ராவ்

**விளக்கம்: பேஷ்வா முதலாம் மாதவ் ராவ் (1761-1772) மற்றும் அவரது வழித்தோன்றல்கள் 1761ஆம் ஆண்டுபாலாஜி பாஜி ராவின் மகன் மாதவ் ராவ், பேஷ்வாவின் இளைய சகோதரர் ரகோபாவின் ஆட்சியில் பேஷ்வா ஆகப் பதவியேற்றார்.**

105) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பானிப்பட் போரில் இழந்த மராத்திய அதிகாரத்தை மீட்க மாதவ் ராவ் முயன்றார்.

ii ) 1763ஆம் ஆண்டு ஹைதராபாத் நிஜாமுடன் கடும் சண்டை நடந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பானிப்பட் போரில் இழந்த மராத்திய அதிகாரத்தை மீட்க மாதவ் ராவ் முயன்றார். 1763ஆம் ஆண்டு ஹைதராபாத் நிஜாமுடன் கடும் சண்டை நடந்தது. மைசூரை ஆண்டஹைதர் அலிக்கு எதிராக 1765-1767 க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் அவர் நடத்திய தாக்குதல்கள் வெற்றி பெற்றன. எனினும் தான்**

**இழந்த அனைத்துப் பகுதிகளையும் ஹைதர் அலி விரைவாக மீட்டார். ஆனால் மாதவ் ராவ் 1772ஆம் ஆண்டு மீண்டும் அவற்றை மீட்டார். அதன் காரணமாக தர்மசங்கடமான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடும் நிர்பந்தம் ஹைதர் அலிக்கு ஏற்பட்டது.**

106) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மாதவ் ராவ் ரோகில்லாக்களை (பதான்கள்) வீழ்த்தி ரஜபுத்திர அரசுகளையும் ஜாட் தலைவர்களையும் அடிமைப்படுத்தி வட இந்தியா மீதான தனது கட்டுப்பாட்டை அவர் உறுதி செய்தார்.

ii ) தப்பியோடிய மன்னரான இரண்டாம் ஷா ஆலம் அலகாபாத்தில் ஆங்கிலேயரின் பாதுகாப்பிலிருந்தார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: மாதவ் ராவ் ரோகில்லாக்களை (பதான்கள்) வீழ்த்தி ரஜபுத்திர அரசுகளையும் ஜாட் தலைவர்களையும் அடிமைப்படுத்தி வட இந்தியா மீதான தனது கட்டுப்பாட்டை அவர் உறுதி செய்தார். தப்பியோடிய மன்னரான இரண்டாம் ஷா ஆலம் அலகாபாத்தில் ஆங்கிலேயரின் பாதுகாப்பிலிருந்தார். 1771இல் அவரை மராத்தியர் மீண்டும் தில்லிக்கு அழைத்து வந்தனர். கோரா, அலகாபாத் ஆகிய இடங்களை மன்னர் ஷா ஆலம் மராத்தியருக்குத் தாரை வார்த்தார். ஆனால் 1772ஆம் ஆண்டு பேஷ்வாவின் திடீர் மரணம் அவரது சிறப்புமிக்க ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.**

107) முதலாம் மாதவ் ராவுக்கு பிறகு பேஷ்வா ஆகப் பொறுப்பேற்றவர் யார்?

a) விஸ்வாசராவ்

b) மூன்றாம் பாஜிராவ்

**c) நாராயண் ராவ்**

d) சதாசிவ ராவ்

**விளக்கம்: முதலாம் மாதவ் ராவுக்கு வாரிசு இல்லாத காரணத்தால் அவரது இளைய சகோதரர் நாராயண் ராவ் 1772இல் பேஷ்வா ஆகப் பொறுப்பேற்றார். ஆனால் அடுத்த ஆண்டே அவர் படுகொலை செய்யப்பட்டார். அவரது மகன் சவாய் மாதவ் ராவ் (இரண்டாம் மாதவ் ராவ்) பிறந்து 40 நாட்களே ஆன நிலையில் பேஷ்வா ஆக முடிசூடப்பட்டார். இரண்டாம் மாதவ் ராவின் மரணத்துக்குப் பிறகு ரகுநாத் ராவின் மகன் இரண்டாம் பாஜி ராவ் பதவியை ஏற்றார். அவரே கடைசி பேஷ்வா ஆவார்.**

108) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) நானா பட்னாவிஸ் ஆட்சியில் ரகுநாத் ராவ் சிறுவனாக இருந்ததால் முன்னாள் பேஷ்வாவான முதலாம் மாதவ்ராவின் மாமா மாதவ் ராவ் நாராயண் பேஷ்வா அதிகாரத்தைக் கைப்பற்றினார்

ii ) சால்செட், பேசின் ஆகிய பகுதிகளை ரகுநாத் ராவ் திரும்பப் பெற பம்பாயிலிருந்த கம்பெனி நிர்வாகம் ஆதரவாக இருந்தது.

a) (i) சரி

**b) (ii) சரி**

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: நானா பட்னாவிஸ் ஆட்சியில் மாதவ் ராவ் நாராயண் பேஷ்வா சிறுவனாக இருந்ததால் முன்னாள் பேஷ்வாவான முதலாம் மாதவ்ராவின் மாமா ரகுநாத் ராவ் அதிகாரத்தைக் கைப்பற்றினார். இது குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் வேலையைப் பார்க்க கம்பெனி நிர்வாகத்துக்கு வாய்ப்புக் கொடுத்தது. சால்செட், பேசின் ஆகிய பகுதிகளை ரகுநாத் ராவ் திரும்பப் பெற பம்பாயிலிருந்த கம்பெனி நிர்வாகம் ஆதரவாக இருந்தது.**

109) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மகாதாஜி சிந்தியாவும் நாக்புரின் போன்ஸ்லேயும் ஆங்கிலேய ஆதரவாளர்களாக ஆனதை அடுத்து மராத்தியர் சால்செட், தானே ஆகிய பகுதிகளை ஆங்கிலேயருக்குத் தாரை வார்க்க நேரிட்டது.

ii ) சால்பை உடன்படிக்கையின் படி 1782இல் ரகுநாத் ராவ் கட்டாய ஓய்வு பெற வைக்கப்பட்டார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: மகாதாஜி சிந்தியாவும் நாக்புரின் போன்ஸ்லேயும் ஆங்கிலேய ஆதரவாளர்களாக ஆனதை அடுத்து மராத்தியர் சால்செட், தானே ஆகிய பகுதிகளை ஆங்கிலேயருக்குத் தாரை வார்க்க நேரிட்டது. சால்பை உடன்படிக்கையின் படி 1782இல் ரகுநாத் ராவ் கட்டாய ஓய்வு பெற வைக்கப்பட்டார். இதனை அடுத்து கம்பெனிக்கும் மராத்தியருக்கும் இடையே சுமார் இருபது ஆண்டு காலத்துக்கு அமைதி நிலவியது.**

110) இரண்டாம் ஆங்கிலேய மராத்தியப் போர் நடைபெற்ற ஆண்டு?

**a) 1803 - 1806**

b) 1813 - 1817

c) 1796 - 1799

d) 1776 - 1784

**விளக்கம்: இரண்டாம் ஆங்கிலேய மராத்தியப் போர் (1803-1806) நானா பட்னாவிஸ் மறைவு அவரது பெரும் சொத்துக்கள் சிதற வழி வகுத்தது. ரகுநாத் ராவின் மகன் இரண்டாம் பாஜி ராவ்**

**ஆட்சியிலிருந்து இறக்கப்பட்டார். அந்தச் சூழ்நிலையில் இரண்டாம் பாஜி ராவுக்கு ஆங்கிலேயரின் உதவியை ஏற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அப்போதைய கவர்னர் ஜெனரலாக இருந்த வெல்லெஸ்லி பிரபு பேஷ்வா மீது துணைப்படைத் திட்டத்தைத் திணித்தார்.**

111) பேசின் ஒப்பந்தம் எந்த ஆண்டு கையெழுத்தானது?

a) 1803

**b) 1802**

c) 1799

d) 1806

**விளக்கம்: 1802இல் பேசின் ஒப்பந்தம் கையெழுத்தானது. 2.6 மில்லியன் வருமானம் ஈட்டக்கூடிய நிலப்பகுதி கொடுக்கப்பட வேண்டும். முன்னணியிலிருந்த மராத்திய அரசுகள் பல இந்த மோசமான ஒப்பந்தத்தை ஒதுக்கித் தள்ளின. அதனால் இரண்டாவது ஆங்கிலேய-மராத்தியப் போர் மூண்டது. மராத்தியர் கடும் எதிர்ப்பைக் காட்டியபோதிலும் மராத்தியத் தலைவர்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டனர். துணைப்படைத் திட்டம் ஏற்கப்பட்டது. ஆங்கிலேயருக்கு தோஆப் (ஆற்றிடைப்பகுதி), அகமதுநகர், புரோச், மலைப்பகுதிகள் ஆகியன முழுமையாக கிடைத்தன.**

112) பேஷ்வாவின் விருப்பத்துக்கு உகந்த திரிம்பக்ஜியால் கொல்லப்பட்டவர்?

a) கனோஜி ஆங்கிரே

b) ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டோன்

c) நானா சாகிப்

**d) கங்காதர் சாஸ்திரி**

**விளக்கம்: மூன்றாம் ஆங்கிலேய-மராத்தியப் போர் (1817-1819) பரோடாவின் ஆட்சியாளர் (கெய்க்வாட்) முதன்மை அமைச்சர் கங்காதர் சாஸ்திரி, பேஷ்வாவின் விருப்பத்துக்கு உகந்த திரிம்பக்ஜியால் கொல்லப்பட்டதை அடுத்து பேஷ்வா இரண்டாம் பாஜி ராவ் ஆங்கிலேயருக்கு எதிராக மாறினார். பூனேயில் ரெசிடெண்ட் ஆக இருந்த மவுண்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டோனின் வற்புறுத்தலில் திரிம்பக்ஜி சிறையில் அடைக்கப்பட்டார். எனினும் பேஷ்வாவின் உதவியோடு கொலையாளி சிறையிலிருந்து தப்பிவிட்டார்.**

113) கூற்று (கூ): 1817ஆம் ஆண்டு பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஆட்சியாளர்களை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினார்கள்.

காரணம் (கா): மராத்தியக் கூட்டமைப்பை உருவாக்க ஆங்கிலேயருக்கு எதிராக சிந்தியா, போன்ஸ்லே, ஹோல்கர் ஆகியோருடன் சதித்திட்டம் தீட்டியதாகப் பேஷ்வா மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

a) கூற்று தவறு; காரணம் சரி

**b) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது**

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று மற்றும் காரணம் சரியானவை

**விளக்கம்: மராத்தியக் கூட்டமைப்பை உருவாக்க ஆங்கிலேயருக்கு எதிராக சிந்தியா, போன்ஸ்லே, ஹோல்கர் ஆகியோருடன் சதித்திட்டம் தீட்டியதாகப் பேஷ்வா மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. எனவே 1817ஆம் ஆண்டு பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஆட்சியாளர்களை ஆங்கிலேயர்கள் வற்புறுத்தினார்கள்.**

114) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பூனா ஒப்பந்தத்தின்படி மராத்தியக் கூட்ட மைப்பின் தலைமையிலிருந்து பேஷ்வா பதவி விலகினார். 

ii ) கொங்கணப் பகுதியை ஆங்கிலேயருக்கு வழங்கியதோடு கெயிக்வாரின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பூனா ஒப்பந்தத்தின்படி, மராத்தியக் கூட்ட மைப்பின் தலைமையிலிருந்து பேஷ்வா பதவி விலகினார். கொங்கணப் பகுதியை ஆங்கிலேயருக்கு வழங்கியதோடு கெயிக்வாரின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது.**

115) பூனா அரசக்குடியிருப்பை தீயிட்டுக் கொளுத்தியவர்?

a) மாதவ் ராவ்

**b) இரண்டாம் பாஜி ராவ்**

c) நாராயண் ராவ்

d) சதாசிவ ராவ்

**விளக்கம்: தனக்கு நேர்ந்த அவமானத்தை பாஜி ராவால் ஏற்கமுடியவில்லை. எனவே பிண்டாரிகளை அடக்குவதில் தீவிரமாக ஆங்கிலேயர்கள் ஈடுபட்டிருந்த வேளையில் பூனா அரசக்குடியிருப்பை இரண்டாம் பாஜி ராவ் தீயிட்டுக் கொளுத்தினார். பூனாவுக்கு உடனடியாக விரைந்த ஜெனரல் ஸ்மித் அதனைக் கைப்பற்றினார். சதாராவுக்குப் பேஷ்வா தப்பியோடிய நிலையில் அதனையும் ஜெனரல் ஸ்மித் கைப்பற்றினார்.**

116) அஸ்தா, கிர்க்கி, கோர்கான் ஆகிய பகுதிகளில் பேஷ்வாவின் படைகளை வீழ்த்தியவர்?

a) கனோஜி ஆங்கிரே

b) ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டோன்

c) நானா சாகிப்

**d) ஜெனரல் ஸ்மித்**

**விளக்கம்: ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பாஜி ராவ் ஓடிக்கொண்டே இருந்தார். அவரது படைகளை அஸ்தா, கிர்க்கி, கோர்கான் ஆகிய பகுதிகளில் ஜெனரல் ஸ்மித் வீழ்த்தினார். 1818ஆம் ஆண்டு பாஜி ராவ் எல்பின்ஸ்டன்னிடம் சரணடைந்தார்.**

117) கீழ்க்கண்டவற்றுள் மூன்றாம் ஆங்கிலேய-மராத்தியப் போரின் விளைவுகள் எவை?

a) மூன்றாம் ஆங்கிலேய-மராத்தியப் போரின் விளைவுகள் : பேஷ்வா முறையை ரத்து செய்த ஆங்கிலேயர்கள் அனைத்து பேஷ்வா பகுதிகளையும் இணைத்துக் கொண்டனர்.

b) உரிமைப்படி ஜாகீர்களைக் கொண்டிருந்தவர்களின் நிலம் அவர்களுக்கே வழங்கப்பட்டது.

c) இரண்டாம் பாஜி ராவ் 1851இல் மரணமடையும் வரை வருடாந்திர ஒய்வூதியத்தின் கீழ் சிறைக்கைதியாகவே விளங்கினார்.

**d) இவை அனைத்தும்**

**விளக்கம்: மூன்றாம் ஆங்கிலேய-மராத்தியப் போரின் விளைவுகள் : பேஷ்வா முறையை ரத்து செய்த ஆங்கிலேயர்கள் அனைத்து பேஷ்வா பகுதிகளையும் இணைத்துக் கொண்டனர். உரிமைப்படி ஜாகீர்களைக் கொண்டிருந்தவர்களின் நிலம் அவர்களுக்கே வழங்கப்பட்டது. இரண்டாம் பாஜி ராவ் 1851இல் மரணமடையும் வரை வருடாந்திர ஒய்வூதியத்தின் கீழ் சிறைக்கைதியாகவே விளங்கினார்.**

118) கீழ்க்கண்டவற்றுள் மூன்றாம் ஆங்கிலேய-மராத்தியப் போரின் விளைவுகளுள் அல்லாதது?

a) பேஷ்வாவின் வழித்தோன்றலான பிரதாப் சிங் சதாராவிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு சிறிய அரசாங்கத்துக்கு அரசராக உருவாக்கப்பட்டார்.

b) இரண்டாம் பாஜிராவால் உருவாக்கப்பட்ட போன்ஸ்லே, ஹோல்கர், சிந்தியா ஆகியோரின் பகுதிகளை உள்ளடக்கிய மராத்திய கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.

c) பூனாவின் அரசபிரதிநிதியாக இருந்த மவுண்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டோன் பம்பாய் ஆளுநராக ஆனார்.

**d) a) மற்றும் b)**

**விளக்கம்:சிவாஜியின் வழித்தோன்றலான பிரதாப் சிங் சதாராவிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு சிறிய அரசாங்கத்துக்கு அரசராக உருவாக்கப்பட்டார். ◼ முதலாம் பாஜிராவால் உருவாக்கப்பட்ட போன்ஸ்லே, ஹோல்கர், சிந்தியா ஆகியோரின் பகுதிகளை உள்ளடக்கிய மராத்திய கூட்டமைப்பு கலைக்கப்பட்டது. ◼ பூனாவின் அரசபிரதிநிதியாக இருந்த மவுண்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டோன் பம்பாய் ஆளுநராக ஆனார்.**

119) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பேஷ்வா (முதன்மை அமைச்சர்) என்பவர் சிவாஜியின் அஷ்டபிரதானக் கட்டமைப்பில் ஒருவர்.

ii ) இது வாரிசு முறையில் மரபுவழியாகக் கிடைப்பது.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பேஷ்வாக்களின் கீழ் மராத்திய நிர்வாகம்: (1714-1818) பேஷ்வா (முதன்மை அமைச்சர்) என்பவர் சிவாஜியின் அஷ்டபிரதானக் கட்டமைப்பில் ஒருவர். இது வாரிசு முறையில் மரபுவழியாகக் கிடைப்பது அல்ல. அரசரின் அதிகாரமும் பெருமையும் குறைந்த நிலையில் பேஷ்வாக்கள் முக்கியத்துவம் பெற்றனர்.**

120) பேஷ்வாவின் பதவியைச் சிறப்புமிக்கதாகவும் மரபுவழி சார்ந்ததாகவும் மாற்றியவர்?

a) மாதவ் ராவ்

b) இரண்டாம் பாஜி ராவ்

**c) பாலாஜி விஸ்வநாத்**

d) முதலாம் பாஜிராவ்

**விளக்கம்:பாலாஜி விஸ்வநாத்தின் புத்திக்கூர்மை (1713-1720) பேஷ்வாவின் பதவியைச் சிறப்புமிக்கதாகவும் மரபுவழி சார்ந்ததாகவும் மாற்றியது. அரசரின் அதிகாரங்களைப் பயன்படுத்தி முழு நிர்வாகத்தையும் பேஷ்வாக்கள் கட்டுப்படுத்தினார்கள். அரசின் மதத் தலைமையாகவும் அவர்கள் அங்கீகரிக்கப்பட்டனர்.**

121) மராத்திய நிர்வாகத்தின் மையம் எங்கிருந்து செயல்பட்டது?

**a) பூனா**

b) சதாரா

c) ராய்கர்

d) கோல்ஹாபூர்

**விளக்கம்: மராத்திய நிர்வாகத்தின் மையம் பூனாவிலிருந்த பேஷ்வா தலைமைச் செயலகமாகும். அனைத்து மாவட்டங்களின் வரவுசெலவுகளையும் இந்த மையம் கவனித்துக் கொண்டது. கிராமம் மற்றும் மாவட்ட அதிகாரிகள் சமர்ப்பித்த கணக்குகளையும் அது ஆராய்ந்தது.**

122) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) அனைத்து நிலைகளைச் சேர்ந்த அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் உரிமைகள், சிவில், இராணுவம் மற்றும் மதத்தலைவர்களின் வரவு செலவுகளும் நிர்வாக மையத்தில் கையாளப்பட்டன.

ii ) அனைத்து வருவாய்கள், அனைத்து மான்யங்கள், ஆளுகையின் கீழ் இருந்த வெளிநாட்டுப் பகுதிகளிலிருந்து வசூலிக்கப்பட்ட தொகை அனைத்தும் தினசரி பதிவேட்டில் பராமரிக்கப்பட்டன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சமர்ப்பித்த கணக்குகளையும் அது ஆராய்ந்தது. அனைத்து நிலைகளைச் சேர்ந்த அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் உரிமைகள், சிவில், இராணுவம் மற்றும் மதத்தலைவர்களின் வரவு செலவுகளும் கையாளப்பட்டன. அனைத்து வருவாய்கள், அனைத்து மான்யங்கள், ஆளுகையின் கீழ் இருந்த வெளிநாட்டுப் பகுதிகளிலிருந்து வசூலிக்கப்பட்ட தொகை அனைத்தும் தினசரி பதிவேட்டில் பராமரிக்கப்பட்டன.**

123) பெரிய மாகாணங்களை ஆட்சி செய்த மாகாண ஆளுநர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

**a) சர்-சுபாஷ்தார்கள்**

b) மம்லத்தார்

c) காமாவிஸ்தார்

d) தேஷ்பாண்டே

**விளக்கம்: பேஷ்வாக்களின் கீழ் மாகாணங்கள் பல்வேறு அளவுகளில் இருந்தன. பெரிய மாகாணங்கள் "சர்-சுபாஷ்தார்கள்" என்றழைக்கப்பட்ட மாகாண ஆளுநர்களின் கீழ் இருந்தன. மாகாணங்களின் கீழ் இருந்த மண்டலங்கள் சுபாக்கள் மற்றும் பிராந்துகள் என்று அழைக்கப்பட்ட ன.**

124) மாவட்டங்களில் பேஷ்வாக்களின் பிரதிநிதிகளாக விளங்கியவர்?

**a) மம்லத்தார்**

b) தேஷ்முக்

c) தேஷ்பாண்டே

d) பகிர்கர்

**விளக்கம்: மம்லத்தார், காமாவிஸ்தார் ஆகியோர் மாவட்டங்களில் பேஷ்வாக்களின் பிரதிநிதிகளாக விளங்கினார்கள். ஒவ்வொரு மாவட்டத்தின் நிர்வாகமும் அவர்களின் பொறுப்பில் இருந்தது. தேஷ்முக், தேஷ்பாண்டே ஆகியோர் மாவட்ட அளவில் கணக்குகளைக் கவனித்துக்கொண்ட அதிகாரிகளாகவும், மம்லத்தார்கள், காமவிஸ்தார்கள் ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பவர்களாகவும் விளங்கினார்கள். கணக்குகளைச் சரிவரக் கண்காணிக்கும் நடைமுறைச் செயல்பாட்டில் இருந்தது.**

125) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பொதுப் பணம் தவறாகக் கையாளப்படுவதைத் தடுக்கும் வகையில் மராத்திய அரசு பெரும் தொகையை ரசத் என்ற பெயரில் முன் பணமாக மம்லத்தார்கள் மற்றும் இதர அதிகாரிகளிடமிருந்து வசூலித்தது.

ii ) எழுத்தர்களுக்கும் இதர அடிநிலை ஊழியர்களுக்கும் ஆண்டில் 10 அல்லது 11 மாதங்கள் ஊதியம் வழங்கப்பட்டது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பொதுப் பணம் தவறாகக் கையாளப்படுவதைத் தடுக்கும் வகையில் மராத்திய அரசு பெரும் தொகையை ரசத் என்ற பெயரில் முன் பணமாக மம்லத்தார்கள் மற்றும் இதர அதிகாரிகளிடமிருந்து வசூலித்தது. மாவட்டத்தில் முதன்முறையாக நியமனம் பெற்ற உடன் இது வசூலிக்கப்பட்டது. இரண்டாவது பாஜி ராவின் காலகட்டத்தில் இந்த அலுவலகங்கள் ஏலத்துக்கு விடப்பட்டன. எழுத்தர்களுக்கும் இதர அடிநிலை ஊழியர்களுக்கும் ஆண்டில் 10 அல்லது 11 மாதங்கள் ஊதியம் வழங்கப்பட்டது.**

126) மராத்திய நிர்வாகத்தில் தலைமை கிராம அதிகாரியாக விளங்கியவர் யார்?

**a) பட்டேல்கள்**

b) குல்கர்னி

c) ஹஜாரிகள்

d) கொத்வால்

**விளக்கம்:நிர்வாகத்தின் அடிப்படைப் பிரிவாகக் கிராமம் திகழ்ந்தது. அது தன்னிறைவும் சுயசார்பும் உடையதாக இருந்தது. பட்டேல் தலைமை கிராம அதிகாரியாக விளங்கினார். அவர் அரசின் வருவாயை மத்திய அரசுக்கு அனுப்பும் பொறுப்பை ஏற்றிருந்தார். அவருக்கு அரசு ஊதியம் தரவில்லை. ஆனால் அவரது பதவி மரபுவழி சார்ந்ததாக இருந்தது.**

127) மராத்திய நிர்வாகத்தில் பட்டேலுக்கு உதவியாக செயல்பட்டவர் யார்?

a) பட்டேல்கள்

**b) குல்கர்னி**

c) கொத்வால்

d) ஹவில்தார்கள்

**விளக்கம்: பட்டேலுக்கு உதவியாகக் குல்கர்னி அல்லது கணக்காளர் மற்றும் ஆவணக்காப்பாளர் இருந்தார். மதச்சடங்குகளை நடத்த வேண்டிய மரபுவழியாக வந்த கிராம சேவகர்களாக அவர்கள் விளங்கினார்கள். தச்சர், கொல்லர் மற்றும் இதரகிராமத் தொழில் சார்ந்தவர்கள் கட்டாய வேலையைச் (பேகர்) செய்தனர்.**

128) நகரங்களிலும் மாநகரங்களிலும் தலைமை அதிகாரி எவ்வாறு அழைக்கப்பட்டார்?

a) பட்டேல்கள்

b) குல்கர்னி

**c) கொத்வால்**

d) ஹவில்தார்கள்

**விளக்கம்: நகரங்களிலும் மாநகரங்களிலும் தலைமை அதிகாரி கொத்வால் என்று அழைக்கப்பட்டார். சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, விலைவாசியை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வது, சிவில் வழக்குகளைத் தீர்த்துவைப்பது, மாதாந்திரக் கணக்குகளை அரசுக்கு அனுப்புவது ஆகியன அவரது முக்கியப் பணிகளாக இருந்தன. நகரக் காவல்துறையின் தலைவராகவும் நீதிபதியாகவும் அவர் செயல்பட்டார்.**

129) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சிவாஜியின் ஆட்சியில் பின்பற்றப்பட்ட, விவசாய உற்பத்திப் பொருள்களைப் பகிர்ந்து கொள்ளும் நடைமுறையைப் பேஷ்வாக்கள் கைவிட்டனர்.

ii ) அரசுக்கு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகை என்ற வகையில் நிலம் வழங்கப்பட்டிருந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: நில வருவாய்தான் முக்கிய வருவாயாக இருந்தது. சிவாஜியின் ஆட்சியில் பின்பற்றப்பட்ட, விவசாய உற்பத்திப் பொருள்களைப் பகிர்ந்து கொள்ளும் நடைமுறையைப் பேஷ்வாக்கள் கைவிட்டனர். நில வரியை வசூலிக்க குத்தகை நடைமுறையைப் பின்பற்றினார்கள். அரசுக்கு ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகை என்ற வகையில் நிலம் வழங்கப்பட்டிருந்தது. நிலத்தின் உற்பத்தித் திறன் சார்ந்து வரிகள் நிர்ணயம் செய்யப்பட்டன.**

130) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) கட்டணத்தின் பேரில் மரங்களை வெட்டுவதற்கும், மேய்ச்சல் வெளிகளைப் பயன்படுத்தவும் உரிமங்கள் வழங்கப்பட்டன.

ii ) புல், மூங்கில், எரிபொருள், தேன் போன்ற பொருட்களை விற்பதன் மூலமும் வருவாய் கிடைத்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: காடுகளிலிருந்து வருவாய் கிடைத்தது. கட்டணத்தின் பேரில் மரங்களை வெட்டுவதற்கும், மேய்ச்சல் வெளிகளைப் பயன்படுத்தவும் உரிமங்கள் வழங்கப்பட்டன. புல், மூங்கில், எரிபொருள், தேன் போன்ற பொருட்களை விற்பதன் மூலமும் வருவாய் கிடைத்தது.**

131) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பயிர் வகைகள், நீர்ப்பாச ன வசதிகள், நிலத்தின் உற்பத்தித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நிலம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்ட து.

ii ) உயர் நிர்வாகத்திடம் அவர்களின் உரிமைகளை எடுத்துரைக்க குல்கர்னி மூலமாக மட்டுமே முடிந்தது.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சரியான புள்ளி விவரங்கள் அடிப்படையில் கவனத்துடன் வருவாய் மதிப்பீடு செய்யப்பட்டது. பயிர் வகைகள், நீர்ப்பாச ன வசதிகள், நிலத்தின் உற்பத்தித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நிலம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்ட து. கிராமத்தினர் பூர்வக்குடிகளாக இருந்தனர். அவர்களின் வசம் காடுகள் இருந்தன. அவர்களிடமிருந்து நிலத்தைப் பிரிப்பது முடியாத செயல். உயர் நிர்வாகத்திடம் அவர்களின் உரிமைகளை எடுத்துரைக்கப் பட்டேல் மூலமாக மட்டுமே முடிந்தது.**

132) சௌத் என்பது கீழ்க்கண்ட எந்த வகையில் பிரிக்கப்பட்டிருந்தது?

a) ஆட்சியாளருக்கு 35%, இராணுவத் தளபதிகளுக்கு 56%, பண்டிட் சச்சீவுக்கு 3%, வரி வசூல் செய்வோருக்கு 6%.

**b) ஆட்சியாளருக்கு 25%, இராணுவத் தளபதிகளுக்கு 66%, பண்டிட் சச்சீவுக்கு 6%, வரி வசூல் செய்வோருக்கு 3%.**

c) ஆட்சியாளருக்கு 20%, இராணுவத் தளபதிகளுக்கு 60%, பண்டிட் சச்சீவுக்கு 16%, வரி வசூல் செய்வோருக்கு 4%.

d) ஆட்சியாளருக்கு 25%, இராணுவத் தளபதிகளுக்கு 66%, பண்டிட் சச்சீவுக்கு 9%, வரி வசூல் செய்வோருக்கு 1%.

**விளக்கம்:சௌத் மற்றும் சர்தேஷ்முகி ஆகியன இதர வருவாய் ஆதாரங்களாக விளங்கின. சௌத் என்பது கீழ்க்கண்ட வகையில் பிரிக்கப்பட்டிருந்தது  ஆட்சியாளருக்கு 25 சதவீதம்  மராத்திய அதிகாரிகள் மற்றும் படைகளைப் பராமரிப்பதற்காக இராணுவத் தளபதிகளுக்கு 66 சதவீதம்  பிறப்பில் பிராமணராகவும் தலைவராகவும் உள்ள பண்டிட் சச்சீவுக்கு 6 சதவீதம்  வரி வசூல் செய்வோருக்கு 3 சதவீதம்.**

133) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) அரசுக்குக் காப்புரிமைத் தொகை செலுத்தி அதற்கான உரிமத்தைப் பெற்ற பிறகு பொற்கொல்லர் நாணயங்களை உருவாக்கித் தந்தார்கள்.

ii ) அனைத்துத் தனியார் நாணயத் தொழிற்சாலைகளும் 1760இல் மூடப்பட்டு ஒரே ஒரு மத்திய நாணயத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சுங்கம், கலால் வரி, வனப்பொருட்களின் விற்பனை, ஆகியன மூலமாகவும் வருவாய் கிடைத்தது. அரசுக்குக் காப்புரிமைத் தொகை செலுத்தி அதற்கான உரிமத்தைப் பெற்ற பிறகு பொற்கொல்லர் நாணயங்களை உருவாக்கித் தந்தார்கள். ஒரு குறிப்பிட்ட தரநிலையைப் பராமரித்தனர். தரநிலை பின்பற்றப்படுவதில் முறைகேடுகள் இருந்ததால் அனைத்துத் தனியார் நாணயத் தொழிற்சாலைகளும் 1760இல் மூடப்பட்டு ஒரே ஒரு மத்திய நாணயத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது.**

134) பின்வருவனவற்றுள் மராத்தியர் காலத்தில் விதிக்கப்பட்ட வரிகள் எவை?

a) தேஷ்முக்கு, தேஷ்பாண்டே வைத்திருந்த நிலத்தின் மீதான வரி

b) கிராம மகர்கள் வைத்திருந்த நிலத்தின் மீதான வரி

c) கிணற்றுப் பாசன வசதி கொண்ட நிலத்தின் மீதான வரி.

**d) இவை அனைத்தும்**

**விளக்கம்: வேறு வரிகளும் வசூலிக்கப்பட்டன. 1. தேஷ்முக்கு, தேஷ்பாண்டே வைத்திருந்த நிலத்தின் மீதான வரி. 2. கிராம மகர்கள் வைத்திருந்த நிலத்தின் மீதான வரி. 3. கிணற்றுப் பாசன வசதி கொண்ட நிலத்தின் மீதான வரி. 4. பிராமணர்கள் மற்றும் கிராம அதிகாரிகள் தவிர்த்து மற்றவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வீட்டு வரி. 5. எடைக் கற்கள் மற்றும் அளவைகளைச் சோதிப்பதற்கான வருடாந்திரக் கட்டணம்.**

135) பின்வருவனவற்றுள் மராத்தியர் காலத்தில் விதிக்கப்பட்ட வரிகளுள் அல்லாதது?

a) விதவைகள் மறுமணத்துக்கான வரி

b) செம்மறி ஆடு, எருமை மாடு மீதான வரி

c) மேய்ச்சல் நில வரி

**d) குழந்தைப்பேறு வரி**

**விளக்கம்: 6. விதவைகள் மறுமணத்துக்கான வரி. 7. செம்மறி ஆடு, எருமை மாடு மீதான வரி. 8. மேய்ச்சல் நில வரி. 9. நதிக் கரையோரங்களில் பூசணி விவசாயத்துக்கான வரி 10. வாரிசு உரிமை வரி, 11. குதிரைகளை விற்பதற்கான வரி மற்றும் பல.**

136) வரி செலுத்துபவரின் ஒருவருட வருமானத்துக்குச் சமமான வரியாக வசூலிக்கப்பட்ட வரி?

**a) குர்ஜா பட்டி**

b) பகிர்கர்

c) சவுத்

d) சர்தேஷ்முக்

**விளக்கம்: மராத்திய அரசு நிதிச்சிக்கலிலிருந்த போது அனைத்து நில உடைமையாளர்களுக்கும் வரி விதித்தது. வரி செலுத்துபவரின் ஒருவருட வருமானத்துக்குச் சமமான வரியாக குர்ஜா பட்டி அல்லது தஸ்தி பட்டி வசூலிக்கப்பட்டது. நீதி பரிபாலனமும் வருவாயை ஈட்டித்தந்தது. பணப் பத்திரங்களின் மீது 25 சதவிகித கட்டணம் வசூலிக்கப்பட்டது. தகாத உறவில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அல்லது சந்தேகத்துக்கு உட்பட்ட நபர்களிடமிருந்து அபராதம் வசூலிக்கப்பட்டது. சொந்தப் பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான தீர்வையிலிருந்து பிராமணர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது.**

137) காவலர்களாக ஒவ்வொரு கிராமத்திலும் பணியில் ஈடுபட்டவர்கள் யாவர்?

a) பட்டேல்கள்

b) ஜமால்தார்

**c) மகர்கள்**

d) ஹவில்தார்கள்

**விளக்கம்: 'மகர்கள்' காவலர்களாக ஒவ்வொரு கிராமத்திலும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் குற்றங்கள் அதிகரித்தபோது ஆயுதங்களைப் பயன்படுத்தி குற்றங்களைக் கட்டுப்படுத்த காலாட்படையை அரசு அனுப்பியது. ஆயுதப்படைகளைப் பராமரிப்பதற்கான செலவுகளை மேற்கொள்வதற்காக குடியிருப்பு வாசிகளுக்குக் கூடுதலாக வீட்டு வரி விதிக்கப்பட்டது. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து பறிமுதல் செய்வதற்காகக் கூடுதலாகக் காவல்துறை அதிகாரிகளை இரண்டாம் பாஜி ராவ் நியமனம் செய்தார்.**

138) கீழ்க்கண்டவற்றுள் கொத்வாலின் பணிகள் எவை?

a) விலைகளைக் கண்காணிப்பது

b) சிவில் வழக்குகளை விசாரிப்பது

c) மக்கள் தொகைக் கணக்கெடுப்பு

**d) இவை அனைத்தும்**

**விளக்கம்: நகரப் பகுதிகளில் கொத்வாலுக்கு நீதி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. விலைகளைக் கண்காணிப்பது, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, சிவில் வழக்குகளை விசாரிப்பது, அரசுக்குத் தொழிலாளர்களை வழங்குவது, காவல்துறை கண்காணிப்பாளர்**

**அல்லது நகர்காவுக்கு தங்களது பணிகளை மேற்கொள்ள கட்டணங்களை விதிப்பது ஆகியன கொத்வா லின் கூடுதல் பணிகளாகும்.**

139) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) நீதித்துறை முறைப்படுத்தப்பட்டதாக இல்லை, சமரசப் பேச்சுவார்த்தைக்கு முன்னுரிமை தரப்பட்டது.

ii ) பஞ்சாயத்து என்பது மிகவும் சக்திவாய்ந்த நிறுவனமாகும்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: நீதித்துறை முறைப்படுத்தப்பட்டதாக இல்லை. முறைப்படுத்திய சட்டம் ஏதும் இல்லை. பின்பற்றப்பட வேண்டிய சட்ட வழிமுறைகளும் இல்லை. சமரசப் பேச்சுவார்த்தைக்கு முன்னுரிமை தரப்பட்டது. அது தவறினால் அந்த வழக்கு கிராமத்தின் பட்டேல் மற்றும் நகரங்களில்முன்னணி வர்த்தகர்கள் அடங்கிய பஞ்சாயத்தின் முடிவுக்கு விடப்பட்டது. பஞ்சாயத்து என்பது மிகவும் சக்திவாய்ந்த நிறுவனமாகும். மறுவிசாரணையும் நடந்தது.**

140) கிரிமினல் வழக்குகளில் நீதித்துறை அதிகாரிகளின் சரியான படிநிலையை தேர்ந்தெடு.

**a) ராஜா > பேஷ்வா > துணை சுபாதார் > பட்டேல்**

b) ராஜா > துணை சுபாதார் > பேஷ்வா > பட்டேல்

c) பேஷ்வா > பட்டேல் > ராஜா > துணை சுபாதார்

d) பேஷ்வா > துணை சுபாதார் > பட்டேல் > ராஜா

**விளக்கம்: மம்லத்தாரிடம் மேல்முறையீடுகள் செய்யப்பட்டன. கிரிமினல் வழக்குகளில் நீதித்துறை அதிகாரிகளின் படிநிலை இருந்தது. ராஜா, சத்ரபதி தலைமைப் பொறுப்பிலும் அவருக்குக் கீழ் பேஷ்வா, துணை சுபாதார், பட்டேல் ஆகியோர் இருந்தனர். சாட்டையால் அடிப்பது, துன்புறுத்துவது ஆகியவற்றைப் பயன்படுத்தி குற்றம் ஒப்புக்கொள்ள வைக்கப்பட்டது.**

141) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பேஷ்வாக்களின் கீழ் மராத்திய இராணுவ அமைப்பு முகலாய இராணுவ அமைப்பை போன்று அமைக்கப்பட்டது.

ii ) சிவாஜி பின்பற்றிய இராணுவ அமைப்பின் முக்கிய அம்சங்களைப் பேஷ்வாக்கள் பின்பற்றவில்லை.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பேஷ்வாக்களின் கீழ் மராத்திய இராணுவ அமைப்பு முகலாய இராணுவ அமைப்பை போன்று அமைக்கப்பட்டது. ஆட்சேர்ப்பு, ஊதியம் வழங்குவது, படைவீரர்களின் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குவது, குதிரைப்படைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் ஆகியன முகலாய இராணுவ அமைப்பைப் போன்று இருந்தது. சிவாஜி பின்பற்றிய இராணுவ அமைப்பின் முக்கிய அம்சங்களைப் பேஷ்வாக்கள் பின்பற்றவில்லை.**

142) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்திய பகுதிகளிலிருந்து சிவாஜி படைவீரர்களைத் தேர்ந்தெடுத்தார்.

ii ) பேஷ்வாக்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அனைத்து வ கு ப் பு க ளி லி ரு ந் து ம் ( ப ழ ங் கு டி யி ன ர் உட்பட) படைவீரர்களைச் சேர்த்தனர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: மராத்திய பகுதிகளிலிருந்து சிவாஜி படைவீரர்களைத் தேர்ந்தெடுத்தார். ஆனால் பேஷ்வாக்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அனைத்து வ கு ப் பு க ளி லி ரு ந் து ம் ( ப ழ ங் கு டி யி ன ர் உட்பட) படைவீரர்களைச் சேர்த்தனர். அராபியர், அபிசீனியர், ரஜபுத்திரர், சீக்கியர் ஆகியோர் பேஷ்வாவின் இராணுவத்தில் இடம்பெற்றிருந்தனர். பேஷ்வாக்களின் இராணுவத்தில் பழமையான தலைவர்களின் படைவீரர்கள் இடம் பெற்றிருந்தனர். எதிரி தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இடம் அந்தப் பகுதியிலேயே இருந்ததால் அதிக அளவில் உட்குழப்பங்கள் இருந்தன. இதனால் மராத்திய அரசின் மக்களிடையேயான இறையாண்மை பாதிக்கப்பட்டது**

143) மராத்திய இராணுவத்தின் முக்கிய பலமாகக் கருதப்பட்டது எது?

a) காலாட்படை

**b) குதிரைப்படை**

c) ஆயுதப்படை

d) பீரங்கிப்படை

**விளக்கம்: மராத்திய இராணுவத்தின் முக்கிய பலமாகக் குதிரைப்படை இயல்பாகவே அமைந்தது. ஒவ்வொரு ஜாகீர்தாரும் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் குதிரைப்படை வீரர்களைப் பொதுச் சேர்க்கைக்குக் கொண்டு வரவேண்டும். அவர்கள் வைத்திருந்த குதிரைகளின் தரத்தை வைத்து மூன்று வகைகளாக அவர்கள் பிரிக்கப்பட்டனர்.**

144) எந்தப்படையில் சேவை புரிய மராத்தியர் அதிக ஆர்வம் காட்டினார்கள்?

a) காலாட்படை

**b) குதிரைப்படை**

c) ஆயுதப்படை

d) பீரங்கிப்படை

**விளக்கம்:காலாட்படையும் ஆயுதப்படையும்: குதிரைப்படையில் சேவை புரிய மராத்தியர் அதிக ஆர்வம் காட்டினார்கள். எனவே, காலாட்படைக்கு நாட்டின் இதரப் பகுதிகளிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது.**

145) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மராத்திய வீரர்களுடன் ஒப்பிடுகையில் மராத்திய காலாட்படையிலிருந்த அராபியர், ரோகில்லாக்கள், சீக்கியர், சிந்திக்கள் ஆகியோருக்கு அதிக ஊதியம் வழங்கப்பட்ட து.

ii ) மராத்திய ஆயுதப்படையில் பெரிதும் போர்த்துகீசியரும் இந்தியக் கிறித்தவர்களும் இடம் பெற்றிருந்தனர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: மராத்திய வீரர்களுடன் ஒப்பிடுகையில் மராத்திய காலாட்படையிலிருந்த அராபியர், ரோகில்லாக்கள், சீக்கியர், சிந்திக்கள் ஆகியோருக்கு அதிக ஊதியம் வழங்கப்பட்ட து. மராத்திய ஆயுதப்படையில் பெரிதும் போர்த்துகீசியரும் இந்தியக் கிறித்தவர்களும் இடம் பெற்றிருந்தனர். பிறகு ஆங்கிலேயர்களும் இடம்பெற்றனர்.**

146) கொங்கணம், கண்டேரி, விஜயதுர்க் ஆகிய இடங்களில் கடற்படைத் தளங்களைக் கட்டியவர்?

a) மாதவ் ராவ்

b) இரண்டாம் பாஜி ராவ்

**c) பாலாஜி விஸ்வநாத்**

d) முதலாம் பாஜிராவ்

**விளக்கம்: மராத்தியத் துறைமுகங்களைப் பாதுகாக்கும் பொருட்டு மராத்திய கடற்படை உருவாக்கப்பட்டது. கடற்கொள்ளையைக் கட்டுப்படுத்துவது, கப்பல் போக்குவரத்தில் சுங்க வரிகளை வசூலிப்பது ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டன. பாலாஜி விஸ்வநாத் கொங்கணம், கண்டேரி, விஜயதுர்க் ஆகிய இடங்களில் கடற்படைத் தளங்களைக் கட்டினார். கப்பல் கட்டவும் சீர்செய்யவும் வசதிகள் மேம்படுத்தப்பட்டன.**

147) தனது ஆட்சிக்காலத்தில் நயங்காரா அமைப்பை உருவாக்கியவர் யார்?

**a) கிருஷ்ணதேவராயர்**

b) ஔரங்கசீப்

c) சிவாஜி

d) திருமலை நாயக்கர்

**விளக்கம்: தமிழ்நாட்டில் மராத்தியரின் ஆட்சி நிறுவப்படுவதற்கான சூழ்நிலைகள்: கிருஷ்ணதேவராயர் தனது ஆட்சிக்காலத்தில் (1509-1529) நயங்காரா அமைப்பை உருவாக்கினார். இதன்படி தமிழகம் செஞ்சி, தஞ்சாவூர், மதுரை என மூன்று மிகப்பெரிய நயங்காராக்களாக பிரிக்கப்பட்டது. இந்த புதிய முறைப்படி துணைத் தலைவர்கள் பாளையக்காரர்களாக நியமிக்கப்பட்டனர். பாளையங்கள் அவர்களின் கட்டுப்பாட்டிலிருந்தன.**

148) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சோழ சாம்ராஜ்யத்தின் பகுதியாக முதலிலிருந்த தஞ்சாவூர் பிறகு பாண்டிய அரசின் பகுதியாக உருவானது.

ii ) இது மதுரை சுல்தானியத்தின் பகுதியாக உருவெடுத்தது. கடைசியில் நாயக்கர் கைகளுக்குச் சென்றது

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சோழ சாம்ராஜ்யத்தின் பகுதியாக முதலிலிருந்த தஞ்சாவூர் பிறகு பாண்டிய அரசின் பகுதியாக உருவானது. பின்னர் இது மதுரை சுல்தானியத்தின் பகுதியாக உருவெடுத்தது. கடைசியில் நாயக்கர் கைகளுக்குச் சென்றது.**

149) செஞ்சிக்கு எதிரான முகலாயத் தாக்குதலில் செஞ்சிக்கோட்டையின் கிலாதாராக பணியில் அமர்த்தப்பட்டவர்?

**a) சுவரூப் சிங்**

b) ராஜா தேசிங்கு

c) ராஜாராம்

d) கங்காதர ராவ்

**விளக்கம்: ராஜா தேசிங்கு: மராத்திய அரசர் ராஜாராம் முகலாயப் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக ராய்கரிலிருந்து தப்பியோடி செஞ்சியில் அடைக்கலம் புகுந்தார். படைத்தளபதி சுல்பிகர்கான் தலைமையிலும், பின்னர் தாவுத்கான் தலைமையிலும் அவரைத் தொடர்ந்து சென்ற முகலாயப் படைகள் செஞ்சியைக் கைப்பற்றின. செஞ்சிக்கு எதிரான முகலாயத் தாக்குதலில் பன்டேலா ரஜபுத்திர தலைவர் சுவரூப் சிங் செஞ்சிக்கோட்டையின் (கோட்டை இராணுவத்தின் தலைவர்) கிலாதாராக 1700இல் பணியில் அமர்த்தப்பட்டார்.**

150) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) முகலாய மன்னருக்குக் கப்பம் கட்டமறுத்ததை அடுத்து நவாப் சதத்-உல்-லா கானின் கோபத்திற்கு ராஜா தேசிங்கு ஆளானார்.

ii ) ராஜா தேசிங்கு நவாபுக்கு எதிராக வெளிப்படுத்திய வீரம் மக்களிடையே கதைப் பாடல்களாக உருவெடுத்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சுவரூப் சிங் செஞ்சி முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். 1714இல் அவர் மறைந்த பிறகு அவரது மகன் தேஜ் சிங் (தேசிங்கு) செஞ்சியின் ஆளுநராக பொறுப்பேற்றார். முகலாய மன்னருக்குக் கப்பம் கட்டமறுத்ததை அடுத்து நவாப் சதத்-உல்-லா கானின் கோபத்திற்கு ஆளானார். அதனைத் தொடர்ந்து நடந்த சண்டையில் 22 வயதே ஆன ராஜா தேசிங்கு கொல்லப்பட்டார். அவரது இள வயது மனைவி உடன்கட்டை ஏறினார். ராஜா தேசிங்கு நவாபுக்கு எதிராக வெளிப்படுத்திய வீரம் மக்களிடையே கதைப் பாடல்களாக உருவெடுத்தது.**

151) தஞ்சாவூரில் 1676இல் தன்னை அரசராக அறிவித்த மராத்திய தளபதி?

**a) வெங்கோஜி**

b) சாந்தாஜி

c) சரபோஜி

d) ஷாஜி

**விளக்கம்: மதுரை நாயக்கர் மற்றும் தஞ்சாவூர் நாயக்கரிடையே நிலவிய பகை கடைசியில் 1673இல் தஞ்சாவூரில் நாயக்க ஆட்சியை முடிவுறச் செய்தது. தஞ்சாவூரில் 1676இல் மராத்திய தளபதி வெங்கோஜி தன்னை அரசராக அறிவித்தார். இவ்வாறாக மராத்தியர் ஆட்சி தஞ்சாவூரில் துவங்கியது.**

152) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) கர்நாடகத்தின் மீது 1677இல் படையெடுத்த சிவாஜி சந்தாஜியை அகற்றிவிட்டுத் தனது ஒன்றுவிட்ட சகோதரர் வெங்கோஜியை அப்பதவியில் அமர்த்தினார்.

ii ) அவரது மறைவுக்குப் பிறகு அவரது மகன் சரபோஜி தஞ்சாவூரை ஆண்டார்.

a) (i) சரி

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

**d) (i) மற்றும் (ii) தவறு**

**விளக்கம்: கர்நாடகத்தின் மீது 1677இல் படையெடுத்த சிவாஜி வெங்கோஜியை அகற்றிவிட்டுத் தனது ஒன்றுவிட்ட சகோதரர் சந்தாஜியை அப்பதவியில் அமர்த்தினார். ஆனால் வெங்கோஜி மீண்டும் தஞ்சாவூரைக் கைப்பற்றினார். அவரது மறைவுக்குப் பிறகு அவரது மகன் ஷாஜி தஞ்சாவூரை ஆண்டார்.**

153) ஷாஜிக்கு பின் ஆட்சிக்கு வந்தவர்களைக் கால வரிசைப் படி எழுதவும்.

**a) சரபோஜி, துக்கோஜி, பிரதாப் சிங், துல்ஜாஜி**

b) பிரதாப் சிங், துல்ஜாஜி, சரபோஜி, துக்கோஜி

c) துல்ஜாஜி, சரபோஜி, துக்கோஜி, சரபோஜி

d) துக்கோஜி, பிரதாப் சிங், துல்ஜாஜி, சரபோஜி

**விளக்கம்: ஷாஜிக்கு வாரிசு இல்லாததால் அவரது சகோதரர் முதலாம் சரபோஜி அடுத்த ஆட்சியாளராக அமர்ந்தார். 1712 முதல் 1728 வரை 16 ஆண்டுகளுக்கு அவர் ஆட்சியில் இருந்தார். அவருக்குப் பிறகு துக்கோஜி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தார். அவரைத் தொடர்ந்து 1739 முதல் 1763 வரை பிரதாப் சிங் ஆட்சி புரிந்தார். பின்னர் அவரது மகன் துல்ஜாஜி 1787இல் ஆட்சியில் அமர்ந்தார்.**

154) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) பத்து வயதான இரண்டாவது சரபோஜி அரியணை ஏறி யபோது துல்ஜாஜியின் சகோதரர் அமர் சிங் ஆட்சியை நிர்வகித்தார்.

ii ) வாரிசு அரசியலை எதிர்த்த ஆங்கிலேயர் இரண்டாவது சரபோஜியின் மீது ஒப்பந்தம் ஒன்றை திணித்தனர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: அந்த ஆண்டில் பத்து வயதான இரண்டாவது சரபோஜி அரியணை ஏறினார். துல்ஜாஜியின் சகோதரர் அமர் சிங் ஆட்சியை நிர்வகித்தார். இந்த வாரிசு அரசியலை எதிர்த்த ஆங்கிலேயர் இரண்டாவது சரபோஜியின் மீது ஒப்பந்தம் ஒன்றை திணித்தனர். அதன் அடிப்படையில் இரண்டாம் சரபோஜி தனது அரசு நிர்வாகத்தை ஆங்கிலேயர் வசம் ஒப்படைக்க நேரிட்டது.**

155) தஞ்சாவூரை ஆண்ட மராத்திய போன்ஸ்லே சாம்ராஜ்யத்தின் கடைசி ஆட்சியாளர் யார்?

**a) இரண்டாம் சரபோஜி**

b) பிரதாப் சிங்

c) துல்ஜாஜி

d) துக்கோஜி

**விளக்கம்: இரண்டாம் சரபோஜிதஞ்சாவூரை ஆண்ட மராத்தியரின் போன்ஸ்லே சாம்ராஜ்யத்தின் கடைசி ஆட்சியாளராவார்.**

156) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) மேற்கத்திய அறிவியல் மற்றும் மருத்துவத்தைக் கையாளும் மருத்துவராக சரபோஜி திகழ்ந்தார்.

ii ) இரண்டாம் சரபோஜி ஃப்ரெட்ரிக் ஸ்வார்ட்ஸ் மூலமாகக் கல்வி பயின்றார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: இரண்டாம் சரபோஜி ஒரு தலைசிறந்த அரசர். ஜெர்மானிய சமய பரப்புக் குழுவை சேர்ந்த ஃப்ரெட்ரிக் ஸ்வார்ட்ஸ் மூலமாகக் கல்வி பயின்றபோதிலும், பலரும் எதிர்பார்த்தபடி, அவர் கிறித்தவ மதத்தை தழுவவில்லை. அதேபோல மேற்கத்திய அறிவியல் மற்றும் மருத்துவத்தைக் கையாளும் மருத்துவராக சரபோஜி திகழ்ந்தார். எனினும் இந்தியப் பாரம்பரியத்தை சிரத்தையுடன் அவர் பின்பற்றினார்.**

157) இரண்டாம் சரபோஜியின் அதிநவீனத் திட்டமாக இருந்தது எது?

a) ஒரு அச்சகத்தை நிறுவுவது

b) சரஸ்வதி மஹால் நூலகத்தை மேம்படுத்துவது

**c) அரசவை மூலம் நவீனப் பொதுப் பள்ளிகளை நிறுவி ஆங்கிலம் மற்றும் பிரதேச மொழிகளில் பாடங்கள் இலவசமாகக் கற்பிக்கப்பட வேண்டும்**

d) அன்னசத்திரங்கள் கட்டுதல்

**விளக்கம்: பல ஐரோப்பிய மொழிகளைக் கற்று நிபுணத்துவம் பெற்ற அவர் அனைத்து துறைகளைச் சார்ந்த புத்தகங்களைக் கொண்ட மிகப் பிரபலமான நூலகத்தை வைத்திருந்தார். ஒரு அச்சகத்தை நிறுவுவது சரபோஜியின் நவீனத் திட்டங்களில் ஒன்றாக இருந்தது. (இதுவே மராத்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளுக்கான முதலாவது அச்சகமாகும்). சரஸ்வதி மஹால் நூலகத்தை மேம்படுத்துவதும் அவரது திட்டங்களில் ஒன்றாக இருந்தது. அவரது அரசவை மூலம் நவீனப் பொதுப் பள்ளிகளை நிறுவி ஆங்கிலம் மற்றும் பிரதேச மொழிகளில் பாடங்கள் இலவசமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்பதுதான் அவரது அதிநவீனத் திட்டமாக இருந்தது.**

158) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சரஸ்வதி மஹால் நூலகம் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டு இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்ட து.

ii ) மராத்தி மொழியில் அமைந்த ஆவணங்கள் மோடி எழுத்து வடிவில் எழுதப்பட்டன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) (ii) தவறு

**விளக்கம்: சரஸ்வதி மஹால் நூலகம் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டு இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்ட து. மராத்திய அரசவையின் அன்றாட அலுவல்கள், 18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு- மராத்தியர் இடையே நடந்த கடிதப்போக்குவரத்து ஆகியன மோடி எழுத்துவடிவ ஆவணங்களாக அமைந்துள்ளன.**

159) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) தரங்கம்பாடி சமய பரப்புக்குழுவைச் சேர்ந்த அறிஞர் சி.எஸ். மார்க்ஸ் என்பவரைக் கல்வித் துறையின் முன்னோடியாக மன்னர் சரபோஜி கருதினார்.

ii ) பாடத்திட்டம் மற்றும் கல்விப்பயிற்றும் முறைகளில் அவர் நவீன முறைகளையும் மாணவர்களுக்கு உறைவிடப்பள்ளி முறையை அறிமுகம் செய்தார்.

a) (i) சரி

**b) (ii) சரி**

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: அவர் காலத்தில் வாழ்ந்த தரங்கம்பாடி சமய பரப்புக்குழுவைச் சேர்ந்த அறிஞர் சி.எஸ். ஜான் என்பவரைக் கல்வித் துறையின் முன்னோடியாக மன்னர் சரபோஜி கருதினார். ஜான், கல்வித் துறையில் புதிய பரிசோதனைகளையும் சீர்திருத்தங்களையும் மேற்கொண்டார். பாடத்திட்டம் மற்றும் கல்விப்பயிற்றும் முறைகளில் அவர் நவீன முறைகளையும் மாணவர்களுக்கு உறைவிடப்பள்ளி முறையை அறிமுகம் செய்தார்.**

160) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சென்னை ஆளுநர் தாமஸ் மன்றோ 1820ஆம் ஆண்டில் தொடக்கப் பொதுப்பள்ளிகளுக்கான ஒரு திட்டத்தை யோசனையாக கூறினார்.

ii ) கிறித்தவர் அல்லாத மாணவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வி கிடைக்காத சூழல் நிலவிய காலகட்டம் அதுவாகும்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: 1812இல் ஆங்கிலேய காலனி அரசுக்கு அவர் சமர்ப்பித்த முக்கியத் திட்டத்தில் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் இந்திய மாணவர்களுக்கு இலவசப் பள்ளிகளை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கிறித்தவர் அல்லாத மாணவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வி கிடைக்காத சூழல் நிலவிய காலகட்டம் அதுவாகும். சென்னை ஆளுநர் தாமஸ் மன்றோ 1820ஆம் ஆண்டில் தொடக்கப் பொதுப்பள்ளிகளுக்கான ஒரு திட்டத்தை யோசனையாக கூறினார்.**

161) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) கம்பெனி அரசு 1841ஆம் ஆண்டு வரை நவீனப் பள்ளிகளை உள்ளூர் குழந்தைகளுக்காகச் சென்னையில் ஏற்படுத்தவேவில்லை

ii ) ஜெர்மானிய சமயப்பரப்புக்குழு ஆங்கில வழி மற்றும் வட்டார மொழிப்பள்ளிகள் பலவற்றைத் தெற்கு மாகாணங்களில் 1707ஆம் ஆண்டு முதல் நடத்தியுள்ளனர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: கம்பெனி அரசு 1841ஆம் ஆண்டு வரை நவீனப் பள்ளிகளை உள்ளூர் குழந்தைகளுக்காகச் சென்னையில் ஏற்படுத்தவேவில்லை. இதற்கு மாறாக ஜெர்மானிய சமயப்பரப்புக்குழு ஆங்கில வழி மற்றும் வட்டார மொழிப்பள்ளிகள் பலவற்றைத் தெற்கு மாகாணங்களில் 1707ஆம் ஆண்டு முதல் நடத்தியுள்ளனர்.**

162) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) சரபோஜி, சமயபரப்புக்குழு மற்றும் காலனி அரசுக்கு முன்னோடியாக 1803ஆம் ஆண்டிலேயே தஞ்சாவூரில் கிறித்தவர்கள் அல்லாத உள்ளூர் குழந்தைகளின் கல்விக்காக முதலாவது நவீனப் பொதுப்பள்ளிகளை நிறுவினார்.

ii ) உயர் கல்வி நிறுவனங்களை இந்திய அரசர்கள் நடத்திய போதிலும் அவர்கள் தொடக்கப் பள்ளிகளை நடத்தியதில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சரபோஜி, சமயபரப்புக்குழு மற்றும் காலனி அரசுக்கு முன்னோடியாக 1803ஆம் ஆண்டிலேயே தஞ்சாவூரில் கிறித்தவர்கள் அல்லாத உள்ளூர் குழந்தைகளின் கல்விக்காக முதலாவது நவீனப்**

**பொதுப்பள்ளிகளை நிறுவினார். உயர் கல்வி நிறுவனங்களை இந்திய அரசர்கள் நடத்திய போதிலும் அவர்கள் தொடக்கப் பள்ளிகளை நடத்தியதில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது.**

163) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ஆதரவற்றவர்கள் மற்றும் ஏழை மாணவர்களுக்கு எனத் தஞ்சாவூர் மற்றும் இதர அண்டை இடங்களில் இலவச தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை நிறுவி நிர்வகித்தது மன்னர் சரபோஜியின் மிக முக்கியமான முன்முயற்சியாகும்.

ii ) அனைத்து நிலைகளிலான பள்ளிகள், நன்கொடைப் பள்ளிகள், கல்லூரிகள், சமஸ்கிருத உயர் கல்விக்கான பாடசாலைகள் ஆகியன அவற்றில் அடங்கும்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஆதரவற்றவர்கள் மற்றும் ஏழை மாணவர்களுக்கு எனத் தஞ்சாவூர் மற்றும் இதர அண்டை இடங்களில் இலவச தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை நிறுவி நிர்வகித்தது மன்னர் சரபோஜியின் மிக முக்கியமான முன்முயற்சியாகும். அனைத்து நிலைகளிலான பள்ளிகள், நன்கொடைப் பள்ளிகள், கல்லூரிகள், சமஸ்கிருத உயர் கல்விக்கான பாடசாலைகள் ஆகியன அவற்றில் அடங்கும். அரசவை மேன்மக்கள், வேத அறிஞர்கள், ஆதரவற்றோர், ஏழைகள் ஆக அனைவருக்கும் இந்தப் பள்ளிகள் சேவை புரிந்தன.**

164) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) புதிய அல்லது நவீன கல்வி முறைக்காக 'நவவித்யா' முறையை அரசவை நடத்திய இந்தப் பள்ளிகளில் அறிமுகம் செய்தது மற்றொரு முக்கிய முன்முயற்சியாகும்.

ii ) 1803இல் ஆண்டில் நிறுவப்பட்ட முக்தாம்பாள் சத்திரம் அரசரின் விருப்பமான அன்ன சத்திரமாகும்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: புதிய அல்லது நவீன கல்வி முறைக்காக 'நவவித்யா' முறையை அரசவை நடத்திய இந்தப் பள்ளிகளில் அறிமுகம் செய்தது மற்றொரு முக்கிய முன்முயற்சியாகும். 1803இல் ஆண்டில் நிறுவப்பட்ட முக்தாம்பாள் சத்திரம் அரசரின் விருப்பமான அன்ன சத்திரமாகும். அங்கு 1822 ஆம் ஆண்டில் இரண்டு வகுப்பறைகளில் காலையும் மாலையும் 15 ஆசிரியர்கள் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த மொத்தம் 464 மாணவர்களுக்குக் கற்பித்தனர்.**

165) மதப்பரப்பாளர்கள்  நடத்திய ஏழைக் கிறித்தவ மாணவர்களுக்கான பள்ளி எங்கு அமைந்திருந்தது?

**a) கண்ணந்தன்குடி**

b) செம்மங்குடி

c) கருந்தட்டான் குடி

d) மருதங்குடி

**விளக்கம்:மதப்பரப்பாளர்கள் கண்ணந்தன்குடியில் நடத்திய ஏழைக் கிறித்தவ மாணவர்களுக்கான பள்ளியையும் சரபோஜி ஆதரித்தார். அவரது வள்ளல் தன்மைக்குச் சான்றாக ஆதரவற்றோருக்கான பள்ளி விளங்கியது.**

166) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ஆளுநர் மன்றோவின் கல்விக் கணக்கெடுப்புக்காக உருவாக்கப்பட்ட 1823ஆம் ஆண்டின் அறிக்கைப்படி தஞ்சாவூர் முழுவதும் இருந்த 44 பள்ளிகளில் அரசவை மூலமாக 21 இலவச பள்ளிகள் நடத்தப்பட்டன.

ii ) சமயப் பரப்பாளர்கள் 19 பள்ளிகளையும், ஆலய நிர்வாகம் ஒரு பள்ளியையும் நடத்தின.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஆளுநர் மன்றோவின் கல்விக் கணக்கெடுப்புக்காக உருவாக்கப்பட்ட 1823ஆம் ஆண்டின் அறிக்கைப்படி தஞ்சாவூர் முழுவதும் இருந்த 44 பள்ளிகளில் அரசவை மூலமாக 21 இலவச பள்ளிகள் நடத்தப்பட்டன. சமயப் பரப்பாளர்கள் 19 பள்ளிகளையும், ஆலய நிர்வாகம் ஒரு பள்ளியையும் நடத்தின. ஆசிரியர்கள் தாங்களாகவே இலவசமாக மூன்று பள்ளிகளை நடத்தினார்கள். மிக முக்கியமான புனிதத்தல வழித்தடங்களில் அமைந்திருந்த பதிமூன்று சத்திரங்கள் மூலமாக யாத்ரிகர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவும் உறைவிட வசதியும் செய்து கொடுக்கப்பட்டது.**

167) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) ம னி தர்க ளு க்கா கவும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரித்த 'தன்வந்தரி மஹால்' என்ற ஆராய்ச்சி நிறுவனத்தை சரபோஜி நிறுவினார்.

ii ) நோயாளிகளின் ஆவணங்களைப் பராமரிக்கும் முறையும் அறிமுகம் செய்யப்பட்டது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: மனிதர்களுக்காகவும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரித்த 'தன்வந்தரி மஹால்' என்ற ஆராய்ச்சி நிறுவனத்தை சரபோஜி நிறுவினார். நோயாளிகளின் ஆவணங்களைப் பராமரிக்கும் முறையும் அறிமுகம் செய்யப்பட்ட து. நவீன மருத்துவர்கள், ஆயுர்வேதம், யுனானி, சித்த மருத்துவம் ஆகியவற்றின் மருத்துவர்கள் மருத்துவச் சிகிச்சைக்கான மருந்துகள் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டனர்.**

168) சரபோஜி மன்னர் உருவாக்கிய ஆராய்ச்சி புத்தகம் எத்தனை தொகுதிகளை உள்ளடக்கியது?

**a) 18**

b) 20

c) 22

d) 16

**விளக்கம்: 18 தொகுதிகள் அடங்கிய ஆராய்ச்சி புத்தகத்தையும் சரபோஜி மன்னர் உருவாக்கினார். பிரத்யேகமான கை ஓவியங்கள் மூலமாக முக்கிய மூலிகைகள் பற்றியத் தகவல்களை சரபோஜி பட்டியலிட்டுப் பாதுகாத்தார். நவீனக் கல்வி முறை தொடர்பான சரபோஜியின் புதிய முன்முயற்சிகள் தஞ்சாவூர் மேன்மக்களுக்கு அப்போதைய காலனி ஆதிக்கச் சமூக மற்றும் பொருளாதார முறைமைக்குள் நுழையவும் பயன்பெறவும் வழி செய்தன.**

169) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) அரசவை அதிகாரிகள் பெரும்பாலும் பிராமணர்களுக்கு ஐரோப்பிய பயன்பாட்டு அறிவு, தொழில்நுட்பங்கள், கலைகள், ஆகியவற்றில் பயிற்சி கிடைத்து அவர்கள் காலனி கால நவீனத்துவத்தின் முன்னணி முகவர்களாக மாறினார்கள்.

ii ) ஆங்கிலக் கல்வி கற்ற துபாஷிகள், எழுத்தர்கள், ஐரோப்பிய மற்றும் இந்திய அரசவைகளுக்கு இடையே மத்தியஸ்தம் செய்த இந்து மற்றும் கிறித்தவ மொழிபெயர்ப்பாளர்கள் பல பொறுப்புக்களை ஏற்க முடிந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: அரசவை அதிகாரிகள் பெரும்பாலும் பிராமணர்களுக்கு ஐரோப்பிய பயன்பாட்டு அறிவு, தொழில்நுட்பங்கள், கலைகள், ஆகியவற்றில் பயிற்சி கிடைத்து அவர்கள் காலனி கால நவீனத்துவத்தின் முன்னணி முகவர்களாக மாறினார்கள். ஆங்கிலக் கல்வி கற்ற துபாஷிகள், எழுத்தர்கள், ஐரோப்பிய மற்றும் இந்திய அரசவைகளுக்கு இடையே மத்தியஸ்தம் செய்த இந்து மற்றும் கிறித்தவ மொழிபெயர்ப்பாளர்கள் பல பொறுப்புக்களை ஏற்க முடிந்தது. சரபோஜி அரசவையின்**

**இரண்டு பண்டிதர்கள் கிழக்கிந்தியக் கம்பெனி நடத்திய புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியில் மொழிபெயர்ப்பு மற்றும் அச்சுக் கலாச்சாரத்தின் தலைவர்களாகத் திகழ்ந்தார்கள்.**

170) கீழ்க்கண்டவற்றுள் இரண்டாம் சரபோஜி எழுதாத புத்தகம் என்ன?

a) குமாரசம்பவ சம்பு

b) தேவேந்திர குறவஞ்சி

c) முத்ரராஷ்ஸ்சாயா

**d) குமாரசம்பவம்**

**விளக்கம்:சரபோஜி, ஜான் ஆகியோரின் வாழ்வியல் திட்டங்கள் காலனியாதிக்கத் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் வரலாற்றில் தனிநபர்களும், டேனிய-தமிழ் மீன்பிடி கிராமங்களைப் போன்ற இடங்களும், மராத்திய- தமிழ் இளவரசர் ஆட்சிப்பகுதியும் வகித்த பாத்திரத்தை படம்பிடித்துக் காட்டுகின்றன. பாரம்பரிய இந்தியக் கலைகளான நடனம் மற்றும் இசையை ஆதரிப்பதில் பெரும் கொடையாளராக சரபோஜி விளங்கினார். குமாரசம்பவ சம்பு, தேவேந்திர குறவஞ்சி, முத்ரராக்சஸ்யா ஆகிய புத்தகங்களையும் அவர் எழுதியுள்ளார்.**

171) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

i ) கர்நாடக இசையில் மேற்கத்திய இசைக்கருவிகளான கிளாரினட், வயலின் ஆகிய கருவிகளை சரபோஜி அறிமுகம் செய்தார்.

ii ) ஓவியம் வரைதல், தோட்டமிடுவது, நாணயங்களைச் சேகரிப்பது, தற்காப்புக் கலைகள், ரதப் போட்டிகள், வேட்டை, எருதுச் சண்டை ஆகியவற்றைப் பிரபலப்படுத்துவதில் சரபோஜி ஆர்வம் கொண்டிருந்தார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: கர்நாடக இசையில் மேற்கத்திய இசைக்கருவிகளான கிளாரினட், வயலின் ஆகிய கருவிகளை அவர் அறிமுகம் செய்தார். தஞ்சாவூர் ஓவியத்தைப் பிரபலப்படுத்தும் பணிகளை அவர் செய்தார். ஓவியம் வரைதல், தோட்டமிடுவது, நாணயங்களைச் சேகரிப்பது, தற்காப்புக் கலைகள், ரதப் போட்டிகள், வேட்டை, எருதுச் சண்டை ஆகியவற்றைப் பிரபலப்படுத்துவதில் சரபோஜி ஆர்வம் கொண்டிருந்தார்.**

172) தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் தமிழ்நாட்டின் முதலாவது வன உயிரியல் பூங்காவை அவர் அமைத்தவர்?

a) முதலாம் சரபோஜி

**b) இரண்டாம் சரபோஜி**

c) வெங்கோஜி

d) துல்ஜாஜி

**விளக்கம்: தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் தமிழ்நாட்டின் முதலாவது வன உயிரியல் பூங்காவை அவர் அமைத்தார்.**

173) இரண்டாம் சரபோஜி எத்தனை ஆண்டு காலம் ஆட்சி புரிந்தார்?

**a) 40**

b) 35

c) 45

d) 52

**விளக்கம்: 1832இல் மார்ச் 7ஆம் தேதி ஏறக்குறைய 40 ஆண்டுகால ஆட்சிக்குப் பிறகு சரபோஜி மரணமடைந்தார். அவரது அரசு சார்ந்த அனைத்து பகுதிகளிலும் அவரது மறைவு குறித்து துக்கம் அனுசரிக்கப்பட்டது. அவரது இறுதி யாத்திரையில் 90 ஆயிரம் பேருக்கும் அதிகமாக கலந்துகொண்டனர்.**

174) "முடிசூடிய பல தலைவர்களைப் நான் பார்த்து இருக்கிறேன். ஆனால் இவர் தவிர எவரிடமும் அது இளவரசத் தன்மையோடு அலங்கரித்ததில்லை." என்று சரபோஜி குறித்து கூறியவர் யார்?

a) சி.எஸ்.ஜான்

b) ஜான் பனியன்

**c) ஹீபர்**

d) ஹுக்ஸ்

**விளக்கம்: அவரது இறுதி ஊர்வலத்தில் சமயப்பரப்பாளரான அருட்தந்தை பிஷப் ஹீபர் இவ்வாறு கூறினார், "முடிசூடிய பல தலைவர்களைப் நான் பார்த்து இருக்கிறேன். ஆனால் இவர் தவிர எவரிடமும் அது இளவரசத் தன்மையோடு அலங்கரித்ததில்லை."**

175) பொருத்துக

| | |
|---|---|
| i. அமத்யா | - 1. அரசரின் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்கள் |
| ii. சுமந்த் | - 2. பொது ஒழுக்க நடைமுறைகள் |
| iii. பண்டிட் ராவ் | - 3. போர் மற்றும் அமைதி |
| iv. வாக்கிய நாவிஸ் | - 4. அரசின் அனைத்து பொது கணக்குகள் |

a) 4, 1, 2, 3

b) 1, 2, 4, 3

**c) 4, 3, 2, 1**

d) 1, 4, 2, 3

# 11th History Lesson 11 Questions in Tamil

## 11] ஐரோப்பியரின் வருகை

1) பிளாசி போர் நடைபெற்ற ஆண்டு எது?

A) 1751

B) 1753

C) 1755

**D) 1757**

**(குறிப்பு - 1757ஆம் ஆண்டு நடைபெற்ற பிளாசிப் போரில் வங்காள நவாப்பை ஆங்கிலேயர்கள் வெற்றி கொண்டனர். அந்த ஆண்டை இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கம் என்று வரையறுப்பது மரபு.)**

2) இந்தியாவிற்கு முதல் முதலில் வருகை தந்த ஐரோப்பியர் யார்?

A) ஆங்கிலேயர்கள்

B) டச்சுக்காரர்கள்

**C) போர்த்துகீசியர்**

D) பிரஞ்சுக்காரர்கள்

**(குறிப்பு - 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்து விட்டனர். அவர்களின் நோக்கம் இந்தியப்பெருங்கடல் பகுதியில் வணிகத்தில் ஈடுபடுவதாகும்)**

3) நன்னம்பிக்கை முனை எங்கு அமைந்துள்ளது?

**A) ஆப்பிரிக்கா**

B) இந்திய பெருங்கடல்

C) ஐரோப்பா

D) பசிபிக் பெருங்கடல்

**(குறிப்பு - நன்னம்பிக்கை முனை ஆப்பிரிக்காவின் தெற்கு அட்லாண்டிக் கடல் பகுதியில் அமைந்துள்ளது.)**

4) போர்த்துக்கீசியர் கோவாவை கைப்பற்றிய ஆண்டு எது?

A) 1500

B) 1505

**C) 1510**

D) 1515

**(குறிப்பு - பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவிலிருந்து ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கைமுனை வழியே இந்தியாவிற்கு நேரடி கடல் வழியை கண்டு பிடித்தவர் வாஸ்கோடகாமா ஆவார். பிறகு மேற்கு கடற்கரைப் பகுதியில் போர்த்துக்கீசியர் கோவாவை 1510ஆம் ஆண்டு கைப்பற்றினர்)**

5) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - பதினைந்தாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவின் போர்த்துக்கீசியர் இந்தியாவிற்கு வந்தனர்.

கூற்று 2 - பதினாறாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரும், டச்சுக்காரரும் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர்.

கூற்று 3 - 1755ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் வங்காளத்தை கைப்பற்றினர்.

**A) கூற்று 1, 2 மட்டும் சரி**

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

**(குறிப்பு - போர்த்துக்கீசியர்களுக்குப் பிறகு இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர் குறிப்பாக ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் தங்கள் நடவடிக்கைகளை போர்த்துக்கீசியரின் செயல்திட்டங்களை ஒன் மாதிரியாகக் கொண்டு வடிவமைத்து கொண்டனர்)**

6) மேற்கு ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நுழைவுவாயிலாகவும், மதிப்பு மிக்க வளங்களைக் கொண்ட துறைமுகமாகவும் இருந்தது எது?

A) பம்பாய்

**B) சூரத்**

C) கொச்சின்

D) கோழிக்கோடு

**(குறிப்பு - மேற்கு ஆசியாவிற்கும், ஐரோப்பாவிற்கும் நுழைவாயிலாக இருந்த மதிப்புமிக்க வளங்களைக் கொண்ட துறைமுகமான சூரத் பதினாறாம் நூற்றாண்டுகளில் முகலாயரின் செல்வாக்கிற்கு உள்ளானது.)**

7) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - 16ம் நூற்றாண்டுகளில் மெக்காவிற்கு புனிதப்பயணம் மேற்கொள்ளும் பயணிகளை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் சூரத்தில் இருந்து புறப்பட்டு சென்றன.

கூற்று 2 - முகலாய அரசு சூரத் நகரத்திற்கு 2 ஆளுநர்களை நியமித்து இருந்தது.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - சூரத் நகரில் ஒரு ஆளுநர் நகரை பாதுகாப்பதற்காக தபதி நதியின் அருகே கட்டப்பட்டிருந்த கண்காணிப்பு கோபுரங்களுடன் கூடிய காவலரணில் பணி அமர்த்தப்பட்டு இருந்தார். இன்னொரு ஆளுனர் நகரம் தொடர்பான நிர்வாகத்திற்கும் சுங்கவரியை வசூலிப்பதற்கு பொறுப்பாவார்)**

8) எந்த முகலாய அரசர்கள் காலத்தில் வங்காளம் முகலாயப் பேரரசின் மாகாணங்களில் ஒன்றாயிற்று?

A) அக்பர்

**B) ஜஹாங்கீர்**

C) ஷாஜகான்

D) அவுரங்கசீப்

**(குறிப்பு - ஜஹாங்கீர் காலத்தில்தான் வங்காளம் முகலாய பேரரசின் மாகாணங்களில் (சுபா) ஒன்றாயிற்று. அதற்கு முன்னர் 30 ஆண்டுகளுக்கு வங்காளம் முகலாயப் பேரரசு ஒருங்கிணைக்கப்படாத பகுதியாகவே இருந்தது)**

9) முகலாயகளிடமிருந்து பம்பாய் தீவை ஆங்கிலேயர்கள் பெற்ற ஆண்டு எது?

A) 1662

B) 1664

C) 1666

**D) 1668**

**(குறிப்பு - 1668ஆம் ஆண்டு பம்பாய் தீர்வுகளை பெற்று அங்கு தங்கள் தலைமை இடத்தை ஆங்கிலேயர்கள் 1687இல் அமைத்தனர். அவர்களின் அடிப்படை நோக்கமானது தங்களது வணிக நடவடிக்கைகளுக்கு பம்பாயை சூரத் நகரத்திற்கு மாற்று இடமாக உருவாக்குவதுதான்)**

10) விஜயநகர ஆட்சியின் போது தமிழக பகுதிகளில் கீழ்காணும் எந்த இடத்தில் நாயக்க அரசு நிறுவப்படவில்லை?

A) மதுரை

B) தஞ்சாவூர்

C) செஞ்சி

**D) ராமநாதபுரம்**

**(குறிப்பு - விஜயநகர ஆட்சியின் போது தமிழக பகுதிகளில் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய மூன்று நாயக்க அரசுகள் நிறுவப்பட்டன. இவை நிறுவப்பட்டதன் நோக்கமே மைய அரசுக்கு தேவைப்படும் நிதி ஆதாரங்களையும் ராணுவ வீரர்களையும் திரட்டி கொடுப்பதுதான்)**

11) தலைக்கோட்டை போர் நிகழ்ந்த ஆண்டு எது?

A) 1560 இல்

B) 1563 இல்

**C) 1565 இல்**

D) 1567 இல்

**(குறிப்பு - 1565இல் நடைபெற்ற தலைக்கோட்டைப் போரில் அகமது நகர், பிஜபூர், கோல்கொண்டா ஆகிய சுல்தானிய கூட்டுப்படைகளால் விஜயநகர அரசு தோற்கடிக்கப்பட்டதை தொடர்ந்து முன்னர் ஆதிக்கம் செய்த மைய அரசு வலிமை குன்றியது)**

12) 1646ஆம் ஆண்டு சோழமண்டல பகுதிகளும் ஊடுருவிய சுல்தானிய படை எது?

A) அகமது நகர்

B) பிஜபூர்

**C) கோல்கொண்டா**

D) ஹைதராபாத்

**(குறிப்பு - 1646இல் சோழமண்டல பகுதிகளை ஊடுருவிய கோல்கொண்டாவின் படைகள் பழவேற்காட்டிற்கும் சாந்தோமிற்கும் இடைப்பட்ட பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டன.)**

13) செஞ்சி நாயக்கரிடம் இருந்து பழவேற்காடு பகுதியை பெற்ற ஐரோப்பியர் யார்?

A) ஆங்கிலேயர்கள்

B) பிரஞ்சுக்காரர்கள்

**C) டச்சுக்காரர்கள்**

D) போர்த்துக்கீசியர்கள்

**(குறிப்பு - நறுமணப் பொருட்களை உற்பத்தி செய்யும் இந்தோனேசியத் தீவுகள் உடனான வணிகத்திற்கு தேவைப்படும் சில்லறை பொருட்களை கொள்முதல் செய்ய தங்களுக்கு சோழமண்டல கடற்கரையில் வணிகத்தளம் தேவை என்பதை டச்சுக்காரர்கள் உணர்ந்தனர். செஞ்சி நாயக்கரிடம் இருந்து பழவேற்காடு பகுதியை அவர்கள் பெற்றனர்)**

14) 1639ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் புனித ஜார்ஜ் கோட்டை கட்ட இடம் தந்தவர் யார்?

A) வேங்கடசாமி நாயக்கர்

**B) கமலா வேங்கடாத்ரி நாயக்கர்**

C) லட்சுமிபதி நாயக்கர்

D) சீனுசாமி நாயக்கர்

**(குறிப்பு - கமலா வேங்கடாத்ரி நாயக்கர் என்பவரிடமிருந்து இடத்தை பெற்ற ஆங்கிலேயர்கள் 1639 ஆம் ஆண்டு புனித ஜார்ஜ் கோட்டையை கட்டினர். இவ்வாறாக ஆங்கிலேய வணிகத் தளங்கள் சென்னையில் நிறுவப்பட்டு காலப்போக்கில் வளர்ந்து மதராஸ் அதன் மாகாண தலைநகரம் ஆனது)**

15) 1680களில் முகலாயர்களால் கைப்பற்றப்பட்ட இடங்கள் எது?

A) அகமது நகர்

B) பீஜப்பூர்

C) கோல்கொண்டா

**D) இவை அனைத்தும்**

**(குறிப்பு - பேரரசர் அவுரங்கசீப் தெற்கே தக்காண பகுதி வரை தனது பேரரசை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற பெரும் விருப்புடன் செயல்பாடுகளை தொடங்கினார். 1680 களில் அகமது நகர், பிஜபூர் மற்றும் கோல்கொண்டா ஆகிய அரசுகள் கைப்பற்றப்பட்டன)**

16) மராத்தியர்கள் முகலாயர்களின் வசமிருந்த சூரத் நகரை எந்த ஆண்டு தாக்கினர்?

A) 1660 இல்

B) 1662 இல்

**C) 1664 இல்**

D) 1666 இல்

**(குறிப்பு - 1664இல் மராத்தியர்கள் சூரத்தை தாக்கியபோது முகலாயர்களின் பலவீனம் தெரிந்தது.1664இல் சூரத் நகரை சூரையாடுவது கடைசி நேரத்தில் தவிர்க்கப்பட்டது. ஆனால் 1670 இல் மராத்தியரால் சூரத்தும் அதன் வணிகமும் சூறையாடப்பட்ட போது ஏற்பட்ட அழிவுகளில் இருந்து மீள்வதற்கு பல ஆண்டுகள் ஆகின)**

17) 1670இல் மராத்தியர்களின் சூரத் தாக்குதலுக்கு பிறகு சிவாஜி கீழ்க்காணும் எந்த நாயக்க அரசுகளை தோற்கடித்தார்?

I. செஞ்சி

II. தஞ்சாவூர்

III. மதுரை

**A) I, II மட்டும்**

B) II, III மட்டும்

C) I, III மட்டும்

D) இவை அனைத்தும்

**(குறிப்பு - சூரத் தாக்குதலுக்கு பின்னர் சிவாஜி தனது கவனத்தை தென்னிந்தியாவை நோக்கி திருப்பி செஞ்சி தஞ்சாவூர் நாயக்க அரசுகளை தோற்கடித்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் செஞ்சி முகலாயரால் மீண்டும் கைப்பற்றப்பட்டது)**

18) தென்னிந்தியாவில் மராத்தியரால் ஆளப்படும் அரசின் தலைநகரமாக நீடித்தது எது?

A) செஞ்சி

B) மதுரை

**C) தஞ்சாவூர்**

D) புதுக்கோட்டை

**(குறிப்பு - தமிழரின் அறிவார்ந்த கலாச்சார பாரம்பரியங்களை உள்வாங்கி ஏற்கும் கொள்கையால் தமிழக பகுதியின் பண்பாட்டுத் தலைநகராக தஞ்சாவூரை மராத்தியர்கள் மாற்றினர்)**

19) முகலாயப் பேரரசரான அவுரங்கசீப் எந்த ஆண்டு இயற்கை எய்தினார்?

A) 1701ஆம் ஆண்டு

B) 1703ஆம் ஆண்டு

C) 1705ஆம் ஆண்டு

**D) 1707ஆம் ஆண்டு**

**(குறிப்பு - மாபெரும் முகலாய அரசர்களின் கடைசி அரசரான அவுரங்கசீப் 1707 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவத், வங்காளம், ஹைதராபாத், கர்நாடகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து முகலாய அரச பிரதிநிதிகள் தங்களை சுதந்திரமான ஆட்சியாளராக அறிவித்துக் கொண்டனர்)**

19) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - வங்காள கர்நாடக நவாப்புகள் பெருமளவிலான பணத்தை ஆங்கிலேயரிடம் இருந்து கடனாக பெற்றனர்.

கூற்று 2 - கடன் பெற்ற தொகையை திருப்பி செலுத்தும் ஒரு வழியாக தங்களின் பரந்த நிலப் பகுதிகளில் நில வரியை வசூல் செய்து கொள்ளும் உரிமையை ஆங்கிலேயருக்கு வழங்கினர்.

கூற்று 3 - கர்நாடகம் என்பது பதினெட்டாம் நூற்றாண்டில் தற்போதைய தமிழ்நாடு, கர்நாடகா, தெற்கு ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியாக இருந்தது)

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - பதினெட்டாம் நூற்றாண்டில் மேற்கு தொடர்ச்சி மலைக்கும் கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள இன்றைய இந்திய மாநிலங்களான தமிழ்நாடு கர்நாடகா மற்றும் தெற்கு ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதி கர்நாடகம் என்று அழைக்கப்பட்டது. இப்பகுதிகளை ஆற்காட்டு நவாப் கட்டுப்படுத்தினார்)**

20) 1750ஆம் ஆண்டு சூரத் நகரின் உள்ளூர் வணிகர்கள் தங்கள் பாதுகாப்பு கருதி தாங்கள் யாருடைய "பாதுகாப்பின் கீழ்" இருப்பதாக அறிவித்துக் கொண்டனர்?

I. ஆங்கிலேயர்கள்.

II. டச்சுக்காரர்கள்

III. போர்ச்சுகீசியர்கள்

IV. முகலாயர்கள்

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) IV மட்டும் சரி

D) I மட்டும் சரி

**(குறிப்பு - 1700களில் டச்சுக்காரர்கள் பழவேற்காட்டில் இருந்து வெளியேறி தங்களின் தலைநகரை நாகப்பட்டினத்திற்கு மாற்றி இருந்தனர். சூரத் நகரின் உள்ளூர் வணிகர்கள் தங்கள் பாதுகாப்பு கருதி தாங்கள் டச்சுக்காரரின் அல்லது ஆங்கிலேயரின் பாதுகாப்பின் கீழ் இருப்பதாக 1750 ஆம் ஆண்டில் அறிவித்துக் கொண்டனர் எனவே உறுதியற்ற அரசியல் சூழலால் சூரத் நகரம் அல்லலுற்றது)**

21) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. 1700 களில் தமிழகம் உணவு தானியங்களை ஆந்திரப் பிரதேசத்தில் இருந்தும் வங்காளத்தில் இருந்தும் இறக்குமதி செய்தது.

II. குஜராத் மேற்கு கடற்கரை பகுதிகளில் மிளகு, லவங்கம், இஞ்சி ஆகியவற்றுக்குப் பதிலாக உணவு தானியங்களை மலபார் பகுதிக்கு ஏற்றுமதி செய்தது.

III. இலங்கையிலும், பட்டாவியாவிலும்(இந்தோனேஷியா) திரும்ப டச்சு குடியேற்றங்களுக்கும் உணவு தானியங்கள் அனுப்பப்பட்டன.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - 1700 களில் உணவு தானிய பயிர்களுடன், கூடுதலாக கரும்பு, எண்ணெய் வித்துக்கள், பருத்தி, அவுரி முதலிட்ட வணிகப் பயிர்களும் பயிர் செய்யப்பட்டன. இந்தியாவிற்குள் உபரியான பகுதிகளிலிருந்து பற்றாக்குறை பகுதிகளுக்கு உணவு தானியங்கள், நெய், சர்க்கரை முதலான உணவுப் பண்டங்களை கொண்டு சென்றதன் மூலம் விறுவிறுப்பாக வணிகம் நடந்தது)**

22) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. நெசவுத்தொழில் பெரும்பாலும் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டது.

II. படிகாரம் போன்ற வேதியல் பொருட்களைப் பயன்படுத்தி நிரந்தர வண்ணங்களை தயாரித்து துணிகளுக்கு சாயமிடுவதில் இந்திய கைவினை சமூகங்கள் சிறப்பான அறிவையும், நிபுணத்துவத்தையும் பெற்று இருந்தன.

III. நெசவுத்தொழில் நாட்டின் இரண்டாவது முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இருந்தது.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - நூல் நூற்றலும், சாயத் தொழிலும் நெசவுத் தொழிலின் ஆதாரத்துறை நடவடிக்கைகளாக இருந்தன. கைவினை பொருள் உற்பத்தி நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறம் என இரண்டிலும் நடைபெற்றது.)**

23) கலம்காரி எனப்படும் துணி வகைக்கு பெயர் பெற்று விளங்கிய இடம் எது?

**A) சோழமண்டலம்**

B) சேர மண்டலம்

C) தக்காணம்

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - சோழமண்டல பகுதி வண்ணம் பூசப்பட்ட கலம்காரி எனப்படும் துணி வகைக்கு பெயர் பெற்றதாகும். இவ்வகை துணியில் அலங்கார கோடுகள் அல்லது வடிவங்களும் முதலில் வரையப்பட்டு பின்னர் சாயம் ஏற்றப் படும். இது பதினாறாம் நூற்றாண்டில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தோனேசியத் தீவுகளில் வாழும் மக்கள் விரும்பி வாங்கும் நுகர்வு பொருளாக விளங்கியது)**

24) பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியாவின் அனைத்து பகுதிகளிலிருந்தும் ஏனைய உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுள் மிக முக்கியமானவை கீழ்க்கண்டவற்றுள் எது?

**A) துணி**

B) சணல்

C) பருத்தி

D) சாயம்

**(குறிப்பு - இந்தியாவின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் ஏனைய உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் மிக முக்கியமானவை துணிகளேஆகும். சோழ மண்டலப் பகுதி வண்ணம் பூசப்பட்ட கலம்காரி எனப்படும் துணி வகைகள் பெயர் பெற்றதாகும். இது தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மக்கள் மிகவும் விரும்பி வாங்கும் நுகர்வு பொருளாக விளங்கியது.)**

25) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - பல்வேறு நிலைகளில் செயல்பட்ட பல்வகைப்பட்ட சந்தைகளை போலவே வணிகர்களும் ஒரே வகைப்பட்ட குழுவை சார்ந்தவர்கள் அல்ல.

கூற்று 2 - சிறிய இடங்களில் இருந்த சந்தைகளுக்கு சேவை செய்ய வியாபாரிகளும் சில்லறை வர்த்தகர்களும் இருந்தனர்.

கூற்று 3 - வணிக நடவடிக்கைகளை ஒரு பிரமிடாக நாம் கற்பனை செய்துகொண்டால், பிரமிடின் உச்சத்தில் பெரும் வணிகர்கள் இருந்தனர்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - பெரும் வர்த்தகர்கள் பெருமளவிலான மூலதனத்தை கையிருப்பாக கொண்ட இவர்களே கடல் வணிகத்தை முன்நின்று இயக்கியதோடு, துறைமுகங்களின் கடலோரப் பகுதியை சேர்ந்த உற்பத்தியாளர்களையும் கட்டுப்படுத்தினர். இவர்கள் தங்களின் கீழ் தரகர் களையும் துணைத் அரக்கர்களையும் பணியமர்த்தி உள்நாட்டுப் பகுதிகளிலும் துறைமுக நகரங்களில் உள் பகுதியிலோ உற்பத்தியாகும் பொருட்களை கொள்முதல் செய்தனர்)**

26) 16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டுகளில் நாணயங்களின் தூய்மை நிலையை பரிசோதிக்கவும் அவற்றின் மதிப்பை அன்றைய அளவில் மதிப்பிடவும் நியமிக்கப்பட்டிருந்தவர்களின் பெயர் என்ன?

A) திவான்

B) நிதி ராஜ்

**C) சராப்**

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - பரந்து விரிந்த வணிகத்தை மேம்படுத்த வணிக நிறுவனங்களும் நன்கு வளர்ந்திருந்தன. பல்வகைப்பட்ட நாணயங்கள் புழக்கத்தில் இருந்ததினால் அவற்றின் தூய்மை நிலையை பரிசோதிக்கவும் அவற்றின் மதிப்பை அன்றைய அளவில் மதிப்பிடவும் சராப் எனப்பட்ட பணம் மாற்றுவோரும் இருந்தனர்)**

28) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. சென்னை மாகாணப் பகுதிகளில் 1628 முதல் 1750 ஆம் ஆண்டுகளிடையே 10 பஞ்சங்கள் ஏற்பட்டன. சில சமயங்களில் அவை பரந்து விரிந்தனவாகவும் பல ஆண்டுகளுக்கு நீடித்தும் இருந்தன.

II. பஞ்சங்களினால் கிராமப்புற ஏழை மக்கள் தங்களை அடிமைகளாக விற்றுக் கொள்ளும் அளவிற்கு அவர்களை தள்ளியது.

III. சோழ மண்டல பகுதிகளில் இருந்து படவியாவிற்கு அனுப்பப்பட்ட சரக்குகளுடன் வழக்கமாக அனுப்பப்பட்ட ஆண் பெண் அடிமைகளின் பெயர்கள் டச்சு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - ஆங்கிலேயர் நடுவுநிலைமை தவறி சார்பு தன்மையுடன் இருந்தார்கள் என்று நினைத்தாலும், பிறருடைய கருத்துகளை எடுத்துக் கொள்ளாமல் முழுமையான அளவுகோல்களைக் கொண்டு கணித்தாலும் அடிப்படை தொழிலாளர்களின் ஊதியமும் வாழ்க்கை தரமும் இந்நிலையில் இருந்தது என்பது உண்மை.)**

29) ஆங்கிலேயர் காலத்தில் நடைபெற்ற கடல் கடந்து வணிகம் பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - மேற்கு கடற்கரையில் உள்ள கள்ளிக்கோட்டை அல்லது குஜராத்தில் உள்ள சூரத் துறைமுகங்கள் இடைநிலை துறைமுகங்கள் என்றழைக்கப்பட்டன.

கூற்று 2 - 16ஆம் நூற்றாண்டில் கள்ளிக்கோட்டை மதிப்பிழந்தது. அதற்கு மாற்றாக கடலோரப் பகுதிகளை கொண்ட குஜராத் துறைமுகங்கள் முக்கியத்துவம் பெற்றன.

A) கூற்று 1 மட்டும் சரி

B) கூற்று 2 மட்டும் சரி

**C) இரண்டு கூற்றுகளும் சரி**

D) இரண்டு கூற்றுகளும் தவறு

**(குறிப்பு - சோழமண்டல கடற்கரையில் துறைமுகங்களான மசூலிப்பட்டினம், பழவேற்காடு ஆகியவையும் அவற்றுக்கு தெற்கே உள்ள ஏனைய துறைமுகங்களும் பர்மா, மலாய் தீபகற்பத்தில் இருந்துவரும் கப்பல்களுக்கு இடைநிலை துறைமுகங்களாக சேவை செய்தன)**

30) இந்தியாவிற்கு வருகை தந்த முதல் ஐரோப்பியர் யார்?

**A) வாஸ்கோடகாமா**

B) அல்புகார்க்

C) அல்மெய்டா

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - தனது முதல் பயணத்தில் வாஸ்கோடகாமா மூன்று கப்பல்களில் 120 நபர்களோடு இந்தியாவிற்கு வந்தார். ஐரோப்பாவிலிருந்து ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனை வழியே இந்தியாவிற்கு நேரடி கடல் வழியை கண்டு பிடித்தவர் வாஸ்கோடகாமா ஆவார்)**

31) வாஸ்கோடகாமா எந்த நாளில் இந்தியாவில் இருந்து இந்திய சரக்குகளுடன் போர்த்துகீசிய நாட்டிற்கு திரும்பினார்?

A) 1498, ஆகஸ்ட் 20ஆம் நாள்

B) 1498, ஆகஸ்ட் 23ஆம் நாள்

C) 1498, ஆகஸ்ட் 26ஆம் நாள்

**D) 1498, ஆகஸ்ட் 29ஆம் நாள்**

**(குறிப்பு - 1498ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 29ஆம் நாள் தன்னுடன் வந்தவர்களில் உயிரோடு இருந்த 55 மாலுமிகளுடனும், மூன்றில் இரண்டு கப்பல்களில் இந்திய சரக்குகளுடனும் ஊர்திரும்பும் பயணத்தை மேற்கொண்டார்)**

32) வாஸ்கோடகாமாவின் முதல் பயணத்தின் போது அவருக்கு யாருடைய நட்பு கிடைத்தது?

**A) கள்ளிக்கோட்டை அரசர்**

B) கொச்சின் அரசர்

C) கொல்லம் அரசர்

D) திருவனந்தபுரம் அரசர்

**(குறிப்பு - கள்ளிக்கோட்டை அரசர் சாவித்திரியினுடைய (சாமரின்) நட்புணர்வு வாஸ்கோடகாமாவிற்கு மகிழ்ச்சி அளித்தது. இந்திய சரக்குகளுடன் தாய் நாட்டுக்கு திரும்பிய அவர், 1200 மாலுமிகளை, 13 கப்பல்களுடன் பெட்ரோ ஆல்வரிஸ் கேப்ரல் என்பவரின் தலைமையில் மீண்டும் அனுப்பிவைத்தார்.)**

33) வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு இரண்டாம் முறை வந்த ஆண்டு எது?

A) 1500 இல்

B) 1501 இல்

**C) 1502 இல்**

D) 1503 இல்

**(குறிப்பு - 1502ஆம் ஆண்டு, அக்டோபர் 29ஆம் நாள், 20 கப்பல்களுடன் வாஸ்கோடகாமா மீண்டும் கள்ளிக்கோட்டை வந்தார். அங்கிருந்து அதிக வசதிகளை கொண்ட கொச்சிக்கு சென்றார். ஐரோப்பிய வணிகம் பெருக வேண்டும் எனில் வணிகத்தின் மீது அராபியர்கள் கொண்டிருந்த முற்றுரிமை உடைக்கப்பட வேண்டும் என்பதை அவர் உணர்ந்தார்)**

34) வாஸ்கோடகாமா போர்ச்சுகலுக்கு திரும்பும் முன்னர் ஒரு சரக்கு கிடங்கை எங்கு நிறுவினார்?

**A) கொச்சி**

B) கோழிக்கோடு

C) கண்ணனூர்

D) கொல்லம்

**(குறிப்பு - ஐரோப்பிய வணிகம் பெருக வேண்டும் எனில் கணிதத்தின் மீது அரபியர்கள் கொண்டிருந்த முற்றுரிமை உடைக்கப்பட வேண்டும் என்பதை வாஸ்கோடகாமா உணர்ந்தார். கொச்சி மற்றும் கள்ளிக் கோட்டையில் இந்து மன்னர்கள் இடையே நிலவிய பகைமையை அவர் தமது நலனுக்கு பயன்படுத்திக் கொண்டார். இந்திய பெருங்கடல், செங்கடல் வணிகத்தில் அரேபியர் கொண்டிருந்த உரிமையை ஒழித்தார்.)**

35) போர்த்துகீசியரால் நியமிக்கப்பட்ட இந்தியாவின் முதல் ஆளுநர் யார்?

**A) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா**

B) அல்புகர்க்

C) நினோ டா குன்கா

D) ஆண்டானியோ டி நோரன்கா

**(குறிப்பு - ஆண்டு தோறும் பயணம் மேற்கொள்வதை நிறுத்திய போர்ச்சுக்கீசியர், இந்தியாவில் ஒரு ஆளுநரை அமர்த்த முடிவு செய்தனர். முதல் ஆளுநரான பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா நீலநீர் கொள்கையை கடைப்பிடித்தார்)**

36) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா என்னும் போர்த்துகீசிய ஆளுனரின் நீல நீர் கொள்கை என்பது என்ன?

I. குடியிருப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்காமல், கப்பல்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

II. கப்பல்களின் எண்ணிக்கையை அதிகரித்து, வணிகத்தை விரிவுபடுத்துதல்

III. போர்த்துகீசிய கப்பற்படையை இந்தியாவில் அதிகப்படுத்துதல், மற்றும் வலுப்படுத்துதல்.

A) I, II மட்டும்

**B) II, III மட்டும்**

C) I, III மட்டும்

D) இவை அனைத்தும்

**(குறிப்பு - நீல நீர் கொள்கை மூலம் பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா குடியிருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் கப்பல்களின் எண்ணிக்கையை அதிகரித்து கப்பற்படையை வலுப்படுத்தினார். சாமுத்திரியினுடைய கப்பல் படையையும், எகிப்திய சுல்தான் கடற்படையையும் மூழ்கடித்தார்)**

37) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா கீழ்க்காணும் எந்த இடங்களில் கோட்டைகளைக் கட்டினார்?

I. கொச்சி

II. கண்ணூர்

III. மசூலிப்பட்டினம்

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) இவை அனைத்தும் சரி

**(குறிப்பு - பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா கொச்சி அரசருடன் நட்பு பூண்டார். அவர் கொச்சி, கண்ணூர், மலபார் கடற்கரையின் ஏனைய இடங்களிலும் கோட்டைகளைக் கட்டினார்)**

38) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டாவிற்கு பின்னர் பொறுப்பேற்ற போர்த்துகீசிய ஆளுநர் யார்?

A) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா

**B) அல்புகர்க்**

C) நினோ டா குன்கா

D) ஆண்டானியோ டி நோரன்கா

**(குறிப்பு - அல்மெய்டாவிற்குப் பின்னர் அல்புகார்க்(1509-1515) பதவியேற்றார். இந்தியாவில் போர்த்துகீசிய பேரரசை உண்மையில் நிறுவியவர் இவரே ஆவார்)**

39) போர்த்துகீசிய ஆளுநர் அல்புகார்க் பீஜப்பூர் அரசர் யூசுப் அடில் கானை தோற்கடித்து எந்த ஆண்டு கோவாவை கைப்பற்றினார்?

A) 1508 இல்

**B) 1510 இல்**

C) 1512 இல்

D) 1514 இல்

**(குறிப்பு - பிஜப்பூர் அரசர் யூசுப் அடில் கானை தோற்கடித்த போர்த்துகீசிய ஆளுநர் அல்புகார்க் 1510 ஆம் ஆண்டில் கோவாவை கைப்பற்றினார் கோவாவை முக்கிய வணிக மையமாக வளர்த்தெடுத்தார். அனைத்து மதம் சார்ந்த மக்களையும் கோவாவில் குடியேற ஊக்கப்படுத்தினார்)**

40) அல்புகார்க் 1515இல் எந்த துறைமுகத்தை கைப்பற்றினார்?

A) சுமத்ரா

B) கொச்சின்

**C) ஆர்மசு**

D) குஜராத்

**(குறிப்பு - இந்தியாவிற்கும் சீனாவிற்கும், மெக்காவிற்கும் கெய்ரோவிற்கும் இடைப்பட்ட வணிக தடங்களின் மீது மேலாதிக்கம் செலுத்தி வந்த முஸ்லீம் வணிகர்களை அல்புகார்க் தோற்கடித்தார். அரபியரை தாக்கி ஏடன் நகரை கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார்.1515இல் ஆர்மசு துறைமுகத்தை கைப்பற்றினார்)**

41) எந்தப் போர்த்துகீசிய ஆளுநரின் காலத்தில் முகலாய அரசர் அக்பர் குஜராத்தில் உள்ள காம்பேவிற்கு வந்தார்?

A) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா

B) அல்புகர்க்

C) நினோ டா குன்கா

**D) ஆண்டானியோ டி நோரன்கா**

**(குறிப்பு - 1571ஆம் ஆண்டு, டி நொரன்காவின் காலத்தில்தான் முகலாய அரசர் அக்பர் குஜராத்தில் உள்ள காம்பேவிற்கு வந்தார். அப்போதுதான் போர்த்துகீசியருக்கும் முகலாயருக்கும் இடையிலான தொடர்பு உருவானது)**

42) போர்த்துக்கீசியர்கள் கைப்பற்றிய இடங்களை பொருத்துக?

I. ஆர்மசு - a) 1559

II. பஸீன் - b) 1515

III. டையூ - c) 1534

IV. டாமன் - d) 1537

**A) I-b, II-c, III-d, IV-a**

B) I-c, II-d, III-a, IV-b

C) I-d, II-b, III-c, IV-a

D) I-a, II-d, III-c, IV-b

**(குறிப்பு - டா குன்கா 1534இல் பசீனையும், 1537இல் டையூவையும் கைப்பற்றினார்.1559இல் டாமன் துறைமுகம் இமாத் உல் முல்க் என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது)**

43) சதி என்னும் உடன்கட்டை பழக்கத்தை நிறுத்த முயன்ற போர்த்துகீசிய ஆளுநர் யார்?

A) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா

**B) அல்புகர்க்**

C) நினோ டா குன்கா

D) ஆண்டானியோ டி நோரன்கா

**(குறிப்பு - போர்த்துக்கீசிய பேரரசை உண்மையில் நிறுவியவர் இவரே ஆவார். 1610 ஆம் ஆண்டு கோவாவை கைப்பற்றினார். ஐரோப்பியர் இந்திய பெண்களை திருமணம் செய்துகொண்டு, போர்த்துக்கீசியர் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் குடியேறுவதை இவர் ஆதரித்தார்)**

44) ஸ்பெயின் நாட்டு அரசர் இரண்டாம் பிலிப் எந்த ஆண்டு போர்ச்சுக்கல் நாட்டை கைப்பற்றினார்?

A) 1560 இல்

B) 1570 இல்

**C) 1580 இல்**

D) 1590 இல்

**(குறிப்பு - 1580 இல் ஸ்பெயின் நாட்டு அரசர் இரண்டாம் பிலிப் போர்ச்சுக்கல் நாட்டை கைப்பற்றி இணைத்துக் கொண்டார். போர்ச்சுகீசியரை முதலில் இலங்கையில் தோற்கடித்த டச்சுக்காரர் பின்னர் மலபார் கடற்கரையில் இருந்த அவர்களின் கோட்டையையும் கைப்பற்றினர். இதனால் போர்ச்சுக்கீசியர்**

**இந்தியாவில் தங்கள் குடியேற்றங்களை பாதுகாப்பதை காட்டிலும் பிரேசிலின் மீது ஆர்வம் காட்டத் தொடங்கினர்)**

45) ஐரோப்பியர்களுக்கும் இந்தியருக்கும் இடையிலான திருமணங்களை ஊக்குவித்தவர்கள் யார்?

A) ஆங்கிலேயர்கள்

B) டச்சுக்காரர்கள்

C) பிரெஞ்சுக்காரர்கள்

**D) போர்ச்சுகீசியர்கள்**

**(குறிப்பு - போர்ச்சுகீசியர்கள் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளில் ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கும் இடையிலான திருமணங்களை ஊக்குவித்ததின் விளைவாக ஒரு புதிய யூரேசிய இனக் குழு உருவானது. இவர்கள் பின்னாளில் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் இருந்த போர்த்துக்கீசியரின் காலனிகளுக்கு அழைத்து செல்லப்பட்டனர்)**

46) போர்த்துக்கீசியர்கள் கருப்பர் நகரம் என்று எதை அழைத்தனர்?

**A) மயிலாப்பூர்**

B) ஜார்ஜ் டவுன்

C) கள்ளிக்கோட்டை

D) கொச்சி

**(குறிப்பு - சென்னை சாந்தோம் போர்த்துகீசியரின் வருகைக்கான முக்கிய சான்றாக உள்ளது. போர்ச்சுகீசியர்கள் கருப்பர் நகரம் என்று மயிலாப்பூரை அழைத்தனர்)**

47) ஆங்கிலேயர்கள் கருப்பர் நகரம் என்று எதை அழைத்தனர்?

A) மயிலாப்பூர்

**B) ஜார்ஜ் டவுன்**

C) கள்ளிக்கோட்டை

D) கொச்சி

**(குறிப்பு - போர்த்துக்கீசியரின் வருகையின் தாக்கமானது, இந்தியஅரசியல் வரலாற்றில் முதன்முறையாக ஐரோப்பியர் இந்திய அரசர்களை வென்று அவர்களின் பகுதிகளை கைப்பற்றினர் எனும் வரலாற்றை உருவாக்கியது.)**

48) தமிழ் உரைநடையின் தந்தை என கருதப்படுபவர் கீழ்க்கண்டவரில் யார்?

A) ஹென்ரிக்ஸ்

B) லின்சோடென்

**C) ராபர்டோ டி நொபிலி**

D) நினோ டா குன்கா

**(குறிப்பு - போர்த்துக்கீசியரின் குடியேற்றங்களுக்கு பிறகு சேசு சபையைச் சார்ந்த சமயப் பரப்பாளர்கள் இந்தியா வந்தனர். அவர்களில் ராபர்டோ டி நொபிலி தமிழிலும், சமஸ்கிருதத்திலும் விரிவாக எழுதினார். இவர் தமிழ் உரைநடையின் தந்தை என கருதப்படுகிறார்)**

49) தமிழ் அச்சுப் பதிப்பின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

**A) ஹென்ரிக்ஸ்**

B) லின்சோடென்

C) ராபர்டோ ட நொபிலி

D) நினோ டா குன்கா

**(குறிப்பு - ஹென்ரிக்ஸ் என்பவர் போர்ச்சுகல் நாட்டு யூதர் ஆவார். இவர் சேசு சபையின் சமயப் பரப்பாளராக இந்தியா வந்தார். இவர் தமிழ் அச்சுப்பதிப்பின் தந்தை என்று அழைக்கப்படுகிறார் )**

50) மீன் பிடிக்கும் உரிமை, படகோட்டும் உரிமை போன்றவற்றிற்காக போர்த்துகீசியர்கள் மற்றும் கீழே கடற்கரையில் சார்ந்த முஸ்லிம் குழுக்களுக்கும் எந்த ஆண்டு மோதல்கள் நிகழ்ந்தன?

A) 1520 இல்

B) 1525 இல்

**C) 1530 இல்**

D) 1535 இல்

**(குறிப்பு - மீன் பிடிக்கும் உரிமை, படகோட்டும் உரிமை, முத்துக் குளித்தல் ஆகியவை தொடர்பாக போர்த்துகீசியருக்கும் கீழை கடற்கரையை சார்ந்த முஸ்லிம் குழுக்களுக்கும் இடையே 1530களில் மோதல்கள் நடந்தன.)**

51) 1542இல் கோவாவிற்கு வருகை புரிந்த போர்த்துக்கீசிய கிறிஸ்தவ சபையை சார்ந்தவர் யார்?

A) புனித டேவிட்

**B) புனித பிரான்சிஸ் சேவியர்**

C) புனித மேத்யூஸ்

D) புனித தாமஸ் சேவியர்

**(குறிப்பு - சேசு சபையை உருவாக்கியவர்களில் ஒருவரான புனித பிரான்சிஸ் சேவியர் 1542 இல் கோவாவிற்கு வந்தார். மதம் மாறியவர்களுக்கு திருமுழுக்கு சடங்கு நடத்துவதற்காக தூத்துக்குடி, புன்னைக்காயல் வரை பயணம் செய்தார்)**

52) ___________ என்ற பெயரில் போர்த்துக்கீசியர் கடற் கொள்ளையர்களிடமிருந்து பாதுகாப்பு வழங்குவதாக கூறினர்.

A) கார்பஸ்

**B) கார்ட்டஸ்**

C) செப்டஸ்

D) செக்டஸ்

**(குறிப்பு - கார்ட்டஸ்(Cartaz) என்ற பெயரில் போர்த்துக்கீசியர் வழங்கும் பாதுகாப்பை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் வன்முறை மூலம் வணிகத்திற்கு இடையூறு செய்யப்போவதாக போர்த்துக்கீசியர் பயமுறுத்துவர். இந்த முறையில் போர்த்துக்கீசியர் வணிகர்களிடம் இருந்து பணம் பறித்தனர்)**

53) டச்சு கிழக்கிந்திய கம்பெனி உருவான ஆண்டு எது?

A) 1600 இல்

B) 1601 இல்

**C) 1602 இல்**

D) 1603 இல்

**(குறிப்பு - 1602 ஆம் ஆண்டு டச்சு கிழக்கிந்திய கம்பெனி உருவானது. புதிதாக உருவாகி இக்கம்பெனி இந்தோனேசியாவில் தனது ஆதிக்கத்தை நிறுவியது)**

54) ஜேன் ஹியூன் வான் லின்சோடென் என்னும் டச்சுக்காரர் தென் கிழக்கு ஆசியாவை நோக்கிய தனது முதல் பயணத்தை எந்த ஆண்டு மேற்கொண்டார்?

A) 1585 இல்

B) 1590 இல்

**C) 1595 இல்**

D) 1575 இல்

**(குறிப்பு - ஜேன் ஹியூன் வான் லின்சோடென் என்னும் நெதர்லாந்தை சேர்ந்த லிஸ்பனில் வாழ்ந்து வந்த வணிகர் டச்சுக்காரரின் முதல் பயணத்தை தென் கிழக்கு ஆசியாவை நோக்கி 1595 இல் மேற்கொண்டார்.)**

55) அம்பாயானா படுகொலை நிகழ்ந்த ஆண்டு எது?

A) 1620 ஆம் ஆண்டு

B) 1621 ஆம் ஆண்டு

C) 1622 ஆம் ஆண்டு

**D) 1623 ஆம் ஆண்டு**

**(குறிப்பு - 1623ஆம் ஆண்டு ஆங்கிலேயே கிழக்கிந்திய கம்பெனியின் ஊழியர்கள், போர்த்துக்கீசியர், ஜப்பானியர் அடங்கிய 20 பேர்களை டச்சு கிழக்கிந்திய கம்பெனியின் முகவர்கள் இந்தோனேசியாவில் உள்ள அம்பாய்னா என்னும் தீவில் சித்திரவதை செய்து கொண்டனர். இது அம்பாய்னா படுகொலை என்றழைக்கப்படுகிறது)**

56) டச்சுக்காரர்கள் 1641ஆம் ஆண்டு எந்த இடத்தை போர்த்துக்கீசியர்களிடமிருந்து கைப்பற்றினர்?

A) இலங்கை

**B) மலாக்கா**

C) சுமத்ரா

D) மாஹே

**(குறிப்பு - டச்சுக்காரர்கள் மலாக்காவை போர்த்துக்கீசியர்கள் இடமிருந்து 1641 ஆம் ஆண்டு கைப்பற்றினர். மேலும் 1658 ஆம் ஆண்டு இலங்கையை தங்கள் வசம் ஒப்படைக்க போர்த்துக்கீசியரை கட்டாயப்படுத்தினர். நறுமண தீவுகளில் டச்சுக்காரர்கள் வெற்றி பெற்றனர்)**

57) ஜெல்டிரியா என்னும் பாதுகாப்பு கோட்டையை கட்டியவர்கள் யார்?

A) ஆங்கிலேயர்கள்

B) போர்த்துக்கீசியர்கள்

**C) டச்சுக்காரர்கள்**

D) பிரெஞ்சுக்காரர்கள்

**(குறிப்பு - 1502 ஆம் ஆண்டு முதல் பழவேற்காட்டை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்களால் அகற்றப்பட்டனர். சென்னை நகருக்கு வடக்கே 60 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள பழவேற்காட்டில் டச்சுக்காரர் ஜெல்ட்ரியா என்னும் பாதுகாப்பு கோட்டையைக் கட்டினர்.)**

58) டச்சுக்காரர்கள் 1605 ஆம் ஆண்டில் எந்த இடத்தில் கோட்டையை எழுப்பினர்?

A) பழவேற்காடு

B) கோழிக்கோடு

C) கண்ணூர்

**D) மசூலிப்பட்டினம்**

**(குறிப்பு - 1605 இல் மசூலிப்பட்டினம் தங்கள் அதிகாரத்தை நிறுவிய டச்சுக்காரர்கள், 1610ஆம் ஆண்டில் பழவேற்காட்டில் சில குடியேற்றங்களை நிறுவினர்.)**

59) டச்சு கிழக்கிந்திய கம்பெனியின் சோழமண்டலப் பகுதியின் தலைமை இடமாக இருந்த இடம் எது?

A) மசூலிப்பட்டினம்

**B) பழவேற்காடு**

C) மதராஸ்

D) தஞ்சாவூர்

**(குறிப்பு - பழவேற்காடு, டச்சு கிழக்கிந்திய கம்பெனியின் சோழ மண்டலப் பகுதியின் தலைமையிடம் ஆயிற்று. பழவேற்காட்டில் இருந்து மேலைநாடுகளுக்கு வைரம் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கிராம்பு ஆகியவையும் இங்கிருந்து ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டன)**

60) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - 17ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர் கிழக்கு பகுதிகளை கட்டுப்படுத்துவதற்காக வெடிமருந்து தொழில் கூடம் ஒன்றை நிறுவினர்.

கூற்று 2 - டச்சுக்காரர்கள் காலத்தில் வங்காளத்தில் இருந்தும் குடியேற்ற பகுதிகளான தேங்காய்ப்பட்டினம் காரைக்கால் ஆகியவற்றிலிருந்தும் அடிமைகள் பலவேற்காட்டிற்கு கொண்டுவரப்பட்டனர்.

கூற்று 3 - அடிமைகளைப் பிடிப்பதற்காக டச்சுக்காரர்கள் சென்னையின் தரகர்களை நியமித்தனர்

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - டச்சுக்காரர்கள் காலத்தில் பஞ்சமும் வறட்சியும் போர்களும் அடிமை வணிகம் செழிக்க உதவின. இதனைத் தொடர்ந்து பிஜப்பூர் சுல்தான் மேற்கொண்ட படையெடுப்பு தஞ்சாவூரின் வளமான வேளாண் நிலங்களை பாழ்படுத்தியதால் மேலும் பல மக்கள் அடிமைகள் ஆயினர்)**

61) பிரஞ்சு கிழக்கிந்திய கம்பெனி தோன்றிய ஆண்டு எது?

A) 1661 ஆம் ஆண்டு

B) 1662 ஆம் ஆண்டு

C) 1663 ஆம் ஆண்டு

**D) 1664 ஆம் ஆண்டு**

**(குறிப்பு - இந்தியாவுடனான வணிக உறவை மேற்கொள்ள பிரெஞ்சுக்காரர்கள் 1527ஆம் ஆண்டிலேயே முயற்சிகள் மேற்கொண்டனர். போர்த்துக்கீசியர்களாளும் டச்சுக்காரர்களும் தூண்டப்பட்ட பிரெஞ்சுக்காரர்கள், 1664 இல் உருவாக்கிய பிரஞ்சு கிழக்கிந்திய கம்பெனி மூலம் தங்கள் வணிக செயல்பாடுகளை தொடங்கினர்)**

62) கீழ்க்காணும் எந்த கிழக்கிந்திய கம்பெனி தனியார் வணிக நிறுவனமாக அல்லாமல் அரசின் திட்டமாக இந்தியாவில் உதித்தது?

A) ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி

B) டச்சுக்காரர் கிழக்கிந்திய கம்பெனி

C) போர்த்துகீசிய கிழக்கிந்திய கம்பெனி

**D) பிரஞ்சு கிழக்கிந்திய கம்பெனி**

**(குறிப்பு - ஏனைய ஐரோப்பிய நாடுகளின் வணிக நிறுவனங்கள் தனியார் வணிக நிறுவனங்களாக இருக்க, பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி அரசர் பதினான்காம் லூயியின் திட்டமாக அமைந்தது. அவருடைய நிதி அமைச்சரான கோல்பேர், பிரஞ்சு கிழக்கிந்திய கம்பெனி நிறுவப்படுவதற்கு காரணமாக இருந்தார்)**

63) இந்தியாவிலிருந்த பிரெஞ்சு முகவரான பெர்பர் எப்போது முகலாய பேரரசர் அவுரங்கசீப்பிடமிருந்து அனுமதி ஆணை பெற்றார்?

A) செப் 4, 1665

**B) செப் 4, 1666**

C) செப் 4, 1667

D) செப் 4, 1668

**(குறிப்பு - 1602 ஆம் ஆண்டு பிரெஞ்சு வணிகர்கள் ஆப்பிரிக்காவில் உள்ள மடகாஸ்கரை அடைந்தனர். மடகாஸ்கரை தங்களின் காலனி ஆதிக்க பகுதியாக கொண்டிருந்தாலும், 1674இல் கடற்கரையோரம் உள்ள ஒரு சிறு வணிக முகாமை தவிர ஏனைய இடங்களை கைவிட நேர்ந்தது)**

64) சாந்தோமில் இருந்தும், மயிலாப்பூரில் இருந்தும் டச்சுக்காரரை வெளியேற்றுவதில் பிரஞ்சுக்காரர்கள் எந்த ஆண்டு வெற்றி கண்டனர்?

A) 1666 ஆம் ஆண்டு

**B) 1672 ஆம் ஆண்டு**

C) 1678 ஆம் ஆண்டு

D) 1684 ஆம் ஆண்டு

**(குறிப்பு - இந்தியாவில் காலூன்ற வலுவான இடம் தேவை என்று உணர்ந்த நிதியமைச்சர் கோல்பேர், ஜேக்கப் பிளான்குயிட் என்பவரின் தலைமையில் கப்பல் படை ஒன்றை அனுப்பி வைத்தார். சாந்தோம், மயிலாப்பூர் ஆகிய இடங்களிலிருந்து டச்சுக் காரர்களை வெளியேற்றுவதில் பிரஞ்சுக்காரர்கள் வெற்றிகண்டனர்)**

65) டச்சுக்காரர்களை விரட்டுவதற்கு பிரஞ்சுக்காரர்கள் யாரிடம் துணை கோரினர்?

**A) பிஜப்பூர் சுல்தான்**

B) கோல்கொண்டா சுல்தான்

C) அகமது நகர் சுல்தான்

D) ஐதராபாத் சுல்தான்

**(குறிப்பு - டச்சுக்காரர்களுக்கு எதிராக பீஜப்பூர் சுல்தானின் பிரதிநிதியான உள்ளூர் ஆளுநர் ஷேர்கான் லோடியின் உதவியை பிரஞ்சுக்காரர்கள் நாடினர். பிஜப்பூரின் எதிரியான கோல்கொண்டா சுல்தானோடு டச்சுக்காரர் நட்பு கொண்டனர்)**

66) மடகாஸ்கரில் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் சூரத் வந்த__________ என்பவர் புதுச்சேரியின் ஆளுநர் ஆனார்.

**A) பிரான்சிஸ் மார்டின்**

B) பிரான்சிஸ் வில்லியம்

C) பிரான்சிஸ் சேவியர்

D) பிரான்சிஸ் டேவிட்

**(குறிப்பு - 1673இல் புதுச்சேரி ஒரு சிறிய மீனவ கிராமமாக இருந்தது. மடகாஸ்கரில் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் சூரத் வந்த பிரான்சிஸ் மார்டின் என்பவர் புதுச்சேரியின் ஆளுநர் ஆனார். இந்தியாவில் பிரஞ்சு குடியேற்றங்களின் அதிகார மையமாக அதை உருவாக்கினார்)**

67) பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து டச்சுக்காரர்கள் புதுச்சேரியை எந்த ஆண்டு கைப்பற்றினர்?

A) 1690 இல்

**B) 1693 இல்**

C) 1696 இல்

D) 1699 இல்

**(குறிப்பு - பிரான்சும், ஹாலந்தும் 1672 இல் இருந்து தொடர்ந்து போர்கள் செய்து கொண்டிருந்தன. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுக்கு போதுமான நிதி, ஆயுதம், வீரர்கள் இல்லை. ஏனெனில் அவை வங்காளத்தில் இருந்த மற்றொரு பிரெஞ்சுக் குடியேற்றமான சந்தன்நகருக்கு கொண்டு செல்லப்பட்டு இருந்தன)**

68) 1697ஆம் ஆண்டு எந்த உடன்படிக்கையின்படி புதுச்சேரி மீண்டும் பிரெஞ்சுக்காரர்களிடம் தரப்பட்டது?

A) பேட்ரிக் உடன்படிக்கை

**B) ரிஸ்விக் உடன்படிக்கை**

C) மார்கஸ் உடன்படிக்கை

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - 1697ஆம் ஆண்டு ரிஸ்விக் உடன்படிக்கையின் படி புதுச்சேரி மீண்டும் பிரெஞ்சுக்காரர்களிடம் தரப்பட்டது.இருந்த போதும் 1699ஆம் ஆண்டில் தான் அது பிரஞ்சுக்காரர் வசம் ஒப்படைக்கப்பட்டது. 1706இல் பிரான்சிஸ் மார்டின் இயற்கை எய்தும் வரை அதன் ஆளுநராக இருந்தார்)**

69) பிரஞ்சுக்காரர்கள் மேற்கொண்ட பெரு முயற்சியின் விளைவாக ________ இல் மாகியையும், ________இல் காரைக்காலையும் பெற்றனர்.

A) 1723, 1735

B) 1725, 1737

C) 1727, 1739

**D) 1725, 1739**

**(குறிப்பு - வங்காள பகுதிகளில் காசிம் பஜார், சந்தன் நகர், பாலசோர் ஆகிய இடங்களில் தங்களது குடியேற்றங்களையும் நிறுவி விரிவுபடுத்துவதில் பிரெஞ்சுக்காரர்கள் வெற்றி பெற்றனர்)**

70) பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு மிகுந்த இடங்களில் தவறானது எது?

I. புதுச்சேரி

II. காரைக்கால்

III. மாகி

IV. மசூலிப்பட்டினம்

A) I, II மட்டும் சரி

**B) I, II, III மட்டும் சரி**

C) II, III மட்டும் சரி

D) இவை எல்லாமே சரி

**(குறிப்பு - பியரி பெனாயிட் டூமாஸ் (1668-1745) என்பவர் புதுச்சேரியின் மற்றுமொரு சிறந்த ஆளுநர் ஆவார். இருந்தபோதிலும் தங்களை விட மிகவும் வலிமை வாய்ந்த போட்டியாளரான ஆங்கிலேயரின் பயமுறுத்தல்களை அவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது)**

71) நார்வே எந்த ஆண்டு வரை டென்மார்க்குடன் இணைந்து இருந்தது?

A) 1807 ஆம் ஆண்டு

B) 1809 ஆம் ஆண்டு

C) 1811 ஆம் ஆண்டு

**D) 1813 ஆம் ஆண்டு**

**(குறிப்பு - டென்மார்க் இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் குடியேற்றங்களை கொண்டிருந்தது. நார்வே 1813ஆம் ஆண்டு வரை டென்மார்க் உடன் இணைந்து இருந்தது)**

72) இந்தியாவில் டேனியர்கள் வசம் இருந்த பகுதிகளில் கீழ்க்கண்டவை களில் சரியானது எது?

I. தரங்கம்பாடி

II. செராம்பூர்

III. நிக்கோபார் தீவுகள்

IV. கண்ணூர்

A) I, II மட்டும் சரி

**B) I, II, III மட்டும் சரி**

C) II, III, IV மட்டும் சரி

D) இவை எல்லாமே சரி

**(குறிப்பு - தமிழ்நாட்டின் தரங்கம்பாடி, மேற்கு வங்காளத்தில் செராம்பூர், நிக்கோபார் தீவுகள் ஆகியன தனியார் வசமிருந்த பகுதிகளாகும்)**

73) டேனிய கிழக்கிந்திய கம்பெனி உருவான நாள் எது?

A) மார்ச் 11, 1616

B) மார்ச் 13, 1616

C) மார்ச் 15, 1616

**D) மார்ச் 17, 1616**

**(குறிப்பு - 1616, மார்ச் 17 ஆம் நாள், டென்மார்க் அரசர் நான்காம் கிறிஸ்டியன் ஒரு பட்டயத்தை வெளியிட்டதன் மூலம் டேனிய கிழக்கிந்திய கம்பெனியை உருவாக்கினார். டேனிய வணிகர் இடையே இந்நிறுவனத்திற்கு பெரும் ஆதரவு ஏதுமில்லை)**

74) டேனியர்களின் வணிக இயக்குனரான ராபர்ட் கிராபி என்பவர் யாருடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின்படி தரங்கம்பாடியையும் அதில் கோட்டைகட்டிக் கொள்ளும் உரிமையையும் பெற்றனர்?

A) மதுரை அரசர்

B) ராமநாதபுரம் அரசர்

**C) தஞ்சாவூர் அரசர்**

D) புதுக்கோட்டை அரசர்

**(குறிப்பு - ராபர்ட் கிராப்பி என்னும் டேனிய வணிக இயக்குனர் தஞ்சாவூர் நாயக்க அரச ரோடு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டார்.1620ஆம் ஆண்டு, நவம்பர் 20ஆம் நாள் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி தரங்கம்பாடியில் ஒரு கோட்டை கட்டும் உரிமையைப் பெற்றனர்)**

75) 1648ஆம் ஆண்டு முதலாவது டேனிய கிழக்கிந்திய கம்பெனியை கலைத்தவர் யார்?

**A) நான்காம் கிறிஸ்டியன்**

B) இரண்டாம் கிறிஸ்டியன்

C) பிரடெரிக்

D) இரண்டாம் வில்லியம் ஹென்றி

**(குறிப்பு - டேனியர்கள் தரங்கம்பாடியில் ஒரு கோட்டையையும், மசூலிப்பட்டினத்தில் ஒரு கிடங்கையும் அமைத்தனர்.பாலசோரிலும், ஹுக்ளி ஆற்றின் அருகே உள்ள பிப்ளி என்ற இடத்திலும் வணிக முகாம்கள் அமைக்கப்பட்டன)**

76) இரண்டாவது டேனிய கிழக்கிந்திய கம்பெனி எப்போது தொடங்கப்பட்டது?

A) 1693 இல்

**B) 1696 இல்**

C) 1698 இல்

D) 1699 இல்

**(குறிப்பு - இரண்டாவது டேனிய கிழக்கிந்திய கம்பெனி 1696இல் தொடங்கப்பட்டது. டென்மார்க்கிர்க்கும் தரங்கம்பாடிக்கும் இடையிலான வணிகம் மீண்டும் நடைபெறத் தொடங்கியது.)**

77) டென்மார்க்கிலிருந்து முதன்முதலாக இரண்டு லுத்தரன் சமயப் பரப்பாளர்கள் எப்போது இந்தியா வந்தனர்?

A) 1702ஆம் ஆண்டு

B) 1704ஆம் ஆண்டு

**C) 1706ஆம் ஆண்டு**

D) 1708ஆம் ஆண்டு

**(குறிப்பு - 1706ஆம் ஆண்டு ஜுன் 9ஆம் நாள் டென்மார்க்கில் இருந்து முதன் முதலாக இரண்டு லுத்தரன் சமயப் பரப்பாளர்கள் இந்தியா வந்தனர். டேனியர்கள் 1855ஆம் ஆண்டில் அந்தமானிலும் நிக்கோபாரிலும் குடியேறினர்)**

78) 1839 ஆம் ஆண்டு டேனியர்களால் ___________ ஆங்கிலேயருக்கு விற்கப்பட்டது.

A) தரங்கம்பாடி

**B) செராம்பூர்**

C) பாலசோர்

D) பிப்ளி

**(குறிப்பு - 1839 ஆம் ஆண்டு டேனியர்கள் செராம்பூர் பகுதியை ஆங்கிலேயருக்கு விற்றனர். தரங்கம்பாடி உள்ளிட்ட ஏனைய குடியேற்றங்கள் 1845ஆம் ஆண்டு விற்கப்பட்டன.)**

79) பார்த்தலோமியஸ் சீகன் பால்கு எந்த ஆண்டு விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்?

A) 1711 ஆம் ஆண்டு

B) 1713 ஆம் ஆண்டு

**C) 1715 ஆம் ஆண்டு**

D) 1717 ஆம் ஆண்டு

**(குறிப்பு - சீகன்பால்கு ஓர் அச்சுக் கூடத்தை நிறுவினார். தமிழ் மொழி, இந்திய மதங்கள், பண்பாடு குறித்த நூல்களை வெளியிட்டார்.1715ஆம் ஆண்டு விவிலியத்தின் புதிய ஏற்பாட்டை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்)**

80) டேனிய கிறிஸ்துவ மதப்பரப்பாளரான பார்த்தலோமியஸ் சீகன் பால்கு எந்த ஆண்டு மறைந்தார்?

A) 1713, பிப்ரவரி 23ஆம் நாள்

B) 1715, பிப்ரவரி 23ஆம் நாள்

C) 1717, பிப்ரவரி 23ஆம் நாள்

**D) 1719, பிப்ரவரி 23ஆம் நாள்**

**(குறிப்பு - பார்த்தலோமியஸ் சீகன்பால்கு 1718ஆம் ஆண்டு தேவாலய கட்டிடமும், உள்ளூர் மத குருமார்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒரு இறையியல் பயிற்சி பள்ளியையும் நிறுவினார்.)**

81) இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ், வில்லியம் ஹாக்கின்ஸ் மூலம் இந்தியாவுடன் இயல்பாக வணிகம் செய்யும் அனுமதியை எந்த ஆண்டு முகலாய அரசர் ஜஹாங்கீரிடம் பெற்றார்?

A) 1610 இல்

**B) 1611 இல்**

C) 1612 இல்

D) 1613 இல்

**(குறிப்பு - ஆங்கிலேயர் சூரத் நகரத்தில் சில வணிக உரிமைகளைப் பெற்றனர். குஜராத்தின் முகலாய ஆளுநரான இளவரசர் குர்ரம் ஆங்கிலேயருக்கு வணிக உரிமைகளை வழங்கினார். ஆனால் இப்பகுதிகளில் போர்த்துக்கீசியர் மிகுந்த செல்வாக்குப் பெற்று இருந்ததால் ஆங்கிலேயரால் சுதந்திரமாக செயல்பட முடியவில்லை)**

82) சந்திரகிரி அரசர் எந்த ஆண்டு சென்னையை ஆங்கிலேயர்களுக்கு கொடுத்து அதில் கோட்டை கட்டும் அனுமதியை வழங்கினார்?

A) 1637 ஆம் ஆண்டு

B) 1638 ஆம் ஆண்டு

**C) 1639ஆம் ஆண்டு**

D) 1640ஆம் ஆண்டு

**(குறிப்பு - சென்னையில் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட கோட்டை புனித ஜார்ஜ் கோட்டை எனப் பெயரிடப்பட்டது. இந்திய மண்ணில் ஆங்கிலேய கிழக்கிந்திய வணிகக்குழு முதன்முதலாக பெற்ற நிலப்பகுதி இதுவே.)**

83) அவுரங்கசீப் எந்த ஆண்டு கோல்கொண்டாவினை கைப்பற்றி அதனை முகலாய ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார்?

A) 1681 இல்

B) 1683 இல்

C) 1685இல்

**D) 1687 இல்**

**(குறிப்பு - சென்னையின் கம்பெனியின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் மீது 1645 ம் ஆண்டு கோல்கொண்டா அரசர் படையெடுத்து பாழ்படுத்தினார். 1687ஆம் ஆண்டு அவுரங்கசீப் கோல்கொண்டா**

**கைப்பற்றி கம்பெனியின் பகுதிகளை முகலாய ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். ஆனால் கிழக்கிந்திய கம்பெனிக்கு வழங்கப்பட்டிருந்த உரிமைகள் தொடர்ந்தன)**

84) பொருத்துக.

A) 1668ஆம் ஆண்டு - a) சென்னை மாகாணம் உருவாக்கம்

B) 1640ஆம் ஆண்டு - b) அவுரங்கசீப் கோல்கொண்டா மீது படையெடுப்பு

C) 1687ஆம் ஆண்டு - c) இரண்டாம் சார்லஸ் பம்பாய் தீவை பரிசாக பெறுதல்

D) 1684ஆம் ஆண்டு - d) புனித ஜார்ஜ் கோட்டை கட்டுதல்

**A) I-c, II-d, III-b, IV-a**

B) I-d, II-b, III-c, IV-a

C) I-b, II-d, III-a, IV-c

D) I-a, II-d, III-b, IV-c

**(குறிப்பு - 1683ஆம் ஆண்டு பட்டயம் கம்பெனிக்கு படைகளை உருவாக்கி கொள்ளவும், அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகியவற்றில் உள்ள நாடுகளுக்கு எதிராக போர் அறிவிப்பு செய்யவும் அமைதி உடன்படிக்கை மேற்கொள்ளவும் உரிமை வழங்கியது)**

85) சென்னை நகராட்சி உருவான ஆண்டு எது?

A) 1682ஆம் ஆண்டு

B) 1684ஆம் ஆண்டு

C) 1686ஆம் ஆண்டு

**D) 1688ஆம் ஆண்டு**

**(குறிப்பு - 1688 இல் சென்னை ஒரு மேயரையும் 10 உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவையும் கொண்ட நகராட்சி அரசை பெற்றிருந்தது..1693இல் சென்னையை சுற்றி உள்ள மூன்று கிராமங்களையும், 1703இல் மேலும் 5 கிராமங்களையும் பெற்றது)**

86) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. 1608 ஆம் ஆண்டு வங்காளத்தில் இருந்த ஆங்கிலேயர்கள் வணிக உரிமைகளைப் பெற்றனர்.

II. வங்காளத்தில் ஆங்கிலேயர்களுக்கு மனித உரிமை அளித்தவர் முகலாய அரசர் ஷாஜகானின் இரண்டாவது மகனும் வங்காளத்தின் ஆளுநரும் ஆன ஷா சுஜா என்பவராவார்.

III. 1685இல் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி சுதனுதி என்ற இடத்தில் தனது முதல் குடியேற்றத்தை நிறுவியது. இவ்விடமே பிற்காலத்தில் கல்கத்தா ஆயிற்று

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - 1690 இல் கிழக்கிந்திய கம்பெனி சுதநுதி என்ற இடத்தில் தனது முதல் குடியேற்றத்தை நிறுவியது. இவ்விடமே பிற்காலத்தில் கல்கத்தாவாயிற்று. 1696இல் அங்கு ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி கோட்டை கட்டியது.)**

87) புனித வில்லியம் கோட்டை எப்போது மாகாண தலைமையிடம் ஆயிற்று?

A) 1760 இல்

B) 1765 இல்

**C) 1770 இல்**

D) 1775 இல்

**(குறிப்பு - 1698 ஆம் ஆண்டு சுதனுதி, காளிகாட்டா, கோவிந்த பூர் ஆகிய கிராமங்களில் ஜமீன்தாரி உரிமையை ஆங்கிலேயே கிழக்கிந்திய கம்பெனி பெற்றது. இதற்கு பதிலாக கம்பெனி ஆண்டுதோறும் ரூபாய் 1200 செலுத்தியது. கல்கத்தாவில் கட்டப்பட்ட புனித வில்லியம் கோட்டை 1870இல் மாகாணத்தின் தலைமையிடம் ஆயிற்று)**

88) ஆஸ்திரிய அரசர் ஆறாம் சார்லஸ் எந்த ஆண்டு காலமானார்?

**A) 1740 இல்**

B) 1741 இல்

C) 1742 இல்

D) 1743 இல்

**(குறிப்பு - ஆஸ்திரிய அரசர் ஆறாம் சார்லஸ் 1740 இல் காலமானார். அவரைத் தொடர்ந்து அவருடைய மகள் மரிய தெரசா அரச பதவியை ஏற்றார். மரிய தெரசாவின் உரிமையை ஏற்க மறுத்த பிரான்ஸ், ஜெர்மானிய மொழி பேசும் பகுதிகளான பவேரியா, சாக்ஸனி, ஸ்பெயின் ஆகிய நாடுகளோடு மரியதெராசாவுக்கு எதிராக கைகோர்த்தது)**

89) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - முதல் கர்நாடகப் போரின் போது புதுச்சேரியின் ஆளுநராக இருந்தவர் துய்ப்பிளே ஆவார்.

கூற்று 2 - முதல் கர்நாடகப் போரின் போது ஆங்கில கப்பல் படைக்கு தலைமை ஏற்றவர் பைடன் ஆவார்.

கூற்று 3 - முதல் கர்நாடகப் போர் 1746ஆம் ஆண்டு, ஜூலை 6ஆம் நாள் நிகழ்ந்தது.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - இப்போரில் தோல்வியடைந்த பைடன் ( ஆங்கில கப்பல் படைக்கு தலைமை ஏற்றவர்) இங்கிலாந்தில் இருந்து வரவேண்டிய கப்பல்களை எதிர்பார்த்து கல்கத்தாவிலுள்ள ஹுக்ளிக்கு பின்வாங்கினார்)**

90) முதல் கர்நாடகப் போரில் வெற்றி பெற்ற பிரஞ்ச் கப்பற்படை சென்னையை எந்த ஆண்டு கைப்பற்றியது?

A) 1746ஆம் ஆண்டு, செப் 6

**B) 1746ஆம் ஆண்டு, செப் 16**

C) 1746ஆம் ஆண்டு, செப் 26

D) 1746ஆம் ஆண்டு, செப் 30

**(குறிப்பு - முதல் கர்நாடகப் போரில் வெற்றி பெற்ற பிரெஞ்சு கப்பல் படை பாதுகாப்பு பற்றி இருந்த சென்னையை 1746 ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் கைப்பற்றியது. சென்னை ஆளுநர் மோர்ஸ் சரணடையுமாறு அறிவுறுத்தப்பட்டார். எனினும் அவர் ஆற்காடு நவாப் அன்வாருதீனின் உதவியை நாடினார்)**

91) ஐரோப்பாவில் இங்கிலாந்தும் பிரான்ஸும் ஐ லா சபேல் (Aix La Chapelle) என்ற உடன்படிக்கையில் எந்த ஆண்டு கையெழுத்திட்டன?

A) 1746ஆம் ஆண்டு

B) 1747ஆம் ஆண்டு

**C) 1748ஆம் ஆண்டு**

D) 1749ஆம் ஆண்டு

**(குறிப்பு - 1748ஆம் ஆண்டு, ஐரோப்பாவில் இங்கிலாந்தும் பிரான்சும் ஐ லா சபேல் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. இந்த உடன்படிக்கையின் படி இந்தியாவில் ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்கள் மோதல்களை முடித்துக் கொண்டனர். பிரெஞ்சுக்காரர்கள் சென்னையை ஆங்கிலேயர்களிடம் திருப்பி தருவது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது)**

92) ஐ லா சபேல் ( Aix La Chapelle) என்னும் உடன்படிக்கையின்படி ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களுக்கு வட அமெரிக்காவின் _________ என்ற இடத்தை கொடுப்பது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

A) கலிபோர்னியா

B) வாஷிங்டன்

**C) லூயிஸ்பர்க்**

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - ஐ லா சபேல் (Aix La chapelle) உடன்படிக்கையின்படி இந்தியாவில் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் மோதல்களை முடித்துக் கொண்டனர். பிரெஞ்சுக்காரர் சென்னையை**

**ஆங்கிலேயருக்குத் திருப்பித் தருவது என்றும், அதற்கு மாறாக வட அமெரிக்காவில் லூயிஸ் பர்க் என்ற இடத்தை பிரெஞ்சுக்காரருக்கு கொடுப்பது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது)**

93) முதல் கர்நாடகப் போரின் போது நடந்தவற்றுள் கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - புதுச்சேரியின் புதிய ஆளுநர் துய்ப்பிளே, ஆற்காடு நவாபிடம் ஒரு வார காலத்திற்கு புனித ஜார்ஜ் கோட்டையில் நவாபின் கொடியை பறக்க விட்ட பின்னர் கோட்டையை ஆங்கிலேயர் வசம் ஒப்படைத்து விடுவதாக உறுதிமொழி அளித்தார்.

கூற்று 2 - பிரெஞ்சுக்காரர்கள் ஆற்காடு நவாபுக்கு ரூபாய் 40 ஆயிரம் மதிப்புள்ள பரிசுகளை வழங்கினார்.

கூற்று 3 - 1749ஆம் ஆண்டு ஐ லா சபேல் என்ற உடன்படிக்கை பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே கையெழுத்தானது.

**A) கூற்று 1, 2 மட்டும் சரி**

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

D) எல்லா கூற்றுகளும் சரி

**(குறிப்பு - ஐ லா சபேல் (Aix La Chapelle) என்னும் உடன்படிக்கை பிரெஞ்சுக் காரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே ஐரோப்பாவில் 1748இல் கையெழுத்தானது)**

94) ஹைதராபாத் நிஜாம் ஆசப்ஜா 1748இல் இறந்த போது, அவருடைய மகன் முசாபர் ஜங் அடுத்த நிஜமாக வருவதற்கு ஆதரவு அளித்தவர் யார்?

**A) துய்ப்ளெ**

B) முகமது அலி

C) கர்நாடக நவாப்

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - முதலாம் கர்நாடகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே அமைதி நிலவியது. ஆனால் இந்தியாவில் இவ்விரு காலனி நாடுகளாலும் அமைதியாக இருக்க முடியவில்லை. சுதேச அரசர்களை ஒருவருக்கு எதிராக மற்றொருவரை தூண்டிவிட்டனர்)**

95) ஹைதராபாத் நிஜாம் ஆசப்ஜா மறைவுக்குப் பின்னர் கீழ்காணும் எந்த மூவர் இடையே ஒரு முக்கூட்டு உடன்படிக்கை ஏற்பட்டது?

I. ஆற்காடு நவாப்.

II. கர்நாடக நவாப்

III. ஹைதராபாத் நிஜாம்

IV. பிரெஞ்சுக்காரர்

A) I, II, III மூவரிடையே

**B) II, III, IV மூவரிடையே**

C) I, III, IV மூவரிடையே

D) எல்லாமே தவறு

**(குறிப்பு - ஐதராபாத் நிஜாம் ஆசப்ஜா, மறைவுக்குப் பின்னர் அவரது பேரன் முசாபர் ஜங்க் அடுத்த நிஜமாக ஆவதற்கு துய்ப்ளே ஆதரவை தெரிவித்தார். ஆற்காட்டில் முகமது அலிக்கு எதிராக சந்தாசாகிப்பை ஆதரித்தார். பிரெஞ்சுக்காரர், நிஜாம். கர்நாடக நவாப் ஆகியோரிடையே ஒரு முக்கூட்டு உடன்படிக்கை ஏற்பட்டது)**

96) கர்நாடகத்தில் 1749இல் நடைபெற்ற ஆம்பூர் போரில் கொல்லப்பட்ட ஆற்காடு நவாப்?

A) நவாப் சந்தா சாகிப்

**B) நவாப் அக்பருதீன்**

C) நவாப் அன்வருதீன்

D) நவாப் முகம்மது அலி கான்

**(குறிப்பு - பிரெஞ்சுக்காரர் இன் செல்வாக்கை குறைப்பதற்காக ஆங்கிலேயர் ஹைதராபாத் அரியணைக்கு போட்டியாளரான நாஸிர் ஜங்கையும், கர்நாடகத்தில் 1749இல் நடைபெற்ற ஆம்பூர் போரில் நவாஸுதீன் கொல்லப்பட்ட பின்னர் அரியணைக்கு முகமது அலியையும் ஆதரித்தனர்)**

97) முசாபர் ஜங்க் ஹைதராபாத் நிஜமாக எந்த ஆண்டு பொறுப்பேற்றார்?

**A) 1750 இல்**

B) 1751 இல்

C) 1752 இல்

D) 1753 இல்

**(குறிப்பு - ஆம்பூர் போரை தொடர்ந்து வெற்றிபெற்ற படைகள் தக்காணத்தில் நுழைந்தன. பிரெஞ்சு படைகளால் நாஸிர் ஜங் கொல்லப்பட்டார். முஜாபர் ஜங் 1750 டிசம்பரில் ஐதராபாத்தின் நிஜமாக ஆக்கப்பட்டார்)**

98) ஆம்பூர் போர் நடைபெற்ற ஆண்டு எது?

**A) 1750 இல்**

B) 1751 இல்

C) 1752 இல்

D) 1753 இல்

**(குறிப்பு - ஹைதராபாத் நிஜாமிற்கு உரிமை கோரிய முஜாபர் ஜங் கர்நாடக அரியணைக்கு உரிமை கோரிய சந்தா சாகிப் ஆகிய இருவரும் நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட பிரெஞ்சுக்காரர் படைகளின்**

**உதவியோடு அன்வருதீன் படைகளைத் தாக்கி பெரும் சேதத்தை ஏற்படுத்தினர். முடிவில் அன்வர்தீன் கொல்லப்பட்டார்)**

99) ஆம்பூர் போருக்குப் பின்னர் நடந்தவற்றுள் கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

I. முசாபர் ஜங் கொல்லப்பட்டார், உடனடியாக நாஸிர் ஜங்கின் சகோதரனான சலாபத் ஜங் என்பாரை பிரெஞ்சு தளபதி புஸ்ஸி அரியணை ஏற்றினார்.

II. நிஜாம் இடம் இருந்தும், ஆற்காடு நவாப்பிடம் இருந்தும் துய்ப்பிளே பெருமளவு பலத்தையும் நிலங்களையும் பெற்றார்.

III. சந்தாசாகிப் ஆங்கிலேயரின் செல்வாக்கை குறைக்க வேண்டும் என்பதற்காகவும் முகமது அலியை கைது செய்யவும் நிஜாம் மற்றும் பிரெஞ்சுக்காரர் உதவியுடன் திருச்சியை கைப்பற்ற முடிவு செய்தார்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - ஆம்பூர் போரில் நவாப் அன்வருதீன் கொல்லப்பட்ட பின்னர் அரியணைக்கு முகமது அலியை ஆங்கிலேயர்கள் ஆதரித்தனர். முகமது அலி நவாப் அன்வாருதீனின் மகன் ஆவார். ஆம்பூர் போரின் போது, இவர் திருச்சிக்கு தப்பிச் சென்றார்)**

100) பிரஞ்சுக்காரர்களும், நவாபும் திருச்சி முற்றுகையில் தீவிரமாக இருக்கையில் ஆற்காட்டின் மீது திடீர் தாக்குதல் தொடுக்க வேண்டும் என்ற கருத்தை முன் வைத்தவர் யார்?

A) துய்ப்பிளே

**B) ராபர்ட் கிளைவ்**

C) வில்லியம் பெண்டிங்

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - சந்தா சாகிப்பின் உதவியோடு திருச்சியை கைப்பற்ற வேண்டும் என துய்ப்ளெவும் உறுதி பூண்டிருந்தார். சந்தா சாகிப்பின் படையோடு பிரெஞ்சுப் படையினர் 900 பேர் சேர்ந்தனர். முகமது அலி 5000 படை வீரர்களையும் தனக்கு உதவியாக 600க்கும் மிகாத ஆங்கில வீரர்களை மட்டும் கொண்டிருந்தார்)**

101) ராபர்ட் கிளைவ் முதல் முறை ஆளுநராக இருந்தபோது எந்த போரில் வெற்றி பெற்றார்?

**A) பிளாசிப் போர்**

B) பக்சார் போர்

C) வந்தவாசி போர்

D) ஆம்பூர் போர்

**(குறிப்பு - ராபர்ட் கிளைவ் சென்னை மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார். முதல் முறை ஆளுநராக இருந்தபோது (1755-1760) பிளாசிப் போரில் வெற்றிபெற்று இந்தியாவில் ஆங்கிலேய பேரரசிற்கு அடித்தளமிட்டார்)**

102) ராபர்ட் கிளைவ் எவ்வாறு இறந்தார்?

A) சுடப்பட்டு இறந்தார்

B) தூக்கில் இடப்பட்டு இறந்தார்

**C) தற்கொலை செய்து கொண்டார்**

D) போரின் போது இறந்தார்

**(குறிப்பு - ராபர்ட் கிளைவ் இங்கிலாந்து திரும்பிய போது தன் மீதான ஊழல் குற்றச்சாட்டு குறித்து பாராளுமன்ற விசாரணையை எதிர்கொண்டார். ராபர்ட் கிளைவ் தன் மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டபோதிலும் தற்கொலை செய்து கொண்டார்)**

103) ராபர்ட் கிளைவ் ஆற்காட்டை எந்த ஆண்டு கைப்பற்றினார்?

A) 1750, ஆகஸ்ட் 31ஆம் நாள்

B) 1751, ஆகஸ்ட் 31ஆம் நாள்

**C) 1752, ஆகஸ்ட் 31ஆம் நாள்**

D) 1753, ஆகஸ்ட் 31ஆம் நாள்

**(குறிப்பு - 1752, ஆகஸ்ட் 31ஆம் நாள் ஆற்காட்டை கைப்பற்றிய ராபர்ட் கிளைவ் ராஜா சாகிப்பின் 53 நாள் கோட்டை முற்றுகையையும் தாக்குப் பிடித்தார். ராஜா பாதிப்பிற்கு புதுச்சேரியில் இருந்த பிரஞ்சுக்காரர் உதவினர்)**

104) சந்தாசாகிப் எந்த போரின் போது கொல்லப்பட்டார்?

A) வேலூர் போர்

**B) காவேரிப்பாக்கம் போர்**

C) ஆம்பூர் போர்

D) ஆற்காடு போர்

**(குறிப்பு - ஆரணி போரில் ஆங்கிலேயரும் மராட்டிய அரசர் முராரிராவும் தங்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான பிரஞ்சு மற்றும் ஆற்காடு படைகளை எதிர் கொண்டனர். எனினும் காவேரிப்பாக்கத்தில் நடைபெற்ற போரில் சந்தாசாகிப் பிடிபட்டு கொல்லப்பட்டார். முகமது அலி எதிர்ப்பு ஏதும் இல்லாமல் கர்நாடகத்தின் அரசரானார்)**

105) இரண்டாம் கர்நாடக போருக்குப் பின்னர் புதுச்சேரி உடன்படிக்கை எந்த ஆண்டு கையெழுத்தானது?

A) 1753 இல்

**B) 1755 இல்**

C) 1757 இல்

D)1759 இல்

**(குறிப்பு - ஐரோப்பாவில் இங்கிலாந்தும் பிரான்சும் எப்பொருளும் ஈடுபடாத நிலையில் இந்தியாவில் தங்கள் காலணிகள் ஊரில் ஈடுபடுவதை கண்டனம் செய்தனர். பிரெஞ்சு அரசாங்கம் துய்ப்ளேவை திரும்ப அழைத்துக் கொண்டது. 1755 இல் ஆங்கிலேயருடன் புதுச்சேரி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது)**

106) மூன்றாம் கர்நாடகப் போர் நடைபெற்ற காலம் எது?

A) 1756-1765

**B) 1756-1763**

C) 1755-1765

D) 1753-1763

**(குறிப்பு - ஐரோப்பாவில் 1756இல் தொடங்கிய ஏழு ஆண்டு போரின் விளைவே மூன்றாம் கர்நாடகப் போர் ஆகும். உலகளாவிய இம்மோதலில் முக்கிய எதிரிகளான இங்கிலாந்தும் பிரான்சும் போரிட்டன. இப்போ வட அமெரிக்காவிலும் மேற்குஆப்பிரிக்காவிலும் நடைபெற்றது)**

107) இருட்டு அறை துயரம் (Black Hole Tragedy) என ஆங்கிலேய ஆவணங்களில் சுட்டும் நிகழ்வு நடந்த ஆண்டு எது?

**A) ஜூன், 1756**

B) ஜூன், 1757

C) ஜூன், 1758

D) ஜூன், 1759

**(குறிப்பு - வங்காள நவாப் பால் கைது செய்யப்பட்ட 146 ஐரோப்பியர் 18க்கு 15அடி அளவுள்ள ஒரு அறையில் அழைக்கப்பட்டதாகவும் அவர்களில் 23 பேர் மட்டுமே உயிர் பிழைக்க மற்றவர்கள் மூச்சு திணறி இறந்து போனதாகவும் பழி சொல்லப்பட்டது.)**

108) பிளாசிப் போரின்போது ஆங்கிலேயப் படைக்கு தலைமை ஏற்றவர் யார்?

I. ராபர்ட் கிளைவ்

II. வாட்சன்

III. மேஜர் கில்லஸ்பி

A) I மட்டும்

**B) I, II மட்டும்**

C) I, III மட்டும்

D) II, III மட்டும்

**(குறிப்பு - வில்லியம் கோட்டையை சேர்ந்த ஆங்கில அதிகாரிகளின் இடர்பாடுகளை களைவதற்காக, வணிக குழு புனித ஜார்ஜ் கோட்டையில் இருந்து ஒரு வலுவான படைப்பிரிவை ராபர்ட் கிளைவ் மற்றும் வாட்சன் ஆகியோர் தலைமையில் அனுப்பி வைத்தது)**

109) பிளாசிப் போருக்குப் பின்னர் வங்காள நவாப் ஆனவர் யார்?

A) சிராஜ் உத் தௌலா

**B) மிர்சாபர்**

C) மீர் காசிம் நவாப்

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - பிளாசிப் போர் வணிக நிறுவனமாக இருந்த ஆங்கிலேயே கிழக்கிந்திய வணிகக் குழுவை வங்காளத்தின் மீது இறையாண்மை கொண்ட அரசியல் சக்தியாக மாற்றியது. சிராஜ்-உத்-தௌலா அதற்கு பதிலாக அவருக்கு துரோகம் இழைத்த மீர் ஜாபர் வங்காள நவாப் ஆக்கப்பட்டார். பின்னர் மிர்ஜாபருக்கு பதிலாக மீர் காசிம் நவாப் ஆக்கப்பட்டார்)**

110) பக்சார் போர் நடைபெற்ற ஆண்டு எது?

A) 1762 ஆம் ஆண்டு

**B) 1764 ஆம் ஆண்டு**

C) 1766 ஆம் ஆண்டு

D) 1768 ஆம் ஆண்டு

**(குறிப்பு - மீர்காசிம்நவாப், முகலாய அரசர் இரண்டாம் ஆலம் ஷா, அவத்தின் நவாபான சூஜா உத்தவுலா ஆகிய மூவரும் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக போரிட்டனர். ஆங்கிலேயே கிழக்கிந்திய படையே வெற்றி பெற்றது)**

111) பக்சார் போருக்குப் பின்னர் அலகாபாத் உடன்படிக்கையில்(1765இல்) கையெழுத்திட்டவர்கள் யார்?

I. ராபர்ட் கிளைவ்

II. முகலாய அரசர் இரண்டாம் ஷா ஆலம்

III.அவத்தின் நவாபான சூஜா உத்தவுலா

IV. மீர்காசிம்

**A) I, II மட்டும்**

B) I, III மட்டும்

C) I, IV மட்டும்

D) இவர்கள் அனைவரும்

**(குறிப்பு - 1765இல் அலகாபாத் உடன்படிக்கையில் ராபர்ட் கிளைவ், முகலாய அரசர் இரண்டாம் ஷா ஆலம் ஆகிய இருவரும் கையெழுத்திட்டனர். இந்த உடன்படிக்கையின் படி வணிகக் குழு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளில் திவானி உரிமையை பெற்றது.)**

112) இந்தியாவில் ஐரோப்பிய வணிகத் தளங்கள் இருந்த இடங்களை பொருத்துக.

I. டச்சுக்காரர் - a) சென்னை

II. ஆங்கிலேயர் - b) மாஹி

III. பிரெஞ்சுக்காரர் - c) கண்ணூர்

IV. போர்த்துக்கீசியர் - d) பழவேற்காடு

**A) I-d, II-a, III-b, IV-c**

B) I-d, II-b, III-a, IV-c

C) I-c, II-d, III-a, IV-b

D) I-d, II-c, III-a, IV-b

**(குறிப்பு - டேனியர்கள் தரங்கம்பாடி, ஆங்கிலேயர்கள் சென்னை, மும்பை, அகமதாபாத், ஆக்ரா போர்த்துக்கீசியர்கள் டாமன், கள்ளிக்கோட்டை, கொச்சின் பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரி, மாஹி போன்ற இடங்களில் தங்களது வணிகத் தளங்களை நிறுவினர்)**

113) மூன்றாம் கர்நாடகப் போருக்குப் பின்னர் பிரெஞ்சு அரசு இந்தியாவில் உள்ள பிரஞ்சு படைகளுக்கு தலைமை தளபதியாக யாரை அனுப்பி வைத்தது?

**A) கவுண்ட்-டி-லாலி**

B) புஸ்ஸி

C) துய்ப்பிளே

D) இவர்கள் யாரும் அல்ல

**(குறிப்பு - ஐரோப்பாவில் ஏழாண்டு போர் வெடித்த உடன், வங்காளத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்கு சொந்தமான சந்தன்நகரை ராபர்ட் கிளைவ் கைப்பற்றினார். இத்துடன் வங்காளத்தில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கும் முடிவுக்கு வந்தது. பிரெஞ்சு அரசு கவுண்ட்-டி-லாலி என்பவரை இந்தியாவில் உள்ள பிரெஞ்சு படைகளுக்கு தலைமை தளபதியாக அனுப்பிவைத்தது)**

114) பிரெஞ்சுக்காரர்கள் ராஜமுந்திரி மற்றும் மசூலிப்பட்டினத்தை முறையே ________ மற்றும் _________ ஆங்கிலேயர்களிடம் இழந்தனர்.

A) 1756 இலும், 1759 இலும்

B) 1756 இலும், 1758 இலும்

**C) 1758 இலும், 1759 இலும்**

D) 1759 இலும், 1760 இலும்

**(குறிப்பு - ஒருவேளை புதுச்சேரி தாக்கப்பட்டால் தனக்கு உதவியாக இருப்பதற்காக கவுண்ட்-டி-லாலி ஹைதராபாத்தில் இருந்த புஸ்ஸியை அழைத்தார். இடையில் தக்காண அரசியலில் மாற்றங்கள் வேகமாக நடைபெற்றன. ராஜாமுந்திரியை 1758இலும், மசூலிப்பட்டினத்தை 1759 இலும் பிரஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களிடம் இழந்தனர். ஹைதராபாத் நிஜாம் சலபத்ஜங் போரே செய்யாமல் ஆங்கிலேயருடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்)**

115) புஸ்ஸி மற்றும் லாலி ஆகியோரின் கூட்டுப் படை கீழ்காணும் எந்த இடத்தை கைப்பற்றியது?

A) சென்னை

B) திருச்சி

**C) காஞ்சிபுரம்**

D) தஞ்சாவூர்

**(குறிப்பு - லாலி முதலில் டேவிட் கோட்டையை கைப்பற்றினார். அடுத்து தஞ்சாவூர் முற்றுகையிடப்பட்டது. எனினும் தஞ்சாவூர் முற்றுகை கைவிடப்பட்டது. பின்னர் துசி மற்றும் லாலி ஆகியோரின் கூட்டுப் படை காஞ்சிபுரத்தை கைப்பற்றி சென்னையை கைப்பற்ற விரைந்தது)**

116) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - 1758ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் நாள் சென்னையில் முற்றுகையிட தொடங்கிய பிரெஞ்சுக்காரர்களால் 1759, பிப்ரவரி வரை சிறிதும் கூட முன்னேற முடியவில்லை.

கூற்று 2 - இதே சமயத்தில் சென்னையை விடுவிப்பதற்காக ஆங்கிலேய ஜெனரல் போகாக் ஒரு கப்பல் படையோடு இந்தியா வந்தார்.

கூற்று 3 - லாலி சென்னை முற்றுகையை கைவிட்டு காஞ்சிபுரம் செல்லும் கட்டாயத்திற்கு உள்ளானார்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - ஆங்கிலேயர்கள் வங்காளத்தில் தீவிரமாக செயல்பட்டு கொண்டிருந்ததால் சென்னையில் 800 ஆங்கில வீரர்களையும், 2500 இந்திய வீரர்களை மட்டுமே கொண்டிருந்தனர். எனினும் பிரெஞ்சு படைகளால் சென்னையை கைப்பற்ற முடியவில்லை. இரண்டு பக்கங்களிலும் பலத்த சேதம் ஏற்பட்டது. படைகளுக்கு தேவையான பொருட்களின் வரத்து சுருங்கியதால் பிரெஞ்சுக்காரர்களால் முற்றுகையை நீடிக்க முடியவில்லை)**

117) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. பிரெஞ்சு படைகளை ஆற்காட்டில் விட்டுவிட்டு லாலி புதுச்சேரி திரும்பினார். வந்தவாசியில் நோக்கி சென்ற ஆங்கிலப் படைகள் திடீரென காஞ்சிபுரத்தை தாக்கிக் கைப்பற்றின.

II. 1760, ஜனவரி மாதம் அயர் கூட், லாலி ஆகியோரிடையே வந்தவாசியில் நடைபெற்றது.

III. வந்தவாசி போரில் அயர் கூட் தோற்கடிக்கப்பட்டார்.

**A) I, II மட்டும் சரி**

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - 1760, ஜனவரி மாதம் இறுதிப் போர் சர் அயர் கூட், கவுண்ட்-டி-லாலி ஆகியோரிடையே வந்தவாசியில் நடைபெற்றது. இப்போரின் முடிவில் புஸ்ஸி சிறை பிடிக்கப்பட்டார். லாலி புதுச்சேரிக்கு பின்வாங்கினார். எனினும் புதுச்சேரி உடனடியாக முற்றுகையிடப்பட்டது)**

118) புதுச்சேரி எந்த நாளில் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது?

**A) 1761, ஜனவரி 4ஆம் நாள்**

B) 1761, ஜனவரி 14ஆம் நாள்

C) 1761, ஜனவரி 15ஆம் நாள்

D) 1761, ஜனவரி 20ஆம் நாள்

**(குறிப்பு - 1761ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் நாள் போர் முடிவுக்கு வந்தது. புதுச்சேரி ஆங்கிலேயர் வசம் வீழ்ந்தது. லாலி கைது செய்யப்பட்டு பிரஞ்சு அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டார். தன்னுடைய நாட்டில் லாலி விசாரணை செய்யப்பட்டு அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது)**

119) பாரிசு உடன்படிக்கை எந்த ஆண்டு கையெழுத்தானது?

A) 1761 இல்

**B) 1763 இல்**

C) 1765 இல்

D) 1767 இல்

**(குறிப்பு - ஏழு ஆண்டுகள் நடைபெற்ற போரின் இறுதியில், 1763ஆம் ஆண்டு பாரிஸ் உடன்படிக்கை கையெழுத்தானது. இந்த உடன்படிக்கையின்படி அனைத்து போர்களும் முடிவுக்கு வந்தன. இதன்படி புதுச்சேரியும், சந்தன்நகரும் மீண்டும் பிரெஞ்சுக்காரர்கள் வழங்கப்பட்டது)**

120) வந்தவாசி போரின் இறுதியில் பாரிசு உடன்படிக்கைக்கு பின்னர் பிரெஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் எது?

I. புதுச்சேரி, காரைக்கால்

II. ஏனாம், மாஹி

III. சந்தன்நகர்

IV. கொச்சின்

A) I, II மட்டும்

**B) I, II, III மட்டும்**

C) I, II, IV மட்டும்

D) இவை அனைத்தும்

**(குறிப்பு - பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் ( யூனியன் பிரதேசமான புதுச்சேரியின் பகுதிகள்), மாஹி ( கேரளாவில் உள்ள கண்ணூர் மாவட்டம்), சந்தன்நகர் (வங்காளம்) ஆகிய பகுதிகளை மட்டுமே தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தனர். வணிக நிறுவனமாக இருந்த இங்கிலாந்து பெரும் நிலப்பரப்பை ஆளுகின்ற சக்தியாக மாறி அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட காலனி ஆதிக்க நாடாக எழுச்சி பெற்றது)**

winmeen.com

# 11th History Lesson 12 Questions in Tamil

## 12] ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள்

1) ஆங்கிலேயர்கள் இந்தியாவில் காலூன்ற கீழ்கண்ட எந்த போர் முக்கிய காரணமாக விளங்கியது?

A) பிளாசிப் போர்

**B) பக்சார் போர்**

C) வந்தவாசி போர்

D) ஆம்பூர் போர்

**(குறிப்பு - ஆங்கிலேயர்கள் இந்தியாவில் காலூன்ற பக்சார் போர் முக்கிய காரணமாகும். வங்காளம், அவத் நவாபுகள் மட்டுமல்லாமல் முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலமும் ஆங்கிலேயரை எதிர்த்தார். பக்சார் போரின் முடிவில் கிழக்கிந்திய கம்பெனி வியாபார தன்மையை இழந்து அசைக்க முடியாத அரசியல் சக்தியாக உருவெடுத்தது)**

2) பக்சார் போருக்கு பின்னர் நடந்தவற்றுள் எது சரியானது?

I. ராபர்ட் கிளைவ் இங்கிலாந்திற்கு சென்றார். வங்காள நிர்வாகத்தில் ஊழல் மலிந்து விட்ட தாக கருதப்பட்டதால் அவர் வில்லியம் கோட்டை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

II. வான்சிடார்ட் சுஜாஉத்தவுலாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் விளைவாக இரு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

III. வங்காளம், பீகார் மற்றும் ஒரிசா பகுதிகளில் திவானி அதிகாரம் கம்பெனி வசம் ஒப்படைக்கப்பட்டது.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - அலகாபாத், காரா பகுதிகளின் நிர்வாகத்தை பெறுவதோடு பேரரசர் இரண்டாம் ஷா ஆலம் வங்காளம், பீகார் மற்றும் ஒரிசா பகுதிகளில் வருவாயில் இருந்து ஆண்டுக்கு 26 லட்சம் ரூபாய் பெறப் போவதாக அறிவிக்கப்பட்டது)**

3) கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாக தலைவராக எந்த ஆண்டு வரை ஆளுநரே செயல்பட்டார்?

A) 1770 வரை

**B) 1772 வரை**

C) 1774 வரை

D) 1776 வரை

**(குறிப்பு - 1772 வரை கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாக தலைவர் ஆளுநரே ஆவார். அவர் வில்லியம் கோட்டையிலோ அல்லது ஜார்ஜ் கோட்டையிலோ வீற்றிருப்பார்.)**

4) ஒழுங்குமுறை சட்டத்தின் (1773) மூலமாக கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாக தலைவரான ஆளுநர் எவ்வாறு உயர்த்தப்பட்டார்?

A) ஜெனரல்

**B) கவர்னர் ஜெனரல்**

C) வைஸ்ராய்

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - வில்லியம் கோட்டையில் ஆளுநராக பதவியில் இருந்த வாரன் ஹேஸ்டிங் ஒழுங்குமுறை சட்டத்தின் (1773) மூலமாக கவர்னர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டார். கவர்னர் ஜெனரல் கிழக்கிந்திய கம்பெனியின் இயக்குனர் மன்றத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுவார்.)**

5) பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு கட்டுப்பட்ட முதல் வைஸ்ராய் மற்றும் இந்திய கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டவர் யார்?

A) லின்லித்கோ பிரபு

**B) கானிங் பிரபு**

C) வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு

D) வில்லியம் பென்டிக் பிரபு

**(குறிப்பு - 1858இல் விக்டோரியா ராணியின் பிரகடனம் முதன்முறையாக அரசப் பிரதிநிதி ( வைசிராய் மற்றும் கவர்னர் ஜென்ரல்) என்ற சொற்றொடரை கையாண்டது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு கட்டுப்பட்ட முதல் வைஸ்ராய் மற்றும் இந்திய கவர்னர் ஜெனரலாக கானிங் பிரபு நியமிக்கப்பட்டார்)**

6) 1773இல் ஒழுங்குமுறை சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் வங்காளத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டவர் யார்?

**A) வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு**

B) காரன் வாலிஸ் பிரபு

C) வெல்லெஸ்லி பிரபு

D) வில்லியம் பெண்டிங் பிரபு

**(குறிப்பு - இரட்டை ஆட்சி முறை, பொறுப்புகளை இயற்கை அரசாட்சி முறையாக இருந்தது. வங்காளத்தில் 1770 ஆம் ஆண்டு கடுமையான பஞ்சத்திற்கு இட்டுச் சென்றது. இறுதியாக கம்பெனி தனது பொறுப்பை உணர்ந்ததன் விளைவாக 1773 இல் ஒழுங்குமுறை சட்டத்தை பிரகடனப்படுத்தியது)**

7) பிட் இந்தியா சட்டம் எந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது?

A) 1780 இல்

B) 1782 இல்

**C) 1784 இல்**

D) 1786 இல்

**(குறிப்பு - ஒழுங்குமுறை சட்டம் 1773 இன்படி கம்பெனி ஊழியர்களின் வரவு செலவு கணக்கு பற்றி இயக்குனர் குழு பிரிட்டிஷ் கருவூலத்திற்கு தெரியப்படுத்துவது சட்டரீதியாக கடமையாக்கப்பட்டது. ஆளுநரும் தலைமைத் தளபதியும் இரு ஆலோசகர்களும் கொண்ட குழு வருவாய் வாரியமாக செயல்பட்டு வருவது குறித்து விவாதித்தது. 1784ஆம் ஆண்டின் பிட் இந்திய சட்டம், ராணுவ மற்றும் குடிமை அமைப்புகளை தனித் தனியாக பிரித்தது)**

8) மகல்வாரி திட்டம் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

A) 1880 இல்

B) 1881 இல்

C) 1882 இல்

**D) 1883 இல்**

**(குறிப்பு - வில்லியம் பெண்டிங் பிரபு காலத்தில் (1883) மகல்வாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி நில வருவாய்க்கான ஒப்பந்தம் நிலத்தின் உரிமையாளரிடம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் நிலவரியானது பயிர் சாகுபடி செய்பவரிடம் இருந்து வசூலிக்கப்பட்டது)**

9) நிலத்தை அளவிட்டு அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஜமீன்தாரும் அரசுக்கு வழங்க வேண்டிய வருவாயை நிர்ணயம் செய்யும் முறை சாசுவதம் என்று அழைக்கப்பட்டது. இது வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளில் எந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது?

A) 1791 இல்

**B) 1793 இல்**

C) 1795 இல்

D) 1797 இல்

**(குறிப்பு - இந்த முறையின் மூலமாக வரி வசூலிப்பவர் ஆக இருந்தோர் வாரிசுரிமை கொண்ட ஜமீன்தார்கள் ஆக மாற்றி அரசு வழங்கிய நிலத்தின் பயன்களை அனுபவிக்கலானார்கள். நிர்ணயிக்கப்பட்ட மதிப்பிற்கு மேலாக வசூலிக்கப்பட்ட அனைத்தையும் ஜமீன்தார்கள் கையகப்படுத்தி கொண்டார்கள்)**

10) ரயத்வாரி முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?

A) வில்லியம் பெண்டிங் பிரபு

B) காரன்வாலிஸ் பிரபு

**C) தாமஸ் மன்றோ பிரபு**

D) வெல்லெஸ்லி பிரபு

**(குறிப்பு - 1814ஆம் ஆண்டு இயக்குனர் குழுவில் ரயத்துவாரி முறை அறிமுகப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. இது ஆளுநராக இருந்த தாமஸ்மன்றோ என்பவரால் உருவாக்கப்பட்டது)**

11) தாமஸ் மன்றோ சிலை சென்னையில் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

A) 1830ஆம் ஆண்டு

B) 1833ஆம் ஆண்டு

C) 1836ஆம் ஆண்டு

**D) 1839ஆம் ஆண்டு**

**(குறிப்பு - மக்களிடையே பிரபலமாகி இருந்த ஆளுநரான தாமஸ் மன்றோ விளைவாக பல நினைவிடங்கள் எழுப்பப்பட்ட தோடு, குழந்தைகள் பலருக்கும் அவரது பெயர் சூட்டப்பட்டது. பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட படத்திலிருந்து அவரது சிலை வடிவமைக்கப்பட்டு 1839 ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது)**

12) 1820 ஆம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்திற்கு ஆளுநராக பொறுப்பை ஏற்றவர் யார்?

A) வில்லியம் பெண்டிங் பிரபு

B) காரன்வாலிஸ் பிரபு

**C) தாமஸ் மன்றோ பிரபு**

D) வெல்லெஸ்லி பிரபு

**(குறிப்பு - கடப்பா, கர்னூல், சித்தூர், அனந்தபூர் ஆகியவற்றிற்கு ஆட்சிரியராக பணிபுரிந்தார். காலத்தில்தான் அவர் ரயத்துவாரி முறை பற்றி யோசித்தார். 1820ஆம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்திற்கும் ஆளுநராக பொறுப்பேற்று அதன் பின் ஏழு வருடங்கள் சேவையாற்றினார். அப்போது 1822 ஆம் ஆண்டில் ரயத்வாரி முறையை செம்மையாக அறிமுகப்படுத்தி செயலூட்டினார்)**

13) ரயத் என்ற சொல்லுக்கு பொருள் என்ன?

**A) உழவர்**

B) வரி

C) நிலம்

D) நில வரி

**(குறிப்பு - ரையா என்ற அரபு வார்த்தையின் ஆங்கில திரிபே ரயத் என்பதாகும். ரயத் என்ற சொல்லுக்கு உழவர் என்று பொருள். எந்த இடைத்தரகர் இல்லாமல் அரசே நேரடியாக பயிரிடுவோரின் தொடர்பு கொள்வதே இம்முறையாகும்)**

14) ரயத்துவாரி முறையைப் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - எந்த இடைத்தரகர் இல்லாமல் அரசே நேரடியாக பயிரிடுவோருடன் தொடர்பு கொள்வதே இம்முறையாகும்.

கூற்று 2 - நில வரி செலுத்தும் வரை விவசாயம் செய்வோரின் வசமே நிலம் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

கூற்று 3 - வரி செலுத்தாதோர் ஐ நிலத்தில் இருந்து அப்புறப்படுத்தும் அதோடு அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த கால்நடை, வீடு, தனிப்பட்ட உடைமை போன்றவை பறிமுதல் செய்யப்பட்டன

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - அரசு, பயிர் செய்யப்பட்ட ஒவ்வொரு வயல் இருந்தும் கிடைக்கக்கூடிய வருவாயை கணித்தது. தானிய விலை மாற்றம், சந்தைப்படுத்தும் வசதிகள், பாசன வசதி போன்ற காரணிகளை அடிப்படையாக கொண்டு 30 ஆண்டுக்கு ஒரு முறை தீர்வு மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. ரயத்துவாரி முறை நிலத்தில் தனியுடைமையை அறிமுகப்படுத்தியது)**

15) துணைப்படை திட்டத்தினை அறிமுகம் செய்தவர் யார்?

**A) வெல்லெஸ்லி பிரபு**

B) தாமஸ் மன்றோ பிரபு

C) காரன்வாலிஸ் பிரபு

D) டல்ஹவுசி பிரபு

**(குறிப்பு - கூட்டணிக்குள் வரும் இந்திய ஆட்சியாளர் தனது சொந்த படைகளை கலைத்து விட்டு பிரிட்டிஷ் படைகளை ஏற்பதோடு அவர்கள் அனுப்பும் அதிகாரி ஒருவரை ஸ்தானிகராக ஏற்க வேண்டும். பிரிட்டிஷ் படை கால பராமரிப்பு செலவை ஏற்க வேண்டும் அது முடியாதபோது மாகாணத்தின் ஒரு பகுதியை பிரிட்டிஷார் வசம் ஒப்படைக்க வேண்டும்)**

16) துணைப்படை திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட இடங்கள் கீழ்கண்டவற்றுள் எது?

I. ஹைதராபாத், மைசூர்

II. லக்னோ, மராத்திய பேஷ்வா

III. போன்ஸ்லே, சிந்தியா

IV. மதராஸ், கர்நாடகம்

**A) I, II, III மட்டும் சரி**

B) II, III, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - துணைப்படை திட்டத்தின் மூலம் ஹைதராபாத், மைசூர், லக்னோ, மராத்திய பேஷ்வா, போன்ஸ்லே( கோலாப்பூர்), சிந்தியா( குவாலியர்) போன்ற அரசுகளையும் அரசர்களையும் அதன் கீழ் கொண்டு வந்தார்.)**

17) வெல்லெஸ்லி அறிமுகம் செய்த துணைப்படை திட்டம் குறித்த கீழ்காணும் கூற்றுகளில் எது தவறானது?

A) கூட்டணிக்குள் வரும் இந்திய ஆட்சியாளர் தனது சொந்த படைகளை கலைத்து விட்டு பிரிட்டிஷ் படைகளை ஏற்ப தோடு அவர்கள் அனுப்பும் அதிகாரி ஒருவரை ஸ்தானிகராக ஏற்க வேண்டும்.

B) பிரிட்டிஷ் படைகளுக்கான பராமரிப்பு செலவை ஏற்க வேண்டும்.

**C) பாதுகாப்புக்கு உட்பட்ட அரசர் பிற ஐரோப்பிய நாடுகள் உடனான தொடர்பை துண்டித்துக் கொள்ள வேண்டும். பிரெஞ்சு நிர்வாகத்தோடு மட்டும் தொடர்பில் இருக்கலாம்.**

D) பிரிட்டிஷார் அனுமதி அல்லாமல் மற்ற ஐரோப்பியரை பணியில் அமர்த்தக் கூடாது.

**(குறிப்பு - பாதுகாப்புக்கு உட்பட்ட அரசர் ஐரோப்பிய நாடுகள் உடனான தொடர்பை துண்டித்துக் கொள்ள வேண்டும். அதிலும் பிரஞ்ச் நிர்வாகத்தோடு தொடர்பு இருக்கக்கூடாது. எந்த அரசும் பிற அரசுகளின் உள்நாட்டு பிரச்சினைகளில் தலையிட கூடாது போன்றவை துணைப்படை திட்டத்தின் கூறுகளாகும்)**

18) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. கிழக்கிந்திய கம்பெனியாரின் தலைமை நிர்வாக அதிகாரியின் அலுவலகம் அமையப்பெற்றிருக்கும் இடம் மாகாணம் என அழைக்கப்பட்டது.

II. மாகாணங்களை நிர்வகிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதால் மத்திய மாநிலம் ஒருங்கிணைந்த மாநிலம் போன்ற பிராந்தியங்கள் உருவாக்கப்பட்டன.

III. சென்னை, பம்பாய் போன்றவை மாகாணம் ஆகும்.

IV. கல்கத்தா மாகாணம் அல்ல, அது ஒரு மாநிலம் ஆகும்.

**A) I, II, III மட்டும் சரி**

B) II, III, IV மட்டும் சரி

C) I, III, IV மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - மாகாணம் (Presidency), என்பதற்கும் மாநிலம் என்பதற்குமான வேறுபாடு, கிழக்கிந்தியக் கம்பெனியாரின் தலைமை நிர்வாக அதிகாரியின் அலுவலகம் அமையப்பெற்றிருக்கும் இடம் மாகாணம் ஆகும். அந்த விதத்தில் சென்னை, பம்பாய். கல்கத்தா ஆகியவை மாகாணங்கள் ஆகும்)**

19) வாரிசு உரிமை இழப்பு கொள்கையை அறிமுகப்படுத்தியவர் யார்?

A) வெல்லெஸ்லி பிரபு

B) தாமஸ் மன்றோ பிரபு

C) காரன்வாலிஸ் பிரபு

**D) டல்ஹவுசி பிரபு**

(குறிப்பு - இந்து சம்பிரதாயங்களின் படி வாரிசு இல்லாத மன்னர் ஒரு ஆண் மகவை தத்தெடுக்க முடியும். அவ்வாறு தத்தெடுக்கப்பட்ட மகனுக்கு சொத்தில் முழு உரிமையும் உண்டு. தல்ஹவுசி இம்முறை உச்சபட்ச அதிகாரத்தின் பார்வைக்கு சென்றால் சட்டபூர்வமான சிக்கலை எதிர் கொள்ளலாம் என்று நினைத்தார். எனவே வாரிசு உரிமை இழப்பு கொள்கையை அறிமுகம் செய்தார்)

20) வாரிசு உரிமை இழப்பு கொள்கையின் கீழ் முதலில் வீழ்ந்த அரசு எது?

A) உதய்பூர்

**B) சதாரா**

C) கான்பூர்

D) ஜெய்ப்பூர்

**(குறிப்பு - வாரிசு உரிமை இழப்பு கொள்கையின் மூலம் முதலில் கைப்பற்றப்பட்ட அரசு சதாரா ஆகும். சதாராவின் மன்னரான ஷாஜி இறந்த பின்பு (1848) அவரது தத்தெடுக்கப்பட்ட வாரிசை தல்ஹவுசி அங்கீகரிக்க மறுத்தார்)**

21) ஜான்சியின் அரசர் கங்காதரராவ் இறந்த பின்பு வாரிசு இழப்பு கொள்கையின் மூலம் ஜான்சி எந்த ஆண்டு கைப்பற்றப்பட்டது?

A) 1850 இல்

B) 1851 இல்

C) 1852 இல்

**D) 1853 இல்**

**(குறிப்பு - ஜான்சியின் அரசர் கங்காதரராவ் நவம்பர் மாதம் 1853 இல் இறந்தார். அவர் இறந்த கணமே ஜான்சி அரசு டல்ஹவுசியால் இணைக்கப்பட்டது. கங்காதர்ராவின் மனைவியான ராணி லட்சுமிபாய், தத்து பிள்ளையுடன் ஜான்சியை விட்டு தப்பினார்)**

22) மராத்தியர்களின் கடைசி பேஷ்வா எந்த ஆண்டு காலமானார்?

A) 1850 இல்

**B) 1851 இல்**

C) 1852 இல்

D) 1853 இல்

**(குறிப்பு - மராத்தியர்களின் கடைசி பேஷ்வா 1851 இல் காலமானார். அவர் 33 வருடம் கம்பெனி கொடுத்த ஓய்வூதியத்தை பெற்றிருந்தார். ஆனால் கல்லூரியோ அவரது வாரிசான நானாசாகிப் அவருக்கு ஓய்வூதியம் கொடுக்க மறுத்தார்)**

23) மேலளவில் ஒரு அதிகாரமற்ற அரசரை வைத்துக்கொண்டு அவரது பின்புறத்தில் கம்பெனி அதிகாரிகள் செயலாற்றும் முறையானது எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) வாரிசு இழப்பு கொள்கை

**B) இரட்டை ஆட்சி முறை**

C) துணைப்படை திட்டம்

D) இது எதுவும் அல்ல

**(குறிப்பு - பிளாசிப் போருக்குப் பின்னர்(1757) கம்பெனி தன்னை விரிவுபடுத்தும் முகமாக இரட்டை ஆட்சி முறையை உருவாக்கியது. இம்முறையின் கீழ் மேல் அளவில் ஒரு அதிகாரமற்ற அரசரை வைத்துக்கொண்டு அவரது பின்புறத்தில் கம்பெனி அதிகாரிகள் செயலாற்றினர்)**

24) துணைப்படை திட்டம் கொண்டுவரப்படாத இடம் கீழ்க்கண்டவற்றுள் எது?

A) ஹைதராபாத்

B) பூனா

**C) தஞ்சாவூர்**

D) மைசூர்

**(குறிப்பு - இரட்டை ஆட்சி முறை அமலில் இருந்தபோது, வெல்லஸ்லி மேலும் நெருக்கடியை கூட்டும் வண்ணமாக பிரிட்டிஷாருக்கு சாதகமாக துணைப்படைத் திட்டத்தை கடைபிடித்தார். அதனை ஐதராபாத், பூனா மற்றும் மைசூர் போன்ற முக்கிய அரசுகளை ஏற்க வைத்தார்)**

25) வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக எந்த ஆண்டு பதவி ஏற்றார்?

A) 1811 இல்

**B) 1813 இல்**

C) 1815 இல்

D) 1817 இல்

**(குறிப்பு - கவர்னர் ஜெனரலாக 1813 ஆம் ஆண்டு பதவி ஏற்ற ஹாஸ்டிங்ஸ் முகலாய முத்திரையை பரிவர்த்தனைகளில் தவித்தார். கம்பெனியின் உரிமைகள் மீது முகலாய மன்னர் இரண்டாம் அக்பர் செலுத்தி வந்த ஆதிக்கத்தை நிறுத்திக் கொள்ளாவிட்டால் அவரை தான் சந்திக்க முடியாது என்று அறிவித்தார்)**

26) 1830ஆம் ஆண்டு எந்த இடத்தில் அரசுக்கு எதிராக நடந்த கிளர்ச்சியை கம்பெனி நிர்வாகம் சரிசெய்து, ஆட்சி நிர்வாகத்தை கம்பெனி சார்பாக மார்க் கப்பன் என்பவரிடம் பொறுப்பை ஒப்படைத்தது?

A) ஹைதராபாத்

**B) மைசூர்**

C) குவாலியர்

D) உதய்பூர்

**(குறிப்பு - மைசூர் அரசு 1830 ஆம் ஆண்டு நிதி நிர்வாக முறைகேட்டில் அரசர் ஈடுபட்டார் என்ற காரணத்தை முன்வைத்து ஏற்பட்ட கிளர்ச்சியை வெல்லஸ்லியோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் கம்பெனி தலையிட்டு சரி செய்தது. கவர்னர் ஜெனரலாக இருந்த வில்லியம் பென்டிங் அரசரை அனைத்து பொறுப்புகளிலிருந்தும், அதிகாரத்தில் இருந்தும் விடுவித்து மார்க் கப்பன் என்பவரிடம் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைத்தார்)**

27) வரி வசூலிக்கும் பொறுப்பை பொது நிர்வாகத்தில் இருந்தும் நீதித் துறையில் இருந்தும் பிரித்தவர் யார்?

A) ராபர்ட் கிளைவ்

B) வில்லியம் ஜோன்ஸ்

C) டல்ஹவுசி

**D) காரன் வாலிஸ்**

**(குறிப்பு - குற்றம் நடப்பதை கண்டுபிடிக்கவும் தண்டனை வழங்கவும் ஒரு சீரிய முறையை அறிமுகப்படுத்தி அதன் மூலமாக ராபர்ட் கிளைவ் உருவாக்கிய இரட்டை ஆட்சி முறையை காரன்வாலிஸ் முடிவுக்கு கொண்டு வந்தார். வரி வசூலிக்கும் பொறுப்பை பொது நிர்வாகத்தில் இருந்தும் நீதித்துறையில் இருந்தும் பிரித்தார். ஆட்சியர்களை வரி வசூலிக்க மட்டுமே பணித்தார்)**

28) காரன்வாலிஸ் ஆட்சி காலத்தில் நீதித்துறையின் உச்சங்களாக இருந்தவை எது?

A) சதர் திவானி அதாலத்

B) சதர் நிஜாமத் அதாலத்

**C) இவை இரண்டும்**

D) இவை இரண்டும் அல்ல

**(குறிப்பு - ஆட்சியர் களை வரி வசூலிக்க மட்டுமே பறித்து அவர்களை நீதி வழங்கும் பொறுப்பிலிருந்து காரன்வாலிஸ் விடுவித்தார். குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் முழுமையாக சீரமைக்கப்பட்டன. நீதித்துறையின் உச்சங்களாக சதர் திவானி அதாலத், சதர் நிஜாமத் அதாலத் ஆகியவை திகழ்ந்தன)**

29) குற்றவியல் மற்றும் குடிமையியல் நீதியில் உச்சபட்ச முறையீட்டு நீதிமன்றம் காரன்வாலிஸ் ஆட்சிக் காலத்தில் எந்த இடத்தில் அமையப் பெற்றன?

**A) கல்கத்தா**

B) பம்பாய்

C) சென்னை

D) ஹைதராபாத்

**(குறிப்பு - நான்கு பிராந்திய முறையிட்டு நீதி மன்றங்கள் கல்கத்தா, தக்காணம், முர்ஷிதாபாத் பாத்ரும் பாட்னா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. இந்த நீதிமன்றங்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று ஐரோப்பிய நீதிபதிகளும் அவர்களுக்கு உதவிபுரிய ஒரு இந்திய வல்லுநரும் நியமிக்கப்பட்டார்கள்)**

30) காரன்வாலிஸ் நீதித்துறையில் மேற்கொண்ட சீர்திருத்தங்களுள் சரியானது எது?

I. ஒவ்வொரு மாவட்டத்திலும் பெரு நகரிலும் ஒரு நீதிமன்றம் அமைந்தது.

II. ஒவ்வொரு நீதிமன்றத்தின் கீழ் இந்திய நீதிபதிகளை கொண்ட முன்சிப் நீதிமன்றங்கள் இயங்கின.

III. சீரியல் (சிவில்) வழக்குகளில் இஸ்லாமிய சட்டங்கள் பின்பற்றப்பட்டன.

A) I, II மட்டும் சரி

B) I, III மட்டும் சரி

C) II, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - குற்றவியல் வழக்குகளில் தொடர்புடையவரின் சமயப் பின்னணியை பொறுத்து இந்து சட்டமும், இஸ்லாமிய சட்டமும் பின்பற்றப்பட்டன. மேற்கண்ட அனைத்தும் காரன்வாலிஸ் நிதித்துறையில் ஏற்படுத்திய சீர்திருத்தங்கள் ஆகும்)**

31) குடிமைப் பணிகளில் காரன்வாலிஸ் ஏற்படுத்திய சீர்திருத்தங்களில் கீழ்கண்டவற்றுள் எது சரியானது?

I. காரன்வாலிஸ் ஒவ்வொரு மாவட்டத்தையும் தானாக்களாக (காவல் நிலையம்) பிரித்தார்.

II. ஒவ்வொரு தானாவும் இந்தியர் ஒருவரால் வகிக்கப்பட்ட தரோகா என்ற பதவியின் கீழ் வைக்கப்பட்டிருந்தது.

III. நீதி அதிகாரத்திற்கும் வருவாய் அதிகாரத்துக்கும் இடையே ஆன திடமான பிரிவு கைவிடப்பட்டது. ஆட்சியரே நீதி வழங்குபவராகவும் செயலாற்றத் தொடங்கினார்.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - குடிமை மற்றும் நீதி நிர்வாகத்தை பண்படுத்திய காரன் வாலிஸ் கம்பெனி ஊழியரின் கல்வியை மேம்படுத்த போதிய அக்கறை செலுத்தவில்லை. வெல்லெஸ்லி கல்வி மற்றும் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்)**

32) கல்கத்தாவின் வில்லியம் கோட்டையில் குடிமை பணியாளர்களுக்கு பயிற்சி கல்லூரி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

**A) 1800 இல்**

B) 1802 இல்

C) 1804 இல்

D) 1806 இல்

**(குறிப்பு - இந்தப் பயிற்சி கல்லூரியில் பல ஐரோப்பிய பேராசிரியர்களும், 80 இந்திய பண்டிதர்களும் பணிபுரிந்தனர். இதுவே பின்னர் வங்காள கிழக்கிந்திய பள்ளியாக உருவெடுத்தது)**

33) தூய ஜார்ஜ் கோட்டை கல்லூரியை எல்லிஸ் என்பவர் எந்த இடத்தில் உருவாக்கினார்?

**A) சென்னையில்**

B) பம்பாயில்

C) கல்கத்தாவில்

D) ஹைதராபாத்தில்

**(குறிப்பு - கிழக்கிந்திய கல்லூரி 1806 இல் இங்கிலாந்தில் துவக்கப்பட்டது. வில்லியம் கோட்டை கல்லூரியின் அடியொற்றி எல்லிஸ் என்பவர் தூய ஜார்ஜ் கோட்டை கல்லூரியை 1812 ஆம் ஆண்டில் சென்னையில் உருவாக்கினார். இங்குதான் தென்னிந்திய மொழிகள் சமஸ்கிருததோடு தொடர்பில்லாத சுதந்திரமான தனி மொழிக் குடும்பத்தை சேர்ந்தவை என்னும் கருத்தாக்கம் முதன் முதலில் உருவாக்கப்பட்டது)**

33) காரன்வாலிஸ் வாரணாசியில் ஒரு சமஸ்கிருத கல்லூரியை எந்த ஆண்டில் நிறுவினார்?

A) 1790 இல்

**B) 1791 இல்**

C) 1792 இல்

D) 1793 இல்

**(குறிப்பு - இஸ்லாமியர்களுக்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்தது போன்ற சேவையை இந்துக்களுக்கு மேற்கொள்ள அவருக்குப்பின் பொறுப்பேற்றவர்கள் தயாராக இருந்தனர். காரன்வாலிஸ் வாரணாசியில் ஒரு சமஸ்கிருத கல்லூரியை 1791-ஆம் ஆண்டு நிறுவினார். அதன்பின் வந்த 20 ஆண்டுகளில் பெரிய நடவடிக்கைகள் எதையும் பிற ஆளுநர்கள் மேற்கொள்ளவில்லை)**

34) வங்காள வாராந்திர இதழான சமாச்சார் தர்பன் எந்த ஆண்டு துவங்கப்பட்டது?

A) 1812 இல்

B) 1814 இல்

C) 1816 இல்

**D) 1818 இல்**

**(குறிப்பு - 1799 இல் பத்திரிக்கைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது கல்வி வளர்ச்சியில் பாராட்டுக்குரிய நடவடிக்கையாக கருதப்படுகிறது. அந்த சூழலில்தான் 1818 ஆம் ஆண்டு வங்காள வாராந்திர இதழ் சமாச்சார் தர்பன் துவங்கப்பட்டது.)**

35) 1835 இல் காரன்வாலிஸ் மருத்துவ கல்லூரியை எங்கு துவங்கினார்?

**A) கல்கத்தா**

B) பாம்பே

C) சென்னை

D) தில்லி

**(குறிப்பு - பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலான வில்லியம் பெண்டிங் சமூக சீர்திருத்தத்தின் பொருட்டு சதி முறையை ஒழிக்கவும், கல்வி மேம்பாட்டுக்காக பல பள்ளிகளையும் கல்லூரிகளையும் திறக்க தலைப்பட்டார். கல்கத்தா மருத்துவ கல்லூரியை 1835 இல் துவங்கினார். இந்த கல்லூரியின் மாணவர்கள் தங்கள் படிப்பை முடிக்கும் பொருட்டு 1844 ஆம் ஆண்டு லண்டனுக்கு அனுப்பப்பட்டார்கள்)**

36) கல்லூரிகளையும் அவை தோன்றிய வருடங்களையும் பொருத்துக.

I. கல்கத்தா மருத்துவ கல்லூரி - a) 1849

II. கிராண்ட் மருத்துவ கல்லூரி - b) 1847

III. தாம்சன் பொறியியல் கல்லூரி - c) 1835

IV. பெண்களுக்கான பயிற்சி பள்ளி - d) 1845

**A) I-c, II-d, III-b, IV-a**

B) I-d, II-a, III-c, IV-b

C) I-b, II-d, III-a, IV-c

D) I-c, II-d, III-b, IV-a

**(குறிப்பு - 1845ஆம் ஆண்டு பம்பாயில் கிராண்ட் மருத்துவ கல்லூரி நிறுவப்பட்டது. தாம்சன் பொறியியல் கல்லூரி 1847 ஆம் ஆண்டு ரூர்கியில் தோற்றுவிக்கப்பட்டது.)**

37) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. பட்டயம் என்பது ஒரு நாட்டின் இறையாண்மை அதிகாரத்தை மையமாகக் கொண்டு சகல அதிகாரங்களும் சலுகைகளும் உள்ள ஒரு வணிக நிறுவனத்தையோ பல்கலைக்கழகத்தையோ, நகரத்தையோ உருவாக்க வழங்கப்படும் சட்டம் ஆகும்.

II. எலிசபெத் மகாராணி 1600 இல் வழங்கிய பட்டயத்தின் மூலம் இது தொடங்கப்பட்டது.

III. வாரன் ஹாஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக 1773 ஆம் ஆண்டு பதவி ஏற்றது முதல் 20 ஆண்டுகளுக்கு ஒருமுறை பட்டயம் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியமானது.

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - பிரிட்டிஷ் முடியாட்சியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இந்தியா வருவதற்கு முன்பு வழங்கப்பட்ட 1853 ஆம் ஆண்டின் பட்டைய சட்டமே கடைசியானது ஆகும்)**

38) மெக்காலே ஒரு சட்ட உறுப்பினராக எந்த ஆண்டில் இந்தியாவை வந்தடைந்தார்?

A) 1830 ஆம் ஆண்டு

**B) 1835 ஆம் ஆண்டு**

C) 1840 ஆம் ஆண்டு

D) 1845 ஆம் ஆண்டு

**(குறிப்பு - மெக்காலே கல்வி குழுமத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். அவருக்கு உள்நாட்டு கல்வி மீது மதிப்பு இருக்கவில்லை. மெக்காலே ஆங்கில வழிக் கல்வியை ஆதரித்து பரிந்துரைத்தால் அரசு ஆங்கில மொழியை பயிற்று மொழியாகவும் அலுவலக மொழியாகவும் ஏற்றுக் கொண்டது)**

39) ஆரம்ப கல்வி முதல் உயர்நிலைப் பள்ளியையும், கல்லூரிப் படிப்பையும் உள்ளடக்கிய ஒரு விரிவான வரைவினை உடைய கல்வி அறிக்கையை சமர்ப்பித்தவர் யார்?

A) மெக்காலே

B) தல்ஹவுசி

C) ஜேம்ஸ் தாம்சன்

**D) சார்லஸ் உட்**

**(குறிப்பு - டல்ஹௌசி கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டினார். அவர் வட கிழக்கு மாகாணத்தின் துணை ஆளுநர் ஜேம்ஸ் தாமஸினால் உருவாக்கப்பட்ட தாய்மொழி கல்வி முறைக்கு ஆதரவு கொடுத்தார். சார்லஸ் உட் உருவாக்கிய கல்வி அறிக்கை ஆரம்ப கல்வி முதல் உயர் நிலைப்பள்ளியையும் கல்லூரிப் படிப்பையும் உள்ளடக்கிய ஒரு விரிவான வரைவாகும்)**

40) 1857ஆம் ஆண்டு கீழ்க்காணும் எந்த இடங்களில் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டன?

I. சென்னை

II. பம்பாய்

III. கல்கத்தா

A) I, II மட்டும் சரி

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

**D) எல்லாமே சரி**

**(குறிப்பு - பொது கல்வித்துறை துவங்கப்பட்டு மூன்று மாகாண தலைநகரங்களிலும் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே 1857 ஆம் ஆண்டில் சென்னைப்**

**பல்கலைக்கழகமும் பம்பாய் மற்றும் கொல்கத்தா பல்கலைக் கழகங்களும் தோற்றுவிக்கப்பட்டன. தல்ஹவுசி மெக்காலேயின் கொள்கையை மாற்றி தாய்மொழியில் கல்வி நிலையங்கள் உருவாகுவதை ஆதரித்தார்)**

41) பிண்டாரி கொள்ளைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட எந்த சமயத்தைச் சார்ந்தவர்கள் இருந்தனர்?

I. இஸ்லாமியர்கள்

II. கிருஸ்தவர்கள்

III. இந்துக்கள்

**A) I, II மட்டும்**

B) II, III மட்டும்

C) I, III மட்டும்

**D) இவர்கள் அனைவரும்**

**(குறிப்பு - பிண்டாரி கொள்ளைக் கூட்டத்தில் இஸ்லாமியர்கள் இந்துக்கள் என இரு சமயத்தைச் சார்ந்தவர்களும் இருந்தனர். துணைப்படை திட்டத்தினால் வேலை இழந்த பல வீரர்கள் இந்த கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்து கவலை கொள்ளும் அளவுக்கு பெருகினர்)**

42) பிரிட்டிஷ் அரசு பிண்டாரிகள் மீது நடத்திய போர் கீழ்க்காணும் எந்த ஆண்டுகளில் நடந்தது?

A) 1810 - 1818

**B) 1811 - 1818**

C) 1815 - 1818

D) 1818 - 1820

**(குறிப்பு - பிரிட்டிஷ் அரசு பிண்டாரிகள் மீது போர் பிரகடனம் செய்தது. ஆனால் அது மராத்தி எடுத்து எதிரான போராக உருப்பெற்றது. இப்போர்கள் பல்லாண்டுகள் (1811முதல் - 1818 வரை ) நடைபெற்றாலும் மொத்த மத்திய இந்தியாவையும் இறுதியில் பிரிட்டிஷார் வசம் கொண்டு சேர்த்தது)**

43) தக்கர்கள் எந்த இடத்தில் கொள்ளையடித்துக் கொண்டிருந்த கூட்டத்தினர் ஆவர்?

**A) தில்லி**

B) பீஹார்

C) குஜராத்

D) வங்காளம்

**(குறிப்பு - தக்கர்கள் 14ஆம் நூற்றாண்டில் இருந்து தில்லி ஆக்ரா க்கும் இடைப்பட்ட பகுதிகளில் கொள்ளையடித்துக் கொண்டிருந்த கூட்டத்தினர் ஆவர். அவர்கள் தங்கள் அமைப்பை உறுதிமொழி ஏற்பதன் மூலமாகவும் சில சடங்கு ஆச்சாரங்களை பின்பற்றுவதன் மூலமாகவும் பலப்படுத்தி அப்பாவி வழிப்போக்கர்களை எதிர்பாராத தருணத்தில் தாக்கி காளியின் பெயரால் கொலை செய்து வந்தனர்)**

44) தக்கர்களை ஒழிக்க வில்லியம் பென்டிங் ஒரு திட்டத்தை வகுத்து யாரை நியமித்தார்?

A) வில்லியம் ஹென்றி

B) வில்லியம் ரூதர்போர்டு

C) வில்லியம் ஜார்ஜ்

**D) வில்லியம் ஸ்லீமேன்**

**(குறிப்பு - தக்கர்களை ஒழிப்பதற்கு வில்லியம் பென்டிங் ஒரு திட்டத்தை வகுத்து வில்லியம் ஸ்லீமேன் என்பவரை நியமித்தார். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தக்கர்களின் குற்றங்கள் 1831 முதல் 1837 வரையான காலகட்டத்தில் நிரூபணமானது.)**

45) தக்கர்கள் குறித்த பிரச்சனைகள் எந்த ஆண்டு முடிவுக்கு வந்தன?

A) 1855 இல்

**B) 1860 இல்**

C) 1865 இல்

D) 1870 இல்

**(குறிப்பு - தக்கர்கள் தொடர்பான வழக்குகளில் 500 பேர் அரசு சாட்சிகளாக மாறினர். மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குற்றங்கள் நிரூபணம் ஆனது. எனினும் தக்கர்கள் முன்னிட்டு எழுந்த பிரச்சனைகள் 1860 ஆம் ஆண்டு வாக்கில் முடிவுக்கு வந்தனர்)**

46) சதி ஒழிப்பு சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

A) 1823 இல்

B) 1825 இல்

C) 1827 இல்

**D) 1829 இல்**

**(குறிப்பு - சதி முறையை ஒழிக்க முடிவு எடுப்பதன் மூலம் வில்லியம் பென்டிங் தன் மனிதாபிமானத்தை வெளிப்படுத்தினார். அவருக்கு முன் பதவி வகித்த கவர்னர் ஜெனரல்கள் சமயம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் தலையிட யோசித்த பின் புலத்தில், பென்டிக் தயக்கமில்லாமல் சட்டம் ஒன்றை இயற்றி அதன் மூலம் இப்பழக்கத்திற்கு ஒரு முடிவு கொண்டுவர முயன்றார்)**

47) 1857 பெரும் கிளர்ச்சிக்கு முன்பு இந்தியாவில் எத்தனை மைல் தூரம் இருப்புப்பாதை அமைக்கப்பட்டிருந்தது?

A) 200 மைல்கள்

**B) 300 மைல்கள்**

C) 400 மைல்கள்

D) 500 மைல்கள்

**(குறிப்பு - இருப்புப் பாதை அமைக்க முதல் கோரிக்கையை வைத்தது ஐரோப்பிய வியாபார சமூகமே ஆகும். இந்தியாவில் வெற்றிகரமாக இருப்புப் பாதை போக்குவரத்து திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்ற சந்தேகம் கிழக்கிந்திய கம்பெனியின் இயக்குனர்களிடம் இருக்கவே செய்தது.)**

48) இந்தியாவில் தந்தி போக்குவரத்து எந்த ஆண்டு தொடங்கியது?

A) 1852 ஆம் ஆண்டு

**B) 1854 ஆம் ஆண்டு**

C) 1856 ஆம் ஆண்டு

D) 1858 ஆம் ஆண்டு

**(குறிப்பு - இந்தியாவிற்கும் லண்டனுக்கும் இடையே தந்தி போக்குவரத்தை உருவாக்க பல கோரிக்கைகள் வைக்கப்பட்ட போதும் தந்தி போக்குவரத்து இந்தியாவில் 1854 ஆம் ஆண்டுதான் தொடங்கியது)**

49) இந்தியாவின் முதல் இருப்புப்பாதை 1853 ஆம் ஆண்டு எந்த இரு நகரங்களுக்கு இடையில் அமைந்தது?

**A) பம்பாய் - தானே**

B) ஹௌரா - ராணிகஞ்

C) மதராஸ் - அரக்கோணம்

D) இது எதுவும் இல்லை

**(குறிப்பு - இந்தியாவில் இருப்புப் பாதை போக்குவரத்து திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியுமா என்ற சந்தேகம் கிழக்கிந்திய கம்பெனியின் இயக்குனர்களிடம் இருந்தது. இருப்புப் பாதை போக்குவரத்து மூலமாக பொருளாதார சாதகங்கள் ஏற்படும் என்று டல்ஹவுசி வாதிட்டு அதை வலியுறுத்தினார்)**

50) தென்னிந்தியாவில் முதல் இருப்புப்பாதை எந்த ஆண்டு அமைக்கப்பட்டது?

A) 1853 இல்

B) 1854 இல்

C) 1855 இல்

**D) 1856 இல்**

**(குறிப்பு - இந்தியாவின் முதல் இருப்புப்பாதை 1853 ஆம் ஆண்டு பம்பாய்க்கும் தானேவுக்கும் இடையே அமைந்தது. இரண்டாவது இருப்புப்பாதை ஹவுராவிற்கும் ராணிகஞ்சிற்கும் இடையே அமைந்தது. தென்னிந்தியாவில் முதல் இருப்புப்பாதை 1856 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது)**

51) தென்னிந்தியாவில் முதல் இருப்புப்பாதை எந்த இரு இடங்களுக்கு இடையே அமைக்கப்பட்டது?

A) மதராஸ் - வேலூர்

**B) மதராஸ் - அரக்கோணம்**

C) மதராஸ் - விழுப்புரம்

D) மதராஸ் - காட்பாடி

**(குறிப்பு - தென்னிந்தியாவில் முதல் இருப்புப்பாதை 1856 ஆம் ஆண்டு மதராஸ் மற்றும் அரக்கோணத்திற்குமிடையே அமைக்கப்பட்டது. அந்த ஆண்டில் திறந்து வைக்கப்பட்ட ரயில் நிலையங்களில் ராயபுரம் ரயில் நிலையமும் ஒன்றாகும்)**

52) சூயஸ் கால்வாய் எந்த ஆண்டு திறக்கப்பட்டது?

A) 1861 இல்

B) 1863 இல்

C) 1866 இல்

**D) 1869 இல்**

**(குறிப்பு - தந்தி அறிமுகமான பின்னர் லண்டனுக்கும் கல்கத்தாவிற்கு இடையே தொடர்பு கொள்ள பல மாதங்கள் ஆன சூழல் மாறி 28 நிமிடங்களில் தொடர்பு கொள்ள தந்தி வழிசெய்தது. ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே ஆன தூரம் 1869 ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டதால் கிட்டத்தட்ட 4000 மைல்களாக குறைந்தது)**

53) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. பாசன வசதி ஏற்படுத்தி கொடுப்பதை பிரிட்டிஷ் அரசு புறக்கணித்தது.

II. இந்திய அரசர்கள் விட்டுச்சென்ற பழைய கால்வாய்களும், குளங்களும் பயனற்று கிடப்பதை கண்ட போதும் அவற்றை தூர்வாரி பயன்பாட்டிற்கு கொடுக்கவோ, புதுப்பிக்கவோ கம்பெனி அரசு முயற்சி செய்யவில்லை.

III. ஆர்தர் காட்டன் என்ற பொறியியல் அலுவலர் ஒருவரின் தனிப்பட்ட ஆர்வத்தால் இந்தியாவில் உள்ள அனைத்து ஏரிகளும் தூர்வாரபட்டன.

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - ஆர்தர் காட்டன் என்ற பொறியியல் அலுவலர் ஒருவரின் தனிப்பட்ட ஆர்வத்தால் சில பாசன வேலைகள் நடந்தேறின. எனினும் அது பெரிய அளவில் சோபிக்கவில்லை)**

54) ஆர்தர் காட்டன் என்பவரால் கொள்ளிடத்தின் குறுக்கே எந்த ஆண்டு அணை கட்டப்பட்டது?

A) 1830 இல்

B) 1832 இல்

C) 1834 இல்

**D) 1836 இல்**

**(குறிப்பு - ஆர்தர் காட்டன் என்பவரால் 1836 ஆம் ஆண்டு கொள்ளிடத்தின் குறுக்கே அணை கட்டப்பட்டது. கிருஷ்ணா நதியின் குறுக்கே அணை கட்டும் பணி 1853 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.)**

55) யமுனா கால்வாய் ___________ கங்கை கால்வாய் ________முறையே கட்டப்பட்டன.

A) 1830 இலும், 1856 இலும்

B) 1835 இலும், 1857 இலும்

**C) 1830 இலும், 1857 இலும்**

D) 1840 இலும், 1858 இலும்

**(குறிப்பு - பிரிட்டிஷ் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் இந்தியா செல்வதற்கு முன்பாக வட இந்தியாவில் 1830இல் யமுனா கால்வாயும், 1857இல் கங்கை கால்வாய் 450 மைல்கள் வரை நீடித்த பணியும், 1856 இல் பஞ்சாப் பகுதியில் அமைந்த பாரிடை துறை கால்வாய் தோண்டும் பணியும் பாசனவசதி மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முக்கிய பணிகளாகும்)**

51) தென்னிந்தியாவில் முதல் இருப்புப்பாதை எந்த இரு இடங்களுக்கு இடையே அமைக்கப்பட்டது?

A) மதராஸ் - வேலூர்

**B) மதராஸ் - அரக்கோணம்**

C) மதராஸ் - விழுப்புரம்

D) மதராஸ் - காட்பாடி

**(குறிப்பு - தென்னிந்தியாவில் முதல் இருப்புப்பாதை 1856 ஆம் ஆண்டு மதராஸ் மற்றும் அரக்கோணத்திற்குமிடையே அமைக்கப்பட்டது. அந்த ஆண்டில் திறந்து வைக்கப்பட்ட ரயில் நிலையங்களில் ராயபுரம் ரயில் நிலையமும் ஒன்றாகும்)**

52) சூயஸ் கால்வாய் எந்த ஆண்டு திறக்கப்பட்டது?

A) 1861 இல்

B) 1863 இல்

C) 1866 இல்

**D) 1869 இல்**

**(குறிப்பு - தந்தி அறிமுகமான பின்னர் லண்டனுக்கும் கல்கத்தாவிற்கு இடையே தொடர்பு கொள்ள பல மாதங்கள் ஆன சூழல் மாறி 28 நிமிடங்களில் தொடர்பு கொள்ள தந்தி வழிசெய்தது. ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் இடையே ஆன தூரம் 1869 ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டதால் கிட்டத்தட்ட 4000 மைல்களாக குறைந்தது)**

53) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

I. பாசன வசதி ஏற்படுத்தி கொடுப்பதை பிரிட்டிஷ் அரசு புறக்கணித்தது.

II. இந்திய அரசர்கள் விட்டுச்சென்ற பழைய கால்வாய்களும், குளங்களும் பயனற்று கிடப்பதை கண்ட போதும் அவற்றை தூர்வாரி பயன்பாட்டிற்கு கொடுக்கவோ, புதுப்பிக்கவோ கம்பெனி அரசு முயற்சி செய்யவில்லை.

III. ஆர்தர் காட்டன் என்ற பொறியியல் அலுவலர் ஒருவரின் தனிப்பட்ட ஆர்வத்தால் இந்தியாவில் உள்ள அனைத்து ஏரிகளும் தூர்வாரபட்டன.

**A) I, II மட்டும் சரி**

B) II, III மட்டும் சரி

C) I, III மட்டும் சரி

D) எல்லாமே சரி

**(குறிப்பு - ஆர்தர் காட்டன் என்ற பொறியியல் அலுவலர் ஒருவரின் தனிப்பட்ட ஆர்வத்தால் சில பாசன வேலைகள் நடந்தேறின. எனினும் அது பெரிய அளவில் சோபிக்கவில்லை)**

54) ஆர்தர் காட்டன் என்பவரால் கொள்ளிடத்தின் குறுக்கே எந்த ஆண்டு அணை கட்டப்பட்டது?

A) 1830 இல்

B) 1832 இல்

C) 1834 இல்

**D) 1836 இல்**

**(குறிப்பு - ஆர்தர் காட்டன் என்பவரால் 1836 ஆம் ஆண்டு கொள்ளிடத்தின் குறுக்கே அணை கட்டப்பட்டது. கிருஷ்ணா நதியின் குறுக்கே அணை கட்டும் பணி 1853 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.)**

55) யமுனா கால்வாய் ___________ கங்கை கால்வாய் _________முறையே கட்டப்பட்டன.

A) 1830 இலும், 1856 இலும்

B) 1835 இலும், 1857 இலும்

**C) 1830 இலும், 1857 இலும்**

D) 1840 இலும், 1858 இலும்

**(குறிப்பு - பிரிட்டிஷ் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் இந்தியா செல்வதற்கு முன்பாக வட இந்தியாவில் 1830இல் யமுனா கால்வாயும், 1857இல் கங்கை கால்வாய் 450 மைல்கள் வரை நீடித்த பணியும், 1856 இல் பஞ்சாப் பகுதியில் அமைந்த பாரிடை துறை கால்வாய் தோண்டும் பணியும் பாசனவசதி மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முக்கிய பணிகளாகும்)**

56) எந்த பழங்குடியின மக்கள் ஆட்சியை எதிர்த்த முதல் பழங்குடி மக்களாக திகழ்கிறார்கள்?

**A) சந்தால்**

B) பிண்டாரி

C) மோர்சா

D) படுகர்

**(குறிப்பு - ஆங்கிலேய அரசால் காடுகளை அழித்து வேளாண் நிலங்களை விரிவுபடுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜங்கிள் மஹல் காடுகளிலிருந்து ஜமீன்கள் உருவாக்கப்பட்டு ஏலம் விடப்பட்ட பின் முறையான வேளாண்மைக்கு உட்படுத்தப்பட்டன இந்த நிலங்களின் பூர்வீகக் குடிகளான சந்தால் பழங்குடி மக்கள் விரட்டப்பட்டார்கள் ஆகவே சந்தால் இன மக்களில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்த முதல் பழங்குடி மக்களாக திகழ்கிறார்கள்)**

57) வனச் சட்டம் எந்த ஆண்டு பிறப்பிக்கப்பட்டது?

A) 1860 இல்

B) 1863 இல்

**C) 1865 இல்**

D) 1866 இல்

**(குறிப்பு - இந்திய வனசட்டம் 1865 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டது இந்தச்சட்டம் காடுகளின் வளங்களை பூர்வீக குடிகள் பயன்படுத்த தடை விதித்தால் அவர்களின் அதிருப்தியை பெற்றது.)**

58) குற்றப் பழங்குடியினர் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

**A) 1871 இல்**

B) 1873 இல்

C) 1875 இல்

D) 1877 இல்

**(குறிப்பு - இந்திய வனச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்னர், அதற்கு எதிராக பல போராட்டங்கள் நிகழ்ந்தது. அவர்களின் எதிர்ப்பையும் புறக்கணிப்பையும் கட்டுக்குள் கொண்டு வரும் விதமாக கொடுமையான குற்றப் பழங்குடியினர் சட்டம் 1871 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. காலனிய ஆதிக்க காலம் முழுமையும் அவ்வபோது பழங்குடியின மக்கள் காலனி அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர்)**

59) இஸ்லாமியர் ஆட்சி முறையே ஆங்கிலேய ஆட்சி முறையை விட மேலானது என கூறியவர் யார்?

A) மகாத்மா காந்தி

**B) தாதாபாய் நௌரோஜி**

C) கோபால கிருஷ்ண கோகலே

D) ஜவஹர்லால் நேரு

**(குறிப்பு - இஸ்லாமிய ஆட்சிமுறையை பிரிட்டிஷ் அரசிடம் இருந்து வேறுபடுத்தி பார்த்த நவரோஜி முந்தைய ஆட்சியை நன்மை பயக்கக் கூடிய தாக கருதினார் என வில்லியம் பெண்டிங் எழுதுகிறார்.)**

60) பிரிட்டிஷ் இந்தியாவின் வரவு செலவு கணக்கில் இராணுவ நிர்வாக செலவுகள் எத்தனை சதவீதமாக இருந்தன?

A) 60 சதவீதம்

B) 70 சதவீதம்

**C) 80 சதவீதம்**

D) 90 சதவீதம்

**( பிரிட்டிஷ் இந்தியாவின் வரவு செலவு கணக்கில் ராணுவ மற்றும் குடிமை நிர்வாக செலவுகள் 80% ஆகவும் எஞ்சிய 20 சதவீதம் மட்டுமே மற்ற துறைகளுக்கு பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலை இருந்தது. வேளாண்மை புறக்கணிக்கப்பட்டது. பாசன வசதி ஏற்படுத்தப்படவில்லை)**

61) சித்திரவதை சட்டம் எந்த ஆண்டு திரும்பப் பெறப்பட்டது?

A) 1854 ஆம் ஆண்டு

B) 1856 ஆம் ஆண்டு

**C) 1858ஆம் ஆண்டு**

D) 1860 ஆம் ஆண்டு

**(குறிப்பு - பிரிட்டிஷ் இந்தியாவில் நிலவரியை அரசின் பெரிய வருவாயாக இருந்ததால் கடுமையான முறைகளை பின்பற்றி வரி வசூலிப்பது முக்கியக் கொள்கையாக இருந்தது. கம்பெனி அரசால் சென்னையில் நியமிக்கப்பட்ட சித்திரவதை ஆணையம் 1855ஆம் ஆண்டு சமர்ப்பித்த அறிக்கை வருவாய் அதிகாரிகளுக்கும் காவல் துறை அதிகாரிகளுக்கும் வரி வசூலிக்கும் சமயங்களில் பயிரிடுவோர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகங்களை விளக்கமாக கூறியது)**

62) 1833 இல் கிழக்கிந்திய கம்பெனி அரசு எடுத்த வணிக கொள்கை எது?

A) தடையில்லா வணிகக் கொள்கை

**B) தலையிடா வணிகக் கொள்கை**

C) தரமான வணிக கொள்கை

D) இவை எதுவும் அல்ல

**(குறிப்பு - தலையிடா வணிகக் கொள்கை (Laissez Faire) என்பதை கடைப்பிடிப்பதாக 1833ஆம் ஆண்டு காலனி அரசு எடுத்த முடிவை பஞ்ச காலத்திலும் பலமாக பின்பற்றியதாக தெரிகிறது. 1800 ஆம் ஆண்டிலிருந்து 1825 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் தோன்றிய பஞ்சங்கள் 22 என கணக்கிடப்பட்டுள்ளது)**

63) இந்தியாவில் எந்த ஆண்டு அடிமை முறை ஒழிக்கப்பட்டது?

A) 1840 இல்

**B) 1843 இல்**

C) 1846 இல்

D) 1849 இல்

**(குறிப்பு - தோட்டப் பயிர்களின் அறிமுகமும், மலைச்சரிவு நில பயிரிடும் முறையில் ஏற்பட்ட வளர்ச்சியும் இலங்கை, மொரிஷியஸ், பிஜி, மலேயா, கரிபியன் தீவுகள், தென்னாப்பிரிக்கா போன்ற பகுதிகளில் அதிகமான தொழிலாளர் தேவையை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் அடிமைகளே பயன்படுத்தப்பட்டார்கள்)**

64) நூற்றி ஐம்பது ஒப்பந்த தொழிலாளர்கள் 1828 ஆம் ஆண்டு முதன்முறையாக தஞ்சாவூர் பகுதியில் இருந்து எந்த நாட்டிற்கு அனுப்பப்பட்டார்கள்?

A) மொரிஷியஸ்

B) கரீபியன் தீவுகள்

C) தென்னாப்பிரிக்கா

**D) இலங்கை**

**(குறிப்பு - காலனி அரசு நிலமற்ற விவசாயக் கூலிகளை ஏமாற்றியோ, ஆட்கடத்தல் முறையிலோ தொழிலாளர்களை கொண்டு வர கண்காணிகளை நியமித்தது. இவ்வாறு 150 ஒப்பந்த தொழிலாளர்கள் முதல்முறையாக 1828 ஆம் ஆண்டு தஞ்சாவூர் பகுதிகளில் இருந்து இலங்கையில் அமையப்பெற்ற பிரிட்டிஷ் காபி தோட்டங்களுக்கு அனுப்பப்பட்டார்கள்)**

65) ஒப்பந்தக் கூலி முறை குறித்த கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 - இந்த முறையின்படி கூலி சிறைச்சாலை போன்ற சூழலில் பணி செய்ய வேண்டும்

கூற்று 2 - பணியில் அலட்சியம் காட்டினாலோ அல்லது பணி செய்ய மறுத்தாலோ, மிடுக்காக திரிந்தாலோ, உத்தரவுக்கு கீழ்ப்படிய மறுத்தாலோ, ஒப்பந்த காலம் முடியும் முன் பணியை விட்டு விலகினாலோ, கூலியை மறுக்கவோ அல்லது சிறை தண்டனை வழங்கவோ முடியும்.

கூற்று 3 - இன்றைய நடைமுறையில் இருக்கும் ஒப்பந்த தொழிலாளர் திட்டத்திற்கு முற்றிலும் மாறான தண்டனைக்குரிய ஒப்பந்த முறை இது ஆகும்.

A) கூற்று 1, 2 மட்டும் சரி

B) கூற்று 2, 3 மட்டும் சரி

C) கூற்று 1, 3 மட்டும் சரி

**D) எல்லா கூற்றுகளும் சரி**

**(குறிப்பு - ஒரு அற்ப பிரச்சனைக்காக கூட சட்ட சரத்துக்களை காட்டி தோட்ட உரிமையாளர்கள் தொழிலாளர்களின் சம்பளத்தை மறுப்பதோ அவர்களை சிறையில் அடைக்கவும் செய்தனர். கூலி உயர்வுக்காகவும் அல்லது ஒப்பந்தத்தை முறிக்க செய்திட சங்கம் வைத்து போராட ஒப்பந்தக் கூலி சட்டம் தோட்ட தொழிலாளர்களை அனுமதிக்கவில்லை)**

66) கரும்புத் தோட்டத்திலே என்ற பாடல் மூலம் பெண் தோட்ட தொழிலாளர்களின் பரிதாப நிலையை எடுத்துக் கூறிய கவிஞர் யார்?

A) பாவேந்தர் பாரதிதாசன்

**B) சுப்பிரமணிய பாரதியார்**

C) திரு வி கல்யாண சுந்தரம்

D) நாமக்கல் கவிஞர்

**(குறிப்பு - சுப்பிரமணிய பாரதியார் தனது கரும்புத் தோட்டத்திலே என்ற பாடலில் பெண் தோட்டத் தொழிலாளர்களின் பரிதாப நிலையை உருக்கமாக எடுத்துக் காட்டியிருக்கிறார். மேலும் அவர் புரட்சிகரமான பாடல்கள் மூலம் சுதந்திர எழுச்சியை மக்களிடையே தோன்ற செய்தவர் ஆவார்)**

67) சென்னை ஆளுநர் எந்த ஆண்டு இலங்கை ஆளுநரிடம் இருந்து காபி தோட்டங்களில் பணிபுரிய கூலி தொழிலாளர்களை கேட்டு கடிதம் ஒன்றை பெற்றார்?

A) 1811 இல்

B) 1813 இல்

**C) 1815 இல்**

D) 1817 இல்

**(குறிப்பு - இலங்கை ஆளுநர் 1815 ஆம் ஆண்டு சென்னை ஆளுநருக்கு காபி தோட்டங்களில் பணிபுரிய கூலித் தொழிலாளர்களை கேட்டு கடிதம் ஒன்றை அனுப்பினார். சென்னை ஆளுநர் அந்தக் கடிதத்தை தஞ்சாவூர் ஆட்சியருக்கு அனுப்பினார். தஞ்சாவூர் ஆட்சியர் மூலம் பல கூலித்தொழிலாளர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். 1843 முதல் 1868 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் சென்னையிலிருந்து சுமார் 15 லட்சம் ஒப்பந்த தொழிலாளர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்)**

68) வறுமையும் இந்தியாவில் ஆங்கிலேய முரண் ஆட்சியும் என்ற நூலை எழுதியவர் யார்?

A) ஜவஹர்லால் நேரு

**B) தாதாபாய் நௌரோஜி**

C) கோபால கிருஷ்ண கோகலே

D) பால கங்காதர திலகர்

**(குறிப்பு - வறுமையும் இந்தியாவில் ஆங்கிலேய முரண் ஆட்சியும்(Poverty and UnBritish rule in India) என்ற நூலில் ஆங்கிலேயருக்கு முன்பு படையெடுத்து வந்த ஆட்சியாளர்கள் எவ்வாறு வேறுபடுகிறார்கள் என்பதை தாதாபாய் நௌரோஜி விளக்குகிறார். ஆங்கிலேயருக்கு முன்பு படையெடுத்து வந்தவர்கள் கொள்ளையடித்து தங்கள் நாடுகளுக்கு திரும்பிச் சென்றுவிட்டார்கள். அவ்வாறு அல்லாமல் ஆங்கிலேயர்கள் ஆட்சியாளர்களாக இந்த மண்ணில் குடியமர்ந்த போது அவர்கள் சுரண்டல் போக்கை செயல்படுத்தினர் என கூறுகிறார்)**

69) தாதாபாய் நௌரோஜி தன் வாதத்தில் இந்தியாவில் இருந்து பெரும் தொகை உள்நாட்டு செலவு கட்டணம் என்ற வகையில் இங்கிலாந்து போய் சேருகிறது என்கிறார். அவ்வாறான செலவுகள் கீழ்க்கண்டவற்றுள் எது?

I. கிழக்கிந்திய கம்பெனியின் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட லாபம்

II. ராணுவத்தில் இருந்தும் குடிமைப் பணி களில் இருந்தும் ஓய்வு பெற்றோருக்கு செய்ய வேண்டிய ஓய்வூதிய தொகை.

III. இந்தியாவில் நிகழ்ந்த போர்களுக்கான செலவுகள், போர் நடத்துவதற்காக வங்கியில் பெற்ற கடன்களுக்கான வட்டி மற்றும் இருப்பு பாதை அமைக்க ஏற்பட்ட செலவுகள்.

A) I, II மட்டும் சரியானது

B) II, III மட்டும் சரியானது

C) I, III மட்டும் சரியானது

**D) எல்லாமே சரியானது**

**(குறிப்பு - லண்டனில் அமைந்திருந்த இந்திய அலுவலகத்தில் பணியாற்றிய ஊழியர்களுக்கும் செயலருக்குமான வேண்டிய பெரும் சம்பளம், ஐரோப்பிய அதிகாரிகள் மற்றும் வியாபாரிகள் போன்றோரின் சம்பளம் சேமிப்பு என்ற வகையில் இங்கிலாந்தில் வரவு வைக்கப்பட்ட தொகை போன்றவை செலவு கட்டணம் என்ற வகையில் இங்கிலாந்து போய் சேருகிறது என்கிறார்)**

70) இங்கிலாந்திற்கு இந்தியா 1837 ஆம் ஆண்டில் கொடுக்க வேண்டிய கடன் தொகை எவ்வளவு?

**A) 120 மில்லியன் பவுண்டு**

B) 130 மில்லியன் பவுண்டு

C) 150 மில்லியன் பவுண்டு

D) 180 மில்லியன் பவுண்டு

**(குறிப்பு - இங்கிலாந்திற்கு இந்தியா 1837 ஆம் ஆண்டில் கொடுக்க வேண்டிய கடன் 130 மில்லியன் பவுண்டுகள் ஆகும். அது சிறிது காலத்தில் 220 மில்லியன் பவுண்டுகள் ஆக உயர்ந்த போது அதில் 18% ஆப்கானிஸ்தானோடும், தர்மம் ஒடும் போர் நடத்திய வகையில் செலவு செய்ததாக சொல்லப்பட்டது)**

71) மகாராணி விக்டோரியாவின் ஆட்சிக் காலத்தின் கடைசி பத்து ஆண்டுகளில் மொத்த வருவாயான 647 மில்லியன் பவுண்டுகளில் 159 மில்லியன் பவுண்டுகள் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது என கண்டறிந்து கூறியவர் யார்?

**A) ஆர்.சி.தத்**

B) தாதாபாய் நௌரோஜி

C) சுகுமார் சென்

D) சந்திரசேகர ராவ்

**(குறிப்பு - இந்தியாவில் நடந்த செல்வ வள கடத்தல் (Drain of Wealth) என்று இப்போக்கை வர்ணிக்கும் தாதாபாய் நவரோஜி இவ் வளங்கள் இந்தியாவிலேயே தங்கி இருந்தால் இந்த நாடு செழித்து இருக்கும். மேலும் அவர் கூறுகையில் கஜினி முகமதுவின் கொள்ளை 18 முறையோடு நின்றுவிட பிரிட்டிஷாரின் கொள்ளையோ முடிவில்லாமல் தொடர்கிறது என்றார்).**

winmeen.com

## 11th History Lesson 13 Questions in Tamil

## 13] ஆங்கிலேய ஆட்சிக்கு தொடக்ககால எதிர்ப்புகள்

1) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி பலருடைய ஆட்சிப்பகுதிகளை வெற்றி கொண்டதும் தங்களது எல்லையை விரிவுப்படுத்திக்கொண்டே போனதும் தொடர்ச்சியான பல கிளர்ச்சிகளுக்கு வழிவகுத்தன.

(ii) வரலாற்றாசிரியர்கள் இதை முதல் இந்திய சுதந்திரப்போர் என்று குறிப்பிடுகிறார்கள்.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி பலருடைய ஆட்சிப்பகுதிகளை வெற்றி கொண்டதும் தங்களது எல்லையை விரிவுப்படுத்திக்கொண்டே போனதும் தொடர்ச்சியான பல கிளர்ச்சிகளுக்கு வழிவகுத்தன. அவர்களால் பதவியிலிருந்து நீக்கப்பட்ட மன்னர்கள் அல்லது அவர்களின் வாரிசுகள், தங்கள் ஆட்சிப்பகுதியிலிருந்து , பாளையக்காரர்கள் ஆகியோரால் இத்தகையை கிளர்ச்சிகள் ஏற்பட்டன. வரலாற்றாசிரியர்கள் இதைத் தொடக்க நிலை எதிர்ப்பு என்று குறிப்பிடுகிறார்கள்.**

2) மைசூர் எந்தப் பேரரசின் கீழ் நிலமானிய முறையில் இயங்கிய ஒரு சிறு அரசாக இருந்தது?

**a) விஜயநகர்**

b) சோழர்

c) சாளுக்கியர்

d) ராஷ்டிரக்கூடர்

**விளக்கம்: ஹைதர் அலியின் எழுச்சி: மைசூர், விஜயநகரப் பேரரசின் கீழ் நிலமானிய முறையில் இயங்கிய ஒரு சிறு அரசாக இருந்தது. 1565இல் விஜயநகரப் பேரரசு வீழ்ந்ததற்குப் பிறகு உடையார் வம்சத்தினர் சுதந்திரமான ஆட்சியாளர் ஆயினர்.**

3) உடையார் வம்சத்தினரின் தலைநகரம் மைசூரிலிருந்து எங்கு மாற்றப்பட்டது?

a) தஞ்சாவூர்

**b) ஸ்ரீரங்கப்பட்டினம்**

c) திண்டுக்கல்

d) கோயம்புத்தூர்

**விளக்கம்: ராஜா உடையார் 1578இல் அரியணை ஏறினார். 1610இல் தலைநகரம் மைசூரிலிருந்து ஸ்ரீரங்கபட்டணத்திற்கு மாற்றப்பட்டது. அப்போதிருந்து உடையார் வம்சத்தினரின் ஆட்சி தொடர்ந்தது.**

4) உடையார் அரசின் தளவாய் அல்லது முதன்மை அமைச்சராக நியமிக்கப்பட்டவர்?

a) திப்பு சுல்தான்

b) பாமன்ஷா

**c) ஹைதர் அலி**

d) ஃபதே முகம்மது

**விளக்கம்: 1710இல் தளவாய் அல்லது முதன்மை அமைச்சராக நியமிக்கப்பட்ட ஹைதர் அலி அதிகாரத்தைக் கைப்பற்றும்வரை உடையார்களின் ஆட்சி நீடித்தது.**

5) கோலார் பகுதியின் கோட்டைக் காவற்படைத் தளபதியாக (பௌஜ்தார்) இருந்தவர்?

a) திப்பு சுல்தான்

b) பாமன்ஷா

c) ஹைதர் அலி

**d) ஃபதே முகம்மது**

**விளக்கம்: ஹைதர் அலியின் தந்தை ஃபதே முகம்மது கோலார் பகுதியின் கோட்டைக் காவற்படைத் தளபதியாக (பௌஜ்தார்) இருந்தார். அவரது இறப்புக்குப் பின் ஹைதர் அலி தன் தலைமைப்பண்புகள் மூலம் படையின் உயர்பதவிகளை விரைவாக அடைந்தார்.**

6) ஃபதே ஹைதர் பகதூர்' (வீரமும் வெற்றியும் கொண்ட சிங்கம்) என்ற பட்டம் பெற்றவர்?

a) திப்பு சுல்தான்

b) பாமன்ஷா

**c) ஹைதர் அலி**

d) ஃபதே முகம்மது

**விளக்கம்: 1755க்குள் ஹைதர் அலி 100 குதிரைப்படை வீரர்களையும் 2000 காலாட்படை வீரர்களையும் நிர்வகிக்கும் அளவுக்கு அதிகாரம் படைத்த பொறுப்பைப் பெற்றிருந்தார். மைசூரில் இராணுவத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியை ஒடுக்கினார். மராத்தியர் ஆக்கிரமித்த மைசூர் அரசின் சில பகுதிகளை ஹைதர் மீட்டெடுத்தார். இதற்காக அவர் ' ஃபதே ஹைதர் பகதூர்' (வீரமும் வெற்றியும் கொண்ட சிங்கம்) என்ற பட்டம் பெற்றார்.**

7) ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராக யாருடன் கூட்டு சேர்ந்தார்?

a) டச்சுக்காரர்

b) டேனியர்கள்

**c) பிரெஞ்சுக்காரர்**

d) மராத்தியர்

**விளக்கம்: 1760இல் ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராக புதுச்சேரியில் இருந்த பிரெஞ்சுக்காரர்களுடன் கூட்டு சேர்ந்தார். ஆனால் அவர் தனது சொந்த மண்ணில் மராத்தியரால் உருவாக்கப்பட்ட சதித்திட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனினும் ஹைதர் அதை வெற்றிகரமாக முறியடித்தார். அதற்குப் பிறகு அவரே நடைமுறையில் மைசூரின் உண்மையான ஆட்சியாளர் ஆனார்.**

8) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1770இல் மைசூர் அரசர் நஞ்சராஜா நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார்

(ii) இந்த நிகழ்வுக்குப் பிறகு உடையார் வம்ச அரசர்கள் பெயரளவிலான ஆட்சியாளர்களாக ஆயினர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: 1770இல் மைசூர் அரசர் நஞ்சராஜா நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார். அதில் ஹைதருக்குத் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகம் கிளம்பியது. இந்த நிகழ்வுக்குப் பிறகு உடையார் வம்ச அரசர்கள் பெயரளவிலான ஆட்சியாளர்களாக ஆயினர். ஹைதரே உண்மையான அரச அதிகாரத்துக்கு உரியவர் ஆனார்.**

9) கூற்று (கூ): கிழக்கிந்தியக் கம்பெனி திவானி உரிமையைப் பெற்ற பிறகு, தனது நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதிகளைக் கூடுதல் கவனத்துடன் பாதுகாக்க வேண்டியிருந்தது.

காரணம் (கா): கம்பெனி போதுமான வலிமையுடன் இல்லாததால், இந்திய அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்த்து வந்தது.

**a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

b) கூற்று சரி; காரணம் தவறு

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விளக்கம்: கிழக்கிந்தியக் கம்பெனி திவானி உரிமையைப் பெற்ற (வங்காளம், பீகார், ஒரிசா ஆகியவற்றில் முகலாய அரசுக்குப் பதிலாக வரி வசூலிக்கும் உரிமை) பிறகு, தனது நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதிகளைக் கூடுதல் கவனத்துடன் பாதுகாக்க வேண்டியிருந்தது. கம்பெனி போதுமான வலிமையுடன் இல்லாததால், இந்திய அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்த்து வந்தது.**

10) நாடுகளை சுற்றுவேலிக் கொள்கை மூலம் அனுமதித்தவர்?

a) டல்ஹவுசி

**b) வாரன் ஹேஸ்டிங்ஸ்**

c) வெல்லெஸ்லி

d) லிட்டன்

**விளக்கம்:ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதிகாரத்துக்கு உட்பட்ட இடங்களைத் தக்கவைத்துக்கொள்ள இடைப்பட்ட நாடுகளை (buffer states) வாரன் ஹேஸ்டிங்ஸ் சுற்றுவேலிக் கொள்கை மூலம் தொடர்ந்து அனுமதித்தார். எனினும் கம்பெனி கர்நாடக அரசியல் விவகாரங்களினால் ஈர்க்கப்பட்டது. நவாப் பதவிக்காகத் தொடர்ச்சியாக நடைபெற்ற மோதல்களே இதற்குக் காரணம். ஆங்கிலேய வணிகர்கள் இதை இந்திய அரசியலில் நேரடியாகத் தலையிடுவதற்கான ஒரு பெரிய வாய்ப்பாகக் கருதினார்கள். ஆனால் அவர்களின் முயற்சிக்கு ஹைதர் அலி, ஹைதராபாத் நிஜாம் ஆகிய வலிமைமிக்க சக்திகளிடமிருந்து அச்சுறுத்தல்கள் இருந்தன.**

11) முதலாம் மைசூர் போர் எந்த ஆண்டு நடைபெற்றது?

**a) 1767 முதல் 1769 வரை**

b) 1768 முதல் 1772 வரை

c) 1769 முதல் 1774 வரை

d) 1775 முதல் 1782 வரை

**விளக்கம்: முதலாம் மைசூர் போர் 1767-69: மூன்றாம் கர்நாடகப் போரில் வங்காளத்திலிருந்து படைகளை வழிநடத்திய கர்னல் ஃபோர்டே 1759இல் மசூலிப்பட்டிணத்தைக் கைப்பற்றினார். இது ஜாலாபத் ஜங் உடனான உடன்படிக்கைக்கு வழிவகுத்தது. அவர் 'வட சர்க்கார்கள்' என அறியப்படும் கஞ்சம், விசாகப்பட்டினம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஆகிய மாவட்டங்களை ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது.**

12) வட சர்க்கார்கள் ஆங்கிலேயர் வசம் ஆனதை அங்கீகரிக்கும் உடன்படிக்கை எது?

**a) அலகாபாத் உடன்படிக்கை**

b) பூனா உடன்படிக்கை

c) நாக்பூர் உடன்படிக்கை

d) பேசின் உடன்படிக்கை

**விளக்கம்: வட சர்க்கார்கள் ஆங்கிலேயர் வசம் ஆனதை முகலாயப் பேரரசர் 1765இல் அலகாபாத் உடன்படிக்கை மூலம் அங்கீகரித்தார். ஆனால் 1766இல் ஆங்கிலேயர் இப்பகுதியைக் கையகப்படுத்தியபோது பிரச்சனை தோன்றியது.**

13) வட சர்க்கார் பகுதிகளை ஆங்கிலேயர் கையகப்படுத்த யாருடன் உடன்படிக்கை செய்து கொண்டனர்?

**a) நிஜாம் அலி**

b) சௌகத் அலி

c) முகமது அலி

d) பகதூர்ஷா

**விளக்கம்: வட சர்க்கார் பகுதிகளை ஆங்கிலேயர் கையகப்படுத்த நிஜாம் அலி எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்க வேண்டும் என்றும் அதற்குப் பதிலாக அவருக்கு எதிரிகளிடமிருந்து ஆபத்து வரும்போது ஆங்கிலேயர் உதவிக்கு வருவார்கள் என்றும் ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த வாக்குறுதி மூலம் ஹைதர் அலிக்கு எதிராக நிஜாம் அலிக்கு உதவத் தாங்கள் தயாராக இருப்பதை உணர்த்தினார்கள். ஆங்கிலேயர் பின்னாட்களில் பின்பற்றிய துணைப்படைத்திட்டத்துக்கு இந்நடைமுறை காரணியாக அமைந்தது.**

14) கூற்று (கூ): நிஜாம் அலி ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டாலும், 1767இல் அவருக்கும் ஹைதர் அலிக்கும் இடையே ஓர் புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டது.

காரணம் (கா): எனவே ஆங்கிலேயர் ஹைதருக்கு எதிரான போரை அறிவித்தார்கள்.

**a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

b) கூற்று சரி; காரணம் தவறு

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விளக்கம்: நிஜாம் அலி ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டாலும், 1767இல் அவருக்கும் ஹைதர் அலிக்கும் இடையே ஓர் புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டது. எனவே ஆங்கிலேயர் ஹைதருக்கு எதிரான போரை அறிவித்தார்கள். இது முதலாம் ஆங்கிலேய மைசூர் போர் அல்லது முதலாம் மைசூர் போர் என அறியப்படுகிறது.**

15) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) முதல் மைசூர் போரில் பம்பாயிலிருந்து வந்த ஆங்கிலேயரின் ஒரு படை மேற்குக்கடற்கரையின் மங்களூரையும் அதைச் சுற்றியிருந்த பிற பகுதிகளையும் கைப்பற்றியது.

(ii) பெங்களூரைக் கைப்பற்ற நினைத்த ஆங்கிலேயரின் முயற்சி வெற்றி பெறவில்லை.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: முதல் மைசூர் போரில் பம்பாயிலிருந்து வந்த ஆங்கிலேயரின் ஒரு படை மேற்குக்கடற்கரையின் மங்களூரையும் அதைச் சுற்றியிருந்த பிற பகுதிகளையும் கைப்பற்றியது. ஆனால் ஹைதர் இவற்றை மீட்டெடுத்தார். பெங்களூரைக் கைப்பற்ற நினைத்த ஆங்கிலேயரின் முயற்சி வெற்றி பெறவில்லை.**

16) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1768இல் ஹைதர் பாராமஹால் (சேலம் மாவட்டம்) மீது திடீர் தாக்குதல் தொடுத்து, கேப்டன் நிக்சனைத் தோற்கடித்துக் கரூரையும் ஈரோட்டையும் கைப்பற்றினார்.

(ii) ஹைதரின் தளபதி சாதத்துல்லா கான் மதுரையிலும் திருநெல்வேலியிலும் படையை எந்த எதிர்ப்புமின்றி வழிநடத்திச் சென்றார்.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: 1768இல் ஹைதர் பாராமஹால் (சேலம் மாவட்டம்) மீது திடீர் தாக்குதல் தொடுத்து, கேப்டன் நிக்சனைத் தோற்கடித்துக் கரூரையும் ஈரோட்டையும் கைப்பற்றினார். இதற்கிடையே ஹைதரின் தளபதி ஃபசலுல்லா கான் மதுரையிலும் திருநெல்வேலியிலும் படையை எந்த எதிர்ப்புமின்றி வழிநடத்திச் சென்றார். ஹைதர் தஞ்சாவூருக்கும் அங்கிருந்து கடலூருக்கும் முன்னேறிச் சென்றார்.**

17) முதல் ஆங்கில மைசூர் போர் எந்த உடன்படிக்கை மூலம் முடிவுக்கு வந்தது?

a) புதுச்சேரி உடன்படிக்கை

b) ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை

c) பாரிஸ் உடன்படிக்கை

**d) சென்னை உடன்படிக்கை**

**விளக்கம்: ஆங்கிலேயர் மீதான தாக்குதலை நிறுத்த ஹைதர் விரும்பாவிட்டாலும், மராத்தியர் படையெடுத்து வரக்கூடும் என்ற அச்சுறுத்தல் அவரை ஆங்கிலேயருடன் அமைதி உடன்படிக்கை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளியது. அவருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே சென்னை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.**

18) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கையின்படி இரு தரப்பும் கைப்பற்றிய பகுதிகளை அவரவரிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

(ii) தங்களைத் தற்காத்துக்கொள்ள நடைபெறும் போர்களில் இரு தரப்பும் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும்.

a) (i) சரி

**b) (ii) சரி**

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சென்னை உடன்படிக்கை யில் இருந்த நிபந்தனைகள் வருமாறு: இரு தரப்பும் கைப்பற்றிய பகுதிகளை அவரவரிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும். கரூர் மட்டும் ஹைதரின் வசம் இருக்கும். தங்களைத் தற்காத்துக்கொள்ள நடைபெறும் போர்களில் இரு தரப்பும் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும். இது மராத்தியருக்கு எதிராக ஆங்கிலேயர் உதவுவதற்கு கடமைப்பட்டவர்கள் என்பதையே குறித்தது. ஆனால் ஹைதருக்கும் மராத்தியருக்கும் எதிரான சண்டையின்போது தேவையான நேரத்தில் ஆங்கிலேயரின் உதவி கிடைக்காததால் ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரும்பினார்.**

19) அமெரிக்கச் சுதந்திரப்போருக்குப் பிறகு அமெரிக்காவுடன் நட்பு உடன்படிக்கை செய்துகொண்ட நாடு/கள்?

a) ஸ்பெயின்

b) பிரான்ஸ்

c) இத்தாலி

**d) a) மற்றும் b)**

**விளக்கம்: இரண்டாம் மைசூர் போரும் (1780) ஹைதரும்: அமெரிக்கச் சுதந்திரப்போருக்குப் பிறகு பிரான்ஸ் அமெரிக்காவுடன் நட்பு உடன்படிக்கை (1778) செய்துகொண்டது. எனவே பிரிட்டன் பிரான்ஸுக்கு எதிரான போரை அறிவித்தது. இதைப் போலவே ஸ்பெயினும் அமெரிக்காவுடன் நட்பு உடன்படிக்கை மேற்கொண்டு, இங்கிலாந்துக்கு எதிராகப் போரில் (1779) இறங்கியபோது இங்கிலாந்து தனிமைப்பட்டது.**

20) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) இந்தியாவில் பிரெஞ்சுப்படையின் ஆதரவுடன் நிஜாம் அலியும் மராத்தியரும் கைகோத்துச் செயல்பட்ட போக்கு ஆங்கிலேயருக்கு நெருக்கடியை அதிகப்படுத்தியது.

(ii) ஹைதர் அலி இந்தச் சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள கர்நாடகத்திற்குப் படையெடுத்தார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: இந்தியாவில் பிரெஞ்சுப்படையின் ஆதரவுடன் நிஜாம் அலியும் மராத்தியரும் கைகோத்துச் செயல்பட்ட போக்கு ஆங்கிலேயருக்கு நெருக்கடியை அதிகப்படுத்தியது. ஹைதர் அலி இந்தச் சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள கர்நாடகத்திற்குப் படையெடுத்தார்.**

21) ஹெக்டர் மன்றோ தலைமையிலான படையுடன் சேர்ந்து செயல்பட வேண்டியவராக இருந்தவர் யார்?

**a) கர்னல் பெய்லி**

b) சர் அயர்கூட்

c) கர்னல் ப்ரெய்த்வெயிட்

d) கர்னல் ஹாப்

**விளக்கம்: ஹெக்டர் மன்றோ தலைமையிலான படையுடன் சேர்ந்து செயல்பட வேண்டிய கர்னல் பெய்லி ஹைதரின் திடீர்த்தாக்குதலில் கடுமையாகக் காயமுற்றார். இது மன்றோவை சென்னை நோக்கிச் செல்ல வைத்தது. ஹைதர் ஆற்காட்டை க் கைப்பற்றினார் (1780).**

22) சென்னை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க வந்தவாசிப் போரில் வெற்றிபெற்றவர் யார்?

a) கர்னல் பெய்லி

**b) சர் அயர்கூட்**

c) கர்னல் ப்ரெய்த்வெயிட்

d) கர்னல் ஹாப்

**விளக்கம்: சென்னை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க வந்தவாசிப் போரில் வெற்றிபெற்ற அயர்கூட் மதராஸைக் கடல்வழியே முற்றுகையிட வங்காளத்திலிருந்து அனுப்பப்பட்டார். ஹைதருக்கு எதிராக வெற்றியை ஈட்டிய கூட் புதுச்சேரியை நோக்கி நகர்ந்தார்.**

23) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கர்னல் பெய்லி பரங்கிப்பேட்டையை (Porto Novo) அடைந்து, ஹைதருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் வகையில் வெற்றி பெற்றார்.

(ii) ஹைதர் அங்கு நடைபெற்ற மோதலில் ஆங்கிலேயரிடம் பிடிபடுவதிலிருந்து நூலிழையில் தப்பினார்.

a) (i) சரி

**b) (ii) சரி**

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஹைதர் தஞ்சாவூர் அரசைத் தன் பிடிக்குள் கொண்டுவந்தார். கூட் பரங்கிப்பேட்டையை (Porto Novo) அடைந்து, ஹைதருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் வகையில் வெற்றி பெற்றார். ஹைதர் அங்கு நடைபெற்ற மோதலில் ஆங்கிலேயரிடம் பிடிபடுவதிலிருந்து நூலிழையில் தப்பினார்.**

24) ஹைதரின் மகன் திப்பு சுல்தானால் தோற்கடிக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்ட ஆங்கில படைத்தளபதி?

a) கர்னல் பெய்லி

b) சர் அயர்கூட்

**c) கர்னல் ப்ரெய்த்வெயிட்**

d) கர்னல் ஹாப்

**விளக்கம்: ஹைதரின் மகன் திப்பு சுல்தான் கர்னல் ப்ரெய்த்வெயிட்டை கும்பகோணம் அருகே தோற்கடித்துச் சிறைப்பிடித்தார். மைசூர் சுல்தானின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக ஜெனரல் மேத்யூஸ் மங்களூரை நோக்கி ஒரு படையெடுப்பை மேற்கொண்டார். இந்த நடவடிக்கை ஆங்கிலேயர் எதிர்பார்த்தபடி திப்பு சுல்தானைக் கர்நாடகத்தை விட்டு மேற்குக்கடற்கரையை நோக்கி நகர வைத்தது.**

25) அமெரிக்கச் சுதந்திரப் போரின் முடிவில் கையெழுத்தான உடன்படிக்கை எது?

**a) பாரிஸ் உடன்படிக்கை**

b) அய்லா சாப்பேல் உடன்படிக்கை

c) லண்டன் உடன்படிக்கை

d) நியூயார்க் உடன்படிக்கை

**விளக்கம்: புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஹைதரின் மரணம் (1782), அமெரிக்கச் சுதந்திரப் போரின் முடிவில் கையெழுத்தான பாரிஸ் உடன்படிக்கை (1783), நீண்ட நாட்களுக்கு நீடித்த மங்களூர் முற்றுகை ஆகிய நிகழ்வுகள் திப்பு சுல்தானுக்கு எதிரான ஆங்கிலேயரின் நடவடிக்கைகளுக்கு வலுச் சேர்ப்பதாக இருந்தன.**

26) கரூரையும் திண்டுக்கல்லையும் கைப்பற்றிய ஆங்கிலப்படைத்தளபதி?

a) கர்னல் பெய்லி

b) கர்னல் ஃபுல்லர்ட்டன்

c) கர்னல் ப்ரெய்த்வெயிட்

**d) கர்னல் லேங்**

**விளக்கம்: கர்னல் லேங் கரூரையும் திண்டுக்கல்லையும் கைப்பற்றினார். கர்னல் ஃபுல்லர்ட்டன் பாலக்காட்டையும் கோயம்புத்தூரையும் கைப்பற்றினார் . அடுத்ததாக ஸ்ரீரங்கப்பட்டணத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அவர் முன்னேறி வந்தபோது திப்பு சுல்தான் சமாதானத்துக்கு விருப்பம் தெரிவித்து, முற்றுகையைத் தவிர்த்தார்.**

27) மங்களூர் உடன்படிக்கை எந்த ஆண்டு கையெழுத்தானது?

a) 1786

b) 1782

**c) 1784**

d) 1781

**விளக்கம்: 1784 மார்ச் மாதத்தில் மங்களூர் உடன்படிக்கை கையெழுத்தானது. அதன்படி, இரு தரப்பினரும் அதுவரை வென்ற பகுதிகளைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றும் போரில் கைதானவர்களை விடுவிக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.**

28) மூன்றாம் மைசூர் போர் நடைபெற்றபோது கவர்னர் ஜெனரல் ஆக இருந்தவர்?

a) வெல்லெஸ்லி

b) கர்சன்

**c) கார்ன் வாலிஸ்**

d) வில்லியம் பெண்டிக்

**விளக்கம்: மூன்றாம் மைசூர் போர்: 1790-92 இடைப்பட்ட காலத்தில் கார்ன்வாலிஸ் கவர்னர் ஜெனரல் ஆகப் பொறுப்பேற்றார். அவர் திப்பு சுல்தானைப் பழிவாங்கும் விதத்தில் நடந்துகொண்டார். தெற்கில் இரு மிகப்பெரும் சக்திகளாக விளங்கிய ஹைதராபாத் நிஜாமும் மராத்தியரின் கூட்டமைப்பும் ஆங்கிலேயரின் கூட்டாளிகளாக இதில் செயல்பட்டார்கள்.**

29) முதல் ஆங்கிலேய மராத்தியப் போருக்குப் பின் மராத்தியர் ஆங்கிலேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கை எது?

a) சால்செட் உடன்படிக்கை

b) பேசின் உடன்படிக்கை

**c) சால்பை உடன்படிக்கை**

d) சூரத் உடன்படிக்கை

**விளக்கம்: திப்புவுடனான போருக்குத் தேவைப்பட்ட நிதியாதாரங்களையும் கூடவே தன் படைகளையும் ஹைதராபாத் நிஜாம் ஆங்கிலேயருக்கு வழங்கினார். 1782இல் முதல் ஆங்கிலேய மராத்தியப் போருக்குப் பின் ஆங்கிலேயருடன் சால்பை உடன்படிக்கை செய்துகொண்ட மராத்தியர் ஆங்கிலேயரை ஆதரித்தார்கள். . நிஜாம், மராத்தியர் ஆகிய இரு தரப்பிலிருந்தும் கிடைத்த ஆதரவால் ஆங்கிலேயரின் கை ஓங்கியது.**

30) திப்புவின் தூதுக்குழுவை நட்புறவுடன் நடத்திய பிரெஞ்சு அரசர்?

**a) பதினாறாம் லூயி**

b) பதினைந்தாம் லூயி

c) பதினான்காம் லூயி

d) பதினேழாம் லூயி

**விளக்கம்: திப்பு கான்ஸ்டாண்டிநோபிளுக்கும் 1787இல் பாரிஸுக்கும் தூதுக்குழுவை அனுப்பினார். ஆங்கிலேயருக்கு எதிராகத் தன்னை வலுப்படுத்திக்கொள்வதற்காகத் திப்பு இந்த இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டார். பிரெஞ்சு அரசர் பதினாறாம் லூயி தூதுக்குழுவை நட்புறவுடன் நடத்தினாலும், திப்பு எதிர்பார்த்த ஆதரவு குறித்து வெற்று வாக்குறுதியையே அளித்தார்.**

31) கூற்று (கூ): 1790ல் மூன்றாம் ஆங்கிலேய-மைசூர் போர் தொடங்கியது.

காரணம் (கா): பிரிட்டனுடன் நட்பு பாராட்டிய திருவிதாங்கூர் மீதான திப்புவின் தாக்குதலும் கொடுங்களூரைக் கைப்பற்றியதும் கம்பெனி அரசுடனான போருக்கான அறிவிப்பாகவே எடுத்துக்கொள்ளப்பட்டன.

**a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

b) கூற்று சரி; காரணம் தவறு

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விளக்கம்: பிரிட்டனுடன் நட்பு பாராட்டிய திருவிதாங்கூர் மீதான திப்புவின் தாக்குதலும் கொடுங்களூரைக் கைப்பற்றியதும் கம்பெனி அரசுடனான போருக்கான அறிவிப்பாகவே எடுத்துக்கொள்ளப்பட்டன. இவ்வாறு மூன்றாம் ஆங்கிலேய-மைசூர் போர் தொடங்கியது.**

32) திப்புவின் தளபதி ஹுசைன் அலியைக் கள்ளிக்கோட்டையில் தோற்கடித்த ஆங்கிலப்படைத்தளபதி?

a) கர்னல் பெய்லி

b) கர்னல் ஃபுல்லர்ட்டன்

c) கர்னல் ப்ரெய்த்வெயிட்

**d) கர்னல் ஹார்ட்லி**

**விளக்கம்: கர்னல் ஹார்ட்லி திப்புவின் தளபதி ஹுசைன் அலியைக் கள்ளிக்கோட்டையில் தோற்கடித்தார். இதற்குப் பதிலடியாகத் திப்பு திருவண்ணாமலையைக் கைப்பற்றினார். புதுச்சேரி பிரெஞ்சு ஆளுநரின் ஆதரவைப் பெறுவதற்குத் திப்பு எடுத்த முயற்சி வெற்றிபெறவில்லை.**

33) ஸ்ரீரங்கப்பட்டணம் அருகே திப்பு தோற்கடித்த கவர்னர் ஜெனரல்?

a) வெல்லெஸ்லி

b) கர்சன்

**c) கார்ன் வாலிஸ்**

d) வில்லியம் பெண்டிக்

**விளக்கம்: கவர்னர் ஜெனரலான காரன்வாலிஸ் தானே வேலூரிலிருந்து படையெடுத்து வந்து, பெங்களூரை அடைந்தார். வழியில் அவர் திப்புவை எதிர்கொள்ள நேர்ந்தது. ஸ்ரீரங்கப்பட்டணம் அருகே திப்பு தோற்கடிக்கப்பட்டார். படையெடுப்பின்போது தேவைப்படும் பொருட்களின் பற்றாக்குறையால் காரன்வாலில் பின்வாங்க வேண்டியிருந்தது.**

34) மூன்றாம் மைசூர் போரின்போது தக்க தருணத்தில் ஆங்கிலேயருக்குத் தேவையான பொருட்களை வழங்கியவர்கள்?

**a) மராத்தியர்**

b) வங்காள நவாப்

c) முகலாயர்

d) ராஜபுத்திரர்கள்

**விளக்கம்: மூன்றாம் மைசூர் போரின்போது தக்க தருணத்தில் மராத்தியர் ஆங்கிலேயருக்குத் தேவையான பொருட்களை வழங்கினார்கள். கூடுதல் வலிமை பெற்ற ஆங்கிலேயப்படை ஸ்ரீரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டது. அதன் கடுமையான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திப்பு அமைதி உடன்படிக்கைக்கு அழைப்பு விடுத்தார். உடன்படிக்கையில் கார்ன்வாலிஸ் விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார்.**

35) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையின்படி, திப்பு அவருடைய ஆட்சிப்பகுதிகளில் பாதி இடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டும்.

(ii) போர் இழப்பீடாக மூன்று கோடி ரூபாய் அளிக்க வேண்டும்

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையின்படி, திப்பு அவருடைய ஆட்சிப்பகுதிகளில் பாதி இடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டும்; போர் இழப்பீடாக மூன்று கோடி ரூபாய் அளிக்க வேண்டும்; அவருடைய மகன்களில் இருவரைப் பிணைக்கைதிகளாக அனுப்பி வைக்க வேண்டும்.**

36) ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையின்படி திப்பு எந்தப்பகுதியை இழந்தார்?

**a) குடகு**

b) பாராமஹால்

c) மலபார்

d) திண்டுக்கல்

**விளக்கம்: திப்புவிடமிருந்து பெறப்பட்ட பகுதிகளும் இழப்பீட்டுத்தொகையும் சமமாகப் பகிர்ந்துகொள்ளப்பட்டன. ஆங்கிலேயர் மலபார், திண்டுக்கல், பாராமஹால் ஆகிய பகுதிகளைப் பெற்றார்கள். திப்பு குடகுப் பகுதியை இழந்தார். அதன் அரசர் ஆங்கிலேயருக்குக் கீழ்ப்படிய வேண்டிய சிற்றரசர் ஆனார். திப்புவின் அதிகாரம் பெருமளவுக்குக் குறைக்கப்பட்டது.**

37) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சென்னையில் பிணைக்கைதிகளாகயிருந்த திப்புவின் மகன்கள் அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்ட பிறகு ஸ்ரீரங்கப்பட்டணத்துக்கு 1794 ஆம் ஆண்டு மே 29 அன்று திருப்பியனுப்பி வைக்கப்பட்டார்கள்.

(ii) சென்னை உடன்படிக்கை மூலம் ஏற்பட்ட அவமானத்தையும் பொருளாதார இழப்பையும் திப்புவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சென்னையில் பிணைக்கைதிகளாகயிருந்த திப்புவின் மகன்கள் அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்ட பிறகு ஸ்ரீரங்கப்பட்டணத்துக்கு 1794 ஆம் ஆண்டு மே 29 அன்று திருப்பியனுப்பி வைக்கப்பட்டார்கள். இந்த உடன்படிக்கை மூலம் ஏற்பட்ட அவமானத்தையும் பொருளாதார இழப்பையும் திப்புவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.**

38) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) மைசூர் அரசர் ஒன்பதாம் சாமராஜ் 1796இல் இறந்தார்.

(ii) பிரான்ஸிடமிருந்து உதவி கிடைத்த பிறகு திப்பு ஆங்கிலேயர் மீதான போர் குறித்து அறிவிப்பார் என்பதே மாலரிக்கின் அறிவிப்பாகும்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: மைசூர் அரசர் ஒன்பதாம் சாமராஜ் 1796இல் இறந்தார். அடுத்த அரசரை நியமிக்கும் முறையான வழக்கத்தைத் திப்பு பின்பற்றவில்லை. அவர் இந்தத் தீர்மானத்துக்கு வந்த அதே நேரத்தில், பிரெஞ்சு காலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த மொரீஷியஸின் கவர்னர் மாலரிக் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். பிரான்ஸிடமிருந்து உதவி கிடைத்த பிறகு திப்பு ஆங்கிலேயர் மீதான போர் குறித்து அறிவிப்பார் என்பதே மாலரிக்கின் அறிவிப்பாகும்.**

39) நான்காம் மைசூர் போர் ஏற்பட்டதற்கான காரணங்கள்?

i ) திப்பு 1798 ஜூலையில் பிரான்சு ஆட்சியை நிர்வகித்த இயக்குநரகத்துடன் மேற்கொண்ட கடிதத் தொடர்புகள்

ii ) நெப்போலியனுடன் மேற்கொண்ட கடிதத் தொடர்புகள்

iii ) வெல்லெஸ்லியுடனான கடிதத்தொடர்பில் காட்டிய நழுவல்

**a) i ), ii ), iii )**

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

**விளக்கம்: திப்பு 1798 ஜூலையில் பிரான்சு ஆட்சியை நிர்வகித்த இயக்குநரகத்துடனும் அதற்குப் பிறகு அங்கு ஆட்சியைப் பிடித்த நெப்போலியனுடனும் மேற்கொண்ட கடிதத் தொடர்புகள், அவர் வெல்லெஸ்லியுடனான கடிதத்தொடர்பில் காட்டிய நழுவல் ஆகியவை ஆங்கிலேயரை மீண்டும் திப்புவுக்கு எதிரான போரை அறிவிக்கச் செய்தன.**

40) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1796இல் திப்பு பாரிஸுக்கு மீண்டும் தூதர்களை அனுப்பினார்.

(ii) 1797இல் திப்புவை மொரிஷியஸிலிருந்து வந்த ஒரு பிரெஞ்சு தூதர் சந்தித்து, பிரான்சின் ஆதரவை உறுதிப்படுத்தினார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: நான்காம் மைசூர் போர் 1799: திப்பு தனது படையையும் நிதியாதாரங்களையும் வலுப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். 1796இல் பாரிஸுக்கு மீண்டும் தூதர்களை அனுப்பினார். 1797இல் அவரை மொரிஷியஸிலிருந்து வந்த ஒரு பிரெஞ்சு தூதர் சந்தித்து, பிரான்சின் ஆதரவை உறுதிப்படுத்தினார்.**

41) பிரான்சில் இருப்பதைப் போல ஜேக்கோபியர் கழகம் எங்கு தொடங்கப்பட்டது?

**a) ஶ்ரீரங்கப்பபட்டணம்**

b) மைசூர்

c) திண்டுக்கல்

d) பாரமகால்

**விளக்கம்: பிரான்சில் இருப்பதைப் போல ஶ்ரீரங்கப்பட்டணத்திலும் ஜேக்கோபியர் கழகம் தொடங்கப்பட்டது. இது பிரெஞ்சுப்புரட்சியின்போது நிறுவப்பட்டு, பின்னர் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த புரட்சிகர அமைப்பாகும். மைசூர் சுல்தானுக்கும் பிரெஞ்சு அரசுக்குமான நல்லுறவைத் தெரிவிக்கும் விதத்தில் பிரெஞ்சு குடியரசின் கொடி ஏற்றப்பட்டது.**

42) நான்காம் ஆங்கிலேய-மைசூர் போரின்போது கவர்னர் ஜெனரல் ஆக இருந்தவர்?

**a) வெல்லெஸ்லி**

b) காரன்வாலிஸ்

c) வில்லியம் பெண்டிக்

d) வாரன் ஹேஸ்டிங்ஸ்

**விளக்கம்: பிரான்சுடன் திப்பு ஏற்படுத்திக்கொண்ட கூட்டணியால் கோபமுற்ற புதிய கவர்னர் ஜெனரலான வெல்லெஸ்லி துணைப்படைத்திட்டத்தின் கீழ் மைசூரில் ஆங்கிலேயப் படை ஒன்றை நிரந்தரமாக வைத்திருக்க வேண்டும் என வலியுறுத்தினார். திப்பு இதை ஏற்கவில்லை. ஆங்கிலேயர் நான்காம் ஆங்கிலேய-மைசூர் போரை 1799இல் அறிவித்தனர்.**

43) நான்காம் மைசூர் போரின்போது ஸ்ரீரங்கப்பட்டணத்தினை கைப்பற்றியவர்?

a) கர்னல் பெய்லி

b) கர்னல் ஃபுல்லர்ட்டன்

c) கர்னல் ப்ரெய்த்வெயிட்

**d) ஜெனரல் டேவிட் பெய்ர்டு**

**விளக்கம்: ஜெனரல் டேவிட் பெய்ர்டு ஸ்ரீரங்கப்பட்டணத்தின் மீது திடீர் தாக்குதல் தொடுத்துக் கைப்பற்றினார். அமைதி உடன்படிக்கைக்கான திப்புவின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. இறுதி மோதலில் காயமுற்ற திப்பு ஓர் ஐரோப்பியப் படைவீரனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.**

44) திப்புவின் மகன்கள் முதலில்  எங்கு சிறைவைக்கப்பட்டார்கள்?

a) கல்கத்தா

**b) வேலூர்**

c) திண்டுக்கல்

d) ஸ்ரீரங்கப்பட்டணம்

**விளக்கம்: திப்புவை அகற்றியதும் உடையார் வம்சத்தினரை மீண்டும் ஆட்சியில் அமர்த்தியதும் தென்னிந்தியாவில் கம்பெனி ஆட்சியின் உண்மையான தொடக்கமாக அமைந்தன. திப்புவின் மகன்கள் முதலில் வேலூரில் சிறைவைக்கப்பட்டார்கள்.**

45) திப்புவின் மகன்கள் வேலூர் கிளர்ச்சிக்குப் பிறகு எங்கு மாற்றப்பட்டார்கள்?

**a) கல்கத்தா**

b) வேலூர்

c) திண்டுக்கல்

d) ஸ்ரீரங்கப்பட்டினம்

**விளக்கம்: 1806இல் வேலூர் கிளர்ச்சிக்குப் பிறகு கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டார்கள். இவ்வாறு ஆங்கிலேயருக்கு எதிரான மைசூர் சுல்தான்களின் வீரம் செறிந்த மோதல்கள் முடிவுக்கு வந்தன.**

46) விஜயநகரப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, அரசப்பிரதிநிதியாக மதுரைக்கு வந்தவர்?

a) கோபால நாயக்கர்

**b) நாகம நாயக்கர்**

c) விஜய ரங்க சொக்கநாதர்

d) திருமலை நாயக்கர்

**விளக்கம்: விஜயநகரப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, அரசப்பிரதிநிதியாக மதுரைக்கு வந்த நாகம நாயக்கரும் அவருடைய மகன் விஸ்வநாத நாயக்கரும் மதுரை, திருநெல்வேலி ஆகியவற்றின் சுதந்திரமான ஆட்சியாளர்களா கத் தங்களை உறுதிப்படுத்திக்கொண்டனர்.**

47) யாருடைய வழிகாட்டுதலின் கீழ் முன்னாள் பாண்டியப் பேரரசின் அனைத்து சிற்றரசுகளும் வகைப்படுத்தப்பட்டு பாளையங்களாக மாற்றப்பட்டன?

**a) அரியநாதர்**

b) நாகம நாயக்கர்

c) விஜய ரங்க சொக்கநாதர்

d) திருமலை நாயக்கர்

**விளக்கம்: தளவாய் அரியநாயக முதலியாரின் திறமையான வழிகாட்டுதலின் கீழ் முன்னாள் பாண்டியப் பேரரசின் அனைத்து சிற்றரசுகளும் வகைப்படுத்தப்பட்டு, 72 பாளையங்களாக மாற்றப்பட்டன.**

48) மதுரையைச் சுற்றி வலிமை மிகுந்த ஒரு கோட்டையை எழுப்பிய நாயக்கர்?

a) அரியநாதர்

b) நாகம நாயக்கர்

**c) விஸ்வ நாத நாயக்கர்**

d) திருமலை நாயக்கர்

**விளக்கம்: விஸ்வநாத நாயக்கர் மதுரையைச் சுற்றி வலிமை மிகுந்த ஒரு கோட்டையை எழுப்பினார். அதில் 72 அரண்கள் இருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலைமையின் கீழ் இருந்தன.**

49) எந்தப்பகுதியை ஆட்சி செய்த மன்னர்களால் பாளையக்காரர் முறை பின்பற்றப்பட்டு வந்தது?

a) கல்யாணி

b) துவார சமுத்திரம்

**c) வாரங்கல்**

d) வாதாபி

**விளக்கம்: பாளையக்காரர் முறை 1530களில் தோன்றியது. வாராங்கலை ஆண்டுவந்த காகதிய அரசில் இந்த முறை பின்பற்றப்பட்டு வந்ததாக கருதப்படுகிறது. அரசருக்குத் தேவையானபோது போரில் வீரர்களுடன் பங்கேற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒரு பாசறையையும் பெரும் நிலப்பரப்பையும் வைத்திருப்பவரையே பாளையக்காரர் என்ற சொல் குறிக்கிறது.**

50) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) பாளையக்காரர் முறை தோன்றுவதற்கு முன்னால், சேர்வைக்காரர்களும் தலையாரிகளும் காவல் பணிகளுக்காக வரி வசூலித்து வந்தனர்.

(ii) பாளைய முறை அறிமுகமான பிறகு, பாளையக்காரர்கள் சேர்வைக்காரர்கள், தலையாரிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார்கள்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பாளையக்காரர் முறை தோன்றுவதற்கு முன்னால், சேர்வைக்காரர்களும் தலையாரிகளும் காவல் பணிகளுக்காக வரி வசூலித்து வந்தனர். பாளைய முறை அறிமுகமான பிறகு, பாளையக்காரர்கள் சேர்வைக்காரர்கள், தலையாரிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார்கள்.**

51) கூற்று (கூ): பாளையக்காரர் அரசருக்கு தேவையானபோது படைவீரர்களை அனுப்புவதற்கும் பாளையத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் கடமைப்பட்டவர்.

காரணம் (கா): இந்தக் கடமைகளையும் பிற பணிகளையும் செய்வதற்குத் தேவையான நிதியாதாரத்தைப் பெற சில கிராமங்கள் அவருக்கு வழங்கப்பட்டிருந்தன.

**a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

b) கூற்று சரி; காரணம் தவறு

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விளக்கம்: பாளையக்காரர் அரசருக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையைக் கப்பமாகச் செலுத்துவதற்கும் தேவையானபோது படைவீரர்களை அனுப்புவதற்கும் பாளையத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் கடமைப்பட்டவர். இந்தக் கடமைகளையும் பிற பணிகளையும் செய்வதற்குத் தேவையான நிதியாதாரத்தைப் பெற சில கிராமங்கள் அவருக்கு வழங்கப்பட்டிருந்தன. அக்கிராமங்களில் அவர் வரிவிதித்து நிதி திரட்டினார்.**

52) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கூடுதலாகப் பல பட்டங்களும் சிறப்புரிமைகளும் பாளையக்காரர்களுக்கு வழங்கப்பட்டன.

(ii) பாளையத்துக்கு உட்பட்ட பகுதியில் குடிமையியல் பிரச்னைகளில் மட்டும் விசாரணை நடத்தி நீதி வழங்கும் அதிகாரமும் அவருக்கு உண்டு.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: கூடுதலாகப் பல பட்டங்களும் சிறப்புரிமைகளும் பாளையக்காரர்களுக்கு வழங்கப்பட்டன. பாளையத்துக்கு உட்பட்ட பகுதியில் குடிமையியல் பிரச்னைகளிலும் குற்றவியல் பிரச்னைகளிலும் விசாரணை நடத்தி நீதி வழங்கும் அதிகாரமும் அவருக்கு உண்டு.**

53) பாளையங்கள் பூகோளரீதியாகப் பரவியிருந்ததன் அடிப்படையில் எத்தனையாக பிரிக்கலாம்?

**a) இரண்டு**

b) மூன்று

c) நான்கு

d) ஐந்து

**விளக்கம்: பாளையங்கள் பூகோளரீதியாகப் பரவியிருந்ததன் அடிப்படையில் மேற்குப் பாளையங்கள், கிழக்குப் பாளையங்கள் எனப் பிரிக்கலாம். மறவர் குறுநில மன்னர்களிடமிருந்த பாளையங்கள் பெரும்பாலும் திருநெல்வேலியின் மேற்குப்பகுதியில் அமைந்திருந்தன. கிழக்குப் பகுதியில் உள்ள கரிசல் நிலப்பரப்புகளில் தெலுங்கு பேசுவோர் குடியேறியிருந்தார்கள். அவை நாயக்கர் பாளையக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன.**

54) கிழக்கிந்திய கம்பெனி படையில் இந்திய வீரர்களுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டவர்?

a) கங்காதர்ராவ்

**b) கான்சாகிப்**

c) நானா சாகிப்

d) மாபூஸ்கான்

**விளக்கம்: தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிராமங்களை அடகு வைத்து ஏராளமாகக் கடன் வாங்கியிருந்த ஆற்காடு நவாப் அங்கெல்லாம் நிலவரி வசூல்செய்யும் உரிமையை கம்பெனிக்கு அளித்தார். கான் சாகிப் என்று அழைக்கப்பட்ட யூசுப்கான் கிழக்கிந்திய கம்பெனி படையில் இந்திய வீரர்களுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.**

55) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) யூசுப்கானுக்குப் படைத் தலைமையுடன் வரி வசூலிக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டது.

(ii) ஆற்காடு நவாபின் வேண்டுகோளின்படி, 1755இல் அவருக்கு உதவி செய்ய 500 ஐரோப்பியரும் 200 சிப்பாய்களும் அடங்கிய படை மதுரை, திருநெல்வேலி பகுதிகளுக்குள் நுழைய உத்தரவிடப்பட்டது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: கான் சாகிப்புக்குப் படைத் தலைமையுடன் வரி வசூலிக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டது. ஆற்காடு நவாபின் வேண்டுகோளின்படி, 1755இல் அவருக்கு உதவி செய்ய 500 ஐரோப்பியரும் 200 சிப்பாய்களும் அடங்கிய படை மதுரை, திருநெல்வேலி பகுதிகளுக்குள் நுழைய உத்தரவிடப்பட்டது. பாளையக்காரர்களின் அதிகாரத்தில் கம்பெனி நிர்வாகத்தின் குறுக்கீடு கடுமையான எதிர்ப்பை ஏற்படுத்தியது.**

56) மதுரை, திருநெல்வேலி பகுதிகளில் நவாபின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர்?

a) யாகூப் கான்

b) கான்சாகிப்

c) நானா சாகிப்

**d) மாபூஸ்கான்**

**விளக்கம்:மாபுஸ்கான் (ஆற்காடு நவாபின் மூத்த அண்ணன்) இந்தப் பகுதிகளில் நவாபின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். மாபுஸ்கான் கர்னல் ஹெரானுடன் திருநெல்வேலிக்கு படையெடுத்துச் சென்றார். அவர்கள் மதுரையை எளிதாகக் கைப்பற்றினர். பாஞ்சாலக்குறிச்சி பாளையத்தை ஆட்சி செய்த கட்டபொம்மனின் அதிகாரத்தைக் குறைப்பதற்காகச் சிறப்புக்குழு அனுப்பி வைக்கப்பட்டு, பிறகு அது திரும்ப வரவழைக்கப்பட்டது.**

57) நெற்கட்டும் செவல் கோட்டை மீது திடீர் தாக்குதல் தொடுக்க யாருக்கு  உத்தரவு வந்தது?

a) கர்னல் பெய்லி

b) கர்னல் ஃபுல்லர்ட்டன்

c) கர்னல் ப்ரெய்த்வெயிட்

**d) கர்னல் ஹெரான்**

**விளக்கம்: ஹெரான் ஊர் திரும்பும் வழியில் நெற்கட்டும் செவல் கோட்டை மீது திடீர் தாக்குதல் தொடுக்க உத்தரவு வந்தது. அந்தப் பாளையத்தை ஆட்சி செய்த புலித்தேவர் மேற்குப் பாளையக்காரர்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றிருந்தார். பீரங்கி உள்ளிட்டவற்றின் பற்றாக்குறை, படைவீரர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டிய தேவை ஆகிய காரணங்களால் ஹெரானின் தாக்குதல் கைவிடப்பட்டது. அவரது படை மதுரைக்குத் திரும்பியது.**

58) நவாப் சந்தா சாகிப்பின் பிரதிநிதிகளுள் அல்லாதவர்?

**a) மாபூஸ்கான்**

b) மியானா

c) முடிமய்யா

d) நபிகான்

**விளக்கம்: நவாப் சந்தா சாகிப்பின் பிரதிநிதிகளான மியானா, முடிமய்யா, நபிகான் கட்டக் ஆகிய பதான் இனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மதுரையையும் திருநெல்வேலியையும் கண்காணித்து வந்தனர். அவர்கள் ஆற்காடு நவாப் முகமது அலிக்கு எதிராகத் தமிழ்ப் பாளையக்காரர்களை ஆதரித்தனர். அவர்களுடன் புலித்தேவருக்கு நெருக்கமான உறவு இருந்தது.**

59) எந்த ஊர் திரும்பத் தரப்படும் என்ற வாக்குறுதி மூலமாகப் புலித்தேவர் திருவிதாங்கூரின் ஆட்சியாளரையும் தன் கூட்டமைப்பில் சேர்த்திருந்தார்?

a) முதுமலை

**b) களக்காடு**

c) உடுமலை

d) சங்ககிரி

**விளக்கம்: ஊற்றுமலை, சுரண்டை, தலைவன்கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி, ஊர்க்காடு, சேத்தூர், கொல்லம்கொண்டான், வடகரை ஆகிய பாளையங்களின் ஆட்சியாளர்களும் புலித்தேவரின் கூட்டமைப்பில் சேர்ந்தனர். திருவிதாங்கூருக்குக் களக்காடு திரும்பத் தரப்படும் என்ற வாக்குறுதி மூலமாகப் புலித்தேவர் திருவிதாங்கூரின் ஆட்சியாளரையும் தன் கூட்டமைப்பில் சேர்த்திருந்தார்.**

60) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஆற்காடு நவாப் மாபுஸ்கானுக்குக் கூடுதல் படைப்பிரிவை அனுப்பினார்.

(ii) கர்நாடகத்திலிருந்து குதிரைப்படையினரும், காலாட்படை வீரர்களும் வந்ததால் மாபுஸ்கானின் படைபலம் அதிகரித்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: இன்னொரு பக்கம் ஆற்காடு நவாப் மாபுஸ்கானுக்குக் கூடுதல் படைப்பிரிவை அனுப்பினார். நவாபின் வலுப்படுத்தப்பட்ட படை திருநெல்வேலியை நோக்கிப் பயணித்தது. கம்பெனியைச் சேர்ந்த 1000 வீரர்களுடன், நவாப் மூலம் கூடுதலாக அனுப்பி வைக்கப்பட்ட 600 வீரர்களும் இப்போது மாபுஸ்கானிடம் இருந்தார்கள். கூடவே, கர்நாடகத்திலிருந்து குதிரைப்படையினரும், காலாட்படை வீரர்களும் வந்ததால் மாபுஸ்கானின் படைபலம் அதிகரித்தது.**

61) களக்காட்டில் நடைபெற்ற போரில் யாருடைய படை தோற்றது?

a) யூசுப்கான்

**b) மாபூஸ்கான்**

c) புலித்தேவர்

d) கட்டபொம்மன்

**விளக்கம்: மாபூஸ்கான் தன் படையினரைக் களக்காட்டுக்கு அருகே நிறுத்திவைப்பதற்கு முன்பே திருவிதாங்கூரிலிருந்து வந்த 2000 வீரர்கள் புலித்தேவர் படையுடன் சேர்ந்துகொண்டார்கள். களக்காட்டில் நடைபெற்ற போரில் மாபுஸ்கானின் படை தோற்றது.**

62) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) புலித்தேவரும் பிற பாளையக்காரர்களும் கூட்டாக, சிறப்பான திட்டமிடலுடன் காட்டிய எதிர்ப்பு ஆங்கிலேயரைத் திருநெல்வேலி விவகாரங்களில் நேரடியாகத் தலையிட வைத்தது.

(ii) 1756இலிருந்து 1763 வரைக்கும், திருவிதாங்கூரிலிருந்து கிடைத்த சீரான ஆதரவுடன், புலித்தேவர் தலைமையிலான பாளையக்காரர்கள் ஆற்காடு நவாபுக்கு எதிரான கிளர்ச்சியில் நீடித்து நின்றார்கள்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: புலித்தேவரும் பிற பாளையக்காரர்களும் கூட்டாக, சிறப்பான திட்டமிடலுடன் காட்டிய எதிர்ப்பு ஆங்கிலேயரைத் திருநெல்வேலி விவகாரங்களில் நேரடியாகத் தலையிட வைத்தது. 1756இலிருந்து 1763 வரைக்கும், திருவிதாங்கூரிலிருந்து கிடைத்த சீரான ஆதரவுடன், புலித்தேவர் தலைமையிலான பாளையக்காரர்கள் ஆற்காடு நவாபுக்கு எதிரான கிளர்ச்சியில் நீடித்து நின்றார்கள்.**

63) கூற்று (கூ): கம்பெனியால் அனுப்பப்பட்ட யூசுப் கான் திருச்சிராப்பள்ளியிலிருந்து பீரங்கிகளும் வெடிமருந்துகளும் வந்துசேரும் வரை புலித்தேவரைத் தாக்கத் துணியவில்லை.

காரணம் (கா): பிரெஞ்சுக்காரர், ஹைதர் அலி, மராத்தியர் ஆகியோருடன் ஆங்கிலேயர் போர்களில் ஈடுபட்டுவந்ததால், 1760 செப்டம்பரில்தான் பீரங்கிகள் வந்துசேர்ந்தன.

**a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

b) கூற்று சரி; காரணம் தவறு

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விளக்கம்:கம்பெனியால் அனுப்பப்பட்ட யூசுப் கான் திருச்சிராப்பள்ளியிலிருந்து பீரங்கிகளும் வெடிமருந்துகளும் வந்துசேரும் வரை புலித்தேவரைத் தாக்கத் துணியவில்லை. பிரெஞ்சுக்காரர், ஹைதர் அலி, மராத்தியர் ஆகியோருடன் ஆங்கிலேயர் போர்களில் ஈடுபட்டுவந்ததால், 1760 செப்டம்பரில்தான் பீரங்கிகள் வந்துசேர்ந்தன.**

64) 1761 இல் நெற்கட்டும் செவல், வாசுதேவநல்லூர், பனையூர் ஆகிய இடங்களில் இருந்த முக்கியமான கோட்டைகள் யாருடைய வசமாயின?

**a) யூசுப்கான்**

b) மாபூஸ்கான்

c) புலித்தேவர்

d) கட்டபொம்மன்

**விளக்கம்: யூசுப் கான் நெற்கட்டும் செவல் கோட்டையை இடிக்கும் நோக்கத்துடன் தாக்குதலை நடத்தினார். இது ஏறத்தாழ இரு மாதங்கள் நீடித்தது. 1761 மே 16இல் நெற்கட்டும் செவல், வாசுதேவநல்லூர், பனையூர் ஆகிய இடங்களில் இருந்த முக்கியமான கோட்டைகள் யூசுப் கான் வசமாயின.**

65) கூற்று (கூ): திருவிதாங்கூர், சேற்றூர், ஊற்றுமலை, சுரண்டை ஆகிய பாளையங்களைச் சேர்ந்தவர்கள் ஆங்கிலேய அணிக்கு மாறினர்.

காரணம் (கா): பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து உதவிகள் வரமுடியாத காரணத்தால், பாளையக்காரர்களின் ஒற்றுமை குலையத் தொடங்கியது.

**a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

b) கூற்று சரி; காரணம் தவறு

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விளக்கம்:புதுச்சேரியை ஆங்கிலேயர் கைப்பற்றியதால் பிரெஞ்சுக்காரர்களின் தலையீடு இல்லாமல் ஆனது. பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து உதவிகள் வரமுடியாத காரணத்தால், பாளையக்காரர்களின் ஒற்றுமை குலையத் தொடங்கியது. திருவிதாங்கூர், சேற்றூர், ஊற்றுமலை, சுரண்டை ஆகிய பாளையங்களைச் சேர்ந்தவர்கள் ஆங்கிலேய அணிக்கு மாறினர்.**

66) யூசுப் கான் துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தூக்கிலிடப்பட்ட ஆண்டு?

**a) 1764**

b) 1763

c) 1765

d) 1762

**விளக்கம்: கம்பெனி நிர்வாகத்துக்குத் தெரிவிக்காமல் பாளையக்காரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த யூசுப் கான் துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, 1764இல் தூக்கிலிடப்பட்டார்.**

67) நெற்கட்டும் செவல் கோட்டையை முற்றுகையிட்டு 1767இல் கைப்பற்றியவர்?

a) கர்னல் பெய்லி

b) கர்னல் ஃபுல்லர்ட்டன்

**c) கேப்டன் கேம்பெல்**

d) கர்னல் ஹெரான்

**விளக்கம்: கோட்டைகளை யூசுப் கான் கைப்பற்றிய பிறகு, எங்கோ தஞ்சம் புகுந்த புலித்தேவர் தனது பாளையத்துக்குத் திரும்பி, மீண்டும் ஆங்கிலேயருக்கு எதிராகப் பாளையக்காரர்களைத் திரட்டத் தொடங்கினார். இம்முறை ஆங்கிலேயர் அனுப்பிய கேப்டன் கேம்பெல் நெற்கட்டும் செவல் கோட்டையை முற்றுகையிட்டு 1767இல் கைப்பற்றினார். புலித்தேவனின் இறுதிநாட்கள் குறித்த செய்திகள் கிடைக்கப்பெறவில்லை.**

68) மருதநாயகம் பிள்ளை எங்கிருக்கும்போது இசுலாம் சமயத்தைத் தழுவினார்?

**a) புதுச்சேரி**

b) சென்னை

c) திண்டுக்கல்

d) திருச்சி

**விளக்கம்: யூசுப் கானின் இயற்பெயர் மருதநாயகம் பிள்ளை. அவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். புதுச்சேரியில் இருந்தபோது, இசுலாம் சமயத்தைத் தழுவினார். 1752இல் கிளைவ் தலைமையிலான கம்பெனிப் படையில் சேர்ந்த யூசுப் கான் 1752-54இல் நடைபெற்ற திருச்சிராப்பள்ளி முற்றுகையில் பங்கேற்றார்.**

69) ஹைதர் அலியைத் தோற்கடித்து சோழவந்தானைக் கைப்பற்றியவர்?

**a) யூசுப்கான்**

b) மாபூஸ்கான்

c) ஹெரான்

d) அயற்கூட

**விளக்கம்: ஆற்காடு நவாபுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், கம்பெனி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு 1756 முதல் 1761 வரை ஆளுநராக யூசுப்கான் பொறுப்பு வகித்தார். யூசுப்கான் ஹைதர் அலியைத் தோற்கடித்து, சோழவந்தானைக் கைப்பற்றினார்.**

70) லாலியின் மதராஸ் முற்றுகையின்போது யாருடைய பங்களிப்பு சிறப்பானதாக இருந்தது?

**a) யூசுப்கான்**

b) மாபூஸ்கான்

c) ஹெரான்

d) அயற்கூட

**விளக்கம்: லாலியின் மதராஸ் முற்றுகை (1758-59) யின்போது யூசுப்கானின் பங்களிப்பு சிறப்பானதாக இருந்தது. அவர் நிர்வாகப்பொறுப்பில் இருந்தபோது மதுரையில் நெசவுத்தொழிலை ஊக்குவித்தார். மதுரை கோயில்களில் வழிபாடு நடத்துவதற்குக் குறிப்பிட்ட தொகையை வழங்கினார். மதகுருக்கள்**

**வசமிருந்த கோயில் நிலங்களை மீட்டெடுத்தார். ஆங்கிலேயர் அவரை ஆற்காடு நவாபுக்கு பணிசெய்ய ஆணையிட்டதால், அவர் கிளர்ச்சியில் இறங்கினார்.**

71) இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களாக இன்று அறியப்படும் பகுதியை ஆட்சி புரிந்தவர்கள்?

a) பாளையக்காரர்கள்

**b) சேதுபதி மன்னர்கள்**

c) உடையார்கள்

d) நாயக்கர்கள்

**விளக்கம்: இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களாக இன்று அறியப்படும் பகுதியைச் சேதுபதி மன்னர்கள் ஆட்சி செலுத்தினர். வேலு நாச்சியார் இராமநாதபுரம் அரசரான செல்லமுத்து சேதுபதியின் மகள் ஆவார். அவர் சிவகங்கை அரசரான முத்துவடுகர் பெரியஉடையாரை மணந்தார். அவர்களுக்கு வெள்ளச்சி நாச்சியார் என்ற மகள் இருந்தார்.**

72) ஹைதர் அலியின் பாதுகாப்பில் வேலு நாச்சியார் எத்தனை ஆண்டு காலம் இருந்தார்?

a) ஐந்து

b) பத்து

**c) எட்டு**

d) ஒன்பது

**விளக்கம்: வேலு நாச்சியாரின் கணவர் நவாபின் படைகளால் கொல்லப்பட்டதும், அவர் தன் மகளுடன் தப்பித்து, திண்டுக்கல் அருகே விருப்பாச்சியில் ஹைதர் அலியின் பாதுகாப்பில் எட்டு ஆண்டு காலம் இருந்தார். இக்காலகட்டத்தில் வேலு நாச்சியார் ஒரு படையைக் கட்டமைத்தார்.**

73) வேலு நாச்சியார் எந்த ஆண்டு ஆங்கிலேயருடன் போரிட்டு வென்றார்?

a) 1782

b) 1784

**c) 1780**

d) 1781

**விளக்கம்: ஆங்கிலேயரைத் தாக்கும் நோக்கத்துடன் கோபால நாயக்கர், ஹைதர் அலி ஆகியோருடன் கூட்டணி அமைத்தார். 1780இல் இவ்விருவரின் துணையோடு ஆங்கிலேயருடன் போரிட்டு வென்றார்.**

74) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) வேலு நாச்சியார் ஒரு பெண்கள் படையை உருவாக்கியிருந்தார்.

(ii) நாச்சியாரின் படையில் இருந்த குயிலி தன் மீது நெருப்பு வைத்துக்கொண்டு, ஆங்கிலேயரின் வெடிமருந்து கிடங்கில் நுழைந்து அதை அழித்தார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: வேலு நாச்சியார் ஒரு பெண்கள் படையை உருவாக்கியிருந்தார். அவர் ஆங்கிலேயரின் வெடிமருந்துக்கிடங்குகளைக் கண்டுபிடிப்பதற்குத் தன் உளவாளிகளைப் பயன்படுத்தினார். நாச்சியாரின் படையில் இருந்த குயிலி தன் மீது நெருப்பு வைத்துக்கொண்டு, ஆங்கிலேயரின் வெடிமருந்து கிடங்கில் நுழைந்து அதை அழித்தார்.**

75) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) நாச்சியாரின் படையிலிருந்த இன்னொரு உளவாளி அவரால் தத்தெடுக்கப்பட்ட உடையாள் ஆவார்.

(ii) இவர் ஆங்கிலேயரின் ஓர் ஆயுதக்கிடங்கை வெடிக்கச் செய்வதற்காகத் தன்னையே அழித்துக்கொண்டார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: நாச்சியாரின் படையிலிருந்த இன்னொரு உளவாளி அவரால் தத்தெடுக்கப்பட்ட உடையாள் ஆவார். இவர் ஆங்கிலேயரின் ஓர் ஆயுதக்கிடங்கை வெடிக்கச் செய்வதற்காகத் தன்னையே அழித்துக்கொண்டார்.**

76) சிவகங்கையை மீண்டும் கைப்பற்றிய நாச்சியார் யாருடைய துணையுடன் இராணியாக முடிசூடினார்?

**a) மருது சகோதரர்**

b) வேங்கண் பெரிய உடைய தேவர்

c) கோபால நாயக்கர்

d) முத்து ரங்கர்

**விளக்கம்: ஆற்காடு நவாப் வேலு நாச்சியாருடைய படை முன்னேறி வருவதைத் தடுக்கப் பல தடைகளை ஏற்படுத்தினார். எனினும் நாச்சியார் அனைத்துத் தடைகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு சிவகங்கைக்குள் நுழைந்தார். ஆற்காடு நவாப் தோற்கடிக்கப்பட்டு, சிறைவைக்கப்பட்டார். சிவகங்கையை மீண்டும் கைப்பற்றிய நாச்சியார் மருது சகோதரர்களின் துணையுடன் இராணியாக முடிசூடினார்.**

77) ஆங்கிலேயரின் சமரச உடன்பாட்டின்படி சிவகங்கை அரசர் ஆனவர்?

a) பெரிய மருது

**b) வேங்கண் பெரிய உடைய தேவர்**

c) ஊமை துரை

d) வெள்ளைத்துரை

**விளக்கம்: சின்ன மருது நாச்சியாரின் ஆலோசகராகவும் பெரிய மருது படைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டனர். 1783இல் ஆங்கிலேயர் சிவகங்கைக்கு மீண்டும் படையெடுத்து வந்தனர். இம்முறை மருது பாண்டியர் சில இராஜதந்திர நடவடிக்கைகளால் சிவகங்கையின் பாதுகாப்பை உறுதிசெய்தனர். பிற்காலத்தில் ஆங்கிலேயரின் சமரச உடன்பாட்டின்படி வேங்கண் பெரிய உடைய தேவர் சிவகங்கை அரசர் ஆனார்.**

78) வேலு நாச்சியார் நோயுற்று இறந்த ஆண்டு எது?

a) 1790

b) 1794

c) 1793

**d) 1796**

**விளக்கம்: 1790இல் இவருக்கு மணம் முடித்துவைக்கப்பட்ட வெள்ளச்சி நாச்சியார் சந்தேகத்துக்கிடமான முறையில் இறந்தார். வேலு நாச்சியார் நோயுற்று 1796இல் இறந்தார்.**

79) வீரபாண்டிய கட்ட பொம்மன் ஆட்சி செய்த பகுதி எது?

a) நெற்கட்டும் செவல்

**b) பாஞ்சாலங்குறிச்சி**

c) சிறுவயல்

d) காளையார் கோவில்

விளக்கம்:

**விளக்கம்: வேலு நா ச்சியார் ராமநாதபுரத்திலு ம் சிவக ங்கை யி லு ம் ஆங்கிலேயருக்கு சவாலாக இருந்தபோது, வீரபாண்டிய கட்டபொம்மனின் எதிர்ப்பு வளர்ந்துகொண்டிருந்தது. கட்டபொம்மன் ஓட்டப்பிடாரத்துக்கு அருகில் உள்ள பாஞ்சாலங்குறிச்சியை ஆட்சி செய்த நாயக்கர் பாளையக்காரர் ஆவார்.**

80) கட்டபொம்மனின் தாத்தா ஜெகவீர கட்டபொம்மன் யாருடைய காலத்தில் குறுநிலமன்னராக இருந்தார்?

a) கர்னல் பெய்லி

b) கர்னல் ஃபுல்லர்ட்டன்

c) கர்னல் லேங்

**d) கர்னல் ஹெரான்**

**விளக்கம்: இவர் 1761இல் பிறந்தார். கட்டபொம்மன் நாயக்கர் என்பது அவரது குடும்பப் பட்டமாகும். கட்டபொம்மனின் தாத்தா ஜெகவீர கட்டபொம்மன் கர்னல் ஹெரான் காலத்தில் குறுநிலமன்னராக இருந்தார். வீரபாண்டிய கட்டபொம்மன் தனது 30ஆம் வயதில் பாஞ்சாலங்குறிச்சி பாளையத்துக்குப் பொறுப்பேற்றார்.**

81) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1798 மே 31 வரை பாஞ்சாலங்குறிச்சி பாளையம் கம்பெனிக்குக் கட்டாது வைத்திருந்த கப்பத்தொகை 3310 பகோடாக்கள் (வராகன்).

(ii) 1798 செப்டம்பர் மாதத்துக்கான கப்பமும் செலுத்தப்படாததால், கலெக்டர் ஜாக்சன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கடிதம் அனுப்பினார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: கம்பெனிக்கும் தென்சீமை பாளையத்தாருக்கும் தொடர்ந்து மோதல் இருந்ததால், கம்பெனிக்கு அவர்கள் கப்பம் செலுத்துவது ஒரு பிரச்னையாகவே நீடித்தது. 1798 மே 31 வரை பாஞ்சாலங்குறிச்சி பாளையம் கம்பெனிக்குக் கட்டாது வைத்திருந்த கப்பத்தொகை 3310 பகோடாக்கள் (வராகன்). 1798 செப்டம்பர் மாதத்துக்கான கப்பமும் செலுத்தப்படாததால், கலெக்டர் ஜாக்சன் அவருக்கே உரிய ஆணவத்துடன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கடிதம் அனுப்பினார்.**

82) திப்புசுல்தான் ஆட்சியில் மைசூரில் ஒரு பகோடா எத்தனை ரூபாய்க்குச் சமமாகக் கொள்ளப்பட்டது?

**a) மூன்றரை ரூபாய்**

b) நான்கரை ரூபாய்

c) இரண்டரை ரூபாய்

d) மூன்று ரூபாய்

**விளக்கம்: விஜயநகரத்தில் அறிமுகமான தங்க நாணயம் பகோடா எனப்பட்டது. ஐரோப்பிய வணிகர்கள் இந்தியாவுக்கு வந்த காலகட்டத்தில் இப்பணம் செல்வாக்கு பெற்று விளங்கியது. திப்புசுல்தான் ஆட்சியில் மைசூரில் ஒரு பகோடா மூன்றரை ரூபாய்க்குச் சமமாகக் கொள்ளப்பட்டது.**

83) 'பகோடா மரத்தை உலுக்குதல்' என்ற சொலவடை எந்த நாட்டு மக்களிடையே நிலவியது?

a) போலந்து

b) பிரான்ஸ்

**c) இங்கிலாந்து**

d) டென்மார்க்

**விளக்கம்: 'பகோடா மரத்தை உலுக்குதல்' என்ற சொலவடை இங்கிலாந்து மக்களிடையே நிலவியது. ஒருவரை அதிர்ஷ்டசாலி ஆக்கும் வாய்ப்புகள் இந்தியாவில் குவிந்து கிடக்கின்றன என்ற ஐரோப்பியர்களின் அக்கால மனநிலையை இதன் மூலம் நாம் உணரலாம். தமிழில் இதனை வராகன் என்பர்.**

84) கூற்று (கூ): கலெக்டர் ஜாக்சன் வீரபாண்டிய கட்டபொம்மனைத் தண்டிக்கும் நோக்குடன் ஒரு படையை அனுப்ப விரும்பினாலும், சென்னை நிர்வாகம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

காரணம் (கா): திருநெல்வேலியிருந்த படை வீரர்களை மைசூரில் திப்பு சுல்தானுக்கு எதிராகப் போரிடுவதற்காகக் கம்பெனி ஏற்கனவே அனுப்பியிருந்தது.

**a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

b) கூற்று சரி; காரணம் தவறு

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விளக்கம்:நாட்டில் கடுமையான வறட்சி ஏற்பட்டதால், வரி வசூலிப்பது மிகக்கடினமான வேலை ஆனது. கலெக்டர் ஜாக்சன் வீரபாண்டிய கட்டபொம்மனைத் தண்டிக்கும் நோக்குடன் ஒரு படையை அனுப்ப விரும்பினாலும், சென்னை நிர்வாகம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. திருநெல்வேலியிருந்த படை வீரர்களை மைசூரில் திப்பு சுல்தானுக்கு எதிராகப் போரிடுவதற்காகக் கம்பெனி ஏற்கனவே அனுப்பியிருந்தது. இந்த நிலையில் மிகவும் தொலைவிலிருந்த தெற்குப்பகுதியில் போர் செய்வது ஆபத்து எனக் கம்பெனி கருதியது.**

85) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சென்னை நிர்வாகம் பிரச்னையில் தொடர்புடைய பாளையக்காரரை இராமநாதபுரத்துக்கு வரவழைத்து, கலந்தாலோசனை செய்யும்படி கலெக்டருக்கு உத்தரவிட்டது.

(ii) 1798 ஆகஸ்ட் 18 அன்று ஜாக்சன் இருவாரங்களுக்குள் தன்னை இராமநாதபுரத்துக்கு வந்து சந்திக்கும்படி வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு உத்தரவிட்டார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சென்னை நிர்வாகம் பிரச்னையில் தொடர்புடைய பாளையக்காரரை இராமநாதபுரத்துக்கு வரவழைத்து, கலந்தாலோசனை செய்யும்படி கலெக்டருக்கு உத்தரவிட்டது. அதன்படி, 1798 ஆகஸ்ட் 18 அன்று ஜாக்சன் இருவாரங்களுக்குள் தன்னை இராமநாதபுரத்துக்கு வந்து சந்திக்கும்படி வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு உத்தரவு பிறப்பித்துவிட்டு, தி ரு நெல்வேலி சுற்றுப்பயணத்தைத் துவக்கினார்.**

86) வீர பாண்டிய கட்டபொம்மனுக்கு கலெக்டரை எங்கு சந்திக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டது?

a) திருநெல்வேலி

**b) இராமநாதபுரம்**

c) சிவகங்கை

d) மதுரை

**விளக்கம்: பாளையக்காரர்களிடமிருந்து கப்பம் வசூலிப்பதற்காகச் சொக்கம்பட்டி, சிவகிரி, சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் அவர் தங்கியிருந்தபோது வீரபாண்டியக் கட்டபொம்மன் அவரைச் சந்திக்க முயன்றார். ஆனால் இராமநாதபுரத்தில்தான் கலெக்டரைச் சந்திக்க முடியும் என அவருக்கு அறிவுறுத்தப்பட்டது.**

87) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கட்டபொம்மன் 23 நாட்களில் 400 மைல் தூரம் பயணித்த கலெக்டரைச் சளைக்காமல் பின்தொடர்ந்து, செப்டம்பர் 19ஆம் நாள் திருநெல்வேலியை அடைந்தார்.

(ii) கட்டபொம்மன் சரியாக நடந்துகொண்டதாகவும் இதன் மூலம் அவர் தன்னை அழிவிலிருந்து காத்துக்கொண்டதாகவும் ஜாக்சன் திருப்தியுடன் கூறினார்.

a) (i) சரி

**b) (ii) சரி**

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: அவமதிப்பையும் மீறி, கட்டபொம்மன் 23 நாட்களில் 400 மைல் தூரம் பயணித்த கலெக்டரைச் சளைக்காமல் பின்தொடர்ந்து, செப்டம்பர் 19ஆம் நாள் இராமநாதபுரத்தை அடைந்தார். கலெக்டரைச் சந்திப்பதற்கான வாய்ப்பு அன்றே தரப்பட்டது. கட்டபொம்மன் சரியாக நடந்துகொண்டதாகவும் இதன் மூலம் அவர் தன்னை அழிவிலிருந்து காத்துக்கொண்டதாகவும் ஜாக்சன் திருப்தியுடன் கூறினார்.**

88) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கட்டபொம்மன் கப்பத்தொகையில் பெரும்பகுதியைச் செலுத்திவிட்டதையும் 1080 வராகன் மட்டுமே பாக்கி இருப்பதையும் ஜாக்சன் அறிந்துகொண்டார்.

(ii) சந்திப்பின்போது ஆணவக்குணம் கொண்ட ஜாக்சன் முன்னால் கட்டபொம்மனும் அவருடைய அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையும் நின்றபடி உரையாட வேண்டியிருந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: கட்டபொம்மன் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தொகையில் பெரும்பகுதியைச் செலுத்திவிட்டதையும் 1080 வராகன் மட்டுமே பாக்கி இருப்பதையும் கணக்குகளைச் சரிபார்த்து அவர் அறிந்துகொண்டார். இந்தச் சந்திப்பின்போது ஆணவக்குணம் கொண்ட ஜாக்சன் முன்னால் கட்டபொம்மனும் அவருடைய அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையும் நின்றபடி உரையாட வேண்டியிருந்தது.**

89) ஜாக்சன் சந்திப்பின்போது கட்டபொம்மன் தரப்பில் கைது செய்யப்பட்டவர்?

**a) சிவசுப்பிரமணிய பிள்ளை**

b) சிவசுந்தரம் பிள்ளை

c) சிங்காரம் பிள்ளை

d) ஊமைத்துரை

**விளக்கம்: சந்திப்பின் இறுதியில் ஜாக்சன் இருவரையும் இராமநாதபுரம் கோட்டையில் தங்கும்படி கூறினார். அங்கு திடீரென வந்த வீரர்கள் கட்டபொம்மனைக் கைது செய்யவே வந்திருந்தார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. கட்டபொம்மனும் அமைச்சரும் தப்ப முயன்றனர். கோட்டைவாசலில் நடந்த மோதலில் லெப்டினெண்ட் க்ளார்க் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டார்கள். சிவசுப்பிரமணிய பிள்ளை கைது செய்யப்பட்டா ர். கட்டபொம்மன் மட்டுமே தப்ப முடிந்தது.**

90) கம்பெனி நிர்வாகத்திடம் கட்டபொம்மன் சரணடையும்படி அறிவிப்பு வெளியிட்டவர்?

a) தாமஸ் மன்றோ

b) ஹெக்டர் மன்றோ

**c) எட்வர்டு கிளைவ்**

d) ஜாக்சன்

**விளக்கம்:பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிய கட்டபொம்மன் தன்னிடம் ஜாக்சன் நடந்துகொண்ட முறையே இராமநாதபுரத்தில் நடந்த மோதலுக்குக் காரணம் என்று சென்னை கவுன்சிலுக்குக் கடிதம் அனுப்பினார். இதற்கிடையே ஆளுநர் எட்வர்டு கிளைவ் கம்பெனி நிர்வாகத்திடம் கட்டபொம்மன் சரணடையும்படி அறிவிப்பு வெளியிட்டார். இவ்வாறு கட்டபொம்மன் சரணடைந்தால் நேர்மையான விசாரணை நடைபெறும் என்றும் இதற்கு உடன்படாவிட்டால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.**

91) ஜாக்சன் பணிநீக்கம் செய்யப்பட்டவுடன் புதிய கலெக்டராக நியமிக்கப்பட்டவர்?

**a) லூஷிங்டன்**

b) எட்வார்ட் கிளைவ்

c) ஸ்டெர்லிங்

d) ஹெரான்

**விளக்கம்: கட்டபொம்மன் கம்பெனி விசாரணைக்குழுவிடம் நேரில் சென்று விளக்கம் அளித்தார். கலகக் குற்றச்சாட்டுகளிலிருந்து கட்டபொம்மனை விடுவித்த குழு, கலெக்டர் நடந்துகொண்ட விதத்துக்காக அவரைக் கண்டித்தது. லூஷிங்டன் புதிய கலெக்டராக நியமிக்கப்பட்டார். இறுதியில் ஜாக்சன் பணிநீக்கம் செய்யப்பட்டார்.**

92) மருது பாண்டியர்கள் _________________ இணைந்து ஆங்கிலேயருக்கு எதிரான கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் இருந்தார்கள்?

a) கோபால நாயக்கர்

b) யாதுல் நாயக்கர்

**c) a) மற்றும் b)**

d) சிவகிரி பாளையக்காரர்

**விளக்கம்:கட்டபொம்மன் தனது பிரச்சனை இன்னும் தீரவில்லை என்ற கொதிப்புடன்தான் இருந்தார். இந்தச் சூழலில் மருது பாண்டியர்கள் திண்டுக்கல் கோபால நாயக்கருடனும் ஆனைமலை யாதுல் நாயக்கருடனும் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிரான கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் இருந்தார்கள். இதே விருப்பத்துடன் இருந்த கட்டபொம்மனும் மருது பாண்டியரும் நெருக்கமானார்கள்.**

93) மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் வலுவான அரண்களுடன் மிகப் பாதுகாப்பாக இருந்த கோட்டை எது?

a) நெற்கட்டும் செவல்

b) மலைக்கோட்டை

c) காளையார் கோவில்

**d) சிவகிரிக்கோட்டை**

**விளக்கம்: கட்ட பொம்மன் சிவகிரி பாளையக்காரருடனும் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். பாஞ்சாலங்குறிச்சி திறந்த சமவெளிப்பகுதியில் எளிதாகத் தாக்குதலுக்குள்ளாகும் விதத்தில் அமைந்திருந்தது. சிவகிரிக்கோட்டை மேற்குத்தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் வலுவான அரண்களுடன் மிகப் பாதுகாப்பாக தாக்குதல், எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளுதல் ஆகிய இரு நடவடிக்கைகளுக்கும் பொருத்தமானதாக இருந்தது.**

94) கட்டபொம்மனின் நிலையைப் பலப்படுத்துவதற்காகச் சென்ற சிவகிரி பாளையக்காரரின் மகன்?

a) செங்கணான்

**b) வீரபாண்டியன்**

c) சோழ வேழன்

d) பொதிய வெற்பன்

**விளக்கம்: கட்டபொ ம்மனின் நிலையைப் பலப்படுத்துவதற்காகச் சிவகிரி பாளையக்காரரின் மகன் வீரபாண்டியன் தன் வீரர்களுடனும் கூட்டணியில் இருந்த பிற தலைவர்களுடனும் தளவாய் குமாரசாமி நாயக்கரின் தலைமையில் மேற்கு நோக்கி அணிவகுத்துச் சென்றார். சிவகிரிபாளையம் கம்பெனிக்குக் கட்டுப்பட்டதாக இருந்ததால், வீரபாண்டியனின் இந்நடவடிக்கையை சென்னைக் கம்பெனி அரசு தனக்கு விடுக்கப்பட்ட சவாலாகக் கருதி தாக்குதலுக்கு உத்தரவிட்டது.**

95) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1798 மே மாதத்தில் வெல்லெஸ்லி பிரபு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் இருந்த படைகளை திருநெல்வேலிக்கு அனுப்ப உத்தரவு பிறப்பித்தார்.

(ii) மேஜர் பானர்மேன் அதிக ஆற்றல் கொண்ட போர்த்தளவாடங்களுடன் படைகளை வழிநடத்தினார்.

a) (i) சரி

**b) (ii) சரி**

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: 1799 மே மாதத்தில் வெல்லெஸ்லி பிரபு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் இருந்த படைகளை திருநெல்வேலிக்கு அனுப்ப உத்தரவு பிறப்பித்தார். திருவனந்தபுரம் அரசரின் படையும் ஆங்கிலேயருடன் இணைந்தது. மேஜர் பானர்மேன் அதிக ஆற்றல் கொண்ட போர்த்தளவாடங்களுடன் படைகளை வழிநடத்தினார்.**

96) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1799 ஜூன் 1 அன்று கட்டபொம்மன் 500 ஆட்களுடன் சிவகங்கைக்குச் சென்றார்.

(ii) பழையனாறு என்ற இடத்தில் மருதுவுடன் தீவிர ஆலோசனை நடத்தினார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: 1799 ஜூன் 1 அன்று கட்டபொம்மன் 500 ஆட்களுடன் சிவகங்கைக்குச் சென்றார். பழையனாறு என்ற இடத்தில் மருதுவுடன் தீவிர ஆலோசனை நடத்தினார். இதையடுத்து, சிவகங்கையிலிருந்து ஆயுதம் தரித்து வந்த 500 பேருடன் கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பினார்.**

97) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) நாகலாபுரம், மன்னர்கோட்டை, பாவாலி, கோலார்பட்டி, செந்நல்குடி ஆகிய பாளையங்களின் தலைவர்கள் மருது சகோதரர்களின் முயற்சியால் ஏற்கனவே ஒன்று சேர்ந்திருந்தார்கள்.

(ii) கட்டபொம்மன் தன் செல்வாக்கையும் நிதியாதாரங்களையும் முன்னிறுத்தி, இந்த அணியில் சேர்ந்து அதன் தலைவர் ஆனார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: நாகலாபுரம், மன்னர்கோட்டை, பாவாலி, கோலார்பட்டி, செந்நல்குடி ஆகிய பாளையங்களின் தலைவர்கள் மருது சகோதரர்களின் முயற்சியால் ஏற்கனவே ஒன்று சேர்ந்திருந்தார்கள். அவர்கள் கம்பெனியின் ஆட்சிப்பகுதிகளிலிருந்த சில குறிப்பிட்ட கிராமங்களில் வரி வசூலிக்கும் உரிமையை உறுதிப்படுத்தி இருந்தார்கள். கட்டபொம்மன் தன் செல்வாக்கையும் நிதியாதாரங்களையும் முன்னிறுத்தி, இந்த அணியில் சேர்ந்து அதன் தலைவர் ஆனார். இக்கூட்டமைப்பை ஏற்படுத்த சாப்டூர், ஏழாயிரம்பண்ணை, காடல்குடி, குளத்தூர் ஆகியவற்றின் பாளையக்காரர்களையும் அதில் சேரும்படி வலியுறுத்தினார்.**

98) பானர்மேன் தன்னைக் கட்டபொம்மன் எங்கு சந்திக்கும்படி இறுதி எச்சரிக்கை விடுத்தார்?

a) திருநெல்வேலி

b) திருச்சி

**c) பாளையங்கோட்டை**

d) ராமநாதபுரம்

**விளக்கம்: 1799 செப்டம்பர், 1 அன்று மேஜர் பானர்மேன் தன்னைக் கட்டபொம்மன் பாளையங்கோட்டையில் சந்திக்கும்படி இறுதி எச்சரிக்கை விடுத்தார். கட்டபொம்மன் சந்திப்பைத் தவிர்த்ததால், பானர்மேன் போர் தொடுக்க முடிவெடுத்தார். செப்டம்பர் 5ஆம் நாள் கம்பெனி படை பாஞ்சாலங்குறிச்சியைச் சென்றடைந்தது.**

99) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கட்டபொம்மனின் கோட்டை 500 அடி நீளத்திலும் 300 அடி அகலத்திலும் முழுவதும் மண்ணில் கட்டப்பட்டிருந்தது.

(ii) கட்டபொம்மனின் வீரர்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: கட்டபொம்மனின் கோட்டை 500 அடி நீளத்திலும் 300 அடி அகலத்திலும் முழுவதும் மண்ணில் கட்டப்பட்டிருந்தது. ஆங்கிலேயப்படை கோட்டையின் தகவல்தொடர்புக்கான வழிகளைத் துண்டித்தது. கட்டபொம்மனின் வீரர்கள் கம்பீரத்துடனும் வீரத்துடனும் போரிட்டார்கள். அவர்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன.**

100) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1799 செப்டம்பர், 16 அன்று ஆங்கிலேயருக்குக் கூடுதல் வலு சேர்ப்பதற்கான உதவிகள் பாளையங்கோட்டையிலிருந்து வந்து சேர்ந்தன.

(ii) கட்டபொம்மனின் கோட்டைக்கான காவற்படை வெளியேறி காடல்குடியை அடைந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: கம்பெனிப் படைக்குக் கூடுதல் எண்ணிக்கையில் வீரர்கள் தேவைப்பட்டனர். 1799 செப்டம்பர், 16 அன்று ஆங்கிலேயருக்குக் கூடுதல் வலு சேர்ப்பதற்கான உதவிகள் பாளையங்கோட்டையிலிருந்து வந்து சேர்ந்தன. அவர்களின் தொடர்ச்சியான தாக்குதலால் சுவர்கள் உடைந்து கோட்டை பலவீனம் அடைந்ததால், கோட்டைக்கான காவற்படை வெளியேறி காடல்குடியை அடைந்தது.**

101) எங்கு நடந்த மோதலில் கட்டபொம்மனின் அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளை பிடித்துவைக்கப்பட்டார்?

**a) கோலார்பட்டி**

b) களக்காடு

c) காளையார் கோவில்

d) காடல்குடி

**விளக்கம்: கோலார்பட்டியில் நடந்த மோதலில் கட்டபொம்மனின் அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளை பிடித்துவைக்கப்பட்டார். நாலாபுறமும் எதிர்ப்பைக் காட்டிய தலைவர்களுக்குரிய பிற பாதுகாப்பு அரண்கள் அனைத்தும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்கு வந்தன. ஆங்கிலேயப்படையைக் கண்டதும், மேற்குப் பாளையத்தாரும் சரணடைந்தனர்.**

102) விஜய ரகுநாத தொண்டைமான் எங்கு கட்டபொம்மனைப் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார்?

**a) களப்பூர் காடு**

b) களக்காடு

c) காளையார் கோவில்

d) காடல்குடி

**விளக்கம்:புதுக்கோட்டை மன்னர் விஜய ரகுநாத தொண்டைமான் களப்பூர் காட்டிலிருந்த கட்டபொம்மனைப் பிடித்து, ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். கட்டபொம்மனின் ஆதரவாளர்கள் மருது சகோதரர்கள், கோபால நாயக்கர் ஆகியோருடன் இணைவதற்குச் சிவகங்கைக்கும் திண்டுக்கல் மலைக் குன்றுகளுக்கு ம் விரைந்தனர்.**

103) கட்டபொம்மனைக் கயத்தாறு என்னுமிடத்தில் பாளையக்காரர்கள் கூடியிருந்த அவையில் விசாரணை செய்தவர்?

a) கர்னல் ஹெரான்

b) எட்வர்ட் கிளைவ்

**c) பானர்மேன்**

d) கேம்ப் பெல்

**விளக்கம்: 1799 அக்டோபர் 16 அன்று பானர்மேன் கட்டபொம்மனைக் கயத்தாறு என்னுமிடத்தில் பாளையக்காரர்கள் கூடியிருந்த அவையில் விசாரணை செய்தார். அது கேலிக்கூத்தான விசாரணையாகவே இருந்தது. கட்டபொம்மன் மரணத்தைப் பற்றிக் கவலைப்படாமல், தன் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் ஒத்துக்கொண்டார்.**

104) கட்டபொம்மன் கயத்தாறு பழைய கோட்டைக்கு அருகில் தூக்கிலிடப்பட்ட நாள்?

**a) அக்டோபர் 17**

b) அக்டோபர் 16

c) அக்டோபர் 12

d) அக்டோபர் 26

**விளக்கம்:அவர் சிவகிரிக்கு எதிராக ஆயுதந்தரித்த வீரர்களை அனுப்பியதையும் பாஞ்சாலங்குறிச்சிப் போரில் ஆங்கிலேயப்படைகளுக்கு எதிராகப் போரிட்டதையும் ஒத்துக்கொண்டார். அக்டோபர் 17ஆம் நாளில் கட்டபொம்மன் கயத்தாறு பழைய கோட்டைக்கு அருகில் தூக்கிலிடப்பட்டார். கட்டபொம்மனுடைய வீரச்செயல்களைக் கருப்பொருளாகக் கொண்ட நாட்டுப்புறப்பாடல்கள் மக்களிடையே அவரது நினைவை இன்றுவரை உயிர்ப்புடன் வைத்துள்ளன.**

105) ஸ்தலக்காவல், தேசக்காவல் ஆகியவற்றுக்கான உரிமைகளை கம்பெனிக்குக் கொடுத்தவர்?

**a) ஆற்காடு நவாப்**

b) மாபூஸ்கான்

c) யூசுப் கான்

d) ஹைதர் அலி

**விளக்கம்: ஆற்காடு நவாப் 1772ஆம் ஆண்டு உடன்படிக்கை மூலம் ஸ்தலக்காவல், தேசக்காவல் ஆகியவற்றுக்கான உரிமைகளை கம்பெனிக்குக் கொடுத்திருந்தார். இது பாளையக்காரர்கள்,**

**பாளையக்காரர்கள் அல்லாதோர் ஆகிய இரு தரப்பினரின் ஆட்சிப்பகுதிகளிலுமிருந்த காவல் தலைவர்களைப் பாதித்தது. அதிருப்தியடைந்த காவல்காரர்களும் அவர்களின் தலைவர்களும் நவாபுக்கும் கம்பெனிக்கும் எதிராகப் பாளையக்காரர்களுடன் சேர்ந்தார்கள்.**

106) சின்ன மருதுவும் பெரிய மருதுவும் யாரை சிவகங்கையின் இராணியாக அறிவித்தனர்?

a) வேலு நாச்சியார்

b) தாமரை நாச்சியார்

c) உடையாள்

**d) வெள்ளச்சி நாச்சியார்**

**விளக்கம்:சிவகங்கை பெரிய உடைய தேவர், நவாப் படைக்கு எதிரான சண்டையில் உயிரிழந்ததால் நிர்வாகப் பொறுப்பை எடுத்துக்கொண்ட சின்ன மருதுவும் பெரிய மருதுவும் நவாப் படையை வெளியேற்றினார்கள். பெரிய உடைய தேவர், வேலு நாச்சியார் ஆகியோரின் மகளான வெள்ளச்சி நாச்சியாரை சிவகங்கையின் இராணியாக அறிவித்தனர். அவர்கள் அமைச்சர் பொறுப்புகளை ஏற்றனர்.**

107) கிளர்ச்சியாளர்கள் கூடுமிடமாகவும் அவர்களது அடையாளமாகவும் இருந்தது எது?

a) நெற்கட்டும் செவல்

**b) காளையார் கோவில்**

c) பாஞ்சாலங்குறிச்சி

d) களக்காடு

**விளக்கம்:அன்றைய சிவகங்கைக் காட்டின் நடுவில் இருந்த காளையார்கோவில், கிளர்ச்சியாளர்கள் கூடுமிடமாகவும் அவர்களது அடையாளமாகவும் இருந்தது. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதும், அவருடைய சகோதரர் ஊமைத்துரை கமுதியைச் சென்றடைந்தார். அங்கிருந்து அவரைச் சின்ன மருது சிவகங்கையின் தலைநகரான சிறுவயலுக்கு அழைத்துச் சென்றார்.**

108) இராமநாதபுரத்தின் கிளர்ச்சியாளர்கள் யாரைத் தங்கள் ஆட்சியாளராக அறிவித்தனர்.

**a) முத்துக்கருப்பத் தேவர்**

b) முத்துராமலிங்கத் தேவர்

c) பெரிய உடையார் தேவர்

d) வேங்கண்மாண் தேவர்

**விளக்கம்:நவாப் முகமது அலி முத்துராமலிங்கத் தேவரைச் சிறையிலிருந்து விடுவித்து, அவரை இராமநாதபுரத்தின் சேதுபதியாக முடிசூட்டினார். ஆனால் கிளர்ச்சியாளர்கள் முத்துக்கருப்பத் தேவரைத் தங்கள் ஆட்சியாளராக அறிவித்தனர். மேலும் அரசின் தெற்குப் பதியையும் வடக்குப் பகுதியையும் ஆக்கிரமித்தனர். கிளர்ச்சியாளர்களின் வீரர்கள் மதுரைக்குள்ளும் நுழைந்தனர்.**

109) ஊமைத்துரை தன் ஆதரவாளர்களுடன் மதுரையில் உள்ள எந்த பகுதியைக் கைப்பற்றினார்?

a) கமுதி

b) பாஞ்சாலங்குறிச்சி

**c) பழையநாடு**

d) சிறுவயல்

**விளக்கம்: ஜூலையில் ஊமைத்துரை தன் ஆதரவாளர்களுடன் மதுரையில் உள்ள பழையநாடு என்னும் பகுதியைக் கைப்பற்றினார். 1801இல் சின்ன மருதுவின் மகன் செவத்த தம்பியின் தலைமையில் சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய இரு பகுதிகளைச் சேர்ந்த படைகளும் இணைந்து, கடற்கரை வழியாகத் தஞ்சாவூர் நோக்கி அணிவகுத்துச் சென்றன.**

110) தஞ்சாவூரில் இருந்த பாதிக்கப்பட்ட விவசாயிகள் யாருடைய படையில் சேர்ந்தனர்?

**a) செவத்த தம்பி**

b) ஊமைத்துரை

c) துரைசாமி

d) வெள்ளைத்துரை

**விளக்கம்: தஞ்சாவூரில் இருந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளும் செவத்த தம்பியின் படையில் சேர்ந்தனர். தஞ்சாவூர் ஸ்தானிகர் ஆக இருந்த கேப்டன் வில்லியம் ப்ளாக்பர்ன் படைகளைத் திரட்டி, மாங்குடி அருகே செவத்த தம்பியை வென்றார். தஞ்சாவூர் ராஜா சரபோஜி ஆங்கிலேயருக்குத் துணையாக நின்றார். இருப்பினும் வீரர்கள் ஆங்கிலேயர் படை பின் தொடர்தலிலிருந்து தப்பித்து, கடந்து சென்ற பகுதிகளை எல்லாம் அழித்து நாசமாக்கி சென்றனர்.**

111) சிவகங்கையின் ஆட்சியாளராகக் கம்பெனியால் அங்கீகரிக்கப்பட்டவர்?

a) முத்துக்கருப்பத் தேவர்

b) முத்துராமலிங்கத் தேவர்

**c) ஒய்யாத்தேவர்**

d) வேங்கண்மாண் தேவர்

**விளக்கம்:தென்னிந்தியக் கிளர்ச்சி (1801): திப்புவையும் கட்டபொம்மனையும் ஆங்கிலேயர் வென்ற பின்னர், அவர்களின் படைகள் பல்வேறு முனைகளிலிருந்து திரும்பி இராமநாதபுரத்திலும் சிவகங்கையிலும் கிளர்ச்சியாளர்களை எதிர்கொள்ள முடிந்தது. சிவகங்கையின் முன்னாள் ஆட்சியாளரின் வழித்தோன்றல் படமாத்தூர் ஒய்யாத்தேவரின் ஆதரவையும் கிழக்கிந்தியக் கம்பெனி பெற முடிந்தது. அவர் சிவகங்கையின் ஆட்சியாளராகக் கம்பெனியால் அங்கீகரிக்கப்பட்டார். இந்தப் பிரித்தாளும் தந்திரம் அரசரின் ஆதரவாளர்களிடையே பிளவை ஏற்படுத்தி, இறுதியில் கிளர்ச்சியாளர்களை மனந்தளர வைத்தது.**

112) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1801 மே மாதத்தில் அக்னியு தலைமையிலான ஒரு படைப்பிரிவு தன் நடவடிக்கைகளைத் துவக்கியது.

(ii) அக்னியு தலைமையிலான படை மானாமதுரை, பார்த்திபனூர் வழியாகப் பயணித்து, கிளர்ச்சியாளர்கள் வசமிருந்த பரமக்குடி அரண்களை ஆக்கிரமித்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: 1801 மே மாதத்தில் அக்னியு தலைமையிலான ஒரு படைப்பிரிவு தன் நடவடிக்கைகளைத் துவக்கியது. இப்படை மானாமதுரை, பார்த்திபனூர் வழியாகப் பயணித்து, கிளர்ச்சியாளர்கள் வசமிருந்த பரமக்குடி அரண்களை ஆக்கிரமித்தது. மோதலின்போது இரு தரப்பிலும் பெரும் சேதம் ஏற்பட்டது. ஆனால் கிளர்ச்சியாளர்களின் அடங்காத எதிர்ப்பும் மருது சகோதரர்களின் வீரம் செறிந்த சண்டைகளும் ஆங்கிலேயரின் நடவடிக்கையை மிகவும் கடினமாக்கியது. முடிவில், ஆங்கிலேயரின் படை வலிமையும் தளபதிகளின் திறமையுமே வெற்றி பெற்றன.**

113) புரட்சியாளர்களை ஆங்கிலேயர் கைது செய்த இடத்துடன் பொருத்துக.

i. மருது பாண்டியர் - 1. சிங்கம்புணரி

ii. செவத்தையா - 2. வத்தலகுண்டு

iii. துரைசாமி - 3. மதுரை

**a) 1, 2, 3**

b) 2, 3, 1

c) 3, 2, 1,

d) 2, 1, 3

**விளக்கம்: ஆங்கிலேயர் ஊமைத்துரையைக் கைது செய்ததைத் தொடர்ந்து, மருது பாண்டியரைச் சிங்கம்புணரி குன்றுகளிலும் செவத்தையாவை வத்தலகுண்டு பகுதியிலும் வெள்ளை மருதின் மகன் துரைசாமியை மதுரைக்கு அருகிலும் கைது செய்தனர்.**

114) மருது சகோதரர்கள் எங்கு தூக்கிலிடப்பட்டனர்?

**a) திருப்பத்தூர்**

b) பாஞ்சாலங்குறிச்சி

c) சங்ககிரி

d) கயத்தாறு

**விளக்கம்:சின்ன மருதுவும் அவருடைய சகோதரர் வெள்ளை மருதுவும் 1801 அக்டோபர் 24இல் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டனர்.**

115) ஊமைத்துரையும் செவத்தையாவும் எங்கு கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட்டார்கள்?

a) திருப்பத்தூர்

**b) பாஞ்சாலங்குறிச்சி**

c) சங்ககிரி

d) கயத்தாறு

**விளக்கம்: ஊமைத்துரையும் செவத்தையாவும் அவர்களின் ஆதரவாளர்கள் பலரும் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு 1801 நவம்பர் 16ஆம் நாள் தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். 73 கிளர்ச்சியாளர்கள் 1802 ஏப்ரல் மாதத்தில் மலேயாவில் பினாங்குக்கு நாடு கடத்தப்பட்டார்கள்.**

116) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சேலம், கோயம்புத்தூர், கரூர், திண்டுக்கல் ஆகியவை அடங்கிய கொங்குநாடு, மதுரை நாயக்கர் அரசின் ஒரு பகுதியாக இருந்தது.

(ii) மூன்றாம், நான்காம் மைசூர் போர்களின் விளைவாகக் கொங்குப் பகுதி முழுதும் ஆங்கிலேயர் வசமாயின.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சேலம், கோயம்புத்தூர், கரூர், திண்டுக்கல் ஆகியவை அடங்கிய கொங்குநாடு, மதுரை நாயக்கர் அரசின் ஒரு பகுதியாக இருந்தது. அதை மைசூர் உடையார்கள் கைப்பற்றித் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். உடையார்களின் வீழ்ச்சிக்குப் பிறகு மைசூருடன் இந்த ஆட்சிப்பகுதிகள் மைசூர் சுல்தான்களால் கட்டுப்படுத்தப்பட்டன. மூன்றாம், நான்காம் மைசூர் போர்களின் விளைவாகக் கொங்குப் பகுதி முழுதும் ஆங்கிலேயர் வசமாயின.**

117) தீரன் சின்னமலைக்கு பயிற்சி அளித்தவர்கள் யாவர்?

a) திப்பு

b) பிரெஞ்சுக்காரர்கள்

c) மருது சகோதரர்கள்

**d) a) மற்றும் b)**

**விளக்கம்: தீரன் சின்னமலை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துப் போரிட்ட கொங்குநாட்டுப் பாளையக்காரர் ஆவார். இவர் பிரெஞ்சுக்காரர்களாலும் திப்புவாலும் பயிற்சியளிக்கப்பட்ட பாளையக்காரர்களில் ஒருவர்.**

118) சின்னமலை ஆங்கிலேயரின் கோட்டை மீது தாக்குதல் நடத்த இருந்தபோது யாருடைய உதவியைப் பெற முயன்றார்?

**a) மருது பாண்டியர்**

b) திப்பு

c) பிரெஞ்சுக்காரர்

d) b) மற்றும் c)

**விளக்கம்:சின்னமலை கோயம்புத்தூரில் இருந்த ஆங்கிலேயரின் கோட்டை மீது தாக்குதல் நடத்தும் முயற்சியில் (1800) இருந்தபோது, மருது பாண்டியரின் உதவியைப் பெற முயன்றார். கம்பெனியுடன் போரிடுவதற்காக விருபாட்சி கோபால நாயக்கர், பரமத்திவேலூர் அப்பச்சிக் கவுண்டர், சேலம் ஆத்தூர் ஜோனி ஜான் கஹன், பெருந்துறை குமராள் வெள்ளை, ஈரோடு வாரணவாசி ஆகியோருடன் கூட்டணி சேர்ந்தார்.**

119) கூற்று (கூ): சின்னமலை தன் திட்டத்தை மாற்றிக்கொண்டு, திட்டமிட்டதற்கு ஒரு நாள் முன்னதாகவே கோட்டையைத் தாக்கினார்.

காரணம் (கா): தனது படையை வலுவூட்டுவதற்குத் தேவையான உதவிகளை மருது சகோதரர்களிடமிருந்து பெறுவதைக் கம்பெனி தடுத்துவிட்டதால் சின்னமலையின் திட்டங்கள் பலிக்கவில்லை.

**a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

b) கூற்று சரி; காரணம் தவறு

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விளக்கம்:தனது படையை வலுவூட்டுவதற்குத் தேவையான உதவிகளை மருது சகோதரர்களிடமிருந்து பெறுவதைக் கம்பெனி தடுத்துவிட்டதால் சின்னமலையின் திட்டங்கள் பலிக்கவில்லை. அவரும் தன் திட்டத்தை மாற்றிக்கொண்டு, திட்டமிட்டதற்கு ஒரு நாள் முன்னதாகவே கோட்டையைத் தாக்கினார். கம்பெனிப் படை 49 பேரைத் தூக்கிலிடுவதற்கு இது வழிவகுத்தது.**

120) தீரன் சின்னமலை ஆங்கிலேயரால் எப்போது தூக்கிலிடப்பட்டார்?

**a) 1805 ஜூலை 31**

b) 1805 ஜூன் 31

c) 1804 ஜூலை 31

d) 1804 ஜூன் 31

**விளக்கம்:சின்னமலை ஆங்கிலேயரிடம் சிக்காமல் தப்பினார். 1800இலிருந்து அவர் தூக்கிலிடப்பட்ட 1805 ஜூலை 31 வரை கம்பெனிக்கு எதிராகப் போராடிக்கொண்டே இருந்தார்.**

121) கீழ்க்கண்டவற்றுள் சின்னமலையின் போர்களில் முக்கியமானவை?

a) காவிரிக்கரையில் நடைபெற்ற 1801 போர்

b) 1802ஆம் ஆண்டு ஓடநிலையில் நடந்த போர்

c) 1804இல் நடந்த அரச்சலூர் போர்

**d) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: சி ன்னமலையின் போர்களில் முக்கியமானவை மூன்று: காவிரிக்கரையில் நடைபெற்ற 1801 போர், 1802ஆம் ஆண்டு ஓடநிலையில் நடந்த போர்; 1804இல் நடந்த அரச்சலூர் போர் ஆகும்.**

122) சி ன்னமலையின் இறுதிப் போர் எந்த ஆண்டு  நடைபெற்றது?

**a) 1805**

b) 1806

c) 1803

d) 1804

**விளக்கம்: சின்னமலையின்  இறுதிப் போர் 1805இல் நடைபெற்றதாகும். இப்போரில் சின்னமலை அவருடைய சமையல்காரரால் துரோகம் இழைக்கப்பட்டார். தீரன் சின்னமலை சிவகிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.**

123) கூற்று (கூ): 1806ஆம் ஆண்டில்  வேலூர் புரட்சி ஏற்பட்டது.

காரணம் (கா): அரியணையை இழந்த அரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் சந்ததியினர் ஆங்கிலேய ஆட்சி சுமத்திய அடிமைத்தளையைத் தகர்க்கத் தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொண்டனர்.

**a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

b) கூற்று சரி; காரணம் தவறு

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விளக்கம்: அரியணையை இழந்த அரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் சந்ததியினர் ஆங்கிலேய ஆட்சி சுமத்திய அடிமைத்தளையைத் தகர்க்கத் தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொண்டனர். அவற்றின் மொத்த விளைவுதான் 1806ஆம் ஆண்டில் ஏற்பட்ட வேலூர் புரட்சி ஆகும்.**

124) மருது சகோதரர்களின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட பின்னர் அவர்கள் எப்பகுதியை மையமாகக் கொண்டு செயல்பட்டனர்?

a)  ஸ்ரீரங்கப்பட்டணம்

b) களக்காடு

c) பாளையங்கோட்டை

**d) வேலூர்**

**விளக்கம்: மருது சகோதரர்களின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட பின்னர், அவர்கள் வேலூரை மையமாகக் கொண்டு செயல்பட்டனர். எண்ணிக்கையில் 3000க்குக் குறையாத திப்பு சுல்தானின் விசுவாசிகள் வேலூரிலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் குடியேறியிருந்ததால், ஆங்கிலேய எதிர்ப்புக்கூட்டமைப்பின் அமைப்பாளர்கள் அங்கு தங்கள் இரகசிய நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டனர்.**

125) கூற்று (கூ): வேலூர் கோட்டை தென்னிந்தியாவின் புரட்சியாளர்கள் சந்தித்துக்கொள்ளுமிடமாக ஆனது.

காரணம் (கா): பாதிக்கப்பட்ட பலரை வேலூர் கோட்டையின் படைமுகாம் உள்ளடக்கியிருந்தது.

**a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

b) கூற்று சரி; காரணம் தவறு

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விளக்கம்: ஆங்கிலேயரால் பதவியோ, சொத்தோ பறிக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்கியிருந்னர். இதுபோல் பாதிக்கப்பட்ட பலரை வேலூர் கோட்டையின் படைமுகாம் உள்ளடக்கியிருந்தது. இவ்வாறு வேலூர் கோட்டை தென்னிந்தியாவின் புரட்சியாளர்கள் சந்தித்துக்கொள்ளுமிடமாக ஆனது.**

126) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சிப்பாய்களும் வேலூருக்கு இடம்பெயர்ந்தவர்களும் கோட்டையில் அடிக்கடி கூடித் தீவிரமாகக் கலந்தாலோசித்தனர்.

(ii) திப்பு மகன்களின் பிரதிநிதிகளும் பங்கேற்று வந்தனர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சிப்பாய்களும் வேலூருக்கு இடம்பெயர்ந்தவர்களும் கோட்டையில் அடிக்கடி கூடித் தீவிரமாகக் கலந்தாலோசித்தனர். அவற்றில் திப்பு மகன்களின் பிரதிநிதிகளும் பங்கேற்று வந்தனர்.**

127) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சிப்பாய்கள் சாதி அல்லது மதத்தின் அடையாளமாகத் தங்களது நெற்றியில் அணிந்த அனைத்து விதமான குறியீடுகளும் தடை செய்யப்பட்டன.

(ii) சிப்பாய்கள் தங்கள் மீசையை ஒரே மாதிரியான முறைக்குப் பொருந்தும்படி வெட்டுவதற்கு அறிவுறுத்தப்பட்டனர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: இடைப்பட்ட காலத்தில் ஆங்கிலேயர் தங்கள் படையில் உள்ள சிப்பாய்ப்பிரிவில் சில புதுமைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்தார்கள். சிப்பாய்கள் சாதி அல்லது மதத்தின் அடையாளமாகத் தங்களது நெற்றியில் அணிந்த அனைத்து விதமான குறியீடுகளும் தடை செய்யப்பட்டன. சிப்பாய்கள் தங்கள் மீசையை ஒரே மாதிரியான முறைக்குப் பொருந்தும்படி வெட்டுவதற்கு அறிவுறுத்தப்பட்டனர்.**

128) சிப்பாய்களுக்கான ஒரு புதிய தலைப்பாகையை வடிவமைத்து, தனது நேரடிக் கண்காணிப்பில் அதனை அறிமுகம் செய்தவர்?

a) பானர் மேன்

b) வில்லியம் பெண்டிக்

c) மார்க்குயிஸ் ஹேஸ்டிங்ஸ்

**d) அக்னியு**

**விளக்கம்: துணை ஜெனரல் அக்னியு சிப்பாய்களுக்கான ஒரு புதிய தலைப்பாகையை வடிவமைத்து, தனது நேரடிக் கண்காணிப்பில் அதனை அறிமுகம் செய்தார்.**

129) இந்தியர்களின் பார்வையில் புதியவகை தலைப்பாகையில் இடம்பெற்றிருந்த அருவருக்கத்தக்க அம்சம் எது?

a) ரிப்பன்

b) குஞ்சம்

**c) a) மற்றும் b)**

d) சிலுவை

**விளக்கம்: இந்தியர்களின் பார்வை யி ல், இந்தத் தலைப்பாகையில் இடம்பெற்றிருந்த அருவருக்கத்தக்க அம்சம், அதன் மீதிருந்த ரிப்பன் மற்றும் குஞ்சம் ஆகும். இது மிருகத் தோலில் செய்யப்பட்டிருந்தது. பன்றித்தோல் முஸ்லீம்களுக்கு வெறுப்பூட்டும் பொருள் ஆகும். இந்துக்கள் பசுத்தோலில் செய்யப்பட்ட எந்தப் பொருளையும் விலக்க வேண்டியதாகக் கருதினர். இந்த மாற்றங்களுக்கான எதிர்ப்பை இந்தியர்களிடையே இன்னும் அதிகரிக்கச் செய்யும் வகையில், சிப்பாய்கள் அணியும் சீருடையின் முன்பக்கம் சிலுவை பொறிக்கப்பட்டிருந்தது.**

130) கிளர்ச்சியாளர்களில் லட்சுமிபாய் மிகச் சிறந்த தைரியம் மிக்க தலைவரென லட்சுமிபாயைப் பற்றி குறிப்பிட்டவர்?

a) ஹென்றி லாரன்ஸ்

b) ஜான் நிக்கல்சன்

**c) ஹக் ரோஸ்**

d) ஹென்றி ஹேவ்லக்

**விளக்கம்:கிளர்ச்சியாளர்களில் லட்சுமிபாய் மிகச் சிறந்த தைரியம் மிக்க தலைவரென லட்சுமிபாயைப் பற்றி ரோஸ் குறிப்பிட்டுள்ளார்.**

131) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) முதல் எதிர்ப்பு 1806 மே மாதத்தில் நிகழ்ந்தது.

(ii) வேலூரிலிருந்த 4ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவு வீரர்கள் புதிய தலைப்பாகையை அணிய மறுத்தனர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: முதல் எதிர்ப்பு 1806 மே மாதத்தில் நிகழ்ந்தது. வேலூரிலிருந்த 4ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவு வீரர்கள் புதிய தலைப்பாகையை அணிய மறுத்தனர். இந்தப் பிரச்னை படைமுகாமின் தளபதியான கவர்னர் ஃபேன்கோர்ட்டுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் கிளர்ச்சியாளர்களை உடனிருந்து கண்காணிக்கும்படி 19ஆம் குதிரைப்படைப்பிரிவுக்கு உத்தரவிட்டார். இவர்கள் மீதான விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டது.**

132) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 4ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவுக்குப் பதிலாக வாலாஜாபாத்திலிருந்த 23ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவு பொறுப்பை ஏற்றது.

(ii) தலைமையின் உத்தரவை எதிர்த்தமைக்காகப் படையின் கீழ்நிலைப் பொறுப்பிலிருந்த 21 வீரர்கள் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார்கள்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: 4ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவுக்குப் பதிலாக வாலாஜாபாத்திலிருந்த 23ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவு பொறுப்பை ஏற்றது. தலைமையின் உத்தரவை எதிர்த்தமைக்காகப் படையின் கீழ்நிலைப் பொறுப்பிலிருந்த 21 வீரர்கள் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார்கள். அவர்களில் 10 முஸ்லீம்களும் 11 இந்துக்களும் இருந்தார்கள். நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றும்பொருட்டு இரு வீரர் (ஒரு முஸ்லீம், ஒரு இந்து)களுக்குத் தலா 900 கசையடிகள் கொடுக்கப்பட்டு, அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள்.**

133) புதிய தலைப்பாகையை அணிவதற்கு விருப்பமில்லாத உணர்வு வீரர்களிடையே மிக பலவீனமாக இருப்பதாக நம்பியவர்?

a) ஹென்றி லாரன்ஸ்

b) ஜான் நிக்கல்சன்

c) அக்னியூ

**d) வில்லியம் பெண்டிங்க்**

**விளக்கம்: இந்திய வீரர்களிடமிருந்து கிளம்பிய எதிர்ப்புகளை மீறி, அவர்களின் மனக்குறைகளைப் பொருட்படுத்தாமல் அரசு தான் முன்வைத்த மாற்றங்களைச் செயல்படுத்த முடிவெடுத்தது. 'புதிய தலைப்பாகையை அணிவதற்கு விருப்பமில்லாத உணர்வு வீரர்களிடையே மிக பலவீனமாக இருப்பதாக'வே கவர்னர் வில்லியம் பெண்டிங்க் நம்பினார்.**

134) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) வேலூர் கோட்டையில் 1806 ஜூலை 9ஆம் நாள் இரவின்போது பணியிலிருந்த இராணுவ அதிகாரிகள் வழக்கத்துக்கு மாறாக எதையும் கவனிக்கவில்லை என முதலில் கூறப்பட்டது.

(ii) அன்றைக்குப் பொறுப்பிலிருந்த ஆங்கிலேய அதிகாரி தனக்குப் பதிலாக ஜமேதார் ஷேக் காசிம் என்ற இந்திய அதிகாரியை அனுப்பினார் என்று பின்னர் தெரிய வந்தது

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: வேலூர் கோட்டையில் 1806 ஜூலை 9ஆம் நாள் இரவின்போது பணியிலிருந்த இராணுவ அதிகாரிகள் வழக்கத்துக்கு மாறாக எதையும் கவனிக்கவில்லை என முதலில் கூறப்பட்டது. எனினும், அன்றைக்குப் பொறுப்பிலிருந்த ஆங்கிலேய அதிகாரி பார்வையிடும் தனது வேலையை அன்று செய்யவில்லை என்றும் தனக்குப் பதிலாக ஜமேதார் ஷேக் காசிம் என்ற இந்திய அதிகாரியை அனுப்பினார் என்றும் பின்னர் தெரிய வந்தது. வேலூர் புரட்சிக்குப் பிறகு, அவர் முதன்மைக் குற்றவாளிகளில் ஒருவராக அடையாளம் காணப்பட்டார்.**

135) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஜூலை 11 அதிகாலையில் பயிற்சியில் கலந்துகொள்ள வேண்டிய படைப்பிரிவின் தலைவர்கள் ஜூலை 10 ஆம் நாள் இரவே கோட்டையில் தூங்குவதற்கு அதைச் சாக்காகப் பயன்படுத்தினர்.

(ii) துணை இராணுவ அதிகாரி கோட்டைக்குள் பாதுகாவலர்களாகத் தன்னால் இயன்றவரை தன்னுடைய ஆதரவாளர்களையே நியமித்தார்.

a) (i) சரி

**b) (ii) சரி**

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஜூலை 10 அதிகாலையில் பயிற்சியில் கலந்துகொள்ள வேண்டிய படைப்பிரிவின் தலைவர்கள் ஜூலை 9 ஆம் நாள் இரவே கோட்டையில் தூங்குவதற்கு அதைச் சாக்காகப் பயன்படுத்தினர். இந்தத் துணை இராணுவ அதிகாரி கோட்டைக்குள் பாதுகாவலர்களாகத் தன்னால் இயன்றவரை தன்னுடைய ஆதரவாளர்களையே நியமித்தார்.**

136) வேலூர் புரட்சியில் முக்கியப் பங்கு வகித்ததாகக் கருதப்படுபவர்?

**a) ஜமாலுதீன்**

b) ஷேக் காசிம்

c) அப்துல்லா

d) அமீர்

**விளக்கம்: வேலூர் புரட்சியில் முக்கியப் பங்கு வகித்ததாகக் கருதப்படுபவர் ஜமாலுதீன் ஆவார். இவர் திப்புக் குடும்பத்தின் 12 இளவரசர்களில் ஒருவர். அவர் ஷேக் காசிம் போன்ற இந்திய அதிகாரிகளிடமும் வீரர்களிடமும் இரகசியப் பேச்சுவார்த்தைகளின்போது, அவர்கள் வேலூர் கோட்டையை எட்டு நாட்களுக்குத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்படியும் அதற்குள் 10 ஆயிரம் ஆதரவாளர்கள் உதவிக்கு வந்து விடுவார்கள் என்றும் கூறி வந்தார்.**

137) திப்புவின் முன்னாள் அமைச்சர் என்று ஜமாலுதீனால் குறிப்பிடப்பட்டவர்?

**a) புர்னியா**

b) ஷேக் காசிம்

c) ஷேக் பகதூர்

d) திரிம்பக்ஜி

**விளக்கம்: உரிமை பறிக்கப்பட்ட பாளையக்காரர்களின் உதவியைக் கேட்டு அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளதையும் ஜமாலுதீன் தெரிவித்தார். திப்பு சுல்தானிடம் பணிபுரிந்த ஏராளமான**

**அதிகாரிகள் திப்புவின் முன்னாள் அமைச்சரான புர்னியாவுடன் தொடர்பில் இருப்பதாகவும் அவர்கள் தக்க நேரத்தில் கைகொடுப்பார்கள் என்றும் ஜமாலுதீன் கூறினார்.**

138) வேலூர் கோட்டையில் ஏற்பட்ட புரட்சி முதலில் யாருக்கு தெரிவிக்கப்பட்டது?

**a) கார்ப்பரல் பியர்சி**

b) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்

c) கர்னல் கில்லஸ்பி

d) வில்லியம் பெண்டிங்க்

**விளக்கம்: வேலூர்க் கோட்டையில் ஜூலை 10ஆம் நாள் காலை 2 மணிக்கு முதன்மை பாதுகாப்புத்தளத்திலிருந்த காவலாளியிடமிருந்து கார்ப்பரல் பியர்சிக்கு ஒரு செய்தி தெரிவிக்கப்பட்டது. படைவீரர் குடியிருப்புக்கு அருகில் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது என்பதே அச்செய்தி. பியர்சி பதில் நடவடிக்கையில் இறங்கும் முன்னரே, சிப்பாய்கள் ஆங்கிலேயப் பாதுகாவலர்கள் மீதும், படைவீரர் குடியிருப்பு, அதிகாரிகள் குடியிருப்பு ஆகியவற்றின் மீதும் ஏறக்குறைய ஒரே நேரத்தில் தாக்குதல் தொடுத்தனர். பியர்சியும் கடுமையான காயங்களுக்கு உள்ளானார்.**

139) வேலூர் புரட்சி தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஐரோப்பிய அதிகாரிகளின் குடியிருப்புகளைக் கண்காணித்து, வெளியே வரும் எவரையும் சுடுவதற்குத் தனிப்படைப்பிரிவு நியமிக்கப்பட்டது.

(ii) கிளர்ச்சியாளர்கள் படுக்கைகளில் பாதுகாப்பின்றி உறங்கிக்கொண்டிருந்த ஐரோப்பியரைச் சன்னல் வழியாக எளிதில் சுட முடிந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஐரோப்பியக் குடியிருப்புகளில் கோடை வெக்கையைச் சமாளிக்கக் கதவுகள் இரவிலும் திறந்து வைக்கப்பட்டிருந்தன. கிளர்ச்சியாளர்கள் படுக்கைகளில் பாதுகாப்பின்றி உறங்கிக்கொண்டிருந்த ஐரோப்பியரைச் சன்னல் வழியாக எளிதில் சுட முடிந்தது. ஐரோப்பியக் குடியிருப்புக்குத் தீ வைக்கப்பட்டது. ஐரோப்பிய அதிகாரிகளின் குடியிருப்புகளைக் கண்காணித்து, வெளியே வரும் எவரையும் சுடுவதற்குத் தனிப்படைப்பிரிவு நியமிக்கப்பட்டது.**

140) வேலூர் புரட்சி தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) வெடிமருந்துகளும் துப்பாக்கி ரவைகளும் சேமித்து வைக்கப்பட்டிருந்த கிடங்கை முதலாம் ரெஜிமெண்ட்டின் ஒரு பிரிவு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது.

(ii) ஒரு குழு குடியிருப்புகளில் உள்ள ஐரோப்பியரைக் கொல்வதற்குத் தொடர்ந்து கண்காணிப்பில் இருந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: வெடிமருந்துகளும் துப்பாக்கி ரவைகளும் சேமித்து வைக்கப்பட்டிருந்த கிடங்கை முதலாம் ரெஜிமெண்ட்டின் ஒரு பிரிவு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. அதே ரெஜிமெண்ட்டிலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஒரு குழு குடியிருப்புகளில் உள்ள ஐரோப்பியரைக் கொல்வதற்குத் தொடர்ந்து கண்காணிப்பில் இருந்தது. ஏராளமான ஐரோப்பிய ஒழுங்குமுறை நடத்துனர்களுடன், 13 அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இராணுவக்குடியிருப்பில் 82 கீழ்நிலை இராணுவ வீரர்கள் இறந்தார்கள். 91 பேர் காயமடைந்தனர்.**

141) வேலூர் புரட்சி தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) உள்ளூர் வீரர்கள் அடங்கிய 16ஆம் காலாட்படையைச் சேர்ந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் துப்பாக்கிச் சத்தம் கேட்டபோது கோட்டைக்கு வெளியே பல்லக்கில் சென்று கொண்டிருந்தார்.

(ii) பாதுகாப்பு அரணிலிருந்து சரமாரியாகப் பொழிந்த குண்டுமழை உடனடியாக அவரது உயிரைப் பறித்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: உள்ளூர் வீரர்கள் அடங்கிய 16ஆம் காலாட்படையைச் சேர்ந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் துப்பாக்கிச் சத்தம் கேட்டபோது கோட்டைக்கு வெளியே பல்லக்கில் சென்று கொண்டிருந்தார். அவர் பல்லக்கிலிருந்து இறங்கி, கோட்டையின் சரிவான பகுதிக்குச் சென்று விசாரித்தார். அதற்குப் பதில் போல் பாதுகாப்பு அரணிலிருந்து சரமாரியாகப் பொழிந்த குண்டுமழை உடனடியாக அவரது உயிரைப் பறித்தது.**

142) வேலூர் கலகத்தின்போது ஆற்காட்டில் குதிரைப்படை முகாமுக்குப் பொறுப்பு வகித்தவர்?

**a) கில்லஸ்பி**

b) கோட்ஸ்

c) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்

d) ஸ்டீவன்சன்

**விளக்கம்: கோட்டைக்கு வெளியே பணியிலிருந்த மேஜர் கோட்ஸ் கிளர்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டு கோட்டைக்குள் நுழைய முயன்றார். அவரால் உள்ளே செல்ல முடியாததால், ஆற்காட்டில் குதிரைப்படை முகாமுக்குப் பொறுப்பு வகித்த கில்லஸ்பிக்குக் கடிதம் எழுதி, அதைக் கேப்டன் ஸ்டீவன்சன் என்பவரிடம் கொடுத்தனுப்பினார். அந்தக் கடிதம் வேலூரிலிருந்து 25 கி.மீ தொலைவில் இருந்த ஆற்காட்டுக்குக் காலை 6 மணி அளவில் சென்றடைந்தது.**

143) தன்னைப் பின்தொடர்ந்து வரும்படி கர்னல் கென்னடியிடம் அறிவுறுத்திவிட்டு வேலூர் கோட்டையை நோக்கி புறப்பட்டு சென்றவர்?

**a) கில்லஸ்பி**

b) கோட்ஸ்

c) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்

d) ஸ்டீவன்சன்

**விளக்கம்: கர்னல் கில்லஸ்பி உடனே வேலூருக்குப் புறப்பட்டார். தன்னுடன் கேப்டன் யங் தலைமையில் 19ஆம் குதிரைப்படையைச் சேர்ந்த ஒரு பிரிவையும் லெப்டினெண்ட் உட் ஹவுஸ் தலைமையில் அதற்குத் துணைநிற்கும் 7ஆம் குதிரைப்படையிலிருந்து ஒரு வலுவான பிரிவையும் அழைத்துச் சென்றார். அவர் குதிரைப்படையில் மீதமுள்ள வீரர்களுடன் தன்னைப் பின்தொடர்ந்து வரும்படி கர்னல் கென்னடியிடம் அறிவுறுத்திவிட்டு, ஆற்காடு படைமுகாமைப் பாதுகாக்கவும் தன்னுடன் தகவல்தொடர்பில் இருக்கவும் ஒரு தனிப்பிரிவை விட்டுச்சென்றார்.**

144) வேலூர் புரட்சி தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கில்லஸ்பி தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடந்துகொண்டிருந்ததால், பீரங்கிகள் தங்கள் பாதுகாப்புக்கு வந்துசேரும்வரை காத்திருக்க முடிவு செய்தார்.

(ii) ஆற்காட்டிலிருந்து பின்தொடர்ந்து வந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் தலைமையிலான குதிரைப்படை 10 மணி அளவில் வந்துசேர்ந்தது

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: வேலூர் கோட்டைக்குக் காலை 9 மணிக்கு வந்தடைந்த கில்லஸ்பி தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடந்துகொண்டிருந்ததால், பீரங்கிகள் தங்கள் பாதுகாப்புக்கு வந்துசேரும்வரை காத்திருக்க முடிவு செய்தார். விரைவிலேயே ஆற்காட்டிலிருந்து பின்தொடர்ந்து வந்த கென்னடி தலைமையிலான குதிரைப்படை 10 மணி அளவில் வந்துசேர்ந்தது.**

145) யாருடைய தலைமையில் கோட்டையின் வெளிவாசல் கதவு தகர்க்கப்பட்டது?

a) கில்லஸ்பி

b) ஸ்கெல்ட்டன்

c) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்

**d) ப்ளாகிஸ்டன்**

**விளக்கம்: லெப்டினெண்ட் ப்ளாகிஸ்டன் தலைமையில் 19ஆம் குதிரைப்படையின் பீரங்கியால் கோட்டையின் வெளிவாசல் கதவு தகர்க்கப்பட்டது. கேப்டன் ஸ்கெல்ட்டன் தலைமையிலான குதிரைப்படையின் ஒரு பிரிவு கோட்டைக்குள் நுழைந்தது. கில்லஸ்பியின் வீரர்கள் கடுமையான துப்பாக்கிச்சூட்டை எதிர்கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற தாக்குதலில் கர்னல் கில்லஸ்பியும் காயங்களுக்கு உள்ளானார்.**

146) வேலூர் புரட்சி தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கோட்டையின் திட்டிவாசல் மூலம் கிடைத்த குறுகலான பாதை வழியே தப்பியோடிய சிப்பாய்களைப் பின்தொடர்ந்து சென்று பிடிக்க முடிவெடுக்கப்பட்டது.

(ii) கிளர்ச்சியில் ஈடுபட்ட சிப்பாய்கள் பின்வாங்கினார்கள்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: கிளர்ச்சியில் ஈடுபட்ட சிப்பாய்கள் பின்வாங்கினார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் கோட்டையின் சுவர்கள் மீது ஏறித் தப்பித்தனர் அல்லது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு கருணைக்காகக் கெஞ்சினர். குதிரைப்படைப்பிரிவுகள் அனைத்தும் அணிவகுப்பு மைதானத்தில் ஒன்றுகூடின. கோட்டையின் திட்டிவாசல் மூலம் கிடைத்த குறுகலான பாதை வழியே தப்பியோடிய சிப்பாய்களைப் பின்தொடர்ந்து சென்று பிடிக்க முடிவெடுக்கப்பட்டது.**

147) கில்லஸ்பியின் ஆட்கள் கிளர்ச்சிக்குத் திட்டம் தீட்டிய திப்புவின் மகன்களைப் பழிவாங்க விரும்புவதை எதிர்த்தவர்?

a) கில்லஸ்பி

b) ஸ்கெல்ட்டன்

c) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்

**d) கர்னல் மர்ரியாட்**

**விளக்கம்: தப்பியோடிய சிப்பாய்களை வழிமறித்துப் பிடிக்கச் சில உள்ளூர் குதிரைக்காரர்களுடன் ஒரு குதிரைப்படைப்பிரிவு கிளம்பியது. கோட்டையின் அனைத்துக் கட்டிடங்களிலும் தேடுதல் வேட்டை நடந்தது. அங்கு ஒளிந்திருந்த கிளர்ச்சியாளர்கள் இரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள். கில்லஸ்பியின்**

**ஆட்கள் கிளர்ச்சிக்குத் திட்டம் தீட்டிய திப்புவின் மகன்களைப் பழிவாங்க விரும்பினார்கள். ஆனால் லெப்டினெண்ட் கர்னல் மர்ரியாட் இதை எதிர்த்தார்.**

148) வேலூர் புரட்சியின்போது 800க்கும் மேற்பட்ட உடல்கள் கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டதாக கூறியவர்?

a) ஜே. வில்சன்

**b) ஜே. பிளாக்கிஸ்டன்**

c) கர்னல் ஹர்கோர்ட்

d) ஸ்கெல்ட்டன்

**விளக்கம்: கில்லஸ்பியின் வன்கொடுமைகளை நேரில் பார்த்த ஜே. பிளாக்கிஸ்டன், 800க்கும் மேற்பட்ட உடல்கள் கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டதாக கூறுகிறார். டபிள்யூ. ஜே. வில்சனின் மதிப்பீட்டின்படி கிளர்ச்சியில் பங்கேற்றதற்காக 378 பேர் சிறை வைக்கப்பட்டனர். 516 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டாலும் சிறைத் தண்டனை விதிக்கப்படவில்லை. விசாரணைக்குழுவிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களின்படி, இராணுவ நீதிமன்றம் சில தனிப்பட்ட நபர்களுக்கு மரண தண்டனை விதித்தது. சிலரை நாடு கடத்தியது. இத்தண்டனைகள் வேலூர் பொறுப்பதிகாரியால் 1806 செப்டம்பர் 23 அன்று நிறைவேற்றப்பட்டது.**

149) முதலாம் ரெஜிமெண்ட்டின் முதல் படைப்பிரிவில் பீரங்கி முனையில் கட்டிச் சுடப்பட்டவர்கள்?

**a) 1 ஹவில்தார், 1 நாயக்**

b) 1 நாயக், 4 சிப்பாய்கள்

c) 1 ஜமேதார், 4 சிப்பாய்கள்

d) 3 ஹவில்தார்கள்

**விளக்கம்: முதலாம் ரெஜிமெண்ட்டின் முதல் படைப்பிரிவு பீரங்கி முனையில் கட்டிச் சுடப்பட்டவர்கள் – 1 ஹவில்தார், 1 நாயக் சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் – 1 நாயக், 4 சிப்பாய்கள் தூக்கிலிடப்பட்டவர்கள் – 1 ஜமேதார், 4 சிப்பாய்கள் நாடு கடத்தப்பட்டவர்கள் – 3 ஹவில்தார்கள், 2 நாயக்குகள், 1 சிப்பாய் 23ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவு பீரங்கி வாயில் கட்டிச் சுடப்பட்டவர்கள் – 2 சுபேதார்கள், 2 லஸ்கார்கள் தூக்கிலிடப்பட்டவர்கள் – 2 ஹவில்தார்கள், 1 நாயக்**

150) வேலூர் புரட்சி தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கர்னல் ஹர்கோர்ட் வேலூர் கோட்டையை 15 நிமிடங்களுக்குள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகக் கூறப்படுகிறது.

(ii) கர்னல் கில்லஸ்பி (வாலஜாபாத் படைக்குப் பொறுப்பு வகித்தவர்) ஜூலை 11இல் வேலூர் படையின் தற்காலிகப் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

a) (i) சரி

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

**d) (i) மற்றும் (ii) தவறு**

**விளக்கம்: கர்னல் கில்லஸ்பி வேலூர் கோட்டையை 15 நிமிடங்களுக்குள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகக் கூறப்படுகிறது. கர்னல் ஹர்கோர்ட் (வாலஜாபாத் படைக்குப் பொறுப்பு வகித்தவர்) ஜூலை 11இல் வேலூர் படையின் தற்காலிகப் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.**

151) வேலூர் படைமுகாமின் பொறுப்பாளராகப் பதவியேற்று, இராணுவச் சட்ட ஆட்சியை அமல்படுத்தியவர்?

a) கில்லஸ்பி

b) ஸ்கெல்ட்டன்

c) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்

**d) ஹர்கோர்ட்**

**விளக்கம்: ஜூலை 13இல் ஹர்கோர்ட் படைமுகாமின் பொறுப்பாளராகப் பதவியேற்று, இராணுவச் சட்ட ஆட்சியை அமல்படுத்தினார். கர்னல் கில்லஸ்பியின் விரைவான, சிறந்த திட்டமிடலுடன் கூடிய நடவடிக்கையே, கோட்டையை ச் சில நாட்களுக்குள் கைப்பற்றி, அடுத்ததாக மைசூரிலிருந்து வரவிருந்த 50 ஆயிரம் வீரர்களின் ஆதரவைப் பெறுவதற்குத் திட்டமிட்ட கிளர்ச்சியாளர்களின் கூட்டணிக்கு முற்றுப்புள்ளி வைத்ததாகக் கருதப்படுகிறது.**

152) வேலூர் புரட்சி தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) படைவீரர்கள் எதிர்ப்பு தெரிவித்த அருவருப்பான மாற்றங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன

(ii) விசாரணைக் குழுவின் கூற்றுப்படி, மைசூர் இளவரசர்கள் கிளர்ச்சிக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பது நிறுவப்படாததால், அவர்களைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவைக்கும்படி உத்தரவிடப்பட்டது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: படைவீரர்கள் எதிர்ப்பு தெரிவித்த அருவருப்பான மாற்றங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன. விசாரணைக் குழுவின் கூற்றுப்படி, மைசூர் இளவரசர்கள் கிளர்ச்சிக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பது நிறுவப்படாததால், அவர்களைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவைக்கும்படி உத்தரவிடப்பட்டது. உயர்மட்டத் தீர்ப்பாயங்கள் கவர்னர், தலைமைப் படைத்தளபதி, துணை உதவி ஜெனரல் ஆகியோரை இந்தக் குளறுபடிக்குப் பொறுப்பாக்கி. அவர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ள உத்தரவிட்டன.**

153) கூற்று (கூ): . 1857ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும் கிளர்ச்சிக்கான அனைத்து முன்னறிகுறிகளும் வேலூர் கிளர்ச்சியில் இருந்தன.

காரணம் (கா): பெருங்கிளர்ச்சியில் இடம்பெற்ற கொழுப்பு தடவபட்ட தோட்டாக்கள் என்ற சொல்லுக்கு மாற்றாக வேலூர் நிகழ்வில் இடம்பெற்ற பாட்ஜ் என்பதையும் பகதூர் ஷா, நானா சாகிப் ஆகியோருக்கு மாற்றாக மைசூர் இளவரசர்களையும் நம்மால் பொருத்திப் பார்க்க முடியும்.

**a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

b) கூற்று சரி; காரணம் தவறு

c) கூற்று மற்றும் காரணம் தவறானவை

d) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**விளக்கம்: வேலூர் நிகழ்வின் தாக்கம் ஹைதராபாத், வாலஜாபாத், பெங்களூர், நந்திதுர்கம், பாளையங்கோட்டை, பெல்லாரி, சங்கரிதுர்கம் ஆகிய இடங்களிலும் பரவியது. 1857ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும் கிளர்ச்சிக்கான அனைத்து முன்னறிகுறிகளும் வேலூர் கிளர்ச்சியில் இருந்தன. பெருங்கிளர்ச்சியில் இடம்பெற்ற கொழுப்பு தடவபட்ட தோட்டாக்கள் என்ற சொல்லுக்கு மாற்றாக வேலூர் நிகழ்வில் இடம்பெற்ற பாட்ஜ் என்பதையும் பகதூர் ஷா, நானா சாகிப் ஆகியோருக்கு மாற்றாக மைசூர் இளவரசர்களையும் நம்மால் பொருத்திப் பார்க்க முடியும்.**

154) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கம்பெனி அரசாங்கத்தின் நில உரிமையும் வருவாய் ஈட்டும் முறையும் இந்தியக் கிராமியச் சமூகத்தை மிகக் கடுமையாகப் பாதித்தன.

(ii) விவசாயிகள் அவர்களுக்கு அதிகளவிலான வருவாய் இலக்கை நிர்ணயித்து, அநியாயமாக அதை வசூலித்த ஒப்பந்ததாரர்களாலும் கம்பெனி அதிகாரிகளாலும் நசுக்கப்பட்டனர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கம்பெனி அரசாங்கத்தின் நில உரிமையும் வருவாய் ஈட்டும் முறையும் இந்தியக் கிராமியச் சமூகத்தை மிகக் கடுமையாகப் பாதித்தன. விவசாயிகளை அதற்கு முன்னில்லாத அளவுக்கு வருத்தியது. வருவாய் ஈட்டும் வேளாண்முறையின் தொடக்க காலத்தில் விவசாயிகள் அவர்களுக்கு அதிகளவிலான வருவாய் இலக்கை நிர்ணயித்து, அநியாயமாக அதை வசூலித்த ஒப்பந்ததாரர்களாலும் கம்பெனி அதிகாரிகளாலும் நசுக்கப்பட்டனர்.**

155) விவசாயிகளின் கோரிக்கை செவிசாய்க்கப்படாமல் போனபோது அவர்கள் எந்தெந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்?

a) விவசாயிகள் உள்ளூர் கச்சேரி (வருவாய் வசூலிக்கும் அலுவலகம்)களைத் தாக்கினார்கள்.

b) தானியச் சேகரிப்புக்கிடங்குகளைக் கொள்ளையடித்தார்கள்.

c) வரியைச் செலுத்த மறுத்தார்கள்.

**d) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: விவசாயிகளின் பிரச்னைக்குத் தீர்வு காணும்படி விவசாயிகள் தொடக்கத்தில் கம்பெனி அரசாங்கத்துக்குப் புகார் அனுப்பினார்கள். ஆனால் அவர்களின் கோரிக்கை செவிசாய்க்கப்படாமல் போனபோது, அவர்கள் அணி திரண்டு, நேரடி நடவடிக்கையில் இறங்கினர். விவசாயிகள் உள்ளூர் கச்சேரி (வருவாய் வசூலிக்கும் அலுவலகம்)களைத் தாக்கினார்கள்; தானியச் சேகரிப்புக்கிடங்குகளைக் கொள்ளையடித்தார்கள்; வரியைச் செலுத்த மறுத்தார்கள்.**

156) 1840களிலும் 1850களிலும் செயல்பட்ட விவசாயிகள் இயக்கம் என்னவாக வெளிப்பட்டது?

a) முண்டா கிளர்ச்சி

b) கோல் கிளர்ச்சி

c) சந்தால் கிளர்ச்சி

**d) மலபார் கிளர்ச்சி**

**விளக்கம்: 1840களிலும் 1850களிலும் செயல்பட்ட விவசாயிகள் இயக்கம் மலபார் கிளர்ச்சியாக வெளிப்பட்டது. இப்பகுதியில் குடியேறி, மலபார் பெண்களைத் திருமணம் செய்துகொண்ட அரபு வணிகர்களின் சந்ததியினர் (மாப்பிள்ளைகள்) ஆவர்.**

157) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) அரபு வணிகர்களின் சந்ததியினர் (அ) மாப்பிள்ளைமார்கள் படிப்படியாக விவசாயத்தைச் சார்ந்தவர்களாகி, நிலத்தை வாடகைக்கு எடுத்து விவசாயம் செய்வோராகவும் மாறினர்.

(ii) 1792இல் ஆங்கிலேயர் மலபாரைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தபோது, அவர்கள் நில உடைமை விவகாரங்களைச் சீரமைக்க முடிவெடுத்தார்கள்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: அரபு வணிகர்களின் சந்ததியினர் (அ) மாப்பிள்ளைமார்கள் படிப்படியாக விவசாயத்தைச் சார்ந்தவர்களாகி, நிலத்தை வாடகைக்கு எடுத்து விவசாயம் செய்வோராகவும் நிலமற்ற உழைப்பாளர்களாகவும் சில்லறை வணிகர்களாகவும் மீனவர்களாகவும் மாறினர். 1792இல் ஆங்கிலேயர்**

**மலபாரைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தபோது, அவர்கள் நில உடைமை விவகாரங்களைச் சீரமைக்க முடிவெடுத்தார்கள்.**

158) நில உடைமை விவகாரங்கள் சீரமைப்பு தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) நிலத்துக்கான தனிநபர் உரிமையாளர் முறையை உருவாக்குவது அவர்கள் கொண்டுவந்த மாற்றமாகும்.

(ii) ஆங்கிலேயர் கொண்டுவந்த புதிய முறை ஜன்மிகளை நிலத்தின் முழு உரிமையாளர்களாக்கி, குத்தகை விவசாயிகளை வெளியேற்றும் அதிகாரத்தையும் கொடுத்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: நிலத்துக்கான தனிநபர் உரிமையாளர் முறையை உருவாக்குவது அவர்கள் கொண்டுவந்த மாற்றமாகும். மை பெற்றவர்), கனம்தார் (கனம் என்ற உரிமை பெற்றவர்), விவசாயி ஆகியோர் சரிசமமாகப் பகிர்வதற்கு வாய்ப்பளித்தது. ஆங்கிலேயர் கொண்டுவந்த புதிய முறை ஜன்மிகளை நிலத்தின் முழு உரிமையாளர்களாக்கி, குத்தகை விவசாயிகளை வெளியேற்றும் அதிகாரத்தையும் கொடுத்தது. இந்த நடைமுறை அதற்கு முன்பு இல்லாததாகும்.**

159) விவசாயிகளை வறுமையின் உச்சத்தில் வாழும் நிலைக்குத் தள்ளியது எது/எவை?

a) மிகையாக மதிப்பிடுதல்

b) சட்டத்துக்குப் புறம்பான வரிகளைச் சுமத்துவது

c) நீதிமன்றமும் காவல்துறையும் நில உரிமையாளருக்கு மட்டுமே ஆதரவாக நடந்துகொள்வது

**d) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: புதிய நிலவுடைமை முறை விவசாயிகளை மிகவும் பாதித்தது. இவற்றுடன், மிகையாக மதிப்பிடுதல், சட்டத்துக்குப் புறம்பான வரிகளைச் சுமத்துவது, நீதிமன்றமும் காவல்துறையும் நில உரிமையாளருக்கு மட்டுமே ஆதரவாக நடந்துகொள்வது ஆகியவை விவசாயிகளை வறுமையின் உச்சத்தில் வாழும் நிலைக்குத் தள்ளியது. தாங்க ள் நசுக்கப்படுவதை ச் சகித்துக்கொள்ள முடியாத விவசாயிகள் எதிர்வினை புரிந்த நிகழ்வுகள் மலபாரில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுதும் நடந்தன.**

160) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1849 ஆகஸ்ட் மாதத்தில் மஞ்சேரியிலும், 1851 ஆகஸ்ட் மாதத்தில் குளத்தூரிலும் 1852 ஜனவரி மாதத்தில் மட்டனூரிலும் நிகழ்ந்த கிளர்ச்சிகள் மிகவும் தீவிரமானவையாகும்.

(ii) அமைதியை ஏற்படுத்த ஆங்கிலேயர் கையாண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் பத்து வருடம் நீடித்தது.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: அவற்றில் 1849 ஆகஸ்ட் மாதத்தில் மஞ்சேரியிலும், 1851 ஆகஸ்ட் மாதத்தில் குளத்தூரிலும் (இந்த இரு இடங்களும் தெற்கு மலபாரில் உள்ளவை) 1852 ஜனவரி மாதத்தில் வடக்கில் உள்ள மட்டனூரிலும் நிகழ்ந்த கிளர்ச்சிகள் மிகவும் தீவிரமானவையாகும். ஆங்கிலேய ஆயுதப்படைகள் கிளர்ச்சியை அடக்க அனுப்பப்பட்டன. இங்கெல்லாம் அமைதியை ஏற்படுத்த ஆங்கிலேயர் கையாண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் இருபது ஆண்டுகளுக்கு மேல் நீடித்தன.**

161) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) மாப்பிள்ளைகள் 1870இல் மீண்டும் எழுச்சி பெற்றனர்.

(ii) 1857க்கு முந்தைய இந்தியாவில் நடைபெற்றவற்றில் சில கிளர்ச்சிகள் பழங்குடியினரால் நடத்தப்பட்டன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஆனால் மாப்பிள்ளைகள் 1870இல் மீண்டும் எழுச்சி பெற்றனர். மீண்டும் கிளர்ச்சிகள் நடந்தன. 1857க்கு முந்தைய இந்தியாவில் நடைபெற்றவற்றில் சில கிளர்ச்சிகள் பழங்குடியினரால் நடத்தப்பட்டன. உள்ளூர் வளங்கள் மீதான அவர்களின் தன்னாட்சியும் கட்டுப்பாடும் ஆங்கிலேய ஆட்சியாலும் பழங்குடி அல்லாதவரின் வருகையாலும் பாதிக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும். இப்பழங்குடிகள் இந்தியாவின் பெரும்பகுதிக்குப் பரவி, 19ஆம் நூற்றாண்டில் நூற்றுக்கணக்கான தீவிர மோதல்களையும் கிளர்ச்சிகளையும் ஏற்படுத்தினார்கள்.**

162) கோல்களின் கிளர்ச்சி எந்த ஆண்டு நடைபெற்றது?

a) 1831-33

b) 1855-56

c) 1831-33

**d) 1831-32**

**விளக்கம்: கோல்களின் கிளர்ச்சி (1831-32) கோல் (Kol) என்ற பழங்குடி இனத்தினர் பீகாரிலும் ஒரிசாவிலும் சோட்டா நாக்பூர், சிங்பும் ஆகிய பகுதிகளில் வாழ்ந்தனர். சோட்டா நாக்பூர் ராஜா பல கிராமங்களைப் பழங்குடி அல்லாதோருக்குக் குத்தகைக்கு விட்டதே கோல்களின் கிளர்ச்சிக்கு உடனடிக்காரணமாகும்.**

163) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சோன்பூர், தமர் ஆகிய பகுதிகளில் வசித்த கோல்கள் திக்காடர்களுக்கு (வரி வசூலிப்போர்) எதிரான கிளர்ச்சியை நடத்துவதற்கு முதல் முயற்சியை எடுத்தனர்.

(ii) வெளியாருடைய சொத்துகளைத் தாக்குவதை இவர்களின் கிளர்ச்சி உள்ளடக்கியிருந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: சோன்பூர், தமர் ஆகிய பகுதிகளில் வசித்த கோல்கள் திக்காடர்களுக்கு (வரி வசூலிப்போர்) எதிரான கிளர்ச்சியை நடத்துவதற்கு முதல் முயற்சியை எடுத்தனர். வெளியாருடைய சொத்துகளைத் தாக்குவதை இவர்களின் கிளர்ச்சி உள்ளடக்கியிருந்தது. கோல்கள் உயிர்ச்சேதம் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.**

164) கோல் கிளர்ச்சியில் முக்கிய வழிமுறைகளாக இருந்தவை?

a) உயிர்ச்சேதம்

b) கொள்ளையடிப்பது

c) சொத்துகளுக்குத் தீவைப்பது

**d) b) மற்றும் c)**

**விளக்கம்: கொள்ளையடிப்பதும் சொத்துகளுக்குத் தீவைப்பதும் அவர்களது கிளர்ச்சியில் முக்கிய வழிமுறைகளாக இருந்தன. 1831 டிசம்பர் 20ஆம் நாளில் சோட்டா நாக்பூரில் உள்ள சோனிப்பூர் பர்கானா எழுநூறு கிளர்ச்சியாளர்கள் அடங்கிய குழுவால் தாக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டது. 1832 ஜனவரி 26க்குள் கோல்கள் சோட்டா நாக்பூர் முழுவதையும் தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்துவிட்டார்கள். இவர்களின் கிளர்ச்சி ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு போருடன் முடிவுக்கு வந்தது.**

165) மிகத் தீவிரமாக ஒரு குறுகிய பரப்புக்குள் நடந்த சண்டையில் கொல்லப்பட்ட கோல் கிளர்ச்சியின் தலைவர்?

**a) புத்த பகத்**

b) பகத்கான்

c) பிர்சா

d) பிந்த்ராய் மன்கி

**விளக்கம்: மிகத் தீவிரமாக ஒரு குறுகிய பரப்புக்குள் நடந்த சண்டையில் கோல் கிளர்ச்சியின் தலைவரான புத்த பகத் கொல்லப்பட்டார். துண்டிக்கப்பட்ட அவரது தலையை ஆட்சியாளர்களிடம்**

**ஒப்படைப்பதற்காக அதிகாரிகள், இராணுவ வீரர்கள் ஆகியோரிடையே ஓராயிரம் ரூபாய் விநியோகிக்கப்பட்டது.**

166) கோல் கிளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்தவர்?

a) புத்த பகத்

b) பகத்கான்

c) பிர்சா

**d) பிந்த்ராய் மன்கி**

**விளக்கம்: கிளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்த பிந்த்ராய் மன்கி 1832 மார்ச் 19ஆம் நாள் சரணடைந்ததும், கோல்களின் போராட்டம் ஒரு துயரமான முடிவுக்கு வந்தது.**

167) சந்தால் கிளர்ச்சி எந்த ஆண்டு நடைபெற்றது?

a) 1831-33

**b) 1855-56**

c) 1831-33

d) 1853-57

**விளக்கம்: சந்தால் கிளர்ச்சி (1855-56): பழங்குடிகளான சந்தால்கள் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் உள்ள பல்வேறு காட்டுப்பகுதிகளில் அங்கங்கே பரவியிருந்தபடி வாழ்ந்தார்கள். மஞ்சி என்றும் அவர்கள் அறியப்பட்டார்கள்.**

168) சந்தால்கள் எந்த குன்றுகளைச் சுற்றியுள்ள பகுதியைத் திருத்தி அதை சந்தால்களின் நிலம் என்று அழைத்தார்கள்?

**a) ராஜ்மகல் குன்று**

b) பார மஹால் குன்று

c) தேவகிரி குன்று

d) மகேந்திர கிரி

**விளக்கம்: தங்களின் தாய்மண்ணிலிருந்து துரத்தப்பட்ட சந்தால்கள் ராஜ்மகல் குன்றுகளைச் சுற்றியுள்ள பகுதியைத் திருத்தி, அதை டாமின்-இ-கோ (சந்தால்களின் நிலம்) என்று அழைத்தார்கள்.**

169) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சந்தால்கள் உள்ளூர் காவல்துறையினராலும் அப்பகுதிகளில் தொடர்வண்டிப்பாதை அமைப்பதில் ஈடுபட்ட ஐரோப்பிய அதிகாரிகளாலும் அடக்குமுறைக்குள்ளானார்கள்.

(ii) பழங்குடி நிலங்கள் சந்தால் அல்லாத ஜமீன்தார்களுக்கும் வட்டிக்கடைக்காரர்களுக்கும் குத்தகைக்கு விடப்பட்டது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பழங்குடி நிலங்கள் சந்தால் அல்லாத ஜமீன்தார்களுக்கும் வட்டிக்கடைக்காரர்களுக்கும் குத்தகைக்கு விடப்பட்டதால், சந்தால்கள் படிப்படியாகக் கையறுநிலையில் வாழ வேண்டிய நெருக்கடிக்குத் தள்ளப்பட்டார்கள். இத்துடன், உள்ளூர் காவல்துறையினராலும் அப்பகுதிகளில் தொடர்வண்டிப்பாதை அமைப்பதில் ஈடுபட்ட ஐரோப்பிய அதிகாரிகளாலும் அடக்குமுறைக்குள்ளானார்கள். டிக்குகளின் (வெளியிலிருந்து வந்தோர்) இத்தகைய ஊடுருவல் சந்தால் சமூகத்தை நிலை தடுமாறச் செய்தது. இது அவர்கள் இழந்த பகுதியை மீட்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வைத்தது.**

170) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1855 ஜூலையில் சந்தால்கள் ஜமீன்தார்களுக்கும் அரசாங்கத்துக்கும் விடுத்த இறுதி எச்சரிக்கையை செவி மடுத்தனர்.

(ii) சந்தால்களின் கிளர்ச்சி தம்மை ஒடுக்குபவர்களான ஜமீன்தார்கள், வட்டிக்கடைக்கரார்கள், அரசாங்கம் ஆகிய மூன்று தரப்பினரின் புனிதமற்ற கூட்டுக்கு எதிரானது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

a) (i) சரி

**b) (ii) சரி**

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: 1855 ஜூலையில் சந்தால்கள் ஜமீன்தார்களுக்கும் அரசாங்கத்துக்கும் விடுத்த இறுதி எச்சரிக்கை செவிமடுக்காமல் போனவுடன், ஆயிரக்கணக்கிலான சந்தால்கள் வில்லும் அம்பும் ஏந்திக்கொண்டு வெளிப்படையான கிளர்ச்சியைத் துவக்கினார்கள். தமது கிளர்ச்சி தம்மை ஒடுக்குபவர்களான ஜமீன்தார்கள், வட்டிக்கடைக்கரார்கள், அரசாங்கம் ஆகிய மூன்று தரப்பினரின் புனிதமற்ற கூட்டுக்கு எதிரானது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.**

171) அதிகாரத்துக்கு உரிமைகோரும் அடையாளத்துக்கான ஆடை எந்த நிறத்தால் ஆனது?

a) நீலம்

**b) சிவப்பு**

c) பச்சை

d) கருப்பு

**விளக்கம்: மகேஷ்பூர் போரில் மஞ்சிகளில் பெரும்பாலானவர்கள் சிவப்பு நிற உடையை அணிந்திருந்தார்கள். பின்னாட்களில் இது அதிகாரத்துக்கு உரிமைகோரும் அடையாளத்துக்கான**

**ஆடை ஆனது. கிளர்ச்சியின் முதல் வாரத்தில் பத்து பேர் அடங்கிய ஒரு குழு மோங்கபர்ரா என்னும் கிராமத்தைத் தாக்கித் தீக்கிரையாக்கியது. கிளர்ச்சியாளர்களில் பெண்களும் இருந்தார்கள்.**

172) தொடக்கத்தில் சந்தால்களின் தலைவராக இருந்தவர்?

**a) சித்தோ**

b) கானு

c) புத்த பகத்

d) பிர்சா

**விளக்கம்: தொடக்கத்தில் சித்தோ சந்தால்களின் தலைவராக இருந்தார். அவர் கைது செய்யப்பட்ட பின்னர் கானு கிளர்ச்சியை நடத்தினார். கிளர்ச்சியின் பிற்பகுதியில் விவசாயிகளும் சேர்ந்துகொண்டார்கள்.**

173) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஆயிரக்கணக்கான விவசாயிகள் சார்லஸ் மசேக் அவுரித் தொழிற்சாலையைத் தாக்கிக் கொள்ளையடித்தார்கள்.

(ii) இராணுவம் குவிக்கப்பட்டு, சந்தால் கிராமங்கள் பழிக்குப் பழியாக ஒன்றன் பின் ஒன்றாகத் தீக்கிரையாக்கப்பட்டன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஆயிரக்கணக்கான விவசாயிகள் சார்லஸ் மசேக் அவுரித் தொழிற்சாலையைத் தாக்கிக் கொள்ளையடித்தார்கள். இதன் விளைவாக, கிளர்ச்சியை ஒடுக்க ஆங்கிலேயர் தரப்பிலிருந்து மிருகத்தனமான நடவடிக்கைகள் தொடங்கின. இராணுவம் குவிக்கப்பட்டு, சந்தால் கிராமங்கள் பழிக்குப் பழியாக ஒன்றன் பின் ஒன்றாகத் தீக்கிரையாக்கப்பட்டன. ஒரு கணக்கீட்டின்படி, கிளர்ச்சி இறுதியாக ஒடுக்கப்படும் முன்பு, 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் பேர் வரையான கிளர்ச்சியாளர்களில் 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டார்கள் எனத் தெரிகிறது.**

174) முண்டாக்களின் கிளர்ச்சி எந்த காலகட்டத்தில் நடைபெற்றது?

**a) 1899-1900**

b) 1897-1898

c) 1899-1905

d) 1891-1900

**விளக்கம்:பிர்சா முண்டா வழிநடத்திய முண்டாக்களின் கிளர்ச்சி (உல்குலன்) 1899-1900 காலகட்டத்தில் நடைபெற்றது. முண்டாக்கள் பீகார் பகுதியில் முக்கியத்துவம் வாய்ந்த பழங்குடிகள் ஆவர். ஆங்கிலேயரின் ஆட்சியில் அவர்களின் பொதுநில உரிமை முறை அழிக்கப்பட்டது.**

175) ஆங்கிலேயரை விரட்டிவிட்டு முண்டாக்களின் ஆட்சியை நிறுவ வந்த புனிதத்தூதர் என தன்னை அழைத்துக்கொண்டவர்?

a) சித்தோ

b) கானு

**c) பிர்சா**

d) புத்தக பகத்

**விளக்கம்: முண்டாக்களுக்குச் சொந்தமான நிலங்களை ஜாகீர்தார்களும் திக்காடர்களும் (பெரும் விவசாயி) வட்டிக்கடைக்காரர்களும் பறித்துக்கொண்டனர். பிர்சா முண்டா குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிகளின் குடும்பத்தில் 1874இல் பிறந்தார். ஆங்கிலேயரை விரட்டிவிட்டு, முண்டாக்களின் ஆட்சியை நிறுவ வந்த புனிதத்தூதர் என அவர் தன்னை அழைத்துக்கொண்டார்.**

176) முண்டா இனத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஜமீன்தார்களுக்கு வாடகை செலுத்த வேண்டாம் என வலியுறுத்தியவர்?

a) சித்தோ

b) கானு

**c) பிர்சா முண்டா**

d) புத்தக பகத்

**விளக்கம்: பழங்குடிகளின் நிலங்களைப் பழங்குடி அல்லாதோர் ஆக்கிரமிப்பதை இவரது தலைமையில் முண்டாக்கள் எதிர்த்தார்கள். முண்டா இனத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஜமீன்தார்களுக்கு வாடகை செலுத்த வேண்டாம் என பிர்சா முண்டா வலியுறுத்தினார்.**

177) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சித்தோ சோட்டா நாக்பூர் பகுதியில் கிளர்ச்சியைத் துவக்கினார்.

(ii) சாயில் ரகப் என்னுமிடத்தில் முண்டா சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டார்கள்

a) (i) சரி

**b) (ii) சரி**

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பிர்சா முண்டா சோட்டா நாக்பூர் பகுதியில் கிளர்ச்சியைத் துவக்கினார். சாயில் ரகப் என்னுமிடத்தில் முண்டா சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டார்கள். சாயில் ரகப் படுகொலை பிர்சா ஆதரவாளர்களைத் தடுத்து நிறுத்தவில்லை.**

178) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஆங்கிலேய அதிகாரிகள் பிர்சாவைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்ததுடன், அவரைப் பிடித்துத் தருபவர்களுக்குப் பரிசளிப்பதாகவும் அறிவித்தார்கள்.

(ii) ராஞ்சி சிறையில் அடைக்கப்பட்ட பிர்சா 1905ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் நாளில் தியாகி ஆனார்.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஆங்கிலேய அதிகாரிகள் பிர்சாவைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்ததுடன், அவரைப் பிடித்துத் தருபவர்களுக்குப் பரிசளிப்பதாகவும் அறிவித்தார்கள். இத்தனைக்குப் பிறகும் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு தொடர்வதைக் காண முடிகிறது. ராஞ்சி சிறையில் அடைக்கப்பட்ட பிர்சா 1900ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் நாளில் தியாகி ஆனார். அவருடைய பெயர் தொடர்ந்து அப்பகுதியின் மலைவாழ் மக்களை ஈர்ப்பதாக உள்ளது.**

179) 1857ஆம் ஆண்டு பெருங்கிளர்ச்சி ஆங்கில ஏகாதிபத்திய வரலாற்றாசிரியர்களால் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a) இராணுவக் கலகம்

b) இராணுவ வீரர்களின் கோபத்தின் வெளிப்பாடு

**c) a) மற்றும் b)**

d) முதல் இந்திய சுதந்திரப்போர்

**விளக்கம்: 1857ஆம் ஆண்டு பெருங்கிளர்ச்சி ஆங்கிலேய, இந்திய வரலாற்று அறிஞர்களிடையே பெரும் விவாதத்திற்குரிய பொருளாக உள்ளது. ஆங்கில ஏகாதிபத்திய வரலாற்றாசிரியர்கள் இவ்வெழுச்சியை இராணுவக் கலகம் என்றும் இராணுவ வீரர்களின் கோபத்தின் வெளிப்பாடு என்று கூறி சாதாரணமாகப் புறந்தள்ளுகின்றனர்.**

180) "ஒரு இராணுவ வீரர்களின் கலகம் . . . விரைவாக தனது குணாதியத்தை மாற்றிக் கொண்டு தேசீய எழுச்சியாக மாறியது" என்று 1857 பெருங்கிளர்ச்சி குறித்து குறிப்பிடுபவர்?

a) எட்வர்டு ஜான் தாம்சன்

b) வில்லியம் பெண்டிங்க்

c) கர்னல் கீன்

**d) கர்னல் மல்லீசன்**

**விளக்கம்:வங்காளப் படையின் ஆங்கிலத் தளபதியான கர்னல் மல்லீசன் "The Making of the Bengal Army" வங்காளப்படையின் உருவாக்கம் எனும் சிறு ஏட்டில் "ஒரு இராணுவ வீரர்களின் கலகம் . . . விரைவாக தனது குணாதியத்தை மாற்றிக் கொண்டு தேசீய எழுச்சியாக மாறியது" என்று குறிப்பிடுகிறார்.**

181) பெருங்கிளர்ச்சிக்குக் காரணமாகச் செயல்பட்ட பல விஷயங்களை முன்வைப்பவர்?

a) எட்வர்டு ஜான் தாம்சன்

b) வில்லியம் பெண்டிங்க்

**c) கர்னல் கீன்**

d) கர்னல் மல்லீசன்

**விளக்கம்: வரலாற்றறிஞர் கீன் (Keen) இக்கிளர்ச்சிக்குக் காரணமாகச் செயல்பட்ட பல விஷயங்களை முன்வைக்கிறார். டல்ஹௌசியின் இணைப்புக் கொள்கைகளாலும் சீர்திருத்த வேகத்தாலும் பாதிப்புக்குள்ளான இளவரசர்கள், இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களின் குமுறல்கள் என ஏற்கனவே குவித்து வைக்கப்பட்டிருந்த எரிபொருளை கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் தீப்பொறியை ஏற்படுத்திப் பற்றி எரியச் செய்தன.**

182) "பெருமளவில் உண்மையான விடுதலைப் போராட்டம்" என பெருங்கிளர்ச்சி குறித்து கூறியவர்?

**a) எட்வர்டு ஜான் தாம்சன்**

b) வில்லியம் பெண்டிங்க்

c) கர்னல் கீன்

d) கர்னல் மல்லீசன்

**விளக்கம்: எட்வர்டு ஜான் தாம்சன் இந்நிகழ்வை "பெருமளவில் உண்மையான விடுதலைப் போராட்டம்" என விளக்கியுள்ளார்.**

183) 1909இல் வெளியான சாவர்கரின் புத்தகம் எது?

a) சிப்பாய்க்கலகம்

b) இராணுவப்புரட்சி

**c) முதல் இந்திய சுதந்திரப்போர்**

d) பெருங்கிளர்ச்சி

**விளக்கம்: ஆங்கிலம் படித்த மத்தியதர மக்கள் இவ்வெழுச்சியில் எந்த ஒரு பங்கையும் வகிக்காவிட்டாலும் தேசிய வரலாற்றிஞர்கள் இவ்வெழுச்சியை இந்தியாவின் முதல் விடுதலைப் போர் என்றே கூறுகின்றனர்.1909இல் வெளியான சாவர்கரின் The War of IndianIndependence (இந்திய விடுதலைப் போர்) எனும் தனது நூலில் ஆங்கிலேயரால் இதுவரை வெறும் இராணுவப் புரட்சியே**

**என்று வர்ணிக்கப்பட்ட இந்நிகழ்வு உண்மையில் அமெரிக்க சுதந்திரப் போரைப் போன்ற ஒரு விடுதலைப் போரே என வாதிடுகின்றனர்.**

184) குத்தகை இல்லாத நிலங்களை வைத்திருப்போர் பற்றி விசாரிக்க இனாம் கமிஷனை எந்த அரசு அமைத்தது?

**a) பம்பாய் அரசு**

b) சென்னை அரசு

c) கல்கத்தா அரசு

d) டெல்லி அரசு

**விளக்கம்:டல்ஹௌசி வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின் மூலமாக அவத்தையும் ஜான்சியையும் இணைத்ததும், கடைசி பேஷ்வாவின் சுவீகார மகனான நானா சாகிபை அவமானகரமாக நடத்தியதும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தின. முறையான உரிமம் இல்லாமல், குத்தகை இல்லாத நிலங்களை வைத்திருப்போர் பற்றி விசாரிக்க பம்பாய் அரசு அமைத்த இனாம் கமிஷனின் (1852) அறிக்கையின்படி 21,000க்கும் மேற்பட்ட தோட்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.**

185) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) இணைக்கப்பட்ட பகுதிகளில் குறிப்பாக அவத்தில் மேற்கொள்ளப்பட்ட நிலவருவாய் ஏற்பாடுகள் தாலுக்தாரின் நலன்களுக்குப் பாதகமாக அமைந்ததால் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரும்பினர்.

(ii) டல்ஹௌசி தன்னுடைய விரிவாக்கக் கொள்கையின் மூலமாக பெருவாரியான மக்களுக்குத் துன்பத்தை விளைவித்தார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: இணைக்கப்பட்ட பகுதிகளில் குறிப்பாக அவத்தில் மேற்கொள்ளப்பட்ட நிலவருவாய் ஏற்பாடுகள் தாலுக்தாரின் நலன்களுக்குப் பாதகமாக அமைந்ததால் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரும்பினர். மேலும் அவத்தில் அரச குடும்பத்தின் ஆதரவை நம்பியிருந்த ஆயிரக் கணக்கான மக்களும், விலையுயர்ந்த ஆடைகள், அலங்கரிக்கப்பட்ட காலணிகள், அதிக விலையுள்ள நகைகள் ஆகியவற்றைத் தயாரிப்போரும் வாழ்விழந்தனர். இவ்வாறு டல்ஹௌசி தன்னுடைய விரிவாக்கக் கொள்கையின் மூலமாக பெருவாரியான மக்களுக்குத் துன்பத்தை விளைவித்தார்.**

186) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஆங்கிலேயருக்கு முன்னர் இருந்த இந்திய அரசுகள் விளைந்த நிலங்களுக்கு மட்டுமே வரி வசூலித்தனர்.

(ii) ஆங்கிலேயர் நிலவருவாயை வரியாகக் கருதாமல் வாடகையாகக் கருதினர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: அநியாயமான நிலவருவாய் முறை இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நிலவருவாய் ஏற்பாடுகளில் இருந்ததைக் காட்டிலும் தற்போது நிலவரி மிக அதிகமாக இருந்தது. ஆங்கிலேயருக்கு முன்னர் இருந்த இந்திய அரசுகள் விளைந்த நிலங்களுக்கு மட்டுமே வரி வசூலித்தனர். ஆங்கிலேயர் நிலவருவாயை வரியாகக் கருதாமல் வாடகையாகக் கருதினர். இதன்படி நிலத்தில் விவசாயம் செய்தாலும் செய்யாவிட்டாலும் அதே அளவு வரி வசூலிக்கப்பட்டது.**

187) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் விவசாயப் பண்டங்களின் விலைகள் கடுமையாக வீழ்ச்சியுற்றன.

(ii) காலனியரசு கடனைக் குறைக்கவோ நிவாரணம் வழங்கவோ முன்வராத சூழலில் சிறு விவசாயிகளும் குத்தகைதாரர்களும் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாயினர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் விவசாயப் பண்டங்களின் விலைகள் கடுமையாக வீழ்ச்சியுற்றன. காலனியரசு கடனைக் குறைக்கவோ நிவாரணம் வழங்கவோ முன்வராத சூழலில் சிறு விவசாயிகளும் குத்தகைதாரர்களும் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாயினர்.**

**188) முஸ்லீம் உயர்குடியினரும் கற்றறிந்தோரும் அந்நியமாதல் முஸ்லீம்கள் பெரும்பாலும் அரசுப் பணிகளையே சார்ந்திருந்தனர். கம்பெனியின் ஆட்சிக்கு முன்னர் முந்தைய அரசுகளில் மதிப்புமிகுந்த பணிகளில் அவர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தனர். குதிரைப்படைத் தளபதிகளாகச் சிலர் உயர்ந்த ஊதியம் பெற்று வந்தனர். ஆனால் கம்பெனியின் ஆட்சியில் அவர்கள் துயரத்திற்கு ஆளாயினர்**

189) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) நீதிமன்றங்களில் பொதுப்பணித் தேர்வுகளில் பாரசீக மொழியின் பயன்பாடு ஒழிக்கப்பட்டது.

(ii) அரசுப் பணியில் முஸ்லீம்கள் சேர்வதற்கான வாய்ப்புகளைக் குறைத்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஆங்கில மொழியும் மேலைக்கல்வியும் முஸ்லீம் அறிவுஜீவிகளை முக்கியமற்றவர்களாக ஆக்கியது. நீதிமன்றங்களில் பொதுப்பணித் தேர்வுகளில் பாரசீக மொழியின் பயன்பாடு ஒழிக்கப்பட்டது அரசுப் பணியில் முஸ்லீம்கள் சேர்வதற்கான வாய்ப்புகளைக் குறைத்தது.**

190) எந்த ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் வங்காளப் படையில் உயர் ஜாதியினரும் சேர்ந்துகொள்ள வழிவகை செய்தது?

**a) 1856**

b) 1843

c) 1857

d) 1858

**விளக்கம்: மத உணர்வுகள்: 1856ஆம் ஆண்டு சட்டமானது வங்காளப் படையில் உயர் ஜாதியினரும் சேர்ந்துகொள்ள வழிவகை செய்தது. சாதிப்பற்றை, கைவிட்டு அவர்கள் படைகளில் சேரவேண்டும் அல்லது இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றி முன்னேறும் வாய்ப்பைக் கைவிட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.**

191) லெக்ஸ் லோசி (Lex Loci Act) சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

a) 1856

**b) 1850**

c) 1855

d) 1858

**விளக்கம்: மேலும் சதிஒழிப்புச் சட்டம், விதவை மறுமணத்தை சட்டபூர்வமாக்கியது, பெண் குழந்தைகள் கொல்லப்படுவதற்கு எதிரான சட்டம் ஆகியவை சமய நம்பிக்கைகளில் ஆங்கில அரசு தலையிடுவதாகக் கருதப்பட்டது. 1850இல்இயற்றப்பட்ட லெக்ஸ் லோசி (Lex Loci Act) சட்டம் கிறித்தவர்களாக மதம் மாறியவர்களுக்கும் மூதாதையரின் சொத்துக்களில் உரிய பங்கினைப் பெறும் உரிமையை அளித்தது. இது வைதீக இந்துக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது.**

192) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) துப்பாக்கித் தோட்டாக்களில் பசுவின் கொழுப்பும் பன்றியின் கொழுப்பும் தடவப்பட்டுள்ளது என்ற செய்தி பரவியபோது இந்து முஸ்லீம் படைவீரர்களின் மத உணர்வுகள் புண்பட்டன.

(ii) இத்தோட்டாக்களை புதிதாக அறிமுகமான என்பீல்டு துப்பாக்கிகளுக்குள் செலுத்துவதற்கு முன்பாக அதைப் படை வீரர்கள் கடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: துப்பாக்கித் தோட்டாக்களில் பசுவின் கொழுப்பும் பன்றியின் கொழுப்பும் தடவப்பட்டுள்ளது என்ற செய்தி பரவியபோது இந்து முஸ்லீம் படைவீரர்களின் மத உணர்வுகள் புண்பட்டன. இத்தோட்டாக்களை புதிதாக அறிமுகமான என்பீல்டு துப்பாக்கிகளுக்குள் செலுத்துவதற்கு முன்பாக அதைப் படை வீரர்கள் கடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இது கிறித்தவ மதத்திற்கு மாற்றம் செய்யும் முயற்சியாக கருதப்பட்டது.**

193) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கொழுப்பு தடவிய தோட்டா பிரச்சனை கிளர்ச்சி எனும் வெடிமருந்தில் வைக்கப்பட்ட தீப்பொறியாகும்.

(ii) பதவி பறிக்கப்பட்ட அனைவரும் இவ்வெழுச்சியைத் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பாகக் கருதினர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: அனைத்து விதத்திலும் 1857 ஆம் ஆண்டு, பெருங்கிளர்ச்சி கனிந்த ஆண்டாகும். கொழுப்பு தடவிய தோட்டா பிரச்சனை கிளர்ச்சி எனும் வெடிமருந்தில் வைக்கப்பட்ட தீப்பொறியாகும். பதவி பறிக்கப்பட்ட அதிருப்தி கொண்ட ராஜாக்கள், ராணிகள், ஜமீன்தார்கள், குத்தகைதாரர்கள் கைவினைஞர்கள், தொழிலாளர்கள், முஸ்லீம் அறிவு ஜீவிகள், இந்து பண்டிதர்கள், குருமார்கள் ஆகிய அனைவரும் இவ்வெழுச்சியைத் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பாகக் கருதினர்.**

194) 1857 ஆம் ஆண்டின் பெருங் கிளர்ச்சி எங்கு நடைபெற்ற இராணுவக் கலகமாக தொடங்கியது?

**a) பரக்பூர்**

b) மீரட்

c) டெல்லி

d) மிர்சாபூர்

**விளக்கம்: பெருங்கிளர்ச்சியின் போக்கு: இப்பெருங் கிளர்ச்சி கல்கத்தாவுக்கு அருகேயுள்ள பரக்பூரில் இராணுவக் கலகமாகவே தொடங்கியது. மங்கள் பாண்டே தனது இராணுவ மேலதிகாரியை சுட்டுக்**

**கொன்றார். தொடர்ந்து அங்கு இராணுவக் கலகம் வெடித்தது. அடுத்த மாதம் மீரட் நகரில் தோட்டாக்களைப் பெற வேண்டிய 90 வீரர்களில் ஐவர் மட்டுமே உத்தரவுக்கு அடிபணிந்தனர்.**

195) கிளர்ச்சியாளர்கள் யாரை பேரரசராகப் பிரகடனம் செய்தனர்?

a) முதலாம் பகதூர்ஷா

b) இரண்டாம் அக்பர்

**c) இரண்டாம் பகதூர்ஷா**

d) இரண்டாம் ஆலம்கீர்

**விளக்கம்:மே மாதம் 10 ஆம் நாளில் மூன்று ரெஜிமெண்டுகளைச் சேர்ந்த சிப்பாய்கள் கிளர்ச்சியில் இறங்கி தங்கள் உயர் அதிகாரிகளைக் கொன்று, சிறையில் அடைக்கப்பட்டிருந்த வீரர்களை விடுதலை செய்தனர். மறுநாள் தில்லியை அடைந்த அவர்கள் ஐரோப்பியர் பலரைக் கொன்று நகரைக் கைப்பற்றினர் கிளர்ச்சியாளர்கள் இரண்டாம் பகதூர்ஷாவை பேரரசராகப் பிரகடனம் செய்தனர்.**

196) தன்னைப் பேரரசருடைய வைஸ்ராயாக அறிவித்துக் கொண்டவர்?

a) குன்வர் சிங்

b) கான் இ கான்

**c) கான் பகதூர் கான்**

d) தாந்தியா தோப்

**விளக்கம்: ஜூன் மாதத்தில் கிளர்ச்சி ரோகில்கண்ட் பகுதிக்குப் பரவியது. ஒட்டுமொத்த கிராமப்புறமும் கிளர்ச்சியில் ஈடுபட்டது. கான் பகதூர் கான் தன்னைப் பேரரசருடைய வைஸ்ராயாக அறிவித்துக் கொண்டார். புந்தேல்கண்ட் பகுதியும் ஆற்றிடைப்பகுதி முழுவதும் ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்தியது. ஜான்சியில் ஐரோப்பியர் கொல்லப்பட்டு 22 வயதான லட்சுமிபாய் அரியணை ஏற்றப்பட்டார்.**

197) கான்பூரில் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் யார்?

a) குன்வர் சிங்

**b) நானா சாகிப்**

c) ஹஸ்ரத் பேகம்

d) தாந்தியா தோப்

**விளக்கம்:கான்பூரில் நானா சாகிப் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். பெண்களும் குழந்தைகளும் உட்பட சுமார் 125 ஆங்கிலேயர்களும் ஆங்கில அதிகாரிகளும் கொல்லப்பட்டு அவர்களது உடல்கள் ஒரு கிணற்றுக்குள் வீசப்பட்டன. கான்பூர் படுகொலை என்றறியப்பட்ட இந்நிகழ்வு ஆங்கிலேயரைக் கோபம் கொள்ளச் செய்தது.**

198) கான்பூர் படுகொலையில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கொடூரமான முறையில் பழி தீர்த்தவர்?

**a) நீல்**

b) ஹூக் ரோஸ்

c) ஹேவ்லக்

d) ஹென்றி லாரன்ஸ்

**விளக்கம்: நிலைமைகளை எதிர்கொள்ள அனுப்பப்பட்ட தளபதி ஹென்றி ஹேவ்லக் படுகொலைக்கு மறுநாளே நானா சாகிப்பைத் தோற்கடித்தார். ஆங்கில இராணுவ அதிகாரி நீல் கொடூரமான பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார். படுகொலைக்குக் காரணமானவர்கள் எனக் கருதப்பட்டோர் அனைவரும் கொல்லப்பட்டனர்.**

199) தாந்தியா தோபே கான்பூரைக் கைப்பற்றிய பின் அது விரைவில் யாரால் மீட்கப்பட்டது?

a) கார்ப்பரல் பியர்சி

b) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்

c) ஹேவ்லக்

**d) காம்ப்பெல்**

**விளக்கம்:நவம்பர் மாத இறுதியில் தாந்தியா தோபே கான்பூரைக் கைப்பற்றினார். ஆனால் அது விரைவில் காம்ப்பெல் என்பவரால் மீட்கப்பட்டது.**

200) லக்னோ ஆளுநர் மாளிகை யாரால் பாதுகாக்கப்பட்டது?

a) ஹேவ்லக்

b) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்

**c) ஹென்றி லாரன்ஸ்**

d) காம்ப்பெல்

**விளக்கம்: ஹென்றி லாரன்சால் பாதுகாக்கப்பட்ட லக்னோ ஆளுநர் மாளிகை கிளர்ச்சியாளர்களின் வசமானது. நானா சாகிப்பை ஹேவ்லக் தோற்கடித்த பின்னர் லக்னோவைக் கைப்பற்ற விரைந்தார். ஆனால் அவர் திரும்ப நேர்ந்தது.**

201) புரட்சியாளர்களிடமிருந்து டெல்லியை கைப்பற்றிய ஆங்கிலத்தளபதி?

**a) ஜான் நிக்கல்சன்**

b) ஜான் லாரன்ஸ்

c) ஹென்றி லாரன்ஸ்

d) காம்ப்பெல்

**விளக்கம்: ஜூலை மாத இறுதியில் ஜான் லாரன்ஸால் தில்லிக்கு அனுப்பப்பட்ட ஜான் நிக்கல்சன் அதைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார்.**

202) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) அவத்தில் மட்டும் தாலுக்தார்களும் விவசாயிளுடன் பங்கு கொண்டதால் கிளர்ச்சி நீடித்தது.

(ii) தாலுக்தார்களில் பலர் அவத் நவாபின் விசுவாசிகளாவர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: அவத்தில் மட்டும் தாலுக்தார்களும் விவசாயிளுடன் பங்கு கொண்டதால் கிளர்ச்சி நீடித்தது. தாலுக்தார்களில் பலர் அவத் நவாபின் விசுவாசிகளாவர். ஆகவே அவர்கள் லக்னோவில் பேகம் ஹஸ்ரத் மஹாலோடு (நவாப் வஜித் அலியின் மனைவி) சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்தனர். பெரும்பாலான வீரர்கள் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். ஆதலால் விவசாயிகள் பாதிக்கப்பட்டபோது இவர்களும் பாதிப்புக்குள்ளாயினர்.**

203) நீண்ட காலத்திற்கு வங்காளப்படைகளுக்கு நாற்றங்காலாக இருந்தது எது?

a) டெல்லி

b) மீரட்

**c) அவத்**

d) கான்பூர்

**விளக்கம்: நீண்ட காலத்திற்கு வங்காளப்படைகளுக்கு அவத் நாற்றங்காலாக இருந்தது. அவத்தை சேர்ந்த வீரர்கள் குறைந்த ஊதியம் குறித்தும் விடுமுறை பெறுவதிலுள்ள இடர்ப்பாடுகள் பற்றியும் புகார் செய்தனர். அவர்கள் அனைவரும் பேகம் ஹஸ்ரத் மஹாலின் பின் அணி திரண்டனர். ராஜா ஜெய்லால் சிங்கின் தலைமையில் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டு லக்னோவைக் கைப்பற்றினர்.**

204) நீல் எங்கு நடைபெற்ற தெருச் சண்டையில் சுட்டுக் கொல்லப்பட்டார்?

**a) லக்னோ**

b) மீரட்

c) டெல்லி

d) கான்பூர்

**விளக்கம்: ஹஸ்ரத் மஹால் தன் மகன் பிர்ஜிஸ் கத்ராவை அவத்தின் அரசராக அறிவித்தார். கான்பூரில் பழிதீர்த்துக் கொண்ட நீல் லக்னோவில் தெருச் சண்டையில் சுட்டுக் கொல்லப்பட்டார். 1858 மார்ச் மாதத்தில்தான் லக்னோவை ஆங்கிலேயரால் கைப்பற்ற முடிந்தது.**

205) நீல் சிலை இந்தியாவில் எங்கு வைக்கப்பட்டிருந்தது?

a) மும்பை

b) கல்கத்தா

c) டெல்லி

**d) சென்னை**

**விளக்கம்: சென்னை மௌன்ட் ரோட்டில் வைக்கப்பட்டிருந்த நீல் சிலை இந்திய தேசியவாதிகளைக் கோபம் கொள்ளச் செய்தது. அதை அப்புறப்படுத்த காங்கிரஸ் சத்தியாக்கிரகம் செய்தது. ராஜாஜியின் காங்கிரஸ் அமைச்சரவை (1937-39) இச்சிலையை அகற்றி சென்னை அருங்காட்சியகத்தில் வைத்தது.**

206) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஹக் ரோஸ் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் ஜான்சியை முற்றுகையிட்டு தாந்தியா தோபேயைத் தோற்கடித்தார்.

(ii) லட்சுமிபாய் துணிச்சலுடன் போரிட்டு குவாலியரைக் கைப்பற்றினார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஹக் ரோஸ் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் ஜான்சியை முற்றுகையிட்டு தாந்தியா தோபேயைத் தோற்கடித்தார். இருந்தபோதிலும் லட்சுமிபாய் துணிச்சலுடன் போரிட்டு குவாலியரைக் கைப்பற்றினார். ஆங்கிலேயருக்கு ஆதரவான குவாலியர் அரசர் சிந்தியா தப்பியோடினார். ரோஸ் தன்னுடைய படைகளோடு லட்சுமிபாயுடன் நேரடியாக மோதினார். வியப்பூட்டும் வகையில் லட்சுமிபாய் போரில் பங்கேற்று வீரமரணமடைந்தார்.**

207) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1858இல் கானிங் இராணுவப் புரட்சி ஒடுக்கப்பட்டுஅமைதி மீட்கப்பட்டதாக அறிவித்தார்.

(ii) தாந்தியா தோபே கைது செய்யப்பட்டு 1858 ஏப்ரல் மாதம் கொல்லப்பட்டார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: குவாலியர் விரைவில் மீட்கப்பட்டது. 1858இல் கானிங் இராணுவப் புரட்சி ஒடுக்கப்பட்டுஅமைதி மீட்கப்பட்டதாக அறிவித்தார். தாந்தியா தோபே கைது செய்யப்பட்டு 1858 ஏப்ரல் மாதம் கொல்லப்பட்டார்.**

208) இரண்டாம் பகதூர்ஷா எந்த நாட்டுக்கு நாடு கடத்தப்பட்டார்?

a) இலங்கை

b) நேபாளம்

**c) மியான்மர்**

d) வங்காள தேசம்

**விளக்கம்: இரண்டாம் பகதூர்ஷா செப்டம்பர் 1857இல் கைது செய்யப்பட்டு குற்றவாளி என அறிவிக்கப்பட்டு ரங்கூனுக்கு (மியான்மர்) நாடு கடத்தப்பட்டார். அங்கேயே அவர் நவம்பர் 1862 இல் தனது 87வது வயதில் மரணமடைந்தார். அவருடைய இறப்போடு முகலாய அரசவம்சம் முடிவுக்கு வந்தது.**

209) இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரல் மற்றும் முதல் வைஸ்ராய் யார்?

a) வெல்லெஸ்லி

b) வில்லியம் பெண்டிங்க்

c) வாரன் ஹேஸ்டிங்ஸ்

**d) கானிங்**

**விளக்கம்:பெருங்கிளர்ச்சியின் விளைவுகள் அலகாபாத்தில் 1858 நவம்பர் 1இல் அரசு தர்பார் கூட்டப்பட்டது. விக்டோரியா ராணி வெளியிட்ட பிரகடனம் தர்பார் மண்டபத்தில் கானிங்பிரபுவால் வாசிக்கப்பட்டது. அவரே இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலும் முதல் வைஸ்ராயுமாவார்.**

210) அரசு செயலருக்கு உதவி செய்யும் இந்தியா கவுன்சிலில் எத்தனை உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பர்?

a) பதினாறு

b) பத்து

c) ஐந்து

**d) பதினைந்து**

**விளக்கம்: இதன் பின்னர் இந்தியா ஆங்கிலேய முடியரசின் பெயரால் அரசுச் செயலர் மூலம் ஆளப்படும். பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட இந்தியா கவுன்சில் எனும் அமைப்பு அரசு செயலருக்கு உதவி செய்யும். இதன் விளைவாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர் குழுவும், கட்டுப்பாட்டுக் குழுவும் ஒழிக்கப்பட்டன. ஆங்கிலேய முடியரசும் நாடாளுமன்றமும் அரசியல் அமைப்பின் அடிப்படையில் இந்தியாவை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொள்வர். கிழக்கிந்தியக் கம்பெனியின் படை கலைக்கப்பட்டு இங்கிலாந்து அரசின் படைகளோடு இணைக்கப்படும்.**

211) விக்டோரியா பிரகடனம் தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய அரசர்களோடு மேற்கொண்ட உடன்படிக்கைகளை இப்பிரகடனம் ஏற்றுக் கொண்டது.

(ii) இந்தியாவில் உள்ள ஆங்கிலேயருக்குச் சொந்தமான பகுதிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கம் இல்லை எனவும் அறிவித்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய அரசர்களோடு மேற்கொண்ட உடன்படிக்கைகளை இப்பிரகடனம் ஏற்றுக் கொண்டது. அவர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் கௌரவத்தையும் மதிப்பதாகவும் உறுதியளித்தது. மேலும் இந்தியாவில் உள்ள ஆங்கிலேயருக்குச் சொந்தமான பகுதிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கம் இல்லை எனவும் அறிவித்தது.**

212) எந்த ஆண்டு அமைக்கப்படும் சட்ட மன்றத்தில் இந்தியப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர் என விக்டோரியா பிரகடனம் கூறியது?

**a) 1861**

b) 1864

c) 1865

d) 1867

**விளக்கம்:1853ஆம் ஆண்டு சட்டமன்றம் ஐரோப்பியர்களை மட்டுமே உறுப்பினர்களாக கொண்டிருந்ததால் அவர்கள் இந்தியரின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள அக்கறை இல்லாமல் இருந்ததே இச்சிக்கலுக்கு காரணம் என்று கூறிய அறிக்கை 1861இல் அமைக்கப்படும் சட்ட மன்றத்தில் இந்தியப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர் எனக் கூறியது.**

213) விக்டோரியா பிரகடனம் தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) வாரிசு உரிமை இழப்புக் கொள்கையும் இணைப்புக் கொள்கையும் கைவிடப்படும்.

(ii) ஆங்கிலேயரை நேரடியாகக் கொன்ற கிளர்ச்சியாளர்களைச் தவிர மீதமுள்ள கிளர்ச்சியாளர் அனைவருக்கு ம் பொதுமன்னிப்பு வழங்கப்படும்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: வாரிசு உரிமை இழப்புக் கொள்கையும் இணைப்புக் கொள்கையும் கைவிடப்படும். ஆங்கிலேயரை நேரடியாகக் கொன்ற கிளர்ச்சியாளர்களைச் தவிர மீதமுள்ள கிளர்ச்சியாளர் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும். கல்வி, பொதுப்பணித் திட்டங்கள் (சாலைகள் இருப்புப்பாதை, தந்தி, நீர்ப்பாசனம்) ஆகியவை முடுக்கிவிடப்படும்.**

214) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) மேற்கத்தியமயமான ஆங்கிலக் கல்வி பயின்ற நடுத்தர வர்க்கம் தேசிய சிந்தனைகளோடு உருவானது

(ii) இந்தியச் சமூகத்தின் மரபுசார்ந்த கட்டமைப்பு உடையத் துவங்கியது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) (i) மற்றும் (ii) சரி**

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: கடந்த காலம் மீண்டும் வரும் எனும் நம்பிக்கை மங்கியது. இந்தியச் சமூகத்தின் மரபுசார்ந்த கட்டமைப்பு உடையத் துவங்கியது. மேற்கத்தியமயமான ஆங்கிலக் கல்வி பயின்ற நடுத்தர வர்க்கம் தேசிய சிந்தனைகளோடு உருவானது.**

215) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) முகலாயப் பேரரசர் இரண்டாம் பகதூர்ஷா சிறைக் கைதியானார்.

(ii) அவருடைய இரண்டு மகன்களும் பேரனும் கல்கத்தாவில் சிறை வைக்கப்பட்டனர்.

**a) (i) சரி**

b) (ii) சரி

c) (i) மற்றும் (ii) சரி

d) (i) மற்றும் (ii) தவறு

**விளக்கம்: முகலாயப் பேரரசர் இரண்டாம் பகதூர்ஷா சிறைக் கைதியானார். அவருடைய இரண்டு மகன்களும் பேரனும் சரணடைந்த பின் சுட்டுக் கொல்லப்பட்டனர்.**

# 11th History Lesson 14 Questions in Tamil

## 14] நவீனத்தை நோக்கி

1) ஆங்கிலேயச் செல்வாக்கின் தாக்கத்திற்கு ஆட்பட்ட முதல் மாகாணம்?

a) மும்பை

**b) வங்காளம்**

c) சென்னை

d) டெல்லி

**விளக்கம்:இந்தியா பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் காலப்பகுதியில் ஆங்கில நிர்வாகத்துடனும் ஆங்கில வர்த்தகத்துடனும் நெருக்கமான தொடர்புடைய ஆங்கிலக் கல்வி பயின்ற சிறிய அறிவுஜீவிகளின் கூட்டம் ஒன்றை உருவாக்கியிருந்தது. கிறித்தவ சமயப் பரப்பாளர்களின் பணிகளும் சிந்தனைகளும் ஏற்கனவே தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியிருந்தன. ஆங்கிலேயச் செல்வாக்கின் தாக்கத்திற்கு ஆட்பட்ட முதல் மாகாணம் வங்காளமாகும்.**

2) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஆங்கில நிர்வாகம், ஆங்கிலக் கல்வி, ஐரோப்பிய இலக்கியங்கள் ஆகியவை புதிய சிந்தனை அலைகளை இந்தியாவிற்கு கொண்டு வந்தன.

(ii) அச்சுத் தொழில்நுட்பம், சிந்தனைகள் பரவுவதில் முக்கியப் பங்கை வகித்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: பல சீர்திருத்தக் கருத்துக்கள் வங்காளத்திலிருந்தே உருவாயின. ஆங்கில நிர்வாகம், ஆங்கிலக் கல்வி, ஐரோப்பிய இலக்கியங்கள் ஆகியவை புதிய சிந்தனை அலைகளை இந்தியாவிற்கு கொண்டு வந்தன. அவை மரபு சார்ந்த அறிவுக்குச் சவால் விடுத்தன. பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட நன்னெறிச் சிந்தனைகள் மனித இனத்தின் பரிணாமம், வளர்ச்சி குறித்த சிந்தனைகள், அறிவொளியோடு தொடர்புடைய இயற்கை உரிமைகள் கோட்பாடு ஆகிய சிந்தனைகள் இந்திய மறுமலர்ச்சிக்கு வித்திட்டன. அச்சுத் தொழில்நுட்பம், சிந்தனைகள் பரவுவதில் முக்கியப் பங்கை வகித்தது.**

3) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியச் சமூகம் மூடநம்பிக்கை, சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்பு எனும் நச்சுச் சூழலில் சிக்கியுள்ளது என ஆங்கிலேயர் விளக்கினர்.

(ii) ஆங்கிலேயர்களின் கண்ணோட்டத்தில் உருவ வழிபாடும், பல கடவுள் வழிபாடும் வைதீகத்திற்கு வலுவேற்றி, அதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற மக்களைத் தூண்டியவை ஆகும்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியச் சமூகம் மூடநம்பிக்கை, சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்பு எனும் நச்சுச் சூழலில் சிக்கியுள்ளது என ஆங்கிலேயர் விளக்கினர். அவர்களின் கண்ணோட்டத்தில் உருவ வழிபாடும், பல கடவுள் வழிபாடும் வைதீகத்திற்கு வலுவேற்றி, அதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற மக்களைத் தூண்டியவை ஆகும். அதற்கு இணையாகச் சமூகச் சூழலும் உயிரோட்டமில்லாமல் தாழ்ந்த நிலையில் இருந்தது.**

4) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஆங்கிலேயர், தங்களின் தலையீடு இல்லாமல் சமூக தீமைகளிலிருந்து இந்தியர் விடுபட வாய்ப்பில்லை என வாதிட்டனர்.

(ii) பிறப்பின் அடிப்படையிலான சமூகப் பிரிவுகளும் அதன் விளைவான சாதி முறையும் விமர்சனம் செய்யப்பட்டது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: பெண்களின் நிலையும் இரங்கத்தக்க நிலையில் இருந்தது. உடன்கட்டை (சதி) ஏறும் பழக்கம் மிகவும் கண்டனத்திற்கு உள்ளானது. பிறப்பின் அடிப்படையிலான சமூகப் பிரிவுகளும் அதன் விளைவான சாதி முறையும் விமர்சனம் செய்யப்பட்டது. மிக முக்கியமாக ஆங்கிலேயர், தங்களின் தலையீடு இல்லாமல் இத்தகைய தீமைகளிலிருந்து இந்தியர் விடுபட வாய்ப்பில்லை என வாதிட்டனர். இது ஆங்கில ஆட்சியை நியாயப்படுத்துவதற்காகக் கிறித்துவ மதப் பரப்பாளர்களும் பயனெறி முறை பண்பாட்டாளர்களும் முன்வைத்த கருத்தென்பதைச் சொல்லத் தேவையில்லை.**

5) மிக அதிக எண்ணிக்கையிலானவர்களின் அதிகப்பட்ட மகிழ்ச்சியைக் கோரிய நவீனச் சிந்தனையாளர்கள் முறை எது?

a) பண்பாளர் முறை

b) நன்னெறி முறை

c) பயனீட்டாளர் முறை

**d) பயனெறி முறை**

**விளக்கம்:பயனெறிமுறை (Utilitarianism): மிக அதிக எண்ணிக்கையிலானவர்களின் அதிகப்பட்ட மகிழ்ச்சியைக் கோரிய நவீனச் சிந்தனையாளர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா மிகப்பெரிய, மிகவும் சிக்கலான பல்வகைப்பட்ட தன்மைகளைக் கொண்ட நாடாக இருந்தது. இடத்திற்கு இடம் நிலைமை மிகவும் மாறுபட்டிருந்தன. காலந்தோறும் சமூகப் பண்பாட்டுத் தீமைகளுக்கு எதிராக இந்தியச் சீர்திருத்தவாதிகள் போராடியிருந்தனர். ஆனால் ஆங்கிலேயரின் அறிவொளிச் சிந்தனைகளுடன் கூடிய வரவு சந்தேகத்திற்கிடமின்றிப் புதிய சவாலை முன்வைத்தது.**

6) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) மேற்கத்தியப் பண்பாடு, சிந்தனைகள் ஆகியவற்றின் வளர்ச்சி பத்தொன்பதாம் நூற்றாண்டில் மரபு சார்ந்த நிறுவனங்கள் தங்களை உயிர்த்துடிப்புள்ளனவாக மாற்றிக் கொள்ளக் கட்டாயப்படுத்தின.

(ii) இயக்கங்கள் இந்திய மக்களின் மதக் கண்ணோட்டத்தையும் சமூக நிறுவனங்களையும் சீர்திருத்துவதையும் ஜனநாயகப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: மேற்கத்தியப் பண்பாடு, சிந்தனைகள் ஆகியவற்றின் வளர்ச்சி பத்தொன்பதாம் நூற்றாண்டில் மரபு சார்ந்த நிறுவனங்கள் தங்களை உயிர்த்துடிப்புள்ளனவாக மாற்றிக் கொள்ளக் கட்டாயப்படுத்தின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் எ தி ர்ப்புகளின் வெளிப்பா டுகளும் , மாற்றத்திற்கான வேட்கையும் பல்வகைப்பட்ட சீர்திருத்த இயக்கங்களின் மூலம் வெளிப்பட்டன. இவ்வியக்கங்கள் இந்திய மக்களின் மதக் கண்ணோட்டத்தையும் சமூக நிறுவனங்களையும் சீர்திருத்துவதையும் ஜனநாயகப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தன.**

7) கீழ்க்கண்டவற்றுள் சமூக சீர்திருத்தங்களின் அவசியத்திற்கு வலுசேர்த்தவை எவை?

i ) புதிய பொருளாதார சக்திகளின் தோற்றம்

ii ) கல்வியின் பரவல்

iii ) தேசிய மனப்பான்மையின் வளர்ச்சி

iv ) நவீன மேற்கத்திய சிந்தனைகள்

**a) i ), ii ), iii ), iv )**

b) i ), ii ), iii )

c) ii ), iii )

d) iii ), iv )

**விளக்கம்: புதிய பொருளாதார சக்திகளின் தோற்றம், கல்வியின் பரவல், தேசிய மனப்பான்மையின் வளர்ச்சி, நவீன மேற்கத்திய சிந்தனைகள்-தத்துவங்கள்- பண்பாட்டின் செல்வாக்கு, ஐரோப்பாவில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்கள் பற்றிய விழிப்புணர்வு போன்றவை சீர்திருத்தங்களின் அவசியத்திற்கு வலுசேர்த்தன.**

8) வேதங்களில் தவறே இருக்க முடியாது எனும் கருத்தைப் புறக்கணித்தவர்?

**a) ராஜா ராம் மோகன்ராய்**

b) தயானந்த சரஸ்வதி

c) அன்னிபெசன்ட்

d) கேசவ் சந்திர சென்

**விளக்கம்:இச்சீர்திருத்த இயக்கங்களுக்குக் கருத்தொற்றுமை வழங்கியது பகுத்தறிவு, மனிதநேயம், உலகளாவிய மத உணர்வு ஆகியனவாகும். இக்கண்ணோட்டம் மரபு சார்ந்தவற்றைப் பகுத்தறிவோடு அணுகவும் சமகால சமூக-சமய நடைமுறைகளைச் சமூகப் பயன்பாடு எனும் பரிமாணத்தில் பார்க்கவும் உதவின. எடுத்துக்காட்டாக பிரம்ம சமாஜத்தில் ராஜா ராம்மோகன் ராய் வேதங்களில் தவறே இருக்க முடியாது எனும் கருத்தைப் புறக்கணித்தார்.**

9) "எங்களுடைய நிலை அனைத்து மதங்களிலும் உண்மைகள் இருந்தாக வேண்டும் என்பதல்ல, ஆனால் உலகத்தில் நிறுவப்பட்ட அனைத்து மதங்களும் உண்மையானவையே" என்று கூறியவர்?

a) ராஜா ராம் மோகன்ராய்

b) தயானந்த சரஸ்வதி

c) அன்னிபெசன்ட்

**d) கேசவ் சந்திர சென்**

**விளக்கம்: அலிகர் இயக்கத்தின்போது சையது அகமதுகான் மதம் சார்ந்த சிந்தனைகள் மாற்றப்பட முடியாதவை என்பதை மறுத்தார். "எங்களுடைய நிலை அனைத்து மதங்களிலும் உண்மைகள் இருந்தாக வேண்டும் என்பதல்ல, ஆனால் உலகத்தில் நிறுவப்பட்ட அனைத்து மதங்களும் உண்மையானவையே" எனக் கேசவ் சந்திர சென் கூறினார்.**

10) சமூக சீர்திருத்த இயக்கங்கள் எத்தனை வகைப்படும்?

**a) இரண்டு**

b) மூன்று

c) நான்கு

d) ஐந்து

**விளக்கம்: இந்தியச் சமூகத்தின் ஒட்டுமொத்தப் பண்பாட்டு நீரோட்டத்தை உள்வாங்கிக் கொண்ட இவ்வியக்கங்கள் மொழி, மதம், கலை, தத்துவம் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தின. விரிந்த கண்ணோட்டத்தில் இச்சீர்திருத்த இயக்கங்களை இரண்டாக வகைப்படுத்தலாம். 1. சீர்திருத்த இயக்கங்கள் 2. மீட்பியக்கங்கள்.**

11) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஒரு சீர்திருத்த இயக்கத்திற்கும் மற்றொன்றுக்குமான வேறுபாடு, இவை ஒவ்வொன்றும் எந்த அளவிற்கு மரபுகளைச் சார்ந்திருந்தன என்பதைப் பொறுத்தே அமைந்தது.

(ii) சமூகத் தீமைகளான சாதியும், ஆண் பெண் சமத்துவமின்மையும் தங்களின் இருப்பிற்கான நியாயத்தை மதங்களிடமிருந்தே பெற்றன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: இவ்வகைப்பட்ட இயக்கங்களு ம் தாங்கள் மீட்டெடுக்கவுள்ள மதம் இழந்துவிட்ட தூய்மையைப்பற்றி மாறுபட்ட அணுகுமுறைகளைக் கொண்டிருந்தன. ஒரு சீர்திருத்த இயக்கத்திற்கும் மற்றொன்றுக்குமான வேறுபாடு, இவை ஒவ்வொன்றும் எந்த அளவிற்கு மரபுகளைச் சார்ந்திருந்தன என்பதைப் பொறுத்தே அமைந்தது. அடிப்படையில் சமூக சீர்திருத்த இயக்கங்கள் மதச்சீர்திருத்தங்களோடு ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகவே இருந்தது. ஏனெனில் சமூகத் தீமைகளான சாதியும், ஆண் பெண் சமத்துவமின்மையும் தங்களின் இருப்பிற்கான நியாயத்தை மதங்களிடமிருந்தே பெற்றன.**

12) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சமூகத்தின் மேல்தட்டு மற்றும் இடைத்தட்டை சேர்ந்த இயக்கங்கள் தங்களின் நவீன சிந்தனைகள் நிலவிவரும் சமூக எதார்த்தங்களோடு இணைந்து செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டன.

(ii) சமூக சீர்திருத்த இயக்கங்கள் சமூகத்தின் அடிப்படைக் கட்டுமானத்தை மறுகட்டமைப்பு செய்வதென்பது சமூகத்தின் கீழ் அடுக்குகளுக்குள்ளும் கசியத் துவங்கின.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: தொடக்கத்தில் சமூக சீர்திருத்த இயக்கங்கள் ஒரு குறுகலான சமூக அடித்தளத்தைக் கொண்டிருந்தன. சமூகத்தின் மேல்தட்டு மற்றும் இடைத்தட்டை சேர்ந்த அவ்வியக்கங்கள் தங்களின்**

**நவீன சிந்தனைகள் நிலவிவரும் சமூக எதார்த்தங்களோடு இணைந்து செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டன. அதன் பின்னர் சமூக சீர்திருத்த இயக்கங்கள் சமூகத்தின் அடிப்படைக் கட்டுமானத்தை மறுகட்டமைப்பு செய்வதென்பது சமூகத்தின் கீழ் அடுக்குகளுக்குள்ளும் கசியத் துவங்கின.**

13) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) தொடக்கத்தில் சமூகப் பேரவை, இந்தியப் பணியாளர்கள் போன்ற அமைப்புகளும், கிறித்தவ சமயப் பரப்பு நிறுவனங்களுமே சமுகச் சீர்திருத்த இயக்கங்களை துரிதப்படுத்தக் காரணங்களாய் இருந்தன.

(ii) அறிவுஜீவிகளிடையே நடைபெற்ற அனல் பறக்கும் விவாதங்கள், புதிய சிந்தனைகளை மக்களிடையே கொண்டு செல்வதிலும் பழைய சிந்தனைகளைப் புதிய வடிவத்தில் மீட்டுருவாக்கம் செய்வதிலும் பெரும்பங்கு வகித்தன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: பொது விவாதங்கள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகள் ஆகிய வடிவங்களில் அறிவுஜீவிகளிடையே நடைபெற்ற அனல் பறக்கும் விவாதங்கள், புதிய சிந்தனைகளை மக்களிடையே கொண்டு செல்வதிலும் பழைய சிந்தனைகளைப் புதிய வடிவத்தில் மீட்டுருவாக்கம் செய்வதிலும் பெரும்பங்கு வகித்தன. தொடக்கத்தில் சமூகப் பேரவை, இந்தியப் பணியாளர்கள் போன்ற அமைப்புகளும், கிறித்தவ சமயப் பரப்பு நிறுவனங்களுமே சமுகச் சீர்திருத்த இயக்கங்களை துரிதப்படுத்தக் காரணங்களாய் இருந்தன. அதற்குத் தெளிவான அறிவுத்திறன் கொண்ட பல தனி நபர்களும் துணை நின்றனர்.**

14) ராஜா ராம்மோகன் ராய் எந்த ஆண்டு பிரம்ம சமாஜத்தை நிறுவினார்?

a) 1827

**b) 1828**

c) 1875

d) 1866

**விளக்கம்: பிரம்ம சமாஜம் (1828) ராஜா ராம்மோகன் ராய் பல்துறை புலமை பெற்றவராவார். அவர் 1828இல் பிரம்ம சமாஜத்தை நிறுவினார். "எங்கும் நிறைந்துள்ள, கண்டறிய முடியாத, மாற்ற முடியாத, இவ்வுலகத்தை உருவாக்கி பாதுகாக்கும் சக்தியை வணங்கி வழிபடுவதில் பிரம்ம சமாஜம் உறுதியாயிருந்தது.**

15) ராஜா ராம்மோகன் ராயின் நீண்டகாலத் திட்டம்/கள் எது/எவை?

a) இந்து மதத்தைத் தூய்மைபடுத்தல்

b) ஒரு கடவுள் வழிபாட்டைப் போதித்தல்

c) மனித கண்ணியத்திற்கு முக்கியத்துவம் தருதல்

**d) இவை அனைத்தும்**

**விளக்கம்: இந்து மதத்தைத் தூய்மைபடுத்தல், ஒரு கடவுள் வழிபாட்டைப் போதித்தல், மனித கண்ணியத்திற்கு முக்கியத்துவம் தருதல், உருவ வழிபாட்டை எதிர்த்தல், சமூகத் தீமையான உடன்கட்டை ஏறுதலை ஒழித்தல் ஆகியன அவருடைய நீண்டகாலத் திட்டங்களாகும். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றி ஓய்வு பெற்ற அவர் பாரசீகம், சமஸ்கிருதம் உள்ளிட்ட பல மொழிகளில் உரையாடக் கூடியவர்.**

16) "கைம்பெண்களை உயிரோடு எரிக்கும் பழக்கத்தை ஆதரிப்போருக்கும் எதிர்ப்போருக்குமிடையே நடைபெற்ற விவாதம்" எனத் தலைப்பிடப்பட்ட கட்டுரையை எழுதியவர்?

a) கேசவ் சந்திர சென்

b) ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

c) தேவேந்திரநாத் தாகூர்

**d) ராஜாராம்மோகன்ராய்**

**விளக்கம்: அவர் மனித நேயமற்ற சமூகப்பழக்கமான உடன்கட்டை ஏறுதலுக்கு எதிரான மனவுறுதிமிக்க போராளியாவார். 1818 இல் அவர் எழுதிய "கைம்பெண்களை உயிரோடு எரிக்கும் பழக்கத்தை ஆதரிப்போருக்கும் எதிர்ப்போருக்குமிடையே நடைபெற்ற விவாதம்" எனத் தலைப்பிடப்பட்ட கட்டுரையில் எந்த மதமும் கைம்பெண்களை உயிரோடு எரிப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை புனித நூல்களைச் சுட்டிக்காட்டி நிரூபித்தார்.**

17) சதி ஒழிப்பு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு எது?

a) 1827

b) 1828

c) 1861

**d) 1829**

**விளக்கம்: கம்பெனி 1829இல் ஒரு சட்டத்தை இயற்றி அதன்மூலம் உடன்கட்டை ஏறுதல் குற்றம் என அறிவித்ததன் மூலம் அவருடைய முயற்சிகள் வென்றன. அவருடைய சிந்தனைகளும் செயல்பாடுகளும் சமூக சீர்திருத்தங்களின் வழியாக மக்களை அரசியல் ரீதியாக உயர்வடையச் செய்வதை இலக்காகக் கொண்டிருந்தன.**

18) பிரம்மசமாஜம் பின்வரும் எதனை வெளிப்படையாகக் கண்டனம் செய்தது?

a) பலதெய்வ வழிபாடு

b) உருவ வழிபாடு

c) தெய்வ அவதாரங்கள் மீதான நம்பிக்கை

**d) இவை அனைத்தும்**

**விளக்கம்: பிரம்ம சமாஜத்தின் ஒட்டுமொத்தப் பங்களிப்பைக் கீழ்க்கண்டவாறு சுருக்கிக் கூறலாம். 1. பலதெய்வ வழிபாடு, உருவ வழிபாடு, தெய்வ அவதாரங்கள் மீதான நம்பிக்கை ஆகியவற்றை வெளிப்படையாகக் கண்டனம் செய்தது. 2. சாதிமுறை, மூடநம்பிக்கைக ள் , ஆகியவற்றைக் கண்டனம் செய்தது.**

19) பின்வருவனவற்றுள் பிரம்மசமாஜம் எதனை ஆதரித்தது?

a) குழந்தைத் திருமணம்

b) பர்தா முறை

c) உடன்கட்டை ஏறுதல்

**d) கைம்பெண் மறுமணம்**

**விளக்கம்: குழந்தைத் திருமணம், பர்தா முறை, உடன்கட்டை ஏறுதல் ஆகியவை ஒழிக்கப்பட வேண்டும் எனக் கோரியது. கைம்பெண் மறுமணத்தை ஆதரித்தது.**

20) ராஜா ராம்மோகன் ராய் எந்த நாட்டுப் புரட்சியின் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு ஐரோப்பா சென்றார்?

**a) பிரான்ஸ்**

b) ஆப்பிரிக்கா

c) அமெரிக்கா

d) இங்கிலாந்து

**விளக்கம்: பிரெஞ்சுப் புரட்சியின் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு ஐரோப்பா சென்ற ராஜா ராம்மோகன் ராய் பிரிஸ்டல் நகரில் மரணத்தைத் தழுவினார்.**

21) 1857 முதல் பிரம்மசமாஜத்தை முன்னெடுத்துச் சென்றவர்?

**a) கேசவ் சந்திர சென்**

b) தேவேந்திரநாத்தாகூர்

c) ஈஸ்வர சந்திர வித்யா சாகர்

d) ரானடே

**விளக்கம்:தக்க சமயத்தில் தேவேந்திரநாத் தாகூர் (ரவீந்திரநாத் தாகூரின் தந்தையார்) புத்துயிர் ஊட்டாமல் இருந்திருந்தால் இவ்வியக்கம் விரைவாக வீழ்ந்திருக்கும். அவருக்குப்பின் 1857 முதல் கேசவ் சந்திர சென் இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றார்.**

22) பிரம்மசமாஜம் 1865இல் எத்தனை கிளைகளைப் பெற்றிருந்தது?

a) 52

b) 45

c) 57

**d) 54**

**விளக்கம்: இவ்வமைப்பின் வலுவை 1865இல் அது பெற்றிருந்த 54 கிளைகளின் எண்ணிக்கையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். (வங்காளத்தில் 50 கிளைகள், வடமேற்கு மாகாணத்தில் 2, பஞ்சாப்பில் 1, தமிழ்நாட்டில் –1 என மொத்தம் 54 கிளைகள்)**

23) இந்திய பிரம்ம சமாஜம் யாருடைய தலைமையில் இயங்கியது?

a) கேசவ் சந்திர சென்

**b) தேவேந்திரநாத்தாகூர்**

c) ஈஸ்வர சந்திர வித்யா சாகர்

d) ரானடே

**விளக்கம்: காலப்போக்கில் பிரம்ம சமாஜம் இரண்டாகப் பிரிந்தது. அவை தேவேந்திரநாத் தாகூரின் தலைமையில் இயங்கிய 'இந்திய பிரம்ம சமாஜம்', கேசவ் சந்திர சென்னுடைய 'சதாரன் பிரம்ம சமாஜ்' என்பனவாகும்.**

24) 'பிரம்ம சமாஜ நாடகம்' எனும் தலைப்பில் ஒரு நாடகத்தை எழுதியவர்?

**a) காசி விஸ்வநாத முதலியார்**

b) பிரதாப முதலியார்

c) டம்பாச்சாரியார்

d) சிவ சுப்பிரமணியர்

**விளக்கம்: தமிழ்நாட்டில் பிரம்ம சமாஜத்தின் ஆதரவாளரான சைதை காசி விஸ்வநாத முதலியார் சமாஜத்தின் கருத்துகளை விளக்க 'பிரம்ம சமாஜ நாடகம்' எனும் தலைப்பில் ஒரு நாடகத்தை எழுதினார்.**

25) 1864இல் எந்த நோக்கத்திற்காகத் 'தத்துவபோதினி' எனும் தமிழ் இதழ் தொடங்கப்பட்டது?

a) குழந்தைத் திருமணம்

b) பர்தா முறை

c) உடன்கட்டை ஏறுதல்

**d) கைம்பெண் மறுமணம்**

**விளக்கம்: கைம்பெண் மறுமணத்திற்கு ஆதரவாக ஒரு ஆய்வுக் கட்டுரையை விஸ்வநாத முதலியார் எழுதினார். 1864இல் இதே நோக்கத்திற்காகத் 'தத்துவபோதினி' எனும் தமிழ் இதழ் தொடங்கப்பட்டது.**

26) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) பிரம்ம சமாஜம் வங்காள சமூகத்தின் வைதீகப் பிரிவினரிடமிருந்தும், இந்து தர்மசபை போன்ற அமைப்புகளிடமிருந்தும் பெரும் எதிர்ப்பைச் சந்தித்தது.

(ii) ஈஸ்வரசந்திர வித்யாசாகர் இந்து நூல்களைத் தமக்கு ஆதாரமாக கொண்டார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: பிரம்ம சமாஜம் வங்காள சமூகத்தின் வைதீகப் பிரிவினரிடமிருந்தும், இந்து தர்மசபை போன்ற அமைப்புகளிடமிருந்தும் பெரும் எதிர்ப்பைச் சந்தித்தது. இருந்தபோதிலும் ஈஸ்வரசந்திர வித்யாசாகர் போன்ற சீர்திருத்தவாதிகளும் இருந்தனர்; ஆனால் அவர் இந்து நூல்களைத் தமக்கு ஆதாரமாக கொண்டார்.**

27) யாருடைய குடும்பம் ஒரு பிரம்ம சமாஜக் குடும்பம் ஆகும்?

a) கேசவ் சந்திர சென்

**b) தேவேந்திரநாத்தாகூர்**

c) ஈஸ்வர சந்திர வித்யா சாகர்

d) ரானடே

**விளக்கம்: பிரம்ம சமாஜம் பெருமளவிலான மக்களை ஈர்க்கவில்லை எனினும், அது அறிவு ஜீவிகளின் மேல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தொடக்கத்தில் முற்போக்குக் கருத்துகளால் கவரப்பட்ட பல இளைஞர்கள் ஆர்வத்தோடு அவற்றைப் பரப்பினர். தாகூரின் குடும்பம் ஒரு பிரம்ம சமாஜக் குடும்பம். அதன் செல்வாக்கை தாகூருடைய கருத்துக்களிலும் எழுத்துக்களிலும் காணலாம்.**

28) பின்வருவனவற்றுள் பிரம்ம சமாஜத்தின் கிளை அமைப்பு எது?

**a) பிரார்த்தனை சமாஜம்**

b) இளம் இந்தியா இயக்கம்

c) ஆரிய சமாஜ்

d) சுத்தி அமைப்பு

**விளக்கம்: பிரார்த்தனை சமாஜம் (1867): பிரம்ம சமாஜத்தின் கிளை அமைப்பான பிரார்த்தனை சமாஜம் 1867இல் பம்பாயில் ஆத்மராம் பாண்டுரங் என்பவரால் நிறுவப்பட்டது.**

29) எம்.ஜி. ரானடே, ஆர்.ஜி. பண்டார்க்கர் ஆகியோர் எந்த இயக்கத்திற்கு வலிமை சேர்த்தனர்?

**a) பிரார்த்தனை சமாஜம்**

b) இளம் இந்தியா இயக்கம்

c) ஆரிய சமாஜ்

d) சுத்தி அமைப்பு

**விளக்கம்: எம்.ஜி. ரானடே, ஆர்.ஜி. பண்டார்க்கர் ஆகியோர் பிரார்த்தனை சமாஜத்தில் சேர்ந்து அமைப்புக்கு வலிமை சேர்த்தனர். பிரார்த்தனை சமாஜம் ஓர் அமைப்பு என்ற அளவில் பெரும் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை. ஆனால் அவ்வமைப்பின் உறுப்பினர்களான ரானடே, பண்டார்க்கர், கே.டி. தெலங் போன்றோர் மகாராஷ்டிராவின் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரும் தலைவர்களாவர்.**

30) மகாராஷ்டிராவைச் சேர்ந்த துறவிகளின் பக்தி மரபுகளோடு உளப்பூர்வமான தொடர்பைக் கொண்டிருந்தது எது?

**a) பிரார்த்தனை சமாஜம்**

b) இளம் இந்தியா இயக்கம்

c) ஆரிய சமாஜ்

d) சுத்தி அமைப்பு

**விளக்கம்: பிரார்த்தனை சமாஜம் பிரம்ம சமாஜத்தைப் போன்றதே என்றாலும் அது மகாராஷ்டிராவைச் சேர்ந்த துறவிகளின் பக்தி மரபுகளோடு உளப்பூர்வமான தொடர்பைக் கொண்டிருந்தது. பிரார்த்தனை சமாஜம், சமூகத்தின் கடைநிலையிலுள்ள பெண்கள், தொழிலாளர் ஆகியோருக்குக் கல்வி வழங்குவதன் மூலம் தனது பணியைத் தொடர்ந்தது.**

31) பிரார்த்தனை சமாஜம் பின்வரும் எந்தப் பணிகளில் ஆழ்ந்த கவனம் செலுத்தியது?

a) சமபந்தி விருந்து

b) சாதி மறுப்புத் திருமணம்

c) விதவை மறுமணம்

**d) இவை அனைத்தும்**

**விளக்கம்: சமபந்தி விருந்து, சாதி மறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோரின் மேம்பாடு ஆகிய சமூக சீர்திருத்தப் பணிகளில் ஆழ்ந்த கவனம் செலுத்தியது.**

32) யாருடைய வழிகாட்டுதலில் பிரார்த்தனை சமாஜம் மேற்கிந்தியப் பகுதியில் சமூக சீர்திருத்தத்தின் செயலூக்கமிக்க மையமானது?

a) கேசவ் சந்திர சென்

b) தேவேந்திரநாத்தாகூர்

c) ஈஸ்வர சந்திர வித்யா சாகர்

**d) ரானடே**

**விளக்கம்:ரானடேயின் (1852-1901) முயற்சியால் உருவாக்கப்பட்ட தேசிய சமூக மாநாடு என்னும் அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் இந்திய தேசியக் காங்கிரஸ் மாநாடு நடைபெற்று முடிந்தவுடன் கூடும். ஆழமான**

**அறிவும் கூர்மைத்திறனும் கொண்ட நீதியரசர் ரானடேயின் வழிகாட்டுதலில் பிரார்த்தனை சமாஜம் மேற்கிந்தியப் பகுதியில் சமூக சீர்திருத்தத்தின் செயலூக்கமிக்க மையமானது.**

33) தக்காணக் கல்விக் கழகம் என்னும் புகழ் பெற்ற அமைப்பைத் தீவிரமாக முன்னெடுத்துச் சென்றவர்?

a) கேசவ் சந்திர சென்

b) தேவேந்திரநாத்தாகூர்

c) ஈஸ்வர சந்திர வித்யா சாகர்

**d) ரானடே**

**விளக்கம்: ரானடே: விதவை மறுமணச் சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கியவர்களில் அவரும் ஒருவர். மேலும் தக்காணக் கல்விக் கழகம் என்னும் புகழ் பெற்ற அமைப்பைத் தீவிரமாக முன்னெடுத்துச் சென்றார். நாட்டுக்குத் தன்னலமற்றச் சேவை செய்வதற்கு எத்தகைய கல்வி அவசியமோ அக்கல்வியை இளைஞர்களுக்கு வழங்குவதை இவ்வமைப்பு நோக்கமாகக் கொண்டிருந்தது.**

34) ரானடே எந்த ஆண்டு இயற்கை எய்தினார்?

**a) 1901**

b) 1905

c) 1907

d) 1902

**விளக்கம்: ரானடே 1901இல் இயற்கை எய்திய போது சந்தரவர்க்கர் தலைமைப் பொறுப்பேற்றார்.**

35) தயானந்த சரஸ்வதி  எந்த மாநிலத்தை சேர்ந்தவர்?

a) மகாராஷ்டிரா

b) வங்காளம்

**c) குஜராத்**

d) பீகார்

**விளக்கம்: ஆரிய சமாஜம் (1875)**

**ஆரிய சமாஜத்தை உருவாக்கியவர் தயானந்த சரஸ்வதி (1824-1883) ஆவார். குஜராத் தை சேர்ந்த அவர் துறவியாகும் எண்ணத்தில் இளமையிலேயே வீட்டைவிட்டு வெளியேறினார். பதினேழு ஆண்டுகள் இந்தியா முழுவதும் சுற்றியலைந்தார்.**

36) தயானந்த சரஸ்வதி எங்கு  பிரம்மசமாஜ உறுப்பினர்களைச் சந்தித்தார்?

a) மகாராஷ்டிரா

**b) கல்கத்தா**

c) குஜராத்

d) பூனா

**விளக்கம்: 1863இல் பல ஊர்களுக்குச் சென்று தனது கருத்துக்களைப் போதித்தார். ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் சில கல்வி நிலையங்களையும் நிறுவினார். 1872இல் கல்கத்தாவில் பிரம்மசமாஜ உறுப்பினர்களைச் சந்தித்தார்.**

37) தயானந்த சரஸ்வதி 'சத்யார்த்த பிரகாஷ்' எனும் தனது முக்கிய நூலை எந்த ஆண்டு வெளியிட்டார்?

a) 1863

b) 1872

**c) 1875**

d) 1878

**விளக்கம்: 1875இல் 'சத்யார்த்த பிரகாஷ்' எனும் தனது முக்கிய நூலை வெளியிட்டார். அவருடைய கருத்தின்படி சமகாலத்து இந்து மதம் சீர்கேடு அடைந்துவிட்டது. ஆகவே அவர் புராணங்கள், பல கடவுள் வழிபாடு, உருவ வழிபாடு, பிராமண அர்ச்சகர்களின் நடவடிக்கைகள், புனிதப் யாத்திரைகள் ஆகியவற்றை நிராகரித்தார்.**

38) தயானந்த சரஸ்வதி எந்த மொழியில் சிறந்த புலமை பெற்றிருந்தார்?

**a) சமஸ்கிருதம்**

b) இந்தி

c) ஆங்கிலம்

d) பாரசீகம்

**விளக்கம்: விதவைத் திருமணத்திற்கான தடையை எதிர்த்தார். சமஸ்கிருத மொழியில் சிறந்த புலமை பெற்றிருந்த அவர் "வேதங்களை நோக்கித் திரும்புக" என அழைப்பு விடுத்தார். வேதங்களை அடிப்படையாக கொண்டு சமூகத்தை வடிவமைக்க விரும்பிய அவர் அதே சமயம் புராணங்களைப் புறக்கணித்தார்.**

39) சுவாமி தயானந்த சரஸ்வதி எந்தப்பகுதிகளில் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தார்?

a) வங்காளம்

**b) பஞ்சாப்**

c) உத்திரப்பிரதேசம்

d) மகாராஷ்டிரா

**விளக்கம்: ஏனைய சீர்திருத்தவாதிகளைப் போலவே பெண் கல்வி, கைம்பெண் திருமணம் ஆகியவற்றை ஊக்குவித்தார். சுவாமி தயானந்த சரஸ்வதி பஞ்சாப் பகுதிகளில் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தார்.**

40) காலனிய காலத்தில் மகத்தான வளர்ச்சியைப் பெற்றிருந்த ‘கத்ரி’ எனப்படும் வணிகச் சமூகம் எங்கு காணப்பட்டது?

a) வங்காளம்

**b) பஞ்சாப்**

c) உத்திரப்பிரதேசம்

d) மகாராஷ்டிரா

**விளக்கம்: அங்கிருந்த ‘கத்ரி’ எனப்படும் வணிகச் சமூகம் காலனிய காலத்தில் மகத்தான வளர்ச்சியைப் பெற்றிருந்தது. ஆனால் பஞ்சாபில் இந்து, முஸ்லீம், சீக்கியரிடையே பெருமளவில் வகுப்புவாத மோதல் நடைபெற்று வந்தது. தயானந்தரின் ‘சுத்தி’ இயக்கம் இந்துக்கள் அல்லாதவர்களை இந்துக்களாக மாற்ற முயன்று பெரும் எதிர்ப்புகளை குறிப்பாக அகமதியா இயக்கத்தின் எதிர்ப்புகளை சந்தித்தது.**

41) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஆரிய சமாஜம் ஒரு மீட்டெடுப்பு  இயக்கமாகக் கருதப்படுகிறது.

(ii) தயானந்தா ஆங்கிலோ வேதப் பள்ளிகளும் (DAV) கல்லூரிகளும் நிறுவப்பட்டதின் மூலம் தயானந்தரின் செல்வாக்கு இருபதாம் நூற்றாண்டில் தொடர்ந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: ஆரிய சமாஜம் ஒரு மீட்டெடுப்பு இயக்கமாகக் கருதப்படுகிறது. தயானந்தா ஆங்கிலோ வேதப் பள்ளிகளும் (DAV) கல்லூரிகளும் நிறுவப்பட்டதின் மூலம் தயானந்தரின் செல்வாக்கு இருபதாம் நூற்றாண்டில் தொடர்ந்தது.**

42) இராமகிருஷ்ண பரமஹம்சர் செய்து வந்த தொழில் எது?

a) தச்சர்

b) நெசவாளி

c) செருப்பு தைப்பவர்

**d) பூசாரி**

**விளக்கம்: வங்காளத்தில் இராமகிருஷ்ண பரம்ஹம்சரின் நினைவாக இராமகிருஷ்ண மிஷன் உதயமானது. இராமகிருஷ்ண பரமஹம்சர் கல்கத்தாவின் அருகேயுள்ள தட்சினேஸ்வர் எனும் ஊரிலுள்ள கோவிலின் ஏழைப் பூசாரி ஆவார்.**

43) “அனைத்து மதக் கருத்துக்களும் ஒரே இலக்கைச் சென்றடையும் பல்வேறு பாதைகள்” என்று கூறியவர்?

a) விவேகானந்தர்

b) ராஜாராம் மோகன்ராய்

c) இராமலிங்க அடிகள்

**d) ராமகிருஷ்ண பரமஹம்சர்**

**விளக்கம்: இராமகிருஷ்ண பரமஹம்சர் முறையான கல்வி கற்றவரில்லை. ஆனால் தீவிர ஆன்மீக வாழ்வை மேற்கொண்டவர். அனைத்து மதங்களிலும் இயல்பாக உள்ள உண்மைகள் மீது ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். பல்வேறு மதங்களின் நடைமுறைகளுக்கு ஏற்றவாறு சமயப் பணிகளை மேற்கொண்டு அம்மதங்கள் சார்ந்த நம்பிக்கைகளைச் சோதித்துப் பார்த்தார். அவரைப் பொருத்த அளவில் "அனைத்து மதக் கருத்துக்களும் ஒரே இலக்கைச் சென்றடையும் பல்வேறு பாதைகள்" என்பதாகும்.**

44) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) இராமகிருஷ்ணருடைய பரந்த பார்வையும், இறைநிலை சார்ந்த உள்ளுணர்வும், ஆன்மீகப் பெருவிருப்பமும் பெருவாரியான மக்களைக் கவர்ந்தன.

(ii) இராமகிருஷ்ண பரமஹம்சர் தன் கருத்துகளை கதைகள் மற்றும் வியக்கத்தக்க உவமைகள் மூலமாக விளக்கினார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: இராமகிருஷ்ணருடைய பரந்த பார்வையும், இறைநிலை சார்ந்த உள்ளுணர்வும், ஆன்மீகப் பெருவிருப்பமும் பெருவாரியான மக்களைக் கவர்ந்தன. தன் கருத்துகளை கதைகள் மற்றும் வியக்கத்தக்க உவமைகள் மூலமாக விளக்கினார். அவர்மேல் வியப்புற்ற ஒருவர் இவையனைத்தையும் 'இராமகிருஷ்ண காதாமிர்தா' எனும் தலைப்பில் தொகுத்தளித்துள்ளார்.**

45) இராமகிருஷ்ணருடைய சீடர்களுள் மிகவும் புகழ் பெற்றவர் யார்?

**a) நரேந்திரநாத் தத்தா**

b) மூல் சங்கர்

c) சாரதா தேவி

d) ரமா தேவி

**விளக்கம்: அவருடைய சீடர்களுள் மிகவும் புகழ் பெற்றவர், கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை முடித்திருந்த இளைஞர் நரேந்திரநாத் தத்தா என்பவராவார். இவரே சுவாமி விவேகானந்தர் (1863-1902) எனப் புகழடைடைந்தார்.**

46) இராமகிருஷ்ணருடைய கருத்துகளை இந்தியா மற்றும் உலகம் முழுவதும் கொண்டு சென்றவர்?

**a) நரேந்திரநாத் தத்தா**

b) மூல் சங்கர்

c) சாரதா தேவி

d) நிவேதிதா

**விளக்கம்: அவர் தன் குருவின் கருத்துகளை இந்தியா மற்றும் உலகம் முழுவதும் கொண்டு சென்றார். அவருடைய கல்வியறிவும் பேச்சாற்றலும், ஆன்மீக தோற்றமும், அவருடைய வியத்தகு ஆளுமையும் அவருக்கு நாடு முழுவதும் சீடர்களை உருவாக்கியது. அவர்களில் பலர் தேசிய இயக்கத்திலும் இணைந்தனர்.**

47) 1893இல் புகழ்பெற்ற உலகச்சமய மாநாடு எங்கு நடைபெற்றது?

**a) அமெரிக்கா**

b) ஆப்பிரிக்கா

c) ஆஸ்திரேலியா

d) ஜப்பான்

**விளக்கம்: விவேகானந்தர் 1893இல் அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடைபெற்ற புகழ்பெற்ற உலகச்சமய மாநாட்டில் பங்கேற்று அங்கு கூடியிருந்தோர் மேல் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தினார்.**

48) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) இராம கிருஷ்ண இயக்கம் பள்ளிகள், மருத்துவமனைகள், ஆதரவற்றோர்க்கான இல்லங்கள் ஆகியவற்றையும் நிறுவியது.

(ii) இராம கிருஷ்ண இயக்கம் இயற்கை பேரழிவுகளாலும் மனிதர்களால் ஏற்பட்ட பேரழிவுகளாலும் மக்கள் துயருற்றபோது அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: இராம கிருஷ்ண இயக்கம் பள்ளிகள், மருத்துவமனைகள், ஆதரவற்றோர்க்கான இல்லங்கள் ஆகியவற்றையும் நிறுவியது. இயற்கை பேரழிவுகளாலும் மனிதர்களால் ஏற்பட்ட பேரழிவுகளாலும் மக்கள் துயருற்றபோது அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியது.**

49) நவீன இந்தியாவின் விடிவெள்ளி எனக் குறிப்பிடப்படுபவர்?

a) தயானந்த சரஸ்வதி

b) ராஜா ராம் மோகன் ராய்

**c) சுவாமி விவேகானந்தர்**

d) அன்னி பெசன்ட்

**விளக்கம்: சுவாமி விவேகானந்தர் இளமை, தைரியம் ஆகியவற்றின் மறுவடிவமாவார். நவீன இந்தியாவின் விடிவெள்ளி எனக் குறிக்கப்படுகின்றார். வாலன்டைன் சிரோல் என்பாரின் வார்த்தைகளில் "தனது ஆளுமைத் திறனால் வெளிநாடுகளில் இந்தியாவின் பாரம்பரியமிக்க நாகரிகத்திற்கும் அதனுடைய புதிதாகப் பிறப்பெடுத்துள்ள தேசம் எனும் உரிமைக் கோரிக்கைக்கும் கண்கூடான அங்கீகாரத்தைப் பெற்று தந்த முதல் இந்தியர்" ஆவார்.**

50) 1875 இல் பிரம்மஞான சபை எங்கு நிறுவப்பட்டது?

a) ஜப்பான்

b) ஆப்பிரிக்கா

c) ஆஸ்திரேலியா

**d) அமெரிக்கா**

**விளக்கம்:பிரம்மஞான சபை இந்திய அறிவுஜீவிகள், தாங்கள் மேற்கத்திய அறிவொளி மற்றும் பகுத்தறிவு இயக்கங்களால் விழிப்புணர்வு அடைந்ததாக உணர்ந்த நேரத்தில் மேலை நாடுகளின் சிந்தனையில் ஒரு சோர்வு ஏற்பட்டு அது ஆன்மவிடுதலைக்கு கிழக்கு நாடுகளை அணுகியது. இச்சிந்தனைப் போக்கிலிருந்தே பிரம்ம ஞான சபை உதயமானது. இவ்வமைப்பு 1875இல் பிளாவட்ஸ்கி அம்மையார், கர்னல் ஆல்காட் ஆகியோரால் அமெரிக்காவில் நிறுவப்பட்டது.**

51) பிரம்மஞான சபை யின் தலைமையிடம் எந்த ஆண்டு அடையாரில் அமைக்கப்பட்டது?

a) 1879

**b) 1886**

c) 1875

d) 1889

**விளக்கம்: 1879இல் இந்தியா வந்த அவர்கள் 1886இல் அமைப்பின் தலைமையிடத்தைச் சென்னை அடையாரில் அமைத்தனர்.**

52) இந்தியாவில் பௌத்தம் மீண்டும் உயிர் பெற்றதில் முக்கியப் பங்கு வகித்த அமைப்பு எது?

a) சத்ய சோதக் சமாஜம்

b) இராம கிருஷ்ண இயக்கம்

c) **பிரம்மஞான சபை**

d) பிராமணரல்லாதோர் இயக்கம்

**விளக்கம்: இந்துப் பாரம்பரியத்தை மேற்கத்திய அறிவுஜீவிகள் ஒத்துக்கொண்டதில் அவர்கள் பெருமை கொண்டனர். தென்னிந்தியாவின் பல பகுதிகளில் பிரம்மஞான சபையின் கிளைகள் உருவாயின. பல**

**முரண்பாடுகளுக்கு உள்ளானாலும் இவ்வமைப்பு இந்தியாவில் பௌத்தம் மீண்டும் உயிர் பெற்றதில் முக்கியப் பங்கு வகித்தது.**

53) அயோத்திதாச பண்டிதர் யாருடன் கொண்ட தொடர்பின் காரணமாக நவீன பௌத்தத்திற்கு அறிமுகமானார்?

a) அன்னி பெசன்ட்

**b) ஹென்றி ஆல்காட்**

c) வாலன்டைன் சிரோல்

d) சுவாமி விவேகானந்தர்

**விளக்கம்: முற்போக்குச் சிந்தனையாளரான அயோத்திதாச பண்டிதர், ஹென்றி ஆல்காட்டுடன் கொண்ட தொடர்பின் காரணமாக நவீன பௌத்தத்திற்கு அறிமுகமானார்.**

54) ஒடுக்கப்பட்ட சமூகங்களை அணிதிரட்டி அவர்களிடம் தங்கள் கொள்கைகளை விளக்கிய மிக முக்கியமான இயக்கம்?

a) பிரம்மஞான சபை

b) ஆரிய சமாஜ்

**c) சத்ய சோதக் சமாஜம்**

d) பிரார்த்தன சமாஜ்

**விளக்கம்: சத்யசோதக் சமாஜம் (1873): இதுவரை விவாதிக்கப்பட்ட இயக்கங்கள் பெரும்பாலும் மேல்சாதியாகக் கருதப்பட்ட சமூகங்களின் மேல் அதிக கவனம் செலுத்தின. ஆனால் சில குறிப்பிட்ட இயக்கங்கள் ஒடுக்கப்பட்ட சமூகங்களை அணிதிரட்டி அவர்களிடம் தங்கள் கொள்கைகளை விளக்கின. அவற்றுள் மிக முக்கியமான இயக்கம் ஜோதிபா பூலேயின் சத்ய சோதக் சமாஜமாகும்.**

55) ஜோதிபா பூலே எந்த சமூகத்தைச் சேர்ந்தவராவார்?

a) தெரு பெருக்குவோர்

**b) தோட்ட வேலை செய்வோர்**

c) மர வேலை செய்வோர்

d) கள் இறக்குவதைத் தொழிலாகக் கொண் டோர்

**விளக்கம்: 1827இல் பிறந்த ஜோதிபா பூலே மாலி (தோட்ட வேலை செய்வோர்) சமூகத்தைச் சேர்ந்தவராவார். தொடக்கக் கல்வியைக் கிறித்தவ சமய நிறுவனப் பள்ளியில் கற்ற அவர் இடையில் கல்வியைத் தொடர முடியாமல் நின்றுவிட்டார்.**

56) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஜோதிபா பூலேமேல் சாதியினரின் அடக்குமுறைக்கு எதிராக வாழ்நாள் முழுவதுமான நீண்ட போராட்டத்தை மேற்கொண்டார்.

(ii) வேதங்கள், மனுசங்கிதை, புராணங்கள், புத்தர், தீர்த்தங்கரர் ஆகியோரின் கருத்துகள், இடைக்கால பக்தி இயக்கத்தைச் சேர்ந்த சமயப் பெரியோர்கள் என மிக விரிவான வாசிப்பை மேற்கொண்டார் .

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: ஜோதிபா பூலேமேல் சாதியினரின் அடக்குமுறைக்கு எதிராக வாழ்நாள் முழுவதுமான நீண்ட போராட்டத்தை மேற்கொண்டார். உண்மையை அறிந்துகொள்ள வேண்டுமென்ற தாகத்தினால் வேதங்கள், மனுசங்கிதை, புராணங்கள், புத்தர், தீர்த்தங்கரர் ஆகியோரின் கருத்துகள், இடைக்கால பக்தி இயக்கத்தைச் சேர்ந்த சமயப் பெரியோர்கள் என மிக விரிவான வாசிப்பை மேற்கொண்டார் .**

57) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஜோதிபா பூலே மேற்கத்திய சிந்தனைகளோடும் கிறித்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களோடும் தன்னைப் பரிச்சயப்படுத்திக் கொண்டார்.

(ii) பூலே ஒட்டுமொத்தப் பண்பாட்டையும் மரபுகளையும், பகுத்தறிவு மற்றும் சமத்துவம் ஆகிய இரண்டு அளவுகோல்களைக்கொண்டு சீர் தூக்கிப் பார்த்தார்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: மேற்கத்திய சிந்தனைகளோடும் கிறித்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களோடும் தன்னைப் பரிச்சயப்படுத்திக் கொண்டார். ஒட்டுமொத்தப் பண்பாட்டையும் மரபுகளையும், பகுத்தறிவு மற்றும் சமத்துவம் ஆகிய இரண்டு அளவுகோல்களைக்கொண்டு சீர் தூக்கிப் பார்த்தார்.**

58) உண்மை தேடும் சங்கம் என்ற அமைப்பு எந்த ஆண்டில் நிறுவபட்டது?

a) 1872

**b) 1873**

c) 1875

d) 1886

**விளக்கம்: அரசியல், சமூகம், பொருளாதாரம், மதம் ஆகியவை தொடர்பான பிரச்சனைகளில் அவர் முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்தார். சாதி முறையானது பிராமணர் அல்லாதோரின் உணர்வுகளைத் தட்டி எழுப்பி, பல நூற்றாண்டு காலமாக நிலவி வரும் சமத்துவமின்மை, சமூகத் தாழ்வு நிலை ஆகியவற்றுக்கு எதிராக அவர்களைப் புரட்சி செய்ய ஒருங்கிணைந்து போராட்டங்களை**

**மேற்கொள்ளச் செய்தார். இந்த லட்சியங்களை அடைவதற்காக சத்ய சோதக் சமாஜம் (உண்மை தேடும் சங்கம்) என்ற அமைப்பை 1873இல் நிறுவினார்.**

59) பின்வருவனவற்றுள் ஜோதிபா பூலே எழுதிய நூல் எது?

a) சாதி ஒழிப்பு

**b) அடிமைத்தனம்**

c) பெண் ஏன் அடிமை ஆனாள்

d) சமய மலர்ச்சி

**விளக்கம்: மக்களின் கல்வியே விடுதலைக்கான புரட்சிகரமான காரணியாக இருக்கும் என்று கூறினார். இவர் எழுதிய முக்கிய நூல் 'குலாம்கிரி' (அடிமைத்தனம்) என்பதாகும்.**

60) பெண்களின் விடுதலை என்பது சமூகத்தின் ஏனைய வர்க்கங்களின் விடுதலையோடு இணைந்துள்ளது என்று வாதிட்டவர்?

a) பண்டித ரமாபாய்

b) ராஜா ராம் மோகன் ராய்

c) பெரியார்

**d) ஜோதிபா பூலே**

**விளக்கம்: சமூகத்தில் பெண்களும் வறுமையில் உழல்வோரும் நசுக்கப்பட்டோருமே மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். பெண்களின் விடுதலை என்பது சமூகத்தின் ஏனைய வர்க்கங்களின் விடுதலையோடு இணைந்துள்ளது என்று வாதிட்டார்.**

61) தொடக்கக் கல்வியை எந்த வர்க்கங்களைச் சேர்ந்த ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்குமாறு ஆங்கில அரசாங்கத்தைப் பூலே வற்புறுத்தினார்?

**a) விவசாயம்**

b) வணிகர்

c) செல்வந்தர்

d) ஆரிய வர்க்கம்

**விளக்கம்: பூலே தன்னுடைய கருத்துக்களை உண்மையான போராட்டங்களாக மாற்ற விரும்பினார். மக்களுக்குக் கட்டாய தொடக்கக் கல்வியை விவசாய வர்க்கங்களைச் சேர்ந்த ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்குமாறு ஆங்கில அரசாங்கத்தைப் பூலே வற்புறுத்தினார்.**

62) பிற்காலத்தில் பிராமணரல்லாதோர் இயக்கம் பூலேவின் பணிகளால் எங்கு தோன்றியது?

**a) மகாராஷ்டிரா**

b) தமிழ்நாடு

c) குஜராத்

d) பஞ்சாப்

**விளக்கம்: தீண்டத்தகாதவர்களுக்காக ஒரு பள்ளியையும் கைம்பெண்களின் குழந்தைகளுக்காக ஒரு இல்லத்தையும் நிறுவினார். பிற்காலத்தில் மகாராஷ்டிராவில் பிராமணரல்லாதோர் இயக்கம் இவருடைய பணிகளால் தோன்றியது.**

63) பின்வருபவர்களுள் சரஸ்வத் எனும் பட்டம் பெற்ற பெண்மணி யார்?

**a) பண்டித ரமாபாய்**

b) அன்னிபெசன்ட்

c) சாரதா தேவி

d) நிவேதிதா

**விளக்கம்: பண்டித ரமாபாய் (1858-1922) இந்தியாவில் பெண் விடுதலைக்காகப் போராடிய முன்னணித் தலைவர்களில் ஒருவராவார். சிறந்த கல்விப் பின்னணி கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். சமஸ்கிருத மொழியில் ஆழமான புலமை பெற்றிருந்ததால் அவருக்கு 'பண்டித்', 'சரஸ்வத்' எனும் பட்டங்கள் வழங்கப்பட்டன.**

64) பண்டித ரமாபாய் எந்த ஆண்டு கல்கத்தா சென்றார்?

a) 1872

b) 1873

c) 1886

**d) 1878**

**விளக்கம்: பெற்றோரின் மரணத்திற்குப் பின்னர் ரமாபாயும் அவருடைய சகோதரரும் நாட்டின் பல பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டனர். 1878இல் அவர்கள் கல்கத்தா சென்றனர். இரண்டாண்டிற்குப் பின்னர் அவருடைய சகோதரரும் காலமானார்.**

65) பண்டித ரமாபாய் எந்த மாநிலத்தை சேர்ந்தவரை திருமணம் செய்துகொண்டார்?

a) மகாராஷ்டிரா

b) தமிழ்நாடு

**c) வங்காளம்**

d) ஆந்திரா

**விளக்கம்: 1880இல் சமூகத்தின் கீழ்மட்டக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வங்காளியைத் திருமணம் செய்து கொண்டார். அக்காலத்திலேயே வேற்று சாதியைச் சேர்ந்த வேற்று மொழி பேசக்கூடிய ஒருவரை திருமணம் செய்துகொள்ளும் நெஞ்சுரம் அவருக்கிருந்தது.**

66) பண்டித ரமாபாய் யாருடைய உதவியுடன் ஆரிய மகிளா சமாஜ் எனும் அமைப்பை நிறுவினார்?

a) ரானடே

b) பண்டார்க்கர்

c) தயானந்த சரஸ்வதி

**d) a) மற்றும் b)**

**விளக்கம்: இரண்டு வருடங்களுக்குப் பின்னர் கணவரும் இயற்கை எய்தவே, புனே திரும்பிய அவர் ரானடே, பண்டார்க்கர் ஆகிய தலைவர்களின் உதவியுடன் ஆரிய மகிளா சமாஜ் எனும் அமைப்பை நிறுவினார். 1882இல் 300 பெண்கள் இவ்வமைப்பில் கல்வி கற்றனர்.**

67) பண்டித ரமாபாய் தொடங்கிய வீடற்றவர்களுக்கான இல்லம் எது?

**a) சாரதா சதன்**

b) முக்தி சதன்

c) ஆரிய மகிளா சமாஜ்

d) கேத்கான்

**விளக்கம்: ரானடே, பண்டார்க்கர் ஆகியோரின் உதவியோடு கைவிடப்பட்ட விதவைகளுக்காக 'சாரதா சதன்' (வீடற்றவர்களுக்கான இல்லம்) எனும் அமைப்பைத் தொடங்கினார். வெகு விரைவிலேயே இந்து பெண்களைக் கிறித்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்கிறார் எனக் குற்றம் சாட்டப்பட்டதால் தனது செயல்பாடுகளைப் புனேவுக்கு அருகேயுள்ள கேத்கான் எனும் இடத்திற்கு மாற்றினார்.**

68) பண்டித ரமாபாய் முக்தி சதன் எனும் அமைப்பை எங்கு நிறுவினார்?

a) வங்காளம்

b) புனே

c) புரந்தர்

d) **கேத்கான்**

**விளக்கம்: கேத்கான் எனும் இடத்தில் அங்கு 'முக்தி சதன்' (சுதந்திர இல்லம்) எனும் அமைப்பை நிறுவினார். அந்நிறுவனத்தில் 2000 பெண்களும்குழந்தைகளும் தங்கியிருந்தனர். அவர்களை சுயசார்புடையவர்களாக மாற்றுவதற்காக தொழிற்பயிற்சி வழங்கப்பட்டது.**

69) ஸ்ரீ நாராயண குரு எந்த சமூக இயக்கத்தின் ஈட்டி முனையாக விளங்கினார்?

a) தெரு பெருக்குவோர்

b) தோட்ட வேலை செய்வோர்

c) மர வேலை செய்வோர்

**d) கள் இறக்குவதைத் தொழிலாகக் கொண் டோர்**

**விளக்கம்: கேரளத்தை மையமாகக் கொண்ட இந்த, ஸ்ரீ நாராயண குரு தர்ம பரிபாலன யோகம் உயர் சாதியினருக்கும் தாழ்த்தப்பட்ட வ ர்க்கத்தா ரு க் குமிடையே ஏற்பட்ட முரண்பாடுகளிலிருந்து**

**தோன்றியது. இவ்வியக்கத்தை தோற்றுவித்த ஸ்ரீநாராயணகுரு, கள் இறக்குவதைத் தொழிலாகக் கொண்ட கேரளத்து ஈழவ சமூக இயக்கத்தின் ஈட்டி முனையாக விளங்கினார்.**

70) ஸ்ரீநாராயண குரு தர்மபரிபாலன யோகம்" எனும் அமைப்பு எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

a) 1900

b) 1899

c) 1908

**d) 1902**

**விளக்கம்:ஈழவர்கள் கேரள மக்கள் தொகையில் தனிப் பெரும்பான்மையாக 26 விழுக்காடு உள்ளனர். ஸ்ரீநாராயண குரு 1902இல் "ஸ்ரீநாராயண குரு தர்மபரிபாலன யோகம்" (Sri Narayanaguru Dharma Paripalana Yogam (SNDP)) எனும் அமைப்பை நிறுவினார்.**

71) ஸ்ரீநாராயண குரு தர்மபரிபாலன யோகம்பின்வரும் எந்த பிரச்சனைகளைக் கைகளில் எடுத்தது?

a) பொதுப்பள்ளிகளில் சேர்வதற்கான உரிமை

b) அரசுப் பணிகளில் அமர்த்தப்படுதல்

c) அரசியல் பிரதிநிதித்துவம்

**d) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: ஸ்ரீநாராயண குரு தர்மபரிபாலன யோகம்**

**i) பொதுப்பள்ளிகளில் சேர்வதற்கான உரிமை ii) அரசுப் பணிகளில் அமர்த்தப்படுதல் iii) சாலைகளைப் பயன்படுத்துவதற்கான, கோவில்களுக்குள் செல்வதற்கான உரிமை iv) அரசியல் பிரதிநிதித்துவம் போன்ற பிரச்சனைகளைக் கைகளில் எடுத்தது.**

72) ஸ்ரீநாராயண குரு தர்மபரிபாலன யோகம் கொணர்ந்த கூட்டமைப்பு மாற்றங்கள் எவை?

a) சமூகத்தில் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு மாறுதல்

b) பாரம்பரியமான அதிகார விநியோக முறையில் மாற்றம்

c) பிற்படுத்தப்பட்ட வர்க்கங்களின் கூட்டமைப்புகளை ஒருங்கிணைத்துப் பெருவடிவிலான சம்மேளனமாக மாற்றுதல்

**d) மேற்கண்ட அனைத்தும்**

**விளக்கம்: இவ்வியக்கம் சமூகத்தில் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு மாறுதல், பாரம்பரியமான அதிகார விநியோக முறையில் மாற்றம், பிற்படுத்தப்பட்ட வர்க்கங்களின் கூட்டமைப்புகளை ஒருங்கிணைத்துப் பெருவடிவிலான சம்மேளனமாக மாற்றுதல் போன்ற கூட்டமைப்பு மாற்றங்களைக் கொணர்ந்தது.**

73) பின்வருபவர்களுள் ஸ்ரீநாராயண குரு தர்மபரிபாலன யோக அமைப்பை சேர்ந்தோர் யாவர்?

**a) கவிஞர் குமரன்**

b) எம். சி. ராஜா

c) இரட்டைமலை சீனுவாசன்

d) சிங்கார வேலர்

**விளக்கம்: கோவில்களுக்குள் ஈழவர்கள நுழைவதற்கிருந்த தடைகளுக்கு எதிராக ஸ்ரீநாராயண குரு புதிய கோவில்களை நிறுவியதோடு ஈழவ சமூகம் தன்னைத்தானே நவீனப்படுத்திக்கொள்ளும் அளவுக்கு சக்தி கொண்டதாக மாற்றினார். கவிஞர் குமரன் ஆசான் டாக்டர் பல்பு, சகோதரன் ஐயப்பன் போன்ற மகத்தான ஆளுமைகள் இவ்வியக்கத்திலிருந்து தோன்றி, கேரளச் சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தினர்.**

74) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஸ்ரீநாராயண குரு கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில் ஈழவர்கள் நுழைவதற்கான தடைகளுக்கு எதிராகப் போராட்டங்களை ஏற்பாடு செய்தார்.

(ii) அவை எதிர்கால கோவில் நுழைவு இயக்கங்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தன.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: வைக்கம் சத்யாகிரகத்தில் நேரடியாகப் பங்கு பெறாவிட்டாலும், கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில் ஈழவர்கள் நுழைவதற்கான தடைகளுக்கு எதிராகப் போராட்டங்களை ஏற்பாடு செய்தார். அவை எதிர்கால கோவில் நுழைவு இயக்கங்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தன.**

75) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1857 பெருங்கிளர்ச்சியும், அது ஆங்கிலேயரால் கொடூரமாக அடக்கப்பட்டதும் தெற்காசிய முஸ்லிம்களின் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தின.

(ii) முஸ்லீம்கள் கல்வியிலும் அரசு வேலை வாய்ப்புகளிலும் பின்தங்கியிருந்தனர்

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: 1857 பெருங்கிளர்ச்சியும், அது ஆங்கிலேயரால் கொடூரமாக அடக்கப்பட்டதும் தெற்காசிய முஸ்லிம்களின் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தின. 1857 எழுச்சிக்கு முஸ்லீம்களே காரணம் என்று ஆங்கிலேயர் சந்தேகித்த நிலையில், முஸ்லீம்களும் காலனிய நவீனத்துவம் வழங்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளாமல் வீடுகளுக்குள்ளேயே சுருங்கியிருந்தனர். இதன் விளைவாக முஸ்லீம்கள்**

**கல்வியிலும் அரசு வேலை வாய்ப்புகளிலும் பின்தங்கியிருந்தனர். இச்சூழலில் ஒரு சில பதிற்றாண்டுகளுக்குப் பின்னர் முஸ்லீம்களுக்கிடையே சில சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.**

76) அலிகர் இயக்கம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

**a) 1875**

b) 1872

c) 1878

d) 1902

**விளக்கம்: அலிகர் இயக்கம் (1875) அலிகர் இயக்கம் 1875இல் சையது அகமது கானால் தொடங்கப்பட்டது. மேற்கத்திய அறிவியல் கல்விக்கும் குரானின் போதனைகளுக்குமிடையே ஒத்திசைவை ஏற்படுத்த அவர் விரும்பினார்.**

77) சையது அகமது கானின் முற்போக்கான சமூகக் கருத்துக்கள் அவருடைய எந்த பத்திரிகையின் மூலம் பரப்பப்பட்டது?

**a) தத்கிப்-ஒல்-அக்லுக்**

b) சவுத் இந்தியன் மெயில்

c) மெட்ராஸ் ஸ்டாண்டார்ட்

d) குலாம்கிரி

**விளக்கம்: சையது அகமது கா னின் முற்போக்கான சமூகக் கருத்துக்கள் அவருடைய பத்திரிகையான தத்கிப்-ஒல்-அக்லுக் (பழக்க வழக்கங்களையும் ஒழுக்க நெறிகளையும் மேம்படுத்துதல்) மூலம் பரப்பப்பட்டது.**

78) பின்வருவனவற்றுள் அலிகர் இயக்கத்தின் கொள்கைகளைத் தேர்ந்தெடு?

(i) முஸ்லீம்கள் இஸ்லாமின் மேல் கொண்டிருக்கும் பற்றினைப் பலவீனப்படுத்தாமல் நவீனக் கல்வியை அவர்களிடையே பரப்புதல்.

(ii) பர்தா முறை, பலதார மணம், கைம்பெண் மறுமணம், விவாகரத்து போன்றவற்றோடு தொடர்புடைய சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்வது

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: அலிகர் இயக்கத்தின் கொள்கைகள் (i) முஸ்லீம்கள் இஸ்லாமின் மேல் கொண்டிருக்கும் பற்றினைப் பலவீனப்படுத்தாமல் நவீனக் கல்வியை அவர்களிடையே பரப்புதல். (ii) பர்தா முறை,**

**பலதார மணம், கைம்பெண் மறுமணம், விவாகரத்து போன்றவற்றோடு தொடர்புடைய சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்வது போன்ற கொள்கைகளைக் கொண்டிருந்தது.**

79) அறிவியல் கழகம் எனும் அமைப்பு எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது?

**a) 1864**

b) 1865

c) 1866

d) 1886

**விளக்கம்: சையது அகமத் கானின் கல்வி குறித்த திட்டம் தொடக்கத்திலிருந்தே ஆங்கில வழிக் கல்வியின் சாதக அம்சங்களை வலியுறுத்திக் கூறியது. இயற்பியல் அறிவியல் நூல்களை உருது மொழியில் மொழியாக்கம் செய்வதன் மூலமும் இருமொழிப் பத்திரிகை ஒன்றை நடத்துவதன் மூலமும் மேற்கத்திய அறிவியலை அறிமுகம் செய்வதற்காக 1864இல் அவர் அறிவியல் கழகம் எனும் அமைப்பை ஏற்படுத்தினார்.**

80) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) சையது அகமது கான் 1868 இல் காஜிப்பூரில் நவீனப் பள்ளியொன்றை நிறுவினார்

(ii) 1864இல் முஸ்லீம் மக்களிடையே நவீனக் கல்வியைத் தொடங்குவதற்காகப் பல மாவட்டங்களில் கல்விக் குழுக்கள் அமைக்கப்படுவதை ஊக்கப்படுத்தினார்.

a) (i) சரி

b) (ii) சரி

c) இரண்டும் சரி

**d) இரண்டும் தவறு**

**விளக்கம்: 1864 இல் காஜிப்பூரில் நவீனப் பள்ளியொன்றை நிறுவினார். 1868இல் முஸ்லீம் மக்களிடையே நவீனக் கல்வியைத் தொடங்குவதற்காகப் பல மாவட்டங்களில் கல்விக் குழுக்கள் அமைக்கப்படுவதை ஊக்கப்படுத்தினார்.**

81) முஸ்லீம்களிடையே ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதற்காக ஒரு நவீன முகமதியப் பள்ளியை தொடங்கினார்.

**a) அலிகர்**

b) புனே

c) கல்கத்தா

d) கேத்கான்

**விளக்கம்: 1869-1870இல் அவர் ஐரோப்பா சென்றபோது இந்திய முஸ்லீம்களுக்காக ஒரு மாபெரும் கல்வி நிறுவனம் என்ற தனது வாழ்நாள் பணிக்கான திட்டத்தை உருவாக்கினார். முஸ்லீம்களிடையே**

**ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதற்காக 1875இல் அலிகரில் ஒரு நவீன முகமதியப் பள்ளியை தொடங்கினார்.**

82) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) முகமதியப் பள்ளி 1877 இல் முகமதியன் ஆங்கிலோ-ஓரியண்டல் கல்லூரியாக வளர்ச்சிபெற்றது.

(ii) இதுவே முஸ்லிம் அரசியல் தலைவர்களையும் அறிவுஜீவிகளையும் உருவாக்கும் மையமாகத் திகழ்ந்தது.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: முகமதியப் பள்ளி 1877இல் முகமதியன் ஆங்கிலோ-ஓரியண்டல் கல்லூரியாக வளர்ச்சிபெற்றது. அவருடைய மறைவிற்குப் பின்னர் இக்கல்லூரி ஒரு பல்கலைக்கழகமாக வளர்ந்தது. இதுவே முஸ்லிம் அரசியல் தலைவர்களையும் அறிவுஜீவிகளையும் உருவாக்கும் மையமாகத் திகழ்ந்தது.**

83) சையது அகமது கான் ஆங்கிலேய கீழை தேயவிய கல்வி மாநாட்டை எந்த ஆண்டு தொடங்கினார்?

a) 1882

b) 1884

**c) 1886**

d) 1885

**விளக்கம்: இந்திய முஸ்லீம்களிடையே தாராளவாதக் கருத்துக்களைப் பரப்புவதற்காக 1886இல் சையது அகமது கான் ஆங்கிலேய கீழை தேயவிய கல்வி மாநாட்டை (Anglo-oriental Educational Conference) தொடங்கினார். சமயச் சட்டங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதை அவர் எதிர்த்தார்.**

84) பகுத்தறிவுச் சிந்தனையின் வெளிச்சத்தில் குரானில் கூறப்பட்டுள்ள கருத்துகளுக்குப் புதிய விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டும் என்று கூறியவர்?

**a) சையது அகமது கான்**

b) மிர்சா குலாம் அகமது

c) சலீமுல்லா கான்

d) சாதத் துல்லா கான்

**விளக்கம்: மாறிவரும் காலச் சூழலுக்கேற்றவாறு பகுத்தறிவுச் சிந்தனையின் வெளிச்சத்தில் குரானில் கூறப்பட்டுள்ள கருத்துகளுக்குப் புதிய விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டும் என்றார். இந்திய முஸ்லீம் மதத்தை தாராளமாக்கி, புதிய சிந்தனைகளுக்கும் விளக்கங்களுக்கும் ஏற்புடையதாய் மாற்றும்**

**முயற்சியை மேற்கொண்டார். இம்முயற்சியில் வைதீக இறையியலாளர்களின் தீவிரத் தாக்குதல்களை அவர் உடனடியாக எதிர்கொள்ள நேர்ந்தது.**

85) குரானில் சொல்லப்பட்டுள்ள உண்மையான கொள்கைகளுக்கு திரும்ப வேண்டும் என்று கூறியவர் யார்?

**a) சையது அகமது கான்**

b) பீர்பால் சஹானி

c) சலீமுல்லா கான்

d) சாதத் துல்லா கான்

**விளக்கம்: அகமதியா இயக்கம் (1889) 1889இல் மிர்சா குலாம் அகமது (1835-1908) என்பவரால் உருவாக்கப்பட்ட இவ்வியக்கம்ஒரு மாறுபட்ட போக்கை ஏற்படுத்தியது. குரானில் சொல்லப்பட்டுள்ள உண்மையான கொள்கைகளுக்கு திரும்ப வேண்டும் என்று கூறிய அவர் தன்னை ஒரு தீர்க்கதரிசி எனக் கூறி சர்ச்சையை ஏற்படுத்தினார். அவரது கூற்று மதத்திற்கு எதிரானது என மைய நீரோட்ட இஸ்லாமியர் கருதினர். ஆனாலும் பலர் அவருடைய கொள்கைக்கு மாறினர்.**

86) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) மிர்சா குலாம் அகமது டைய முக்கியப் பணி ஆரிய சமாஜமும், கிறித்தவ சமயப் பரப்பாளர்களும் இஸ்லாமுக்கு எதிராக வைத்த விவாதங்களை எதிர் கொண்டு மறுத்ததாகும்.

(ii) அகமதியா இயக்கம் பலதாரமணம், பெண்கள் முகத்திரை அணிவது போன்றவற்றையும், விவாகரத்தைப் பொறுத்தமட்டில் பழமையான விதிகளையும் பின்பற்றினர்.

a) (i) சரி

b) (ii) சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: மிர்சா குலாம் அகமது டைய முக்கியப் பணி ஆரிய சமாஜமும், கிறித்தவ சமயப் பரப்பாளர்களும் இஸ்லாமுக்கு எதிராக வைத்த விவாதங்களை எதிர் கொண்டு மறுத்ததாகும். சமூக நெறிமுறைகளில் அகமதியா இயக்கம் பழமைவாதக் கண்ணோட்டதுடனே பலதாரமணம், பெண்கள் முகத்திரை அணிவது போன்றவற்றையும், விவாகரத்தைப் பொறுத்தமட்டில் பழமையான விதிகளையும் பின்பற்றினர்.**

87) பின்வருவனவற்றுள் தியோபந்த் இயக்கத்தின் நோக்கம் எது/எவை?

(i) ஒன்று குரானின் தூய்மையான கருத்துக்களையும் ஹதீஸ் எனப்படும் மரபுகளையும் பரப்புரை செய்தல்.

(ii) அந்நிய ஆட்சியாளர்களுக்கெதிராக ஜிகாத் (புனிதப்போர்) எனும் உத்வேகத்தை உயிரோட்டமுடையதாக வைத்திருப்பது.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: தியோபந்த் இயக்கம் (1866): தியோபந்த் இயக்கம் முஸ்லீம் கல்வியாளர்களில் வைதீகப் பிரிவைச் சார்ந்தவர்களால் மீட்டெடுப்பு இயக்கமாக இரு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டது. ஒன்று குரானின் தூய்மையான கருத்துக்களையும் ஹதீஸ் எனப்படும் மரபுகளையும் பரப்புரை செய்தல். மற்றொன்று அந்நிய ஆட்சியாளர்களுக்கெதிராக ஜிகாத் (புனிதப்போர்) எனும் உத்வேகத்தை உயிரோட்டமுடையதாக வைத்திருப்பது.**

88) முஸ்லீம் சமூகத்திற்கான சமயத் தலைவர்களுக்குப் பயிற்சி வழங்கும் அமைப்பு எங்கு உருவாக்கப்பட்டது?

a) அலிகர்

b) புனே

**c) தியோபந்த்**

d) கேத்கான்

**விளக்கம்: இவ்வியக்கம் நிறுவன வடிவம் பெற்று சரண்பூருக்கு அருகேயுள்ள தியோபந்த் என்னுமிடத்தில் முகமது காசிம் நாநோதவி (1833- 1877), ரஷித் அகமத் கங்கோரி (1828-1905) ஆகியோரால் முஸ்லீம் சமூகத்திற்கான சமயத் தலைவர்களுக்குப் பயிற்சி வழங்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டது.**

89) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) தியோபந்த் இயக்கம் இஸ்லாமிய சமூகத்தாரிடையே சமயப் புத்துயிர்ப்பை ஏற்படுத்தல் என்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

(ii) தியோபந்தில் கொடுக்கப்பட்ட குறிப்பாணைகள் செவ்வியல் இஸ்லாமிய மரபுகளைப் பின்பற்ற வேண்டும் என்பதே.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: அலிகர் இயக்கத்தின் நோக்கங்களான மேலைக் கல்வியின் மூலம் முஸ்லீம்களின் நலனை மேம்படுத்துதல், ஆங்கிலேய ஆட்சியை ஆதரித்தல் ஆகியவற்றிற்கு எதிராக இஸ்லாமிய சமூகத்தாரிடையே சமயப் புத்துயிர்ப்பை ஏற்படுத்தல் என்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.**

**தியோபந்தில் கொடுக்கப்பட்ட குறிப்பாணைகள் செவ்வியல் இஸ்லாமிய மரபுகளைப் பின்பற்ற வேண்டும் என்பதே.**

90) தியோபந்த்தில் இறையியல் கல்லூரி எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

**a) 1867**

b) 1868

c) 1869

d) 1870

**விளக்கம்: வாலி அல்லா சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்த இறையியலாளர்களால் 1867இல் தியோபந்த்தில் இறையியல் கல்லூரி ஒன்றுநிறுவப்பட்டது. அவர்களுள் மிக முக்கியமானவர் முகமது காசிம் நாநோதவி ஆவார். கிறித்தவ சமயப் பரப்பு நிறுவனங்களும் ஆரிய சமாஜமும் முன்வைத்த வாதங்களுக்கு எதிர் வாதங்கள் வைப்பதில் இவர் முக்கியப் பங்கு வகித்தார்.**

91) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) இறையியல் கல்லூரியின் மிக முக்கியமான நோக்கம் பழமைவாதிகளுக்கு இடைத்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த முஸ்லீம்களுக்கும் இறை யியலாளர்களுக் கும் இடையே தொடர்பை ஏற்படுத்துவது

(ii) ஒரு சமயப் பல்கலைக்கழகமாக தியோபந்த், முஸ்லீம் இந்தியாவில் மட்டுமல்லாமல் முஸ்லீம் உலகத்திற்கே பெருமதிப்புமிக்க நிறுவனமாயிற்று.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: இவ்விறையியல் கல்லூரியின் மிக முக்கியமான நோக்கம் பழமைவாதிகளுக்கு இடைத்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த முஸ்லீம்களுக்கும் இறை யியலாளர்களுக் கும் இடையே தொடர்பை ஏற்படுத்துவது, சமய, இறையியலை மீள்வாசிப்பு செய்ய வைப்பது என்பனவாகும். ஒரு சமயப் பல்கலைக்கழகமாக தியோபந்த், முஸ்லீம் இந்தியாவில் மட்டுமல்லாமல் முஸ்லீம் உலகத்திற்கே பெருமதிப்புமிக்க நிறுவனமாயிற்று.**

92) நட்வத்-அல்- உலாமா குறித்த பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) நவீனகாலத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுத்த இவ்வியக்கம் 1894இல் லக்னோவில் சிப்லி நுமானி எனும் வரலாற்று ஆசிரியராலும் வேறுசில அறிஞர்களாளும் உருவாக்கப்பட்டது.

(ii) இறைமறுப்புக் கொள்கை, லோகாயதவாதம் ஆகியவற்றை எதிர்கொள்ள அறிவார்ந்த முறையில் சமயத்திற்கு விளக்கமளிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: நட்வத்-அல்- உலாமா: தியோபந்த்தைக் காட்டிலும் குறைந்த அளவு பழமைவாதப் போக்குடைய அதே சமயம் நவீனகாலத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுத்த இவ்வியக்கம் 1894இல் லக்னோவில் சிப்லி நுமானி எனும் வரலாற்று ஆசிரியராலும் வேறுசில அறிஞர்களாளும் உருவாக்கப்பட்டது. நவீன மேற்கத்தியக் கல்வியின் வருகையைத் தொடர்ந்துவந்த இறைமறுப்புக் கொள்கை, லோகாயதவாதம் ஆகியவற்றை எதிர்கொள்ள அறிவார்ந்த முறையில் சமயத்திற்கு விளக்கமளிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.**

93) நட்வத்-அல்-உலாமா பள்ளி எங்கு அமைந்துள்ளது?

a) அலிகர்

**b) பிரங்கி மஹால்**

c) நவ்கான்

d) கேத்கான்

**விளக்கம்: பிரங்கி மஹால்: மூன்றாவதாகப் புகழ்பெற்ற ஆனால் மற்றவற்றைக் காட்டிலும் காலத்தால் மூத்த இச்சிந்தனைப் பள்ளி லக்னோவிலுள்ள பிரங்கிமஹாலில் உருவானது. மற்ற இரண்டைப் போலல்லாமல் பிரங்கிமஹால் பள்ளி சூபியிஸத்தை மதிப்பு வாய்ந்த அனுபவமாகவும் அறிந்து கொள்வதற்கான களமாகவும் ஏற்றுக்கொண்டது. மற்றொரு மரபுசார்ந்த இயக்கம் அல்-இ-ஹதித் அல்லது நபிகள் நாயகம் கூறியவற்றை அப்படியே பின்பற்றுபவர்களாவர்.**

94) ஜொராஸ்டிரியர்கள் எந்த  நூற்றாண்டில் பெரும் எண்ணிக்கையில்இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் குடியேறினர்?

**a) பத்தாம் நூற்றாண்டு**

b) ஒன்பதாம் நூற்றாண்டு

c) எட்டாம் நூற்றாண்டு

d) ஏழாம் நூற்றாண்டு

**விளக்கம்: தங்கள் தாயகமான பாரசீகத்தில் அடக்குமுறைக்கு உள்ளானதால் ஜொராஸ்டிரியர்கள் பத்தாம் நூற்றாண்டில் பெரும் எண்ணிக்கையில்இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் குடியேறினார். ஒரு வணிக சமூகமாக அவர்கள் நூற்றாண்டுகளின் போக்கில் செல்வச் செழிப்படைந்தனர். நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட அச்சமூகத்தையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் சீர்திருத்தக் காற்று தழுவத் தவறவில்லை.**

95) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) 1851இல் கல்வி பயின்ற பார்சிகள் அடங்கிய குழுவானது "ரக்னுமய் மத்யஸ்னன் சபா" எனும் அமைப்பை உருவாக்கியது.

(ii) நௌரோஜி பர்தோன்ஜி, தாதாபாய் நௌரோஜி, காமா, பெங்காலி ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்டிருந்தது.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: 1851இல் கல்வி பயின்ற பார்சிகள் அடங்கிய குழுவானது "ரக்னுமய் மத்யஸ்னன் சபா" (Rahnumai Madyasnam Sabha, சமய சீர்திருத்த சங்கம்) எனும் அமைப்பைப் பார்சிகளின் சமூக நிலைகளை மேம்படுத்தவும் ஜொராஸ்டிரிய மதத்தின் தூய்மையை மீட்டெடுக்கும் நோக்கங்களுடனும் உருவாக்கியது. இவ்வியக்கம் நௌரோஜி பர்தோன்ஜி, தாதாபாய் நௌரோஜி, காமா, பெங்காலி ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்டிருந்தது.**

96) பார்சிகளின் சீர்திருத்தம் பற்றிய செய்திகளை பரப்புவதற்காக வெளியிடப்பட்ட செய்தித்தாள் எது?

**a) ராஸ்ட்-கோப்தார்**

b) சம்வாத் கௌமுகி

c) மிராத் உல் அக்பர்

d) இந்தியாவின் குரல்

**விளக்கம்: சீர்திருத்தம் பற்றிய செய்திகளை பரப்புவதற்காக ராஸ்ட்-கோப்தார் (உண்மை விளம்பி) எனும் செய்தித்தாளும் வெளியிடப்பட்டது. பார்சிகளின் மத நடவடிக்கைகளும் சடங்குகளும் சீர்திருத்தப்பட்டன. பார்சி மதத்திற்கு மறு விளக்கமும் தரப்பட்டது.**

97) பார்சி பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை/கள் எது/எவை?

a) கல்வி கற்பித்தல்

b) பர்தா முறையை நீக்குவது

c) திருமண வயது வரம்பை அதிகரிப்பது

**d) இவை அனைத்தும்**

**விளக்கம்: சமூகத் தளத்தில் பார்சி பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்காகக் கல்வி கற்பித்தல், பர்தா முறையை நீக்குவது, திருமண வயது வரம்பை அதிகரிப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. படிப்படியாகப் பார்சிகள் இந்திய சமூகத்திலேயே அதிக அளவு மேற்கத்தியமயப்பட்ட பிரிவினராக மாறினர். தேசிய இயக்கத்திலும் இந்தியாவைத் தொழில்மயம் ஆக்கியதிலும் அவர்கள் முக்கியப் பங்கு வகித்தனர்.**

98) சிங் சபா இயக்கம் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

**a) 1873**

b) 1872

c) 1878

d) 1875

**விளக்கம்: பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேலெழும்பிய பகுத்தறிவு முற்போக்கு அலைகள் சீக்கியரையும் தொட்டுத் தழுவின. 1873இல் சிங் சபா இயக்கம் இரண்டு முக்கிய நோக்கங்களுக்காக உருவானது.**

99) சிங் சபா இயக்கத்தின் முக்கிய நோக்கம் எது/எவை?

a) நவீன மேற்கத்தியக் கல்வியை சீக்கியருக்குக் கிடைக்கச் செய்தல்

b) கிறித்தவச் சமயப்பரப்பாளர்களின் மதமாற்ற நடவடிக்கைகள், இந்து மீட்டெடுப்பு இயக்கவாதிகளின் நடவடிக்கைகள் ஆகியவற்றை எதிர்கொள்வது.

c) சீக்கிய குருத்வாராவை மத குருமார்களின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டது.

**d) a) மற்றும் b)**

**விளக்கம்: 1) நவீன மேற்கத்தியக் கல்வியை சீக்கியருக்குக் கிடைக்கச் செய்தல் 2) கிறித்தவச் சமயப்பரப்பாளர்களின் மதமாற்ற நடவடிக்கைகள், இந்து மீட்டெடுப்பு இயக்கவாதிகளின் நடவடிக்கைகள் ஆகியவற்றை எதிர்கொள்வது.**

100) சீக்கியர் குருத்துவாரா சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது?

**a) 1922**

b) 1924

c) 1926

d) 1927

**விளக்கம்: அகாலி இயக்கம் சிங் சபா இயக்கத்தின் கிளை இயக்கமே. அகாலி இயக்கம் சீக்கிய குருத்வாராவை ஊழல் மிகுந்த உதாசி மகந்த் என்றறியப்பட்ட மத குருமார்களின் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டது. அரசு 1922இல் சீக்கியர் குருத்துவாரா சட்டத்தை (1925 திருத்தப்பட்டது) இயற்றியது. அதன்படி சீக்கிய குருத்துவாரா, சிரோன்மணி குருத்தவாரா பிரபந்தக் கமிட்டி எனும் அமைப்பின் கீழ் வந்தது.**

101) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) பிரம்ம சமாஜமும் ஆரிய சமாஜமும் தமிழகத்தில் கிளைகளைப் பெற்றிருந்தன.

(ii) தேவேந்திரநாத் தாகூர் சென்னைக்கு வருகை தந்து உரையாற்றினார்.

**a) (i) மட்டும் சரி**

b) (ii) மட்டும் சரி

c) இரண்டும் சரி

d) இரண்டும் தவறு

**விளக்கம்: வட இந்திய சீர்திருத்த இயக்கங்கள் தமிழகத்தின் மீது தங்கள் தாக்கத்தை ஏற்படுத்தின. பிரம்ம சமாஜமும் ஆரிய சமாஜமும் தமிழகத்தில் கிளைகளைப் பெற்றிருந்தன. கேசவ சந்திர சென் சென்னைக்கு வருகை தந்து உரையாற்றினார். ஆனால் தமிழகம் தனக்கே உரித்தான சீர்திருத்த இயக்கங்களைச் சந்தித்தது.**

102) ஸ்ரீவைகுண்ட சாமிகள் வழிபாடு எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

**a) 1830**

b) 1809

c) 1842

d) 1866

**விளக்கம்: ஸ்ரீவைகுண்ட சாமிகள் வழிபாடு 1830களில் நிறுவப்பட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ளது. தென்திருவிதாங்கூரில் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம்) சாஸ்தா கோவில்விளை (தற்போது சாமித்தோப்பு என்றழைக்கப்படுகிறது) எனும் சிறிய ஊரில் 1809இல் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார்.**

103) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) முத்துக்குட்டி, தனது குழந்தைப் பருவத்தில் கிராமத்திலிருந்த உயர்நிலை பள்ளியில் மதம் மற்றும் நீதி நூல்களைக் கற்றார்.

(ii) விவிலியத்தைக் கற்ற அவர் கிறித்தவ இறையியலிலும் சிறந்து விளங்கினார்.

a) (i) மட்டும் சரி

**b) (ii) மட்டும் சரி**

c) இரண்டும் சரி

d) இரண்டும் தவறு

**விளக்கம்: முத்துக்குட்டி, தனது குழந்தைப் பருவத்தில் கிராமத்திலிருந்த திண்ணைப் பள்ளியில் மதம் மற்றும் நீதி நூல்களைக் கற்றார். விவிலியத்தைக் கற்ற அவர் கிறித்தவ இறையியலிலும் சிறந்து விளங்கினார்.**

104) கடலில் புனித நீராடும் போது வைகுண்ட சாமிகள் நீங்கப்பெற்ற நோய் எது?

a) இருதய நோய்

**b) சருமநோய்**

c) சூலை நோய்

d) கழலை நோய்

**விளக்கம்:தனது 22வது வயதில் திருச்செந்தூர் முருகன் கோவிலுக்குச் சென்ற அவர் கடலில் புனித நீராடும் போது தனது சருமநோய் நீங்கப்பெற்றார்.**

105) எந்தக்கடவுள் தன்னை மகனாகப் பாவித்து மறுபிறவி அளித்ததாக வைகுண்ட சாமிகள் அறிவித்தார்?

a) திருச்செந்தூர் முருகன்

b) சிவ பெருமான்

**c) விஷ்ணு**

d) அம்மன்

**விளக்கம்: கடவுள்விஷ்ணு தன்னை மகனாகப் பாவித்து மறுபிறவி அளித்ததாக அறிவித்தார். திருச்செந்தூரிலிருந்து திரும்பிய பின்னர் இரண்டு ஆண்டுகள் துறவற வாழ்வை மேற்கொண்டார். விரைவில் அவரது புகழ் அனைத்து இடங்களுக்கும் பரவியது.**

106) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) வைகுண்ட சாமிகள் திருவிதாங்கூர் சமூகத்தின் மரபு வழிப்பட்ட சாதிமுறையையும், ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து அதிக வரி வசூல் செய்யும் அரசையும் கடுமையாக விமர்சித்தார்.

(ii) அரசுக்கு எதிராகப் பேசினார் என்பதற்காக அவர் திருவாங்கூர் அரசரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட் டார்.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: வைகுண்ட சாமிகள் தனது போதனைகளில் திருவிதாங்கூர் சமூகத்தின் மரபு வழிப்பட்ட சாதிமுறையையும், ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து அதிக வரி வசூல் செய்யும் அரசையும் கடுமையாக விமர்சித்தார். அரசுக்கு எதிராகப் பேசினார் என்பதற்காக அவர் திருவாங்கூர் அரசரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.**

107) வைகுண்ட சாமிகளின் சீடர்கள் அவரை எவ்வாறு அழைக்கலாயினர்?

**a) ஐயா**

b) கடவுள்

c) பெரியவர்

d) அப்பன்

**விளக்கம்: வைகுண்ட சாமிகள் 1838இல் அவர் விடுதலை செய்யப்பட்டபோது ஒடுக்கபட்ட மக்களிடையே மிகவும் பிரபலமானார். அவருடைய சீடர்கள் அவரை ஐயா (தந்தை) என்று அழைக்கலாயினர். அவரைப் பின்பற்றிய நடைமுறைகள் "ஐயா வழி" என்றழைக்கப்பட்டது.**

108) வைகுண்ட சாமிகளின் போதனைகள் தொகுக்கப்பட்டு எந்த பெயரில் வெளிவந்தது?

a) புறத்திரட்டு

b) பொன்வண்ணத்து அந்தாதி

**c) அகிலத்திரட்டு**

d) வைகுண்ட சாமிகள் கோவை

**விளக்கம்: வைகுண்ட சாமிகளின் போதனைகள் தொகுக்கப்பட்டு 'அகிலத்திரட்டு' என்னும் வழிபாட்டு நூலாக வெளிவந்தது. வைகுண்டசாமி "பூடம்" (பீடம்) வழிபாட்டு முறையை கைவிடும்படி தன்னைப் பின்பற்றுவோரிடம் கூறினார்.**

109) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) வைகுண்ட சாமிகள் விலங்குகளைப் பலியிடும் பழக்கத்தையும் கைவிடும்படி வலியுறுத்தினார்

(ii) சைவ உணவுப் பழக்கத்தைக் கைக்கொள்ள அறிவுறுத்தினார்.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: விலங்குகளைப் பலியிடும் பழக்கத்தையும் கைவிடும்படி வலியுறுத்தினார். சைவ உணவுப் பழக்கத்தைக் கைக்கொள்ள அறிவுறுத்தினார்.**

110) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) அயோத்திதாசப்பண்டிதர் தன்னைப் பின்பற்றுவோரை எதிர்ப்பின் அடையாளமாக தலைப்பாகை அணியும்படி வற்புறுத்தினார்

(ii) அக்காலத்தில் தலைப்பாகை அணியும் உரிமை உயர் சாதியினருக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது.

a) (i) மட்டும் சரி

**b) (ii) மட்டும் சரி**

c) இரண்டும் சரி

d) இரண்டும் தவறு

**விளக்கம்: தன்னைப் பின்பற்றுவோரை எதிர்ப்பின் அடையாளமாக தலைப்பாகை அணியும்படி வற்புறுத்தினார். அக்காலத்தில் தலைப்பாகை அணியும் உரிமை உயர் சாதியினருக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது.**

111) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) அயோத்திதாசப்பண்டிதர் சமத்துவத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சியாக பல சாதிகளைச் சேர்ந்த மக்கள் பங்கேற்கும் சமபந்தி விருந்துகளை ஏற்பாடு செய்தார்.

(ii) 'நிழல் தாங்கல்' என்றழைக்கப்பட்ட பண்டிதர் உருவாக்கிய உணவுக் கூடங்களில் சாதிக்கட்டுபாடுகள் உடைக்கப்பட்டன.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

c) இரண்டும் சரி

**d) இரண்டும் தவறு**

**விளக்கம்: சமத்துவத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சியாக வைகுண்ட சாமிகள் தனது சமத்துவச் சங்கத்தின் மூலம் பல சாதிகளைச் சேர்ந்த மக்கள் பங்கேற்கும் சமபந்தி விருந்துகளை ஏற்பாடு செய்தார். 'நிழல் தாங்கல்' என்றழைக்கப்பட்ட அவர் உருவாக்கிய உணவுக் கூடங்களில் சாதிக்கட்டுபாடுகள் உடைக்கப்பட்டன.**

112) ஸ்ரீவைகுண்ட சாமிகள் எந்த ஆண்டு இறந்தார்?

a) 1830

b) 1809

**c) 1851**

d) 1866

**விளக்கம்: 1851இல் அவருடைய இறப்பிற்குப் பின்னரும், வைகுண்ட சாமிகள் வழிபாடானது தென் திருவாங்கூர் பகுதியில் கிறித்தவ சமயம் பரவுவதற்குப் பெரும் சவாலாக விளங்கியது.**

113) இராமலிங்க அடிகள் தன் இளமைக்காலத்தில் எங்கு வாழ்ந்தார்?

a) காஞ்சிபுரம்

**b) சென்னை**

c) கடலூர்

d) சிதம்பரம்

**விளக்கம்: இராமலிங்க அடிகள் (வள்ளலார்) (1823-1874) இராமலிங்க அடிகள் சிதம்பரத்திற்கு அருகே ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து தன் இளமைக்காலத்தில் சென்னையில் வாழ்ந்தார்.**

114) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) முறையான கல்வியைப் பெறாத இராமலிங்க அடிகள் பெரும் புலமையை வெளிப்படுத்தினார்.

(ii) இராமலிங்க அடிகள் காலத்தில் சைவ சமயமானது திருவாவடுதுறை, தர்மபுரம், திருப்பனந்தாள் போன்ற சைவ மடங்களின் ஆதிக்கத்தில் இருந்தது.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: முறையான கல்வியைப் பெறாத இராமலிங்க அடிகள் பெரும் புலமையை வெளிப்படுத்தினார். தேவார, திருவாசகப் பாடல்களால் ஈர்க்கப்பட்ட அவர் மனம் உருகும் பாடல்களைச் சொந்தமாக இயற்றினார். அவருடைய காலத்தில் சைவ சமயமானது திருவாவடுதுறை, தர்மபுரம், திருப்பனந்தாள் போன்ற சைவ மடங்களின் ஆதிக்கத்தில் இருந்தது.**

115) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) இராமலிங்க அடிகளின் பாடல்கள் முற்போக்குச் சிந்தனைகளைக் கொண்டிருந்தன.

(ii) உள்ளுணர்வு சார்ந்த இறைநிலைக்கு ஆட்பட்ட இராமலிங்க அடிகள் அவ்வனுபவங்களைத் தனது பாடல்களில் பதிவு செய்தார்.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: இராமலிங்க அடிகளின் பாடல்கள் முற்போக்குச் சிந்தனைகளைக் கொண்டிருந்தன. அவர் மதவெறியையும், பகுத்தறிவற்ற தன்மையையும் கண்டனம் செய்தார். உள்ளுணர்வு சார்ந்த இறைநிலைக்கு ஆட்பட்ட அவர் அவ்வனுபவங்களைத் தனது பாடல்களில் பதிவு செய்தார். இதனால் வைதீக சைவ சமயத்தினர் இவர்பால் வெறுப்புக் கொண்டனர்.**

116) இராமலிங்க அடிகள் வடலூரில் ஏழைகளுக்கு எந்த அமைப்பின் மூலம் உணவளிக்கத் தொடங்கினார்?

a) சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

b) சத்திய ஞான சபை

**c) சத்திய தர்ம சாலை**

d) இவை அனைத்தும்

**விளக்கம்: அவர் சத்திய தர்ம சாலை ஒன்றை வடலூரில் நிறுவி ஏழைகளுக்கு உணவளிக்கத் தொடங்கினார். முக்கியமாக 1860களில் பஞ்சங்களும் கொள்ளை நோயும் ஏற்பட்ட போது சாதிமத வேறுபாடின்றி உணவளித்தார்.**

117) இராமலிங்க அடிகள் தன்னைப் பின்பற்றுவோரை ஒருங்கிணைப்பதற்காக ஏற்படுத்திய அமைப்பு எது?

a) சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

**b) சத்திய ஞான சபை**

c) சத்திய தர்ம சாலை

d) இவை அனைத்தும்

**விளக்கம்: தன்னைப் பின்பற்றுவோரை ஒருங்கிணைப்பதற்காக சத்ய ஞான சபை எனும் அமைப்பை நிறுவினார். இதனால் நிறுவனபடுத்தப்பட்டிருந்த சைவ அமைப்புகளோடு அவர் மோதல் துவங்கியது. இவருடைய சீடர்கள் அவருடைய பாடல்களைத் திரட்டித் 'திருவருட்பா' எனும் பெயரில் 1867இல் வெளியிட்டபோது மோதல் உச்சத்தை எட்டியது.**

118) எந்த நாட்டைச் சேர்ந்த வைதீக சைவர்கள் இராமலிங்க அடிகளின் பாடல்களை தெய்வநிந்தனை எனக் கூறினர்?

a) சிங்கப்பூர்

b) தாய்லாந்து

**c) இலங்கை**

d) மலேசியா

**விளக்கம்:இலங்கையைச் சேர்ந்த வைதீக சைவர்கள் சீர்திருத்தவாதி ஆறுமுக நாவலரின் தலைமையில் இதைத் தெய்வநிந்தனை எனக் கூறி இவருக்கு எதிராக கட்டுரை எழுதும் போரில் ஈடுபட்டனர். ஆனால் இறுதியில் இராமலிங்க அடிகளின் பணி அங்கீகரிக்கப்பட்டது. அவருடைய எழுத்துக்கள் உலகளாவிய சிந்தனைகளைத் தூண்டி சைவ சமயத்துக்குள் இருக்கும் பிரிவினைகளை மதிப்பிழக்கச் செய்தன.**

119) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) பௌத்தம் தமிழ்நாட்டில் இரண்டாவது ஆயிரம் ஆண்டின் தொடக்கத்திலேயே முற்றிலுமாக துடைக்கப்பட்டுவிட்டது.

(ii) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பௌத்தம் புத்துயிர் பெறத் துவங்கியது.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: பௌத்தம் தமிழ்நாட்டில் இரண்டாவது ஆயிரம் ஆண்டின் தொடக்கத்திலேயே முற்றிலுமாக துடைக்கப்பட்டுவிட்டது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பௌத்தம் புத்துயிர் பெறத் துவங்கியது.**

120) மணிமேகலை எந்த ஆண்டு முழுமையாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது?

a) 1891

b) 1893

c) 1863

**d) 1898**

**விளக்கம்: 1867இல் சீவகசிந்தாமணி, 1898இல் மணிமேகலை ஆகிய இரண்டும் முழுமையாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட இந்த பின்னணியில் மிகமுக்கியமான ஆளுமை அயோத்திதாச பண்டிதராவார்.**

121) அயோத்தி தாசப்பண்டிதர் மேற்கொண்ட தொழில் எது?

**a) மருத்துவர்**

b) வழக்குரைஞர்

c) ஆசிரியர்

d) தச்சர்

**விளக்கம்: (1845-1914) ஒரு சுதேசி மருத்துவராகத் தொழில் செய்தாலும் அவர் பல்வேறு துறைகளில் புலமை பெற்றிருந்தார். பிரம்மஞான சபையைச் சேர்ந்த ஹென்றி ஆல்காட்டின் செல்வாக்கிற்கு அவர் உள்ளானவர்.**

122) ஆதிதிராவிடர்களே உண்மையான பௌத்தர்கள் என்று கூறியவர் யார்?

a) இராமலிங்க அடிகள்

**b) அயோத்திதாசப்பண்டிதர்**

c) வைகுண்ட சுவாமிகள்

d) இரட்டைமலை சீனுவாசன்

**விளக்கம்: 1890களில் ஆதிதிராவிடர்களிடையே இயக்கத்தைத் தொடங்கிய அவர் ஆதிதிராவிடர்களே உண்மையான பௌத்தர்கள் என்றும், வேத பிராமணியத்தை எதிர்த்ததன் விளைவாக அவர்கள் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டனர் என்றும் வாதிட்டார். தனது கருத்துக்களைமெய்ப்பிப்பதற்காகத் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களையும் பிறவற்றையும் மறுவாசிப்பு செய்தார்.**

123) பின்வருபவர்களுள் மக்கள் பௌத்த மதத்திற்கு மாறுவதை ஊக்குவித்தவர் யார்?

a) இராமலிங்க அடிகள்

**b) அயோத்திதாசப்பண்டிதர்**

c) வைகுண்ட சுவாமிகள்

d) இரட்டைமலை சீனுவாசன்

**விளக்கம்: மக்கள் பௌத்த மதத்திற்கு மாறுவதை அவர் ஊக்குவித்தார். அவர் கொள்கையை வட தமிழகப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் மக்கள் பின்பற்றினர். கோலார் தங்கவயலில்**

**பணியாற்றிய தொழிலாளர்கள் பலர் இவரது கொள்கையைப் பின்பற்றினர். இவ்வியக்கத்தில் சிங்காரவேலரும் லட்சுமி நரசுவும் முக்கியப் பங்கு வகித்தனர்.**

124) அயோத்திதாச பண்டிதர் ஒரு பைசாத் தமிழன் என்ற வாராந்திரப் பத்திரிகையை எந்த ஆண்டு தொடங்கினார்?

a) 1902

b) 1900

c) 1907

**d) 1908**

**விளக்கம்: அயோத்திதாச பண்டிதர் 1908 முதல் ஒரு பைசாத் தமிழன் (பின்னர் தமிழன்) என்ற பெயரில் வாராந்திரப் பத்திரிகை ஒன்றை தொடங்கி தான் இயற்கை எய்தும் காலம் வரை நடத்தினார்.**

125) கூற்று (கூ): ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய மக்களின் மத விஷயங்களில் நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றியது.

காரணம் (கா): போர்த்துகீசியரின் கட்டாய மதமாற்ற முயற்சிகளே அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமென அவர்கள் நம்பினர்.

a) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

b) கூற்று மற்றும் காரணம் தவறானவை.

**c) கூற்று சரி; காரணம், கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.**

d) கூற்று தவறு; காரணம் சரி.

**விளக்கம்: இடைக்கால இந்தியாவைச் சேர்ந்த முஸ்லிம் மன்னர்களைப் போலவே ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியும் இந்திய மக்களின் மத விஷயங்களில் நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றியது. அதற்கான காரணம் போர்த்துகீசியரின் கட்டாய மதமாற்ற முயற்சிகளே அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமென அவர்கள் நம்பினர். அதன் விளைவாகக் கம்பெனி தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சமயப் பரப்பாளர்கள் நுழைவதற்கு தடை விதித்திருந்தது**

126) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) 1793 இல் பாப்டிஸ்டுகளான வில்லியம் கேரி, ஜான் தாமஸ் ஆகிய இருவரும் சமயப்பரப்பு நிறுவனத்தைத் தொடங்கும் நோக்கில் இந்தியா வந்தனர்.

(ii) சமயப்பரப்பு நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்ததால் அவர்கள் டேனியர்களுக்குச் சொந்தமான கல்கத்தாவிற்கு வடக்கேயுள்ள மிட்னாபூரில் தங்கினர்.

**a) (i) மட்டும் சரி**

b) (ii) மட்டும் சரி

c) இரண்டும் சரி

d) இரண்டும் தவறு

**விளக்கம்: 1793 இல் பாப்டிஸ்டுகளான வில்லியம் கேரி, ஜான் தாமஸ் ஆகிய இருவரும் சமயப்பரப்பு நிறுவனத்தைத் தொடங்கும் நோக்கில் இந்தியா வந்தனர். சமயப்பரப்பு நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்ததால் அவர்கள் டேனியர்களுக்குச் சொந்தமான கல்கத்தாவிற்கு வடக்கேயுள்ள செராம்பூரில் தங்கினர்.**

127) செராம்பூர் மிஷன் எனும் அமைப்பு எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது?

**a) 1799**

b) 1793

c) 1822

d) 1893

**விளக்கம்: கேரி, வேறு இரு சமயப்பரப்பாளர்களான ஜோசுவா மார்ஷ்மேன், வில்லியம் வார்டு ஆகியோருடன் இணைந்து 1799இல் செராம்பூர் மிஷன் எனும் அமைப்பை ஏற்படுத்தினர்.**

128) முதன்முதலாக இந்தியாவிற்கு வருகை தந்த நற்செய்தி மறைப் பணியாளர்கள் யாவர்?

**a) செராம்பூர் மதப்பரப்பாளர்கள்**

b) மிட்னாபூர் மதப்பரப்பாளர்கள்

c) காசியாபாத் மதப்பரப்பாளர்கள்

d) பூனே மதப்பரப்பாளர்கள்

**விளக்கம்:செராம்பூர் மதப்பரப்பாளர்களே முதன்முதலாக இந்தியாவிற்கு வருகை தந்த நற்செய்தி மறைப் பணியாளர்கள் (Evangelical Babtist) ஆவர். இவர்களைத் தொடர்ந்து சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்த மதப் பரப்பாளர்கள் இந்தியா வந்தனர்.**

129) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) மிட்னாபூர் மதப்பரப்பாளர்களின் வருகைக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே பல கிறித்தவ மதப் பரப்பு நிறுவனங்கள் செயல்பட்டனர்.

(ii) மதமாற்றம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது.

a) (i) மட்டும் சரி

**b) (ii) மட்டும் சரி**

c) இரண்டும் சரி

d) இரண்டும் தவறு

**விளக்கம்: செராம்பூர் மதப்பரப்பாளர்களின் வருகைக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே பல கிறித்தவ மதப் பரப்பு நிறுவனங்கள் போர்த்துகீசியருக்குச் சொந்தமான கோவாவிலும், மலபார்**

**கடற்கரைப் பகுதிகளிலும், சோழமண்டலக் கடற்கரைப் பகுதிகளிலும் செயல்பட்டனர். மதமாற்றம் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது.**

130) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) விரிவான, பெருமளவிலான மதமாற்ற நடவடிக்கைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கின

(ii) மதப் பரப்புக் குழுவினர் சமூகப் பொருளாதார ரீதியாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கெனப் பள்ளிகளை நிறுவினர்.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: விரிவான, பெருமளவிலான மதமாற்ற நடவடிக்கைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கின. மதப் பரப்புக் குழுவினர் சமூகப் பொருளாதார ரீதியாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கெனப் பள்ளிகளை நிறுவினர். அரசுப் பணிகளில் அவர்களைப் பணியமர்த்துவதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த முயன்றனர்.**

131) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) பொதுச் சாலைகளைப் பயன்படுத்துதல், தாழ்த்தப்பட்ட பெண்கள் மேலாடைகள் அணிந்து கொள்வது போன்ற சமூக உரிமைகளுக்காகவும் சமயப் பரப்புக் குழுவினர் போராடினர்.

(ii) அனாதைக் குழந்தைகளையு ம் ஆதரவற்றோரையும் தங்கள் நிறுவனங்களில் தங்க வைத்து தங்களது உறைவிடப் பள்ளிகளில் அவர்களுக்கு கல்வி வழங்கினர்.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: பொதுச் சாலைகளைப் பயன்படுத்துதல், தாழ்த்தப்பட்ட பெண்கள் மேலாடைகள் அணிந்து கொள்வது போன்ற சமூக உரிமைகளுக்காகவும் சமயப் பரப்புக் குழுவினர் போராடினர். அனாதைக் குழந்தைகளையு ம் ஆதரவற்றோரையும் தங்கள் நிறுவனங்களில் தங்க வைத்து தங்களது உறைவிடப் பள்ளிகளில் அவர்களுக்கு கல்வி வழங்கினர்.**

132) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) பஞ்சங்களின் போது சமயப் பரப்புக் குழுவினர் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

(ii) தங்குமிடம் வழங்கி உதவி செய்யும்போது மக்களை மதமாற்றம் செய்வதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: பஞ்சங்களின் போது சமயப் பரப்புக் குழுவினர் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டனர். தங்குமிடம் வழங்கி உதவி செய்யும்போது மக்களை மதமாற்றம் செய்வதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது.**

133) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியில் எந்த மாவட்டத்தில் பல கிராமங்கள் கிறித்தவ மதத்தைத் தழுவின?

a) தூத்துக்குடி

b) கன்னியாக்குமரி

**c) திருநெல்வேலி**

d) சென்னை

**விளக்கம்: பஞ்சக் காலங்களில் குறிப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியில் திருநெல்வேலி மாவட்டத்தில் பல கிராமங்கள் கிறித்தவ மதத்தைத் தழுவின. இதைப் போன்ற சூழலில் ஆந்திராவில் மாலா, மடிகா சமூகங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் எண்ணிக்கையில் மதம் மாறினர்.**

134) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) கிராமப்புறங்களில் வாழும் உரிமைகள் மறுக்கப்பட்ட ஏழை மக்களுக்குக் கல்வி வழங்கும் பொறுப்பைக் கிறித்தவ சமய நிறுவனங்களே தன்னார்வத்துடன் ஏற்றுக்கொண்டன.

(ii) மருத்துவமனைகளையும் மருந்தகங்களையும் கிறித்துவ சமய நிறுவனங்கள் அமைத்துக் கொடுத்தது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: கம்பெனி அரசு இந்தியர்களுக்கு நவீன கல்வியை வழங்குவதில் சிறு முயற்சிகளை மட்டுமே மேற்கொண்டது. நீண்ட காலத்திற்கு உள்ளூர் மக்களுக்குக் குறிப்பாக கிராமப்புறங்களில் வாழும் உரிமைகள் மறுக்கப்பட்ட ஏழை மக்களுக்குக் கல்வி வழங்கும் பொறுப்பைக் கிறித்தவ சமய நிறுவனங்களே தன்னார்வத்துடன் ஏற்றுக்கொண்டன. மருத்துவமனைகளையும் மருந்தகங்களையும் கிறித்துவ சமய நிறுவனங்கள் அமைத்துக் கொடுத்தது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.**

135) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) சமூகத்தின் வைதீகப் பிரிவைச் சார்ந்தோரால், சமய-சமூக சீர்திருத்தவாதிகளின் அறிவியல் சித்தாந்த எதிர்ப்புகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

(ii) சீர்திருத்தவாதிகள் தூற்றப்பட்டனர், அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர், அவர்களுக்கு எதிராக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன, பிற்போக்குவாதிகளால்கொலை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்:சமூகத்தின் வைதீகப் பிரிவைச் சார்ந்தோரால், சமய-சமூக சீர்திருத்தவாதிகளின் அறிவியல் சித்தாந்த எதிர்ப்புகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதன் விளைவாகச் சீ ர் திருத்தவாதிகள் தூற்றப்பட்டனர் , அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர், அவர்களுக்கு எதிராக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன, பிற்போக்குவாதிகளால்கொலை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.**

136) இறைவழிபாட்டைத் தனிப்பட்ட அனுபவமாக மாற்றியவை எவை?

a) சமய நூல்கள் பிராந்திய மொழிகளில் மொ ழி பெயர்க்கப்பட்டமை

b) சமய நூல்களில் காணப்படும் கருத்துகளுக்குப் புதுவிளக்கம் அளிக்கும் உரிமை

c) சடங்குகள் எளிமைப்படுத்தப்பட்டமை

**d) இவை அனைத்தும்**

**விளக்கம்: எதிர்ப்புகளை மீறி இவ்வியக்கங்கள், அச்சத்தின் காரணமாக இணங்கிச் சென்ற தனிமனிதர்களின் விடுதலைக்குப் பங்களிப்பைச் செய்தன. சமய நூல்கள் பிராந்திய மொழிகளில் மொ ழி பெயர்க்கப்பட்டமை, ச ம ய நூல்களில் காணப்படும் கருத்துகளுக்குப் புதுவிளக்கம் அளிக்கும் உரிமை, சடங்குகள் எளிமைப்படுத்தப்பட்டமை ஆ கி ய ன இறைவழிபாட்டைத் தனிப்பட்ட அனுபவமாக மாற்றின.**

137) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) சிந்திக்கவும் பகுத்தறியவும் தெரிந்த மனித அறிவின் திறமைக்குச் சீர்திருத்தவாதிகள் முக்கியத்துவம் கொடுத்தனர்.

(ii) தங்கள் சமூகமும் மதமும் கீழானவை, பின்தங்கியவை என்ற குற்றச்சாட்டுக்கும் பழிப்புரைக்கும் எதிராகப் பதில்தர தங்களைப் பின்பற்றுவோர்க்கு சீர்திருத்தவாதிகள் உதவினர்.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: சிந்திக்கவும் பகுத்தறியவும் தெரிந்த மனித அறிவின் திறமைக்குச் சீர்திருத்தவாதிகள் முக்கியத்துவம் கொடுத்தனர். சமய நடவடிக்கைகளிலிருந்த ஊழல்களைக் களைந்து தங்கள் சமூகமும் மதமும் கீழானவை, பின்தங்கியவை என்ற குற்றச்சாட்டுக்கும் பழிப்புரைக்கும் எதிராகப் பதில்தர தங்களைப் பின்பற்றுவோர்க்கு சீர்திருத்தவாதிகள் உதவினர். உருவாகிவந்த மத்தியதர வர்க்கம் பற்றிக்கொள்வதற்கான பண்பாட்டு வேர்களை இவ்வியக்கங்கள் வழங்கின.**

138) அன்னி பெசன்ட் அம்மையார் இந்தியாவிற்கு எந்த ஆண்டு வந்தார்?

a) 1890

b) 1894

**c) 1893**

d) 1897

**விளக்கம்: 1893இல் இந்தியாவிற்கு வந்த அன்னி பெசன்ட் அம்மையாரின் தலைமையில் பிரம்மஞானசபை வலுப்பெற்று குறிப்பாகப் பல தென்னிந்திய ஆதரவாளர்களைப் பெற்றது.**

139) அயோத்திதாசரை இலங்கைக்கு அழைத்துச் சென்றவர் யார்?

a) அன்னிபெசன்ட்

b) பிளாவட்ஸ்கி

c) திலகர்

**d) ஆல்காட்**

**விளக்கம்: ஆல்காட் அயோத்திதாசரை இலங்கைக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவர் புகழ்பெற்ற மீட்பு வாதிகளான அனகரிகா தர்மபாலா, ஆச்சாரிய சுமங்களா உட்பட பல பௌத்த பிட்சுக்களைச் சந்தித்தார்.**

140) பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

(i) சமத்துவம் எனும் கொள்கை சாதிய முறையையும் அதிகாரமிக்க குடும்ப அமைப்பையும் பெண்களின் கீழான நிலையினையும் ஒட்டுமொத்தமாக மறுக்க கோரியது.

(ii) பகுத்தறிவு எனும் கொள்கை மூட நம்பிக்கைகளும் சடங்குகளும் நீக்கப்பட வேண்டுமெனக் கோரியது.

a) (i) மட்டும் சரி

b) (ii) மட்டும் சரி

**c) இரண்டும் சரி**

d) இரண்டும் தவறு

**விளக்கம்: சமத்துவம் எனும் கொள்கை சாதிய முறையையும் அதிகாரமிக்க குடும்ப அமைப்பையும் பெண்களின் கீழான நிலையினையும் ஒட்டுமொத்தமாக மறுக்க கோரியது. பகுத்தறிவு எனும் கொள்கை மூட நம்பிக்கைகளும் சடங்குகளும் நீக்கப்பட வேண்டுமெனக் கோரியது.**

141) திருமணத்தின் போது மணப்பெண்ணின் கல்வி உரிமையை ஏற்றுக்கொள்வதாக மணமகனை உறுதியளிக்கும்படி கூறியவர்?

a) அயோத்தி தாசப்பண்டிதர்

b) இராமலிங்க அடிகள்

c) வைகுண்ட சுவாமிகள்

**d) ஜோதிபா பூலே**

**விளக்கம்: ஜோதிபா பூலே வர்க்கங்களுக்கிடையேயான சமத்துவம் மற்றும் ஆண் பெண் சமத்துவத்தை முன்வைத்தார். திருமணத்தின் போது மணப்பெண்ணின் கல்வி உரிமையை ஏற்றுக்கொள்வதாக மணமகனை உறுதியளிக்கும்படி கூறினார்.**

142) 1851இல் பெண்களுக்கென்று ஒரு பள்ளியை தொடங்கியவர்?

a) அயோத்தி தாசப்பண்டிதர்

b) இராமலிங்க அடிகள்

c) வைகுண்ட சுவாமிகள்

**d) ஜோதிபா பூலே**

**விளக்கம்: ஜோதிபா பூலே 1851இல் புனேயில் பெண்களுக்கென்று ஒரு பள்ளியையும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு பள்ளியையும் தனது துணைவியார் சாவித்ரியின் உதவியோடு தொடங்கினார்.**